1211,31 N91

N91.8.2

158325

வெளியீடு 29-4-1992

Issued -4-1992

3\16

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

தமிழ்நாடு ... வாசகசாலை ... எழும்பூர், சென்னை-600008

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, செப்டம்பர் 19, 1991 - தொகுதி 8 - எண் 2

**Thursday the 19th September, 1991 - Volume 8 - No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

158375




| | பக்கங்கள். |
|---|---|
| 8. டாக்டர் வெ. புருஷோத்தமன் | 400—403 |
| 9. டாக்டர் தே. குமாரதாஸ் | 403—407 |
| 10. திரு. சஞ்சய் ராமசாமி | 407—409 |
| 11. திரு. ச. இராமச்சந்திரன் | 410—41[illegible] |
| 12. திருமதி வி. ஜி. மணிமேகலை | 415—419 |
| *13. திரு. எஸ். திருநாவுக்கரசு | 419—429 |
| திரு. டி. சுதர்சனம் | 425 |
| 14. திரு. ஜ். காளன் | 430—437 |
| *திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் | 457—458 |
| *திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | 458—461 |
| (இ) கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன். | 461 |
| *1. மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் | 461—462 |
| | 553—563 |
| *2. திரு. போளூர் வரதன் | 462—472 |
| 3. திரு. தி. சாத்தையா | 472—476 |
| *4. திரு. எஸ். அன்பழகன் | 476—481 |
| 5. திரு. செ. கு. தமிழரசன் | 481—489 |
| *6. திரு. கா. கந்தசாமி | 490—493 |
| 7. திரு. து. மூர்த்தி | 493—497 |
| 8. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி | 497—500 |
| 9. திரு. ச. புரட்சிமணி | 500—502 |
| *10. திரு. வே. தம்புசாமி | 502—511 |
| *மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் | 511 |
| *11. டாக்டர் ஜெ. பரந்தாமன் | 512—515 |
| 12. திரு. செ. பெருமாள் | 515—518 |
| *13. டாக்டர் பெ. வீரபாண்டியன் | 518—523 |
| 14. திரு. எம். சுந்தரசாமி | 523—526 |
| *15. திரு. ச. இராமச்சந்திரன் | 5ய6—530 |
| 16. திரு. கா. சின்னசாமி | 530—532 |
| 17. திரு. வே. பெரியசாமி | 533—537 |
| *18. திரு. ஏ. ரவிக்குமார் | 537—53[illegible] |
| *19. திரு. ஏ. தா. பொன்னுவேலு | 539—54[illegible] |
| *20. திரு. ஆர். சிங்காரம் | 542—55[illegible] |
| 6. தீர்மானம்— | |
| விதி 32-ஐத் தளர்த்தல் | 460—46[illegible] |
| 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 565—56[illegible] |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## புரட்டாசி 3, பிரஜோற்பத்தி— திருவள்ளுவர் ஆண்டு 2022
## 1991, செப்டம்பர் 19, வியாழக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.''

செயலுக்குரிய கருவியும் ஏற்ற காலமும் செய்யும் வகையும் செய்யப்படும் அரிய செயலும் சிறப்படையச் செய்ய வல்லது அந்த அரசாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் வினா எண். 54. திரு. ம. தனபால் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

### சிட்டா, அடங்கல் நகல்கள் வழங்குவது குறித்த நடவடிக்கை

54—

* 411 திரு. ம. தனபால் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட்ட அலுவலகங்களில் சிட்டா, அடங்கல்கள் மற்றும் தேவையான நகல்கள் பெறவேண்டுமானால் காலதாமதம் ஆவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் இந்நிலையைப் போக்கவும், உடனுக்குடன் நகல்கள் கிடைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ); அரசுக்கு இதுவரையிலும் அப்படிப்பட்ட தகவல் வரவில்லை. தகவல் வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நகல்கள் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுவது வழக்கமாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஏழை எளியவர்கள், விவசாயிகள் உடனுக்குடன் அவர்களுடைய வசதிகளைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று சொன்னால், அவர்கள் ஏதாவது கடன் வாங்க வேண்டுமென்று சொன்னால்

## உள்ளடக்கம்

19—09—1991


பக்கங்கள்

உடுக்குறியிட்ட வினாக்கள். 345—367

2. <u>தகவல் கோரல்—</u>

நிலக்கோட்டை தொகுதி அம்மைய நாயக்கனூர் பேரூராட்சிக்குரிய பகுதிகளில் குடிநீர் வழங்குவது குறித்து. 367—368

3. <u>கவன ஈர்ப்பு—</u>

வேலூரிலுள்ள தோட்டப்பாளையம் காகிதப் பட்டறை போன்ற பகுதிகளுக்குக் கடந்த 6 மாதங்களாகக் குடிநீர் வராதது குறித்து. 368—371

4. <u>அறிக்கைகள் அளித்தல்—</u>

பொது நிறுவனங்கள் குழு. 371

5. <u>மானியக் கோரிக்கைகள், 1991-92, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி—</u>

(அ) கோரிக்கை எண் 24—தொழில்கள். 371

(ஆ) கோரிக்கை எண் 54—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. 371

1. மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா 372, 373, 395, 396, 420, 437–458, 548, 549, 552
2. திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் 373—378
3. திரு. ஆர். பி. பரமசிவம் 378—382
4. திரு. மு. நடேசன் 382—386
5. திரு. ஜி. பழனிசாமி 386—389, 394—395, 511
6. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் 389—392
7. திரு. பி. வி. இராஜேந்திரன் 392—400

இந்த நகல்கள் அவசியமாக இருக்கிறது. இது உடனுக்குடன் கிடைக்க வேண்டுமென்று சொன்னால் கிராம நிர்வாக அலுவலர் கள் இருக்கிறார்களே, அவர்களே கொடுக்கின்ற ஒரு அதிகாரத் தை அரசு கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டு பசலி, சென்ற ஆண்டு பசலி அதற்கு முந்தைய ஆண்டு பசலி என்று இப்படி தொடர்ந்து வருகிறபோது நடப்பு ஆண்டு பசலிக்கு மட்டும் கிராம நிர்வாக அதிகாரிகளிடத்தில் சிட்டா, அடங்கல்கள் இருக் கும். அதற்கு மேல் உள்ளதென்றால் வட்டத்திற்கு சென்று விடும். காலதாமதம் ஆவதற்கு வேறு ஒரு காரணமும் உள்ளது. வெறுமனே சிட்டா, அடங்கல் வேண்டுமென்று எழுதி அனுப்பி விடுகிறார்கள். எதற்கு சிட்டா எந்த புலன் எண்— புலன் எண் என்றால் சர்வே எண்—எந்த பட்டா என்று எழுத வேண்டும். ஏதாவது ஒன்றை மட்டும் போட்டுவிட்டு 'பிரம் டு' போட்டு அனுப்பி விடுகிறார்கள். அதிலே விளக்கமாக புலன் எண் பட்டா எண் எல்லாம் போட வேண்டும். அப்போது கால தாமதம் ஆகாது. நடப்பு ஆண்டிற்கு என்றால் கிராம நிர்வாக அதிகாரிகளிடத்திலேயே தேவையான சிட்டா, அடங்கல்கள் இருக்கும். பழைய பசலிகளுக்கு தாலுக்காவில் இருக்கும். இன்னமும் இது வேகமாக நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 222 மண்டல துணை வட்டாட்சியர்களை நியமித் திருக்கிறார்கள். இதுபோன்ற பல்வேறு வருவாய்த்துறை காரியங் களைச் செய்வதற்கு, விவரமாக வேகமாக செய்ய வேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் 222 மண்டல துணை வட்டாட்சியர்களை இது போன்ற காரி யத்திற்கு நியமித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது, இதுபோன்ற காரியங்கள் உடனுக்குடன் நடக்க வேண்டும் என்பதற்காக 222 மண்டல துணை வட்டாட்சியர்களை நியமித் திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். புரட்சி தலைவியுடைய ஆட்சியின் நிர்வாகம் மிக வேகமாக செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தில் புரட்சித் தலைவி அவர்கள் அந்தத் திட்டத்தை தீட்டி இருக்கிறார்கள். ஆனால் இந்த மண்டல துணை வட்டாட்சியர்கள் எப்போதும் போல வட்டாட்சியர் அலுவலகத்திலே இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் கள் சான்றிதழ்கள் வேண்டுமென்று சொன்னால் அவர்களைத் தேடிக் கொண்டு வட்டாட்சியர் அலுவலகம் தான் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படி என்றால் இதற்கு முன்பு வட்டாட் சியர்களிடமிருந்து சான்றிதழ்கள் வாங்கியதும் ஒன்றுதான். மண்டல துணை வட்டாட்சியர்களிடமிருந்து சான்றிதழ்கள்



வாங்குவதும் ஒன்றுதான். ஏழை எளிய மக்கள் சான்றிதழ்கள் பெற வேண்டும் என்று சொன்னால் ஒரு நாளைக்கு கிராம நிர்வாக அலுவலர்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. இரண் டாவது நாளைக்கு வருவாய் ஆய்வாளரைச் சந்திக்க வேண்டி யிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ம. தனபால், கேள்வியாகக் கேளுங்கள். இது உங்களுடைய இரண்டாவது சப்ளிமெண்டரி. அதிலே கேள்வியாக மட்டும் தான் இருக்கலாம்.

திரு. ம. தனபால்: மறுநாளைக்கு தாசில்தாரைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. அதற்கிடையில் மண்டல துணை வட்டாட்சியர் என்று செல்லும்போது, நான்கு நாளைக்கு நான்கு பேரைச் சந்திக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. இதிலே இடையிலே யாராவது ஒருவர் இல்லா விட்டாலும் கூட ஒரு நாள் வேலை அதிகரிக்கின்றது. எனவே அதுபோன்ற கால தாமதத்தைப் போக்குவதற்கு ஒன்று, மண்டல துணை வட்டாட்சியரை அந்தப் பகுதியிலே தலைமையிடத்தைக் கொண்டு, செயல்பட வைக்கவேண்டுமென்றும், இல்லை யென்று சொன்னால், கிராம நிர்வாக அலுவலர்களுக்கே அந்த அதிகாரத்தைக் கொடுத்து, அங்கேயே அவர்கள் சான்றிதழ் களைக் கொடுக்க வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் வருவாய் ஆய்வாளர் ஒருவர் இருக்கிறார் என்றே நாட்டு மக்களுக்குத் தெரியாமல் இருந்த காலம். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு வட்ட ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அலுவலக மும், வீடும் கட்டிக்கொடுக்கப்பட்டு, எல்லா இடங்களிலும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் 222 பேர் களை பதவியில் புதிதாக நியமித்திருக்கிறார்கள் என்றால் புதியதாக 222 அலுவலகங்களை உடனடியாக கட்டுவதற்கு இயலாது. ஆனால் அங்கேயிருக்கின்ற வட்ட அலுவலர்கள் அலுவலகத்திலே இருக்கின்ற வேலைகளைப் பகிர்ந்து கொள் வதற்காகத்தான் அங்கே 3, 4 பேர்களைப் புதிதாக நியமித் திருக்கிறோம். அதிலே எந்தவிதமான கால தாமதமும் ஏற்படாது. சிட்டா, அடங்கல் வேறு ஒரு காரணத்திற்காக கொடுக்கப்படவில்லை என்பது போன்ற வேறு வழக்குகள் இருந்து, சில நேரங்களிலே அது சம்பந்தப்பட்ட வழக்குகள் நீதிமன்றங்களுக்குச் சென்றிருந்தாலும், அல்லது அது சம்பந்த மாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சென்றிருந்தாலும்,

அது சம்பந்தப்பட்ட வழக்குகள் கோட்டாட்சியரிடம் இருந்தாலும், அடங்கல், சிட்டா அங்கே போட்டுவிடுவதனாலே காலதாமதம் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். ஈஸ்வரன்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாசில்தார் அலுவலகங்களிலே சாதாரண பொதுமக்கள் சான்றிதழ்கள் பெறுவதற்கும், நிலங்கள் கிரயம் முடிக்கும்போது அதற்குரிய தனிப் பட்டா பெறுவதற்கும் பல மாதங்கள், பல வருடங்கள் கூட ஆகின்றன. ஆகவே, அதைப் போக்குவதற்கு அனைத்து தாசில்தார் அலுவலகங்களிலும் 10, 15 தினங்களுக்குட்பட்டு அந்த சான்றிதழ்கள் பெறுவதற்கான ஒரு உத்தரவினை வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சான்றிதழ் அன்றைக்கே கிடைத்திருக்கும். ஜாதிச் சான்றிதழ் எங்கேயாவது கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அதுபோல் எந்தவிதமான தயக்கமும் அதிலே இருக்காது. குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை ராமசாமி.

திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்டா, அடங்கல் நகல்கள் பெறுவதற்கும், ஜாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் எல்லாம் பெறுவதற்கும் மிக அதிக கால தாமதம் ஆகின்றது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வேறு காரணத்திற்காக அந்த கால தாமதத்தை உருவாக்குகின்றார்கள். ஆக அந்த மாதிரி கேட்கின்ற நேரத்தில், 15 தினங்களுக்குள் அந்தச் சான்றிதழ் வழங்க வேண்டும் அல்லது வழங்க முடியாத காரணங்கள் இருந்தாலும், அந்தக் காரணத்தை சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவிக்க வேண்டுமென்ற உத்தரவை அரசு பிறப்பிக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நான் முதலிலே தெரிவித்தபடி அலுவலகங்களிலேயிருந்து வட்டாட்சியர்களுக்கு உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றது. ஜாதிச் சான்றிதழ் காலையில் கேட்டால் மாலையில் கொடுத்துவிட வேண்டுமென்று, குறிப்பிட்ட எந்த இடத்தில் காலையில் கொடுத்து மாலையில் வழங்கவில்லை என்று சொன்னால், நடவடிக்கை எடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா இடங்களிலும் அப்படித்தான் தாமதம் இருக்கிறது என்பதே உறுப்பினர்களுடைய ஏகோபித்த குரலாக இருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்வார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் இல்லையென்று சொல்கிறபோது அவர்களுடைய பகுதியில் எங்காவது ஒன்று என்றால் அதை வைத்துச் சொல்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் மற்றவர்கள் பேசக் கூடாது..

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அது மட்டுமல்ல, நான் இங்கே உங்களிடத்தில் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் இங்கே கொடுக்கவில்லை, கொடுக்கவில்லை என்று சொல்வதனால் காரியம் ஆகப்போவதில்லை. இந்த வட்டாட்சியர் கொடுக்கவில்லை, வேறு காரணத்திற்காக கொடுக்கவில்லை, இன்னார் செய்யவில்லை என தெரிவிக்கவில்லை. நீங்கள் வந்து 3, 4 மாதங்கள் ஆகிவிட்டது. இப்படிப்பட்ட குறைபாடு இருக்கிறது என்பதை, மக்கள் அனுப்புகிற சட்டமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் எழுத்துமூலமாகக் கொடுத்து இருக்கிறேன். நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று என்னிடத்தில் சொல்லமுடிந்தால் சொல்லுங்கள், இப்போது இல்லை, 20 ஆம் தேதிகூட சொல்லலாம்.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ரமணி நல்லதம்பி.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வருவாய்த் துறையைப் பொறுத்த வரை தாலுக்கா ஆபீசிலேயும் சரி, அது வி. ஏ. ஓ. லெவலில் இருந்தாலும் சரி, எந்த ஒரு சர்ட்டிபிகேட்டுமே காலாகாலத்தில் கிடைப்பதில்லை. ஒவ்வொன்றுக்கும் ஜாதி சான்றிதழ் அல்லது முதியோர் பென்ஷன் இதற்கெல்லாம் ஒவ்வொரு ரேட் வைத்திருக்கிறார்கள். 50-லிருந்து 200, 300 என்று. இந்தத் தொகையை உடனே கொடுத்தால் உடனே கிடைக்கிறது. அதைக் கொடுக்கவில்லை என்றால் பல மாதங்கள் அலைந்து, சலித்து ஓய்ந்து போகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? இந்த இந்த சான்றிதழ்களை இந்த இந்த தினங்களுக்குள் கொடுக்க வேண்டும் என்ற ஒரு முறையை வைத்து அதை அமல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரங்களில் குற்றச்சாட்டுகள் சொல்லக் கூடாது என்பது விதிமுறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பொதுவாகச் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு என்றால், இவ்வளவு இவ்வளவு ரேட்டுகளை வைத்துக்கொண்டிருப்பார் என்பது நேரடியான குற்றச்சாட்டுகள் தான். ஆனால் இவைகளை எல்லாம் இங்கே வந்து இப்பொழுது சொல்கிறார்களே ஒழிய எந்த இடங்களில் எந்த தாசில்தார் அல்லது இன்னார் இந்தக் காரணத்திற்காக கொடுக்கவில்லை என்று இதற்கு முன்னாலே எந்த உறுப்பினர்களும் எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ என்னிடத்தில் சொல்லவில்லை. சொல்லியிருந்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அதற்கு மேல் கேட்கலாம். சொல்வதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். இது கேள்வி நேரம். தயவுசெய்து உட்காருங்கள், திரு. தாமரைக்கனி, நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.

திரு. இரா. தாமரைக்கனி : ரெவின்யூ மினிஸ்டர்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முறையல்ல.

திரு. இரா. தாமரைக்கனி : சான்றிதழ் கிடைக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், கேள்வி நேரத்தில் இது முறையல்ல.

திரு. இரா. தாமரைக்கனி : கேள்வி நேரத்தில் நான் ஒன்றும் பிரச்சினை பண்ணவில்லை. முதலமைச்சருக்குத் தெரியாமல் நடக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தாமரைக்கனியை அவையை விட்டு வெளியேற்ற உத்தரவிடுகிறேன். சார்ஜண்ட் திரு. தாமரைக்கனியை வெளியேற்றவும்.

(அவைக் காவலர்களால் திரு. தாமரைக்கனி அவையை விட்டு வெளியேற்றப்பட்டார்.)



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சிட்டா, அடங்கல் பற்றி எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் பொது மக்கள் காலையிலே கொடுத்தால் அதற்கு மாலையிலே உத்திரவு வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தைத் தந்தார்கள். ஆனால் நான் பணிவோடு அவலரக் கேட்டுக் கொள்வது, வருவாய்த்துறை அதிகாரிகள்— வி.ஏ.ஓ-க்கள் அந்த ஹெட் குவார்ட்டர்ஸிலே இருப்பதில்லை; வருவாய்த் துறை அதிகாரிகள் அங்கு இருக்க வேண்டும். ஆனால் இருப்பதில்லை. ஒரு சான்றிதழ் வேண்டுமென்றால் இவர்களைத் தேடிப் பிடிப்பதற்கே 2, 3 நாட்கள் ஆகிவிடுகின்றன. ஆகவே, வட்டாட்சியரிடத்திலே செல்லும்போது அது, இதைவிட காலதாமதம் ஆகிறது. ஆகவே அந்தந்தப் பணியாற்றுகின்ற வி. ஏ. ஓ-க்கள், ஆர். ஐ.-கள் இவர்கள் எல்லாம் ஹெட்குவார்ட்டர்ஸிலே இருப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதலில் நடவடிக்கை எடுத்தால் தான் இப்படிப்பட்ட காரியங்கள் ஒழுங்காக நடைபெறும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்கின்றபோது மிகத் தெளிவாகச் சொன்னேன். ஜாதிச் சான்றிதழ்கள்தான் அன்றைக்கே தரப்படும் என்று சொன்னேன். சிட்டா, அடங்கல் அன்றைக்கே என்று நான் சொல்லவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா அதிகாரிகளும் அவரவர்களுடைய தலைமையிடத்தில் இருக்க வேண்டும் என்று தான் அரசு உத்திரவு போட்டிருக்கிறது. அது நடைமுறைப்படுத்தப்படும். எங்கேயாவது இல்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜூ.

திரு. கே. பி. ராஜூ : பேரவைத் தலைவர் அவர்களே, சிட்டா, அடங்கல் கொடுக்கின்றபோது அதிகாரிகள் டெனன்ட்டுக்கும் கொடுத்து விடுகிறார்கள். ஓனருக்கும் கொடுத்து விடுகிறார்கள். இது மாற்றப்படுமா? வரைமுறைப்படுத்தப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகைதாரர்களுக்கும் கொடுக்கப்படும். சொந்தக்காரர்களுக்கும் கொடுக்கப்படும். அப்படிக் கொடுக்கின்றபோது அந்த நிலம் யாருக்கு உடையது, புலன் எண், என்ன விஸ்தீரணம் என்ன, நஞ்சையா, புஞ்சையா, யார் வெள்ளாமை விடுகிறார்கள், யார் சொந்தக்காரர்கள் என்பது விவரமாகக் கொடுக்கப்படும்.

[1991 செப்டம்பர் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சிட்டா, அடங்கல் என்று கிராம நிர்வாக அலுவலர்களிடம் செல்கின்ற நேரத்திலே அவர்கள் அந்த விவசாயி கட்ட வேண்டிய நில வரி, நீர் வரியை உடனே கட்டினால்தான் கொடுக்கப்படும் என்று நிர்பந்தம் செய்கிறார்கள். சிட்டா, அடங்கலுக்கு என்று அவன் செல்கின்றபோது அந்த நில வரி, நீர் வரி கட்டுவதற்கு வேண்டிய பணத்தோடோ அல்லது அதற்கான சூழ்நிலையோடோ செல்வதில்லை. பல்வேறு கடன்கள், மற்ற பிரச்சினைகளுக்கு அவன் அது வேண்டும் என்று அத்தாட்சிக்காக செல்கின்றான். அப்படிச் செல்கின்ற நேரத்திலே அந்த வரியைக்கட்டினால்தான் கொடுப்பேன் என்று நிர்பந்தம் செய்யாமல் இருப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

முற்பகல் 9–45

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிட்டா, அடங்கல் கொடுப்பதிலே காலதாமதம் ஏற்படுவது உண்மைதான். அதை இரண்டு மூன்று நாட்களுக்குள் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட வேண்டும். இந்த சிட்டா, அடங்கல் கொடுப்பதிலே 'ஏ'க்கு ஒரு இடத்திலே பட்டா இருந்தால் அதை 'பி'க்கு மாறுதலாக கொடுத்து அதனால் கோர்ட்டுக்கு போகக்கூடிய நிலைமை எல்லாம் இன்றைக்கு தமிழ்நாட்டிலே நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிலை இல்லாமல் நிதானமாக சிட்டா, அடங்கல் கொடுப்பதற்கு ஒரு சூழ்நிலை உருவாக்க முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்டா என்பது வேறு; அடங்கல் என்பது வேறு; சிட்டா என்பதில் அந்த நிலத்தின் விஸ்தீரணம், புலன் எண், நஞ்சையா, புஞ்சையா, தீர்வையா, என்பது தான் சிட்டா. அடங்கல் என்பது யார் யாருக்கு நிலம் சொந்தம்; அதில் யார் வேளாண்மை செய்கிறார்கள்: என்ன பயிர் செய்கிறார்கள்; இரு போகமா; ஒரு போகமா; எந்த மாதம் பயிர் செய்தார்கள்; எந்த மாதம் அறுவடை செய்தார்கள்; அதில்



1991 செப்டம்பர் 19]

விளைந்தவை எவ்வளவு என்பதைப் போன்றவைகள் இருக்கும். ஆகவே இது மாறுபட்டு எங்கேயாவது கொடுக்கப்பட்டால் சரி செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. சொக்கலிங்கம்.

திரு. பி. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெய்வத் தாய் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சிட்டா, அடங்கல் பற்றி குறிப்பிடும் போது பட்டா எண்ணைக் குறித்து கொடுத்தால் தான் சிட்டா, அடங்கல் விரைவில் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். மனு கொடுக்கும்போதே மனுவில் சர்வே நம்பர், ஏரியா, அனைத்தும் குறித்துதான் கொடுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் சொன்னதைப்போல காசு கொடுத்தால் சீக்கிரம் கொடுக்கிறார்கள், காசு கொடுக்கவில்லை என்றால் தாமதம் ஆகிறது. அது தான் உண்மை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெரிவித்து விட்டேன். இப்படிக் குற்றச் சாட்டுகள் கேள்வி நேரத்தில் வருவது ஒரு வழக்கமாக வந்து விடக்கூடாது. அதுவே எதிர்க் காலத்தில் வழக்கமாக வந்துவிடும். எல்லோரும் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று சொல்ல ஆரம்பித்து விடுவார்கள். வேண்டும் என்றால் அவர்களுடைய மானியக் கோரிக்கைகள் வரும்போது இதையெல்லாம் பேசலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 55. திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

55—

இடும்பாவனம் உயர்நிலைப்பள்ளிக்குக் கட்டிடம்

*1537 திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், இடும்பாவனப் உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு இராம வீரப்பன்: தற்போது இல்லை.

[1991 செப்டம்பர் 19

- திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டை, இடும்பா வனம் உயர்நிலைப்பள்ளி பல ஆண்டு காலமாக கட்டிடங்கள் இல்லாமல் கீத்துக் கொட்டகையில் செயல்பட்டுக்கொண்டிருக் கிறது. போதிய இட வசதி இருக்கிறது. இன்றைக்கு இருக்கக் கூடிய அந்த பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், மீனவர்கள் நிறைந்து இருக்கிற அந்தப்பகுதியிலுள்ள அந்தப் பள்ளியைப் பார்த்தால் மிக இடுபாடுகளோடு கூடிய நிலையில் இருக்கிறது. அரசு அந்தப் பள்ளியை நடப்பு ஆண்டிலாவது கட்டிக் கொடுப் பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளியில் 619 மாணவ, மாணவி கள் படித்துக்கொண்டு வருகிறார்கள். இந்தப்பள்ளிக்கு என்று 4.37 ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்கிறது. 8 வகுப்பறைகள் கூரைக் கட்டிடத்தில் நடைபெற்று வருகின்றன. ஆனால் இந்த சூழ்நிலைகளை எல்லாம் ஒட்டி இந்த நிதி ஆண்டில் அரசு 75 லட்சம் ரூபாய் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒதுக்கியுள்ளது. இது தவிர அட்கோ உதவியுடன் சுமார் 2½ கோடி ரூபாய் செலவில் கட் டிடங்கள் கட்டுவதற்காகவும் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வரு கின்றன. ஆகவே, இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் நிதி செலவுக்காக ஆணை பெற்றவுடன், அரசு ஆணை கிடைத்ததற் குப் பிறகு இந்தத் தொகையைக் கொண்டு எந்த எந்த பள்ளிக்கு முன்னுரிமை வழங்கி கட்டிடங்கள் கட்டுவது என்பதை அரசு பரிசீலித்து முடிவு செய்யும். அப்போது இந்தப்பள்ளியும் அந்த பரிசீலனைக்குள்ளே வரும். இந்த நேரத்தில் மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலம் ஒரு வேண்டுகோளை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அவர்கள் மூலம் நாட்டிலுள்ள வசதி படைத்தோர்க்கும் நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். நம்முடைய கல்வி மானியக் கோரிக்கை யின் மீது வைத்த கொள்கை விளக்கக் குறிப்பிலேயே தெரிவிக் கப்பட்டிருக்கிறது. கல்வித் துறையைப் பொறுத்தவரையில் சுமார் 1,500 கோடி ரூபாயை நாம் செலவு செய்து கொண்டிருக் கிறோம். இருந்தாலும் இப்படி பள்ளிகளுக்கு கட்டிடங்கள் இல்லை; ஆசிரியர்கள் இல்லை என்கின்ற குறைகள் மிகப் பெரிய அளவிலே இருந்துக்கொண்டு வருகின்றன. இவைகளை நீக்குவது என்பது அரசாங்கத்தினுடைய நிதியிலேயிருந்து மாத் திரம் செய்ய முடியாது. பொது மக்களும் இதிலே பங்குபெற வேண்டும். வசதி உள்ளவர்களும் இந்தவாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் பள்ளி சீர்திருத்த, சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பெற்று பொது மக்களுடைய உதவிகளையும் பெற்று இத்தகைய கட்டிடங்கள்



1991 செப்டம்பர் 19]

கட்டுகின்ற முயற்சியில் அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. இப் படிப்பட்ட முயற்சியிலே ஈடுபட்டு சென்ற நிதி ஆண்டில் சுமார் 1½ கோடி ரூபாய் பெறுமானமுள்ள பொருட்கள் சேகரிக்கப்பட் டிருக்கின்றன. இந்த ஆண்டில் 3 மாவட்டங்களில் சுமார் 3 கோடி ரூபாய் அளவிற்கு பொருட்கள் சேகரிக்கப்பட வேண்டு மென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் ஒரு கொள் கையையும் அரசு எடுத்திருக்கிற முடிவுகளையும் உங்கள் மூலம் நாட்டிற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு புதிய உயர்நிலைப் பள்ளிக்குத் தங்களுடைய பெயரை வைக்கவேண்டுமென்று யாரா வது விரும்பினால், அப்படிப்பட்ட கொடையுள்ளம் கொண்டவர் கள் 5 இலட்சம் அல்லது 5 ஏக்கர் நிலம் கொடுத்தால் அவர்கள் பெயரிலே உயர்நிலைப்பள்ளி அமைக்கப்படும். நடைபெற்று வரும் உயர்நிலைப்பள்ளிகளுக்கு பெயர் வைக்க வேண்டும் என்று விரும்பினால் 3 இலட்சம் கொடுத்தால் அவர்களுடைய பெயர் வைக்கப்படும். மேல் நிலைப்பள்ளிகளுக்கு 10 இலட்சம் அல்லது 7 ஏக்கர் நிலம் தந்தால் அவர்களுடைய பெயரிலே அந்த மேல் நிலைப்பள்ளி நடைபெறும். அதைப்போல நம்முடைய மாண்பு மிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அரசினிடத்திலே திரும்பத் திரும்ப இருக்கிற நிதிநிலை நெருக்கடியைத் தெரிந்து கொண்டவர்கள் இப்படி கேட்டுக் கொண்டிருப்பதை விட்டு, உங்களுடைய முயற்சி களை பொதுமக்களிடத்திலேயும் சென்று தெரிவித்து அரசுக்கு உதவியாக, இந்த நாட்டு மக்களுக்கு உதவியாக,

"நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர் !
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர் !
அதுவு மற்றவர் வாய்சொ லருளீர் !
ஆண்மை யாள ருழைப்பினை நல்கிர் ! "

என்று மகாகவி பாரதி தெரிவித்ததைப்போல, அருள்கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொரு ஊருக்கும் பள்ளிக்கூடம், கட்டிடம் என்று கேள்விகள் கேட்பதோடு நின்றுவிடாமல் தயவு செய்து இந்த முயற்சிக்கு பொதுமக்களுடைய ஒத்துழைப்பைப் பெற்றுத் தர வேண்டுமென்று அன்போடு உங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, 2 கோடி ரூபாய் திட்டத்தில் விரைவிலே பள்ளிகளுக்கு கட்டி டங்கள் கட்டுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். அதிலே இடும்பாவனம் பள்ளியையும் சேர்த்து பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போன்றுதான். இன்றைக்கு சட்டமன்ற உறுப்பி னர்களெல்லாம் பொது மக்களை அணுகி பள்ளிகளைக் கட்டுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும்; ஆதரவு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். திருத்துறைப்பூண்டி, கோட்டூர், மன்னார்குடி ஒன்றிய பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்காக

[1991 செப்டம்பர் 19

3 வருடகாலமாக எனனுடைய தலைமையில் 86 ஆயிரம் ரூபாய்
வசூல் செய்து ஒரு கோயில் இடத்தை விலைக்கு வாங்கு
வதற்கு தொடர்ந்து அரசிடத்திலே நான் முயற்சி செய்துகொண்டு
இருக்கிறேன். இதுபோன்ற காரியங்களில், பள்ளிகளுடைய
சீரமைப்புக்காக என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்
களுடைய பணி தொடர்ந்து நிச்சயம் இருக்கும் என்பதைத் தெரி
வித்துக்கொண்டு, இடும்பாவனம் பள்ளிக்கும் கோட்டூர் ஊராட்சி
ஒன்றிய பெண்கள் நடுநிலைப் பள்ளிக்கும் தாங்கள் கட்டிடம்
கட்டுவதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்கள் மூலமாக கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் விரிவாக முதலிலேயே விளக்கி பதில்
சொல்லியிருக்கிறேன். இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படு
கிறபொழுது, தமிழ்நாட்டிலே சுமார் 9 ஆயிரம் பள்ளிக்கூடங்
களுக்குக் கட்டிடம் கட்ட வேண்டிய முன்னுரிமையில் இருக்கிறது.
அந்த முன்னுரிமைப் பட்டியலில் இந்தப் பள்ளிக்கூடமும் இடம்
பெறுமானால் நிச்சயமாக அதுபற்றி அரசு பரிசீலித்து முடிவெடுக்
கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 56, திரு.
கே.ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு உணவு மற்றும்
கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, வினா எண் 56 மற்றும் 57 ஆகிய இரண்டு
வினாக்களையும் ஒரு சேர எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 56, திரு.
கே. ஆர். இராமசாமி அம்பலம் : வினா எண் 57, திரு. டி.
சுதர்சனம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை
அமைச்சர்.

56—

## கிராமங்களில் பாமாயில் வழங்குதல்

*1446. திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்
கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகரத்தில் உள்ளதுபோல் கிராமங்களுக்கும் நியாய விலைக்
கடைகள் மூலம் பாமாயில் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பொது விநியோக முறை மூலம் வழங்கு
வதற்காக, மைய அரசு, இம்மாநிலத்திற்குத் தேவையான அளவு
பாமாயில் வழங்குமேயானால், இத்திட்டம்பற்றி பரிசீலிக்கப்படும்.



1991 செப்டம்பர் 19]

57—

## பாமாயில் ஒதுக்கீட்டை அதிகரித்தல்

*1479 திரு. டி. சுதர்சனம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்
கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டுக்குத் தேவையான பாமாயில் ஒதுக்கீட்டை
அதிகரிக்குமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி
உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பாமாயிலே கிடையாது.
அதிகரிப்பது என்கிற வேலைக்கு இடமே இல்லை.

முற்பகல் 9–55

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருப்பது, இதற்கு முன்
பாக பாமாயில் விநியோகம் செய்தபோது கிராமங்களுக்குக்
குறைவாகவும், நகரங்களுக்கு அதிகமாகவும் விநியோகம் செய்
யப்பட்டது. அதை, கிராம மக்களுக்கும் நகரங்களுக்கு வழங்கப்
படக்கூடிய அளவிற்கு வழங்கப்படுமா என்று நான் கேட்டிருந்
தேன். அதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, பாமாயிலைப் பொறுத்த வரையில், நம்மு
டைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்
தலைவி அவர்கள் முதலமைச்சர்கள் மாநாட்டிலே கலந்து
கொண்டபோது அவர்கள் பாமாயில் தமிழகத்திற்கு வேண்டு
மென்று வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அதோடு, தென்னக
மாநில அமைச்சர்களுடைய மாநாடு ஹைதராபாத்திலே நடை
பெற்ற பொழுது; தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம்
ஆகிய நான்கு மாநிலங்களும் பாமாயில் இறக்குமதி செய்யப்பட
வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியிருக்
கிறது. அதற்கு மேலாக, மீண்டும் நம்முடைய தமிழக முத
லமைச்சரவர்கள் சென்ற வாரம் பிரதமர் அவர்களுக்குக் கடி
தத்தை எழுதி, பண்டிகை காலங்களிலே எப்படி பாமாயில் தேவை
என்று வலியுறுத்தியிருக்கிறார்கள். நேற்று முன் தினம்தான்
மத்திய பாராளுமன்ற கேள்வி நேரத்தில் மாண்புமிகு உணவுத்
துறை அமைச்சரவர்கள் பாமாயில் இறக்குமதி செய்வதற்காக
முயற்சிகளை மத்திய அரசு மேற்கொள்ளும் என்கிற நல்ல தக
வலைத் தெரிவித்திருக்கிறார்கள். பாமாயில் வந்தால் நகரங்
களுக்கும், கிராமங்களுக்கும் எப்படி தருவது என்பதைப் பற்றி

நாம் முயற்சி எடுக்கலாம். நமக்கு மொத்தத்தில் தேவை 13,000 டன் லிட்டர்களாகும். ஆகவே, 13,000 டன் நமக்குக் கிடைக்குமேயானால் கிராமங்கள், நகரங்கள் எல்லாவற்றிற்கும் ஒரு கிலோ தந்துவிட முடியும். இல்லாவிட்டால் அது வருவதைப் பொறுத்து, எந்த வகையிலே விநியோகிக்கலாம் என்பதை அரசு முடிவு செய்யும்.

திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாமாயிலை நமது தமிழகத்திலே உற்பத்தி செய்வதற்கு ஏதாவது வாய்ப்பிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாமாயில் உற்பத்தி செய்வதற்காக மத்திய அரசு விதையெல்லாம் மலேயாவிலிருந்து தருவித்துத் தருகிறேன் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். விவசாயத்துறை அமைச்சரிடத்திலேயும் அதுபற்றிப் பேசப்பட்டிருக்கிறது. அவர்களும் அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த பாமாயிலுக்குப் பதிலாகப் வேறு சமையல் எண்ணெய்களைத் தமிழகத்திலே அளிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே எல்லா சமையல் எண்ணெய்களும் கிடைக்கின்றன. பாமாயிலை மக்கள் விரும்புவதற்குக் காரணம், அதனுடைய விலைதான். மற்ற எண்ணெய்கள் 25 ரூபாய்க்கு மேலேதான் கிடைக்கிறது ஒரு கிலோ. ஆனால், பாமாயில் விலை 15 ரூபாய்க்கு நாம் கொடுத்துக்கொண்டிருந்தோம். ஆகவேதான், மக்கள் அதை விரும்புகிறார்கள்; வாங்க வேண்டுமென்று எண்ணுகிறார்கள். பண்டிகைக் காலங்களிலேயாவது பாமாயில் கிடைக்குமா என்று கேட்கிறார்கள். அதுதான் அதற்குக் காரணம்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாமாயிலுக்குப் பதிலாகக் குறைந்த விலையிலே வேறு சமையல் எண்ணெய்களை ஆராய்ச்சி செய்து புதிதாகக் கண்டுபிடிக்கும் எண்ணம் தமிழகத்திலே—தமிழக அரசுக்கு உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாம் எண்ணெய் வித்துக்களிலேயிருந்துதான் எண்ணெய் உற்பத்தி செய்தாக வேண்டும். என்னென்ன எண்ணெய்கள் இருக்கின்றன என்பது தெரியும். தவிட்டு எண்ணெய் குறைந்த விலைக்குக் கரலாம் என்று கூட நாமும் எண்ணினோம். அதற்குக்கூட ஒரு விலை உயர்வான விலையிலேதான் நிற்கிறது. தவிட்டு எண்ணெய் என்றவுடனே ஒரு கேலி கூட வந்தது. அதற்குக்கூட நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். அரிசியை இரண்டு ரூபாய்க்குப் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் விற்கிறார்கள். தவிடு ஐந்து ரூபாய்க்கு விற்கிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பாமாயிலை வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்கிறோம். ஈச்சமரத்தில் விதையிலிருந்துதான் பாமாயில் தயாரிக்கப்படுகிறது. புரட்சித் தலைவர் முதல்வராக இருந்த பொழுது இதுபற்றி—ஈச்சமரத்தை நமது நாட்டிலே நிறுவி பாமாயில்......(குறுக்கீடு).

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, பாமாயில் மரம் வேறு. அது ஈச்சமரம் மாதிரி இருக்கிறது. நான் மலேசியாவிலே போய் அதைப் பார்த்திருக்கிறேன். பாமாயில் மரம் வேறு; ஈச்சமரம் வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஈச்சமரத்திலிருந்து அல்ல; ஈச்சமரம் போன்ற மரம்.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : புரட்சித் தலைவர் முதல்வராக இருந்தபொழுது, இந்த மரத்தை நாமே நட்டு அதிலிருந்து பாமாயில் தயாரிக்க விரிவாக ஆராய மிலர்ஸ், வீலா நாயர், டைரக்டர் ஆஃப் ஆயில் ஸீட்ஸ் அவர்களைப் பாரிசுக்கு அனுப்பி, இதுபற்றி ஆய்வு செய்யப்பட்டது. ஆனால், அத்திட்டம் பிறகு இலாபமில்லை என்று கருதி விடப்பட்டது. பருவநிலை............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : எனவே, மீண்டும் இது பற்றி தமிழக அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாமாயில் மரம் உற்பத்தி செய்வதற்கு ஆந்திராவிலே ஒரு முயற்சி எடுக்கப்பட்டு, 15 ஆயிரம் ஏக்கராவிலே இப்பொழுது பயிரிடப்பட்டு, வளர்ந்து வருகிறது. தமிழகத்திலே கடலோரப் பகுதிகளிலே இப்படிப்பட்ட மரங்கள் வளர்ப்பதற்கு, விவசாய இலாகா முயற்சி செய்து கொண்டிருக்கிறது. அநேகமாக, கடலோரப் பகுதிகளில் நல்ல தண்ணீர் இருக்கும் இடங்களில் இந்த பாமாயில் மரங்கள் வளர்ப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி ஜி. மல்லிகா.

செல்வி ஜி. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் விடிவெள்ளி நமது இதய தெய்வம் தமிழக முதல்வர் ஆட்சியில் சமையல் எண்ணெய் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில், பாமாயில் தயாரிக்க உதவும் மரங்களை தமிழ் நாட்டில் வளர்க்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் உறுப்பினர் கேட்டார். அதற்கு அமைச்சரும் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறார்கள். திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாமாயிலை நூற்றுக்கு நூறு பேர் உபயோகிப்பதில்லை. பாமாயிலை யார் யார் உபயோகிக்கிறார்கள் என்று கணக்கெடுத்தால், எல்லோரும் அதைத்தான் உபயோகிக்கிறோம் என்று சொல்வார்கள். ஆகையினால், என்ன எண்ணெயை சமையலுக்கு உபயோகிக்கிறீர்கள் என்று கேட்டு கணக்கெடுத்து, அதன் பிறகு பாமாயிலை நாம் விநியோகம் செய்தால் நல்லது. எனவே, கணக்கெடுப்பீர்களா என கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே கணக்கெடுப்பதற்கு இப்போது எண்ணெயே இல்லை. ஆகவே, கணக்கெடுக்கிற பிரச்சினை தற்போது இல்லை. இருந்தாலும், கணக்கெடுத்தாலும், சொல்வார்கள் அம்மையார் அவர்கள் சொல்வது மாதிரி. அதுதான், நம்முடைய இயற்கை. 15 ரூபாய்க்குக் கிடைக்கிறது என்றால் வாங்குகிறவர்கள் ஒருகிலோ கூடுதலாக வாங்கி வைத்துக்கொள்ளலாம் என்ற ஆசைதான் வரும். ஆகவே, கணக்கெடுத்தாலும் சரியான கணக்கு வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாமாயில் கிடைக்காத நிலையிலே, எங்கள் பகுதியிலே தயாரிக்கப்படுகிற சோயா எண்ணெயைப் பெற்று மக்களுக்கு விநியோகம் செய்யப் எண்ணம் அரசுக்கு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோயா எண்ணெய் அதிக அளவில் உற்பத்தியாகவில்லை. அந்த பொள்ளாச்சிப் பகுதியில் அதற்கான 'டிட்கோ' மூலமாக ஒரு 'பேக்டரி' ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது., 'சக்தி சோயா' என்று. அதனுடைய விலை இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை, விலை நமக்குத் தெரியவில்லை. ஆகவே, தனிக் கேள்வி போட்டால், அதற்கான பதிலைத் தருகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. வி. இராஜேந்திரன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அன்னியச் செலாவணி கையிருப்பு மிகவும் குறைவாக இருப்பதால், இன்றைக்கு பாமாயில் இறக்குமதி செய்யப்படாத நிலையில், 'ருப்பீ பேமெண்ட்'டிலே, தமிழகத்திற்கு பாமாயில் தருவதாக மலேசியா நாட்டினுடைய வர்த்தகர்கள் ஏற்கெனவே நமக்கு வாக்குறுதிகளைத் தந்திருக்கிறார்கள். அதன்மீது, கடந்தகால அரசு மைய அரசோடு தொடர்புகொண்டு, அது கிடைக்கும் என்று சொல்லியிருந்தார்கள். தற்போது, இந்த அரசும், மைய அரசும் இதுபற்றி பேசியிருக்கிறதா? அதன்மீது தற்போதைய நிலை என்ன? 'ருப்பீ பேமெண்ட்'டிலே பாமாயில் இறக்க, முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலேசியாவிலே இருக்கிற அரசாங்கம், தமிழகத்திற்கு நேரடியாகத் தருகிறது என்று சொன்னால், வருடத்திற்கு கடன்கூட தரத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், மைய அரசு மாநில அரசுக்கு அப்படிப்பட்ட அதிகாரத்தை தற்போது தந்திருக்கிறதா என்று தெரியவில்லை. ஆகவே, இதை நேரடியாக இறக்குமதி செய்ய முடியாது. மலேசியாவில் அவ்வாறு தருகிற வர்த்தகர்கள் நிறையபேர் இருக்கிறார்கள் என்று சொன்னாலும், நேரடியாக அதிலே செய்ய முடியாத காரணத்தினாலே — இறக்குமதி செய்தால் இந்தியா பூராவுக்கும் இறக்குமதி செய்யக்கூடிய நிலைமை; தென் மாநிலங்கள் பூராவும் விரும்பிக் கேட்கிற காரணத்தினாலே தென் மாநிலங்களுக்காக இறக்குமதி செய்ய வேண்டிய சூழ்நிலை மத்திய அரசுக்கு இருக்கிறது. நிதியாதாரங்கள் கொஞ்சம் வளர்ந்துகொண்டு வருகிறது. அன்னியச் செலாவணி கொஞ்சம் கிடைத்துக்கொண்டு வருவதாக தகவல் வந்து கொண்டிருக்கிறது. அப்படி வந்தால், தீபாவளிக்குள்ளாவது எதாவது கொடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கும். நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு இதுபற்றி இரண்டு கடிதம் எழுதியிருக்கிறார்கள். வற்புறுத்திக் கொண்டே இருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசு இதிலே தீவிரமாக கவனம் செலுத்துவதாகத்தான் நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சொன்னதன்பேரில், மேலும் சில விளக்கங்களை நான்

கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்கள் இங்கு தெரிவித்ததைப்போல, 'ரூப்பி பேமெண்ட்' பெற்றுக் கொண்டு, மலேசியாவிலிருந்து பாமாயில் சப்ளை செய்ய அவர்கள் ஒப்புக் கொள்வார்களேயானால், இதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்குமா என்பதை உடனடியாகக் கேட்டறிந்து, எப்படியாவது தீபாவளிக்குள்ளாக இங்கே தமிழக மக்களுக்கு பாமாயில் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒருவேளை, மத்திய அரசாங்கம் இதற்கு அனுமதி வழங்கவில்லையென்றாலும் கூட, இங்கே 'டாமின்' நிறுவனத்தில் கொஞ்சம் அன்னியச் செலாவணி வசதி இருக்கிறது. எனவே, அதைப் பயன் படுத்தியாவது, எப்படியும் இந்த ஆண்டு தீபாவளிக்குள்ளாக தமிழக மக்களுக்கு பாமாயில் கொடுக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 58, திரு. கே. தவசி. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர். 58—

**ஆண்டிப்பட்டியில் பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பணிமனை.**

*790—திரு. கே. தவசி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டியில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்பொழுது ஆண்டிப்பட்டியில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் டெப்போ அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10-05

திரு. கே. தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முன்னாள் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்தில் அவர் ஆண்டிப் பட்டி சட்டமன்ற உறுப்பினராக மட்டுமல்ல, நம்முடைய



முதலமைச்சராக இருக்கின்றபோதே மதுரை மாவட்டத்தில் அனைத்து கிளை அலுவலகங்களும் வேண்டுமென்ற அடிப் படையில் அங்கே தாலுக்கா அலுவலகம் நிறுவினார். ஹாஸ் பிடல் நிறுவினார். பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கான இடங்களைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் மீண்டும் இந்த கிளை நிறு வனத்தை நிறுவுவதற்காக முயற்சிகள் எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தினை ஆய்வு செய்த போது, வருவாய்த் துறை தெரிவித்த நில மதிப்பீட்டிற்கும் மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்கள் வரைவு அறிக்கையை அரசுக்கு அனுப்பியபோது குறித்திருந்த நில மதிப்பீட்டிற்கும் பெரிய வித்தியாசம் உள்ள காரணத்தினால் நிலத்தை அன்றைக்கு ஆர்ஜிதம் செய்ய முடியவில்லை. உறுப்பினருடைய கருத்துக் களை ஏற்று அரசு மீண்டும் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கையகப்படுத்துவதற்கான இடம் எந்த விலையில், எந்த நிர்ணயத்தில் வேண்டும், ஏதாவது தாலுக்கா தாசில்தார் மூலம் அதைப் பெற வேண்டுமா? பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மூலம் அதைப் பெற வேண்டுமா என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அதற்கான மதிப்பீடுகளைத் தயாரித்துக் கொடுத்தவுடன், பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக அந்த நிலத்தை எடுப் பதற்கு ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். நம்முடைய தமிழகத்தின் இணையற்ற தலைவியாக இருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சியில் மிக விரைவில் அந்த இடங்களை ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 59-திரு. வ. மு. சுப்பிரமணியம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[1991 செப்டம்பர் 19

59—

மானாமதுரையில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக பணிமனை.

*1451 - திரு. வ. மு. சுப்பிரமணியம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரையில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழக பணிமனை ஒன்று தொடங்கி சுற்றுப்புறக் கிராமங்களுக்கு நகரப் பேருந்து விட அரசு பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மானாமதுரையில் இருந்து சுற்றுப்புற கிராமங்களுக்கு நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, மானாமதுரையில் பணிமனை தேவை இல்லை எனக் கருதப்படுகிறது.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதுபாண்டியன் போக்குவரத்துக் கழகம் மானாமதுரைப் பகுதியைப் புறக்கணித்த செய்தியை நேரிலே தெரிவித்திருக்கின்றேன். சிவகங்கையில் உள்ள பணிமனை மானாமதுரை கிராமங்களிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரம் அப்பால் இருக்கின்ற காரணத்தால் மானா மதுரை பகுதியில் உள்ள கிராமங்களுக்குப் பேருந்து விட முடியாத நிலை இருக்கிறது. நமது புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியிலேயாவது இந்தப் பணியை மேற்கொள்ள அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை, சிவகங்கை யிலிருந்து 18 கிலோமீட்டர் தொலைவிலும், பரமக்குடியிலிருந்து 29 கிலோமீட்டர் தொலைவிலும் இருக்கின்ற காரணத்தால், இரண்டு பணிமனைகளிலிருந்தும் பேருந்துகளை இயக்குகின்ற காரணத்தால் 30 கிலோமீட்டர் தூரம் இருக்கின்ற மானாமதுரை யில் அனைத்துக் கிராமங்களுக்கும் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அங்கே பணிமனை துவங்கத் தேவையில்லை.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ ஒரு நான்கு அல்லது ஐந்து தடங்களுக்குத் தான் செல்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால் இன்னும் மீதமுள்ள 200 அல்லது 300 கிராமங்களுக்கு அதைக் கவர் செய்கின்ற வகையிலே அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.



1991 செப்டம்பர் 19]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இன்றைக்கு 90க்கு மேற்பட்ட சதவிகித மக்கள் நம்முடைய ஒப்பற்ற தலைவி யாக புரட்சித் தலைவி அவர்களை ஏற்றுக்கொண்டிருக்கின்றார் கள். அவர்கள் உறுதியாக சில கருத்துக்களைப் போக்குவரத்துக் கழகங்களுக்கு அறிவுரையாக வழங்கியிருக்கிறார்கள். அந்த அறிவுரைகளை ஏற்று, 'உண்மையைச் சொல் உறுதியுடன் சொல், இறுதிவரை சொல்' என்ற தத்துவத்தை நிறைவேற்று கின்ற வகையில், போக்குவரத்துக் கழகங்கள் ஓராண்டிற்குள் உங்கள் குறைகள் அனைத்தையும் களையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 60, திரு. வெ. தமிழரசு. மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

60—

புதுப்பேட்டையில் கால்நடை மருத்துவமனை

*1504. திரு. வெ. தமிழரசு :

மாண்புமிகு வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் ஆத்தூர் நகரம் புதுப்பேட்டை பகுதி யில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைய நிலையில் இதற்கு திட்டம் இல்லை.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர் களுடைய பொற்கால ஆட்சியில் ஆத்தூர் தொகுதி புதுப் பேட்டையைச் சேர்ந்த கல்லாநத்தம், துளுக்கனூர் மற்றும் முல்லைவாடி, சந்தனகிரி, முட்டல் போன்ற ஊர்களில் 20,000-க்கு மேற்பட்ட கால்நடைகள் உள்ளதாலும், 7-க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளதாலும், இப்பகுதியில் 15 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருப்பதாலும் வருகின்ற நிதி ஆண்டிலேயாவது இங்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைக்கப்படுமா என்பதைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் ஒன்றியத்தைப் பொறுத்த வரையில் ஏற்கனவே உள்ள மருந்தகங்கள் ஆத்தூர், மல்லியகரை, மஞ்சினி, கால்நடை கிளை நிலையங்கள் மொத்தம் இருப்பது 4.

[1991 செப்டம்பர் 19

இந்த நான்கு பகுதிகள் கல்பாரூர், அய்யனார் பாளையம், கிரிப்பட்டி, அம்மாபாளையம். இவை தவிர மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று இதயதெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியில் அடுத்த நிதியாண்டில் இதைப் பரிசீலிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் கோழிப் பண்ணைகள் மிக அதிக அளவில் இருப்பதாலும் கிராமங்களில் சில சமயங்களில் கால்நடைகள் எழுந்து நடக்க முடியாத அளவுக்கு நோயால் தாக்கப்பட்டு இருக்கும்போது அவை இருக்கும் இடத்திலேயே டாக்டர்கள் சென்று பார்த்து சிகிச்சை அளிக்கும் வகையில் நடமாடும் கால்நடை மருந்தகங்கள் அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன். என்னுடைய தொகுதியானது பெரிய கல்ராயன் மலை மலைவாழ் மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதியாகும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சம்பந்தப்பட்ட கேள்வியாக இருக்கவேண்டும். இன்னொரு ஊர் பற்றிக் கேட்டால் அவரிடத்திலே விளக்கம் இருக்காது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் அதற்கான பதில் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவமனை அமைக்கும்போது அந்தப் பகுதியிலே 10,000 கால்நடைகள் இருந்தால் அமைக்க லாம் என்ற ஒரு கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு சொன்னார்கள். தூரத்தை அதிகம் எடுத்துக்கொள்வதா அல்லது கால்நடைகள் அதிகம் இருப்பதை எடுத்துக்கொள்வதா என்பதைப் பொறுத்த வரையில் இருக்கின்ற விதியைத் தளர்த்தி தூரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய வேளாண்மைக் குழு நிர்ணயித்தது 10,000 கால்நடைகள் இருக்கும் பகுதிகளுக்குக் கட்டாயம் மருத்துவமனை இருக்க வேண்டும் என்பது. அதே நேரத்தில் அங்கு ஏற்கனவே மருத்துவமனை இருந்தது என்றால் அதிகமான கால்நடைகள் இருக்கும் பட்சத்தில



1991 செப்டம்பர் 19]

அங்கே கால்நடை மருத்துவமனை துவக்கப்படும் கிராமத்திற் கும் ஏற்கனவே உள்ள கால்நடை மருந்தகங்களுக்கும் இடையே உள்ள தூரம் மற்றும் கால்நடைகளின் எண்ணிக்கை இவை களைக் கருத்தில் கொண்டுதான் புதிய நிலையங்கள் அமைக்கப் படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. பழனிசாமி.

திரு. இரா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கால்நடை மருத்துவமனை அமைக்கப்பட இருக்கிற இடங்களில் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ஒரு கணிசமான தொகையை வழங்கினால்தான் மீதித் தொகையை அரசு அளித்து கால்நடை மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது. பொதுவாக ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் பணம் இல்லாத நிலையில் பல கால்நடை மருத்துவமனைகளை கட்ட முடியாத நிலை உள்ளது. எனவே அரசு முழு மானியம் கொடுத்து கால்நடை மருத்துவமனை கட்ட முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் பரிவுடன் பரிசீலிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறறது என்பதைக் குறிக்கும்]

## 2. தகவல் கோரல்.

### நிலக்கோட்டை தொகுதி அம்மைய நாயக்கனூர் பேரூராட்சிக்குரிய பகுதிகளில் குடிநீர் வழங்குவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் எவ்வளவோ காரியங்கள் செய் தாலும் கூட குடிநீர்ப் பிரச்சினை மிக மிக மோசமாக இருக்கிற காரணத்தால் என்னுடைய தொகுதியில் நாளைய தினம் என்னுடைய தலைமையிலே மறியல் செய்யவேண்டும் என்று நோட்டீஸ் எல்லாம் அடித்து அம்மையநாயக்கனூர் பேரூ

ராட்சியைச் சேர்ந்தவர்கள் தயாராக இருந்துகொண்டிருக்கிறார்கள். இதைத்தான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே சொல்லி எப்படியாவது இந்தக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வையுங்கள் என்று அவர்களிடத்திலே மனு கொடுத்திருக்கிறேன். அதற்காக என்ன பதிலை அளிக்க இருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம் அம்மையநாயக்கனூர் பேரூராட்சிக்கு உடனடியாக குடிதண்ணீர் திறந்துவிட நிலக்கோட்டை பேரூராட்சி நிர்வாகம் மறுப்பதைக் கண்டனம் செய்து நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் தலைமையில் 20—9—1991 அன்று சாலை மறியல் போராட்டம் நடத்த இருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது.

பேரணைத் தண்ணீர் அம்மையநாயக்கனூர் பேரூராட்சிக்கு குறிப்பாக 11, 12 மற்றும் 13-வது வார்டுகளுக்குக் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது. அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவரை, உடனடியாக தக்க ஏற்பாடுகள் செய்து குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளேன். அவர் இன்னும் ஒரு வாரகாலத்திற்குள் தேவையான இடைக்கால ஏற்பாடுகளைச் செய்வார். இந்த நிலையில் 20—9—1991 அன்று நடத்துவதாக இருக்கும் சாலை மறியல் போராட்டத்தைக் கைவிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முற்பகல் 10–15

## 3. கவன ஈர்ப்பு.

**வேலூரிலுள்ள தோட்டப்பாளையம், காகிதப் பட்டறை போன்ற பகுதிகளுக்குக் கடந்த 6 மாதங்களாகக் குடிநீர் வராதது குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்த கவன ஈர்ப்பு திரு. ஞானசேகரன் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

* திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் தோட்டப்பாளையம், காகிதப் பட்டறை ஆகிய இடங்களிலே தண்ணீர் பிரச்சினை தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது............





மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன், அவைக் குறிப்பிலே உள்ளதை அப்படியே படித்துவிட்டு உட்காரவேண்டும்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் தோட்டப்பாளையம், காகிதப்பட்டறை ஆகிய இடங்களில் கடந்த 8 மாதங்களாக குடிநீர் வராத காரணத்தால் அப்பகுதி மக்கள் கொதிப்படைந்து..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொஞ்சம் கேளுங்கள். இதிலே என்ன இருக்கிறது என்று படியுங்கள், அவை நிகழ்ச்சி நிரலிலே உங்களுக்கு எப்படி கொடுத்திருக்கிறார்களோ அதிலே இருந்துதான் அப்படியே நீங்கள் படிக்கவேண்டும்.

திரு. சி. ஞானசேகரன் : வேலூரிலுள்ள தோட்டப் பாளையம், காகிதப்பட்டறை போன்ற பகுதிகளுக்குக் கடந்த 8 மாதங்களாக குடிநீர் வராத நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அவை முன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அறிக்கை

தோட்டப்பாளையம், காகிதப்பட்டறை ஆகியவை வேலூர் நகராட்சியைச் சார்ந்த பகுதிகளாகும். இப்பகுதிகளுக்கு குடிநீர் சத்துவாச்சாரி குடிநீர்த் திட்டத்தில் இருந்து பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வந்தது.

சத்துவாச்சாரி குடிநீர்த் திட்டத்தின் நீராதாரமான பாலாற்றில் நீர் ஊற்று வற்றியதன் காரணமாக, சத்துவாச்சாரி குடிநீர் திட்டத்தின் முழு அளவு குடி நீரையும் இப்பேரூராட்சி தனது தேவைக்கே பயன்படுத்திக் கொண்டதால், இக்குடிநீர்த் திட்டத்தில் இருந்து வேலூர் நகராட்சிக்குட்பட்ட தோட்டப் பாளையம், காகிதப்பட்டறை ஆகிய பகுதிகளுக்கு தற்போது தண்ணீர் விநியோகிக்கப்படவில்லை. இப்பகுதிகளுக்கு வேலூர் நகராட்சியில் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்குவதற்கான திட்டம் தேவை என்று நகராட்சி கேட்டுக் கொண்டால் ஆய்வு செய்யப்பட்டு, இப்பணி வைப்புநிதித் திட்டமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்படும்.

வேலூர் குடிநீர்த் திட்டம் தற்போது நகராட்சியின் பராமரிப்பில் இருந்து வருகிறது. தற்சமயம் தோட்டப் பாளையத்தில் 12 கைவிறைப்பான்களும், காகிதப்பட்டறையில் 5 கைவிறைப்பான்களும் பயனில் இருந்து வருகின்றன. லாரி மூலம் இப்பகுதிகளுக்கு நகராட்சியால் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[1991 செப்டம்பர் 19

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் நகரத்திலே தோட்டப் பாளையம், காகிதப்பட்டறை போன்ற இடங்களிலே 8 மாதங்களாக தண்ணீர் வராமல் தண்ணீர் பிரச்சினை இன்று தலைவிரித்தாடிக் கொண்டு இருக்கிறது. அதற்காக செல்வ கணபதிக்குக்கூட ஆலயம் எடுத்து விட்டோம். தண்ணீர் அவர் கொடுப்பார் என்று. இந்த பட்ஜெட்டிலே அவர் நிதி ஒதுக்காத காரணத்தினாலேயே அவருடைய அன்னை பராசக்திக்குக்கூட நாங்கள் ஆலயம் கட்டத் தயாராக இருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தான் கூறுகிறேன். ஆகவே கூடிய விரைவிலே எங்களுக்கு இந்த தண்ணீர் பிரச்சினை தீரும் முகத் தான் பொன்னையாற்றுத் தண்ணீரை வேலூருக்குக் கொண்டு வரும் திட்டத்தையோ அல்லது ஒகேனக்கல்லில் இருக்கக்கூடிய காவிரியைப் பாலாற்றோடு இணைத்து எங்களுடைய தண்ணீர் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு உடனடியாக தமிழக முதல்வர் அவர்களும், வீட்டுவசதி குடிநீர் வாரிய அமைச்சர் அவர்களும் சேர்ந்து எங்களுக்கு உடனே தண்ணீரைக் கொடுப் பதற்கு, இந்த பாமாயிலை எப்படி தீபாவளிக்குள் முதலமைச்சர் அவர்கள் கருணையோடு கொடுத்தார்களோ, அதே போல அழு கின்ற பிள்ளைதான் பால் குடிக்கும் என்பார்கள். அதுபோல எங்களுக்கு பால்கூட வேண்டாம் தண்ணீர் தாகம் என்கிறோம். ஆகவே தாகத்தைத் தீர்ப்பதற்கு முதல்வர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிவோடு பரிசீலித்து நட வடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிவோடு கவனிக்கிறார்கள். 'Wait for one year' என்று இல்லாமல் பாமாயில் எப்படி முதலமைச்சர் அவர்கள் தீபாவளிக்குள் கொடுக்கிறார்களோ, அதுபோல கூடிய விரை விலே தண்ணீரைக் கொடுத்துதவ வேண்டும் என்ற அன்பான கோரிக்கையை பணிவோடு தங்கள் முன் வைத்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறி யிருந்த பகுதி தோட்டப்பாளையம், காகிதப்பட்டறை. அது வேலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியாகும். இதுவரையில் இந்தப் பகுதிக்கு சத்துவாச்சாரி குடிநீர் திட்டத்திலே இருந்து குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. சத்துவாச்சாரி குடிநீர் திட்டத் திற்கு நீர் ஆதாரம் பாலாற்றிலிருந்து கிடைக்கப் பெற்றது. தற்போது பாலாற்றில் நீருற்று வற்றிவிட்ட காரணத்தினால் இந்த இரு பகுதிகளுக்கும் தண்ணீர் நிறுத்தப்பட்டிருக்கிறது. இது வேலூர் நகராட்சிக்கு உட்பட்ட காரணத்தினால் வேலூர்



1991 செப்டம்பர் 19] [திரு. டி.எம். செல்வகணபதி]

நகராட்சி இதுவரையிலே எந்தவிதமான குடிநீர் வழங்குவதற் காக திட்டம் வேண்டுமென்று குடிநீர் வடிகால் வாரியத்திடம் கேட்கவில்லை. இருப்பினும் தோட்டப்பாளையத்தில் 12 கைஇறைப்பான்களும், காகிதப்பட்டறையில் 5 கை இறைப் பான்களும் பணியில் இருக்கின்றன. அது மட்டுமல்லாமல் வாரி மூலம் நகராட்சியால் இப்பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும் குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## 4. அறிக்கைகள் அளித்தல்.

## பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கி. தருமலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவரான நான் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் 1982–83 ஆம் ஆண்டு முதல் 1984–85 ஆம் ஆண்டு வரையிலான கணக்குகள் குறித்த அறிக்கைகள் மீதான குழுவின் 6-வது அறிக்கை மற்றும் தமிழ் நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், மின் உற்பத்தி மற்றும் மரபு சாரா எரிசக்தி ஆதாரங்கள் குறித்த அறிக்கை மீதான குழுவின் 7-வது அறிக்கை ஆகிய வற்றை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 10-20

## 5. மானியக் கோரிக்கைகள், 1991–92.

## விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 24—தொழில்கள்.

(ஆ) கோரிக்கை எண் 54—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 9,78,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 495. திரு. இரா. நடேசன்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாட்டில் உள்ள சிறுதொழில் கூடங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், அரசு நிறுவனங்களுக்கு தேவை இருந்தும் அவைகளை வாங்காமல், வெளி மாநிலங்களில் இருந்தும், பெரும் தொழில் நிறுவனங்களிடமிருந்தும் அரசு நிறுவனங்கள் வாங்குவதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 9,78,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 494. டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தொழில்கள் பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 9,78,56,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 54—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 54ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 19,48,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 514. திரு. ஆர். சிங்காரம்.



திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு பற்றிய 54ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 19,48,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 515. திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''தொழில் வளர்ச்சி குறித்த'' மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 19,48,11,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசின் இரண்டு மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தொழில்கள் மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற பொருள்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப் பெற்று அவைமுன் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப் பெற்றுள்ளன. அதிலே, தமிழிலே இருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை நான் இந்த அவையிலே ஆற்றிய உரையாகக் கருதி, அதை இந்த அவைக் குறிப்பிலே பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ** இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இறுதியில் மாண்புமிகு உறுப்பினர்களது கருத்துக்களுக்கு என்னுடைய பதிலுரையையும் அரசு எடுத்துள்ள சில முடிவுகள் பற்றியும் தெரிவிக்கிறேன் என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்.

திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தில் தொழில் வளர்ச்சியின் வேகத்தை அதிகரிக்கும் நோக்கத்தோடு மாண்புமிகு தமிழக

** 225—372 ஆம் பக்கங்களில் I மற்றும் II இணைப்புகளாக அச்சிடப் பெற்றுள்ளன.

[திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்] [1991 செப்டம்பர் 19

முதல்வர் அவர்களுடைய தலைமையிலான தமிழக அரசு பல சலுகைகளை அறிவிப்பு செய்ததோடு மட்டுமல்லாமல் தொழில் அதிபர்களை அழைத்துப் பேசி, அவர்களின் உண்மை நிலை அறிந்து செயல்படுவது உண்மையிலேயே போற்றத்தக்க, பாராட்டத் தக்க செயலாகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தலைமையி லான தமிழக அரசின் திடமான மன வலிமையை நான் பெரிதும் பாராட்டி, இந்தத் தொழில்கள் மானியக் கோரிக்கையை வர வேற்று என்னுடைய கன்னி உரையைத் துவக்குகின்றேன்.

தென்னாற்காடு மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்பது பல்வேறு காலக் கட்டங்களிலே, இந்த அவையிலேயே அறிவுறுத் தப்பட்டிருக்கிறது. அதை மனதிலே கொண்டுதான் என்னவோ மரியாதைக்குரிய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு பல கோடி ரூபாய் பெறுமான தொழிற் சாலைகளை இந்த கொள்கை அறிவிப்பிலே செய்திருப்பதை நான் மனமாரப் பாராட்டி வரவேற்கின்றேன்.

Diketene D rivativ s 30 கோடி ரூபாய் செலவில் சிதம்பரம் வட்டம், தென்னாற்காடு மாவட்டத்திலே நிறுவப்படும் என்பதும். Ethylene Di chloride, Vinyl Acctateod citric Acid என்பவைகளுக்கு முறையே 20 கோடி ரூபாயும், 57.5 கோடி ரூபாயும், 70 கோடி ரூபாயும் இங்கே அறிவித்திருக்கிறார்கள். இதன் மூலம் ஏறத் தாழ 19,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு அமைந்திருக்கிறது. இதை நான் உளமாரப் பாராட்டு கிறேன்.

முற்பகல் 10-25

அடுத்து இங்கே நான் சார்ந்திருக்கிற கடலூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நகரமான கடலூரிலே ஜே. கே. பார்மா கெம். லிமிடெட் 90 கோடி மதிப்பீட்டுச் செலவில் பெனிசிலின்-ஜி தயாரிக்கும் தொழிற்சாலை 1993 ஆம் ஆண்டு உற்பத்தியைத் துவங்குமென்று பெருமையோடு அறிவிக்கப்பட்டிருக்கிறது. பல் வேறு அரசியல் சூழ்நிலைகளின் காரணமாக அங்கு வருமோ, வராதோ என்று இருந்த தொழிற்சாலையை உண்மையிலேயே இந்த அரசு எவ்வளவு ஆர்வத்தோடு செயல்படுத்துகிறது என் பதை எடுத்துக் காட்டும் வகையிலே வேகம் வேகமாக அந்தக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவதைப் பார்த்து நான் பிரமித்து நிற்கிறேன்.

அதைப் போல பில்கோ கிளாஸ் கம்பெனி லிமிடெட் என்ற 30.4 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 10 மில்லியன் சதுர மீட்டர் கண்ணாடித் தகடு தயாரிக்கும் தொழிற்சாலை புவனகிரி யில் நிறுவப்பட்டு, அதற்காக நிதி நிறுவனங்களிடமிருந்து அனுமதியைக் கோரியுள்ள நிலையில் உள்ளது.



1991 செப்டம்பர் 19] [திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்]

அடுத்து டேன்டெக் அக்ரோ கெமிகல்ஸ் லிமிடெட் என்ற தொழிற்சாலை தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூர் சிப்காட் தொழில் மையத்தில் 705 இலட்சம் ரூபாய் செலவிலே 1992 ஆம் ஆண்டு உற்பத்தியைத் தொடங்கும் என்று மதிப்பிடப்பட்டு இருக்கிறது. அடுத்து ஸ்டெர்லிங் டங்ஸ்டன் பிராடக்ட்ஸ் லிமிடெட் என்ற தொழிற்சாலை தென் ஆற்காடு மாவட்டம் கடலூரில் 40.35 கோடி மதிப்பீட்டுச் செலவிலே நிறுவப்பட்டு வரும் இனிப்பான செய்தியை இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என் இதயபூர்வமான நன்றியை தமிழக முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, அங்கே செயல்பட்டு வருகிற சிப்காட் காம்ப்ளெக் சுக்கு 453.43 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு 58 நிறுவனங் களுக்கு அந்த இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 15 நிறுவனங்கள் அங்கே உற்பத்தியைத் துவக்கிய நிலையில் இருக்கின்றன. இதன் மூலம் அங்கே 58 நிறுவனங்கள் வருமாயின் சுமார் 4,000 பேர் களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும் சூழ்நிலை உருவாகும். இந்த நிலையிலே பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக, மரியாதைக் குரிய முதலமைச்சரவர்களிடத்தில் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, ஏனைய இடங்களைவிட சிப்காட் காம்ப்ளெக்ஸ் மிகவும் வெற்றிகரமாக அங்கே செயல்பட்டு வருகிறது. இந்தக் கொள்கை விளக்கத்திலே மேலும் அது விரிவுபடுத்துகின்ற திட்டம் அறிவிக்கப்படுமென்று நாங்கள் எண்ணி இருந்தோம். ஆனால் அதுபற்றி இங்கே சொல்லப்படவில்லை. லாபகரமாக நடைபெறுகின்ற அந்த சிப்காட் காம்ப்ளெக்சை மேலும் விரி வாக்கி, பல தொழிற்சாலைகள் அங்கே வருவதற்கு வகை செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தத் தொழிற்சாலைகளிலே வேலை வாய்ப்பு பற்றி ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். அங்கே தொழிற்சாலை களிலே வேலை வாய்ப்பு அளிக்கும்போது, மாவட்டத்தில் உள்ள வர்களைத் தேர்ந்தெடுத்து, வேலை வாய்ப்பிலே முன்னுரிமை வழங்க வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அங்கே ஸ்கில்ட் லேபர் என்றும், டெக்னீஷியன் என்றும் பார்க்கும்போது அதிகமான அளவுக்கு இல்லை என்றா லும், டெய்லி வேஜசில் நியமிக்கும் ஊழியர்களையாவது அந்த மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கும்படி தொழிற்சாலைகளுக்கு அறிவுரை வழங்கும்படி மெத்தப் பணிவன்போடு கேட்டு கொள்கிறேன்.

முற்பகல் 10-30

எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல சுமார் 1,000 கோடி ரூபாய்த் திட்டச் செலவில் கரும்புச் சக்கையைப் பயன் படுத்தி இரண்டாவது செய்தித்தாள் காகிதத் தொழிற்சாலையை

திறுவுகிற அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். இதை நான் இதய சுத்தியோடு வணங்கி வரவேற்கிறேன். இதற்கான இடம், பண்ருட்டிக்கு அருகிலே இருப்பதாக ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் அந்த இடம் உறுதி செய்யப்பட்டு விட்டதா என்பதையும் இந்த அரசின் மூலம் அறிய விரும்புகிறேன்.

தென்னாற்காடு மாவட்டம் சங்கராபுரம் நகருக்கு அருகிலே பல வருஷங்களுக்கு முன்பு தங்கம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு ஆய்வுசெய்து, Economically it is not viable என்று அப்போது முடிவு செய்யப்பட்டதாக நான் அறிகிறேன். இப்போது அதற்கான ஆய்வு செய்ய இருப்பதாக அறிவிப்பு செய்து இருக்கிறார்கள். இதை வேகப்படுத்தி செய்ய வேண்டுமென்று கூறி அதை வரவேற்றுப் பேசுவதில் பெருமைப் படுகிறேன். மாவட்டங்கள் தோறும் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை செய்கிற வகையில் குழுக்களை அமைக்கிறார்கள். அந்தக் குழுக்களிலே அந்த மாவட்டத்தில் இருக்கிற எல்லா சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட கமிட்டியாக அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்துகிறேன். இப்போது உள்ள அந்தக் கமிட்டியில் ஏதாவது ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஏதாவது ஒரு சட்டமன்ற உறுப்பினர் தான் இருக்கிறார்கள். ஆனால் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட கமிட்டி அங்கே முழுமையாக அமைக்கப்பட்டால் அந்தத் தொகுதியில் இருக்கிற தொழிற்சாலைகளின் பிரச்சினைகளைப் பற்றி மாவட்ட அளவில் கலந்து பேசுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் முன்பு குறிப்பிட்டதைப் போல சிப்காட் காம்ப்ளெக்சில் ஏராளமான தொழிற்சாலைகள் வந்த வண்ணம் இருக்கின்றன. ஆனால், அதனால் சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்படக் கூடாது என்ற உயர்ந்த நோக்கம் சுல்லா அளவிலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால் சிப்காட் காம்ப்ளெக்சை அங்கே வந்து பார்ப்போமானால் அங்கே இருக்கிற மரங்கள் எல்லாம் பாழாகக் கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. குறிப்பாகச் சொல்வது என்றால் ஏங்கானிக் கெமிக்கல்ஸ் என்ற நிறுவனத்தை சாலையோரத்தில் திறுவியிருப்பதால் அங்கே சாலையோரங்களில் இருக்கும் 13 பெரிய பெரிய மரங்கள் பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை சாலையில் நாம் போகும் போதே பார்க்கலாம். நான் இந்த மாமன்றத்தில் வலியுறுத்திக் கூறுவது, எப்படி மரங்களை நம்முடைய நாட்டின் மிகப் பெரிய சொத்தாகப் பாதுகாக்கின்றோமோ அப்படி, ஏராளமான மரங்களை சிப்காட் காம்ப்ளெக்சில் திறுவுவதற்கு அந்தத் தொழிற்சாலைகளின் உதவியை நாடி அவர்களுக்குத் தேவையான அறிவுறுத்தலைக் கூறி, மரங்கள் வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



அங்கே இருக்கிற தொழிற்சாலைகள் மூலம் அந்த காம்ப்ளெக்சை ஒட்டியிருக்கிற ஏராளமான கிராமங்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன. முன்பு விவசாய நிலங்களாக இருந்தவை எல்லாம் நிலத்தடி நீர் வற்றிப் போயிருக்கிற சூழ்நிலையில் மாறிவிட்டன. தொழில் அதிபர்களைப் பல்வேறு வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுத்தி இருக்கிற இந்த அரசு அவர்களை அணுகி நிலத்தடி நீருக்கு ஏதாவது ஒரு காம்பன்சேட் போர் போட்டு அந்த கிராம மக்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறுகிற கழிவு நீரை சுத்தம் செய்துதான் அங்குள்ள உப்பனாற்றில் வெளியேற்ற வேண்டுமென்று விதிகள் இருந்தாலும்கூட, அந்த விதிகள் அங்கே முறையாகக் கடைப் பிடிக்கப்படவில்லை. இதனால் அந்தக் கடலோரங்களில் வாழ்கிற ஏராளமான மீனவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் அன்றாடம் காய்ச்சிகள். வலையை வைத்துத்தான் தொழில் செய்கிறார்கள். ஆனால் சுத்தம் செய்யப்படாத ஆலை கழிவு நீர் உப்பனாற்றில் கலப்பதன் மூலம் அந்த மீனவர்களின் தொழில் அங்கே பாதிக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

அங்கே இருக்கின்ற ட்ரீட்மெண்ட் பிளாண்ட் முறையாகச் செயல்படுகிறதா, தொழிற்சாலைகளில் ட்ரீட்மெண்ட் பிளாண்ட் களை நிறுவி இருக்கிறார்களா என்பதையும் இந்த அரசு ஆய்வு நடத்தி அறிவுரைகளை வழங்க வேண்டுமென்று நான் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏறத்தாழ 300 அவனுகள் . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள்.

திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் : பாமாயில் உற்பத்தியைப் பற்றிக் கூட இன்று காலையில் கேள்வி நேரத்தின் போது சொன்னார்கள். ஒரு நிறுவனம் உலகத்திலேயே தலை சிறந்த நிறுவனமாக விளங்குகிறது. பாமாயில் தொழிற்சாலையைக் கடலூரிலே துவங்குவதற்குத் திட்டம் ஏதாவது இருக்கிறதா என்பதை இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன். அங்கு மாவட்ட தொழில் முதலீட்டுக் கழகத்தின் இப்போதெல்லாம் வெளிக்கின் அவை தற்சமயம் நிறுத்தி வைக்கப்பட்டுவோன் தருவதில்லை. இந்த கொள்கை அறிவிப்பில் நான் பார்க்கும் இருக்கிறது. இந்த திட்டங்களை உருவாக்க வேண்டும்; 4, 5 நாட்களுக்குள் அந்தத் திட்டங்களை முடிவு செய்ய வேண்டும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். எனவே இந்த அரசு தலையிட்டு ஏதாவது இருக்கிறார்கள். ... மக்களுக்கும் பயன்படும் வகையில் அந்த வெளிக்கின் லோன்களை

[திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்] [1991 செப்டம்பர் 19

கொடுப்பதற்கு அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டு இந்தச் சந்தர்ப்பத்திலே பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் வஞ்சகக் குணம் கொண்ட சிறுமதி படைத்தவர்களால் ஒரு சிறிய குடையால் அலங்கரித்து நீங்காத் துயில் கொண்டிருக்கும், காய்ந்து சிவந்த கதிரவன் நிறத்தை, நன்று சிவந்த கரங்களுக்குச் சொந்தமானவரின் அரசியல் வாரிசு எங்கள் இதய தெய்வமே, காவிரித்தாயின் கனிவான பார்வையுடன் புவி ஆளும் மாதரசியே, ஆயுதக் கலாச்சாரத்தை அறவே ஒழித்த அல்லி ராணியே, எனது கண்கண்ட தெய்வமே, திராவிட இயக்க வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய அரசியல் முடிவுகள் ஏற்பட்ட பிறகு இந்த மாமன்றத்தில் துவங்கிய வரவு-செலவுத் திட்டத்தின் மீது தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவுகள் மீது எனது கன்னிப் பேச்சை பேசுகின்ற பாக்கியத்தைக் கொடுத்த எனது இதய தெய்வமே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக எனது சார்பாகவும், எனது சின்னசேலம் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைக் காணிக்கையாக அவர்களுடைய பொற்பாதங்களில் வைக்கின்றேன்.

அன்னிபெசன்ட் அம்மையாரின் பிரவேசத்திற்குப் பிறகுதான் காங்கிரசுக்கு ஒரு புதிய தேசிய நீரோட்டம் கிடைத்தது. ஜான்சி ராணியின் போருக்குப் பிறகுதான் இந்திய விடுதலை இயக்கமே வீறு கொண்டு எழுந்தது. அன்னை இந்திரா காந்தி ஆட்சியின் போதுதான் காங்கிரசின் சோஷலிசமே முழு வடிவம் பெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமைக்குப் பிறகுதான் திராவிட இயக்கமே ஒரு திருப்புமுனையோடு வரலாறு காணாத வெற்றியைக் கண்டது. (மேசையைத் தட்டும் ஒலி). பயமின்றி நம்முடைய கருத்துக்களை, நம்மைப் போன்ற அரசியல்வாதிகள் மக்கள் மன்றத்தில் கருத்துக்களைச் சொல்லும் போது, கைத்தடிகள் எல்லாம் மறைந்து, வெடிகுண்டு துப்பாக்கித் தோட்டாக்களின் வெடிச்சத்தம் கேட்கும் புதிய துப்பாக்கி கலாச்சாரம் தமிழ்நாட்டில் வந்த பிறகுதான், நாம் இந்தப் பொறுப்பை நம்முடைய புரட்சித் தலைவியின் தலைமையில் ஏற்று இருக்கின்றோம். தமிழகத்தில் முந்தைய எந்த முதலமைச்சர்களும் இருந்த போது ஏற்படாத, மிகப் பெரிய நிதி நெருக்கடியுடன், கூடுதல் பொறுப்புகளுடன் நம்முடைய முதல்வர் அவர்கள் இன்று பொறுப்பை ஏற்று இருக்கின்றார்கள்.



1991 செப்டம்பர் 19] [திரு. ஆர். பி. பரமசிவம்]

நான் இன்னொன்றையும் இந்த நேரத்தில் குறிப்பிட்டு ஆக வேண்டும். இது நமது கடமை. பேரறிஞர் அண்ணா காலத்தில்தான் சாதாரண குடிமகன் இந்த மாமன்றத்தில் நுழைய முடிந்தது. அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். காலத்தில்தான் சற்று அதிகமாக முக்கியத்துவம் கிடைத்தது. கழகக் காவல் தெய்வம் புரட்சித் தலைவியின் காலத்தில்தான் என்னைப் போன்ற சாதாரண மக்கள் கூட (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் நுழைய முடிந்தது மட்டுமல்லாமல் இந்த சாதி, இந்த தொகுதியில் நின்று ஜெயிக்க முடியும் என்ற பாரம்பரியத்தை மக்கள் சக்தியால் அடித்து நொறுக்கி (மேசையைத் தட்டும் ஒலி) தான் ஆளாக்கிய நமது பராசக்தியின் பாதங்களைத் தொட்டு வணங்கித் தொடங்குகிறேன் எனது சிறிய உரையை.

முற்பகல் 10-40

ஏழை எளிய மக்களும் போற்றிப் புகழக்கூடிய நிதிநிலை அறிக்கையை தேர்தல் அறிக்கையில் கூறியதைப் போல செயல்படுத் தொடங்கியுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றம் உணர்ந்தாக வேண்டும். அந்த வகையில் மக்களுக்கு அடிப்படை வசதிகளை நிறைவேற்றும் பணியில் இந்த அரசு முனைப்பாக இருப்பதையும் நாம் உணர்ந்தாக வேண்டும்.

இன்று நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் தொழில் துறைக்காக ரூபாய் 9,76,56,000 கோரி இருக்கிறார்கள். இந்தத் தொழில் துறை தமிழகத்தில் மிகவும் பின்தங்கி இருப்பது எனவும், அதற்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்றும் பொது விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். மத்திய அரசைப் பொறுத்தவரையில் இதுவரையில் நமக்கு கொடுத்து வந்த முதலீட்டில் 8 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைத்துள்ளதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த 5 சதவீதத்தோடு நமக்கு பொறுப்பு ஏற்றிருக்கின்ற இதய தெய்வம் அவர்கள் இந்த மாநிலம் தொழில் துறையில் இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக இருக்க வேண்டுமென்ற ஆர்வத்தோடு, கழகம் வெற்றி பெற்ற பிறகு, தனது பொறுப்பை ஏற்ற பிறகு, கடந்த ஜூலை திங்கள் 6-ஆம் தேதி தமிழகத்தில் உள்ள அனைத்து தொழில் அதிபர்களையும் கூட்டி, வேறு எந்த முதலமைச்சரும் இந்த மாநிலத்தில் இதுவரையில் செய்ய முடியாத, செய்து காட்டாத வகையில், அந்தத் தொழில் அதிபர்கள் கூட்டத்தில், தமிழகத்தில் என்னென்ன தொழில்களை நடத்த முடியும்; அதற்கு இந்த அரசு என்ன ஆவன செய்ய வேண்டும் எப்படியெல்லாம் நாங்கள் உதவ வேண்டுமென்று கருத்தினை அவர்களிடம் கேட்டதோடு, அவர்களுக்கு அறிவுரையும் வழங்கியதை இந்த மாமன்றம் மறக்கக்கூடாது.

[திரு. ஆர். பி. பரமசிவம்] [1991 செப்டம்பர் 19

அப்படிப்பட்ட ஒரு நல்ல தலைமையோடு இயங்குகின்ற இந்தத் தமிழகத்தில், தொழில் துறை வருங்காலத்தில் சிறப்போடு சிறந்து விளங்கும் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். அந்த முயற்சியை நம்முடைய இதய தெய்வம் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தில் இப்போது பற்றாக்குறை பட்ஜெட்டை நாம் வைத்திருக்கிறோம். இந்த நிதிநிலை நெருக்கடியைப் பொறுத்தவரையில் நம்முடைய இதய தெய்வம் அவர்கள் எப்படி சமாளிப்பார்கள் என்ற கருத்தினையும் நாம் கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் தமிழகத்தில் வற்றாத ஜீவநதியாகச் சொல்கிற அதாவது பொன்முட்டை இடுகிற வாத்து என்று கூறப்படுகின்ற வகையில் நம்முடைய இந்தியாவிலேயே கருப்புக்கல் தொழில் மிகச் சிறப்பாக நடைபெறுகிற மாநிலம் நம்முடைய தமிழக மாநிலமாகும். கருப்புக்கல் தொழிலை கடந்த அரசு தன்னுடைய சொந்த காரணத்திற்காக பல குளறுபடிகளைச் செய்து, அந்தத் தொழிலை அழித்துவிட்டார்கள். ஆந்திரா, கர்நாடகம், ஒரிஸ்ஸா, மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களில்—தமிழ்நாட்டைத் தவிர மற்ற மாநிலங்களில் பட்டா நிலத்தில் கருப்புக் கல் வெட்டியெடுக்க தொழிற்சாலை வைத்தால்தான் குத்தகை உரிமம் வழங்கப்படும் என்று முன்நிபந்தனையின்றி உரிமங்கள் வழங்கப்பட்டு, அந்தத் தொழில் சிறப்பாக நடக்கிறது. முந்தைய அரசுகாரர்கள் தொழிற்சாலை ஏற்படுத்தினால்தான் கருப்புக் கல்லை வெட்டியெடுக்கலாம் என்று ஒரு நிபந்தனையை, அதுவும் தன்னுடைய சொந்த குடும்பத்திற்காக, தனது உற்றார் உறவினருக்காக, அந்த சூதுமதியோடு ஒரு ஜி. ஓ.-வை ஜி. ஓ. எண். 608, நாள்: 2-9-1989 என்ற ஆணையைப் பிறப்பித்து, இந்தத் தமிழகத்தில் சிறந்து சிறப்பாக செய்யப்பட்ட அந்தத் தொழிலை—நம்முடைய புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் அந்தத் தொழிலால் தமிழகத்திற்கு மிகப் பெரிய வருமானம் வந்தது. இந்தத் தொழிலை மீண்டும் சிறப்பாகச் செய்ய அந்த ஆணையை ரத்து செய்து பட்டா நிலத்தில் கருப்புக் கல்லை வெட்டியெடுத்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் உரிமத்தை வழங்கவேண்டும்.

முற்பகல் 10-45

அதுமட்டுமல்ல, இந்தச் சிறிய சிறிய பட்டா நிலத்துக்காரர்கள் இந்த பாலிஷ் பேக்டரியை போட்டால்தான் அந்த உரிமத்தை வழங்க வேண்டும் என்ற அந்த ஆணையை ரத்து செய்துவிட்டு, எப்போதும் போல அந்தக் கருப்புக் கல்லை வெட்டி எடுத்து, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்தால், அதன் மூலம் ஃபாரின் எக்சேஞ்ச், அதாவது வருமானம் நம்முடைய தமிழகத்திற்கு மீண்டும் அதிகமாகக் கிடைக்கும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன் (மணியடிக்கப் பெற்றது). இந்தத் தொழில்



1991 செப்டம்பர் 19] [திரு. ஆர். பி. பரமசிவம்]

வளர்ச்சி அடைவதற்கு நம்முடைய இதய தெய்வம் மறு பரிசீலனை செய்து, நம்முடைய வருமானத்தைப் பெருக்கி, இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள பற்றாக்குறையை சரிசெய்வார்கள் என்று நம்புகிறேன்.

இந்த நேரத்தில் என்னுடைய தொகுதியைப் பற்றி ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் தற்போது ஒரு சர்க்கரை ஆலையை அமைப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த சர்க்கரை ஆலைக்கு இப்போது நிலம் ஆர்ஜிதம் செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்த சர்க்கரை ஆலைக்கு நம்முடைய இதய தெய்வம் அவர்கள் வருகை தந்து, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சர்க்கரை ஆலை என்ற பெயரை வைத்து, அடிக்கல்லை நாட்டிவிட்டு வரவேண்டும் என்று இந்த மாமன்றத்தில், இந்த நேரத்தில் என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

அதே நேரத்தில், குடிநீர்ப் பிரச்சினை என்பது சின்ன சேலத்தில் எப்போதும் இருக்கின்ற பிரச்சினை. அதற்காக 6.43 கோடி அளவில் திட்டம் தயாரிக்கப்பட்டு, அரசு அனுமதிக்காக வந்திருக்கிறது. அந்தத் திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள், இந்த ஆண்டே எடுத்துக் கொண்டு, எங்களுடைய சின்ன சேலம் பகுதிக்கு, தண்ணீர் கிடைக்கவேண்டிய வழிவகையைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், என்னுடைய பகுதியில் குச்சிவள்ளிக் கிழங்கு, அதாவது மரவள்ளிக்கிழங்கு அதிகமாக பயிரிடக்கூடிய பகுதியாகும். எனவே, என்னுடைய தொகுதியில் குளுகோஸ் பேக்டரி ஒன்றை அரசு மூலமாக ஏற்படுத்தினால், அந்தத் தொழிலுக்கு நல்ல வரவேற்பு ஏற்படுவதோடு, பொதுமக்களுக்கும், வேலைவாய்ப்பும் கிடைக்கக்கூடிய நிலை ஏற்படும்.

கள்ளக்குறிச்சி பெரு நகரத்தில், போக்குவரத்து அதிகமாக இருப்பதால், அங்கே ஒரு பை-பாஸ் ரோடு அமைக்கப்பட வேண்டும். இதை என்னுடைய தேர்தல் கால வாக்குறுதியாகக் கொடுத்திருக்கிறேன். எனவே, தயவு செய்து இதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அண்ணாமலை நகரில் இருக்கிற பல்கலைக் கழகத்தின் கீழ் வருகிற அரசுக் கலைக் கல்லூரி எங்கள் பகுதியிலே இல்லாமல் இருக்கிறது. அதனால் நம்முடைய மாணவர்களும், பொது மக்களும் கஷ்டப்படுகிறார்கள். என்னுடைய தொகுதியைப் [illegible] 80 கிலோ மீட்டர் [illegible]

[திரு. ஆர். பி. பரமசிவம்] [1991 செப்டம்பர் 19

குறையைப் போக்க, கலைக் கல்லூரி ஒன்றை அமைப்பதற்கு நம்முடைய இதய தெய்வம் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப் பெற்றது).

என்னுடைய தொகுதியிலே, அரசினுடைய ஆட்டுப் பண்ணை ஒன்று இருக்கிறது கிட்டத்தட்ட 2 ஆயிரம் ஏக்கரில் உள்ள அந்த ஆட்டுப் பண்ணையில் சரிவர நிர்வாகம் இல்லாமல், அங்கே ஆடுகள் வளர்ப்பது என்பது பாதிக்கப்படுகிறது எனவே, அரசு இதிலே கவனம் செலுத்தவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப் பெற்றது)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. மு. நடேசன்.

<u>திரு. மு. நடேசன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்த மாமன்றத்தில் உறுப்பினராக்கிய 5½ கோடி தமிழ் மக்களின் உள்ளத்திலே குடிகொண்டிருக்கின்ற மாண்புமிகு காவல் தெய்வம், தமிழக முதல்வர், புரட்சித் தலைவி, அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன். என்னைத் தேர்ந் தெடுத்த சேலம் இரண்டாவது தொகுதி வாக்காளர்களுக்கும், எங்களை வாழ வைத்துக் கொண்டு இருக்கிற குடும்ப தெய்வம், புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன.

நம்முடைய தானைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் இந்த வருடம் ஜூலை மாதம் 6-ஆம் தேதி, தொழில் அதிபர் களோடு நடத்திய பேச்சுவார்த்தை என்பது, தொழில் துறையை முன்னேற்றுவதற்கான ஒரு மங்கலகரமான நாள் என்று அறிவிக் கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன.

சேலம் இரும்பாலை உருக்காலையாக இல்லாமல், வெறும் உருட்டாலையாகத்தான் உள்ளது. சேலத்தில் இருக்கின்ற அந்த இரும்புத் தாது, மிக உயர்தரமானதாக இருக்கிறது என்ற அறிக் கையினை ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அளித் துச் சென்று இருக்கின்றார்கள். அதேபோல், நம்முடைய நிற நிலை அறிக்கையிலே தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு செய்ய வேண்டிய தொழில் திட்டங்கள் நிறைய உள்ளது. உதாரணத் திற்கு நெப்கோ திட்டம், 1,433 கோடி ரூபாய். பாம்பே ஹை எரி வாயுத் திட்டம். இந்துஸ்தான் போட்டோ தொழிற் சாலைக்கு 250 கோடி, மணலி உரத் தொழிற்சாலைக்கு 317 கோடி. இவை அனைத்தையும் மத்திய அரசு செய்யும் என எதிர்பார்க்கிறோம்.

மத்திய அரசு முதலீடு இங்கே 8 சதவிதத்திலிருந்து 5 சதவித மாக குறைந்திருக்கின்ற சூழ்நிலையை நாம் பார்த்துக் கொண் டிருக்கிறோம். அயல்நாட்டு முதலீட்டை ஊக்குவிப்பதினால



1991 செப்டம்பர் 19] [திரு. மு. நடேசன்]

நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் வெளி நாட்டுக்குப் பயணம் செய்து, தொழில் அதிபர்களைச் சந்தித்து, தொழில் தொடங்க ஆவன செய்ய இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

50 கோடியிலிருந்து 100 கோடி வரை முதலீடு செய்து தொழில் தொடங்குபவர்களுக்கு மூலதன உதவித் தொகையாக 25 இலட்சம் வழங்குவதை நான் வரவேற்கிறேன். 5 ஆண்டு களுக்கு விற்பனை வரித் தள்ளுபடி செய்வதையும் வரவேற்கிறேன்.

அதேபோல் இதில், சிறுசிறு முதலீட்டைச் செய்து தொழில் தொடங்குபவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏற்றுமதி வாய்ப்பு மிக்க தொழில்களுக்கு முன்னுரிமை வழங்குவதோடு, பல சலுகைகளையும் அளித்தால், பல தொழில்கள் நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே வளரும்.

நலிந்த சிறுதொழில்களை இனம் கண்டு, குறைகளைப் போக்கிட, புரட்சித் தலைவி ஆட்சி செயல்படும் என்பதில் யாருக்கும் எந்தவிதமான சந்தேகமும் இருக்க முடியாது. சேலம் மாவட்டத்திலே நூற்றுக்கணக்கான ஜவ்வரிசி ஆலைகள் உள்ளன. அதனுடைய 90 சதவித வியாபாரம் வட நாட்டில்தான் நடந்து கொண்டு இருக்கிறது. இங்கே உற்பத்தி செய்கின்ற மில் அதிபர் களோ, தொழிலதிபர்களோ, தொழிலாளர்களோ அதனுடைய முழுப்பயனையும் பெற முடியாமல், வட நாட்டினர் ஆதிக்கப் செலுத்துகின்றனர். இதனை முதல்வர் அவர்கள் கருத்தில் கொண்டு, உற்பத்தி செய்பவர்களே பயனை அடையுமாறு செய்ய வேண்டுகிறேன்.

முற்பகல் 10-50

சேலம் மாவட்டத்தில் லாரி பாடி கட்டுகின்ற பட்டறைகள் நிறைய உள்ளன. ஓசூர், சென்னை போன்ற இடங்களி லிருந்துதான் சேசிஸ் பெற வேண்டிய நிலை உள்ளது. சேலமே 4, 5 மாவட்டங்களுக்கு மையமாக இருப்பதால் அங்கே சேசிஸ் தயாரிக்கின்ற தொழிற்சாலையை நிறுவச் செய்ய வேண்டுகிறேன்.

சேலத்தில் மாம்பழ ஜூஸ் தயாரிக்கின்ற ஆலையும், மல்லிகை பூ, ரோஜா மலர்கள் நிறைய பயிரிடுவதால் சென்ட் தயாரிக்கிற ஆலையும் நிறுவ வேண்டுகிறேன்.

ஏற்காடு, கொல்லிமலை போன்ற குளுகுளு இடங்கள் இருப்ப தால், சுற்றுலாத் துறையை வளப்படுத்தி, மேம்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில், இரண்டு தாலுக்காக்கள் சங்ககிரி,
திருச்செங்கோடு இருக்கின்றன. அங்கே வாழும் மக்கள் பெரும்
பாலும் சுண்ணாம்புக்கல் வெட்டி எடுக்கும் தொழிலை நம்பியுள்
ளனர். புரட்சித் தலைவர் காலத்தில் பெரிதும் ஊக்குவிக்கப்பட்ட
இத்தொழிலை முந்தைய தி. மு. க. அரசு நசுக்க நடவடிக்கை
களை மேற்கொண்டது. புரட்சித் தலைவரால் ஊக்குவிக்கப்பட்ட
இச்சிறு தொழில்களைத் தொடங்கிய பல பல்வரைசிங் யூனிட்டு
கள் தற்பொழுது மூலப்பொருளான சுண்ணாம்புக் கல் கிடைக்கா
மல் தத்தளித்துக் கொண்டுள்ளது. இந்த அவலநிலைக்குக்
காரணம், முந்தைய தி. மு. க. அரசின் பெரும் முதலாளிகளுக்கு
வால் பிடித்த கொள்கையே காரணம். உதாரணத்திற்கு ஒன்று—
சங்ககிரி மற்றும் திருச்செங்கோடு தாலுக்காக்களில் உள்ள
சுண்ணாம்புக் கற்களை பெரும் முதலாளிகளின் சிமெண்ட் ஆலை
களுக்கே என்று முந்தைய அரசு அறிவித்தது ஒன்று.

இன்னொன்று, ஏற்கெனவே புரட்சித் தலைவர் காலத்தில்
வழங்கப்பட்ட சுண்ணாம்புக்கல் வெட்டி எடுக்கும் உரிமை பெற்ற
வர்களையும், பெரும் முதலாளிகளின் சிமெண்ட் ஆலைக்கே
சப்ளை செய்யவேண்டுமென நிர்ப்பந்தித்தது. பெரும் முதலாளி
களின் சிமெண்ட் ஆலைகள் தாங்கள் பெற்ற ஆயிரக்கணக்கான
ஏக்கர்களின் உரிமங்களை முழுவதும் உபயோகப்படுத்த முடியா
மல், சரண்டர் செய்து கொண்டிருக்கின்ற நிலைமையை நாம்
பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்நிலையில் மேலும் நமது
புரட்சித் தலைவர் காலத்தில் பெற்ற உரிமதாரர்களை, சுண்
ணாம்புக் கற்களை சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கே சப்ளை
செய்ய வேண்டுமென்று கட்டாயத்தினாற் பல்வரைசிங் தொழிலே
நசுங்கிவிடுகின்ற சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதனால்
இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படக் கூடிய சூழ்
நிலை சேலம் மாவட்டத்தில் இன்றைக்கு இருக்கிறது. முந்தைய
அரசின் தவறான தொழில் கொள்கையால் அதாவது பெரும்
முதலாளிகளின் சிமெண்ட் ஆலைகள் நிறுவப்பட்டிருக்கும் இடத்தி
லிருந்து நாற்புறமும் 20 கிலோ மீட்டர் தொலைவிற்கு எவருக்கும்
உரிமம் வழங்கக்கூடாது என்ற கொள்கையால் பல்வரைசிங்
யூனிட்ஸ் அனைத்தும் மூடக்கூடிய தருவாயில் சேலம் மாவட்டம்
இருந்து கொண்டிருக்கிறது.

முந்தைய தி.மு.க. அரசின் தவறான மேற்கூறிய தொழிற்
கொள்கையின் காரணமாக நமது தமிழக அரசு, எந்த ஒரு
சுரங்க குத்தகை விண்ணப்பத்தின் மீதும் எந்த உத்தரவும் குறிப்
பிட்ட காலத்திற்குள் போடுவதில்லை. அதனால் ஒவ்வொரு
விண்ணப்பதாரரும் ரிவிஷனுக்காக டெல்லிக்கு காவடி [illegible]க்க
வேண்டிய ஒரு சூழ்நிலை இன்று இருந்து கொண்டிருக்கி[illegible]

[illegible]

முந்தைய தி.மு.க. அரசின் தவறான தொழிற் கொள்கை
ஏகபோக கிரனைட் முதலாளிகளை ஊக்குவிப்பதாகவும், ஏழை
பட்டாதார்களை நசுக்குவதாகவும் உள்ளது. இதனால் இலட்





சக்கணக்கான மக்கள் வேலை வாய்ப்பினையும், பல கோடி
அன்னியச் செலாவணி வருமானத்தையும் இழக்கக் கூடிய
சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது.

இவ்வாண்டில் சிவகெங்கையில் ரூ. 15 கோடி செலவில்
டாமின் கிரானைட் பெனிபிசியேஷன் தொழிற்சாலை துவக்கு
வதை குறித்து மாண்புமிகு குடும்ப தெய்வம் புரட்சித் தலைவர்
அவர்களைப் பாராட்டுகிறேன்.

இங்கே என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில்
நடந்திருக்கிற இரண்டு தவறுகளை நான் சுட்டிக்காட்ட ஆசைப்
படுகிறேன். சேலம் இரண்டாவது தொகுதியில் முந்தைய தி.மு.க.
ஆட்சிக் காலத்தில் சேலம் அரசு மருத்துவமனையில் பணிபுரிந்த
நர்ஸ் கற்பழித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அது
அந்தக் காலத்திலே அங்கே தி.மு.க.-விலே அமைச்சராக இருந்த
அவர், அவருடைய முக்கிய பிரமுகர்கள், அவருடைய முக்கிய
உறவினர்கள் அதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால்
அந்த நேரத்திலே ஒன்றுமறியாத அப்பாவிக்குப் பணத்தைக்
கொடுத்து, அந்தக் கொலை மறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே,
அதற்கு ஒரு தனியான நீதிபதி அமைத்து விசாரணை செய்ய
வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மாண்புமிகு இதய
தெய்வம் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்னொன்றையும் சுட்டிக்காட்ட ஆசைப்படு
கிறேன். சேலம் மத்திய கூட்டுறவு வங்கியிலே அன்றையதினம்
அமைச்சராக இருந்த அவர், அவருடைய நெருங்கிய உறவினர்
என்பதற்காக, 13 ஆண்டுக்காலம் வேலையை விட்டு நீக்கிய
ஒருவருக்கு ஏறக்குறைய ரூ. 4.80 இலட்சத்தை அவருக்குக்
கொடுத்து, அங்கே வேலையிலே பதவி உயர்வு செய்து கொடுத்
திருக்கின்றார்கள். பதவி உயர்வு செய்து கொடுக்கின்ற அந்த
நேரத்திலே மேலும் பாங்கின் சட்டத்தில் இல்லாத ஒரு பதவியை
உருவாக்கி வங்கிக்கு நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். ஆகவே
புரட்சித் தலைவி அவர்கள் அதன் மீதும் ஒரு நீதி விசாரணை
நடத்த வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்
கொள்கிறேன்.

மேலும் நம்முடைய மாண்புமிகு தானைத் தலைவி, புரட்சித்
தலைவி அவர்கள் ஆட்சிக்கு வருகின்ற நேரத்திலே 16—6-1991-லே
சூரமங்கலம் காவல் நிலையத்தைச் சேர்ந்த துணை ஆய்வாளர்
ஒருவர் நம்முடைய அருமைச் சகோதரர் அண்ணா தி.மு.க.-
வினுடைய இளைஞனான 21 வயதுடைய வெங்கடேஷ் என்ற
அவன் அண்ணா தி.மு.க. வெற்றி பெற்று, வீடிங்கில் வருகின்ற
நேரத்திலே அந்தக் காவல் நிலைய துணை ஆய்வாளர் அன்றைய
தினம் அவனை அடித்துக் கொன்றிருக்கிறார்கள். அதற்குப்
பின்னாலே அவர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள். ஒரு மாதம்
கழித்து அவரை மீண்டும் வேலையிலே அமர்த்தப்படுகின்ற ஒரு

பட்டிருந்த பல்வேறு தொழிற்சாலைகள் இன்றையதினம் மூடப்பட்டிருக்கிறதே அந்த தொழிற்சாலைகளையும் திறப்பதற்கு அரசு தொடர்ந்து முயற்சி எடுக்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள் அந்த தொழிற்சாலைகளை திறப்பதன் மூலமாக இன்றைக்கு பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகளுக்கு ஒரு உத்திரவாதமாக அது அமையும். ஆகவே புதிய தொழிற்சாலைகளை திறப்பதோடு மூடிக்கிடக்கின்ற பழைய தொழிற்சாலைகளையும் திறப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தத் தொழிற்துறையின் குறிப்பிலே கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்டாண்டர்ட் மோட்டார்—பல ஆண்டு காலமாக மூடிக் கிடக்கின்ற அந்த ஆலையை இன்று திறப்பதற்கான முயற்சிகளில் அரசு மேற்கொண்டிருக்கிறது. அதேபோல பின்னி கம்பெனி. அதிலே வேலை பார்த்திருந்த தொழிலாளர்கள் எல்லாம் இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய தொழில்துறை அமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அந்த பின்னி கம்பெனியை திறப்பதற்கு பேச்சுவார்த்தை மூலமாகவோ அல்லது அரசின் மூலமாகவோ நடவடிக்கை எடுத்து அது திறக்கப்பட்டாக வேண்டும். பல்வேறு சிறு தொழில்களும் பெரும் தொழில்களும் இன்று மூடிக் கிடக்கின்றன. அந்தத் தொழிற்சாலைகளுக்கு டிட்கோ மூலமாக சிட்கோ மூலமாக நிதிநிலையை உருவாக்கித் தந்து அவைகளை திரும்பவும் துவங்குவதற்கு அரசு ஆணை செய்ய வேண்டும். ஏனென்று சொன்னால் அவர்கள் சிறிய நஷ்டத்திலே இருக்கிறார்கள். ஆனால் சிப்காட் மூலம் இன்றைய தினம் பணம் வாங்கியிருக்கும் பெரிய முதலாளிகள் அந்தப் பணத்தைக் கட்டாமல் ஆலையை மூடி வைத்துக் கொண்டு, தங்களிடம் பணத்தை வசூல் பண்ண மாட்டார்கள் என்ற நினைவோடு இருக்கிறார்கள். அவர்கள் மீது நீங்கள் கட்டாயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல சிப்காட் நிறுவனத்தைப் பொறுத்த வரையில் நிதி வழங்கக் கூடிய அந்த நிறுவனம் தற்போது பொறுப்பற்ற தன்மையிலேதான் இன்றைய தினம் இருக்கிறது. கிராமப் புறங்களிலே ஒரு பழமொழி சொல்லுவார்கள். மாடு போனதையும் தேட மாட்டார்கள். வந்த மாட்டையும் கட்ட மாட்டார்கள் என்று சொல்வார்கள். அதே போலத்தான் சிப்காட்டிலே நிலைமை இருக்கிறது. அந்நிறுவனத்தின் மூலமாக கொடுத்திருக்கக்கூடிய பல கோடிக் கணக்கான ரூபாய்களை வசூலிப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. நான் உங்களை தயவுகூர்ந்து கேட்டுக்கொள்வதெல்லாம் இதுபோன்று சிப்காட்டிலிருந்து பெற்ற பணத்திற்கு அந்த தொழில் நடத்தக் கூடியவர்களிடமிருந்து வட்டியையாவது வசூல் செய்யுங்கள். அந்த வட்டி மூலமாக பலர் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வட்டியை வசூலிப்பதில் அந்த நிதி நிர்வாகம் இன்றைக்கு முயற்சிகளை மேற்கொள்வதில்லை அவர்

சூழ்நிலை அன்றையதினம் ஏற்பட்டிருந்தது. ஆகவே நம்முடைய தானைத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் அதற்கு ஒரு தனி நீதிபதியை அமைத்து, விசாரணை வைத்து, மீண்டும் அவரை பதவி நீக்கம் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

அதேபோல சேலம் கண்ணாடி தொழிற்சாலை என்ற ஒரு நிறுவனம் 500 தொழிலாளர்களுடன் பல வருடங்களாக லாபத்திலே இயங்கி வந்தது. திடீர் என்று அந்த தொழிற்சாலை மூடப்பட்டதால், அந்த தொழிலாளர்களின் நிலை பரிதாபகரமாக இருக்கிறது. ஆகவே இதற்கும் நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். இதுகாறும் இந்த அவையிலே தொழில் மானியத்திலே பேச வாய்ப்பு அளித்தமைக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு காவல் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றையதினம் 2-45 வரையிலும் அவையை நடத்த வேண்டியிருந்தது. ஆகவே அதைக் கருத்திலே கொண்டு ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும், 7, 7 நிமிடங்கள் தான் இன்றைக்கு என்னால் ஒதுக்க முடிகிறது. முன் வரிசையிலே இருக்கிற தலைவர்களுக்கும் இது பொருந்தும். அதைக் கருத்திலே கொண்டு ஒவ்வொருவரும் பேசி முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை சொல்ல முன்வருகிறேன். தமிழகத்தில் தொழில் துறையை வளர்க்க வேண்டும் என்பதற்காக தனியார்கள் தொழில் துறையில் புதியதாக தொழில் துவங்க இன்றைக்கு தமிழக அரசு—முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற நல்ல முயற்சிகளை நான் வரவேற்கிறேன். பொதுவாக நூறு கோடி ரூபாய்கள் முதலீடு போட்டால் 50 லட்சம் ரூபாய் அவர்களுக்குச் சிறப்பு நிதியாக வழங்கப்படுவதாக கூறியிருப்பது தொழில் துவங்குபவர்களுக்கு ஊக்கப்படுத்துகின்ற வகையில் அமைந்திருக்கிறது. அதுபோலத்தான் 100 கோடி ரூபாய்க்கு மேலாக முதலீடு போட்டு தொழில் துவங்குபவர்களுக்கு 10 ஆண்டுக் காலத்திற்கு வரியே வசூலிப்பது இல்லை என்கிற ஒரு ஊக்கம் அளிக்கிற நல்ல திட்டங்கள் தமிழகத்திலே துவங்கப்பட்டுள்ளன. தமிழகத்திலே தொழில்கள் துவங்கப்பட வேண்டும் என்பதிலே யாருக்கும் மறுப்பு இல்லை. ஆனால் தமிழகத்திலே ஏற்கெனவே துவங்கப்

களிடத்திலே நாங்கள் எல்லாம் கேட்கின்றபோது கூட அவர்கள் பொறுப்பாகச் சொல்லவில்லை, பல்வேறு காரணங்களைச் சொல்கிறார்கள் என்று எங்களிடத்திலே சொல்கிறார்கள். ஆக அந்த நிதி நிறுவனங்களை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று உப்பு ரசாயன தொழிற்சாலை ஏற்கனவே இருந்த அரசு மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்று கோடியக்கரையிலே உப்பு ரசாயனத் தொழிற்சாலையைத் துவங்குவதாக சென்ற 1991-ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்திலே அறிவித்தது. இன்றைக்கு தமிழகத்தை எடுத்துக்கொண்டால், தமிழ்நாடு நீண்ட கடற்கரை ஓரமாக இருக்கின்ற காரணத்தினால் உப்பு அதிகமாக கிடைக்கின்றது அந்த உப்பைக் கொண்டு மலான் காம்ப்ளெக்ஸ் தொழிற்சாலைகளைத் துவங்குவதற்கு தமிழகத்திலே முயற்சி எடுக்க வேண்டும். இதற்கு கோடியக்கரையிலே இடங்கள் சர்வே செய்யப்பட்டது பார்க்கப்பட்டது. அது என்ன ஆயிற்று என்று இதுவரையிலும் தெரியவில்லை. ஆகையால் அந்தக் கோடியக்கரையிலே உப்பு ரசாயனத் தொழிற்சாலையை நீங்கள் துவங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

அதேபோன்று சர்க்கரைத் தொழில். இன்றைக்கு சர்க்கரைத் தொழிற்சாலைகள் லாபமாக நடக்கிறது. நஷ்டம் அடையாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு கரும்பிலே நஷ்டம் வருகிறது. விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கவில்லை. அரசாங்கம் சர்க்கரையை அந்த ஆலைகளிலிருந்து கொள்முதல் செய்து, சர்க்கரை விலையை கொஞ்சம் கூட்டி கொடுப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். மீண்டும் கரும்பு உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகை என்ற அடிப்படையில் நீங்கள் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மின்சாரத் துறையை தனியார் துறையிலே கொடுப்பதற்காக அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே கிடைக்கக் கூடிய வெப்ப நிலையைக் கொண்டு மின் உற்பத்தி செய்வதற்கு தமிழகத்தில் வாய்ப்பு இருப்பதால் அதற்கும் முதலமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டும். மின் உற்பத்தியாக இருந்தாலும், தொழிற்சாலையாக இருந்தாலும் தனியாருக்கு அனுமதி கொடுப்பதன் மூலமாக அவர்களுக்கு அது ஒரு லாபத் தொழிலாக ஆகாமல், அரசுக்கு நன்மை, மக்களுக்கு நன்மை அளிக்கக்கூடிய திட்டமாக அந்தத் திட்டங்கள் அமைய வேண்டும் அது ஒரு லாபகரமான திட்டமாக பெரு முதலாளிகளுக்கு அமைந்துவிடாமல் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று எங்களுடைய தஞ்சை மாவட்டத்திலே குறிப்பாக நரிமணத்திலே இருக்கக்கூடிய பெட்ரோலைக் கொண்டு அங்கு தொழிற்சாலைகளைத் துவங்க வேண்டும். களப்பாலலே யும் கிடைக்கக்கூடிய எரிவாயுவைக் கொண்டு அங்கு மின்சார



உற்பத்தியை மேற்கொள்வதற்கு ஏற்கனவே அரசு திட்டமிட்டு அவையிலே அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தத் திட்டம் எப்படிப் பட்ட திட்டம், இன்றையதினம் நடைமுறையில் இருக்கின்றதா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. ஆக நரிமணத்திலேயும், கோயில்களப்பாலேயும் கிடைக்கக்கூடிய அந்த ஆயிலைக் கொண்டு அங்கே நீங்கள் எண்ணை சுத்திகரிப்பு ஆலையைத் துவங்குவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக எங்கள் தஞ்சை மாவட்டம் விவசாயத்தை நம்பியிருக்கின்ற மாவட்டமாக இருப்பதால் அங்கே கிடைக்கக்கூடிய நல்ல மணல் மூலமாக கண்ணாடி தொழிற்சாலைகளை அமைக்கலாம் என்று ஏற்கனவே ஒரு திறனாய்வு செய்யப்பட்டு இருக்கிறது. ஆக நல்ல மணல் கிடைக்கின்றது தஞ்சை மாவட்டத்தில் விவசாயத்தை நம்பியிருப்பதால் அங்கே கண்ணாடித் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு, சிறிய தொழில்களைத் துவங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாறு கேட்டுக்கொண்டு நன்றி கூறி அமர்கின்றேன்.

முற்பகல் 11.05

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்

<u>டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஒளி விளக்காகவும், ஏழை எளிய மக்களுக்கு விடி வெள்ளியாகவும் விளங்குகின்ற எங்களின் இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களே, இவர் ஏவலர், இவர் காவலர், இவர் வேண்டியவர், இவர் வேண்டாதவர் என்ற பாகுபாடின்றி அவர் அவர் தம் குற்றங்குறைகளை, அன்போடு அனுதாபத்தோடு, கேட்டு, பகுத்தறிவு கொண்டு சிந்தித்து, இருக்கும் நிதியைக் கொண்டு இன்முகத்தோடு, இனிதாகப் பேசி இயன்றதை, இதோ, இப்பொழுதே ஏற்றுக் கொள்ளுங்கள் என்று ஈந்து ஏற்றவரை மகிழ்விக்கும் கருணைக் கடலே, தமிழர் போற்றும் நற்றமிழ் தாயே, தமிழ்த்தாய் ஈன்றெடுத்த தவமணியே, தாய்மைக் குலம் தழைத்தோங்கவும், தமிழ்நாடு புகழோங்கவும், வாராது வந்த மாமணியாய் வந்துதித்த அம்மையே புரட்சித் தலைவி அவர்களே, தாங்களன்றோ தமிழர் நலம் காக்க உயிர் வாழும் நல்லார் நாடாளும் வல்லார், இல்லார், உள்ளார், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடு நீக்கி சமதர்ம சமுதாயப் பூக்கள் மலர புரட்சித் தலைவி அவர்களின் அரசு எடுக்கும் ஒவ்வொரு திட்டமும் போற்றுதற்கு உரியதாக இருக்கின்றது. அந்த அடிப்படையிலே தொழில் துறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கதாக உள்ளன.

நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் [illegible]-7-1991 ஆம் தேதி அன்று நடத்திய தொழிலதிபர்கள் கூட்டத்தில் [illegible] பெருமுச்சு எழுந்தது. அக்கூட்டத்தின்

போது நமது மாண்புமிகு முதலமைச்சரின் பேச்சும் அவரது கலந்துரையாடலும் தொழில் நுட்ப முறையில் அணுகுமுறையும் கலந்து கொண்ட தொழிலதிபர்கள் மட்டுமின்றி, சிறந்த பத்திரிகையுமான 'எக்கனாமிக்ஸ் டைம்ஸ்' போன்ற பல பத்திரிகைகளும் பாராட்டின.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு தொழிற்சாலைகளின் கஷ்ட நஷ்டங்களைத் தொழில் வளமையை, தொழில் நுட்பத்தைப் பற்றி இவ்வளவு நுணுக்கமாக தெரிந்து வைத்துள்ள ஒரு முதல்வரை இது வரை தமிழகம் கண்டதில்லை என்பதனை காலம் உணர்த்தி இருக்கிறது. இதன்படி பார்த்தால் தமிழகத்தின் தொழில் வளம் ஒரு தலை சிறந்த தலைவியின் கீழ் பீடு நடை போடும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. தொழில் துறையும் விவசாயமும் நம் சமூகத்தின் முக்கியமான இரு தூண்கள். விவசாயம் ஒரு மனிதனுக்கு அவசியமான உணவுத் தேவைகளை நிறைவு செய்கிறது. ஆனால் தொழில் துறையோ ஒரு ரூபாய் மூலப் பொருட்களை பத்து ரூபாய் மதிப்புள்ள ஒரு தேவையான பொருளாக மாற்ற உதவுகிறது. இது நம் சமூகத்திற்கு ஒரு தேவையான பொருளாகவும் இதை விற்றால் நம் அண்டை மாநிலங்களில் இருந்து வருவாயும் ஏற்றுமதி செய்தால் அந்நியச் செலாவணி ஈட்டுவதற்கும் வகை செய்யும். இதன் மூலம் வரும் வருமானத்தை நம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் துவங்க இருக்கும் பல அற்புதமான திட்டங்களுக்குச் செலவிடலாம். ஒரு தொழிலை தொடங்குவதின் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பளிக்க உதவி செய்வதுடன், வருவாய்க்கும் வழி செய்கிறோம்.

இந்திய நாடு சுதந்திரம் அடைந்த நாள் முதல் இன்று வரை தமிழ்நாடு மத்திய அரசால் ஒரு மாற்றாந்தாய் பிள்ளையாகவே நடத்தப்படுகிறது. தொழில் துறை முதலீட்டில், பொதுத் துறையில் மத்திய அரசு தமிழகத்திற்கு மொத்தம் 8 சதவிகிதமே ஒதுக்கி இருக்கிறது. இதனால் தமிழகம் தொழில் துறையில் மிகவும் நலிவடைந்திருக்கிறது.

மணலியில் உள்ள சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை பழமையான தொழில்நுட்பத்தின் காரணமாக போதிய அளவு உற்பத்தித் திறனை அளிக்க ஏதுவாக இல்லை. ஆகவே, இதனை சீரமைப்பதற்கும் மத்திய அரசு முன்வர வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் துறை முன்னேற்றம் என்பது மேலும் மேலும் தொழிற்சாலைகளை உருவாக்குவது மட்டுமல்ல. நாம் உருவாக்கும் பொருட்கள் தேசிய அளவிலும், உலக அளவிலும் மற்ற பொருட்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தரமுள்ளவையாகவும், அவைகளுக்குப் போட்டியாகவும் இருக்க வேண்டும். நாம் அந்தத் தொழில் நுட்பத்தைப் பற்றி தெரிந்து கொண்டு



ஆராய்ச்சி செய்து கண்டு பிடிப்பதற்கு போதிய நேரம் இல்லாததால் நாம் நேரடியாக தொழில் நுட்பத்தை இறக்குமதி செய்வது நல்லது.

நாம் வெளிநாட்டு தொழில் நுட்ப உதவியுடன் பொருட்களை தயாரிக்கலாம். அதற்காக அவர்களது தொழில் நுட்ப மூலதனத்திற்காக அவர்களையும் ஒரு பங்குதாரராக இணைத்துக் கொள்ளலாம். தற்போது நம் மத்திய அரசு அறிவித்துள்ள வாணிகத்துறை கொள்கை இவற்றிற்கு சாதகமாக அமைந்துள்ளன. சிறு தொழில் நிறுவனங்களுக்கும் மத்திய அரசு அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கது.

தென் கொரியா தன் சொந்த நாட்டில் 'கலர் ட்ரான்ஸ்மிஷன்' துவங்குவதற்கு முன்பே 'கலர் டெலிவிஷன்' ஏற்றுமதியில் முழுமையாக இறங்கி அந்நிய செலாவணியை ஈட்டத் தொடங்கியது. சந்தையில் (மார்க்கெட்டில்) என்ன மாதிரி தேவையோ அதைத் தயாரிக்க வேண்டும். அதாவது 'டெக்னாலஜி டிமாண்டு' தேவை. அதை விடுத்து 'சையன்ஸ் புஷ்' என்று சொல்லக்கூடிய முறை. அதாவது அதைக் கண்டு பிடிக்க வேண்டும், இதைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று நேரத்தை விரயம் செய்யாமல் தேவையானதை உத்பத்தி செய்து பயன்படலாம் என தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநில அரசு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு, விற்பனை வரியிலிருந்து, விலக்கு அளித்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு தேவைப்படும் மூலப் பொருட்களுக்கும் (Raw materials) வரிவிலக்கு அளித்தால் நாம் மேலும் குறைந்த விலையில் நிறைய பொருட்களை ஏற்றுமதி செய்ய வழி வகுக்கும்.

ஜெர்மனியின் பட்டு உற்பத்தி மதிப்பு 1,000 கோடி ரூபாய். ஆனால் இந்தியாவில் மொத்தப் பட்டு உற்பத்தி மதிப்பு 60 கோடி ரூபாயாகும். எனவே, பெருமளவு பட்டு உற்பத்தி செய்ய நாம் வழி வகை செய்தாக வேண்டும்.

காஞ்சிபுரம், ஆரணி போன்ற நகரங்களிலே பட்டு நெசவுத் தொழிலாளர்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். அம்மாதிரியான நகரங்களில் பெரிய அளவில் பட்டு நெய்யும் தொழிற்சாலைகளை அரசு அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது வேலை வாய்ப்பற்ற நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பளித்திடவும், நெசவாளர்களின் துயர் துடைத்திடவும் உதவும். எனவே, ஆரணித் தொகுதியில் ஒரு பெரிய பட்டு நெய்யும் தொழிற்சாலையை பெரிய அளவில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்] [1991 செப்டம்பர் 19

தமிழ்நாடு அரசு துவக்கியுள்ள 'சிங்கிள் விண்டோ ஏஜென்சி' என்பது புதிதாக தொழில் துவங்கும் தொழிலதிபர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குகிறது. ஆனால் இது என்ன என்பது ஒரு சிலருக்கு மட்டுமே தெரியும். எனவே, இதை அனைவருக்கும் தெரியும்படியாக அரசு விளம்பரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உலகில் வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதியின் மொத்த வருமானம் பல கோடி டாலர்கள் ஆகும். உதாரணத்திற்கு 'பூக்களின் வியாபாரம்' உலக அரங்கில் மொத்தம் 30 கோடி டாலர்களாகும். இதில் இந்தியாவின் பங்கு 3 இலட்சம் டாலர்களே. இந்த முன்னேற்றத்திற்கு தடையாக உள்ள காரணங்கள். இது மாதிரியான விஷயங்கள் தெரியாதிருத்தல்; பணப் பற்றாக்குறை; தொழில் நுட்பப் பற்றாக்குறை ஆகியவை ஆகும்.

முற்பகல் 11-10

தமிழ் நாட்டில் அரசுக்கு என்று சொந்தமாக பல இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. அத்தகைய தரிசு நிலங்களில் ஏற்றுமதிக்கான வேளாண்மைப் பொருட்களை உற்பத்தி செய்து அதன் அடிப்படையில் வேளாண்மை தொழில் வளர்ச்சிகள் பெருக வழி வகை செய்யலாம். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் தொழில் துறை நடவடிக்கைகளால், புரட்சித் தலைவியின் அரசு "இந்தியாவின் ஜப்பான் தமிழ் நாடு" என்று பாராட்டுகின்ற அளவிற்கு பீடுநடை போடும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

என் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களே, எனது மாவட்டமான திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறது. இந்த மாவட்டத்தில் தொழிற்சாலைகளோ அல்லது தொழிற் பேட்டையோ எதுவும் இல்லை. குறிப்பாக எனது சட்டமன்ற தொகுதியில் ஒரு அரசுத் தொழிற்சாலையோ அல்லது தொழிற் பேட்டையோ அமைத்துத்தர என் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக் கொண்டு, வாய்ப்பினை நல்கிய சட்டமன்ற பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, இடம் சார்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு பி. வி. இராஜேந்திரன்.

*<u>திரு. பி. வி. இராஜேந்திரன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு தன்னுடைய தொழில் மானியக் கோரிக்கையை முன் வைத்து இருக்கின்றார்கள். முதலாவதாக



991 செப்டம்பர் 19] [திரு. பி. வி. இராஜேந்திரன்]

...நற்று அவர்கள் பெற்றுக் கொண்ட மானியத்திற்கும் அந்த
மானியத்தைப் பெறுவதற்கு முன்னால் அவர்கள் நடத்திக்
...ாட்டிய ஒரு நாடாளுமன்ற வழி முறைகளுக்கும், நெறி முறை
...களுக்கும் முதலிலே எதிர்க் கட்சியின் சார்பிலே என்னுடைய
...பாராட்டுக்களை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்க்
...கட்சியை மதிக்கின்ற ஒரு முதலமைச்சர் என்ற பெயரை அவர்
...நட்டி எடுத்துக் கொண்டு சென்று இருக்கிறார்கள் என்பதுதான்
...எங்களுடைய கணிப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை
...யோ வெட்டுத் தீர்மானங்கள் நாங்கள் கடந்த ஆண்டுகளில்,
எல்லாம் கொடுத்துப் பார்த்ததற்கு யாருமே பதில் தரவில்லை.
துறைத் தலைவர்களாவது எங்களுக்கு, எங்கள் வீடுகளுக்கு
அந்தத் தகவலை அனுப்பவாம். அதைக் கூட அனுப்புவது
இடையாது. அமைச்சர் பெருமகனார் அவர்கள் நேரம் கருதி
விட்டு விட்டால் கூட, நேற்று மாலை கூட எங்களுக்கு வெட்டுத்
தீர்மானங்களுக்கு பதில் கிடைக்கவில்லை. குறைந்தது
நாங்கள் 10 வெட்டுத் தீர்மானங்கள் தான் போடுகின்றோம்,
அந்த 10 வெட்டுத் தீர்மானங்களையும் சபையிலே சொல்ல
இல்லையென்றாலும் துறைத் தலைவர்களைப் பணித்தாவது
எங்களுக்கு அதற்குரிய பதில்களைத் தரலாம். ஒரு பட்ஜெட்
கூட்டத்திற்கு, ஒரு மானியத்திற்கு 10 வெட்டுத் தீர்மானங்கள்
...ான் நாங்கள் போட முடியும். ஆனால் நாங்கள் 5 தான்
...போடுகிறோம். அதற்கான பதிலையும் எங்களுக்கு மாண்புமிகு
முதல்வர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்
பத்தில் கேட்டுக் கொண்டு, 7 நிமிடத்திற்குள் என்னுடைய
பேச்சை முடிக்க வேண்டுமென்பதால், விஷயத்திற்கு வருகிறேன்.

இன்றைய, தமிழக அரசினுடைய தொழில் கொள்கையை
நான் முதலாவதாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.
பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களுடைய தொழிற் கொள்
கைகள் 1956 ஆம் ஆண்டு துவங்கி அவர்கள் மறைந்த பின்பு
அவர்களுடைய பேரன், தலைவர் ராஜீவ் காந்தி அவர்
களுடைய தொழிற் கொள்கைகள் இவற்றின் அடிப்படையில்
இன்றைய இந்திய அரசினுடைய தொழிற் கொள்கைகள் அமைந்
திருக்கின்றன. அவற்றைத் தழுவிய நிலையில் தமிழக அரசி
னுடைய இன்றைய தொழிற் கொள்கைகள் அமைந்திருக்கின்
றன. எனவே அதை நாங்கள் பாராட்டாமல் இருக்க முடியாது.
பலர் சொல்கிறார்கள், காங்கிரஸ் தன்னுடைய பொருளா
தாரக் கொள்கையிலிருந்து மாறி சென்று கொண்டிருக்கிறது
என்று. திடீரென்று ஒரேயடியாக, பிரைவேட்டைசேஷன்
பற்றி ஒரு கன்சர்வேடிவ் ஐடியாவைப் பற்றி பேச ஆரம்பித்து
இருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்கின்றார்கள்.
இன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் காங்கிரஸ்
...னுடைய பொருளாதாரக் கொள்கைகள் எல்லாம். It is a
synthesis between Mahatma Gandhiji and Satellite
...ன்று சொல்வோம். அந்த அளவிற்கு எப்படி இன்றைக்கு
திராவிடம், திராவிடர் கழகம், ஜஸ்டிஸ் பார்ட்டி, அதனுடைய

[திரு. பி. வி. இராஜேந்திரன்] [1991 செப்டம்பர் 19

கொள்கைகள், அதனுடைய பரிணாம வளர்ச்சியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மிளிர்க் கொண்டு இருக்கிறதோ அதைப்போல்தான் மகாத்மா காந்தி அவர்களுடைய கொள்கைகள்; ஜவஹர்லால் நேரு அவர்களுடைய பொருளாதாரக் கொள்கைகள்; இதிலே நாங்கள் அணுவளவும் பின்வாங்கிச் செல்லவில்லை. மிக்ஸட் எக்கனாமி என்கின்ற கொள்கையிலிருந்தோ, Socialistic pattern of society அதனை அமைப்பதற்கான பொருளாதாரக் கொள்கைகள், வழிமுறைகளிலிருந்தோ நாங்கள் பின்வாங்கிச் செல்லவில்லை என்பதை மிகத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள இந்த நேரத்திலே நான் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு, லைசென்ஸ், கண்ட்ரோல், கோட்டா, பர்மிட் இப்படி இருந்த ராஜ்ஜியம் தகர்ந்து இருக்கின்றது. மேலும் எங்களுடைய தொழிற் கொள்கைகள், இன்றைக்கு கம்யூனிஸ்ட் நண்பர்களெல்லாம்கூட பாராட்டுகிறார்கள். நண்பர் பழனிசாமி அவர்கள் தெம்பியவுடன் சொன்னார்கள். தனியார் துறையை ஊக்குவிக்கின்றீர்கள், பாராட்டுகிறேன் என்று. அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே பாராட்டி இருந்தால் எவ்வளவோ வளர்ந்து இருக்கும். அவர்கள் இன்றைக்கு, யூகோஸ்லேவியா, ருமேனியா, செக்கஸ்லோவேக்கியா, போலந்து, இறுதியாக சோவியத் யூனியன் எல்லாவற்றையும் பார்த்துவிட்டுத்தான், இன்றைக்கு மாஸ்கோவிலே மழை பெய்த பிறகு இங்கே மதராசிலே குடை பிடிக்கிறார்கள் என்றாலும் கூட, அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) புதிதாக நான் ஒன்றும் சொல்லவில்லை. பழைய கதையைத்தான் சொல்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது, இந்தியாவில் தொழிற் நிறுவனங்கள் மூலமாக இந்திய அரசு எப்படி வளர்ச்சியுடைய வளத்தில் இருக்கிறது என்பதைச் சொல்வதற்கு தொழில் சோவியத் நாடு, ஜப்பான், ஜெர்மனி என்று சொல்லிக் [illegible]கிறார்கள், இதைச் சொல்லியே, இந்திய கொண்டு 40 ஆண்டுக்காலமாக ஆட்சி நடத்திய காங்கிரஸ் நாட்டை தொழில் வளத்திலே இந்தியா என்ன முன்னேறியிருக்கிறது, தொழிலுக்கு அவர்கள் செய்த திட்டங்கள் என்ன என்று [illegible]; தமிழ்நாட்டு மக்களும், இந்திய மக்களும் [illegible] சொன்னால், கொள்கைகளைப் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக [illegible]களுடைய அநேகமாக, இங்கே செய்ய முடியாதவைகள் சோவியத் நாட்டிலே நடக்கிறது என்றெல்லாம் இன்றையதினம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் தனியார் துறையைச் சொல்லும்பொழுதுகூடச் சொன்னேன். அது ஒரு இலாப



1991 செப்டம்பர் 19] [திரு. ஜி. பழனிசாமி]

கரமாக மாறிவிடக் கூடாது, மக்களுடைய சேவைக்காகத் தனியார் தொழிற்சாலைகள் இருக்க வேண்டும் என்பதுதானே தவிர, ஒரு தனி நபருடைய இலாபகரமான தொழிற்சாலையாக இருக்கக்கூடாது என்பதைத்தான் நான் பேசும்பொழுது குறிப்பிட்டேன் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. பி. வி. இராஜேந்திரன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏதோ கம்யூனிசத்தை இடிப்பதாக நினைக்க வேண்டாம். Communism is a good idea என்று எல்லோருமே ஒத்துக் கொள்கிறோம். ஆனால், இது ஒரு அழகான கனவு என்பதையும் நாம் இந்த நேரத்திலே மறந்து விட முடியாது.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சோவியத் நாடு என்பதும், கம்யூனிசம் என்பதும் கனவு அல்ல. அந்தக் கனவு நனவாக இருக்கிறது இந்தியாவிலே என்பதனை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நெய்வேலியிலே இருக்கக்கூடிய நிலக்கரிச் சுரங்கம் என்பது அநேகமாக சோவியத் நாட்டினுடைய அனுமதியோடு வழங்கப்பட்டிருக்கிறது. சமீபத்திலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டிருக்கிற மாதிரி, கூடங்குளம்கூட சோவியத் நாட்டினாலேதான் இங்கே மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள். இன்றைய தினத்திலே, தஞ்சை மாவட்டத்திலே கிடைத்திருக்கக்கூடிய பெட்ரோல் — இன்றைக்குச் சோவியத் நாட்டின் மூலமாகத்தான் தமிழகத்தினுடைய தொழில் வளங்கள், கனி வளங்களைப் பெருக்குவதற்குச் சோவியத் நாட்டின் மூலமாகத்தான் இன்றைய தினம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. சோவியத் நாட்டிலே ஏதோ கம்யூனிஸ்ட் கட்சி மாறுகிறது, ஆட்சி குலைந்து போகிறது என்று சொன்னால், அநேகமாக இந்தியாவுக்கு மிகப்பெரிய ஆபத்து இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு முதலமைச்சர்.

<u>மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதம் எங்கோ திசை மாறிப் போய்க் கொண்டிருக்கிறது. இங்கே, கம்யூனிசக் கட்சியின் கொள்கை பற்றியோ அல்லது அகில இந்தியக் கட்சியான காங்கிரசின் அகில இந்தியத் தொழில் கொள்கை பற்றியோ விவாதம் நடைபெறவில்லை. இங்கே, தமிழக அரசின் தொழில் துறையின் மானியக் கோரிக்கையின்மீது

விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதைப்பற்றி மட்டும் கருத்து தெரிவித்தால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொருளாதாரக் கொள்கைகளை அடிப்படையாக வைத்துத்தான் இன்டஸ்ட்டிரியல் பாலிசியை உருவாக்குகிறோம். அதில் பொருளாதாரக் கொள்கை இல்லை என்று சொன்னால், மிக்ஸெட் எகனாமியா மார்க்கட் எகனாமியா என்பதைப் பற்றியெல்லாம் பேசியாக வேண்டுமென்ற காரணத்தால்தான் இதைச் சொன்னேன்.

இன்றைக்கு ரஷ்யாவிலே கம்யூனிஸ்ட் கட்சியை 'ban' செய்தே விட்டார்கள். It is totally banned.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் பி. வி. இராஜேந்திரன் அவர்கள் மீண்டும் விவாதத் திற்குச் செல்ல வேண்டாம். கோரிக்கையின் மீது பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி.வி.இராஜேந்திரன்: It is a synthesis between Mahatma Gandhi and Satellite என்று சொன்னேன். Congress and its economic policies are not dogma. They are developing Sciences. எது ஒன்றும் முன்னேறுகிற தத்துவமாக இருந்தால்தான் அது வளருமேயொழிய, ஏற்காத கொள்கைகளெல்லாம் அழிந்து போகும். அப்படி அழிந்து கொண்டிருக்கின்ற ஒரு கொள் கையைத்தான் இன்றைக்கு நீங்களாவது சற்றுக் காப்பாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

மேலும் இந்த நேரத்திலே மாநில அரசில், இன்றைக்கு நமது நிதியமைச்சரவர்கள் தொழில் துறை முன்னேற்றத்திற்குப் பல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார்கள். ஆனால், பணம் இல்லை என்கின்ற குறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். கன்சைன்மெண்ட் டாக்ஸ் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்த எதிர்க்கட்சி-சட்டமன்றக் காங்கிரஸ் கட்சி இதிலே வலுவாக ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. கன்சைன்மெண்ட் டாக்ஸ் விதிப்பதற்காக அதிகாரத்தை மைய அரசிடம் நீங்கள் கேளுங்கள். மாநில அரசினுடைய நலனில் அக்கறை கொண்ட நாம் அனைவரும் ஒரே குரலில் கன்சைன்மெண்ட் டாக்ஸ் விதிப்பதற்கான அதிகாரங்களைக் கேட்போம். ஏற்கனவே ஆல் பார்ட்டி மீட்டிங்—எல்லா மாநில முதலமைச்சர்களும் ஒத்துக் கொண்ட ஒன்று. காங்கிரஸ் முதலமைச்சர்களும் கேட்டிருக் கின்ற ஒன்று.





மேலும், பப்ளிக் செக்டார்-சென்ட்ரல் கவர்ன்மெண்டினு டைய பப்ளிக் செக்டாரெல்லாம் இன்றைக்குப் பணம் இல்லாத பொழுது மக்களிடமிருந்து வங்கியிடமிருந்தெல்லாம் நிதி திரட்ட முடிகிறது. நமது பப்ளிக் செக்டார்களுக்கு அந்த உரிமை இல்லை. அந்த உரிமைகளையும் கேட்கின்ற உங்க ளோடு அந்தக் குரலைத் தமிழக மக்களுக்காக இணைத்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு தமிழ்நாடு காங்கிரசுக்கு இருக் கிறது என்பதையும்— தமிழ்நாடு சட்டமன்றக் காங்கிரசுக்கு இருக் கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மேலும், ஒன்றிரண்டையும் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதையும் கேளுங்கள். நீங்கள் விட்டிருக் கின்ற ஒன்று. Additional Excise Duty on sugar and Tobacco ஏற்கனவே மாநிலங்களின் கையிலே இருந்தது எல்லாம் இன்றைக்கு மைய அரசினுடைய கைக்குப் போய் இருக்கிறது. மீண்டும் அதை விதிக்கின்ற உரிமைகளை— அந்த சேல்ஸ் டாக்ஸ் விதிக்கின்ற உரிமைகளை மாநில அரசு பெற வேண்டும் என்ப தையும், அதற்காக இந்த மன்றம் மைய அரசுக்குக் கோரிக்கை வைக்க வேண்டுமென்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11.20

இன்னும் அதற்கும் மேலேயே போய், இன்றைக்கு இருக்கின்ற நம்முடைய தொழில் வளர்ச்சியை நோக்கிச் செல்ல வேண்டும் என்கின்ற யானைப் பசிக்கு இதெல்லாம் போதாது. இன்னும் கூட, பணம் வேண்டும். ஆனால் இன்றைக்கு நாம் விதிக்கின்ற, நம்முடைய இந்திய அரசியல் சாசனம் Schedule 7, List 2-ல் Entry 49 and 50 அதிலே, நிலங்கள், கட்டிடங்கள், சுரங்கங்கள், இவைகளின் மீது நாம் வரி விதிப்பதற்குப் பிரத்தியேக உரிமை மாநிலத்திற்கு இருக்கிறது. அந்த செஸ்ஸை நாம் விதிக்கின்றோம். இதற்குத் தடையாக இன்றைக்கு நீதிமன்றம் வந்திருக்கிறது. மைய அரசு வரவில்லை. பல மாநிலங்களிலே சிமெண்ட் தொழிற் சாலைகளெல்லாம் கோர்ட்டிற்குச் சென்று, சுப்ரீம் கோர்ட்டிலே கூட ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். ஒரு சில மாநிலங்களி னுடைய உயர்நீதி மன்றங்கள் 'ஸ்டே' செய்து இருக்கிறது. அப்படியென்றால், இந்த 'செஸ்'ஸை டீ எஸ்டேட்டின் மீது போடுகிறோம். Oil and Natural Gas மீது, 'குரூட் ஆயில்' மீதெல்லாம் வரி போடுகிறோம். இதற்கெல்லாம் இனி வர விருக்கிற காலங்களில் போடமுடியாத ஒரு நிலைமை உருவா கிறது. இந்த நிலைமையை கோர்ட் உருவாக்கியிருக்கிறது. அதையெல்லாம் நாம் இந்த நேரத்திலே கவனிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். மேலும், 'இண்டஸ்ட்ரியல் ஆல்கஹால்' மீதுகூட நீங்கள் வரி போடுவதற்கான உரிமையை, கோர்ட் 'சேலஞ்' செய்திருக்கிறது. அதற்கெல்லாம், நாம் இன் றைக்கு மைய சட்டத்திலே திருத்தமாவது, அரசியல்

சாசனத்திலே சட்டத் திருத்தத்தையும் கேட்க வேண்டும். இவை
யெல்லாம், நம்முடைய மாநில அரசின் கையிலே இன்றுள்ள
உரிமைகள். இன்றைக்கு தனியார் தொழில் நிறுவனங்கள்
எல்லாம் கோர்ட்டுக்குப் போய் இதையெல்லாம் 'சேலஞ்' செய்
திருக்கிறார்கள். அதனால், Industries (Development and
Regulation) Act, 1971 அதிலேயிருக்கிற Price Control Order-லே
குறிப்பிடப்பட்ட அத்தனை இனத்தின் மீதும் மாநில அரசுக்கு
வரி விதிக்கிற உரிமையை நிச்சயமாக நாம் பெற வேண்டும்.
இல்லையென்றால். இந்த மாநில அரசுக்கு நாம் அத்தனைப்பெரும்
செய்கிற ஒரு துரோகமாக அமைந்து விடும். நிச்சயமாக வர
இருக்கிற சமுதாயம் நம்மை மன்னிக்காது. The history
shall not totally absolve us என்பதை இந்த நேரத்திலே
சொல்லி, நிறைய நிதியாதாரங்களைப் பெருக்குவதற்கு இந்த
நேரத்திலே, (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுடைய
வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : தொகுதிக்குக் கொடுத்த
வாக்குறுதிகளை நான் காப்பாற்ற வேண்டும். இன்றைக்கு
நீங்கள் புதிய மின் உற்பத்தி கார்ப்பரேஷன் அமைக்க இருக்கிறீர்
கள். அதை நான் வெகுவாகப் பாராட்டுகிறேன். பண்டித
ஜவஹர்லால் நேரு அவர்கள், மின் உற்பத்தி நிலையங்கள்
தான் கோவில்கள் என்று சொன்னார்கள். அவர்கள் மேலும்,
No country can be politically and economically independent unless
it is highly industrialised and has developed its power resources
to the utmost——

'பவர் ரிஸோர்ஸஸ்' தான் முக்கியம். நாம் இன்றைக்கு
அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் விடுதலைப்
பெற்றவர்களாக இருக்கிறோம் என்று சொன்னால்,
'பவர் ரிஸோர்ஸஸ்' தான் முக்கியம் என்பதை உணர்ந்து
நீங்கள் செய்திருக்கிறீர்கள். நீங்கள் நேருவின் வழியிலே
வந்திருக்கிறீர்கள் என்று சொல்லி, உங்களிடமிருந்து இந்த
மாநிலம் நிறைய எதிர்பார்க்கிறது.

சிறு தொழில்களுக்கு இன்றைக்கு 'டர்ன்-ஓவர்' 10 லட்சம்
என்று இருந்தால், அதற்கு 1.25 சதவிகிதம் 'டர்ன்-ஓவர்'
டாக்ஸ் போடுகிறார்கள். அதை 20 லட்சமாக மாற்ற வேண்டு
மென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.
சிறு தொழில்கள் தான் நாட்டின் முதுகெலும்பாக இருந்து
கொண்டிருக்கிறது. 'சிறு துளி பெரு வெள்ளம்'— Many a mickle
make a muckle என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே
நாம் அவற்றை அதிகமாக கவனிக்க வேண்டும்.

பெருந் தொழில்களுக்கு 100 கோடி, 50 கோடி என்று
'கேபிடல் சப்சிடி'— இன்செண்டிவ் கொடுப்பதை விட்டு



சிறு தொழில்கள் பக்கம் நாம் நிச்சயமாக பார்க்கக் கடமைப்
பட்டிருக்கிறோம் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொண்டு. . .
(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முற்றுப்புள்ளி
வைக்கவே மாட்டேன் என்கிறீர்கள்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : இன்றைக்கு இரண்டாவதாக,
தொழிற் புரட்சியை தமிழகத்திலே செய்வதற்கு நீங்கள்
முன்வந்திருக்கிறீர்கள். நீங்கள் அன்னை இந்திரா காந்தியைப்
போல தமிழகத்தின் இந்திரா காந்தியாக, தமிழகத்தின்
மார்கரெட் தாட்சராக, தமிழகத்தின் கோல்டா மேயராக அடி
யெடுத்து வைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்
கொள்கிறேன்.

வேதாரண்யத்திற்கு அறிவிக்கப்பட்ட 'காஸ்டிக் சோடா'
65 கோடி ரூபாய் திட்டம், அதற்கு மேலே 15 கோடி ரூபாய்
திட்டம்— 'மரைன் கெமிக்கல் காம்ப்ளெக்ஸ்'— மொத்தம் ஒரு
80 கோடி ரூபாய் திட்டங்கள் கடந்த 2, 3 ஆண்டுக் காலமாக
இந்த மன்றத்திலே நாம் பல முறை போராடி, வாதாடிப்
பெற்றிருக்கிறோம். கடைசியாக முந்தைய அரசினுடைய
முதலமைச்சர் அவர்கள் அறிவித்து விட்டும் சென்றார்கள்.
இந்த பட்ஜெட்டிலே அது குறிப்பிடப்படவில்லை. அதனை
நீங்கள் செய்து தருவீர்கள் என்ற நம்பிக்கையோடு நான்
இந்த நேரத்திலே இருக்கிறேன்.

மேலும், வேதாரண்யத்தில் இருக்கிற உப்பளங்களுக்கு,
10 ஆண்டுகளுக்கு குத்தகை உரிமை தருவதாக மாண்புமிகு
வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் 7, 8 ஆண்டுகளுக்கு
முன்பாகவே வேதாரண்யம் பொதுக் கூட்டத்திலே அறிவித்தார்
கள். இன்றைக்கு மீண்டும் அதனை நினைவூட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன். 'ரெகுலரைஸ்' செய்ய வேண்டு
மென்று இந்த நேரத்திலே— மகாத்மா காந்தி அவர்கள்
குனிந்து அள்ளிய உப்பு, கோடி மக்களை எழுப்பச்
செய்திருக்கிறது. அந்த உப்பின் மீது நாம் அக்கறை
கொண்டிருக்க வேண்டும். உப்புத் தொழில் நசிந்து விடாமல்
காப்பாற்றுவதற்கு, "No power on earth can stop an idea whose
time has come". என்று Victor Hugo சொல்லியிருக்கிறார்.
அப்படிப்பட்ட விஷயத்திற்கு, அதற்குரிய நேரம் என்று வந்து
விட்டால், எந்தச் சக்தியும் தடுக்க முடியாது என்று சொல்லி
யிருக்கிறார். தொழிற் புரட்சியைக் காண வேண்டுமென்று
ஒரு நல்ல- ஐடியா' வுக்கு நீங்கள் முதலமைச்சராகக் கிடைத்த
பொழுதே, நிச்சயமாக உலகத்திலே இருக்கிற எந்தச்

[திரு. பி. வி. இராஜேந்திரன்] [1991 செப்டம்பர் 19

சக்தியும், தமிழகத்திலே இருக்கிற ஒரு தொழிற் புரட்சியை
தடுத்து நிறுத்த முடியாது என்ற நம்பிக்கை எங்களுக்கு
இன்றைக்கு வந்திருக்கிறது.

தொழிற் துறையில் முதலாவதாக வர வேண்டுமென்ற
எண்ணம், இன்றைக்கு நிச்சயமாக தமிழ் மாநிலம் இந்த
மன்றத்தின் வாயிலாக அறிய வேண்டும். தமிழ் மாநிலம்
இன்றைக்கு வளர்ச்சி வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது.
வளர்ச்சி நமது தான்; வெற்றியும் நமது தான் என்று சொல்லி
முடிக்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> டாக்டர்
வெ. புருஷோத்தமன்.

<u>டாக்டர் வெ. புருஷோத்தமன் :</u> மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இதய தெய்வம், மாண்புமிகு புரட்சித்
தலைவி அவர்களின் அருளாலும், ஆசியாலும், தர்மபுரி
மாவட்டம் பென்னாகரம் சட்ட மன்ற உறுப்பினராக என்னை
உருவாக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள்
தொகுதியின் சார்பாக, பணிவன்பான வணக்கத்தைத்
தெரிவித்துக் கொண்டு இந்த தொழில் துறை மானியக்
கோரிக்கையில் பேச எனக்கு வாய்ப்புத் தந்தமைக்கு, மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றி
தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

முற்பகல் 11-25

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், தமிழகத்தை
இந்தியாவிலேயே தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்
துள்ள முதல் மாநிலம் என்று பேசுகிற அளவுக்கு, உயர்த்த
வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே தொழில்
முனைவோருக்கு ஆக்கமும், ஊக்கமும் தருகின்ற வகையிலே
பல்வேறு சலுகைகளை அளித்துத் தாராள கொள்கையை
அறிவித்துள்ள இந்த நேரத்தில், தொழில் துறையில் நடக்
கின்ற ஒரு சில மாபெரும் தவறுகளை இங்கே சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். அதோடு, என்னுடைய பென்னாகரம் தொகுதி
யில் கருப்புக்கல் கனிமச் சுரங்கம், தமிழ்நாடு கனிம நிறுவனம்
ஆகியவற்றைப் பற்றிப் பேச எனக்கு அனுமதி அளிக்க
வேண்டுகிறேன்.

கருப்புக் கல்லை வெட்டியெடுக்கின்ற இந்தத் துறையிலே
1972-ஆம் ஆண்டு முதல் இந்தப் பகுதியில், தர்மபுரி மாவட்
டத்திலே அதிகமான டெபாசிட்டுகள் உள்ள காரணத்தால்
இந்தத் துறையிலே, ஜெம் கிரானைட்ஸ், எண்டர்பிரைசிஸ்
எண்டர்பிரைசஸ், அம்மன் கிரானைட்ஸ், சண்முகா கிரா



1991 செப்டம்பர் 19] [டாக்டர் வெ. புருஷோத்தமன்]

னைட்ஸ், பல்லவா கிரானைட்ஸ் மற்றும் வெங்கடேஸ்வரா
கிரானைட்ஸ் ஆகிய அனைத்து கிரானைட்ஸ்களுக்கும் சாதகமாக
முந்தைய ஆட்சியாளர்கள் சட்ட திருத்தங்களைச் செய்து,
அதனால், அரசுக்கு முறையாகச் சேர வேண்டிய கோடிக்
கணக்கான வருமானத்தை வேறு வழியிலே திருப்பி விட்ட
கின்ற காரணத்தால், இந்த 608 என்ற ஜி. ஓ. படி இவர்களுக்
குத்தான் அந்த டெண்டர்கள் மூலமாக லீஸ் எடுக்க வேண்டு
மென்ற ஒரு கொள்கையின் காரணமாக வேறு யாரும் இந்தத்
துறையில் ஈடுபட முடியாது என்ற ஒரு நிலை உள்ளது. ஆகவே,
மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தற்போது
அறிவித்துள்ள இந்த வருட திட்டத்தின்படி a maximum of 250
hectares with deposits can be expected to fetch a revenue
of Rs. 9 crores during the financial year 1991-92.
இதில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், தர்மபுரி
மாவட்டத்திலே சடலூர் என்ற கிராமத்தில் ஒரு குவாரி மட்டும்
1,60,000 ரூபாய்க்குப் போயிருக்கின்றது. இப்போது 1991—92-ம்
ஆண்டிலே 250 எக்டேருக்கு இந்த டெண்டர் முறையில் வெட்டி
யெடுக்குமானால் மீண்டும் அந்த 608 ஜி.ஓ-வின்படி இந்த
கனிமச் சுரங்கத்தை வைத்திருப்பவர்கள் மட்டும்தான் பயன்
படுத்த முடியும். புதிதாக இந்த பகுதியில் உள்ளவர்கள் இதை
உபயோகிக்க முடியாது. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி
அவர்கள் இந்த 250 எக்டேர் கருப்புக் கல் பகுதியை
ஏலம் விடும்போது இதில் ஒரு சிறு பகுதியை அந்தப் பகுதி
யிலே உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பகுதியிலே தொழில் முனைவர்களுக்கும், ஏற்கெனவே
தொழில் செய்து கொண்டிருக்கின்றவர்களுக்கும் ஒரு வாய்ப்பு
அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, கருப்புக் கல்லுக்குப் பிறகு, கலர் கற்கள்
300 ஏக்கருக்கு டெண்டர் மூலமாக ஏலம் விடச்
சொல்லியிருக்கின்றார்கள். இந்தப் புதிய தொழில் கொள்
கையில். இதனால் அரசுக்கு எத்தனை கோடி ரூபாய் வரு
மானம் வருகிறது என்ற விவரமே இல்லாமல் இருக்கிறது.

அடுத்ததாக, தமிழ்நாடு மினரல்ஸ், இந்தக் கனிம நிறுவனம்
தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் பகுதியிலே மூன்று இடங்
களிலே குவாரிகள் அமைத்து வேலைகள் நடைபெற்றுவரு
கின்றன. இந்த நிறுவனம் 1978-லே ஆரம்பிக்கப்பட்டுள்ள
நிறுவனம். 1991 வரை எட்டு கோடி ரூபாய் இலாபம் அடைந்
திருக்கிறது. இதற்கு இந்த வருடம் இந்தத் துறையிலே மாண்பு
மிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி ... கோடி
முதலீடு செய்ய இருக்கிறது. இவர்கள் ...

டர்ன் ஓவர் பேசிஸ்-இல் கொடுத்துள்ளார்கள். ஆனால் இன்
வெஸ்ட்மெண்ட் காஸ்ட் பிரகாரம் இந்த நெட் பிராபிட்
கொடுக்கப்படவில்லை. மேலும் இந்த .................
marketing is a significant factor for the successful running of a
granite processing unit. TAMIN is able to market its products in the
countries like the UK, Switzerland, Holland, the US and Canada'.
ஆனால், மேஜர் பையர் ஜப்பான், மற்றும் கொரியா மற்றும்
கிழ்த்திசை நாடுகளிலும் காணப்படுகிறது. இதில் குறிப்பிடப்
படவில்லை. இந்த நாடுகளிலே தனியார் துறை ஆதிக்கம்
செலுத்தித் தங்களுடைய வருமானத்தினைப் பெருக்கிக்
கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் நம்முடைய டாமின் நிறுவனத்தின் கற்களை கீழ்த்
திசை நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வியாபாரத்தை அபி
விருத்தி செய்தால், அந்நியச் செலாவணி அதிகமாகக் கிடைக்
கும்.

அடுத்ததாக, மேற்குறிப்பிட்ட நிறுவனங்களில் ஆயிரக்
கணக்கான ஏக்கர் பட்டா நிலங்களைத் தங்களிடத்திலே
கையகப் படுத்தி அதன் மூலமாக, அதில் எந்தவிதக் கற்
களையும் வெட்டியெடுக்காமல் வெறுமனே இருக்கின்ற
காரணத்தால், அதற்கு டெட் ரெண்ட் என்ற ஒன்று இருக்கிறது.
அந்த டெட் ரெண்டை ஒரு ஏக்கருக்கு 10,000 ரூபாய் என்று
வசூலித்தால் கோடிக் கணக்கான ரூபாய் அரசாங்கத்திற்கு வரு
மானமாக வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11–30

மேலும் எங்கள் பெண்ணகரம் பகுதியில் இந்தக் கருப்புக்
கல்லுக்காக எந்தவிதமான தொழிற் சாலையும் இன்று வரை
ஏற்படுத்தவில்லை. மேலும் 90 சதவீதம் அரசாங்கத்திற்கு
வருகின்ற வருவாயில் இந்தக் கருப்புக்கல் மூலமாகக் கிடைக்
கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே எங்கள் பகுதி
பின் தங்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தால் அங்கே
தொழில் முனைவோர் அல்லது தனியார்கள் அல்லது பெரிய
தொழில் அதிபர்கள் யாராவது முன்வருவார்களேயானால்
அவர்களுக்கு இந்தப் பகுதியில் தொழிற்சாலை ஏற்படுத்த ஒரு
வாய்ப்புக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்தத் தொழில் துறையில் மைன்ஸ் அண்ட்
மினரல்ஸ் என்பதைப் பொறுத்தவரையில் டாமின் என்பதின்
பொது மேலாளர் என்பவர் ஒரு கெமிஸ்ட்ரி பட்டதாரியாக
பத்து ஆண்டு காலமாக அந்தத் துறையில் இருந்து வருகிறார்.
ஆனால் மைன்ஸ் அண்ட் மினரல்ஸ் என்பதில் சிறந்த நிபுணர்
களை வைத்து அந்தப் பொது மேலாளர் பதவியில் நியமிக்க





செய்தால் அந்த டாமின் இன்னும் அதிகமாக அன்னியச் செலா
வணியைப் பெற்றுக் கொடுக்கும் என்று கூறிக்கொண்டு எனக்குப்
பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.
நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> டாக்டர் தே.
குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவை துணைத்
தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகிற பெருந்தொழில்
மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கான வாய்ப்பினை
ஏற்படுத்தித் தந்ததற்காக முதலாவதாக எனது பணிவான நன்றி
யினைக் கூறிக்கொண்டு, இன்றைய தினம் புதிதாக வந்திருக்
கின்ற அரசு அறிவித்திருக்கின்ற நல்ல திட்டங்களை நான்
பாராட்டாமல் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். இருப்பினும் ஒரு சில கருத்துக்களை உங்களி
டம் நான் கூற கடமைப்பட்டு இருக்கிறேன். பொதுவாக நம்
முடைய தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் தொழில் வளங்
கள் பெருகி வருகின்றன என்று சொன்னால் சில குறிப்பிட்ட
நகரங்களில் மாத்திரம் அதாவது சென்னை அல்லது கோவை
என்ற இந்தப் பகுதிகளை மாத்திரம் மையமாக வைத்துத்
தொழிற்சாலைகள் அதிகமாகப் பெருகி வருகின்றன. அதற்
கான காரண காரியங்கள் என்ன என்று பார்க்கிறபோது இந்தப்
பகுதியில் அவர்கள் தொழில் தொடங்குகிற நேரத்தில் அவர்
களுக்கு அரசு தரப்பிலிருந்து கிடைக்கிற சலுகைகளை எளிதாகப்
பெற்றுக்கொள்ள முடியும் என்கிற காரணத்தால்தான் அவ்வாறு
ஆரம்பிக்கப்படுவதாகத் தெரிய வருகிறது. இப்படி
இந்தப் பகுதியில் ஆரம்பிப்பதற்கு பதிலாக பரவலாக எல்லா
பகுதிகளிலும், குறிப்பாக கிராமப் புறங்களில் இருந்து மக்கள்
நகரங்களை நோக்கி வராத வகையில் அவர்களை ப்ரிவென்ட்
பண்ணுகிற வகையில் கிராமப்புறங்களில் அந்தத் தொழிற்சாலை
களைப் பெருவாரியாக அமைப்பதற்கான முயற்சிகளை இந்த
அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்
கிறேன்.

அதே நேரத்தில் இங்கே உங்களுடைய அறிக்கையிலேயே
நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். புதிதாகத் தொழில் தொடங்கு
வதற்கு மின்சாரம், தண்ணீர் இரண்டுமே முக்கியம், அவை
பற்றாக்குறையாக இருக்கின்ற காரணத்தால் தொழில் வளர்ச்சி
மிகவும் தடைப்பட்டு இருப்பதாக நீங்கள் அறிக்
கையில் கொடுத்து இருக்கிறீர்கள். மின்சாரம் அதிகமாகக் கிடைக்
கிற விதத்தில் தனியார் துறைகளையும் நீங்கள் என்கரேஜ் பண்ண
வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதைப் பாராட்டு
கிறேன். ஆனால் பல தொழிற்சாலைகள் சிக் யூனிட்டாகப் போவ
தற்கு முக்கிய காரணமாக இருப்பது என்னவென்றால் அவர்கள்
[illegible] வேலைகளையும் ஆரம்பித்து அரசாங்கத்திலோ அல்லது

தனியாரிடத்திலோ கடனை வாங்கிவிட்டு அந்தக் கடனுக்கான வட்டியை பல ஆண்டுகளாக அவர்கள் செலுத்திக் கொண்டு வருகிறார்கள். இப்போது நம்முடைய அரசு கடன் கொடுத்தால் கூட குறித்த காலத்தில் அந்த அசலையும் வட்டியையும் அவர்கள் செலுத்தியாக வேண்டும் என்ற நியதி இருக்கிறது. ஆனால் தொழில் தொடங்குவதற்குக் கடனை வழங்கிவிட்டு அவர்களுக்கு மின்னிணைப்பு கிடைக்கவில்லை, தண்ணீர் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காகவே தொழில் தொடங்காமல் பல ஆண்டுகளாக இருக்கிறார்கள். அதிலே வரக்கூடிய வட்டி விகிதாச்சாரம் கூட அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. எனவே, அரசு, தொழில் உற்பத்தி செய்வது வரையில் அவர்களுக்கு வரி விலக்கு அளிக்கிற விதத்தில் ஒரு ஆணையைப் பிறப்பித்தால் தொழில் தொடங்குபவர்கள், நாம் தொழிலைத் தொடங்கிய பின்னால் கட்டினால் போதும் என்ற தன்னம்பிக்கையோடு செயல்பட முடியும். எனவே அரசு அதைத் தன்னுடைய கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் நம்முடைய 'டிக்' நிறுவனம் 3-3-1991 வரை 56,350 பேருக்கு தொழில் தொடங்குவதற்கு 1086 கோடி ரூபாய் கடனாக வழங்கி இருப்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறீர்கள். பாராட்டுகள். ஆனால் 56,350 தொழில்களுக்கு கடன் கொடுக்கப்பட்டும் அவற்றில் எத்தனை தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன? அவை இப்போது நடைமுறையில் இருக்கின்றவா? அவைகளில் எத்தனை க்ளோஸ் பண்ணிவிட்டு ஓடி விட்டார்கள், தொழில் தொடங்காமல் போய்விட்டார்கள்? கடனை வாங்கிவிட்டுத் தொழில் தொடங்காமல் போனவர்கள் எத்தனைபோர் என்கிற புள்ளிவிவரங்களை நீங்கள் அறிவிப்பீர்கள் என்று சொன்னால், அதை நாங்கள் தெரிந்து கொள்வதற்கான வாய்ப்புக்கு இருக்கும். அதுமாத்திரமல்ல. நீங்கள் கடன் கொடுக்கிறபோது அவர்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய கடன் தொகையைப் பொறுத்தவரையில் இப்போதுள்ள குறிப்பிலே சொல்லியிருக்கிறீர்கள். ஜாமீன் தொகையோ அல்லது ஜாமீன் தாரர்களோ வேண்டாம் என்கிற விதத்தில் சொல்லியிருக்கிறீர்கள் சின்ன கடன்களைப் பற்றி. பாராட்டுகள். ஆனால் நீங்கள் கொடுத்த பணத்திற்கு அதனுடைய வட்டியும் அசலும் திருப்பி வந்து கொண்டிருக்கிறதா அல்லது ஒட்டுமொத்தமாக இந்த நிறுவனங்களுக்கு கடனை மாத்திரம் கொடுத்து விட்டு, பிறகு சிக் யூனிட்டாகப் போகிற நிலையில் அந்தப் பணங்களை ரிகவரி பண்ணாமல் விட்டுவிட்டீர்களா என்பது எனக்குப் புரியவில்லை.

முற்பகல் 11-35

ஆக இப்போது இந்த ஓராண்டுக்கு மாத்திரம் 225 கோடி ரூபாய் கொடுப்பதாக நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். பாராட்டு. ஆனால் உங்களுடைய எண்ணம் நாடு முழுவதும் தொழில்மயமாக வரவேண்டுமென்ற உயரிய சிந்தனையை நான் பாராட்டு-





கிறேன். ஆனால் நீங்கள் எண்ணுகின்ற விதத்தில் அந்த தொழிற்சாலைகள் நாட்டு மக்களுக்கு பயனுடைய விதத்தில் அமைய வேண்டும். அதற்கான எல்லா வசதிகளும் வேண்டும். மின்சாரமானாலும் சரி, தண்ணீரானாலும் சரி, நாங்கள் வசதி செய்து தந்து அவைகளை உங்களுக்கு தொழில் தொடங்குவதற்காக என்கரேஜ் பண்ணுகிறோம் என்ற விதத்தில் உங்களுடைய செயல்பாடுகள் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, சின்ன சின்ன கோரிக்கைகளை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இங்கே சில பகுதிகளை அறிவித்து, எந்தெந்த பகுதிகளில், இன்னின்ன தொழில்கள் அதிகமாக நடைபெற்று வருகிறது. அங்கே நாங்கள் ஏற்றுமதி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். பாராட்டு. அதே நேரத்தில் இந்த சிவகாசி பகுதியில் பட்டாசு தொழிற்சாலைகள் அதிகமாக இருப்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது வெளிநாடுகளுக்குப் பொதுவாக அமெரிக்காவில் ஒரு முறை 200 வது நூற்றாண்டு விழா கொண்டாடுகின்றபோது, அந்த நேரத்தில் அதிகமாக பட்டாசுகள் ஆர்டர் கொடுத்தார்கள் பல கோடி ரூபாய்க்கு. பிறகு ஏற்றுமதி வசதியில்லை என்ற காரணத்தினாலே அது கைவிடப்பட்டு, சைனாவிற்கு அந்த பட்டாசை மலிவு விலையில் திருப்பி மாற்றி அனுப்பியிருக்கிறார்கள். இப்படிப் பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்டுவிட்டதாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றார்கள். அரசே அதிலே வெளிநாடுகளுக்கு எந்த எந்த பகுதிகளுக்கு தேவையான பட்டாசுகள் வேண்டுமென்று சொன்னாலும், நீங்கள் ஏற்றுமதி செய்கிற போது அந்நிய செலாவணி நமக்கும் அதிகமாக கிடைக்கின்ற ஒரு வாய்ப்பு வரும் என்பதை சொல்லி அதை நீங்கள் கருத்திலே கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே உள்ளவர்களுக்கு ஏற்றுமதிக்கு வாய்ப்பினை நீங்கள் உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

அதே போல, வைரக் கற்களை பட்டை தீட்டுகின்ற ஒரு தொழிற்சாலை சூரத் பகுதியிலே இருக்கின்றது. அங்கே பணியாற்றுகின்றவர்கள் பெருவாரியாக நம்முடைய பகுதியை தமிழ் நாட்டுப் பகுதியைச் சேர்ந்தவர்கள்தான் பணியாற்றி வருகின்றார்கள். அதே போல திருச்சிப் பகுதியில் அதிகமாக வைரக் கற்கள் கிடைப்பதாக ஒரு தகவல் வந்திருக்கிறது. அது எவ்வளவு தூரம் சரியான தகவல் என்று எனக்குத் தெரியாது. இருப்பினும் திருச்சி பகுதியில் இந்த வைரக் கற்களை பட்டை தீட்டுகின்ற ஒரு தொழிற்சாலை அமைத்துக் கொடுப்பது என்று சொன்னால் அது நமது அரசாங்கத்திற்கு வருமானமாக இருக்கும் என்பதை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1991 செப்டம்பர் 19

அதேபோல, தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காக்க
ளாக நீங்கள் அறிவிக்கிறீர்கள். அதைப் பொறுத்தமட்டில்
எங்களுடைய மாவட்டத்தைப் பற்றி ஒரு கருத்தைச் சொல்ல
வேண்டும். என்னுடைய மாவட்டம் மிக குறுகிய மாவட்டம்.
அதிலே இரண்டு தாலுக்காக்களை அதிகமாக தொழில் உள்ளதாக
குறிப்பிட்டு இருக்கிறீர்கள். விளவங்கோடு, கல்குளம் இரண்டை
யும் தொழில் வளம் மிக்கதாகவும், தோவாளை, அகஸ்தீஸ்வரம்
ஆக இரண்டும் தொழில் வளத்தில் பின்தங்கியதாக அறிவித்திருக்
கிறீர்கள். என்ன 'பேசிஸ்'-ல் அதை அறிவித்திருக்கிறார்கள்
என்று நான் அதிகாரிகளிடம் கேட்கின்றபோது சொல்கிறார்கள்.
கல்குளம், விளவங்கோடு இரண்டிலும் முந்திரி தொழிற்சாலை.
'கேசுநட்' பாக்டரி அதிகமாக இருக்கின்றன. அதனாலே
தொழில்துறையில் முன்னேறியிருக்கிறது என்று சொல்கிறார்கள்.
இது வேதனைக்குரிய விஷயம். அத்தனையும் கேரளாவிலே
இருந்து வந்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் இங்கே வந்து
குழந்தைகளுக்கு வேலை கொடுப்பதை நான் குறை சொல்ல
வில்லை. அதே நேரத்தில் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய
சம்பளம் 10 ரூபாய் 11 ரூபாய் என்ற அளவிலே இருக்கிறது.
இது ஒரு தொழில் துறையில் எப்படி முன்னேறியதாக கருது
கிறார்கள் என்று தெரியவில்லை. இது எனக்குப் புரியவில்லை.
எனவே அந்த விளவங்கோடு, கல்குளம் இரண்டு தாலுக்காக்களை
யும் கூட தொழில் துறையில் பின்தங்கிய தாலுக்காக்களாக
அறிவிக்கப்பட்டு அங்கேயும் சலுகைகள் வழங்கப்பட வேண்டும்
என்று நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதே போல 50 தொழிலாளர்களுக்கு குறைவாகப் பணி
ஆற்றுகின்ற தொழிற்சாலைகளுக்கு தொழிலாளர்கள் நல சட்ட
விதியிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டுமென்று ஒரு
கோரிக்கையை வைத்திருப்பதாகவும் அதை அரசு பரிசீலித்துக்
கொண்டிருப்பதாகவும் இங்கே கொள்கைக் குறிப்பிலே விளக்கத்
திலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். பாராட்டுகிறேன். அப்படிப்
பட்ட சிறு தொழிற்சாலைகளை என்கரேஜ் பண்ணுகின்ற விதத்
தில் அவர்களுக்கு தொழிலாளர் நல சட்ட விதியிலிருந்து விதி
விலக்கு அளிக்க அரசு முன்வரவேண்டுமென்று நான் பணிவன்
புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்னும் ஒன்றிரண்டு கோரிக்கைகளை மாத்திரம்
வைத்து நான் முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ரப்பர் தொழிற்சாலை
அமைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வெகு நாளாக
இருந்து வருகிறது. அரசு கூட பரிசீலனை செய்துகொண்டிருப்ப
தாக குறிப்பிட்டு இருக்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டிலே
அதிகமாக, இந்தியாவிலேயே இரண்டாம் தரமான, மிக உயர்ந்



1991 செப்டம்பர் 19] [டாக்டர் தே. குமாரதாஸ்]

தரமான ரப்பர் அதிகமாக விளையக்கூடிய பகுதியாக இருக்கி
றது கன்னியாகுமரி மாவட்டம். அதிலே நம்முடைய டிரான்ஸ்
போர்ட்டுக்கு மாத்திரம் ஆண்டு ஒன்றுக்கு பல ஆயிரம் டயர்
கள், டியூப்புகள் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

எனவே போக்குவரத்துக் கழகத்தின் சார்பாகக்கூட அங்கே
ஒரு மிகப் பெரிய தொழிற்சாலை அமைத்துத் தருவோம் என்று
சொன்னால் அது அரசுக்கும் இலாபமாக இருக்கும், போக்குவரத்
துக் கழகத்திற்கும் இலாபமாக இருக்கும். எனவே, 306 கோடி
ரூபாய்க்கு பெரிய தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப்படுவதற்
கான திட்டம் பரிசீலனையில் உள்ளது. எனவே, மாண்புமிகு
முதல்வர் அவர்கள் அதிலே அக்கறையும் கவனமும் செலுத்தி
அந்த மாவட்டத்திலே இதுவரைக்கும் ஒரு தொழிற்சாலை கூட,
ஒரு அரசாங்கத் தொழிற்சாலைகூட கிடையாது. எனவே,
அதை அமைத்துத் தரவேண்டும் என்றும், இந்த சந்தர்ப்பத்தில்
உத்தரவாதம் தருவார்கள் என்றும் கருதுகிறேன்.

அதேபோல ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஜெனரலாக
வேண்டுகிறேன். எல்லா கடற்கரைப் பகுதிகளிலும் பெருவாரி
யாக தமிழ்நாட்டில் கேரளாவிற்கு அடுத்தபடியாக மீன்கள்
அதிகமாகக் கிடைக்கிறது. இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு மீன்
பதப்படுத்துகின்ற தொழிற்சாலை என்ற விதத்தில்கூட நீங்கள்
அமைத்து தருவீர்கள் என்று சொன்னால் அதிகமான மீன்கள்
பதப்படுத்துகின்ற தொழிற்சாலை ஏற்படுவது மட்டுமல்லாமல்
வேலைவாய்ப்பு மட்டுமல்லாமல் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்
வதன் மூலம் அந்நிய செலாவணி மிக அதிக அளவில் கிடைக்
கின்ற வாய்ப்பு ஏற்படும். எனவே, அரசு அதிலே தன்னுடைய
கவனத்தைச் செலுத்தி அமைக்க வேண்டும். என்னைப்
பொறுத்த அளவில் 225 கோடி ரூபாய் என்று நீங்கள் சொல்லி
யிருப்பது. நீங்களாகவே இந்த திட்டங்களை அருமையாகச்
செய்துகொள்ளலாம் என்று கருதுகிறேன். அப்படி செய்து
கொள்வார்கள் என்று சொன்னால் மக்களுக்குப் பயன் உள்ள
தாக, நாட்டிற்குப் பயன் உள்ளதாக அமையும் என்று கூறி
தலைவர் அவர்கள் அளித்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.
வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்</u> : திரு. சஞ்சய் ராமசாமி.

முற்பகல் 11-40

THIRU SANJAY RAMASAMY : Hon'ble Deputy Speaker, May I
first begin my first speech by thanking the Hon'ble Prime Minister and
may leader Sri Rajiv Gandhi but for whom I would not have been
able to come into this service. May I also thank our Hon'ble Chief
Minister for having campaigned for me in my Constituency. Industries
account for 25 per cent of the economy and it is the heart of the economy

[Thiru Sanjay Ramasamy] [1991 செப்டம்பர் 19

A weak Industrial Policy will only lead to increase poverty and unemployment. The importance of Industries in the eyes of the Government can be understood by the fact the Chief Minister herself is keeping the portfolio. That it is serious can be seen from the exellent new Industrial policy that is laid before this August House. Our late Leader Rajiv Gandhiji once said 'I dream of an India, strong, independent self-reliant and front-line in the world' This Government has by its Policies shown that this dream can be made true. I personally feel that our beloved Chief Minister's policies should be followed as an example by other States in the country. to achieve success. The New Industrial Policy also comes as a breath of fresh air. The eleven months of the J.D. Rule has been disastrous for the Industries in almost every sense.

At a time when they thought Industries in Tamil Nadu were finished they were able to see the light at the end of the tunnel. when the Hon'ble Chief Minister met them (the Industrialists). After she was sworn in and I am sure and I have no doubt. that the Members of this august Assembly would agree that under the able guidance of our Hon'ble Chief Minister, Tamil Nadu would again be No. 1 in the Industrial sector. The subsidies given by this Government are most welcome.

Amongst them one is for Pollution control Equipment. As far as Pollution Control Equipments are concerned it is being manufactured but unfortunately not much of them is being used in the State currently. The best example of it would be the Leather Tanneries. Half of their waste is being thrown into the streets and into the waste-lands close to the Tanneries. It is good to develop these Industries, but at what cost ?. Definitely should not be at the cost of human life. Human life is more than anything else. In the Policy it is stated that the Pollution Control Certificate should be given for a period of two years. I would strongly suggest to the Hon'ble Chief Minister to reduce that period from two years to one year, whereby you would have a direct check on the Pollution Control level in the State.

Recently while speaking to the students our beloved Chief Minister requested them not to go abroad to study. It is true that lot of students go abroad and even seek work there. There is abundant intelligence here in India, but unfortunately they have not been able to use their talents here simply because there has been no provisions for them to come out.

முற்பகல் 11-45

I would suggest to our Hon. Chief Minister to make it compulsory for every industry to contribute to Research and Development, there by 3enabling these students to put their brains to use in this country and



1991 செப்டம்பர் 19] [Thiru Sanjay Ramasamy]

not go out and do it. They are there in almost all the foreign countries. If we take the example of America, NASA has got a large number of Indians working for them. There is no need for these people to go there and use their energies. Therefore, I am sure that, given the proper facilities, they would be most willing to put their efforts to use here.

During the regime of the previous Government a number of companies have been closed. I would even say that a number of companies have been pushed to the extent of being closed. One of them was the Madras Aluminium Company and the other one, of course, was Standard Motors. It is heartening to see that the Standard Motors is to commence its operations soon. I would also request our Chief Minister to kindly ensure that the Madras Aluminium Company is opened.

The sugar industry plays a prominent role in the country and the sugar industry of Tamil Nadu is one of the largest in the country. The sugar industry in Tamil Nadu can be helped by reducing the tax components such as purchase-tax and cess on sugarcane. These tax elements are the hgihest in Tamil Nadu. It is about Rs. 59. per metric tonne of cane in Tamil Nadu, whereas it is Rs. 19 in Uttar Pradesh and Rs. 16 in Maharashtra which are occupying the first and second positions in sugarcane production. The sugar industry can also be helped by fixing a flat rate of purchase tax rather than ad valorem, so that the entire tax is taken into consideration for fixing the levy price by the Central Government. This method will help the industry in future (The gong was sounded)

The Government owns and runs 5 laboratories under the auspices of the Industries and Commerce Department, It seems that there is a move to hand over these laboratories to private organisations. I request the Government to think twice before taking any such step because this would cast a lot of burden on the small scale industries.

Before I finish my speech. I would like to refer to an interview which our beloved Chief Minister gave to a magazine. The cover-story carried the caption "The Iron Butterfly" and the Chief Minister rightly put it that she was not a butterfly but an iron lady, *(Thumping of desks)* Mrs, Thatcher was called an iron lady and we have had great leaders like Mrs. Indira Gandhi. President Aquino and Mrs, Golda Meir, My colleague. when speaking stated that our beloved Chief Minister would have to be the Thatcher of Tamil Nadu, But, I would go one step ahead and I would like to say that she would have to be the Queen of Asia *(Thumping of desks).*

With that. I would like to end my speech, Thank you,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ச. இராமச்சந்திரன்.

*திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் மானியத்தில் ஒரு புதிய தொழிற் கொள்கையை தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்திய அரசு ஒரு புதிய தொழிற்கொள்கையை அறிவித்திருக்கிறது. இந்தியா என்பது ஒரே சந்தை என்கிற காரணத்தால் இந்திய அரசினுடைய தொழிற் கொள்கையை ஒட்டித்தான் தமிழ்நாட்டு அரசினுடைய தொழிற் கொள்கை அமைய வேண்டி வரும். இல்லையென்றால் நாம் வாசிப்பது அபஸ்வரமாகக்கூட ஆகிவிடும். அதனாலோ என்னவோ புதிய தொழிற் கொள்கையைப் பற்றிக் குறிப்பிடுகிற போது, இந்திய அரசு அறிவித்துள்ள தொழிற் கொள்கை தமிழ்நாட்டிலே உள்ள தொழிலதிபர்களுக்கும், தமிழக அரசுக்கும் சவாலாகவும் இருக்கிறது. வாய்ப்புகளும் தருகிறதென்ற கருத்துரையை இந்தக் கொள்கைக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள்.

முற்பகல் 11.50

இந்திய அரசினுடைய தொழில் கொள்கையைப் பொறுத்த வரையில் நியாயமான பயம் ஒன்று இருக்கிறது. சிறிய மீனை பெரிய மீன்கள் விழுங்குகின்றன. பெரிய மீனை திமிங்கலங்கள் விழுங்குகின்றன. அதைப்போல சிறிய தொழில்களை பெருந் தொழில்கள் விழுங்குகின்றன. பெரிய தொழில்களை எங்கே பன்னாட்டு நிறுவனங்கள் விழுங்கிவிடுமோ என்ற பயம் இருக்கிறது. அந்த நிலை ஏற்படுமானால் நன்றாக இந்தியாவிலே நடைபெறக் கூடிய தொழில்களுக்குக் கூட நலிவு வந்துவிடும் என்ற அச்சம் இருக்கிறது. என்றாலும் உலகச் சந்தையில் போட்டியிடக்கூடிய அளவுக்கு தொழில் நுட்பத் திறமையும், உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் அதைச் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கையோடு சில தொழில்கள் தங்களை அந்த வகையிலே ஈடுபடுத்திக் கொண்டு இருக்கின்றன. தொழில் கொள்கையைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு முதலிடத்திற்கு வரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததை தமிழ்நாட்டிலுள்ள அத்தனை பேரும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அது முதல் இடத்திற்கு வருவதற்கான சாத்தியக் கூறுகள் இந்தத் தொழில் கொள்கையில் இருக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டிய கடமையும் நமக்கு இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை)

குறிப்பாக ஒரு கருத்து நம்மிடத்தில் உலவுகிறது. தொழில்களை தனியார் நடத்தினால் லாபகரமாக நடத்துவார்கள், அரசு நடத்தினால் அது நஷ்டத்தில்தான் நடக்கும் என்று. அது உண்மையல்ல. இன்றைக்கு இந்தியாவில் மூடப்பட்டிருக்கின்ற



ஆலைகள் 2011. அதில் வங்கிகள் போட்டிருக்கின்ற பணம் ரூ. 5565 கோடி. தனியார் துறையிலே நடந்த அந்த தொழிற் சாலைகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. நம்முடைய நாட்டிலே கூட பெரும் பெரும் தொழில்கள்—இங்கே தொழிலாளர் நல மானியத்தில் பேசும்போது கூட நாங்கள் குறிப்பிட்டோம்—பி. அண்ட் சி. ஆலை இருக்கிறது, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் இருக்கிறது, மால்கோ, இன்னும் பல தொழில்கள் தனியார் நடத்துகின்ற தொழில்கள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. ஆகவே முதல் முதலாக இந்த அரசு செய்யவேண்டியது மூடிக் கிடக்கின்ற தொழிற்சாலைகளை நடத்துவதற்கு அல்லது திறப்பதற்கு என்னென்ன வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை முதலாவது உரிமையாக, இந்த அரசு எடுத்து அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும். மூடப்பட்ட தொழிற்சாலைகளை திறக்க முடியாது, இனிமேல் நடத்த முடியாது என்றால் அதை மூடுவதற்கு உரிய தைரியத்தையும் அதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்ததாக நன்றாக நடைபெறுகின்ற தொழிற்சாலைகள் பொருளாதார......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்புகிறேன். தனியார் நடத்துகின்ற தொழிற்சாலைகள்தான் பெருமளவில் மூடப்பட்டு இருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மூடப்பட்ட ஆலைகளில் ஒன்றையாவது திறக்கவேண்டும் அல்லது மூடுகின்ற தைரியம் அரசுக்கு வரவேண்டுமென்று குறிப்பிடுகிறார்கள். அந்த ஆலைகளை—தனியார் நடத்தி மூடப்பட்டிருக்கிற ஆலைகளா அல்லது அரசு நடத்தி லாபகரமாக இல்லாத காரணத்தால் மூடப்பட்டிருக்கிற ஆலைகளைப் பற்றி அவர்கள் குறிப்பிடுகிறார்களா என்று அறிய நான் விரும்புகிறேன்.

திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் 7 நிமிடம்தான் என்பதால் எல்லாம் வேகமாகப் போக வேண்டியிருக்கிறது. நான் சொல்வது தனியாரிடத்தில் கொடுத்தால் எல்லாம் லாபமாக நடக்கும் என்று நினைக்கிறோமே அந்தக் கருத்து சரியானதல்ல. தனியாரிடத்திலும் அந்த நிலைமை இருக்கிறது. சிலவற்றை பல ஆண்டுகளாக அவர்கள் நடத்த முடியாமல் அப்படியே மூடி வைத்திருக்கிறார்கள். அங்கே பணிபுரிக்கிற தொழிலாளர்களும் அதையே நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். நடக்குமா, நடக்காதா, ஏதாவது வழி பிறக்குமா என்பதை அவர்களுக்குத் தெரிவித்து விட்டால் அவர்களும் வேறு வேலைக்காவது போகலாம். அதைத்தான் நான் குறிப்பிட்டேனே தவிர பொதுத்துறையைப் பற்றி நான் குறிப்பிடவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறுக்கீடுகள் வருகிற நேரத்தை என்னுடைய நேரத்தில் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்று பணிவன்போடு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுக்கீடு வராமல் பேசுகின்ற திறமை மிக்க தாங்கள், அந்தக் குறுக்கீட்டு நேரத்தையும் எடுத்துக்கொள்ளலாம். (சிரிப்பு)

திரு. ச. இராமச்சந்திரன் : எதிலும் குறுக்கீடு செய்கிற சாமர்த்தியம் இருக்கிற எதிர்கட்சித் தலைவர் இருக்கிற போது எனக்கும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. இருக்கின்ற தொழில்கள் செவ்வனே நடைபெறவேண்டும். அவைகள் நலிவுற்ற தொழில்களாக ஆகிவிடக்கூடாது. இருக்கின்ற தொழில்களின் உற்பத்தித் திறனுக்கு ஏற்றவாறு நடத்துவதற்கு அல்லது கண்காணிப்பதற்கு, அந்தந்த தொழில் துறையில் உள்ள நிபுணர்களை, அதாவது இன்ஜினியரிங் இண்டஸ்ட்ரி, எலக்ட்ரானிக் இண்ட்ஸ்ட்ரி அல்லது லெதர் இண்டஸ்ட்ரியில் நிபுணர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்துக் கொள்வோமானால் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற தொழில்கள் நலிவுறாமல் பார்த்துக் கொள்வதற்கு அதை மானிட்டரிங் செய்வதற்கு, அதாவது அந்தத் தொழில் எவ்வாறு நடைபெறுகின்றது. எப்படி மனித உடலுக்கு தற்காப்புக்காக உடல் நலத்தைச் சோதனை செய்து கொள்கிறோமோ அதைப்போல—அவைகளைக் கவனிக்கமுடியும்.

முற்பகல் 11-55

தொழில்களை நடத்துகிறபொழுது அவைகள் 'சிக்' ஆகிவிட்ட பிறகு, அதற்கு நாம் நிவாரணங்களைத் தேடுவதைவிட முதலிலேயே அதனுடைய ஆரோக்கியத்தைப் பார்க்கின்ற அளவுக்கு, நல்ல தொழில் ஆர்வமும் ஆற்றலும் வாய்ந்தவர்களை வைத்து இருக்கின்ற தொழில்களை கண்காணிப்பாக பார்ப்பது தலையாய கடமை என்று நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

புதிய தொழிற்சாலைகளை துவங்குகிறபொழுது வேலை வாய்ப்புகளை அதிகம் தரக்கூடிய தொழிற்சாலைகளை தமிழ் நாட்டில் துவங்குவது மிகமிக அவசியம். வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு வறுமையும் வேலை இன்மையும் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றது. அது இந்த விளக்கக் குறிப்பிலேயே கொடுக்கப்பட்டு இருக்கின்றது. வறுமையும் வேலையின்மையும் போக வேண்டுமானால் வேலை வாய்ப்பினை அதிகப்படுத்துகின்ற தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அப்படி முக்கியத்துவம் கொடுக்கின்றபொழுது அதிலே நவீனமயமான தொழில்களை ஆரம்பிப்பதற்கான முறையினை மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால், ஏற்கனவே நான் தெரிவித்ததைப் போல, புதிய தொழில் கொள்கை மூலம், இந்தியா என்பது உலக சந்தையோடு





சேர்க்கப்படுகிறது அப்படி உலக சந்தையோடு போட்டி போடக்கூடிய தொழில்கள் எவை, தாக்குப் பிடிக்கக்கூடிய தொழில்கள் எவை என்பதைப் பார்த்து அவைகளுக்கு நாம் முன்னுரிமை தரவேண்டும். உதாரணமாக எலக்ட்ரானிக்ஸ் சாஃப்ட்வேர் இருக்கிறது. சாஃப்ட்வேரை அதாவது குறைந்த செலவிலே உருவாக்கி, உலகத்திலேயே உருவாக்கக்கூடிய ஆற்றல் பெற்ற கணிப்பியல் நிபுணர்கள் அதாவது கம்ப்யூட்டர் சையன்டிஸ்ட் எங்கே இருக்கிறார்கள் என்றால் இந்தியாவில் தான் இருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள். அவர்களை இன்றைக்கு அமெரிக்காவோ அல்லது ஜப்பானோ அல்லது ஜெர்மனியோ மாதம் ஒரு இலட்சம் ரூபாய் கூட சம்பளம் கொடுத்து எடுத்துக்கொண்டு அந்த கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் தயாரிப்பதற்கான திட்டங்களை மேற்கொள்கிறார்கள். பெங்களூரிலேயே அந்த பன்னாட்டு நிறுவனங்கள் கூட தங்களுடைய கிளைகளைக் கொண்டு வந்து நிறுவி, அதை அங்கே பெருமளவுக்கு வளர்க்க வேண்டும் என்கிற முறையிலே முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக தென்னகத்தைச் சேர்ந்த பொறியாளர்கள்தான் இதிலே மிகுந்த முன்னேற்றத்தை அடைந்து இருக்கின்றார்கள். அவர்கள் இங்கே வருவதற்கோ, அவர்களை இந்த தொழிலிலே ஈடுபடுத்துவதற்கோ நாம் நல்ல ஊக்கத்தை அல்லது முயற்சியை மேற்கொள்வோமானால் நிச்சயமாக அது உலக சந்தையோடும் போட்டி போடும்; இங்கு தொழில் முன்னேற்றமும் கிடைக்கும்; பொறியாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

கருப்புக் கல்லைப் பற்றியும். இங்கே மாண்புமிகு பென்னாகரம் உறுப்பினர் எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருப்புக் கல்லை ஏற்கனவே சாதாரண மக்கள் கூட ஒன்றாகச் சேர்ந்து அவற்றை வெட்டி எடுத்து, பாலிஷ் செய்து வெளியே அனுப்பிக் கொண்டு இருந்தார்கள். அதை இப்போது தொழிற்சாலை வைத்து இருக்கின்றவர்கள்தான் நடத்த முடியும் என்று ஒரு உத்தரவு போட்டு, அதன்மூலம் சாதாரண மக்கள் கூட, பல பேர் அதிலே ஈடுபட்டு அந்தத் தொழிலைச் செய்வதற்குரிய வாய்ப்பு தடுக்கப்பட்டு இருக்கிறது. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏற்கனவே இருந்த அரசிலே போட்ட அந்த உத்தரவை மறுபரிசீலனை செய்து அதிலே என்ன குறை இருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்து அவற்றை நிறைவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுப்புறச் சூழ்நிலை பற்றி கூட இங்கே சொன்னார்கள். அதிலே அண்மையிலே 'ஓர்ல்டு வாட்ச் இன்ஸ்டிடியூட்' அதாவது உலக கண்காணிப்பு நிறுவனத்தின் மைக்கேல் ரானர் என்பவர் சொல்கிறார். தொழிற்சாலைகளை துவங்குகிறபொழுது நிறைய

[திரு. ச. இராமச்சந்திரன்] [1991 செப்டம்பர் 19

தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்கக் கூடிய ஒரு தொழிலை
துவங்கினால் அதன்மூலம் 'என்வைரன்மென்ட்' கூட, சுற்றுப்
புறச் சூழல் கூட கெடாமல் இருக்கக்கூடிய நிலைமை இருக்
கிறது.

Less damagin8 ways of Producing, consuming, and dispcssing of
goods of fully consistent with the goal of full employment because
they tend to be more labour inteusive.
ஆகையால் புதிய தொழில்களை துவங்குகின்ற போது அவர்கள்
அத்தகைய கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும். அந்தப் புதிய
தொழில் கொள்கை உருவாக்குகிறபோது இந்த அம்சங்களை
எல்லாம் கணக்கிலே எடுத்துக்கொள்ளவேண்டும்.

கடந்த 20, 25 ஆண்டுக் காலமாக இந்திய அரசாங்கத்தி
னுடைய முதலீடு மிக மிகக் குறைந்து வருகிறது. அது உண்மை.
சென்ட்ரல் செக்டார் இன்வெஸ்ட்மென்ட், அதை ஏன் நம்முடைய
தமிழ்நாட்டுக்கு குறைக்கப்படுகிறது என்பது எங்களுக்குத் தெரிய
வில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அண்மையிலே
டில்லி சென்று அங்கேயுள்ள அமைச்சர்களை எல்லாம் பார்த்து
சந்தித்துப் பேசி இருக்கிறார்கள். "ரீஜனல் இம்பேலன்ஸ்"
கூடாது என்று சொல்கிறது இந்திய அரசு. ஆனால் அதே
நேரத்தில் சென்ட்ரல் செக்டார் இன்வெஸ்ட்மென்ஸ், மத்திய
அரசே மூலதனம் போட்டு ஆரம்பிக்கக் கூடிய தொழிற்சாலைகள்
ஏன் தமிழ்நாட்டில் குறைகின்றன? அதற்கு என்ன காரணம்
என்பதை நம்முடைய அரசு திட்டவட்டமாக மக்களுக்கும்
தெரிவிக்க வேண்டும். இந்திய அரசினிடத்திலே எடுத்துச்
சொல்ல வேண்டும். ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல்
கடனைப் பெறுகிறார்கள். கடனைக் கட்டுவது மட்டும்
நம்முடைய தலையிலே விழுகின்றது. ஆனால் தொழிற்சாலை
மட்டும் எங்கேயோ துவங்குகிறார்கள். அதற்கு என்ன காரணம்
என்று நான் கேட்பது தவறா?

இன்னும் ஒரு வாய்ப்பு வர இருக்கிறது. அந்நிய நாட்டில்
இருக்கக் கூடிய இந்தியர்கள், அவர்கள் சம்பாதிக்கின்ற பணத்தை
மூலதனத்தை இங்கே போடப் போகிறார்கள். அப்படிப் போடு
கிற பொழுது அதிலேயாவது ஆரம்பிக்கப்படுகிற தொழில்கள்
இங்கே வருமா? அதற்கு உத்தரவாதத்தை நாம் பெற
வேண்டாமா? என்.ஆர்.ஐ. இன்வெஸ்ட்மென்ட்ஸ் அல்லது
மல்டி-நேஷனல் கார்ப்பரேஷன், டிரான்ஸ்-நேஷனல் கார்ப்ப
ரேஷன் இன்வெஸ்ட்மென்ட்ஸ் வருகிறது என்றால், அப்படி
எல்லாம் வந்தால் தான், இல்லையென்றால், இங்கே உள்ள
தமிழர்கள் பெங்களூருக்கோ, பம்பாய்க்கோ, டில்லிக்கோ
பஞ்சாபுக்கோ வேலை தேடிப் போகிறார்கள்; அங்கே உதை
கிடைத்தால் வாங்கிக்கொள்கிறார்கள்.



1991 செப்டம்பர் 19] [திரு. ச. இராமச்சந்திரன்]

நண்பகல் 12-00 மணி.

இந்தச் சூழ்நிலையைத் தடுக்க வேண்டுமென்றால் ஆங்காங்கே
இருக்கிற மாகாணங்களில் அந்தத் தன்னிறைவு ஏற்படுத்துகிற
அளவில் சென்ட்ரல் செக்டாருடைய இன்வெஸ்ட்மென்ட் பாலிசி
என்பதில் "செல்ப் புல்பில்மென்ட் ஆப் தி ஸ்டேட்ஸ்" என்ற
அளவில் மாற்றியமைப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ள
வேண்டுமென்று கோரி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி. வி. ஜி. மணி
மேகலை.

திருமதி வி. ஜி. மணிமேகலை : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஒப்பாரும் மிக்காரும் இன்றி, உயர் தனிச்
செங்கோல் ஏந்தி, ஆட்சியும் மாட்சிமை பொருந்திய என்
இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்
களே, தனக்குவமை தானேயாகி தனி நிலவாய் உலா வந்து
தண்ணொளியை நல்கும் புரட்சித் தலைவியும், அவரது ஆட்சியும்
தமிழகத்தின் ஆயிரமாண்டுக் கனவுகள். அந்தக் கனவு இப்
போது நனவாகி இருக்கிறது. நல்லாட்சியாய் மலர்ந்திருக்கின்
றது. இந்த அவையை வணங்குகின்றேன். புரட்சித் தலை
வியின் பொன்னடியைப் போற்றுகின்றேன். என்னை உறுப்பின
ராகத் தேர்ந்தெடுத்த என் தொகுதி மக்கள் திசை நோக்கித்
தொழுகின்றேன். தொழில்கள் மற்றும் தொழில் வளர்ச்சி
குறித்த மூலதனம் பற்றிய இன்றைய மானிய கோரிக்கையில்
சில கருத்துக்களை உங்கள் முன் வைக்கின்றேன்.

தொழில் துறையில் தன்னிறைவு பெறுவதுடன் துரித முன்
னேற்றம் காண்பதற்கு அடிப்படையாகத் தேவைப்படும் மூலப்
பொருள்கள் மின்சாரமும் தண்ணீரும் ஆகும். மின் வசதி
யைத் தமிழகத்தில் பெருக்குவதற்குப் பல வழி முறைகளை மேற்
கொள்ளலாம். குறிப்பாக ஜெயங்கொண்டான் அனல் மின்
நிலையம், கூடங்குளம் அணு மின் நிலையம் ஆகியவற்றின்
அமைப்பு பணிகள் துரிதப்படுத்தப்படவேண்டும். சூரிய
சக்தியையும், காற்றழுத்தத்தையும் கொண்டு மின்சாரம் தயாரிக்
கும் திட்டம் இன்னும் அறிவியல் பூர்வமானதாக மாறி உற்
பத்திக்குப் பயன்பட வேண்டும். இன்னொரு கருத்தை இங்கே
வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். பம்பாய் கடலில் கிடைக்கும்
எரிவாயு தற்போது உத்திரப் பிரதேசத்துக்கு குழாய்களின்
மூலம் சென்று மின்சாரமாகப் பயன்படுகிறது. அந்த எரி
வாயுவின் ஒரு பகுதி குழாய்கள் மூலம் தென் மாநிலங்களுக்கும்
கிடைக்கச் செய்து அதிலிருந்து தொழில் துறைக்குத் தேவை
யான மின்சாரத்தைத் தயாரிக்க வேண்டும். தமிழக அரசு
இதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும். இந்த எரிவாயுப்
பரிமாற்றம் தேசிய ஒருமைப்பாட்டையும் வலிமைப்படுத்தும்.
தென் மாநிலங்கள் நான்கும் இதற்கான முயற்சியில் ஈடுபடுவதற்கு

[திருமதி வி.ஜி. மணிமேகலை] [1991 செப்டம்பர் 19

முன்னோடியாக புரட்சித் தலைவியின் முதல் முயற்சி அமைய வேண்டும் என்பதை இந்த அவையில் தெரிவித்துக் கொள்கிறேன். காவிரிப் படுகையில் கிடைக்கும் எரிவாயு தமிழகத்துக்கு தொழில் துறையில் முழுமையாகப் பயன்படுவதற்கு மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்த வேண்டும். கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிப்பது போன்ற முறைசாரா மின் உற்பத்தித் திட்டமும்—நான்—கன்வென்ஷனல் சோர்சஸ்—தொழில் வளர்ச்சிக்காக நடைமுறைக்கு வர வேண்டும்.

கழிவு நீரைச் சுத்திகரிப்புச் செய்வதன் மூலம் தொழிற்சாலைகளுக்குத் தேவையான தண்ணீரைப் பெற முடியும். சென்னை, திருச்சி, கோவை, மதுரை போன்ற பெரிய நகரங்களில் இவ்வாறு செய்வதன் மூலம் தொழிற்சாலைகளுக்குச் செல்லும் குடிதண்ணீர் மடை மாற்றப்பட்டு மக்களுக்குச் சென்று சேரும்படி செய்யலாம். கழிவு நீரை சுத்தம் செய்வது இன்னொரு பெரும் பயனையும் அளிக்கிறது. கொசு உற்பத்தி மிகக் கணிசமாக இதன் மூலம் குறைந்து விடுகிறது. எனவே, நல்வாழ்வு நோக்கிலும் இது உடனடியாகச் செய்ய வேண்டிய ஒரு பணியாக உள்ளது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

தொழிற்சாலைகளை அரசே நடத்தி இலாப நட்ட கணக்குப் பார்ப்பதில் ஒரு வரையறுத்த குறிக்கோளைக் கொண்டிருப்பது நல்லது. பலவகைத் தொழிற்சாலைகளைத் தொடங்கி, அதை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் சென்று தனியாரிடம் அத்தொழிலை வழங்கி உற்பத்தியைப் பெருக்க வேண்டும். தொழிற் போட்டியைத் தனியார் மேற்கொள்ளும் போது தான் உற்பத்தி பெருகும். பொருளின் தரம் கூடும்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களாக விளங்கும்—அக்ரோ பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ்—எண்ணெய்த் தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும். குறிப்பாக தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலைகள் நம் மாநிலத்தில் போதுமான அளவு இல்லை. எனவே, இங்குள்ள தவிடுகள் வெளி மாநிலத்திற்குச் சென்று மீண்டும் எண்ணெய்யாக நமக்கே விற்கப்படுகின்றன. இவை தவிர்க்கப்பட வேண்டுமானால் இத்தகைய தொழில்களை நாமே தொடங்க வேண்டும். விவசாயம் சார்ந்த தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்குப் பெண்களுக்கு முதலிடம் தருவதன் வாயிலாக அவர்களையும் தொழில் துறைக்குத் திசை திருப்பிட வழி பிறக்கும். நாகர்கோயில், கன்னியாகுமரி போன்ற இடங்களில் கூடுதலாகக் கிடைக்கும் ரப்பரைக் கொண்டு ரப்பர் தொழிற்சாலையை உயர் நிலையில் உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



1991 செப்டம்பர் 19] [திருமதி வி. ஜி. மணிமேகலை]

கடல்—கடலோரம் சார்ந்த தொழில்கள்—மெரையின் இண்டஸ்ட்ரீஸ்—இன்னும் கூடுதலாக வளம்பெற வேண்டும். குறிப்பாக, உப்பு உற்பத்தியில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். உணவுக்குத் தேவையான உப்பு மட்டுமல்லாமல், தொழிலுக்குத் தேவையான உப்பு வகைகளையும் தயாரிப்பதில் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். உப்பு தயாரிக்கப் பயன்படும் உவர் நீர்க்கழிவிலிருந்து கடல்சார் இரசாயனப் பொருட்கள் (மெரையின் கெமிக்கல்ஸ்) தயாரிப்பையும் ஊக்கப்படுத்தினால் வேறு பல தொழில்களுக்கும் அவை பயன்படும்.

கன்னியாகுமரி கடல்கரைப் பகுதியில் கிடைக்கும் மின்னும் வண்ண மணலைக் கொண்டு—"இல்லுமினைட் சாண்ட்"—பெரிய தொழிலை உருவாக்க வேண்டும் என்னும் பேச்சு கடந்த பத்தாண்டு காலமாகவே இருந்து வருகிறது. இத் திட்டம் மண்ணை வெட்டி பொன்னை எடுக்கும் திட்டம் இல்லை. மண்ணின் மேற்பரப்பிலேயே பொன்னை அள்ளும் திட்டமாகும். மணலின் மேற்பரப்பிலேயே பொன்னை அள்ளும் திட்டமாகும். இந்த மணலைக் கொண்டு டைடேனியம் டையாக்சைட் தயாரிக்கலாம். அட்டாமிக் எனர்ஜி, போர்த்தளவாட உற்பத்திக்கும் இத்தொழில் திட்டம் பயன்படும். கடந்த பத்தாண்டுகளாக காற்றோடு கலந்துவிட்ட இத்திட்டம் பற்றிய பேச்சு புரட்சித் தலைவியின் ஆட்சியில் புதிய வடிவமும் வேகமும் பெற்று நடைமுறைக்கு வரவேண்டும்.

பிற்பகல் 12-05

இவற்றோடு இன்னொரு கருத்தையும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். தொழில் துறையில் துரிதமாக வளர்ந்து வரும் சில மாநிலங்களில் அத்தொழில் வளர்ச்சிக்குரிய அடித்தளமாக "பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளக்ஸ்" இருந்து வருகிறது. தொழில் வளர்ச்சியின் முழுமையை, அடி முடியை நிர்ணயிக்கும் இத்தகைய 'காம்ப்ளெக்ஸ்' நமது ஆட்சிக் காலத்தில் தொடங்க வேண்டும் என்ற வேட்கையை வேண்டுதலாக முன் வைக்கின்றேன்.

இவ்வாறே நமது மாநிலத்தில் ஒரு சில இடங்களிலாவது கனரக பொறியியல் தொழிற்சாலை "ஹெவி இன்ஜினியரிங் இண்டஸ்ட்ரி" தொடங்க வழி வகைகாண வேண்டும். இதன் மூலம் நமது மாநிலத்திலிருந்து பிற மாநிலங்களுக்குச் செல்லும் கூடுதல் வரிப் பணத்தை இங்கேயே தக்க வைத்துக் கொண்டு, நம்முடைய மாநிலத்திற்கு வருமானத்தைப் பெருக்க வழிவகை செய்ய முடியும்.

நமது மாநிலத்தின் கனிம வளம் குறித்து ஓரிரு கருத்துக்களைக் கூற விரும்புகின்றேன். தமிழகத்தில் ஒரு சில கனிமங்களே கிடைத்தாலும் அவை உலகத் தரத்துக்கு மேம்பட்டதாக விளங்குகின்றன. குறிப்பாக கிராபைட் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சிவகங்கைப் பகுதியில் கிடைக்கும் கிராபைட்

கனிம படிவங்கள் உலகத் தரமுடையதாக விளங்குகிறது. இத்
தகைய தரம் வாய்ந்த கிராபைட் கனிம படிவங்கள் உலகில்
மூன்று இடங்களில் தான் கிடைப்பதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.
மடகாஸ்கர், இலங்கை, மற்றும் தமிழகம். இவற்றில் மடமான்
கரில் கிடைக்கும் கிராபைட் தீரும் நிலைக்கு வந்துவிட்டது.
இலங்கையில் கிடைக்கும் கிராபைட் தற்போதுள்ள சூழலில் எடுக்
கும் நிலையில் இல்லை. சிவகங்கையில் கிடைக்கும் கிராபைட்
இன்னும் எடுக்கப்படவே இல்லை. ஏறக்குறைய இருபது கிலோ
மீட்டர் நீளத்துக்கும், 300 அடி ஆழத்துக்கும் அகன்றும், ஆழ்ந்
தும் கிடக்கும் இக்கனிம வளம் பயன்பாட்டுக்கு வரும்போது,
தமிழகத்தில் உறுதியாகத் தொழிற்புரட்சி உருவாகிவிடும் என்
பதில் ஐயமில்லை. இந்தக் கிராபைட்டின் செதில் தன்மை
(பிளேக்ஸ்) உலகத் தரத்தில் முதலிடம் வகிக்கிறது. ஆகாய
விமான உறுப்புகள் (ஆரோ காம்ப்போனன்ட்ஸ்) பலவித உலோ
கங்களை உருக்கும் ராட்சச மூகைகள், விண்வெளித் துணைக்
கோளுக்குப் பயன்படும் பல்வேறு முக்கிய உறுப்புகள், அணுமின்
உலையின் (அட்டாமிக் ரியாக்டர்) அடித்தளங்கள் ஆகியவற்றிற்
குப் பயன்படும் கிராபைட் கனிமம் நம் கண் முன்வே கொட்டிக்
கிடக்கிறது. இந்தத் தொழிற்சாலையை நாம் என்ன விலை
கொடுத்தேனும் தொடங்கி விட்டால், உலகச் சந்தையில் கிரா
பைட்டைப் பொறுத்த வரையில் நாம் இட்டதே சட்டம். இத்
தொழிற்கூடம் தொடங்குவதற்கான உத்தரவை, மாண்புமிகு
புரட்சித் தலைவரின் பெரு முயற்சிக்குப் பின், 1987 ஆம் ஆண்டி
லேயே மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்கியுள்ளது. மறைந்த
மாணிக்கம், மக்களின் ஆன்மாவாக விளங்கிய முன்னாள் பாரதப்
பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் 1988 ஆம் ஆண்டு
அக்டோபர்த் திங்கள் 26 ஆம் நாள் இத் திட்டத்திற்கான
தொடக்க விழாவில் அடிக்கல் நாட்டி ஒரு பேருரை நிகழ்த்தினார்.
அவர் உரையின் ஒரு முக்கியப் பகுதியை இங்கே குறிப்பிட
விரும்புகிறேன்.

"This project, on implementation, shall sow the seed for the second industrialisation of the country"

அதாவது, தகுந்த தொழில் நுணுக்கங்களினால், இத்திட்டத்தை
பயன்படுத்தினால், நாட்டின் இரண்டாவது தொழிற் புரட்சிக்கு
வித்திடும் என்று முழக்கமிட்டார். ஆகவே, தகுந்த தொழில்
நுணுக்கமுள்ள நிபுணர்களைக் கொண்டு இந்த கிராபைட்
தொழிற்சாலையைத் தொடங்கி சுத்திகரிப்புப் பணியை மேற்
கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சுத்திகரிக்கப்பட்ட கிராபைட்டைக் கொண்டு பலதரப்பட்ட
சார்பு தொடர் திட்டங்களையும் (டவுன்ஸ்ட்ரீம் புராஜக்ட்ஸ்)
ஏற்படுத்த வேண்டும். மத்திய அரசின் கொள்கைக்கும், கோட்
பாட்டுக்கும் உட்பட்டு வெளிநாட்டு நிறுவனங்களின் நிதி உதவி
யுடன், — joint ventures involving foreign equity participation





ஆகவும், இதை அமைக்கலாம். சுருங்கக் கூறுவதாயின் முழு நிறை
வுடைய தொழிற்சாலையாக இதை உருவாக்கி, கிராபைட்
கழகம் (கிராபைட் கார்ப்பரேஷன்) ஒன்று தனியாக ஏற்படுத்த
வேண்டும்.

இவ்வாறே சேலத்து மக்களுக்கும் சேலம், நாமக்கல்
மாவட்டத்து குவார்ட்ஸ், பெல்ஸ்பார் கனிமங்களும் உலகத் தரம்
வாய்ந்தவையாகும். அவற்றையும் தக்க முறையில் பயன்படுத்தி
அரசுத் துறையோ, தனியார் துறையோ, அல்லது இருவரும்
சேர்ந்தோ, தொழிற்சாலைகளைத் துவக்க வேண்டும்.

உலகச் சிறப்பு வாய்ந்த கிரானைட் படிவங்களைக் கொண்டு,
கிரானைட் ஓடுகள் தயாரிக்கும் தொழிற்சாலையைத் திறந்து
வைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி,
அவர்கள் பாராட்டில் பேசும் போது, "இந்தியாவிலேயே தமிழ
கத்தை தலை சிறந்த தொழிற்துறை மாநிலமாக மாற்ற வேண்
டும்" என்று குறிப்பிட்டார். அவருடைய இலட்சியத்தை நிறை
வேற்ற நாம் அனைவரும் ஒன்றுபட்டுக் குரல் கொடுப்போம்.

அவரைப் போல் இவர், இவரைப் போல் அவர் என்றில்லாமல்,
இவரைப் போல் எவர்? என்று கூறும் அளவிற்குப் புரட்சித்
தலைவியின் தன்னிகரில்லாத் தலைமை ஓங்க வேண்டும் என்று
வேண்டி, அருப்புக்கோட்டைத் தொகுதியின் சட்டமன்ற
உறுப்பினர் என்ற வகையிலே
God knows his creations better than you and me

என்ற வகையிலே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்
களுக்கு அருப்புக்கோட்டைத் தொகுதியில் உள்ள திருச்சுழி
ஒன்றியம் it has become a Backward Taluk என்ற
வகையிலே அவர்கள் ஏதாவது ஒரு தொழிற்சாலையைக் கொடுத்
திட வேண்டும் என்று மிகப் பணிவன்போடு கேட்டு, என்
உரையை நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். திருநாவுக்கரசு.

*திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழ்நாட்டில், நல்ல தொழில் அமைதியையும்,
என்ஜினியரிங் மற்றும் பாலிடெக்னிக் போன்ற கல்லூரிகளில்
இருந்து சுமார் ஆண்டுதோறும் 40 ஆயிரம் பேர்கள் தொழில்
நுட்ப அறிவோடு வெளி வரக்கூடிய இளைஞர்களையும், தேவை
யான அடிப்படை வசதிகளையும் பெற்றிருக்கின்ற மாநிலமாக
தமிழ்நாடு தொடர்ந்து பல ஆண்டுகளாக விளங்கி வருகிறது..

பிற்பகல் 12-10

தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்திய அளவிலே
தமிழ்நாடு எத்தனையாவது இடத்திலே இருக்கிறது என்றால்,
முதலாவது இடத்திலே, இரண்டாவது இடத்திலே, மூன்றாவது

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1991 செப்டம்பர் 19

இடத்திலே, ஏழாவது இடத்திலே, பதின்மூன்றாவது இடத்திலே
என்று ஒவ்வொரு ஆண்டும், எதிர்க்கட்சிகளின் சார்பிலே பல்
வேறு விதமான கருத்துக்கள் சொல்வதும், இல்லையில்லை தமிழ்
நாடு சிலவற்றிலே இரண்டாவதில், மூன்றாவதில், இருக்கிறது
என்கிற பதிலை நானும் தொழிலமைச்சராக இருக்கின்றபோது
தொடர்ச்சியாக 4, 5 ஆண்டுகள் இந்த சட்டமன்றத்திலே
பதிவேடுகளில் ஒரு ஆதாரத்தோடு சொல்லியவன் என்கிற அடிப்
படையிலே இன்றைக்கு தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சியை
உண்மையிலே மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற
போது, தமிழ்நாடு ஒன்றும் பாதிப்பான நிலையிலே இல்லை
என்பதுதான் யதார்த்தமான உண்மையாகும். மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பதைப் போல இந்தி
யாவிலே தமிழ்நாடு தொழிற் துறையிலே நிச்சயமாக முதல்
இடத்திற்கு வரமுடியும். அதற்கான வாய்ப்புக்கள் நிச்சயம்
இருக்கின்றன. நமக்கு இருக்கின்ற பற்றாக்குறைகள் இரண்டே
இரண்டுதான். ஒன்று மின்சாரம், இன்னொன்று மத்திய அரசு
தொழிற் துறையிலே செய்கிற முதலீடு கடந்த பல ஆண்டுகளாக
தமிழகத்திற்குக் குறைந்து வருவது. தமிழக அரசு என்னதான்
முயற்சிகளை மேற்கொண்டாலும், தமிழகத்திலே இருக்கின்ற
நிதியாதாரங்களுக்கு உட்பட்டுத்தான் தொழில் துவங்குகிறவர்
களுக்கு கடன் உதவிகளோ மற்ற வசதிகளோ செய்ய முடியும்.
ஆனால், மத்திய அரசு ஒரேயொரு தொழிலை ரூபாய் 400 கோடி,
ரூபாய் 500 கோடி என்கிற அளவிலே துவங்குவதன் மூலம் அந்த
மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சியை மற்ற மாநிலங்களோடு
ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது பல மடங்காக உயர்கின்ற வாய்ப்பு
இருக்கிறது. கடந்த காலங்களிலே மத்திய அரசினுடைய
தொழில் முதலீடு தமிழகத்தைப் பொறுத்தவரையில் 4 சதவீத
மாக ஒவ்வொரு ஆண்டும் குறைந்து கொண்டிருக்கிறது என்று
தமிழக அரசின் சார்பிலே ஒவ்வொரு தடவையும் சுட்டிக்காட்டி
யிருக்கிறோம். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
மத்திய அரசை வற்புறுத்துவது நியாயமான ஒன்று. அது கட்சி
களுக்கு, கட்சி உணர்வுகளுக்கு அப்பாற்பட்டது. தமிழ்நாட்டில்
இருக்கிற எல்லோரும் மத்திய அரசினுடைய தொழில் முதலீடு
தமிழகத்திற்கு அதிகரிக்கப்படவேண்டுமென்று மத்திய அரசை
வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழ்நாட்டைப்
பொறுத்தவரை மத்திய அரசிடத்திலே ஒரு " பெட்ரோ
கெமிக்கல்ஸ் காம்ப்ளக்ஸ் " ஆரம்பிக்க வேண்டுமென்று பல
ஆண்டுகளாக வற்புறுத்தி வருகிறோம். இப்போது தஞ்சாவூரிலே
அதற்கான வாய்ப்பு இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் ஒரு
பெட்ரோ கெமிக்கல்ஸ் காம்ப்ளக்ஸ் ஆரம்பித்தால், அதற்காக
ரூபாய் 1,000 கோடி ஆகும். சாதாரணமாக, ரூபாய் 1,000
கோடியில் ஒரு பெட்ரோ கெமிக்கல்ஸ் காம்ப்ளக்ஸ் ஆரம்பிக்கிற
போது அது தஞ்சை மாவட்டத்திற்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டி
னுடைய தொழில் வளர்ச்சி அதனாலே மேம்படுகிற வாய்ப்பு
ஏற்படும். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்த
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 19] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

அதேபோல் பல்லாண்டுகாலமாக சேலத்திலே இருக்கிற ஆலை
அது வெறும் ரோலிங் மில்லாகத்தான் இருக்கிறது. உருட்டு
ஆலையாக இருக்கிறது. சேலத்திலே இருக்கின்ற அந்த ஆலையை
உருக்கு ஆலையாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை தமிழக
அரசு பல்லாண்டுகாலமாக வற்புறுத்தி வருகிறது. ஆனால்
மத்திய அரசு இதுவரை அதைக் காதிலே போட்டுக் கொள்ள
வில்லை. அதையும் தமிழக அரசு வற்புறுத்த வேண்டும். மத்திய
அரசு செய்ய வேண்டும்.

அதுபோன்று இந்துஸ்த்தான் போட்டோ பிலிம்ஸ் தொழிற்
சாலை என்பது ஊட்டியிலே இருக்கிறது. அது கலர் பிலிம்ஸ்
தயாரிக்கின்ற தொழிற்சாலையாக மாற்றப்பட வேண்டுமென்ற
கோரிக்கையை பல ஆண்டுகளாக தமிழகத்தின் சார்பில் வற்
புறுத்தி வருகிறோம்.

அதுபோன்று நீங்களும் 7, 8 தொழில்களை மத்திய அரசின்
சார்பிலே தமிழகத்திலே தொடங்கவேண்டுமென்று வற்புறுத்தி
இருக்கின்றீர்கள். அத்தோடு சேர்த்து இவற்றை எல்லாம் மத்திய
அரசு கவனிக்குமேயானால் நிச்சயமாக தமிழ்நாட்டிலே தொழில்
வளர்ச்சி அதிகமாகின்ற வாய்ப்பு உறுதியாக இருக்கிறது.
அதுபோன்று மின்சாரத்தைப் பொறுத்தவரையில், மின்சார
உற்பத்தியிலே தனியார்களையும் பங்கு பெற வைக்கின்ற, அவர்
களை உற்சாகப்படுத்துகின்ற அந்தக் கொள்கை முடிவை ஏற்
கெனவே புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் அரசு
எடுத்து இருந்து. அந்த வகையிலே இன்றைக்கு இருக்கிற
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எடுத்து, தனியார்களை
உற்சாகப்படுத்துவது பாராட்டுக்குரியது. ஆனால் மின் உற்பத்தி
யிலே தனியார்கள் எவ்வளவு தூரம் வருவார்கள் என்பது சந்
தேகத்திற்குரியது. ஏனென்றால், அரசாங்கத்தாலே முடியாத
போது, எவ்வளவு தனியார்கள் மின்சார உற்பத்திக்கு முதலீடு
செய்ய தமிழ்நாட்டிலே முன்வந்திருக்கிறார்கள், வருவார்கள்
என்பது எல்லாம் சந்தேகததிற்குரிய ஒன்று. அப்படி யாராவது
முன் வந்தால் அவர்களை உற்சாகப்படுத்தலாம்.

பிற்பகல் 12-15

ஆனால் இதிலே, தனியார்களை நம்புவதைவிட, அரசுதான்
இதில் முக்கிய கவனம் செலுத்தி மின் உற்பத்தியைப் பெருக்குவ
திலே கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால், மின்சாரம்
தான் பேசிக்கான, அடிப்படையான முதல் தேவையாகும்
தொழில் உற்பத்தியைப் பொறுத்தவரை. எனவே, மின் பற்றாக்
குறை இருக்கிற இந்தச் சூழ்நிலையில் தொழிலைப் பொறுத்த
வரையில் மின்சாரத்தை அதிகமாக உபயோகப்படுத்துகிற தொழிற்
சாலைகளுக்கு முன்னுரிமை கொடுத்து சலுகைகள் வழங்குவதற்குப்
பதிலாக, எலக்ட்ரிகல்ஸ், எலக்ட்ரானிக்ஸ் போன்ற தொழில்
களுக்கு, மின்சாரத்தை அதிக அளவிலே பயன்படுத்தாத

தொழிற்சாலைகளுக்கு தமிழ்நாட்டிலே முக்கியத்துவம் கொடுத்து. அந்தப் பிரிவுகளைக் கண்டறிந்து அவற்றிற்கு அதிகமான சலுகை களையும், உதவிகளையும் வழங்கினால், தொழில் வளர்கின்ற வாய்ப்பும் இருக்கிறது. மின்பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட ஒரு சூழ்நிலையும் ஏற்படும்.

அரசின் சார்பிலே சில கொள்கை முடிவுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொழில் அமைச்சர் என்ற முறையில் அறிவித்திருப்பதை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். உதார ணத்திற்கு 100 கோடிக்கு மேலே தொழில் முதலீடு செய்து துவங்கினால் அவர்களுக்கு 50 இலட்சம் ரூபாய். அதேபோல 50 கோடியிலிருந்து 100 கோடி வரையில் தொழில் துவங்கினால் அவர்களுக்கு 25 இலட்சம் ரூபாய் என்று இது போன்ற அறிவிப்பு கள் வரவேற்பிற்குரியது. அது மட்டும் அல்லாமல் இது பெரிய தொழில்களுக்கு உதவியாக இருக்கும் என்பது உண்மைதான். ஆனால் அதே நேரத்தில் சிறிய நடுத்தர தொழிற்சாலைகள் துவங்கப்படுவதற்கும் தனியாக இதுபோன்ற உதவிகளைச் செய் வதற்கு அரசு யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு பட்டதாரிகள் பி.இ., பி.டெக். பாலிடெக்னிக்குகள் இதுபோன்ற கல்லூரிகளிலே படித்து விட்டு வருகிற அந்த மாணவர் களுக்கு. இளைஞர்களுக்கு அவர்கள் தொழில் துவங்குகிறபோது அவர்கள் முதலீடு செய்ய வேண்டிய மூலதனப்பங்கிலே அல்லது பங்கைக் குறைத்தோ அல்லது அரசின் சார்பிலே அவர்களுக்கு ஊக்கத்தொகையாகத் தந்தோ அவர்களுக்கு உதவி செய்வதற்கு அரசு யோசிக்க வேண்டும். ஏனென்று சொன்னால் நான் ஏற் கெனவே சொன்னதைப்போல ஆண்டுதோறும் சுமார் 40 ஆயிரம் பேர்கள் தொழில் நுட்பங்களில் படித்து வந்த இளைஞர்கள் வெளியிலே வருகிறார்கள். அவர்கள் தொழிற்சாலைகளிலே போய் வேலை கேட்டு அலைகிறார்களே தவிர தொழில் துவங்க முன் வருவதில்லை. படித்துவிட்டு வருகிற அந்த இளைஞர் களுக்கு தொழில் துவங்க அரசாங்கம் உதவி செய்ய வேண்டும். ஏனென்றால் படித்துவிட்டு வருகின்றவர்கள் அவ்வளவு பெரும் வசதியானவர்கள் அல்ல. படிப்பதற்கே சிரமப்பட்டுப் படித்தவர் களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு உற்சாகம் கொடுக்க வேண்டும். அவர்கள் தனியாகத் தொழில் துவங்குவார்களேயா னால், வேலை கேட்டு அலையாமல் அவர்களே பத்து பேருக்கு வேலை வாய்ப்பைத் தருகிற அடிப்படையில் தொழில் நுட்ப அறிவு படைத்தவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே அதிலே தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மிகவும் பின்தங்கிய பகுதியிலே ஏற்கெனவே இருந்த மூலதன உதவித் தொகையை 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக உயர்த்தி இருப்பது பாராட்டுக்குரியது. அதை 15 இலட்சம்





ரூபாயிலிருந்து 20 இலட்சமாக உயர்த்தியிருக்கிறீர்கள். அதை யும் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். ஏனென்றால் தொழில் களைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களிலே எல்லாம் அதிகமாக உதவி செய்கிறார்கள். இன்று கூட நமது நிதி அமைச்சர் சுட்டிக்காட்டியது போல—நான்கூட தொழில் அமைச்சராக இருந்தபோது பம்பாய்க்குச் சென்று மகாராஷ்டிர மாநிலத்திலே இருந்த தலைவர்களையெல்லாம் சந்தித்துப் பேசி னோம். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் கூட அமெரிக் காவிற்கு அனுப்பினார்கள். அங்கே வெளிநாட்டிலே வாழுகின்ற இந்தியர்களைச் சந்திப்பதற்காக சென்றிருந்தோம். அங்கெல்லாம் தொழில் முனைவர்களை உற்சாகப்படுத்துகின்ற விதத்திலே நிறைய உதவிகளைச் செய்கிறார்கள். மற்ற மாநிலங்களிலே அதிகமாக உதவிகளைச் செய்கிறார்கள். பம்பாய் போன்ற மாநிலங்களில் அதிகமாக அவர்களை அட்ரேக்ட் பண்ணுகிறார்கள். பல்வேறு திட்டங்களை அரசின் சார்பிலே அளிக்கிறார்கள். நான் நம்முடைய முதல்வர் அவர்களைக் கூட கேட்டுக் கொள்கி றேன். நீங்களும் ஒரு தடவை — ஏனென்றால் தமிழ்நாட்டிலே தொழிலை துவங்கக்கூடிய அதிகமான வசதி படைத்தவர்கள் இடையாது. இருக்கின்றவர்களில் சிலபேரும் ஏற்கெனவே தொழில் நடத்தி வருகின்றவர்கள். அவர்கள் தான் விரிவாக்கமும் செய்கிறார்கள். இது தவிர தமிழ்நாட்டிலே தொழில்களிலே முதலீடு செய்கிற மனோபாவம் வசதி படைத்தவர்களுக்குக் கூட இருப்பதில்லை. வசதி உள்ளவர்கள் இடம் வாங்குவார்கள், வீடு வாங்குவார்களே தவிர தொழில் துவங்குவதற்கோ அல்லது ரிஸ்க் எடுத்துக்கொள்வதற்கோ தமிழ் நாட்டு மக்களுக்கு எண்ணம் ஏற்படாது. மற்ற மாநிலங்களோடு, பஞ்சாப், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது இதுதான் நிலை . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒதுக்கப்பட்டது 7 நிமிடம். நீங்கள் அதிகமாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள் . . . .

பிற்பகல் 12.20

திரு. எஸ். திருநாவுக்கரசு : எனவே, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களுக்குச் செல்ல வேண்டும், அங்கேயிருக்கின்ற தொழிலதிபர்களை சந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கி றேன். இன்னும் சொல்லப் போனால் வெளிநாடுகளுக்கு அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று அங்கு வாழுகின்ற இந்தியர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டில் அவர்களுக்குத் தரப்படு கிற சலுகைகளை வசதி வாய்ப்புக்களை விளக்கினீர்களானால் நிச்சயமாக பலபேர் தொழில் துவங்க முன் வருவார்கள். சென்ற ஆட்சி இருந்தபோது ஏற்பட்ட ஒரு குழப்பத்தால் வெளிநாட்டிலே வாழுகின்ற இந்தியர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து தொழில் துவங்க அதிகமாகப் பயப்படுகிறார்கள். ஏனென்றால் ஒரு அரசாங்கம் இருக்கிறபோது சில உதவிகளைத் தருகிறோம். இன்னொரு அரசாங்கம் வந்து அவை அனைத்தை ரத்து

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1991 செப்டம்பர் 19

செய்யும். இப்படி மாறி மாறி வருகின்ற காரணத்தினாலே
அவர்களுக்கு ஒரு காரண்டி இல்லாத சூழ்நிலை இருக்கிறது.
எதை நம்பி, எந்த அரசாங்கத்தை நம்பி நாம் அங்கு போய்
முதலீடு செய்வது என்று வெளிநாட்டிலே வாழ்கின்ற இந்தியர்
கள் பயப்படுகிறார்கள். எனவே அது போன்ற ஒரு சூழ்நிலை
இல்லாமல் தமிழக அரசு காரண்டி கொடுக்குமேயானால் வெளி
நாட்டில் வாழ்கின்ற இந்தியர்கள் நிச்சயமாக பல பேர்
தமிழ்நாட்டிலே தொழில் துவங்குவதற்கு முன் வருவார்கள்.
அப்படி முதலமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்வேன்.

இதிலே டிட்கோவின் சார்பிலே ஏறக்குறைய 9 தொழில்கள்
சுமார் 600 கோடியிலே துவங்கப்படவுள்ளது வருகின்ற ஆண்டு
களிலே. ஒவ்வொரு கொள்கை குறிப்பிலேயும் இருப்பதைப் பற்றி
அதிகமாக விளக்க வேண்டியதில்லை என்று நினைக்கிறேன்.
இதிலே ஒரே ஒரு திட்டம் மிகவும் பாராட்டுக்குரிய திட்டம்.
புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆருடைய காலத்திலே தமிழ்நாடு
செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பிலே ஒரு தொழிற்
சாலையைப் புகளூரிலே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆரம்
பித்தார். ஆரம்பிக்கின்றபோது பலரும் அன்றைக்கு புரட்சித்
தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை விமர்சனம் செய்தார்கள்.
இந்தத் தொழில் வெற்றி பெறுமா, கரும்புச் சக்கையிலிருந்து
காகிதம், பத்திரிக்கைத் தாள்கள் செய்ய முடியுமா இந்த டெக்
னாலஜி இந்தியாவிலே வெற்றி பெறுமா என்றெல்லாம் அன்
றைக்குப் பலவிதமான சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. அந்தத்
திட்டமே கூட பல்வேறு வகையாகக் குறை கூறப்பட்டது.
அந்த பைலட் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி முதல் காகி
தம் எடுக்கப்பட்டபோது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்
கள் என்னை அன்றைக்கு அமெரிக்காவுக்கு ஒரு மாத காலம்
அனுப்பியிருந்தார்கள் அந்த இயந்திரத்தை எல்லாம் பார்த்து
விட்டு வருவதற்காக. எனவே அந்தத் தொழில் துவங்குவதற்கு
அதோடு சம்பந்தப்பட்டவன் என்கிற முறையிலேயும், சென்ற
ஆண்டு 1991-92-லே இந்த நிறுவனம் — செய்தித்தாள் நிறு
வனம் ஏறக்குறைய 362 கோடி ரூபாய் லாபம் ஈட்டியுள்ளது
என்கின்ற செய்தி மகிழ்ச்சிக்குரிய செய்தி, பாராட்டுக்குரிய
செய்தி, அதனுடைய உற்பத்தி மடங்கு, இரண்டு மடங்காக
ஆக்கப்படுவதற்காகத் திட்டம் வகுக்கப்பட்டு அதற்காக 354
கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள், அதைப் பாராட்டு
கிறேன்.

அது போல இந்தத் திட்டம் மட்டுமல்லாமல் தென்னாற்
காட்டிலே இது போல இன்னொரு நியூஸ் பிரிண்ட் தொழி
சாலை ஒன்று ஆரம்பிப்பதற்காக, ஆயிரம் கோடி ரூபாயிலே
ஒரு இலட்சம் டன் எழுத்துத் தாளும், காகிதத் தாளும் தயா
ரிக்கின்ற ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்காக மத்திய
அரசிடமிருந்து உரிமம் பெற்றிருக்கிறீர்கள். எனவே இந்



1991 செப்டம்பர் 19] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

இந்தியாவிலே வேறெங்கும் இல்லை. ஏற்கனவே இந்தத்
திட்டம் வெற்றி பெற்றிருக்கிறது. லாபம் தருகிறது என்ற
அடிப்படையிலே தென்னாற்காட்டிலே ஆரம்பிக்கின்ற இந்தத்
திட்டமும் வெற்றி பெரும் என்ற நம்பிக்கையோடு நீங்கள் துவங்க
வேண்டும். அப்படித் துவங்க இருப்பதை மனப்பூர்வமாகப்
பாராட்டுகிறேன்.

டி.ஐ.ஐ.சி. பொறுத்தவரைக்கும், தமிழ்நாடு தொழில்
முதலீட்டுக் கழகம் பொறுத்தவரைக்கும் ஏற்கனவே கடன்
வழங்குவது எல்லாம் சென்னையில் தான் இருந்தது. புரட்சித்
தலைவர் எம்.ஜி. ஆருடைய ஆட்சிக்காலத்திலேதான் மாவட்ட
அளவிலே, ரீஜினல் அளவிலே கடன் வழங்கி சிறிய, நடுத்தர
தொழிலதிபர்கள் எல்லாவற்றிற்கும் சென்னைக்கு வந்து அலை
யாமல் கடன்களை, இப்போது 5 இலட்சம் கடன் என்றால்
அதற்கும் சென்னைக்குத்தான் வர வேண்டும் என்றில்லாமல்
அந்தந்த மாவட்டத்தில் இருக்கின்ற டிஸ்ட்ரிக்ட் லெவலில்
இருக்கின்ற டி.ஐ.ஐ.சி ஆபிசிலே, அது போல ரீஜினல் ஆபிசிலே
கடன் வழங்குகின்ற அதிகாரத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.
ஆருடைய அனுமதியோடு பரவலாக்கினோம். நான் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன், அந்த அளவை
அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அதாவது டிஸ்ட்டிரிக்ட் லெவலிலே தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல்
இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் மூலமாகக் கொடுக்கப்
படுகின்ற அளவு, அதே போல ரீஜினல் அளவிலே கடன் அளவு,
இந்த அளவுகளை அதிகப்படுத்த வேண்டும். அதை அதிகப்படுத்து
கின்றபோது, சிறிய, நடுத்தர தொழிலதிபர்கள் எல்லாவற்றிற்கும்
சென்னைக்கு வந்து அலையாமல் மாவட்ட அளவிலே ரீஜினல்
அளவிலே அவர்கள் கடன் பெற அது உதவியாக இருக்கும்.

அதேபோல சிப்காட் மூலமாக தொழிற்பேட்டைகள்
துவங்குகின்றோம். காங்கிரஸ் காலத்திலே 20 ஆண்டுக் காலத்திலே
ஒசூரிலே மட்டும் ஒரே ஒரு தொழிற்பேட்டை துவங்கப்
பட்டது. தி.மு.க ஆட்சிக் காலத்திலே 10 ஆண்டுகளிலே ராணிப்
பேட்டையிலே மட்டும் ஒரே ஒரு தொழிற் பேட்டை துவங்கப்
பட்டது. புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆருடைய ஆட்சிக்
காலத்திலே 5 தொழிற் பேட்டைகள் ஒரே ஆண்டிலே 5 மாவட்
டங்களிலே துவங்கப்பட்டன. நான் மாண்புமிகு முதலமைச்சரைக்
கேட்டுக் கொள்வேன், இந்த ஆண்டுகூட நீங்கள் 3 இடங்களிலே
அனுமதித்து இருக்கிறீர்கள். வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. சுதர்சனம்.

திரு. டி. சுதர்சனம் : பேரவைத் தலைவர் அவர்களே,
காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஒரே ஒரு தொழிற் சாலைதான்
துவங்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். கிண்டியிலே இருக்கின்ற
தொழிற்பேட்டையும், அம்பத்தூரிலே இருக்கின்ற தொழிற்
பேட்டையும் யார் காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சிப்காட்டின் சார்பிலே சொல்கிறார்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இண்டியிலே இருப்பது எல்லாம் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரியின் சார்பிலே சிறிய தொழிற்பேட்டையாக ஆரம்பிக்கப் பட்டது. சிப்காட் மூலமாக 500 ஏக்கர் ஆயிரம் ஏக்கர் எடுத்து முதல் பெரிய தொழிற்பேட்டை ஓசூரிலே ஆரம்பிக்கப்பட்டது. அது ஒன்றே ஒன்று தான் ஆரம்பிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வேன், மாவட்டந் தோறும்—எல்லாவற்றிற்கும் 2,000 ஏக்கர் தான் வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஒவ்வொரு மாவட்டத்திலேயும் அங்கங்கே ஒரு தொழில் கல்ச்சர் வளர வேண்டும். பல பேர் முன்வர வேண்டுமென்று சொன்னால், ஒவ்வொரு டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸிலேயும் நிச்சயமாக 200 ஏக்கரோ, 300 ஏக்கரோ, 500 ஏக்கரோ எடுத்து—அங்கங்கே சிப்காட் மூலமாக ஒரு தொழிற்பேட்டை எல்லா மாவட்டத்திலேயும் நிறுவ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்வேன். 2,000 ஏக்கர், 3,000 ஏக்கர் என்று போகிறபோதுதான் அதிகமான முதலீடு அதற்குத் தேவைப்படுகிறது. 200 ஏக்கர் இருந்தால்கூட போதும். ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலேயும் 200 ஏக்கர் எடுத்து அதற்கு பவர் கனெக்ஷன் கொடுத்து, ரோடு மற்றும் லேண்ட் எல்லாம் நீங்கள் டெவலப் பண்ணிக் கொடுக்கின்றபோது அந்தந்த மாவட்டத்தில் இருக்கின்ற தொழிலதிபர்கள் ஆங்காங்கே தொழில் துவங்க முன் வருவார்கள். இது ஒன்று.

பிற்பகல் 12-25

இரண்டாவது ஒவ்வொரு தாலுக்கா தலைமையிடத்திலேயும்—மீந்தங்கிய தாலுக்காக்களிலே 100, 110 தாலுக்காக்களை எடுத்து நீங்கள் அதற்கு உதவித் தொகை வழங்குகிறீர்கள். இருக்கிற எல்லா தாலுக்கா தலைமை நகரங்களிலும் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் சார்பிலே, சிறு தொழில் சார்பிலே சிறு தொழில் பேட்டைகள், சிறு தொழில் கூடங்கள் எல்லா தாலுக்கா தலைமை நகரங்களிலும் இருக்குமானால் தமிழ்நாடு முழுவதும் அது வளர்வதற்கு நிச்சயமாக உதவியாக இருக்கும் என்ற அடிப்படையிலே அதையும் பரிசீலனை செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடிக்கவும்.





திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, தமிழ்நாடு சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய 31 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. இதிலேகூட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே கூட்டுறவுத் துறையிலே சர்க்கரை ஆலைகள் ஆரம்பிக்கப்பட்டன. தனியார் துறையிலேயும் ஆரம்பிக்க அனுமதிக்கப்பட்டது. அதற்கு அடுத்து தி.மு.க. ஆட்சி வந்தபோது அந்த ஆட்சியிலே தனியார் துறைக்கு சர்க்கரை ஆலைக்கு அனுமதி கொடுப்பது இல்லை என்று ஒரு கொள்கை முடிவு எடுத்து அது நிறுத்தப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அது குறித்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலே இருந்த மாதிரி தனியார் சர்க்கரை ஆலை துவங்க அனுமதிக்கலாம். அதிலே ஒன்றும் தவரு இல்லை. ஏன் என்றால் மத்திய அரசுதான் லைசன்ஸ் தருகிறார்கள். மத்திய அரசுக்கு மனுச் செய்கிற போது அவர்கள் மாநில வாரியாகக் கொடுக்கிறார்கள். இந்த ஆண்டுக்கு மகாராஷ்டிராவுக்கு இரண்டு சர்க்கரை ஆலைகள், தமிழ்நாட்டிற்கு ஒன்று என்று இப்படி மாநில வாரியாக ஒதுக்குகிறபோது நாம் கூட்டுறவுத் துறையிலே இரண்டு கேட்டு இருப்போம் அல்லது நான்கு கேட்டு இருப்போம்; ஒன்றுதான் தருவார்கள். மகாராஷ்டிராவில் கூட்டுறவுத் துறையின் சார்பிலே 4 கேட்டு இருப்பார்கள். அவர்களுக்கு ஒன்று கொடுப்பார்கள். ஆனால் தனியார் சார்பிலே 8 கேட்டு இருப்பார்கள் அதிலே 4 கொடுத்து விடுவார்கள். அதனால் நிச்சயமாக விவசாயிகள் நன்மை அடைகிறார்கள். ஒரு சர்க்கரை ஆலை வருகிறபோது அந்த மாவட்டத்தினுடைய 'மேப்' மாறி விடுகிறது. ஏன் என்றால் ஆயிரம் பேருக்கு நேரடியாக வேலை; ஆயிரம் பேருக்கு மறைமுகமான வேலை, அந்தப் பகுதியில் சாலை வசதி, மருத்துவ வசதி இப்படி பல்வேறு விதமான வசதிகள்; ஒரு சர்க்கரை ஆலையால் ஒரு மாவட்டத்தினுடைய மேப்பே மாறிவிடுகிறது. ஆகவே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், ஏற்கனவே மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே இருந்ததுபோல் கூட்டுறவுத் துறையிலும் ஆரம்பியுங்கள். தனியார் துறையிலும் யாராவது மனுச் செய்தால் அவர்களுக்கும் தமிழ்நாடு பரிந்துரை செய்ய வேண்டும். அதிலே ஒன்றும் தவறு இல்லை. நான் சென்ற கூட்டத் தொடரில்கூட சென்ற ஆட்சியின்போதுகூட பேசினேன். ஆனால் அது ஏதோ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே தனியாருக்குக் கொடுத்தார்கள், இப்போது நிறுத்தி விட்டோம்; கூட்டுறவுத் துறையிலேதான் செய்கிறோம் என்ற அடிப்படையிலே ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்பதற்காக அன்றைக்கு ஒரு முடிவு அறிவிக்கப்பட்டது. அதிலே மாறுதல் செய்யப்படவில்லை கடைசி வரையில். எனவே கூட்டுறவுத் துறையின் சார்பில் சர்க்கரை ஆலை ஆரம்பிக்கலாம், தனியார் துறையின் சார்பிலும் ஆரம்பிக்கலாம் என்கிற கொள்கை முடிவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1991 செப்டம்பர் 19

தால் அதனால் தமிழ்நாட்டுக்குக் கூடுதலாக சர்க்கரை ஆலைகள் கிடைக்கும். தமிழ்நாட்டில் இருக்கிற விவசாயிகளுக்கு நெல்லினால் எந்தவிதமான நன்மையும் கிடையாது. எந்தவிதமான வருமானமும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடித்து விடுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : ஒரே ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தான் அதிகமான நேரம் எடுத்து இருக்கிறீர்கள். நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். இங்கே எல்லோரும் ஒத்துழைக்கிறார்கள். நீங்கள் மட்டும் ஒத்துழைக்கவில்லை என்றால் எப்படி ? இது நல்லது இல்லை.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் ஒவ்வொரு டிமாண்டிலும் பேசுவது கிடையாது. இன்று மாலையில் கூட........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த மாதிரி அனுமதிப்பது இல்லை. நான் முதலிலே சொன்னது-யாராவது 3 பேர்தான் பேசுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் எல்லோரும் பேச வேண்டும் என்று வாய்ப்புக் கேட்டீர்கள். ஏதோ 5 நிமிடத்தில் பேசி விடுகிறோம் என்று சொன்னீர்கள். சரி 7, 7 நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். எல்லோரும் ஒத்துழைக்கிறார்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, தயவு செய்து பேசி விடுகிறேன். சண்டை வேண்டாம் உங்களோடு. 2 நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து முடியுங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : முடித்து விடுகிறேன் சார், விட்டால்தானே முடிப்பதற்கு. 2 நிமிடங்கள் விடுங்கள்.

எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அன்போடு இன்னும் ஒன்று. இந்தக் கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில் அறந்தாங்கியில் ஒரு கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலே அனுமதி வழங்கப்பட்டது. அது கொள்கைக் குறிப்பிலே வந்திருக்கிறது. ஆனால் சென்ற தடவை ஆட்சியிலே அந்த இடம் அறந்தாங்கியிலிருந்து மாற்றப்பட்டது. அதற்குக் காரணம்-பல்வேறு விதமான அரசியல் காரணங்களுக்காக மாற்றப் பட்டது. உதாரணத்திற்கு நம்முடைய சபாநாயகர் அவர்கள் கூட அப்போது கலந்து கொண்டார்கள். நான் தப்பாகச் சொல்லவில்லை, தப்பாக எடுத்துக் கொள்ளவேண்டாம். அப்போது



191 செப்டம்பர் 19] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

ாதலமைச்சர் போகும்போது பல பேர் கலந்து கொண்டார் ன் அந்த நிகழ்ச்சியிலே. நான் புதுக்கோட்டைக்கு வந்தும் ான் அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்ளவில்லை அப்போது. ானவே அந்தக் கோபத்திலே அந்தக் கூட்டத்திலேயே வைத்து றந்தாங்கியிலிருந்து அந்தத் தொழிற்சாலை மாற்றப்படும் ன்று புதுக்கோட்டையிலே அறிவிக்கப்பட்டு விட்டது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது அவருக்கு என் மேல் கோபம் இருந்தால் கூட அதனால் தொகுதி பாதிக்கப் படக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் மிகவும் கேட்டுக் கொள்கிறேன். அந்தத் தொழிற்சாலைக்கு ஆட்சி இல்லாதபோது—கவர்னர் ஆட்சியிலே என்—தனிப்பட்ட முறையில் நானே போய் பல தடவை போய்.......

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள 234 சட்ட மன்ற தொகுதிகளிலே எந்த ஒரு தொகுதி மக்கள் மீதும் எனக்குக் கோபம் இருக்குமானால் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் நிதி அளிக்கப்படும் என்று ஏற்கனவே அறிவித்து இருக்க மாட்டேன் என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, மிகவும் மகிழ்ச்சி. எனவே எனக்கு அறந்தாங்கியிலே அந்தத் தொழிற் சாலை வரும் என்ற நம்பிக்கை வந்து விட்டது. எனவே, அறந்தாங்கியிலே கூட்டுறவுத் துறையிலே சர்க்கரை ஆலை ஏற்கனவே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே லைசன்ஸ் பெற்றபடி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே வந்து ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தத் தொழிற்சாலை நாகுடியிலே ஆரம்பிப்பதற்கு கவர்னர் ஆட்சியில் நானே டெல்லிக்குப் போய்—திரு. லட்சுமி ரத்தன், ஐ.ஏ.எஸ். என்ற ஆபிசர் ஒருவர் இருந்தார். தனியாக அவருடைய ஆபிசில் பல மணி நேரம் உட்கார்ந்து இருந்து; அப்போது நம்முடைய கவர்ன்மெண்டு கூட கிடையாது.—நானே ரொம்பப் போராடி, ரொம்பக் கஷ்டப்பட்டு அந்த லைசன்ஸை வாங்கிக் கொண்டு வந்தேன். எனவே அந்த சர்க்கரை ஆலை நாகுடியில், அறந் தாங்கித் தொகுதியில் மீண்டும் ஆரம்பிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உதவ வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடிக்கவும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : எனவே, இந்த அளவோடு நிறைவு செய்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. காளன்.

திரு. ஜி. காளன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மற்றும் தொழில் வளர்ச்சி பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது காங்கிரஸ் கட்சியினுடைய சார்பில் இந்த விவாதத்தில் சில கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதித்ததற்காக எனது நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இங்கே தொழிற் வளர்ச்சியைப் பற்றியும் தமிழ்நாட்டிலே எத்தகைய நிலைமைகளெல்லாம் இருக்கின்றன என்பதைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர் இங்கே கருத்துக்களைத் தெரிவித்து இருக்கின்றார்கள். ஆனால் இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நேரடியாகவே தொழில் துறையை எடுத்துக் கொண்டதன் மூலமாக, அதே நேரத்தில் சிறு தொழில் வளர்ச்சிக்காக முதன் முதலாக தனியாக ஒரு அமைச்சரை நியமித்து இருப்பதன் மூலமாக, தமிழக அரசு தொழில் வளர்ச்சியிலே எவ்வளவு அக்கறை காட்டி வருகிறது என்பதற்கு இது ஒரு சரியான எடுத்துக் காட்டு என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் தொழில் வளர்வதற்கு மானியக் கோரிக்கையிலேயும் விளக்கக் குறிப்புகளிலேயும் பல்வேறு வரவேற்கத்தக்க கொள்கைகளும், கோட்பாடுகளும் திட்டங்களும் அறிவிக்கப்பட்டிருந்தாலும்கூட, தொழில் துறையிலே ஈடுபாடு கொண்டு நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்பு எனக்கு இருப்பதன் மூலமாக தமிழக அரசிற்கு நான் சில கருத்துக்களைக் கூறலாம் என்று நம்புகிறேன். தொழிற் வளர்ச்சி இன்றைக்குக் குன்றிப் போய் இருக்கிறது என்று சொன்னால் அதற்கு மிக மிக முக்கியமான காரணம், தமிழகத்திலே பெரும் மின் பற்றாக்குறை இருப்பதுதான் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 4, 5 வருடங்களுக்கு முன்பாக பெரும் தொழிலதிபர்கள் வெளி நாட்டிலேயிருந்தும், வடக்கிலேயிருந்தும் இங்கே வந்தார்கள். இங்கே அவர்களை வரவேற்கக் கூட, சில நாட்களிலே அமைச்சகத்திலே யாரும் இல்லை. நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டியது இருக்கிறது என்று சொன்னார்கள். அதே நேரத்தில் பெரும் தொழில்களை நிறுவுவதற்கு, தொழிற்சாலை நிறுவுவதற்கு தண்ணீர் பற்றாக்குறையும், மின் பற்றாக்குறையும் இருக்கிறது என்றும், தமிழக அரசு இலகுவான விலையிலே இடத்தை ஒதுக்கித் தர வாய்ப்பு இல்லை என்பதை அறிந்த பிறகு அந்தத் தொழில் அதிபர்கள் குஜராத்திற்குச் சென்று பிரம்மாண்டமான தொழிற் கேந்திரத்தை நிறுவியிருக்கிறார்கள். முதலில் நம்மிடத்தில் திட்டம் இருக்கிறதா? திட்டம் இருந்தால் பணம் தானாகவே வரும். ஆனால் அரசு செய்யக்கூடிய முதல் காரியம் இங்கே தமிழகத்திலே மின் பற்றாக்குறையின்றி, பெரும் தொழில்களைச் சமாளிக்கக்கூடிய அளவிற்கு மின்சாரப் பற்றாக் குறையை நீக்க வேண்டும் அதற்காக, அணுமின் நிலையங்களையும், தூத்துக்குடியிலே நிறுவி இருக்கக்கூடிய பிரம்மாண்டமான அனல் மின் நிலையத்தையும் உடனடியாகத் துவக்குவதற்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை



எடுக்க வேண்டும். இங்கே மின்சாரம் சஃபீசியண்டாக,
போதுமான அளவிற்கு இருக்கும் என்று சொன்னால் நிச்சயமாக
பலபேர் தொழில்களைக் கொண்டு வருவதற்குத் தயாராக
இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் இன்றைக்குத் தண்ணீர்
பிரச்சினை வேறு இருக்கிறது. ஒரு சில உதாரணங்களை நான்
இங்கே கூற விரும்புகிறேன்.

இன்றைக்குக் கும்மிடிப் பூண்டியிலே சிப்காட் தொழிற்பேட்டை
இருக்கிறது. சிப்காட் ஆரம்பிக்கின்ற நேரத்திலே சொன்
னார்கள் இலகுவான விலையிலே, மானிய விலையிலே அங்கே
இடங்களைக் கொடுப்போம் என்று. மின்சாரம், 5 ஆண்டுக்-
காலத்திற்கு வெட்டு இன்றி கிடைக்கும் என்று சொன்னார்கள்.
ஆனால் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், ஏறக்
குறைய 600 ஏக்கர் நிலப்பரப்பிலே அமைந்திருக்கக்கூடிய சிப்
காட்டிலே இன்றைக்கு 300 ஏக்கர்தான் எடுக்கப்பட்டிருக்கிறது.
அதிலேதான் தொழிற்பேட்டைகள் அமைந்திருக்கின்றன. அதி
லேயும் ஆரம்பித்த வேகத்திலேயே பல தொழிற்சாலைகள்
நலிந்து விட்டன; மூடப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரி
வித்துக் கொள்ள விரும்புகிறேன். அதோடு, அந்தத் தொழிற்
சாலைகளுக்குத் தேவையான தண்ணீர் சப்ளையை சிப்காட்
வழங்கவில்லை என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.
இப்படிப்பட்ட நிலைமை இருக்குமேயானால் எப்படி நாம்
தொழில்களை வளர்க்க முடியும். எனவே, மாண்புமிகு புரட்சித்
தலைவி அரசு, தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு, அதற்கு மூல
தனமாக இருக்கக்கூடிய மின் இணைப்புகளைச் செய்வதோடு,
தங்குதடையற்ற மின் சப்ளையையும், தண்ணீர் சப்ளையையும்
சரியான பாதை வசதிகளையும் அமைத்துத் தருவதற்கு முன்
வருமேயானால், நிச்சயமாக தமிழகத்திலே தொழில் வளரும்.

பிற்பகல் 12–35

இன்னொன்றையும் நான் முக்கியமாகக் குறிப்பிட விரும்பு
கிறேன். எனக்கு எவ்வளவு நேரம் தலைவரவர்கள் கொடுப்
பார்கள் என்று தெரியவில்லை. இருந்தாலும் சுருக்கமாகச் சில
கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாக முடியுங்கள்.

திரு. ஜி. காளன்: இன்றைக்கு சிப்காட்டை நாம் வைத்திருக்
கிறோம். சிட்கோ நிறுவனம் சிறு தொழில்களுக்கு மூலப்
பொருட்களை சப்ளை செய்வதற்கும், கூடாரங்களை அமைத்
துத் தருவதற்கும் தொழில் துவங்குவதற்கான வசதிகளை
அமைப்பதற்கும் வைத்திருக்கிறீர்கள். இன்றைக்குச் சிறு
தொழில்கள் பெரிய தொழில்களைப் போல ரா மெட்டீரியல்சை
வாங்க முடியாது. இன்றைக்கு கோக்கிங் கோல் என்று சொல்
கிறோம். அது ஷார்ட் ஃபால்—அது தடைப்படுவதனால்,
கிடைக்காததால் இன்றைக்குக் கோயம்புத்தூரிலே எத்தனை
பவுண்டரிகள் மூடப்பட்டிருக்கின்றன? இங்கே இருக்கக் கூடிய

[திரு. ஜி. காளன்] [1991 செப்டம்பர் 19

பவுண்டரிகள் எல்லாம் வட நாட்டுக்குச் சென்று விட்டன. ஆனால், கோக்கிங் கோல், இது மாதிரி ரா மெட்டீரியல்ஸ், அதே மாதிரி இரும்பு—ஸ்டீல். இவை இன்றைக்குச் சிறு தொழில் களிலே சிட்கோ மூலமாக வருகிறது சிறுதொழில் அதிபர்களுக்கு நாம் நியாய விலையிலே சப்ளை செய்ய வேண்டும். ஆனால், அவ்வாறு சப்ளை செய்கிறோமா என்று பார்த்தால் நிச்சயமாகக் கிடையாது. அவர்களுக்குத் தேவைப்படும்பொழுது நாம் ரா மெட்டீரியல்ஸ் சப்ளை செய்வது கிடையாது. அப்படியே இருந் தாலும், உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். அவர் களுக்குக் கோலும், 12 எம். எம். ராடும் வேண்டுமென்று சொன் னால், அவர்கள் வைத்திருப்பது 16 எம். எம். ராடு. அந்த விலையையும் கொடுத்து வாங்க வேண்டும். ஆகவே, பிரிமியம் கொடுத்தாலும் பரவாயில்லை என்று சொல்லி வெளியே வாங்கக் கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், சிறு தொழில்களை நாம் புரொட்டெக்ட் செய்ய வேண்டுமென்றால், சிட்கோ மூலமாக முக்கியமான ரா மெட்டீரியல்களைக் கரெக் டான ரேட்டிலே நாம் வழங்குவதற்குத் தமிழக அரசு ஒரு கியாரண்டி கொடுக்க வேண்டும். அப்படி நீங்கள் உதவுவீர் களேயானால், ஸ்டீல், கோல், சிறு தொழில்களுக்கான மின் சாரம், அதற்குண்டான தண்ணீர் வசதி தடையின்றி நீங்கள் வழங்குவீர்களேயானால் நிச்சயமாகச் சிறு தொழில்கள் வளரும்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். சிறு தொழில் வளர வேண்டும். சிறு தொழில் வளர வேண்டும் என்று நாம் சொல்கிறோம். எப்படி வளரும் என்பது எனக்குப் புரிய வில்லை. கிராமப்புறத் தொழில்களைப் பொறுத்தமட்டில் சிறு தொழில்களை வளர்க்க முடியும். இன்னும் சில பழரசம்—இப்படிப்பட்ட, இதையொட்டிய சிறு தொழில்களை வளர்க்க முடியும். ஆனால், சிறுதொழில் என்பது பேசிக்காக ஆட்டோ மொபைல் இன்டஸ்ட்ரியைப் பொறுத்ததுதான்.

இன்றைக்கு ஜப்பான் தேசத்திலும், அமெரிக்காவிலே ஃபோர்ட் போன்றவைகளிலும், ஐரோப்பியக் கண்டத்திலேயும் இன்றைக்குத் தொழில்கள் சிறந்து விளங்குகின்றன என்று சொன்னால், லேபர் இன்டென்சிவ், அதிகப்படியான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கின்ற ஒரே தொழில் உலகத்திலே ஆட்டோமொபைல் தொழிலாகும். அது 2 வீலர், 4 வீலர் அல்லது 3 வீலர் ஆக இன்றைக்கு நாம் பார்க்கிறோம் தமிழகத்திலே. இன்றைக்கு அசோக் லேலன்ட் ஒரு தொழிற்சாலை இருக்கிறது. அதை யொட்டி இங்கே 5,000 தொழிலாளர்கள் வேலை செய்தாலும் கூட, இன்றைக்கு 10,000 சிறு தொழில்களிலே அதையொட்டி வேலை செய்கிறார்கள். இன்றைக்கு பாடியிலே டி.வி.எஸ். இருக்கிறது என்று சொன்னால், அதையொட்டி 5,000 சிறு தொழில்கள் வளர்ந்திருக்கின்றன. அதுபோன்றே ஒரு பெரிய பி.எச் இ.எல். இருக்கிறது என்று சொன்னால், திருச்சியிலே



1991 செப்டம்பர் 19] [திரு. ஜி. காளன்]

பல்வேறு சிறு தொழில் கூடங்கள் அமைந்திருக்கின்றன. எனவே,
பெரிய தொழிற்சாலைகளை நீங்கள் கொண்டு வராமல் சிறு
தொழில்களைப் பலப்படுத்த முடியாது. எனவே, இன்றைக்கு
நான் மாண்புமிகு தமிழக முதல்வரவர்களைக் கேட்டுக் கொள்
கிறேன். புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.
இன்றைக்கு இந்தியாவிலேயே ஒரு முதன்மை பெற்ற மாநில
மாகக் கொண்டு வர விரும்புகின்றீர்கள். அப்படியிருக்கும்
பொழுது இன்றைக்கு மத்தியிலே இருக்கக் கூடியது நம்முடைய
தோழமை ஆட்சிதான்—காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சி—
நீங்களும் தோழமைக் கட்சியைச் சார்ந்தவர்கள். இந்த நேரத்
திலே உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, ஒரு பி.எச்.
இ.எல்., தொழிற்சாலையையோ, ஒரு லேலண்ட் போன்ற
தொழிற்சாலையையோ நீங்கள் இங்கே, தமிழகத்திலே கொண்டு
வருவதற்கு—பெரும் தொழில்களைக் கொண்டு வருவதற்கு
முயற்சிப்பீர்களேயானால் நிச்சயமாகச் சிறு தொழில்கள் வளரும்.
அதையொட்டித் தமிழகத்தினுடைய பொருளாதாரம் பலம்
பெற முடியும்.

உதாரணத்திற்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.
காங்கிரஸ் கட்சி ஆண்டபோது அசோக் லேலண்ட் கொண்டு
வரப்பட்டது. அன்றைக்கு மார்க்கெட்டிங் ஷேர் 35 சதமானம்.
இன்றைக்கு வடக்கே பல தொழிற்சாலைகள், டெல்கோ,
டிஸ்கோ போன்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. டாட்டா
—ஆனால் அசோக் லேலண்ட் கொண்டு வந்து, இன்றைக்கு
மார்க்கெட்டிங் ஷேர் என்ன? 25 சதமானம். இன்றைக்கு வட
நாட்டிலே— 25 சதமானம் தமிழ்நாட்டிலே, வடநாட்டிலே இன்றை
க்கு 75 சதமானம் தொழிற்சாலைகள் ஆட்டோ மொபைல்களாக
அமைந்திருக்கின்றன. எனவே, அசோக் லேலண்ட் போன்ற தொழிற்
சாலைகள் இல்லை என்று சொன்னாலும் கூட, அதை
வளர்ப்பதற்கு இன்றைக்கு உங்களுக்கு நிச்சயமாக வாய்ப்புகள்
இருக்கின்றன. இன்றைக்கு ஹெவி வெகிகிள்ஸ் நிறையத்
தேவைப்படுகின்றன. டிரக்ஸ் நிறையத் தேவைப்படுகின்றன.
அந்த லேலண்ட் தொழிற்சாலையை இப்பொழுது இருப்பதை
விட இன்னும் இரண்டு மடங்கு நீங்கள் பெருக்க முடியும்.
அவ்வாறு பெருக்ினால் இன்னும் ஏறக்குறைய 25,000
சிறு தொழில்களை நாம் கொண்டு வர முடியும். பல்
லாயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க
முடியும். பிற்பகல் 12-40

அதே மாதிரி, "டு வீலர்ஸ்"—"களஃகி", "என்ஃபீல்டு"
என்று ஒரு காலத்திலே இருந்தது. "டு வீலர்ஸ்" லே ஒரு
காலத்திலே 35 சதமானமாக இருந்த மார்க்கெட்டில் ஷேர், இன்
றைக்கு 18 சதமானம் கூட இல்லை. எனவே, "டு வீலர்ஸ்"
ஆக இருந்தாலும். "ஆட்டோமொபைல்"-ஆக இருந்தாலும்,—

[திரு. ஜி. காளன்] [1991 செப்டம்பர் 19

இன்றைக்கு '' பெட்ரோ-கெமிகல்ஸ் '' பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். ஆயிரம் கோடி, 1,500 கோடி என்று '' இன்வெஸ்ட்மென்ட் '' செய்கிறோம். ஆனால், '' லேபர் இன்டென்சிவ் '' '' பிளாட் கெபாஸ்டி '' பார்ப்பதில்லை. '' பிளான்ட் '' பெரிதாகப் போடுகிறோம். ஆட்களுக்கு வேலைவாய்ப்பைப் பார்க்கிறபோது, மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. பொருளாதாரத்தில் வேண்டுமானாலும் அதிகப்படியாக இருக்கலாம். ஆனால், வேலைவாய்ப்பு என்று வருகிறபோது, அதிலே குறைவான மனிதர்களைத்தான் வேலைக்கு அமர்த்துகிறார்கள். எனவே, பெருந் தொழில்களை நாம் வளர்க்க வேண்டுமென்று சொன்னால், இதை நீங்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்னொன்றைப் பலபேர் சொன்னார்கள். மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்று அதை நிச்சயமாகச் செய்ய வேண்டும். தொழிலதிபர்களை அழைத்துப் பேசியிருக்கிறீர்கள். அது, ஏதோ 200, 300 பேர்களைக் கூட்டிப்பேசுவதற்குப் பதில், உண்மையான தொழிலதிபர்களை, உண்மையாக தமிழகத்திலே தொழிலை வளர்ப்பதற்கு, ஒரு 10, 15 பேரை '' லிமிடெட் ''டாகக் கூப்பிட்டுப் பேசுங்கள். ஆலோசனை கேளுங்கள்; ஒரு குழு அமையுங்கள். உங்களுடைய தலைமையிலே நிச்சயமாக அமெரிக்காவுக்குச் சென்றால், ஜப்பானுக்குச் சென்றால், நான் உறுதியாகக் கூற முடியும்; இன்னும் ஒரு இரண்டு மாத காலத்திலே, நீங்கள் 10,000 கோடி ரூபாயைத் தமிழகத்திலே '' இன்வெஸ்ட்மென்ட் ''—ஆகக் கொண்டு வர முடியும்.

இன்றைக்குப் பலபேர் விரும்புகிறார்கள். தமிழகத்திலே இன்றைக்கு உங்களுடைய தலைமையிலே ஆட்சி ஏற்பட்ட பிறகு, தமிழகத்திலே ஏதோ புரட்சி நடந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தில் உண்மையான தொழிலை வளர்க்க முடியும் என்று பலபேர் இன்றைக்கு அக்கறை செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, பல முதலமைச்சர்கள் வெளிநாட்டுக்குச் சென்றாலுங்கூட, பலபேர் சென்றிருந்தாலும்கூட, நிச்சயமாக இந்தச் சந்தர்ப்பத்தில் நீங்கள் சென்றீர்களேயானால், அதிகப்படியான மூலதனத்தை, தமிழ்நாட்டுக்குக் கொண்டு வர முடியும். நீங்கள் ஐந்தாண்டு என்று சொல்கிறீர்கள். மூன்று ஆண்டுக் காலத்திலேயே மகத்தான சாதனையைத் தமிழகத்திலே செய்வதற்கு நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றன. எனவே, '' சிட்கோ''விலே இருக்கக்கூடிய பிரச்சினையைப்பற்றிச் சொன்னேன். அதோடு, ''சிட்கோ''வில் தொழிற்பேட்டைகள் கட்டுகிறார்கள். நான்கூட பொதுக் கணக்குக் குழுவிலே இருக்கிறேன். சிவகாசியிலே பல ஷெட்டுகள் காலியாக இருக்கின்றன; பல இடங்களை நாம் எடுத்துக் கொள்கிறோம்.



1991 செப்டம்பர் 19] [திரு. ஜி. காளன்]

ஆனால், அவை சரிவர '' யுடிலைஸ் '' செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் கிடையாது. அம்பத்தூர் தொழிற்பேட்டையிலே ஏறக்குறைய—புள்ளி விபரத்திலே—41 ஆயிரம், 50 ஆயிரம் சிறு தொழில்களுக்கு உதவி செய்வதாகச் சொல்லியிருக்கிறீர்கள். மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள்கூடக் கேட்டார்கள் எத்தனை சிறுதொழில்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன என்று. அது உண்மை. இன்றைக்கு அம்பத்தூர் பகுதியிலே ''டேனிடா'' உதவி மூலமாக ஒரு இரண்டாயிரம் சிறு தொழிற்கூடங்கள் இருக்கின்றன. அவற்றிலே ஒரு சிலவற்றைத் தவிர, பாக்கியெல்லாம் மூடப்பட்டு விட்டன. காரணம் என்ன? நாம் தொழில் முதலீட்டிற்கு ''டிக்'' மூலமாகக் கடன் கேட்கிறோம். கடன் கேட்பது யார்? இதனை நடத்துவது அவ்வளவு இலாபகரமான காரியம் அல்ல. படித்து விட்டு வந்த உடனேயே கடன் கேட்கலாம் என்று கருதுகிறார்கள். அவர்களுக்கு தேர்ச்சி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். '' பிராக்டிகல் நாலெட்ஜ் '' இல்லாமல் தொழிலை வளர்க்க முடியாது. எனவே, படித்தும் இருக்க வேண்டும்; '' பிராக்டிகல் நாலெட்ஜு''ம் இருக்க வேண்டும். அவர்கள் தொழில் நடத்துவார்களா என்று பார்த்து உதவி செய்ய வேண்டும். ஏதோ கடன் கொடுக்க வேண்டும் என்பதற்காக கடன் கொடுப்பதனால், இன்றைக்குப் பலபேர் தொழிற்சாலைகளை மூடி விடுகிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், ''டிக்'' மூலமாகக் கொடுக்கக்கூடிய நிதியுதவி, 30 சதமானம் வரை வசூலித்தால் போதும் என்ற ஒரு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அது எந்த அளவிற்கு நியாயம் என்று தெரியவில்லை. அப்படியானால், 70 சதமானம் வரை வசூலாகாமலே போய்விடுகிறது. அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல், கொடுக்கக்கூடிய கடன்களை— ''டிக்'' கொடுக்கக்கூடிய கடன்களை—தொழிலை வளர்ச்சி செய்வதற்கு மட்டுமல்ல; கடனை வழங்க வேண்டும்; அதைத் திரும்பவும் வசூலிக்க வேண்டும். அப்படி வசூல் செய்யப்பட்டதன் மூலமாக நாம் இன்னும் பலபேருக்கு உதவி செய்தால் '' கேபிடல் இன்வெஸ்ட்மென்ட்'' நமக்கு அதிகமாக இருக்கும். இன்னும் பல பேருக்கு உதவி செய்ய முடியும். ஆகவே, கொடுக்கக்கூடிய கடனைக் கறாராக வசூலிக்க வேண்டும். இரண்டு இலட்சத்திற்குக் கீழாகக் கேட்பவர்களுக்கு நாம் பிணை தேவையில்லை என்று சொல்கிறோம். அது உண்மையிலேயே வரவேற்கக்கூடிய விஷயம். ஆனால், இதையே பயன்படுத்தி, இனிமேல் இரண்டு இலட்சம் வரை கடன் வாங்கினால், நாம் பிணை கொடுக்க வேண்டியதில்லை என்று சொல்லி, ஒருவனே ரூ. 4 இலட்சம் வரை பினாமியாக வாங்க முடியும். எனவே, அப்படிப்பட்ட நிலைமையெல்லாம் இல்லாமல், சிறுதொழில்கள் மூலமாக இருந்தாலும், ''டிக்'' மூலமாக இருந்தாலும், ''சிட்கோ'' மூலமாக இருந்தாலும், கொடுத்த கடனைத் திரும்ப வசூலிப்பது மட்டுமல்லை; அதிலே [illegible] செலுத்துவது மட்டுமல்ல; அவர்கள் தொழில் நடத்தக்கூடியவர்கள்தானா என்று பார்த்து, தயவு

செய்து நீங்கள் பணம் கொடுப்பீர்களேயானால், நிச்சயமாகத் தமிழகத்திலே தொழில் வளரும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். அதோடு இன்னொரு முக்கியமான விஷயம்.

50 பேர்களுக்குக் கீழாக உள்ள தொழிற்சாலைகளுக்கு ''பேக்டரிஸ் ஆக்ட்''டிலேயிருந்து விதிவிலக்கு கொடுப்போமென்று சொல்கிறீர்கள். அது மிக மிக ''டேஞ்சர்''. அது இருக்கக் கூடாது. 50 பேர்கள் என்று சொன்னால் அது சிறுதொழில் என்று நீங்கள் கருதலாம். சிறுதொழில் அல்ல. 10 கோடி ரூபாய் ''இன்வெஸ்ட்'' பண்ணுவதுகூட ''மெஷின் ஓரியண்டேஷன்'' இருந்தால் 50 பேருக்குக் கீழாக வைத்துக்கொள்வார்கள். 50 நபருக்குக் கீழாக வேலை செய்வார்கள். எனவே, 50 பேருக்கு பதிலாக 10 பேர் என்று வையுங்கள். 10 பேர்களுக்கு கீழாக உள்ள சிறு தொழில்களுக்கு விதிவிலக்கு கொடுக்கலாம்.

பிற்பகல் 12-45

ஏனென்று சொன்னால், ஒரு லேத் வைத்திருப்பான். அல்லது இரண்டு மில்லிங் மிஷின் வைத்திருப்பான். அங்கே ஐந்து அல்லது 10 பேருக்கு மேல் வேலை செய்வார்கள். அவர்களுக்கு பேக்டரி ஆக்ட்படி இன்னின்ன வசதிகள் இருக்க வேண்டுமென்று கிடையாது. அதைக் கட்டாயப்படுத்த முடியாது. அப்படிக் கட்டாயப்படுத்தினால் தொழில் வளராது. இன்றைக்கு கிண்டி வாக்கம் போன்ற பகுதிகளில் பார்க்கிறபோது, மாண்புமிகு அமைச்சர் கூட விசிட் பண்ணி வந்திருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட பல கூடங்கள் இன்றைக்கு நசுங்கிப் போய் இருக்கின்றன. காம்படீஷன்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். சிறு தொழில் வளரவேண்டுமென்று சொல்கின்றோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்னார். பெரிய மீனைச் சிறிய மீன் விழுங்கும்; சிறிய மீனைப் பெரிய மீன் விழுங்கும்'' என்று அதே மாதிரி பெரிய தொழில் அதிபர்கள் சிறு தொழிலதிபர்களை விழுங்குகின்றனர். உங்களுக்கு உதாரணமாக ஒன்றைச் சொல்கிறேன். இப்போது அசோக் லேலண்டிலே ஒரு ஜாப் எடுத்துச் செய்கிறார்கள். அடுத்த ஆண்டு அதைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அந்த அதிபர் சொல்கிறார் நீ சென்ற ஆண்டை விட 10 சதவிகிதம் குறைத்துக் கொண்டால்தான் உங்களுக்கு ஆர்டர் தருவோம் என்று. அப்போது வேறு வழியில்லை. வாங்கிய தொழிற்சாலை ஓட வேண்டும். அவர் நடத்துகின்ற தொழிற்சாலை ஓட வேண்டும். எனவே, காம்படீசனிலே குறைக்கிறார்கள். ஏனென்றால் இன்னொருவரும் அந்த ரேட்டுக்குப் பண்ணத் தயாராக இருக்கிறார். இந்த அன்ஹெல்த்தி காம்படீசன் தமிழ்நாட்டிலே உண்டாகி இருப்பதால்,



இன்றைக்குச் சிறு தொழில்கள் நசுக்கப்பட்டிருக்கின்றது. எனவே, பெரிய தொழில், சிறு தொழில் ஆகியவைகள் நசுக்கப்படாமல் இருப்பதற்கு ஒரு ப்ரொடெக்ஷன் எந்த மாதிரி கொடுக்கலாம் என்பதற்கு தமிழக அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படி ஒரு ப்ரொடெக்ஷன் ஏற்படுமானால், நிச்சயமாக, சிறிய தொழில்கள் இலாபகரமாக இயங்க முடியும். எனவே, பெரிய தொழில்களை ஒரு பக்கத்திலே கொண்டு வரவேண்டும். சிட்கோ மூலமாக, கொடுத்த வாக்குறுதியை, நிறைவேற்ற வேண்டும். தொழில்கள் வளர்வதற்கு உண்டான அடிப்படை வசதிகளை உண்டாக்குவோம் என்று இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இப்படிக் கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுக்கின்றீர்கள். ஆனால், எந்த அளவுக்கு அது நிறைவேற்றப்படுகிறது. எனவே, கொடுத்த வாக்குறுதியைக் கொடுத்துள்ள திட்டத்தை நிச்சயமாக நிறைவேற்ற வேண்டும். ஏற்கெனவே இருக்கக் கூடிய தொழில்கள், கடன்கள் கொடுத்து நடத்தப்படுகின்ற தொழில்கள் எந்த அளவுக்கு நடக்கின்றது. ஏன் அது நலிவு அடைந்திருக்கின்றது? அதை மேலும் திறமையாக நடத்துவதற்கு என்ன வழிவகை செய்ய வேண்டுமென்று அதற்கு ஒரு குழு அமைத்து, ஆய்வு செய்து, அதைச் செம்மைப்படுத்த வேண்டும். இன்னொரு பக்கத்திலே தொழில்கள் தழைப்பதற்கு நாம் அடிப்படை வசதிகளை மாற்றியமைப்பதற்கு தமிழகத்திலே கொண்டு வருவதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும். நீங்கள் இந்த நேரத்திலே அதைச் செய்வீர்களேயானால் உங்களுடைய தலைமையிலே தமிழகம் நிச்சயமாகத் தலைநிமிர்ந்தோங்கும். இந்தியாவிலே முதன்மை பெற்ற மாநிலமாகத் தமிழகம் திகழும் என்று கூறி, இந்த வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதல்வர்.

<u>மாண்புமிகு செல்வி. ஜெ. ஜெயலலிதா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தமிழக மக்களின் அமோக ஆதரவைப் பெற்று ஜனநாயக வரலாற்றிலே வேறு எவரும் பெறாத தனிச் சிறப்பு மிக்க வகையில் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நாங்கள் நாட்டு மக்களுக்குத் தந்த முதல் உறுதி மொழியான, தமிழகத்தைத் தொழில் துறையில் இந்தியாவிலே முதல் மாநிலமாக ஆக்கிக் காட்டுவோம் என்ற எங்கள் முதல் வாக்குறுதியை நிறைவேற்ற நாங்கள் அடியெடுத்து வைக்கும் முதல் படியே இன்றைய தினம் நான் பேரவைமுன் வைத்துள்ள இந்த மானியக் கோரிக்கையாகும். இவ்வரசின் இன்றியமையா ஒரு மானியக் கோரிக்கையின் விவாதத்திலே கலந்து கொண்டு 13 மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [1991 செப்டம்பர் 19

வழக்கமாகச் சில ஆண்டுகளில் இரண்டு நாட்கள் கூட விவாதிக்கப்பட்டிருக்கும் இந்த மானியக் கோரிக்கை மீது, தற்போது நேரத்தின் அருமை கருதி, குறுகிய நேரமே ஒதுக்கப்பட்டிருப்பதால், பல்வேறு கட்சிகளையும் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் மிகச் சுருக்கமாகவே தங்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். சுருக்கமாகவே பலரும் பேசியிருந்தாலும் முந்தய ஆட்சியின் நிறை குறைகளையும், தற்போது நாங்கள் என்னென்ன செய்ய வேண்டும் என்பதையும் மிகக் கவனத்தோடும், கடமை உணர்வோடும் தெரிவித்துள்ளனர். அத்தகைய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை எனது பதிலுரையினைத் துவக்கும் இவ்வேளையிலே தெரிவித்துக் கொள்வது என் கடமையெனக் கருதுகிறேன்.

நேரமின்மையாலும், பேசுவதற்கு வாய்ப்புக் கிட்டாத காரணத்தாலும் இங்கே பேரவையில் கருத்துக்களைக் கூற முடியாத மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் உள்ளனர் என்பதை நான் நன்கு அறிவேன். அத்தகைய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர் ஏற்கெனவே என்னிடம் பல்வேறு கருத்துக்களை நேரிலும் மனுக்கள் மூலமும் தெரிவித்துள்ளனர். இன்னமும் பலர் தெரிவிக்கக்கூடும். அத்தகைய கருத்துக்களையும் கூட இங்கே பேசிய உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களைப் போன்றே என் கவனத்தில் உரிய முறையில் எடுத்துக் கொள்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்வது என் நீங்காக் கடமையாகும். என்னுடைய இப்பதிலுரை அத்தகைய மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் ஆறுதலாக அமையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்கிற பாகுபாடு இல்லாமல் என்னைச் சந்திக்கும் பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் அவர்கள் பகுதி மிகப் பின்தங்கிய பகுதி என்றும் ஏதேனும் ஒரு தொழிலை அமைத்துத் தரவேண்டுமென்றும் வற்புறுத்தி வருகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் ஔவேனும் ஆறுதல் அளிக்கும் வகையில் என் பதிலுரை இருக்க வேண்டும் என்பது என் விருப்பமாகும். நேரத்தின் அருமை கருதி சுருக்கமாகவும் அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தங்களது பேச்சுக்கள் மூலமும் வெட்டுத் தீர்மானங்கள் மூலமும் என்னிடம் நேரிலும் வற்புறுத்தியுள்ள திட்டங்கள் பலவற்றின் இன்றியமையாமையைக் கருதி சற்று விளக்கமாகவும் எனது பதிலுரையை அமைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை விரைவுபடுத்திட வேண்டும். இதன் மூலம் வறுமைக் கோட்டிற்கும் கீழே வாழும் எண்ணற்ற ஏழை எளிய மக்கள் வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சியைத் தோற்றுவித்திட வேண்டுமென்பது இந்த அரசின் தலையாய நோக்கங்களில் ஒன்று. இப்பணியில் தொழில்துறை ஒரு சிறப்பான பங்கினை ஏற்றிட வேண்டும்; முக்கியமான சாதனமாகப் பணியாற்றிட வேண்டுமென்கின்ற திட்டவட்டமான கருத்தை இந்த அரசு கொண்டுள்ளது.



1991 செப்டம்பர் 19] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் எங்கள் கட்சியின் அணுகுமுறை தேர்தல் அறிக்கையிலேயே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. சான்றாக, புதிய தொழில் முனைவோர்கள் ஊக்குவிக்கப்படுவர்; தொழில்கள் தோன்றி வளர்ந்திட அரசு இயந்திரமோ அல்லது விதிகளோ ஒரு தடையாக இருக்கலாகாது. அரசு அதிகாரிகள் தொழில் முனைவர்களுக்குத் தேவையான உதவிகளை நல்கி, உற்ற நண்பர்களாகச் செயலாற்றுமாறு அறிவுறுத்தப்படுவர். பெரும் ரகத் தொழில்களைத் தொடங்கிட தடை ஏதும் இராது. தமிழ்நாட்டில் மேலும் அதிக அளவுக்கு தொழில்களில் முதலீடு செய்ய வேண்டுமென்று மைய அரசு கோரப்படும். நாட்டின் இதர பாகங்களிலிருந்து தொழில் முனைவர்கள், அயல் நாடுகளில் வாழும் இந்தியர்கள் இவர்கள் எல்லாம் உதவிகள் அளிக்கப்பட்டு தமிழ்நாட்டில் சிறிய, பெரிய தொழில்களைத் தொடங்குமாறு ஊக்குவிக்கப்படுவர். மற்றும் ஏற்றுமதி சார்புடைய தொழில்களுக்கும், அதிக அளவில் வேலை வாய்ப்பினை அளிக்கும் தொழில்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும் என்பன போன்ற கருத்துக்கள் எங்கள் தேர்தல் அறிக்கையில் எடுத்துச் சொல்லப்பட்டன. இவற்றை எல்லாம் செயல்படுத்திட அரசு முனைப்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

பதவி ஏற்ற ஒருசில நாட்களுக்குள்ளாகவே, 6—7—1991 அன்று பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழில் அதிபர்களைக் கலந்து கருத்துப் பரிமாற்றத்திற்கு நான் அழைத்திருந்தேன். இது அரசின் திட்டவட்டமான அணுகுமுறை; அவர்களுடைய தேவைகளையும் அவர்களுடைய பிரச்சினைகளையும் குறைகளையும் நேரடியாகக் கேட்டறியவும் அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டவும் ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்து' தொழில் வளர்ச்சி விரைவு பெற்றிட வேண்டும், அதன் பயன் பிற்பட்ட பகுதிகளுக்கு எல்லாம் பரவிட வேண்டும் என்பது அரசின் முக்கியமான நோக்கங்களில் ஒன்றாகும். வளர்ச்சிக்கு வாய்ப்பான எந்த ஒரு தொழிலும் தமிழ்நாட்டில் தோன்றி வளர்ந்திட எதுவும் தடையாக இருக்காது என்பது எல்லாம் அவர்களுக்கு அது சமயத்தில் எடுத்துக் கூறப்பட்டது. அதைத் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன; மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

பெரிய தொழில்களும் மிகப்பெரிய தொழில்களும் அமைந்தால் தான் அவற்றைச் சார்ந்த சிறு தொழில்களும் துணைத் தொழில்களும் வளர்ந்திட இயலும். இதைத் கருத்தில் கொண்டு மிகப்பெரிய தொழில்களுக்கு, அதாவது ரூ. 50 கோடி முதலீடு,

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [1991 செப்டம்பர் 19

ரூ. 100 கோடிக்கு உட்பட்ட முதலீடு ஆகிய தொழில்களுக்கு சிறப்பு மேம்பாட்டுத் தொகையாக ரூ. 25 இலட்சமும் ரூ. 100 கோடி மற்றும் அதற்கு மேற்பட்ட முதலீடு கொண்ட தொழில் களுக்கு உதவித் தொகையாக ரூ. 50 இலட்சமும் அளிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. இவற்றிக்கு முறையே 5 ஆண்டு விற்பனை வரி விலக்கு அல்லது 10 ஆண்டுகளுக்கு தள்ளி வைத் தல், 6 ஆண்டுகளுக்கு விற்பனை வரி விலக்கு அல்லது 12 ஆண்டு களுக்கு வரி தள்ளிவைப்பு போன்ற வசதி அளிக்கப்படும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சிக்கு போதிய அளவில் மின்சக்தி கிடைத்திட வேண்டியது மிக அவசியம் என்பதை அரசு நன்கு உணர்ந்துள்ளது. இதைக் கருத்தில் கொண்டு செயல்பாட்டில் உள்ள திட்டங்களை விரைவு படுத்திடவும் புதிய திட்டங்களை உருவாக்கிடவும் நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மின்சக்தி உற்பத்தியில் தனியார் முயற்சியை ஊக்குவிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய தொழில் முனை வர்களை ஊக்குவிப்பதற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட் டுள்ளது. குறிப்பாக மகளிர்தம் ஈடுபாட்டினை மேம்படுத்திட சிறப்பு ஊக்குவிப்புத் திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த ஆண்டில் 800 மகளிர் தொழில் முனைவோருக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த சில முடிவுகளை அரசு எடுத்துள்ளது; அவை பின்வருமாறு :

பிற்பகல் 12-55

தொழில்கள் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் தோன்றி வளர்ந்திட அடிப்படைத் தேவைகள் போதிய அளவில் கிடைக் கப்பெறுதல் மிக அவசியமாகும். இதற்கென்று அடிப்படை வசதி அமைப்பு நிறுவனம் ஒன்று அமைக்கப்படும். அதாவது இன்ஃப்ராஸ்ட்ரக்சர் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் ஒன்று அமைக்கப்படும். இதற்கென நிதிநிலை அறிக்கையில் 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அயல் நாட்டு முதலீட்டாளர்கள், அயல் நாடுகளில் வாழும் இந்தியர்கள், தொழில் முனைவோர் இவர்களுக்குத் தேவையான உரிமங்களையும், ஆலோசனை களையும் வழங்குதல், தேவையான உரிமங்களையும், ஒப்புதல்களையும் பெற்றுத் தருதல் ஆகியவற்றுடன் வெற்றிக் கென தொழில் ஆலோசனை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி மையம் ஒன்று ஏற்படுத்தப்படும். இதன் மூலம் தமிழகத்தில் நடைமுறை இடர்பாடுகள் இன்றி தொழில்கள் மலர்ந்திட இயலும் என்று அரசு கருதுகிறது. தற்போது 31 மிகவும் பிற்பட்ட வட்டங்கள் உள்ளிட்ட 107 பிற்பட்ட வட்டங்களிலும் அரசு தொழில் பேட்டைகள் போன்றவற்றிலே முதலீட்டு உதவித் தொகை, முதலீட்டில் 15 விழுக்காடு, உச்ச அளவாக ரூபாய்



1991 செப்டம்பர் 19] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

15 இலட்சம் அளிக்கப்படுகிறது. மிகவும் பிற்பட்ட வட்டங் களில் அமைந்திடும் தொழில்களுக்கு உதவித் தொகை, முதலீட் டில் 20 விழுக்காடு, உச்ச அளவாக ரூபாய் 20 இலட்சமாக இனி உயர்த்தப்படும். தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கையில் 30 விழுக்காடுக்கு மேல் மகளிருக்கு வேலைவாய்ப்பு அளித்திடும் புதிய தொழில்களுக்குக் கூடுதல் சலுகையாக முதலீட்டில் 5 விழுக் காடு, உச்ச அளவாக ரூபாய் 5 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்படும். ஆனால் பொதுவாக ஏற்கெனவே மகளிருக்கு வேலைவாய்ப்பு அதிக அளவில் அளித்து வந்துள்ள தைக்கப்பட்ட ஆடைகள், கையால் தீப்பெட்டி செய்தல் போன்ற தொழில்கள் இவற்றில் அடங்காது.

மின்னணுத் தொழில், தோல் தொழில் போன்றவற்றை ஊக்குவிப்பதற்கான சிறப்பு முதலீட்டு உதவித் தொகை வழங்கும் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. கம்ப்யூட்டர், ஸாஃப்ட்வேர், மற்றும் பெட்ரோலியத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் போன்றவை தொழில்களின் வளர்ச்சிக்காக வாய்ப் புள்ளவை என்ற அடிப்படையில் முன்னுரிமை பெறவேண்டிய தொழில்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றின் வளர்ச்சிக் கென தேவையான அனைத்து உதவிகளையும் அரசு அளித் திடும்.

அரசு சார்புடைய புதிய தொழில் பேட்டைகளிலும், தொழில் மையங்களிலும் தொழில் கூடங்கள் மற்றும் மனைகள் இவற்றில் 30 விழுக்காடு மகளிருக்கு ஒதுக்கப்படும். (மேசை யைத் தட்டும் ஒலி.)

புதிய தொழில்களை ஊக்குவிப்பது எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு ஊக்குவிப்பதுடன் ஏற்கெனவே உள்ள தொழில் களும் சிவரச் செயல்பட வேண்டியதன் அவசியத்தை அரசு நன்கு உணர்ந்துள்ளது. அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளின் விளைவாக ஸ்டாண்டர்ட் மோட்டார் நிறுவனம் விரைவில் செயல்படத் தொடங்கும். இதற்கென பூர்வாங்க வேலைகள் கடந்த மாதத்தில் துவக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி.)

எங்கள் அரசு தொழிலாளர்களின் நலன் காக்கும் அரசாகவும் செயல்படுகிறது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மூடிக் கிடக்கும் ஆலைகளை விரைவில் திறக்க முயற்சிகளை மேற் கொள்வதுடன் எங்கள் அரசு பாதிக்கப்பட்ட ஆலைத் தொழி லாளர்களுக்கும் உதவிக்கரம் நீட்டியுள்ளது. நீண்ட நாட்களாக சென்னையில் மூடிக் கிடக்கும் பி. அண்ட் சி. மில் தொழிலாளர் களின் துயரத்தை உணர்ந்து அவர்களுக்கு உதவும் பொருட்டு தமிழ்நாடு அரசு ஏற்கெனவே 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதத் தில் ரூபாய் 6 இலட்சம் மதிப்புள்ள மளிகைப் பொருட்களையும், ஆகஸ்ட் மாதத்தில் ரூபாய் 3 இலட்சம் மதிப்புள்ள மளிகைப் பொருட்களையும் ஆலையின் பண்டகசாலை மூலம் அவர்களுக்கு வழங்க ஆலை நிர்வாகத்திற்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இந்த ஆலை மூடப்பட்டுள்ளதால் மிகவும் பாதிக்கப் பட்டு அவதிப்படும் அந்த ஆலைத் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு ஏதாவது ஒரு சிறிய உதவியாவது செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் பி. அண்ட் சி. மில் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் தலா ரூபாய் 400 வீதம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணை யிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

இந்த ஆலையில் பணிபுரியும் சுமார் 8,000 தொழிலாளர்கள் ஓரளவுக்குப் பயன்பெறுவார்கள். இதற்காக ரூபாய் 32 இலட்சம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப் படும். (மேசையைத் தட்டும் ஒலி.)

தமிழ்நாடு தொழில் அபிவிருத்தி நிறுவனம் 'டிட்கோ' ரூபாய் 600 கோடி மொத்த முதலீடு கொண்ட 9 தொழில் திட்டங்களைச் செயல்படுத்தும். இந்த நிறுவனத்துடன் இணைந்து முதலீடு செய்யக்கூடிய தொழில் முனைவோர்களைத் தொடர்புகொள்ளுமாறு இந்த நிறுவனம் செய்தித் தாளில் விளம்பரங்களை வெளியிட்டுள்ளது. இந்த நிறுவனம் இது சம்பந்தமாக மேல்நடவடிக்கை எடுக்கும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் பேசுகிறபோது மின் உற்பத்தியில் தனியார் துறையைப் இணைக்க வேண்டும் என்ற கொள்கை முடிவை அரசு அறிவித்திருக்கிறது. மின் உற்பத்தி செய்ய தனியார் துறையில் யார் முன்வருவார்கள் என்ற கேள்வியினை எழுப்பினார்கள். ரூபாய் 5,000 கோடி முதலீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள பழுப்பு நிலக்கரி வளத்தை அடிப்படையாகக் கொண்டு 1,500 மெகாவாட் மின் சக்தி உற்பத்தி செய்யும் திட்டத்தை டிட்கோ நிறுவனம் தனியார் நிறுவனத்துடன் இணைந்து கூட்டுத் துறையில் செயல் படுத்துதல் அரசின் பரிசீலனையில் உள்ளது.

பிற்பகல் 1-00

முதல் கட்டமாக ரூபாய் 1,500 கோடி முதலீட்டில் 500 மெகாவாட் உற்பத்தியையும் இது மேற்கொள்ளும். இத்திட்டத் திற்கு ஒப்புதல் வழங்குமாறு மைய அரசு கோரப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் ரூபாய் 395 கோடி செலவில் அதன் வருடாந்திர உற்பத்தித் திறனை 90 ஆயிரம் மெட்ரிக் டன்னிலிருந்து 1,80,000 மெட்ரிக் டன்னாக இரட்டிப்பாக்க திட்டம் கொண்டுள்ளது. இது சம்பந்தமான பணிகள் இவ்வாண்டில் துவங்கும்.

சென்னைக்கு அருகில் சோளிங்கநல்லூரில் 300 ஏக்கர் நிலப் பரப்பில் ரூ. 40.65 கோடி முதலீட்டில் மின் அணு தொழில் நகரம் ஒன்றினை தமிழ்நாடு மின் அணு தொழில் நிறுவனம் அமைக்க



றுப். சிறிய, நடுத்தர மற்றும் பெரிய மின் அணு தொழில்கள் ஒரே மையத்தில் அமைந்திட இது வழி வகுக்கும். இங்கே தேவை யான எல்லா அடிப்படை வசதிகளும் அமைத்துத் தரப்படும்.

ரூபாய் 25 கோடி முதலீட்டில் இத்தாலிய அரசு மற்றும் மைய அரசு உதவியுடன் கம்ப்யூட்டர் மூலம் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி நிலையம் ஒன்று அமைத்திட நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பொறியியல் தொழில்களுக் குத் தேவையான கருவிகள், அச்சுகள், மற்றும் மோல்டுகள் இவற்றை இது உற்பத்தி செய்ய உதவும்.

தமிழ்நாடு கனிம வள நிறுவனம் 'டேமின்' இருக்கிறது. பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டம், சிவகங்கையில் ரூபாய் 15 கோடி முதலீட்டில் 'கிரானைட் பெனிபிசியேஷன்' திட்டம் ஒன்றினை அமைத்திட இந்த ஆண்டில் பணிகள் துவக்கப்படும். இது முழு வடிவில் அமைந்திடும்போது, ரூபாய் 200 கோடிக்கு மேற்பட்ட முதலீட்டில் உயர் தொழில் நுட்பம் கொண்டு பல சார்புத் தொழில்கள் உருவாகிட வழி பிறக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. இதை அனைவரும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அந்த 'கிரானைட் பெனிபிசியேஷன் பிளாண்ட்'-ன் மதிப்பீடு வெறும் 15 கோடி ரூபாய் மட்டுமே தான். ஆனால் இதைத் துவக்கிய பின்னால் அதனால் ஏற்படக் கூடிய 'டவுன் ஸ்ட்ரீம் இன்டஸ்ட்ரீஸ்''-ன் மொத்த மதிப்பீடு 200 கோடி ரூபாயாக இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது. இதைத் தவிர, 'டேமின்' வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் 'கிரானைட்' பாறைகள் வெட்டி மெருகேற்றும் பிரிவுகளை அமைத்திடும். தர்மபுரி மாவட்டத்தில் பர்கூர் அருகே மாதப் பள்ளி கிராமத்தில் 15 கோடி ரூபாய் முதலீட்டில் கிரானைட் தொழில் மையம் அமைத்திட அண்மையில் அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது.

சென்னையில் தரமணியில் ரூபாய் 25 கோடி முதலீட்டில் ஒரு நிரந்தர வாணிபப் பொருட்காட்சி வளாகம் அமைக்கப்படும். இது மாநில அரசும் மத்திய அரசின் 'டிரேட் ஃபேர்' அத்தாரிட்டியும் இணைந்து கூட்டுத்துறையில் அமைத்திடும் திட்டமாகும். இதில் பொருட்காட்சி அகத்தில் பெரிய கூட்டரங்கு, பதுடெல்லியில் உள்ள 'அப்பு கர்' போன்று பொழுதுபோக்கு பூங்கா போன்றவை அடங்கும். இது சம்பந்த மான ஒப்பந்த மடல் டிரேட் ஃபேர் அத்தாரிட்டியுடன் ஒப்பு மிடப்பட்டுள்ளது. இந்த வளாகப் சம்பந்தமான வேலைகள் விரைவில் துவங்கும்.

காக்களூரில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்றுமதி சார்புடைய ஆடைகள் உற்பத்தித் தொழில் பேட்டை ஒன்று அமைக்கப்படும். இது பெருவாரியான வேலைவாய்ப்பிற்கு வழி வகுப்பதோடு [illegible] அவசியமாகத் தேவைப்படும் அந்நியச் செலாவணி

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [1991 செப்டம்பர் 19

ஈட்டவும் வகை செய்யும். இது சம்பந்தமான வேலைகளை 'டிட்கோ' நிறுவனம் மேற்கொள்ளும். ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி நவீன மாதிரிகள் மற்றும் வடிவமைப்புகள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையம் ஒன்று அரசால் அமைக்கப்படும்.

தேசவுத் தொழில் பொருட்களை பொறுத்தவரையில் 1989-90-ல் நாட்டின் மொத்த ஏற்றுமதி ரூபாய் 6,987 கோடி ஆகும். இதில் தமிழகத்தின் பங்கு ரூ. 1,240 கோடியாகும். அதாவது 18 விழுக்காடு ஆகும். இதில் பருத்தி ஆடைகள் ஏற்றுமதி மட்டும் ரூ. 500 கோடியாகும். பன்னாட்டுச் சந்தைகளில் நமது ஆடைகளும் தோல் பொருட்களும் இன்னும் அதிக அளவில் விலை போக வேண்டுமானால் அவை மாறிவரும் நவீன தேவைகளை நிறைவு செய்திடக்கூடிய வகையில் அமைந்திட வேண்டும். எனவே அயல்நாட்டுச் சந்தைகளின் தேவைக்கேற்ப நமது பொருட்களை உருவாக்கக்கூடிய திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்க இம்மையம் வகை செய்யும். இது புது டெல்லியில் உள்ள நேஷனல் இன்ஸ்ட்டிடியூட் ஆப் பேஷன் டெக்னாலஜி. என்.ஐ.எப். டி. நிலையத்தை போன்று அமையப் பெறும். பொருள் உற்பத்தியை அதிகரிப்பதிலே குறைந்த முதலீட்டில் பரவலான முறையில் வேலைவாய்ப்பை உருவாக்குவதிலே சிறு தொழில்கள், ஊரகத் தொழில்கள் இவற்றின் பங்கு மிகவும் முக்கியமானது என்பதனை அரசு உணர்ந்துள்ளது. இவற்றின் வளர்ச்சியினை மேம்படுத்தக்கூடிய வகையில் நடைமுறையினை எளிதாக்குதல், நவீன உத்திகளில் பயிற்சி அளித்தல், மூலப்பொருள்கள் போதுமான அளவில் கிடைக்கச் செய்தல், பொருள் விற்பனைக்கு உதவி அளித்தல், ஊக்குவிப்பு திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்றவற்றுக்கு அரசு முக்கியத்துவம் அளித்திடும்.

பிற்பகல் 1-05

மிகச் சிறிய தொழில் பிரிவுகள் தொழிற்சாலை சட்டத்திலிருந்து விலக்குப் பெற ஏதுவாக தொழிற்சாலைச் சட்டத்தின்படி குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச தொழிலாளர்கள் எண்ணிக்கையை உயர்த்தவும், அதற்கு ஏற்ப தொழிற்சாலைகள் சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டும் எனவும், சிறு தொழில் சங்கங்கள் விடுத்திருந்த கோரிக்கையை அரசு ஏற்க முடிவு செய்துள்ளது. இதனை நீங்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பீர்கள் என நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திருத்தம் கொண்டு வரப்பட்ட பின் தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் ஈர்க்கப்படும் வரம்பு, மின் சக்தி கொண்ட தொழில் பிரிவுகளின் தற்போதுள்ள எண்ணிக்கை அளவான 10 தொழிலாளர்களுக்குப் பதில் 25 தொழிலாளர்களாகவும், மின் சக்தியற்ற தொழில் பிரிவுகளின் தற்போதுள்ள எண்ணிக்கை அளவான 20 தொழிலாளர்களுக்குப் பதிலாக 50 தொழிலாளர்களாகவும் இருக்கும்.



1991 செப்டம்பர் 19] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

10 குதிரைத் திறன் வரை பயன்படுத்தும் தொழிற்சாலைகள் மின்சக்தியைப் பயன்படுத்தாத தொழிற்சாலைகளாக கருதப்படும். தற்போதுள்ள தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு, குறிப்பாக சிறு மற்றும் ஊரகத் தொழில்களின் முன்னேற்றத்திற்குரிய முயற்சிகளை மேற்கொண்டிடும் பணியில் 19 மாவட்ட தொழில் மையங்கள் ஈடுபட்டுள்ளன. இவற்றின் செயல் திறனை மேம்படுத்த அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சிறு மற்றும் ஊரகத் தொழில்களின் முன்னேற்றத்திற்கென அரசு பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தும். அடுத்த 5 ஆண்டுகளில் ஒரு லட்சம் சிறு ஊரகத் தொழில்கள் அமைக்கப்படும். இவற்றின் மூலம் உற்பத்திப் பெருகும். பரவலான வேலை வாய்ப்பு மற்றும் கூடுதலான ஏற்றுமதி இவற்றுக்கு வழி வகுக்கப்படும்.

பிற்பட்ட பகுதிகளின் வளர்ச்சியினை ஊக்குவிக்கும் நோக்குடன் 107 வட்டங்கள் ஒவ்வொன்றிலும் அடிப்படை வசதிகளுடன் கூடிய குறைந்தது 10 தொழில் கூடங்களாவது அமைத்துத்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 1070 தொழில் கூடங்கள் பிற்பட்ட பகுதிகளில் உருவாகும். இந்த 107 வட்டங்கள் ஒவ்வொன்றிலும் தொழில்களுக்குரிய மின் இணைப்பு வசதி ( Industrial Feeder ) குறைந்தது ஒன்றாவது அமைத்துத் தரப்படும். மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் செயல்படும் ஒருமுனை தீர்வுக் குழுக்களின் (Single Windcw Committees) செயல்திறன், தேவையான உரிமங்களும், ஒப்புதல்களும் விரைவாகவும், குறிப்பிட்ட கால அளவுக்குள்ளும் கிடைத்திடக்கூடிய வகையில் மேம்படுத்தப்படும். முடிவுகள் மாவட்ட நிலையிலேயே மேற்கொள்ளத்தக்க வகையில் அதிகாரங்கள் பரவலாக்கப்படும். விண்ணப்பப் படிவங்களும் எளிதுபடுத்தப்படும்.

மாநிலத்தில் தொழில் வளர்ச்சியின் வேகம் விரைவுபட வேண்டுமானால் இதில் மைய அரசின் முதலீடு மிகவும் முக்கியமானது என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. தமிழகத்தில் மைய அரசின் முதலீடு எவ்வாறு குறைந்துள்ளது. இக்குறையினைப் போக்க வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதனை எல்லாம் மாண்புமிகு பிரதமர் அவர்களிடமும், சம்பந்தப்பட்ட மைய அமைச்சர் பெருமக்களிடமும் நேரடியாக வலியுறுத்தப்பட்டுள்ளன. பாதுகாப்புத் துறை, தொலைபேசி தொடர்பு மற்றும் ரெயில் போக்குவரத்துத் துறைகளின் முதலீட்டினை உயர்த்துமாறு மைய அரசை மாநில அரசு வலியுறுத்தும். இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் எல்லாம் பெரு முயற்சிக்குரிய ஒரு சிறு துவக்கமே. இதுசம்பந்தமாக தொடர்ந்து பல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [1991 செப்டம்பர் 19

நாட்டின் தொழில் வளர்ச்சியில் தமிழகம் ஓர் உயர்ந்த நிலையை எய்திட வேண்டும் என்பது அரசின் குறிக்கோள் ஆகும். தமிழகத்தின் தொழில் உற்பத்தியினைப் பெருக்குதல், உற்பத்தித் திறனைப் உயர்த்துதல், பல்லாயிரக்கணக்கான நபர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்துதல், நாட்டின் ஏற்றுமதியில் தமிழகத்தின் பொருள்களும் கூடுதலாக பங்கினைப் பெறுதல் போன்ற குறிக்கோள்களை அடைய தேவையான அனைத்து உதவிகளையும் அளித்திட அரசு முன்வரும். இவற்றைப் பயன் படுத்தி அரசுக்கு ஒத்துழைப்பு தந்து செயலாற்றுவது தொழில் முனைவோரின் பொறுப்பாகும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். பி. பரமசிவம் அவர்களும், உறுப்பினர்கள் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்களும், பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களும், திரு. புருசோத்தமன் அவர்களும் 'கிரானைட் பாலிசி' பற்றி குறிப்பிட்டார்கள்.

பிற்பகல் 1-10

தற்போது நடைமுறையில் உள்ள அரசு ஆணையின்படி, அரசு நிலங்களிலோ அல்லது பட்டா நிலங்களிலோ கறுப்புக் கல்—பிளாக் கிரானைட்—இருக்குமானால், அவற்றை வெட்டி எடுக்கத் தேவையான அரசு நிலங்களுக்கான குத்தகையோ அல்லது பட்டா நிலங்களுக்கான உரிமமோ பெறுவதற்கு விண்ணப்பதாரர்கள் தங்களுக்குச் சொந்தமான வெட்டுதல் மற்றும் மெருகூட்டுதல்—கட்டிங் மற்றும் பாலிஷிங் யூனிட்ஸ்—வசதிகள் கொண்ட தொழிற்சாலை வைத்திருக்க வேண்டும். அல்லது இரண்டு ஆண்டுகளுக்குள் அத்தகைய தொழிற்சாலையை நிறுவ வேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிபந்தனை கடந்த 2 ஆண்டுகளில் நடைபெற்ற தி.மு.க. ஆட்சியால் விதிக்கப்பட்டது. இந்த நிபந்தனைகள், ஏற்றுமதி செய்ய அதிக வாய்ப்புள்ள இந்தத் தொழிலைப் பாதித்ததுடன் அன்னியச் செலாவணி கிடைப்பதையும் கணிசமாகக் குறைத்துள்ளது. தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்குத் தடையாக உள்ள தொழில் துறையின் 2-9-1989 நாளிட்ட அரசாணை எண் 608-ல் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் நீக்கப்படும் (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) புதிய கொள்கைகள் விரைவில் அறிவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் இங்கே உரையாற்றுகின்றபோது சிட்கோ, சிப்காட் ஆகியவற்றின் செயல்பாட்டினைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கொடுத்த கடன்கள் சரிவர வசூலிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். சிப்காட் நிறுவனம் தொழில் முனைவர்களுக்கு பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள் தொடங்க ரூ. 150 இலட்சம்வரை நீண்ட காலக் கடன்களை வழங்கி வருகிறது. 1990-91 ஆம் ஆண்டுக்கான கடன் வசூல் திருப்திகரமாக இல்லை. நிலுவையில் உள்ள கடன்



1991 செப்டம்பர் 19] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

தொகையில் வட்டியுடன் சேர்த்து 35 சதவிகிதம்தான் 1990-91-ல் வசூல் செய்யப்பட்டுள்ளது. தற்போது கடன் தொகை வசூல் சீரமைக்கப்பட்டுள்ளது. இந்த வருடம், சிப்காட் மூலம் வழங்கப்பட்டுள்ள நீண்ட காலக் கடன் மற்றும் வட்டித் தொகை முழுமையாக வசூலிக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயம் சிட்கோ நிறுவனம் தொழில் முனைவர்களுக்கு கடன் எதுவும் வழங்குவதில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன் அவர்கள் கடலூர் தொகுதியிலுள்ள சில பிரச்சினைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கடலூரில் அமைந்துள்ள சிப்காட் வளாகத்திற்கு ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட 463 ஏக்கர் நிலமும் தொழிற்சாலைகள் நிறுவுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வளாகத்தில் தொழிற்சாலைகளைத் துவங்க பலரும் ஆர்வத்துடன் முன் வந்துள்ளனர். எனவே இதனை கருத்திற் கொண்டு, மேலும் 350 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி கடலூர் சிப்காட் வளாகத்தை விரிவுபடுத்த நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடலூர் சிப்காட் வளாகத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருள்கள், மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின்—பொல்யூஷன் கண்ட்ரோல் போர்டின் அளவுகள்படி குறைந்த அளவில் மினிமம் ஸ்டேண்டர்ட்-ல்தான் உள்ளது. எனினும் மேலும் அதிக அளவுக்கு நச்சுத் தன்மையைக் குறைக்க ஒரு (Common effluent treatment plant) அமைக்க வேண்டியது அவசியம். இது பற்றிய ஆய்வு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலத்தடி நீர் இப்பகுதியில் பாதிக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக்கூறிய கருத்தின்மீது, ஒரு வல்லுநர் குழு அமைத்து இதனைப் பரிசீலனை செய்யத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் பேசும்போது Single window Committee என்றால் என்ன, பெரும்பாலான மக்களுக்கு இது என்ன என்று தெரியவில்லை என்று கேட்டார்கள். மாநில அளவில் ஒரு Single Window Committee இருக்கிறது. இதற்கு Chairman ஆக தலைமைச் செயலர், Chief Secretary இருக்கிறார். உறுப்பினர்களாக எல்லாத் துறைகளின் தலைவர்கள்—Heads of Departments இருக்கிறார்கள். Member Secretary ஆக Industries Commissioner இருக்கிறார். இதுபோன்று மாவட்ட அளவில், ஒவ்வொரு

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [1991 செப்டம்பர் 19

மாவட்டத்திலும் Single Window Committee அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சி தலைவர்— Collector Chairman ஆக இருக்கிறார். General Manager District Industries Centre Member-Secretary ஆக இருக்கிறார். மேலும் சம்பந்தப்பட்ட துறைகளின் மாவட்ட அலுவலர்கள்— District Officers இந்தக் கமிட்டியில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இந்த Single Window Committee என்னென்ன பணிகளைச் செய்கின்றது என்பதை ஏற்கனவே தெளிவுபடுத்தினேன்.

பிற்பகல் 1–15

உரிமங்கள் பெறுவது, தேவையான அடிப்படை வசதிகள் பெறுவது லைசென்ஸ் பெறுவது, சின்ன சின்ன ஒப்புதல்களைப் பெறுவது இவற்றிற்கெல்லாம் தொழில் முனைவோர் இங்குமங்கும் அலைவதற்குப் பதிலாக ஓரிடத்திலேயே எல்லா உரிமங்களும், எல்லா அனுமதிகளும் பெறப்பட்டு, அவர்கள் துரிதமாகத் தொழில் துவங்க எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பதுதான் இந்த சிங்கிள் விண்டோ கமிட்டியின் பணிகளாகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் நிறைய நல்ல தரமான மணல் கிடைக்கிறது. அதைப் பயன்படுத்தி கண்ணாடித் தொழிற்சாலை ஒன்றை அமைக்க முடியாதா என்ற வினாவை எழுப்பினார்கள். ஏற்கனவே கூட்டுத்துறையில் ( TIDCO) டிட்கோ நிறுவனம், ( PILCO glass ) பில்கோ' கிளாஸ். என்ற கண்ணாடித் தொழிற்சாலையை தென்னாற்காடு மாவட்டத்தில் துவங்கத் திட்டமிட்டது. இதற்கு நிதி நிறுவனங்களிடமிருந்து ( Financial Institutions ) கடன் பெறுவது மிகவும் சிரமமாக உள்ளது. ஏனெனில் இன்றைக்கு மாநிலத்தில் உள்ள நிலைமை என்னவென்றால், the installed capacity in glass Industry is far in excess of the demand for glass Products. ஏற்கனவே உள்ள கண்ணாடித் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கே போதிய டிமாண்ட் இல்லை. எனவே புதிதாக கண்ணாடித் தொழிற்சாலைகள் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லையென்றே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் டி. சுதர்சனம், தே. குமாரதாஸ், மெ. ஆண்டி அம்பலம், ஆர். சிங்காரம், ஜி. பழனிசாமி ஆகியோர் மானியக் கோரிக்கைகளான தொழில்கள், மற்றும் தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு, ஆகியவற்றின்பேரில் கொள்கையளவில் வெட்டுத் தீர்மானங்களை அளித்துள்ளார்கள். அரசின் 1991–92ஆம் ஆண்டிற்கான தொழில் கொள்கை குறித்து விளக்க அறிக்கை அவை முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.



1991 செப்டம்பர் 19] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

அவர்கள் கோரியுள்ள விளக்கங்கள் அந்த அறிக்கையில் விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் இரா. நடேசன் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 300 கோடி முதலீட்டில் ரப்பர் தொழிற்சாலை அமைப்பது குறித்தும், கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசின் சார்பிலே தொழிற்சாலைகள் அமைப்பது குறித்தும் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார். கன்னியாகுமரி மாவட்டத்தில் கிடைக்கும் ரப்பரைக் கொண்டு சுமார் ரூ. 400 கோடி மூலதனத்தில் மோட்டார் வாகனங்களுக்குத் தேவையான டயர் தொழிற்சாலை ஒன்றை, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) அமைக்கத் திட்டமிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவட்டத்தில் சுமார் 50 ஏக்கர் நிலத்தைத் தேர்ந்தெடுக்க நடவடிக்கையும் தொழில் துவக்கத் தகுந்த பங்குதாரர்களையும் தேர்வு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். வியாபார ரீதியாக இத்திட்டத்திற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பது தெளிவானவுடன் டிட்கோ இத்தொழிற்சாலையை நிறுவ வேண்டிய ஏற்பாடுகளை மேற்கொள்ளும்.

மேலும் தேங்காயெண்ணெயை மூலப் பொருளாகக் கொண்டு ரூ. 20 கோடி செலவில் கூட்டுத்துறையில் ஒரு தொழிற்சாலை நிறுவ 'டிட்கோ' நிறுவனம் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். சுந்தரதாஸ் அவர்கள், மூடப்பட்டுள்ள ஸ்டாண்டர்டு மோர்ட்டார்ஸ் நிறுவனத்தை மீண்டும் திறப்பதற்கான துரித நடவடிக்கை எடுத்து, அதை லாபகரமான தொழிற்சாலையாக மாற்றுவதற்காக ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார். ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனம், தொழில் மற்றும் நிதி புனரமைப்பு குழுமத்தில் (B.I.F.R.) விசாரணையின் கீழ் உள்ளது. அந்தத் தொழிற்சாலையை மீண்டும் திறக்க இந்த அரசு ரூ. 3 கோடியை மிகக் குறைந்த வட்டிக்கு, அதாவது 9 சதவீத வட்டிக்குக் கடனாகக் கொடுக்க சம்மதித்துள்ளது. கடன் வழங்கிய மற்ற வங்கிகளிடமும் சில சலுகைகளை வழங்க அரசு கேட்டுள்ளது. மத்திய அரசை, சுங்கத் தீர்வை சலுகை அளிக்குமாறும் வேண்டிக் கொண்டுள்ளோம். அதற்கிணங்க கடன் வழங்கிய வங்கிகள் இச்சலுகைகளை வழங்க [illegible] கொண்டுள்ளன என்பதையும், அந்தத் தொழிற்சாலையை [illegible] பூர்த்தி [illegible] முன் [illegible] வேலைகள் [illegible]

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [1991 செப்டம்பர் 19

சென்ற ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டு விட்டன என்பதையும், அத்தொழிற்சாலை வரும் ஜனவரி 1992-ல் திறக்கப்படும் என்ற நம்பிக்கையையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் தொழில் கல்வி பயின்ற இந்திய ஆட்சிப் பணியாளர்களை தொழில் துறைக்கு செயலாளராக நியமிக்க வேண்டுமென்ற ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார். தொழில் துறை இன்னாள் வரை மிகவும் சிறப்பாக பணியாற்றி வருகிறது என்பதையும் இதில் இந்திய ஆட்சிப் பணியாளர்களின் பங்கு போற்றத் தக்க வகையில் அமைந்துள்ளது என்பதையும், மேலும் நிர்வாகப் பொறுப்பில் அனுபவம் மிக்க அலுவலர்களின் பங்கு தொழில் வளர்ச்சிக்கு மிகவும் தேவை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். தங்கராஜ் அவர்கள் ஆண்டிமடம் பகுதியில் முந்திரிக்கொட்டை உடைப்புத் தொழிற்சாலை ஒன்றையும், செந்துறை ஒன்றியத்தில் சர்க்கரை ஆலையையும், சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றையும் அமைப்பது பற்றி விவாதிக்க ஒரு வெட்டுப் பிரேரணையைக் கொண்டுவந்துள்ளார்கள்.

பிற்பகல் 1-20

திருச்சி மாவட்டத்தில் ஏற்கனவே பொதுத் துறையின் கீழ் ஒரு சர்க்கரை ஆலையும், தனியாரின் கீழ் மூன்று சர்க்கரை ஆலைகளும், மேலும் ஒரு அரசு சிமெண்ட் ஆலையும் இயங்கி வருகின்றன. ஆகவே, அம்மாவட்டத்தில் தற்பொழுது வேறு தொழிற்சாலைகள் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.சா. இராசாராமன் அவர்கள் காவேரி ஆற்றுப் படுகையில் கிடைக்கும் கச்சா எண்ணெயைச் சுத்திகரிக்க நாகப்பட்டினம் அருகே உள்ள நரிமணத்தில் ஆலை ஒன்றினைத் துவங்குவது பற்றி விவாதிக்க ஒரு வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்துள்ளார். தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், பனங்குடி கிராமத்திற்கு அருகில் ஆண்டு ஒன்றுக்கு 0.5 மில்லியன் டன் கச்சா பெட்ரோலியம் வடித்து எடுக்கும் ஆலை ஒன்றினை ரூபாய் 114 கோடி முதலீட்டில் அமைக்க சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் முடிவு எடுத்துள்ளது. ஆலை அமைப்புக்கான நிலம் கையகப்படுத்தும் பணியும் முடியும் தருவாயில் உள்ளது. இந்நிலையில் நரிமணத்தில் தனியாக ஆலை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்கள் உப்பு உற்பத்தியின் முக்கியத்துவம் பற்றி வேதாரண்யம் தொகுதியை தொழில்துறையில் [illegible] தாலுகாவாக அறிவித்து



1991 செப்டம்பர் 19] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

சிறு தொழில் முனைவோருக்கு மானியத்துடன் கூடிய கடன் உதவிகள் 'சிட்கோ' மற்றும் 'டிக்' மூலம் கிடைக்க வகை செய்வது குறித்து விவாதிக்க ஒரு வெட்டுத் தீர்மானம் கொண்டுவந்துள்ளார். வேதாரண்யம் வட்டத்தைப் பின்தங்கிய வட்டமாக அரசு ஏற்கனவே அறிவித்து உள்ளது. அப்பகுதியில் சிறு தொழில் அமைக்க முனைவோர் தக்க திட்ட அறிக்கையுடன் மாவட்ட தொழில் மையத்தை அணுகினால் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் உதவிகள் மற்றும் விற்பனை வரி தள்ளிவைப்பு போன்ற சலுகைகள் வழங்க தற்போதுள்ள விதிமுறைகளில் இதற்கு இடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்கள் வேதாரண்யம் தொகுதியில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட காஸ்டிக் சோடா தொழிற்சாலை 'டிட்கோ' மூலமாக உடனடியாகத் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க இன்னொரு வெட்டுத் தீர்மானத்தைக் கொடுத்து உள்ளார். தஞ்சை மாவட்டத்தில், வேதாரண்யம் பகுதியில் கிடைக்கும் உப்பைப் பயன்படுத்தி காஸ்டிக் சோடா ஆலை ஒன்று 'டிட்கோ' நிறுவனத்தின் கூட்டுத்துறை நிறுவனமான தமிழ்நாடு பெட்ரோ-பிராடக்ட்ஸ் நிறுவனத்தின் ஒரு விரிவாக்கத் திட்டமாக நிறைவேற்றும்படி ஏற்கனவே அரசு அனுமதி வழங்கிவிட்டது. இத்திட்டத்திற்கான தொழில் நுட்பம் பெறும் முயற்சியில் பெட்ரோ-பிராடக்ட்ஸ் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. மத்திய அரசின் அனுமதி கிடைத்ததும் முதலீடு பற்றி முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன், மயிலாடுதுறை ஒன்றியத்தில் புதிய காகித ஆலை துவங்கப்படுவதன் அவசியம் பற்றி விவாதிக்க ஒரு வெட்டுப் பிரேரணை கொண்டு வந்துள்ளார். தஞ்சாவூர் மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியத்தில் புதிய காகித ஆலை நிறுவும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் அவர்கள் பேராவூரணியில் ஒரு தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை துவங்குவது குறித்து விவாதிக்க ஒரு வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்துள்ளார். பேராவூரணியில் தேங்காயெண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்குவது குறித்து தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடம் தற்போது கருத்துரு ஏதும் இல்லை. இருப்பினும் தனியார் எவரேனும் தொடங்க முன் வந்தால் அரசு தக்க உதவிகளை அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (திரு. ஆர். சிங்காரம் மேசையைத் தட்டினார்). நீங்கள் வேண்டுமானால் தொடங்குங்கள்; உங்களுக்கு உதவி செய்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. சிங்காரத்துக்கு அந்த வாய்ப்பு இருக்கிறது : தொடங்கலாம்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பன்னீர்செல்வம் அவர்கள், மிகவும் பின்தங்கிய பகுதியான திண்டிவனத்தில், சுற்றுப்புறத்தில் உள்ள கரும்புகளின் சக்கையைப் பயன்படுத்தி காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலையை ஆரம்பிப்பது குறித்து விவாதிக்க வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்துள்ளார். தென் ஆற்காடு மாவட்டத்தில் கரும்பு சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு ஆண்டுக்கு இரண்டு இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தித் திறனுடன் புதிய காகித ஆலை ஒன்றை சுமார் ரூபாய் ஆயிரம் கோடி மதிப்பீட்டில் நிறுவும் திட்டம் ஒன்று தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திடம் உள்ளது. இத்திட்டத்திற்காக மத்திய அரசின் இசைவுக் கடிதம் பெறப்பட்டு பூர்வாங்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே, திண்டிவனம் பகுதியில் புதிய காகித ஆலை ஏற்படுத்தும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பன்னீர்செல்வம் அவர்கள், 'திண்டிவனம் வட்டம், கூட்டேரிப்பட்டில் தொழிற்பேட்டை வளாகம் அமைப்பது குறித்து விவாதிக்க' ஒரு வெட்டு தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளார். தற்போது திண்டிவனம் வட்டத்தில் தொழில் வளாகம் அமைக்கும் திட்டம் எதுவும் இல்லை. இருப்பினும் தனியார் எவரேனும் அமைக்க முன் வந்தால் அரசு அனைத்து சலுகைகளையும் அளிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் 'நலிவுறும் தொழிற்சாலைகளுக்கு, ஆலோசனைக் குழு அமைக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க' ஒரு வெட்டுப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளார்.

B. I. F. R. — Board for Industrial and Financial Reconstruction என்ற புனர் அமைப்பு குழுமம் ஒன்று 15-5-1987 முதல் செயல்பட்டு வருகிறது. இந்த மாநிலத்தில் இந்தக் குழுமத்திடம் பதிவு செய்யப்பட்ட 61 நலிவுற்ற நிறுவனங்களில் 18 நிறுவனங்கள் மீண்டும் செயல்பட வழி வகுத்துள்ளது. ஆகவே, நலிவுறும் தொழிற்சாலைகளுக்கு என்று தனியாக ஆலோசனைக் குழு எதுவும் தேவையில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த பி. ஐ. எப். ஆர். என்பது மேஜர் அண்ட் மீடியம் இண்டஸ்ட்ரீஸ்க்காக அமைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். அதைப் போலவே மாநில அளவில் S.L.I.I.C.— State Level Inter Institutional Committee என்ற அமைப்பு இருக்கிறது. இது பாதிக்கப்படும் Small and Medium Industries-க்காக



உள்ளது. ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்க்காக. ஆகவே, மேஜர் இண்டஸ்ட்ரீஸ்க்காக பி. ஐ. எப். ஆர். இருக்கிறது. That is for major and medium Industries. மாநில அளவில் ஸ்மால் ஸ்கேல் சிக் இண்டஸ்ட்ரீஸ்க்காக எஸ்.எல்.ஐ.ஐ.சி. என்ற நிறுவனமும் இருக்கிறது. ஆகவே, புதிய அமைப்பு எதுவும் தேவையில்லையென்று அரசு கருதுகிறது.

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி.ஐ.எப்.ஆர். என்பது இந்திய அரசினுடைய கட்டுப்பாட்டின்கீழ் இருக்கிறது நான் சொன்னது—It is something like an Industrial clinic to monitor and if necessary to nurse அந்தமாதிரி எண்ணத்தில்தான் அந்த யோசனையைச் சொன்னேன். ஆகவே, அதைப்பற்றி அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்து பரிசீலிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா நடேசன் அவர்கள், தமிழ்நாட்டில் உள்ள சிறுதொழில் கூடங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், அரசு நிறுவனங்களுக்கு தேவையாக இருந்தும் அவைகளை வாங்காமல், வெளி மாநிலங்களில் இருந்தும், பெரும் தொழில் நிறுவனங்களிடமிருந்தும் அரசு நிறுவனங்கள் வாங்குவதன் அவசியம் குறித்து விவாதிக்க' ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளார். தற்போது மாநிலத்தில் உள்ள பெரும் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் பொருள்களை விட 15 சதவிதம் விலை முன்னுரிமையை சிறு தொழிற்சாலைகள் தயாரிக்கும் பொருள்கள் அனுபவித்து வருகின்றன. இதற்கு மேலும் அதிக விலை கொடுத்து வாங்கும் பொருள்கள் அவைகளின் விலை அல்லது தரத்தைப் பொறுத்து வாங்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. இராஜேந்திரன் அவர்கள் வேதாரண்யம் சமூகக் கூடத்தில் தண்ணீர் மேல்நிலைத் தொட்டி கட்டுதல் குறித்து விவாதிக்க ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளார். இதற்கான விரிவான மதிப்பீடு தொழில் வணிகத்துறை கட்டுமானப் பிரிவு கண்காணிப்பு பொறியாளரிடமிருந்து பெறப்பட்டவுடன் உப்பு தொடர்பான வட்டார ஆலோசனைக் குழுவிலும், தொழிலாளர் நல வாரியத்திலும் கூடுதல் நிதியொதுக்கீடு பெறப்பட்டு, தண்ணீர் மேல்நிலைத் தொட்டி ஒன்று வேதாரண்யம் சமூகக் கூடத்தில் நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பன்னீர்செல்வம் அவர்கள், கருப்புக் கல் கனிம வளம் அதிகம் உள்ள திண்டிவனம் பகுதியில் கருப்புக்கல் மெருகேற்றும் தொழிற்சாலையை பெரிய

அளவில் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க' ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளார். திண்டிவனம் பகுதியில் கிடைக்கக்கூடிய கருப்புக் கற்கள் சென்னைக்கு அனுப்பபப்படுகின்றன. மேலும் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள கருப்புக்கல் மெருகேற்றும் தொழில் வளாகத்திற்கும் இந்தக் கற்கள் அனுப்பப்பட உள்ளன. ஏற்கனவே, திண்டிவனத்தில் தனியார் மெருகேற்றும் தொழிற்சாலைகள் நிறைய அனுமதிக்கப்பட்டுள்ளதால் திண்டிவனத்தில் பெரிய அளவில் கருப்புக்கல் மெருகேற்றும் தொழிற்சாலை அமைக்கும் எண்ணம் தற்போது அரசக்கு இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. இராஜேந்திரன் அவர்கள், 'தொழில் வளர்ச்சியிலும் வேலை வாய்ப்பிலும் மிகவும் பின்தங்கிய வேதாரண்யம் தொகுதியில் இளைஞர்களுக்கு மாவட்ட தொழில் மையம் மூலமாக கடன் வசதியில் அதிகளவு பயனாளிகளைத் தேர்ந்தெடுத்து கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து விதாதிக்க' ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளார். மாவட்ட தொழில் மையம் படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் சிறுதொழில்கள் தொடங்குபவர்களுக்கு 35 ஆயிரம் ரூபாய் வரையில் கடன் வழங்குகின்றது. தஞ்சை மாவட்டத்தில் இதற்குரிய நடப்பு நிதியாண்டு குறியீடு 600 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. பணிக்குழு—'டாஸ்க் போர்ஸ்' மூலமாக மாவட்ட தொழில் மையம் விண்ணப்பங்கள் ஆய்வு செய்து வங்கிகளுக்கு பரிந்துரை செய்கிறது.

*பிற்பகல் 1–30*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு உறுப்பினர் பி. வி. இராஜேந்திரன் அவர்கள் வேதாரண்யம் தொகுதி, கோவில்பத்து கிராமத்தில் தொழிற்பேட்டை ஒன்று துவங்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க இன்னொரு வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்துள்ளார்.

தற்போது, வேதாரண்யம் தொகுதி, கோவில்பத்து என்ற கிராமத்தில் தொழிற்பேட்டை எதுவும் அமைக்கும் உத்தேசம் இல்லை. அப்பகுதியில் தொழில் முனைவோர்கள் தொழிற் கூடங்களை அமைக்க முன்வருவார்களேயானால், தொழிற் பேட்டை அமைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வி. இராஜேந்திரன் அவர்கள், வேதாரண்யம் தொகுதியில் உற்பத்தியாகும் மல்லிகைப் பூவினைக் கொண்டு ஒரு வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, மற்றும் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்து உள்ளார்.

நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள, தென்காசியில் அயல்நாட்டு நிறுவனத்தின் முதலீடு மற்றும் தொழில் நுட்ப உதவியுடன், தமிழ்நாடு வேளாண் தொழில் கழகத்தால் மல்லிகைப் பூவிலிருந்து வாசனை திரவியம் உற்பத்தி செய்ய தொழிற்சாலை நிறுவ முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அயல்நாட்டு நிறுவனம் இதில் தொடர்ந்து ஆர்வம் காட்டாததால், இம்முயற்சி கைவிடப்பட்டது. பின்னர், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்து, இத்தொழிற்சாலையை ஆரம்பிக்க செய்த முயற்சி பலன் தரவில்லை. இதனை தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஆரம்பிக்க மேற்கொண்ட முயற்சியும் கைவிடப்பட்டது. இத்தொழிற்சாலையை ஆரம்பிக்க அதிக முதலீடும், சிறந்த அயல்நாட்டு தொழில் நுட்பமும் தேவையாக இருப்பதாலும், மேலும் இவ்வுற்பத்திப் பொருட்களுக்குக் கடுமையான போட்டி நிலவுவதாலும், இம்முயற்சி கைவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசாராமன் அவர்கள், நலிவுற்ற தொழிற்சாலைகளை ஏலத்திற்கு விடாமல், அவற்றைப் புனர் அமைப்பதன் மூலம் தேவைகுறித்து விவாதிக்க ஒரு வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்துள்ளார். நலிவுற்ற சிறுதொழில்களுக்கு அரசு தொடக்க உதவித் தொகையாக 50 ஆயிரம் ரூபாய் வரை வழங்குகிறது. இதற்கு வட்டி, ஆண்டு ஒன்றுக்கு 9.75 சதவீதமாகும். முதல் 4 ஆண்டுகாலத்திற்கு தவணைத் தொகை செலுத்துவதை ஒத்திவைப்பதுடன், 9 ஆண்டுகளில், இந்த தொடக்க நிதி உதவி திருப்பி செலுத்தலாகும். இத்தொடக்க உதவித் தொகையின் அடிப்படையில் ஏனைய டி.ஐ.ஐ.சி. போன்ற நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் நடைமுறை மூலதனம், ஒர்க்கிங் கேப்பிடல் அளித்து, நலிவுற்ற தொழில்களுக்கு உதவி செய்கின்றன. மாநில அளவிலான நிறுவனங்களின் குழுக் கூட்டத்தில் நலிவுற்ற சிறு தொழில்களின் பிரச்சினைகள் விவாதிக்கப்படுகின்றன. இக்கூட்டத்தில், சிறு தொழில் சங்கப் பிரதிநிதிகள், நலிவடைந்த தொழில் பிரிவுகளின் பாதிக்கப்பட்ட தொழில் முனைவோர் கூறுவதைக் கேட்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இதனால், இக்குழு, சிறுதொழில் பிரிவுகளின் குறைகளைக் களைந்து தொழிலைப் புதுப்பிக்க உதவுவதற்கு வலுவான அமைப்பாக செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[செல்வி ஜெ. ஜெயலலிதா] [1991 செப்டம்பர் 19

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள், பெருமுகை அலமேலுரங்காபுரம், சத்துவாச்சேரி, தொரப்பாடி, சென்பாக்கம், கருக்காம்புத்தூர், மற்றும் கோணவட்டம் கிராமங்களில், புதிதாக தொழிற்சாலைகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க ஒரு வெட்டு தீர்மானம் கொண்டு வந்துள்ளார்.

தொழில் முனைவோர்கள் மேற்குறிப்பிட்ட கிராமங்களில் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டும், அப்பகுதியிலுள்ள மக்களின் தொழிற் திறனை அடிப்படையாகக் கொண்டும், தொழில்களைத் துவக்க, தக்க கருத்துக்களுடன், மாவட்ட தொழில் மையத்தை அணுகினால், தொழில் துவக்க ஆதரவும், வழிவகைகளும் செய்து கொடுக்கப்படும். மேற்கண்ட கிராமங்களில் நடுத்தர, மற்றும் பெருந்தொழில்களை அமைத்திட சாத்தியக்கூறுகள் எதுவும் இருப்பதாக தெரியவில்லை. அப்படி இருப்பின், தனியார்கள், அங்கு அத்தகைய தொழில் அமைக்க முன்வருவார்களானால் அவர்களுக்கும் உதவிகள் நல்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் அவர்கள், தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, திருச்சிற்றம்பலம், மற்றும் பெருமகளூர் பகுதியில் தச்சுக் கொல்லுப் பட்டறை துவங்க ஏற்பாடு செய்வது பற்றி விவாதிக்க ஒரு வெட்டுத் தீர்மானம் கொண்டு வந்துள்ளார்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் தச்சுக் கொல்லுப்பட்டறை தொழில் கிராமப்புறங்களில் பேணி வளர்க்கப்படுகிறது. இத்தொழிலுக்கு என வாரியத்தின் கீழ் 4 வாரிய அலகுகளும் 69 கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. மேற்கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துவது தொழில் அபிவிருத்திக்கு உகந்தது அல்ல என அரசு ஒப்புதலுடன், தற் சமயம் வாரியம் மேற்படி சங்கங்கள் ஆரம்பிப்பதை தற்காலிகமாக ஓர் ஆண்டுக்காலத்திற்கு நிறுத்தியுள்ளது.

கதர் கிராமத் தொழில் வாரியத்தின் நேரடி அலகுகள் லாபகரமாக இயங்காத காரணத்தினால், அத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு நிதி உதவி அளிப்பதன் மூலம் அத்தொழிலை பெரிதும் வளர்க்க முடியும் என கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு கண்டறிந்து, அதன்படி நிதி உதவி அளிக்கிறது.

கதர் கிராமத் தொழில் வாரியம், தச்சுக் கொல்லுப்பட்டறைத் தொழில் ஆரம்பிக்க நிதி உதவி அளித்து வருகிறது.

பிற்பகல் 1-35

அவ்வகையில் இதுவரை தச்சுக்கொல்லு தொழில் துவங்கிட 15,360 நபர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் தச்சுக் கொல்லுத் தொழிலில் ஈடுபடும் கைவினைஞர்



1991 செப்டம்பர் 19] [செல்வி ஜெ. ஜெயலலிதா]

களுக்கு மேற்கொண்டு 762 நபர்களுக்கு நிதியுதவி அளிக்கப்படும். மேற்படி பகுதியில் ஆர்வமுள்ள கைவினைஞர்கள் நிதியுதவி கோரினால் விதிமுறைகளுக்கு உட்பட்டு தனி நபர்களுக்கு கடன் வழங்கிட ஆவனச்செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்கள் பேசிய கருத்துக்களுக்கும், மற்றும் அவர்கள் கொண்டு வந்த வெட்டுத் தீர்மானங்களுக்கும் பெரும்பாலும் என்னுடைய உரையில் பதில் கிடைத்திருக்கும் என நம்புகிறேன். சில கருத்துக்களுக்கு பதில் கிடைக்கவில்லை என்றாலும் அவர்கள் பேசிய அனைத்தும் குறிப்பேட்டில் உள்ளன. அவைகளின் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து, வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அவைகளைத் திரும்ப பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தைத் தொழில் துறையில் அகில இந்தியாவிலேயே தலைசிறந்த முதல் மாநிலமாக உயர்த்தும் எங்கள் லட்சியத்தை அடைய மாண்புமிகு அவை உறுப்பினர்கள் அனைவரது ஒத்துழைப்பையும் பெரிதும் வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரது ஒத்துழைப்போடும் தமிழக மக்களின் பேராதரவோடும் எங்களுடைய லட்சியத்தை இலக்கை அடைந்தே தீருவோம் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, என் பதிலுரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் தன்னுடைய இலாக்காவின் மானியக் கோரிக்கையின் மீது தரப்பட்ட அனைத்து வெட்டுப் பிரேரணைகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். நேற்றைய தினம் அதேபோல் அனைத்து வெட்டுப் பிரேரணைகளுக்கும் பதில் அளித்தார்கள். முறையாக முன் மொழியப்பட்ட வெட்டுப் பிரேரணைகளுக்குக் கூட அமைச்சர்கள் பதில் அளிக்கின்ற பழக்கத்தை நம்முடைய அவையிலே விட்டுவிட்டு நீண்ட நாட்களாகிவிட்டது. எனவே அனைத்து வெட்டுப் பிரேரணைகளுக்கும் இரண்டு நாட்களாக பதிலளித்த முதல்வர் அவர்களுக்கு எதிர்க்கட்சியின் சார்பில் நன்றியினை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இன்றைய தினம் புதிய தொழில்கள் துவங்க பல ஊக்கச் [illegible]களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். கடந்த காலத்தில் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக்

[திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்] [1991 செப்டம்பர் 19

காலத்தில் இதேபோன்று பல சலுகைகள் அறிவிக்கப்பட்டு பல தொழில்கள் தொடங்கப்பட்டன, இடையிலே வந்த ஜானகிஅம்மையார் ஆட்சிக் காலத்திலேயும், ஆளுநருடைய ஆட்சிக் காலத்திலேயும் அந்தத் தொழில்களுக்கு மானியமாக வழங்கப்பட்ட வேண்டிய தொகை நிதிப் பற்றாக்குறையின் காரணமாக, கொள்கை அளவிலே எடுக்கப்பட வேண்டிய முடிவுகள் எடுக்கப்படாததன் காரணமாக நிலுவையில் நின்றுவிட்டது. அதற்குப் பின்னாலே அமைந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னாலே துவங்கப்பட்ட தொழில்களுக்கு மட்டும் தான் மானியம் வழங்கப்படும், இடைப்பட்ட காலத்திலே துவங்கப்பட்ட தொழில்களுக்கு மானியம் வழங்கப்படமாட்டாது என்று அரசியல் நோக்கத்தோடு ஒரு முடிவு எடுத்தது, அதனாலே பல தொழில்கள் இன்றையதினம் நசிந்து நின்று விட்டன. இப்படிப்பட்ட தொழில்களுக்கு எல்லாம் நிலுவையிலே இருக்கின்ற அந்த மானியத் தொகையை இந்த அரசு வழங்க வேண்டும். அதற்கான முடிவு எடுத்து, இந்த அரசு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரையும் பழி வாங்கவேண்டுமென்ற நோக்கம் இந்த அரசுக்கு கிடையாது. எங்களுக்கு இருக்கின்ற, இந்த அரசுக்கு இருக்கின்ற ஒரே நோக்கம் தமிழகம் தொழில் வளம் பெறவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தியாவில் முதல் இடம் பெற வேண்டும். எனவே அரசியல் நோக்குடன் யாருக்கும் நியாயமாக வழங்கப்பட வேண்டிய மானியம் நிறுத்தப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இந்த உரையைக் கேட்டு நாங்கள் எல்லாம் மெய் மறந்து போய் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். இங்கே அண்ணா மாவட்டத்திலே, அதுவும் குறிப்பாக நிலக்கோட்டை தொகுதியிலே ஒரு தொழிற்சாலை நிரந்தரமாக வர இருக்கிறது. அதற்கு எத்தனை ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரம் தற்போது என்னிடம் இல்லை. இதைப்பற்றி விவரத்தைக் கேட்டறிந்து, பின்னர் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது ; இப்போது வாக்கெடுப்பு.

## கோரிக்கை எண் 24—தொழில்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு இரா. நடேசன்.

திரு. இரா. நடேசன் : இல்லை.

பிற்பகல் 1-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. நடேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது. டாக்டர் தே. குமாரதாஸ் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றது.

" தொழில்கள் " பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ரூ. 9,78,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும் " என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை " என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி.)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

[1991 செப்டம்பர் 19

## கோரிக்கை எண் 54—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 54—' தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு ''. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது. திரு. ஜி. பழனிசாமி தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்த விரும்புகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

'' தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு '' பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 19,48,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்' என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெற்றது.

## 6.—தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.



1991 செப்டம்பர் 19]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள் என்றுள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 20—9—1991 அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய முற்பகல் நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 4 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-42 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4-00

பேரவை மீண்டும் பிற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் கூடியது.

## 5. மானியக் கோரிக்கைகள், 1991-92, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

## (இ) கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் பற்றிய 31-ம் என் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 102,96,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் " என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண். 522, திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பேராவூரணி தொகுதியில் ஆதி திராவிடர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்ட பழைய வீடுகள் இடிந்தும், புதிய வீடுகள் பழுதுபட்டும் உள்ள அம்மையாண்டி—கஞ்சங்காடு, செருவாவிடுதி (மே) நெய்வவிடுதி காலனிகளைப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்பற்றிய 31 ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 102,96,18,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானமும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

0மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த " ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறையின் மானியக் கோரிக்கை மீதான கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதையே நான் தமிழில் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பேட்டிலே பதிவு செய்து கொண்டு, ** மாண்புமிகு உறுப்பினர்கள் மேலான கருத்துக்களையும், ஆலோசனைகளையும் அளித்த பிறகு எனது பதிலைக் கூறுகிறேன் என்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. போளூர் வரதன்.

*திரு. போளூர் வரதன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத்துறையினுடைய மானியக் கோரிக்கையிலே எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு நாடு சுதந்திரம்

**273—310 ஆம் பக்கங்களில் மூன்றாம் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.



பெற்ற 44 ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையிலே அண்ணல் காந்தியடிகள் அவர்களும், டாக்டர் அம்பேத்கார் அவர்களும் இந்தச் சமுதாய மக்களுக்காக எதைப் பெறவேண்டுமென்று விரும்பினார்களோ அது இன்றைக்கு இந்த நாட்டிலே கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். சமுதாயத்திலே சமூக நீதி கிடைக்க வேண்டும், பொருளாதார வளர்ச்சி பெறவேண்டும், கல்வி வளர்ச்சி பெற வேண்டும், மற்ற இன மக்களோடு இந்த மக்கள் சேர்ந்து வாழவேண்டும் என்று அண்ணல் காந்தியடிகளும், டாக்டர் அம்பேத்கார் அவர்களும் அன்று எண்ணினார்கள். சுதந்திரம் பெற்ற பின்னாலே அதற்கான உத்திரவாதத்தை பண்டித நேரு அவர்களும் காந்தியடிகள் அவர்களும் அண்ணல் அம்பேத்காரிடமே கொடுத்து சட்டவடிவமாக்கி இந்த மக்களுக்கு சட்டத்தின் மூலமாக உரிமைகள், எவை எவைகள் தேவையோ அவற்றையெல்லாம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலே எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள் பெருந்தன்மையாக. அதை ஏற்றுக்கொண்ட டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இன்றைக்கு சட்ட வடிவாக இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலே இந்த இன மக்களுக்கு பாதுகாப்பு கொடுத்தும், இன்றைக்கு நாட்டிலே நடந்துகொண்டு இருக்கின்ற தீமைகளை எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். தமிழகத்திலே இன்றைக்கு பல்வேறு கிராமங்களிலே தாழ்த்தப்பட்டவர்கள் தெருக்களிலே செருப்புகள் அணிந்துகொள்ள முடியாத ஒரு சூழ்நிலை, நடந்து செல்ல முடியாத ஒரு சூழ்நிலை, ஹோட்டலிலே உணவு உண்ண வேண்டும் என்று சொன்னாலும் தனியான இடத்திலே அமர்ந்து உண்ண வேண்டும் என்கின்ற சூழ்நிலை இன்றைக்கு தென் மாவட்டங்களிலே பல பகுதிகளிலே இன்றைக்கு என்னால் காண முடிகிறது. அதுமட்டுமல்ல. சேலம் மாவட்டத்திலே பல்வேறு பகுதிகளிலே இன்றைக்கும் தனியாக டீ கடைகளிலே டீ டம்ளரை வைத்து டீ கொடுக்கின்ற ஒரு நிலைமை இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இறந்த சடலத்தை எடுத்துச் செல்லவேண்டுமென்று சொன்னாலும் கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழியில்லாத சூழ்நிலை இன்றைக்கும் இருக்கிறது. எத்தனையோ சட்டங்கள் கொண்டுவந்தாலும் அந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற அதிகாரிகள் அந்தப் பகுதியிலே இருக்கின்ற பணக்காரர்களுக்கும், பண்ணை ஆட்களுக்கும் தலை வணங்குகின்ற காரணத்தினாலே இன்றைக்கு சமூக நீதி ஹரிஜன மக்களுக்கு மறுக்கப்படுகிறது என்பது தான் இந்த நாட்டிலே உண்மை.

பிற்பகல் 4-05

அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இருந்தபோது இந்த சமுதாயத்தில் புரையோடிக் கொண்டிருக்கிற இந்த மக்களுடைய உரிமைக்காக பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டங்களைக் கொண்டுவருகின்ற போது அன்றைக்கு இந்த நாட்டில் எமர்ஜென்சி இருந்த காலத்தில் அதிகாரிகள், பணக்காரர்கள், பண்ணைக்காரர்கள் அடி பணிந்

தார்கள். அதற்குப் பின்னால் அந்தச் சட்டங்கள் எல்லாம் மாற்றப்பட்டு இன்றைக்கு அந்த மக்களுக்கு அநீதி இழைக்கின்ற கொடுமையை இன்றைக்கும் பார்க்கிறோம். சென்னை நகரத்தில் இன்றைக்கும் கூட நீங்கள் தாழ்த்தப்பட்டவன் என்று சொல்லி வாடகைக்கு வீடு கேட்டால் கொடுக்கிறார்களா என்று சொன்னால், இல்லை. எத்தனைப் பெரிய பட்டங்கள் பெற்று இருந்தாலும், ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ்., படித்த அதிகாரிகள் கூட வேண்டுமானாலும் பரிசோதனைக்கு நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவன் நான் என்று சொல்லி சென்னையிலே, மயிலாப்பூரில், திருவல்லிக்கேணியில், தி. நகரில் வீடு வாடகைக்கு கேட்கச் சொல்லுங்கள். கொடுக்கிறார்களா என்று பார்ப்போம். அப்படிக் கொடுக்கிறார்கள் என்று சொன்னால் இந்த அவை கொடுக்கின்ற தண்டனையை நான் ஏற்றுக்கொள்வதற்கு தயாராக இருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு தனியார் பள்ளிகளில் பார்க்கின்ற போது குறிப்பாக நான் என்னுடைய குடும்பத்தில் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியை சொல்லுகிறேன். மயிலாப்பூரில் ஒரு தனியார் பள்ளியில் என்னுடைய குழந்தை படிக்கிறான். நான் கலப்புத் திருமணம் செய்து கொண்டவன். நான் முதலில் சென்று அந்தப் பள்ளியில் எனது மகனுக்கு இடம் கேட்கின்றபோது தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவன் என்பதற்காக இடம் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். மறுத்து விட்டார்கள். அதற்குப் பின்னாலே, எனது மனைவியை அனுப்பி மகனுக்கு சீட் கேள் என்று சொன்னேன். எனது மனைவி சென்ற உடன் அந்தப் பள்ளியில் என் மகனுக்கு இடம் கொடுத்து விட்டார்கள். காரணம் அவள் ஒரு பிராமணர் இனத்தைச் சேர்ந்தவள். அதற்குப் பின்னால் அந்தப் பள்ளிக்கு சென்று நான் கேட்டேன். இது என்ன நியாயம் என்று கேட்டபோது உங்களுடைய மனைவி சார்பில் உங்கள் மகனை நாங்கள் ஏற்றுக்கொண்டோம் என்று சொன்னார்கள். இதுதான் உண்மை. இதை நான் சொல்லுவதற்குக் காரணம் தனியார் நிறுவனங்களில் இன்றைக்கு மத்திய அரசின் உதவியோடு நடத்துகின்ற கல்லூரிகள் ஆனாலும், பள்ளிகள் ஆனாலும், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு இட ஒதுக்கீடு இருந்தாலும் அதை கொடுப்பது இல்லை. அப்படி கொடுக்கப்படுவதாக இருந்தாலும், ஐ.ஏ.எஸ்., வீட்டுப் பிள்ளைகளுக்கும், ஐ.பி.எஸ். வீட்டுப் பிள்ளைகளுக்கும், ஜட்ஜ் வீட்டுப் பிள்ளைகளுக்கும், பண்ணையார் வீட்டுப் பிள்ளைகளுக்கும், பணம் படைத்தவர்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கும் இந்த இனத்தில் பிறந்தவர்களுக்குக் கொடுக்கிறார்கள். சாதாரண மக்களின் குழந்தைகளுக்கு அந்தப் பள்ளிகளில் இடம் கொடுப்பது இன்றைக்கும் மறுக்கப்படுகிறது. அதுதான் உண்மை.

அதுமட்டுமல்ல, நான் கடந்த காலங்களில் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளைச் சுற்றி வந்தபோது தமிழகத்தில் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மக்கள் எல்லாம் ஒரு கருத்



தைச் சொன்னார்கள். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் தமிழகத்திலே தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டன. அப்படி கொடுக்கின்ற போது ஒரு வேதனையான உண்மையை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். காரணம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கும்பகோணத்தில் உள்ளூர் வட்டம் என்ற கிராமத்திலே, டவுனிலே, ஒரு தனியார் நிலத்தை ஆர்ஜிதம் செய்து அன்றைக்கு அங்கிருந்த அரிசனங்களுக்கு எல்லாம் பட்டா போட்டுக்கொடுத்து விட்டார்கள். அன்றைக்கு இந்தத் துறையிலே அண்டர் செக்ரட்டரியாக இருந்த ஒருவர் அந்த இடத்தை எடுக்கக் கூடாது என்பதற்காக அன்றைக்கு இருந்த அமைச்சர் திரு. சௌந்திரபாண்டியன் அவர்களிடத்திலே அந்த நிலத்தின் சொந்தக்காரர் மனு செய்கிறார். நிலத்தைத் தடுங்கள் என்று சொல்லுகிறார். அதற்கு நலத்துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பைலில் "ஸ்டே நாட் கிராண்டடு" என்று எழுதுகிறார். ஆனால் அந்த அண்டர் செகரட்டரி நாட் என்பதை எடுத்துவிட்டு ஸ்டே கிராண்டடு என்று எழுதி பைலை குளோஸ் செய்துவிடுகிறார். இது கண்டுபிடிக்கப்பட்டு அன்றைக்கு சீப் செகரட்டரியால் இந்த உண்மை தமிழக அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் கவனத்திற்குச் சென்ற பின்னாலே அந்த அதிகாரி பணி நீக்கம் செய்யப்பட்டார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு அந்த அதிகாரி இன்றைக்கும் இந்த அரசாங்கத்தில் "டெபுடி செகரட்டரியாக" இருந்து கொண்டிருக்கிறார் என்ற உண்மையை நான் இந்த அவைக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவை அனுமதிக்குமானால் அவருடைய பெயரைச் சொல்வதற்கு நான் தயார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெயரைக் குறிப்பிட வேண்டாம்.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பெயரைக் குறிப்பிடவில்லை. தாங்கள் விரும்பினால் பெயரைச் சொல்வதற்கு தயார் என்றுதான் சொல்லுகிறேன். இன்றைக்கும் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது கும்பகோணத்தில்; ஆனால் அந்த மக்கள் அந்த இடத்திற்குச் சொல்ல முடியவில்லை. தி.மு.க.வில் அன்றைக்கு இருந்த ஒரு அமைச்சர் உறுதுணையாக இருந்துகொண்டிருக்கிறார்கள் இன்றைக்கும். தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கு நீதி எங்கே கிடைக்கிறது, நீதி கிடைக்கும் என்று இங்கே சொல்லுகிறோம். நீதி கிடைக்கும் என்ற எண்ணம் இருக்கிறது. எல்லோருக்கும் நீதி வேண்டும் என்று எண்ணுகிறோம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அந்த டெபுடி செகரட்

டரி பற்றி தனிப்பட்ட முறையில் எழுதி கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

பிற்பகல் 4-10

திரு. போளூர் வரதன் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதே நேரத்திலே இன்றைக்கு அந்த மக்கள் பரிதவித்துக்கொண்டிருக்கிற ஒரு நிலையை நாம் பார்க்கிறோம். கல்வி என்ற நிலையை வைத்துக் கொண்டு பார்க்கிறபோது, சுதந்திரம் பெற்ற பின்னாலே தாழ்த்தப்பட்டவர்கள் ஜாதி வேறுபாட்டின் காரணமாக பள்ளிகளிலே அனுமதிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்று உணர்ந்த தலைவர்கள், இந்தத் துறைக்கு என்று தனிப் பள்ளிகளை நிறுவினார்கள். அந்தப் பள்ளிகளினுடைய தரத்தைப் பார்க்கிறபொழுது வேதனைக்குரிய ஒன்றாக இருக்கிறது. அங்கே ஆசிரியர்கள் இருப்பதில்லை. மாணவர்கள் இருந்தால் படிக்கின்ற இடம் இருப்பதில்லை. இடம் இருக்குமானால் மற்ற வசதிகள் இருக்காது. அந்தப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுடைய தரம் என்னவென்று பார்த்தால் பெரிய ஜீரோ என்றுதான் சொல்ல வேண்டும். இன்றைக்கு இந்த அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு எல்லா குழந்தைகளுக்கும் 8ஆம் வகுப்பு வரை இலவசக் கட்டாயக் கல்வி என்று சொல்லியிருக்கிறது. ஆகவே, 8-ஆம் வகுப்பு வரையில் இருக்கின்ற இந்த நலப்பள்ளிகளை அரசே ஏற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி ஏற்றுக் கொள்வதன் மூலம் இந்தத் துறையிலே கல்விக்காக ஒதுக்கப்படுகின்ற அந்தப் பணம் இந்தத் துறையினுடைய வேறு சில நல்ல காரியங்களுக்காக பயன்படுத்தலாம். அதே நேரத்திலே ஒவ்வொரு யூனியனிலேயும் மற்ற அரசு நடத்துகின்ற பள்ளிகளில் ஏ.இ.ஓ. இருக்கிறார்கள். டி.இ.ஓ. இருக்கிறார்கள். சி.இ.ஓ. இருக்கிறார்கள். இயக்குநர்கள் இருக்கிறார்கள். இதற்கென்றே தணிக்கை அதிகாரிகள் இருப்பதாலே அந்தப் பள்ளிகளுடைய தரம் சற்று உயர்ந்திருக்கிறது. நலப்பள்ளிகளுடைய தரம் இன்றைக்கும் சொல்கிறேன். நலப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களை அழைத்து, நீங்கள் ஒரு எழுத்தை எழுதிவிட்டு அந்த எழுத்து என்னவென்று கேளுங்கள், தெரியாது என்று சொல்கின்ற நிலை இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் மாவட்டத்திற்கு ஒரே ஒரு ஏ.இ.ஓ. என்று வைத்திருக்கிறார்கள். அந்த மாவட்டத்திலே இருக்கிற எல்லா நலப் பள்ளிகளிலேயும் அந்த ஒரு அதிகாரியே பார்வையிட வேண்டுமென்கிற சூழ்நிலை இருப்பதாலேயும் அங்கே இருக்கின்ற டி. டபுள்யூ.ஓ. அவர்களும் மற்ற அதிகாரிகளும் இதுபற்றி கண்டும் காணாமல் இருக்கிறார்கள். கண்டு கொள்வதே இல்லையென்றுதான் சொல்லவேண்டும். அவர்



களுடைய எண்ணமெல்லாம் விடுதிக்கு எவ்வளவு பணம் வருகிறது. எத்தனை மாணவர்கள் வருகிறார்கள்; எத்தனை ஆசிரியர்கள் தேவைப்படுகிறது ; எத்தனை கிளார்க்குகள் வேண்டுமென்று எதிர்பார்த்து அதிலே எப்படி கையூட்டு பெறலாம் என்றுதான் அவர்களுடைய எண்ணங்கள் இருக்கிறதே தவிர இந்த மாணவர்களுடைய தரத்தை உயர்த்தவேண்டுமென்பதற்காக, இந்த நலத் துறையிலே இருக்கிற அதிகாரிகள் தங்களுடைய பணியை ஆற்றியதாக வரலாறுகள் இல்லை. டைரக்டர் வேண்டுமானால் இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். அந்த உயரதிகாரியால் மட்டும் இந்தக் குழந்தைகளைச் செம்மையாக, சீர்படுத்த முடியாது. மற்ற துறைகளிலே இருக்கிற அதிகாரிகள் வேறு இனத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதன் காரணமாக இந்தக் குழந்தைகளுடைய நலனிலே அக்கறை காட்டுவதில்லை. இன்றைக்கு நூற்றுக்கணக்கான ஹாஸ்டல்களை நடத்துவதாகச் சொல்கிறோம். அந்த ஹாஸ்டல்களுடைய நிலை என்ன என்று பார்க்கவேண்டும். ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி விடுதிகள் இருக்கின்றன. குறிப்பாக ஒன்றைச் சொல்கிறேன். ஸ்ரீபெரும்புதூரில் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் கொல்லப்பட்ட இடத்திற்குப் பின்னாலே ஒரு பெண்கள் விடுதி இருக்கிறது. அந்த விடுதியிலே இரவு நேரத்திலே சென்றாலும் மாடுமேயும். இரவு நேரத்திலே சென்றாலும் குடிகாரர்கள் குடித்துவிட்டு படுத்துக் கொண்டிருப்பார்கள். வயது வந்த பெண்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அரசு என்ன பாதுகாப்பு கொடுத்திருக்கிறது ? தனி இல்லம் என்று சொல்லுகிறார்கள். அந்தப் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை. பாதுகாப்பு இல்லாத ஒரு நிலையில் விடுதி தேவையா என்று நான் கேட்கிறேன். தாழ்த்தப்பட்டவர்கள் எப்படி வேண்டுமானாலும் படிக்கட்டும் ; தாழ்த்தப்பட்டவர்கள் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும் என்று அரசு தொன்று தொட்டு, இந்த வழிமுறையைப் பின்பற்றி வருகிறது. யாராவது ஒரு அமைச்சர் இந்த மக்களுக்காக பாடுபடவேண்டுமென்று எண்ணினால் அடுத்த நாள் அந்த அமைச்சர் அந்தப் பதவியிலே இல்லாத வரலாறுகளைத்தான் நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். இதைச் சொல்வதற்குக் காரணம், நான் கடந்த கால விஷயங்களை வேதனையோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சுட்டிச் சொல்வதற்குக் காரணங்கள் இருக்கின்றன. எம்.ஜி.ஆர். அவர்கள் உயிரோடு இருந்த நேரத்திலே, எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தை ஆண்ட நேரங்களிலே, ஒன்றைத் தெளிவாக்க வேண்டும். நான் சொல்வதற்குக் காரணம், கடந்த சட்டமன்றக் கூட்டத்திலே பேசும்போது, தி.மு.க. கட்சியைத் தடை விதிக்கவேண்டுமென்று பேசினேன். அப்படி [illegible]தற்குக் காரணத்தைச் சொல்லிப் பேசினேன். தேச [illegible] கும்பல் என்று பேசினேன். தடை விதிக்க வேண்டிய

கட்சி என்று பேசினேன். அதற்கு அன்றைக்கு தி.மு.க-வால் இங்கே வந்து பதில் சொல்ல முடியாத ஒரு நிலை இருந்தது. அன்றைக்கு உறுப்பினர்கள் இல்லை இங்கே. ஆகவே, அதனுடைய தலைவர் கருணாநிதி அவர்கள், மிகத் தரங்கெட்ட முறையிலே—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு இந்தப் பேப்பரில் உள்ள சில வாசகங்களை மட்டும் நான் படிக்க விரும்புகிறேன். அவர் என்னைத் தரங்கெட்ட வார்த்தைகளிலே பேசியிருக்கிறார். மிக்க வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன். நான் ஒரு தாழ்த்தப்பட்டவன் என்பதற்காக அன்றைய முதலமைச்சர், இந்த நாட்டிலே 2 முறை, இந்த அவையிலே முதலமைச்சராக இருந்த ஒருவர், இந்த அவையிலே இருக்கிற ஒரு உறுப்பினரைப் பற்றி குறிப்பிடுகின்ற வாசகங்கள் சிலவற்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

' எட்டேகால் லட்சணமே, எமன் ஏறும் வாகனமே
முட்ட கூரையில்லா வீடே, குலராமன் தூதுவனே'

என்று இந்த வாசகத்திலே அவர்கள் என்னைச் சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல்,

'' நெருக்கதி நெருப்பு கொட்டியே நேருவின் மகளே
தடை செய்ய முடியாமல் தவித்த பின்னர்
தழுவிக் கொண்டார் கழகத்தை என்பதை அறியாத
ஈனப் பதறே; திமுக-வை தடை செய்தாலும்
அதிமுக-வின் அடிவருடித்தான் நீ காய்ச்ச வேண்டும்;
கடத்த வேண்டும் ''

என்று எழுதி இருக்கிறார்கள்.

ஒன்றைச் சொல்கிறேன்; நான் எம்.ஏ.,பி.எல். படித்தவன். என் மனசாட்சியின் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

பிற்பகல் 4-15

இந்த நாட்டிலே சிறந்த டாக்டர்கள் இருக்கிறார்கள். மருத்துவத்தினுடைய அடிப்படையிலே இந்த நாடு இன்றைக்கும் ஓடிக் கொண்டிருக்கிறது. என் உடலிலே இருக்கின்ற இரத்தத்தை எடுத்துப் பரிசோதனை செய்து பாருங்கள். என் உடலிலே ஏதேனும் ஆல்ஹகால் கலந்திருக்குமேயானால், இந்த நாட்டிலே கொடுக்கின்ற தண்டனையை ஏற்றுக் கொள்வதற்கு நான் தயார்.

நான் ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்தவன். என் குடும்பத்தினுடைய சூழ்நிலையைத் தெரியாத கருணாநிதி, என்னை கள்ளச் சாராயம் விற்பவன் என்றும், கடத்தல்காரன் என்றும் இன்றைக்குப் பொது மக்கள் மத்தியிலே என்னை அவதூறாகச் சொல்லியிருக்கிறார்;



நான் ஒன்றைச் சொல்கிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த நேரத்திலே, அன்னை இந்திராவோடு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் பேரியக்கமும் உறவு வைத்துக் கொண்டது. கொள்கை ரீதியில் மட்டுமல்ல; ஒரு கூட்டு என்பதற்காக மட்டுமல்ல; தாங்கள் இணைந்து இந்த நாட்டிலே தேசிய நீரோட்டத்திலே தன்னைப் பின்பற்றுகின்ற தொண்டர்கள் வர வேண்டுமென்பதற்காக ஒரு நீண்ட நெடிய பார்வையிலே புரட்சித் தலைவரவர்கள் அன்றைக்கு இந்த அணியை உருவாக்கித் தந்தார்கள். அதற்குப் பின்னாலே, தலைவர் இராஜீவ் காந்தி அவர்களாலும், புரட்சித் தலைவி அவர்களாலும் இன்றைக்கும் இந்தக் கூட்டு இங்கே தொடர்ந்து கொண்டிருக்கிறது.

தவறு செய்துவிட்டு, பல கமிஷன்களிலே மாட்டிக்கொண்டு, அதற்காக—அந்தக் கமிஷனிலேயிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இந்தக் கூட்டு உருவாக்கப்படவில்லை. மக்கள் வாழ வேண்டும்; ஏழ்மை அகற்றப்பட வேண்டும்; நாடு சுபிட்சமாக இருக்க வேண்டும், ஆயுதக் கலாச்சாரம் இந்த நாட்டைவிட்டு ஒழிய வேண்டும் என்பதற்காக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் பேரியக்கமும் இணைந்து ஏற்படுத்திக் கொண்ட, இந்த இலட்சியக் கூட்டுக்கு நான் அடி வருடி என்று சொன்னால் பெருமைப்படுகிறேன்.

ஆனால், அதே நேரத்திலே இப்படிப்பட்ட தரம்கெட்டு தன்மானமிழந்து, தமிழன் என்று சொல்வதற்கு இன்றைக்கு அருகதையற்ற ஒரு மனிதன் இந்த அவையிலே இருமுறைமுதலமைச்சராக இருந்தவர், தன்மானமிழந்து ஒரு தாழ்த்தப்பட்டவனை இப்படிக் கேவலமாகப் பேசி, எழுதி, இன்றைக்கு என்னை இப்படிப் பேசியிருக்கிறார்கள், எழுதியிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேறொன்றையும் நான் சொல்கிறேன். இன்றைக்கு அவர்கள், ''நான் அந்த இனத்திற்குச் சம்பந்தி'' என்று பேசுகிறார்கள். நான் மாணவனாக இருந்தபொழுது அரசுக் கல்லூரியிலே விடுதியில் பயின்றவன். கோடம்பாக்கத்திலே இன்றைக்கு முரசொலி அலுவலகம் என்பது ஒன்று இருக்கிறது உங்கள் அனைவருக்கும் தெரியும். அன்றைக்கு அது மாணவர் விடுதியாக இருந்தது. அதிலே நான் மாணவன். இன்றைக்கும் ஒன்றை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மரியாதைக்குரிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டியார் அவர்கள் அன்றைக்குப் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தார்கள். அவர் காலத்திலேதான் ''அண்ணா மேம்பாலம்'' கட்டப்பட்டது. அண்ணா மேம்பாலம் கட்டுவதற்காகப் பெறப்பட்ட இலஞ்சத்திலேயிருந்துதான் அந்த இடம் அன்றைக்கு வாங்கப்பட்டது. இது பத்திரிகையிலே வந்திருக்கிறது. பொதுக் கூட்டங்களிலே பேசப்பட்டிருக்கிறது.

[திரு. போளூர் வரதன்] [1991 செப்டம்பர் 19

மாணவர்களை அவமானப்படுத்தி, இரவோடு இரவாக, திரு
டர்களைக் கடத்திச் செல்வது போன்று அன்றைக்கு எங்களை
லாரிகளிலே போட்டு தூக்கிச் சென்ற கருணாநிதி, இன்றைக்கு
ஜாதியைப் பற்றிப் பேசலாமா?

அன்றைக்கு அந்த இடம் வாங்குவதிலே நம்முடைய மாண்பு
மிகு பண்ருட்டியார் அவர்களுக்கும், அன்றைய முதலமைச்சர்
கருணாநிதிக்கும் கருத்து வேறுபாடு இருந்தது. இந்தத் தவறான
செயலுக்கு உடந்தையாக நான் ஒத்துவர மாட்டேன் என்று
மாண்புமிகு பண்ருட்டியார் அவர்கள் இராஜினமா செய்தார்கள்
என்றுகூட அன்றைக்குப் பத்திரிகைகளிலே வந்திருக்கிறது. இதைக்
கருணாநிதி இல்லை என்று சொல்ல முடியுமா?

தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பயிலுகின்ற, படிக்கின்ற
இடத்தைத் தனக்குச் சொந்தமாக்க வேண்டுமென்பதற்காக இர
வோடு இரவாக அந்த விடுதியைக் காலி செய்து, இன்றைக்கு
அங்கே தன்னுடைய சொத்தாக்கிக் கொண்ட கருணாநிதி எங்
களைப் பேசுவதற்கு, எழுதுவதற்கு அருகதை அற்றவர்.

ஆகவேதான் சொல்கிறேன், தமிழகத்திலே ஒன்றேகால் கோடி
மக்கள் இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் இருந்துகொண்டிருக்
கிறார்கள். அவர்களுக்கென்று ஒதுக்கப்படுகின்ற வீடுகளும் தர
மில்லாமல் இருக்கின்றன. அவர்களுக்கு லோன் கொடுக்கிறார்
கள். இல்லையென்று சொல்லவில்லை. அந்த லோனைப்
பெறுவதற்குள்—சப்சிடி என்ற பெயராலே கொடுக்கிறீர்கள்.
அந்த சப்சிடிகளை அரசு அதிகாரிகளே கொள்ளையடித்துச்
சென்று விடுகிறார்கள். அந்த மக்களுக்குப் போய்ச் சேர்கிறதா
என்று பார்த்தால் இல்லை.

இன்றைக்கு ஜீவன்தாரா கிணறுகள் தோண்டிக் கொடுக்கப்
படுகின்றன. அந்தக் கிணறுகள் நிலம் இருப்பவர்களுக்கும்
தோண்டிக் கொடுக்கப்படுகின்றன; நிலம் இல்லாதவர்களுக்கும்
தோண்டிக் கொடுக்கப்படுகின்றன; அன்னை இந்திரா காந்தி
இருந்த நேரத்திலே, 1976 என்று எண்ணுகிறேன்—அன்றைக்கு
ஒரு கமிஷனை அமைத்து—குழுவை அமைத்து, ஒரு ஏக்கர் நிலம்
அரசாங்கத்தின் சார்பிலே கொடுத்து அவர்களுக்குக் கிணறு தோண்
டித் தருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றனவா என்று ஆராயுங்
கள் என்று சொன்னார்கள். ஆராய்ந்து கொண்டிருக்கின்ற
பொழுது, ஜனதா அரசாங்கம் அன்றைக்கு ஆட்சிக்கு வந்த
பின்னாலே அந்தத் திட்டங்கள் தூக்கியெறியப்பட்டன.

இன்றைக்கு மேய்க்கால் புறம்போக்குகள் நாட்டிலே நிறையக்
கிடக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் காலத்
திலேயாவது, அப்படிப்பட்ட நிலங்களை ஆர்ஜிதம் செய்து,
நிலமற்ற ஏழை அரிசனங்களுக்குக் கொடுத்து, அவர்களுக்குக்
கிணறுகளை வெட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.



1991 செப்டம்பர் 19] [திரு. போளூர் வரதன் ]

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களு
டைய பொருளாதார நிலை மிகத் தாழ்ந்து கொண்டே போகிறது.
பல்வேறு இடங்களிலே இனக்கலவரம் நடந்து கொண்டே இருக்
கிறது. அதைத் தடுப்பதற்கு முறையான வழிமுறைகள் இது
நாள்வரை பின்பற்றப்படவில்லை.

அதே நேரத்தில் வேறொன்றையும் நான் இந்த அரசுக்குச்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-00)

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சியிலே இருந்தபோது
திருச்செந்தூரிலே, தருமன் என்ற ஏழை அரிசனன் கொல்லப்
பட்டான். அன்றைக்கு, தமிழகத்தினுடைய அரிசனப் பிரிவு
தலைவர் என்ற முறையிலே அந்தப் பகுதிக்கு நான் சென்றேன்.
நான் அங்கு செல்வதற்கு முன்பே, அந்தப் பகுதி மக்கள் ரோடு
மறியல் செய்து, உண்மை குற்றவாளியைக் கைது செய்ய வேண்டு
மென்று போராட்டம் நடத்தினார்கள். அதற்கு, அந்த மாவட்ட
ஆட்சித் தலைவர் நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்
னார். சொன்னவர், மீண்டும் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்
பொறுப்பிலே இல்லை; மாற்றப்பட்டார்; காரணம், அவர் ஒரு
அரிசனன். இதிலே சம்பந்தப்பட்டவர்கள் தி.மு.க. வைச் சேர்ந்
தவர்கள். இதுநாள்வரையில் அந்த அரிசனக் குடும்பத்திற்கு
எந்தவித நன்மையும் கிடைக்கவில்லை; நியாயமும் கிடைக்
கவில்லை. இப்படிப்பட்டவர்கள், இன்றைக்கு தாழ்த்தப்பட்ட
மக்களுக்கு உதவி செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஏற்க
முடியவில்லை. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்
கள் காலத்திலேயாவது, தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு நல்ல
நிலையில் வருவதற்கு, நல்ல திட்டங்களை வகுத்து, இன்றைக்கு
10 அம்சத் திட்டங்களை........ (மணியடிக்கப்பெற்றது)....

ஒரு நிமிடம்......அறிவித்திருக்கிறீர்கள். பொருளாதாரத்
திலே மேம்பாடு அடைவது, இலவசக் கிணறுகள் வெட்டித்
தருவது, தொழில் தொடங்குவது தொழிற் கல்வி பயின்றவர்
களுக்கு பயிற்சி அளிப்பது, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவது,
வீடுகள் கட்டிக் கொடுப்பது குடிநீர் வசதி செய்துகொடுப்பது
ஆதிதிராவிட தெருக்களுக்குச் சாலை அமைத்துக் கொடுப்பது,
தெரு விளக்குகள் போடுவது போன்ற திட்டங்கள் இங்கே
அறிவிக்கப்பட்டிருக்கின்றன. புரட்சித் தலைவர் காலத்திலே
ஆதிதிராவிடர்கள் வாழ்கிற எல்லா பகுதிகளிலேயும் ஒரு
விளக்கு திட்டம் அமல்படுத்தப்பட்டது. அந்த ஒரு விளக்குத்
திட்டத்தை, இன்றைக்கு அரசு கட்டிக் கொடுக்கிற வீடுகளுக்கு
மட்டும் வழங்குகிறார்கள். அதை மாற்றி, அனைவருக்கும் ஒரு
விளக்குத் திட்டம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், தி.மு.க. ஆட்சி காலத்திலே
சாதி துவேஷத்தோடு, சாதிச் சண்டைகள் என்று வருகிறபோது,
தாழ்த்தப்பட்டவர்களுக்கும், இதர இனத்தைச் சேர்ந்தவர்

களுக்கும் சண்டை வருவது வழக்கம் ; வழக்கமாக வந்திருக்கிறது. அப்படி வருகிறபோது, அந்தச் சண்டையிலே சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், நீதிமன்றத்திற்கு தீர்ப்புக்குச் செல்லவேண்டும். அப்போது, அரசு தலையிடுகிறது என்று சொன்னால், வழக்குகளைத் திரும்பப் பெறுகிறது என்று சொன்னால், இரண்டு இன மக்கள்மீதும் இருக்கிற வழக்குகளைத் திரும்பப் பெறுவதுதான் முறை ; வழக்கம். தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது, ஒருசாரார் மட்டும் ஒரு இன மக்கள் மீது மட்டும் இருந்து வழக்கைத்திரும்பப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், அரிசன மக்கள் மீதிருந்த வழக்கைத் திரும்பப் பெறவில்லை. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில், அரிசனங்கள்மீது இருக்கிற வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினை நல்கிய பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். ஜெய்ஹிந்த்!

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இப்போது திரு. பொன்னூர் வரதனிலே இருந்து மொத்தம் 20 உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டிருக்கிறார்கள். இதுவும் போதாது ; இன்னும் என்னுடைய பெயரை எல்லாம் சேர்க்க வேண்டுமென்று பல்வேறு உறுப்பினர்கள் என்னை வற்புறுத்தி வருகிறார்கள். எனவே, 7 மணிக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலுரை அளிக்கக்கூடிய அளவுக்கு நிகழ்ச்சி நிரல் வகுக்கப்பட்டுள்ளது. எனவே, நேரத்தின் அருமை கருதி, தற்போது பேசிய திரு. பொன்னூர் வரதன், விவாதத்தைத் தொடங்கி வைத்தவர் என்ற முறையில் ஓரளவுக்கு அவருக்கு நேரம் கொடுக்கப்பட்டது. மற்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் சரியாக ஏழு, ஏழு நிமிடங்கள் தான் தரப்படும். எட்டாவது நிமிடம் நீங்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும். இல்லையென்று சொன்னால், அடுத்த உறுப்பினர் அழைக்கப்படுவார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை மனதிலே வைத்து, பேசுகிற உறுப்பினர்கள் பேச கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திரு. தி. சாத்தையா.

<u>திரு. தி. சாத்தையா :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த மேலான அவையில் இடம்பெற்று, மக்களுக்குத் தொண்டு செய்யும் வாய்ப்பினைத் தந்த, இந்தப் புனித ஆட்சியை, பொற்கால ஆட்சியை ஏற்படுத்திய புரட்சித் தலைவி அவர்களின் பொற் பாதங்களைத் தொட்டு வணங்கி, என்னுடைய உரையைத் துவங்குகிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க நமது தமிழ்நாட்டில், சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக....(மணியடிக்கப் பெற்றது.)



(உறுப்பினர் திரு. பொன்னூர் வரதன் பத்திரிக்கையாளர் மாடத்தின் அருகே நின்று பேசிக் கொண்டிருந்தார்.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவையிலிருந்து, பத்திரிகையாளர்களிடம் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

<u>திரு. தி. சாத்தையா :</u> பல நிதிநிலை அறிக்கைகளையும் மானியக் கோரிக்கைகளையும், இந்த தமிழ்நாடு கண்டதுண்டு. ஆனால் அவற்றின் பலனை அந்த மக்கள் எந்த அளவுக்குப் பெற்றார்கள் என்பதை அனைவரும் அறிவோம். ஆனால், நமது புரட்சித் தலைவி அவர்களின்கீழ் அமைந்துள்ள இந்த புனித ஆட்சியில் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையையும் பல மானியக் கோரிக்கைகளும் இந்த ஏழை எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் திட்டங்களின் முழுமையான பலனை அடையும் வகையில் துரித முன்னேற்றத்திற்குத் திருப்புமுனையாக அமைந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-25)

எனது தொகுதியான இராஜபாளையம் மக்களின் சார்பாக நான் கீழ்க்கண்டவற்றை எனது தொகுதி மக்களின் இப்போதைய தேவைகளாக அவைமுன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராஜபாளையத்திலிருந்து சபரிமலைக்கு மகாலிங்கம் மலை வழியாக ஒரு ஷார்ட் கட் ரூட் உள்ளது. அதாவது, கணபதி சாஸ்தா கோவில் வழியாக மலைப் பாதை ஒன்றை அமைக்க அரசை வேண்டுகிறேன். இதனால், 128 கிலோ மீட்டர் தூரம் 18 கிலோ மீட்டர் தூரமாகக் குறைந்து விடும். இதனால் பக்தர்களுக்கு வசதியும், அரசுக்கு வருமானமும் வர வாய்ப்பும் உள்ளது என்பதை அவையின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், கணபதி சாஸ்தா கோவில் அணைக்கட்டுத் திட்டம் 1962 ஆம் ஆண்டு தயார் செய்யப்பட்டது. ஆனால் இதுவரை அதற்கான வேலைகள் துவங்கப்படவில்லை. அட்லீஸ்ட் தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலாவது அந்தத் திட்டத்தை தொடங்கி வைக்க வேண்டுமென்றும், அந்தத் திட்டத்தின் மூலம் பல்லாயிரக்கணக்கான நிலங்கள் பாசனவசதி பெறுவதற்கும் இத்திட்டம் வழிவகுக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இந்தப் பகுதியில் ஒரு சுற்றுலா மையம் அமைக்க முன்பே ஒரு திட்டம் உள்ளது. அதை இந்த சாஸ்தா கோவில் மலை வழியாக, இந்த டாம், குறுக்குப் பாதை, சுற்றுலா மையம் இம்மூன்றையும் இணைத்து புரட்சித் தலைவியின் கீழ் உள்ள ஆட்சியில் கொண்டுவர முற்பட்டால், நமது தமிழ்நாட்டிற்கு மிகுந்த வருவாயும், அங்கிருந்து சபரி மலைக்குச் செல்லும் பக்தர்களுக்கு மிகவும் வசதியாகவும் குறைந்த நேரத்தில் ஷார்ட்கட் ரூட்டில் செல்வதற்கு மிகவும் வசதியாகவும் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காமராஜர் மாவட்டத்தின் தென் மேற்குத் திசையில் அமைந்துள்ள புத்தூர் தேவியாற்றில் நீண்ட காலமாக பாலம் கட்டப்படாமல் இருப்பதால் இப்பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள் மழைக் காலங்களில் ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதால் மற்ற கிராம மக்களோடு தொடர்பு அறுந்துபோய், தீவில் தவிக்கும் நிலையோடு, காலரா, கடும் காய்ச்சல், தாய்மார்களின் அவசர பிரசவ நெருக்கடி போன்ற சிகிச்சைகளுக்குச் செல்ல முடியாமலும் பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இத்துயரங்களைப் போக்க இந்த ஆட்சியில் உடனடியாகப் பாலம் அமைத்துத்தர வேண்டுமென்றும், மேலும் இந்தப் பாலத்தைக் கட்டுவதோடு, காமராசர் மாவட்டத்திலிருந்து நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தைச் சார்ந்த தெய்வத்தலமாகிய சங்கரன்கோவிலுக்குச் செல்வதற்கு குறுக்குப் பாதையாக இது அமையும் என்பதையும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராஜபாளையம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த நல்லமங்கலத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம்நிறுவ வேண்டும். ஏற்கனவே நிறுவப்பட்ட கிழவிகுளம்-ஜமீன் கொல்லங்கொண்டான், சத்திரப்பட்டி ஆகிய மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் லேடி டாக்டர்கள் இல்லாமல் இருக்கிறது. அங்கே லேடி டாக்டர்களை நியமித்து அந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் நல்ல முறையில் இயங்கவழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதே போல, மீனாட்சிபுரம் நடுநிலைப் பள்ளியையும், இராஜபாளையம் நகரம் சாலியர் ஆறுமுக ஆரம்பப் பாடசாலையையும் அங்கீகரிக்க அரசாங்கத்தை வேண்டுகிறேன்.

கிழவிகுளம் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பதால் அதைச் சீர் செய்து தரவும் அரசாங்கத்தை வேண்டுகிறேன்.

விவசாயப் பகுதியான எஸ். ராமலிங்கபுரம் நல்லமங்கலம் ஆகிய கிராமங்களில் கால்நடை மருத்துவ மனைகளைப் புதிதாக அமைக்கக்கோரி வேண்டுகிறேன்.

ஆங்கிலேய ஆட்சிக் காலத்திலும், ஜமீன் காலத்திலும் மேற்குத் தொடர்ச்சி மலையில் இராஜபாளையத்தைச் சார்ந்த மலைப் பகுதியில் சூளைப்பாறை—சேர்வராயன் அணைக்கட்டிலிருந்து கால்வாய் வழியாகத் தண்ணீர் கிடைத்து பாசனத்திற்குப் பயன்பட்டது. ஆனால் இப்போது அந்த இரண்டு இடங்களிலும் பெய்யும் மழைத் தண்ணீர் கேரளாவை நோக்கி ஓடுகின்றது. அந்தத் தண்ணீரை, கிட்டத்தட்ட 5 டி.எம்.சி. அளவுள்ள தண்ணீரை, இந்தக் கால்வாய்களுக்கும் வாய்க்கால்களுக்கும் கொண்டு வர அவைகளை தூர் எடுப்பதன்



மூலம் நமது தமிழ் நாட்டிற்கு வந்தடையும் என்றும், இதனால் இராஜபாளையம் ஏரியாவில் உள்ள பல கிராமங்களுக்குக் குடிநீர்ப் பிரச்சினையும், அதோடு விவசாயத்திற்கு வேண்டிய தண்ணீரும் கிடைக்கும் என்பதை இந்த அவை முன் கூறி, அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதே போன்று நமது தமிழ் நாட்டில் கிட்டத்தட்ட 12 இடங்களில் மேற்குத் தொடர்ச்சி மலையில் நமது டெரிட்டரியில் பெய்யும் மழைத் தண்ணீர் எல்லாம் மற்ற அண்டை மாநிலங்களுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. அதை எல்லாம் நமது மாகாணத்திற்குத் திருப்பிவிட வேண்டும். அதற்கான பல வழிகளைச் செய்தால் கிட்டத்தட்ட 125 டி.எம்.சி. அளவு உள்ள மழை நீர் நமது தமிழ் நாட்டுக்குக் கிடைக்கும் என்பதை இந்த அவையின் மூலம் கூறிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4-30)

அதோடு எனது தொகுதியின் தலைநகரான இராஜபாளையத்தில் அரசினர் தொழிற் பயிற்சி அதாவது ஐ.டி.ஐ. பள்ளி ஒன்று துவங்க அரசு உத்தரவிட வேண்டும்.

இராஜபாளையம் நகர் தொழில் மற்றும் வர்த்தகத்தோடு தொடர்பு அதிகம் உள்ள நகரமாகும். தேனி, கம்பம், உசிலம்பட்டி, குமிழி ஆகிய நகரங்களுக்கும் அதற்கும் அதிகமான வர்த்தகத் தொடர்பு உண்டு. இப்போது நீண்ட தூரப் பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, மேற்குத் தொடர்ச்சி அய்யனார் கோயிலிலிருந்து 7 மைல் தூரம் ரோடு அமைத்தால் மேற்குறிப்பிட்ட நகரங்களோடு போக்குவரத்தை ஏற்படுத்திக் கொள்ளப் பயன் உள்ளதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இராஜபாளையத்தில் ஒரு பை பாஸ் ரோடு அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தமிழகத்தைப் பொறுத்தவரையில் இரண்டு முக்கியமான ரீசன்களைச் சொல்லி விட்டு எனது உரையை முடிக்கிறேன்.

முக்கியமாக நமது தமிழ் நாட்டில் கிடைக்கும் மேற்குத் தொடர்ச்சி மலையானாலும் சரி, மழைக் காலங்களில் கிடைக்கும் நீர் எல்லாம் ஆறுகளில் கலந்து வீணாகக் கடலில் கலக்கிறது. அந்த நீர் மட்டுமல்ல, எந்த நீரையும் வீணாகக் கடலில் கலக்க விடாமல் சிறு சிறு அணைக்கட்டுகளையும், கால்வாய்களையும் வெட்டி அந்த நீரைப் பயன்படுத்தலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. தி. சாத்தையா] [1991 செப்டம்பர் 19

நமது சிட்டியைப் பொறுத்தவரையில் நமது கூவம் போன்ற சாக்கடைகள், கொசுக்கள் நிறைந்த பகுதிகளைச் சீர்படுத்துவதற்கு மற்ற அயல் நாடுகளில் உள்ளதுபோல் ட்ரெய்னேஜ் சிஸ்டம் அந்தக் கால்வாயில் கலக்காமல் தனியாக அவைகளைக் கொண்டு வந்து வாட்டர் ட்ரீட்மென்ட் ப்ளான்ட் மூலம் சுத்திகரித்து அதில் கிடைக்கும் தண்ணீரை நகரங்களில் உள்ள பூங்காவிற்கும், செடிகளுக்கும் பயன்படுத்தி நகரை அழகுபடுத்தலாம் என்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் கொடுத்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினருடைய கன்னிப் பேச்சு என்கிற காரணத்தால்தான் அவருடைய தொகுதியைப் பற்றியும் வேறு மானியத்திற்குத் தொடர்பு இல்லாத பல பிரச்சினைகளைப் பற்றியும் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. எஸ். அன்பழகன்.

* திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர்களும், பெரியோர்களும், ஆன்றோர்களும், சான்றோர்களும் அலங்கரித்த இந்தச் சபையில்,—தலைமை ஆசிரியராக இருந்த எனக்கு 1980 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கொடுத்து அன்றைய சூழ்நிலையில் வெற்றி வாய்ப்பை இழந்து இடி, மின்னல், புயல், சூறாவளியில் சிக்கி தவித்துக் கொண்டிருந்த என்னை சட்டமன்ற வேட்பாளர் என்ற மிதவையைக் கொடுத்து இதை ஏந்தி நீந்தி வா நான் ஏந்திக் கொள்கிறேன் என்று தாயாக இருந்து என்னை ஏந்திக் கொண்ட புரட்சித் தலைவி அவர்களே, திராவிடத்தின் திருவிளக்கு, தமிழகத்தின் குல விளக்கு, பெண் குலத்தின் பொன்விளக்கு, புரட்சித் தலைவரின் தம்பிமார்களின் ஒளி விளக்கு, ஆதி திராவிட மக்களுடைய அன்னமிட்ட கை, நம் நாடு என்னும் தோட்டத்திலே நல்ல மலர்களை எல்லாம் கொண்டு வந்து மணக்கச் செய்துகொண்டிருக்கும் முகராசி கொண்ட மகராசியே நீ வாழ்க, உன்னை வாழ்த்த எனக்கு வயது இல்லை, எனவே வணங்குகிறேன்.

தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா, தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அதற்கு ஓர் குணம் உண்டு என்று பாடிய நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அவர்கள் பிறந்த மண்ணிலிருந்து இந்த மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்காக நான் பெருமைப்படுகிறேன். அண்ணல் காந்தியடிகளுடைய உத்தரவின் பேரிலே சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்ட நாமக்கல் காந்தி என்று பெயர் எடுத்த தலைவர் நாகராஜன் ஐயங்கார் பிறந்த மண்ணிலிருந்து வந்ததற்காக நான் பெருமைப்படுகிறேன். நாமக்கல் சரித்திரத்திலேயே ஏறத்தாழ 50 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் என்னைத்



1991 செப்டம்பர் 19] [திரு. எஸ். அன்பழகன்]

தேர்ந்தெடுத்த அந்த மக்களுக்கு இந்த மன்றத்தின் மூலமாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் கன்னியுரையைத் தொடங்குகிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் உள்ள ஒவ்வொரு திட்டத்தையும் பார்க்கிறபோது கரும்பிலே இனிப்பு அதிகமா, வெல்லத்திலே இனிப்பு அதிகமா, சர்க்கரையில் இனிப்பு அதிகமா, தேனிலே இனிப்பு அதிகமா என்றால் எதைச் சொல்வது? 'மா' விலே சுவை அதிகமா, பலாவிலே சுவை அதிகமா, வாழையிலே சுவை அதிகமா என்றால் எதைச் சொல்வது? வைரம் மின்னுமா, வைடூரியம் மின்னுமா என்றால் எதைச் சொல்வது? ஏனென்றால் அத்தனை திட்டங்களும் அப்படி ஜொலிக்கின்றன. இருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த ஆட்சிக்கு முதுகெலும்பாக இருப்பதால் இந்த ஆதி திராவிட நலத் துறையை நான் தேர்ந்தெடுத்து உங்கள் முன் பேச இருக்கிறேன். 1991–92 ஆம் ஆண்டில் ஏறத்தாழ ரூ. 102,96,18,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட ரூ. 19,31,81,000 அதிகம். மாண்புமிகு உறுப்பினர்களே, 3 மாத காலத்தில். . . .

(பிற்பகல் 4.35)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவர் அவர்களைப் பார்த்து பேச வேண்டும்.

திரு. எஸ். அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 மாத காலத்திலே 19 கோடியே 31 லட்சம் ரூபாய் அளவுக்கு இந்தத் துறைக்கு அதிகமாக புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்கின்றார்கள் என்றால் இந்த துறையின்மீது அவர்கள் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கின்றார்கள் என்பதை எண்ணிப்பார்க்கிறேன். தமிழகத்தில் ஏறத்தாழ ஒன்றே முக்கால் கோடி தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று பாராட்டிக் கொண்டு இருக்கின்றார்கள். இதிலே 10 அம்ச திட்டம் மிக விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 10 அம்சத் திட்டத்திலே 65,000 குடும்பங்கள் பயன்படக்கூடிய பொருளாதார மேம்பாடு, 10 ஆயிரம் கிணறுகள் பாசன வசதிக்கு, வேலை வாய்ப்பில் புதிய திட்டங்கள், 4 லட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள், 50 ஆயிரம் வீடுகள் இப்படி பல நல்ல திட்டங்கள் இருக்கின்ற வேளையிலே, 50 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கும் இந்த அளவிலே என்னுடைய பணிவான ஒரு வேண்டுகோள். 1985–86 ஆம் ஆண்டிலே தமிழகத்திலே ஆதி திராவிடர் வீட்டுவசதி வாரியத் தலைவராக நான் இருந்தபோது, புரட்சித் தலைவர் அவர்கள் தாட்கோ மூலமாகத்தான் அந்த வீடுகளைக் கட்டிக் கொடுத்துக் கொண்டு இருந்தார்கள்.

இடையிலே ஏற்பட்ட ஆட்சி என்ன காரணத்தினாலேயோ தெரியவில்லை, அந்த திட்டத்தை ரூரல் டெவலப்மெண்ட்டுக்கு கொண்டு போய் விட்டார்கள். அது ஏன் என்று எனக்குப்

புரியவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசி இந்த தாழ்த்தப் பட்டவர்கள் தொகுப்பு வீடுகள் கட்டும்போது தாட்கோ மூலமாக கட்டிக்கொடுக்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால் அதிலே வேலை செய்யக்கூடிய பொறியாளர்களுக்கு வேலையில்லாமல் போய் விடுகிறது. அந்த வீட்டிலே வரும் சென்டேஜ் சார்ஜ்-ஐ வைத்துத்தான் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதே நேரத்தில் 1,700 குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்யப் பட்டுள்ளது. 1,603 குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள் கொடுக்கப்பட்டுள்ளது. வீட்டிற்கு ஒரு மின் விளக்குத் திட்டம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதை எல்லாம் ஆதி திராவிட மக்கள் நினைத்து அதை வரவேற்று இன்றும் புரட்சித் தலைவி அவர்களை. வணங்கிக் கொண்டிருக்கிறார்கள்

அதே நேரத்திலே சில கோரிக்கைகளை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பட்டா வழங்குவதில் கால தாமதப் ஆகிறது என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இந்த சாதி சான்றிதழ்கள் இப்போது அட்டை வடிவில் கொடுத்கிறார்கள். ஒரு வருடம் அல்ல 2 வருடம் அல்ல எத்தனை வருடமும் வைத்துக் கொள்ளலாம் என்று அந்த அட்டையைக் கொடுப்பதனால் அதற்குக் கால தாமதம் படுத்துகிறார்கள். அதனால் ஜூன், ஜூலை மாதங்களில் மாணவர்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

வீடு கட்ட நிலம் எடுக்கும்போது, அந்த நிலத்தை எடுப்பதற்கு குறைந்தது 3, 4 ஆண்டுகள் ஆகின்றன. அதனால் நிலக்காரர்கள் கடைசியிலே நிலத்தினுடைய விலையை அதிகமாகச் சேர்த்துக்கொள்கின்றார்கள். இதனால் அந்த நிலத்தை எடுக்கமுடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே அந்த நிலம் எடுப்பதிலே காலதாமதம் ஆவதைக் குறைத்து சீக்கிரம் நிலத்தை எடுக்க வேண்டும் அதே நேரத்தில் அந்த மக்கள் எல்லாம் சேர்ந்து ஓரிடத்திலே நிலம் வாங்கும் போது அதை ரிஜிஸ்ட்ரேஷன் பண்ணும்போது அந்த பதிவுக் கட்டணத்தை அறவே நீங்கள் நீக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தொகுப்பு வீடு கட்டும்போது சட்டமன்ற உறுப்பினர் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களை வைத்து திறக்க வேண்டும். ஏனென்றால்



வீடு கட்டி முடிக்கப்படாமலேயே, முழுமையாக கட்டப்படாமலே கூட அதிலே குடி போய் விடுகின்றார்கள். இதையெல்லாம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல தொகுப்பு வீடுகள் திறக்கும்போது மயான வசதி, சாலை வசதி, தண்ணீர் வசதி இவைகள் எல்லாம் செய்து முடித்தபிறகுதான் அந்த வீட்டைத் திறக்கவேண்டும் என்று அரசு ஜி. ஓ. போட வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். அதே நேரத்திலே தொகுப்பு வீடுகள் கட்டி அவர்கள் தனியாக குடி போகும்போது அதிலே குடும்ப அட்டைகள் 2, 3 குடும்பங்கள் ஒரே இடத்தில் இருப்பதால், அவர்கள் பிரிந்து செல்லும்போது அந்தக் குடும்ப அட்டைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் நிறுவனங்களிலே, பள்ளியானாலும் சரி, கல்லூரி யானாலும் சரி அல்லது மேல்நிலைப் பள்ளியானாலும், சரி, 18 சதவிகிதம் ஆசிரியர்களை அங்கே நியமிப்பதில்லை. அரசிடம் மானியம் பெற்று கல்வி நடத்தக்கூடிய அந்த தனியார் நிறுவனங்கள் 18 சதவிகிதம் இடம் நிரப்பப்பட வில்லை என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இதைப் போலவே கூட்டுறவு நிறுவனங் களிலேயும் அந்த 18 சதவிகிதம் இடம் தருவதில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டு இருக் கிறேன்.

அதே நேரத்திலே ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ்., பயிற்சியை பி.ஏ., பி.எஸ்.ஸி., பி.காம்., போன்ற டிகிரி படித்த கல்லூரிப் படிப்பு படித்தவர்களுக்குத்தான் கொடுக்கிறார்கள். பிளஸ் 2, 10-வது படிக்கும்போதே சில வசதிகள் செய்து கொடுத்தால், இன்னும் சொல்லப்போனால், 10-வது, பிளஸ் 2 படிக்கும்போதே அந்த பயிற்சியைக் கொடுத்தால் எதிர் காலத்திலே ஐ.ஏ.எஸ்., ஐ. பி. எஸ்., வருவதற்கான வாய்ப்புகள் உருவாகும். ஏனென்றால் தமிழகத்திலேயிருந்து 500 மாணவர்கள் சென்றால் 2 மாணவர்கள் தேர்வது கூடக் கஷ்டமாக இருக்கின்ற சூழ்நிலையில் பிளஸ் 2 அளவிலேகூட பயிற்சி கொடுக்கலாம். அத்துடன் மாவட்ட அளவிலேதான் அந்த டிரெயினிங் கொடுக்கிறார்கள். அது எனக்குச் சரியாகப் படவில்லை. இன்னும் சொல்லப்போனால் அதை கோட்ட அளவிலே கொடுத்தால் இன்னும் அதிகமான மாணவர்கள் சேர்வதற்கான வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசு உதவி பெறும், ஸ்காலர்ஷிப் மாணவர்களுடைய பெற்றோர் களுடைய வருமானத்தை, உச்சவரம்பை நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இன் றைக்கு கடைநிலை ஊழியர்கள்கூட ரூபாய் 1,500 சம்பளம் வாங்குகிறார்கள்.

[திரு. எஸ். அன்பழகன்] [1991 செப்டம்பர் 19

பிற்பகல் 2-40

எனவே அதனுடைய உச்சவரம்பு போதாது. அதை நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். தாட்கோ மூலம் வழங்குகிற கடன் கால தாமதமாவதால் கடன் வாங்கிய இடத்தில் பாதி மானியம் போய்விடுகிறது. எனவே அந்தக் கடனை உரிய காலத்தில் வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

வேலைவாய்ப்பில் அரசு அலுவல்களில் 18 சதவிகிதம் பூர்த்தியாகிவிட்டதா என்பதை ஒரு குழு போட்டு கண் காணிக்க வேண்டும் என்பது என்னுடைய பணிவான வேண்டு கோள். அந்தக் குழுவுக்கு தமிழகம் முழுவதும் மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அவர்களே தலைவராக இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சர் உறுப்பினராக வும், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் எல்லாம் அதில் உறுப்பினர்களாக வும் இருந்து 18 சதவிகிதம் பூர்த்தியாகிவிட்டதா என்று கண் காணிக்க வேண்டும். அதே நேரத்தில் என்னுடைய கன்னிப் பேச்சு என்பதால் எனக்கு இரண்டு நிமிடம் கூட சேர்த்து தர வேண்டும்.

இன்றைக்கு நகரில் சமுதாயக் கூடம் கட்டுகிறார்கள். இப் போதெல்லாம் கிராமத்தில் கூட கட்டுகிறார்கள். அது சரியாகப் படவில்லை. நகரத்தில் இருக்கிற கல்யாண மண்டபத்திற்கு எல்லாம் 5 ஆயிரம், பத்து ஆயிரம் என்று வாடகை வாங்குவதால் தாழ்த்தப்பட்ட சமு தாயங்கள் அந்த நகரத்தில் போய் திருமணம் போன்ற நல்ல காரியம் செய்ய முடியவில்லை. எனவே, நகரத்தில் சமுதாயக் கூடம் கட்ட வேண்டும்.

9, 10, 11 படித்த மாணவர்களுக்கு பஸ் பாஸ் பாதி கட்டணத்தில் கொடுக்கிறார்கள். அந்தக் கட்டணத்தை எடுத்துவிட வேண்டும். நிதிநிலை நெருக்கடி இருந்தாலும் வருகிற நிதியாண்டிலாவது அதைச் செய்ய வேண்டுமென்று அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கன்னிப் பேச்சு என்பதால் இன்னும் இரண்டு நிமிடம் சேர்த்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக விடுதி ஒன்று கட்டப்பட வேண்டும். பிற்படுத்தப்பட்ட கல்லூரி பெண் களுக்கும் விடுதி ஒன்று கட்ட வேண்டும். காவிரி ஆற்றில் ஏழரை கோடி ரூபாய் குடிநீர் திட்டம் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கக் கூடிய பகுதியில் வருவதால் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். அதேபோல காவிரியிலிருந்து எருமைப்பட்டி வரை,



1991 செப்டம்பர் 19] [திரு. எஸ். அன்பழகன்]

பவுத்திரன்புதூர் வரை 2 கோடி திட்டத்திலே வடிகால் வாரி யத்திலே திட்டம் ஒன்று இருக்கிறது. அதையும் என் தொகு திக்கு செய்து கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் மாண்பு மிகு உறுப்பினர் திரு. தமிழரசன் அவர்கள் அம்பேத்கார் 101-வது ஆண்டைக் கொண்டாட கடந்த அரசு தவறி விட்டது. தலை நகரில் கொண்டாட முடியவில்லை என்று சொன்னார். என்னைப் பொறுத்தவரையில் 1948-ல் தமி ழகத்தில் ஒரு சிறந்த பெண்மணி பிறப்பார். அவர் 1991–92 ஏப்ரல் 14-ல் அம்பேத்கார் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடுவார் என்ற அசரீரி இருந்திருக்கிறது என்று நினைக் கிறேன். அதனால்தான் வருகிற 1992 ஏப்ரல் 14-ஆம் தேதி டாக்டர் அம்பேத்காரின் 101-வது நிறைவுவிழாவை தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அனைத்து மாநிலத் தலைவர்களையும் அழைத் துக் கொண்டாட வேண்டும்.

அதே சமயத்தில் இன்னொரு வேண்டுகோள். வேளாண்மைப் பல்கலைக்கழகம் இருக்கிறது. மருத்துவத் துறைக்கு பல்கலைக் கழகம் இருக்கிறது. பொறியியல் துறைக்கு பல்கலைக்கழகம் இருக்கிறது. ஆனால் சட்டத் துறைக்கு பல்கலைக் கழகம் இல்லை. இந்த நாட்டின் சட்டத்தை உருவாக்கிய சட்ட மேதை டாக்டர் அம்பேத்கார் பெயரில் இருக்கிற சட்டக் கல்லூரியுடன் அத்தனை சட்டக் கல்லூரி களையும் இணைத்து டாக்டர் அம்பேத்கார் சட்ட பல்கலைக் கழகம் என்ற ஒன்றை நிறுவினால் 1½ கோடி தாழ்த்தப்பட்ட மக்களுடைய மனம் குளிரும் என்று சொல்லிக்கொள்கிறேன். சொன்னதைச் செய்வோம், செய்வதை சொல்வோம் என்று சொன்னார்கள். சொன்னதையும் செய்யாமல் செய்யாததையும் சொல்லிக்கொண்டே இன்று சாதி பெயரை சொல்லிக் கொண் கொண்டே பாதியில் வெளியேறி வீதியிலே போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு உள்ளதைச் சொல்லும், நல்லதை செய்யும் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன். உங்கள் இருக்கையில் இருந்து பேச வேண்டும்.

திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட நலத் துறை மானியத்தின் மீது இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பில் கருத்துக்கள் வழங்க வாய்ப்பு தந்தமைக்காக என் வணக்கங்களை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். உறுப்பினர்கள் கட்டாயமாக ஏழு நிமிடத்தில் முடித்துவிட வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்கள் விதித்திருக்கிறார்கள். இது ஒரு கோடியே இருபது லட்சத்தை நெருங்கிக் கொண்டிருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினை. எனவே வேறு மானியங்களிலே

பேசுவதற்கு எனக்கு அதிகமாக வாய்ப்பு தராவிட்டாலும்கூட இதிலே பேசுவதற்கு கொஞ்சம் விதியைத் தளர்த்தித் தர வேண்டுமென்ற வேண்டுகோளை முதலில் நான் உங்களுக்கு வைத்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற உறுப்பினர்கள் பேசியதை விட அதிக மானியங்களிலேயும், அதிக பிரச்சினைகளிலேயும் பேசியவர் தமிழரசன், உங்களுக்கே தெரியும். ஆரம்பிக்கிறபோதே உண்மைக்குப் புறம்பான தகவல் ஒன்றைச் சொல்லி ஆரம்பிக்க வேண்டாம்.

திரு. செ. கு. தமிழரசன் : அதை நான் சொல்லவில்லை. வேறு மானியத்தில் எனக்கு நேரம் கொடுக்காவிட்டாலும் கூட இங்கே கொஞ்சம் கூட அதிகமாக கொடுத்துவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா மானியங்களிலும் உங்களுக்கு நேரம் கொடுக்கப்படும்.

திரு. செ. கு. தமிழரசன் : ஒரு நாட்டினுடைய வளர்ச்சி என்பது ஏதோ பூகோளத்திலே அந்த நாட்டினுடைய வரைபடம் வளர்வது அல்ல. அந்த நாட்டு மக்களுடைய வளர்ச்சியாகத்தான் அது [illegible]க்கும்.

பிற்பகல் 2.45

நாட்டு மக்களுடைய வளர்ச்சி என்றால் நாட்டு மக்களிலே ஏகபோக முதலாளிகள், பெரிய பெரிய கோடீஸ்வரர்கள், பணக்காரர்கள் இவர்களுடைய வளர்ச்சியை நாம் சொல்ல முடியாது அடித்தளத்து மக்களுடைய வளர்ச்சியைத்தான் நாம் ஒரு நாட்டின் வளர்ச்சி என்று சொல்ல முடியும். எனவே நாட்டிலே அடித்தள மக்களாக, ஒதுக்கப்பட்ட மக்களாக, இன்னமும் கூட நம்முடைய உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதுபோல, கிராமப்புற பகுதிகளிலே தீண்டப்படாதவர்களாக தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிற இந்த மக்களுடைய வளர்ச்சியைத்தான் நாம் உண்மையான நாட்டினுடைய வளர்ச்சி என்று கருத்திலே கொள்ள முடியும். அந்த வகையிலே நாம் இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து பார்த்தால், சுதந்திரம் அடைந்து 44 ஆண்டுகளுக்குப் பிறகும் இன்னமும் கூட கிராமப் புறங்களிலே தாழ்த்தப்பட்ட மக்கள் ஒதுக்குப் புறங்களிலே, சேரி என்று சொல்லப்படக் கூடிய பகுதிகளிலே அடிப்படைத் தேவைகளை முழுக்க அடையாதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற அவலத்தை நாம் யாரும் மறுக்காமல் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். பல ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பிறகும், பல கோடி ரூபாய் பட்ஜெட் வழங்கிய பிறகும் கூட இன்னமும் இந்த நிலைமையைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தமிழகத்திலே 24,000க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருப்பதாக நம்முடைய புள்ளிவிவரங்கள் சொல்லுகின்றன. நாம் நிதி



ஒதுக்கீடு செய்கிறபோது கூட 24,000 கிராமங்களை கணக்கிலே வைத்து நிதி ஒதுக்கீடு செய்கிறோம். ஆனால் உண்மையான கணக்கு என்னவென்றால் 48,000 கிராமங்கள் இருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும். எந்தக் கிராமத்திற்குப் போனாலும் கிராமம் என்று ஒரு பகுதி இருக்கும், சேரி என்று இன்னொரு பகுதி இருக்கும். ஆக இரண்டும் பிரிந்து கிடக்குமே தவிர, ஒன்றாக இராது. ஆகவே 24,000 கிராமங்கள் என்று கணக்கிலே எடுத்துக் கொள்வது ஒரு தவறான முன்னுதாரணமாகத்தான் இருக்க முடியும். எனவே 48,000 கிராமங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. அது பிரிந்துதான் கிடக்கிறது. எந்தக் கிராமத்திற்குப் போனாலும் இவர்களுக்குத் தனி கிணறு, அவர்களுக்குத் தனி கிணறு, இவர்களுக்குத் தனி சுடுகாடு; அவர்களுக்குத் தனி சுடுகாடு; இவர்களுக்குத் தனி வாழ் பகுதி; அவர்களுக்குத் தனி வாழ்பகுதி. இப்படி எல்லா வகையிலும் பிரிந்துதான் கிடக்கிறது. இப்படி பிரிந்து இருக்கும் நிலைமைதான் நீடித்துக் கொண்டிருக்கிறது. எனவே நாம் நிதி ஒதுக்கீடுகளைச் செய்யும் போது, இன்னொரு 24,000 கிராமங்களையும் கணக்கிலே வைத்து செய்ய வேண்டும். இன்றைக்கு 1,600 கோடி ரூபாயை இந்த பட்ஜெட்டிலே நிதி ஒதுக்கீடு செய்து, துறைகளுக்குப் பிரித்திருக்கிறோம். ஆதி திராவிட நலத் துறைக்கு இதிலே ஒதுக்கி இருப்பது 102 கோடி ரூபாய். தமிழகத்தினுடைய மொத்த மக்கள் தொகையிலே ஆதிதிராவிட மக்கள் தொகை 28 சதவிகிதமாக இருந்து கொண்டிருக்கிறது. 1 கோடியே 20 லட்சம் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். இவ்வளவு பெரிய மக்கள் தொகை இருக்கிற, ஏறக்குறைய கால் பங்குக்கு மேலே இருக்கிற இவர்களுக்கு 1,600 கோடி ரூபாயில் 102 கோடி ரூபாய்தான் தந்திருக்கிறோம். இது குறைந்த அளவு நிதி ஒதுக்கீடு என்பதை வருத்தத்தோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த 102 கோடி ரூபாயிலே 57 கோடி ரூபாய் கல்விக்குப் போய்விடுகிறது. ஆதி திராவிட நலத் துறை நிர்வகிக்கும் பள்ளிகளின் செலவுக்கும், ஆசிரியர்களின் சம்பளத்திற்கும் 57 கோடி ரூபாய் போய்விடுகிறது. மீதி இருக்கிற 45 கோடி ரூபாய்தான் உண்மையாகவே ஒடுக்கப்பட்ட மக்களுடைய, தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலன்களுக்காக ஒதுக்கப்படுகிற தொகை. ஒரு கோடியே இருபது லட்சம் மக்களுக்கு 45 கோடி என்பது மிகக் குறைந்த நிதி ஒதுக்கீடு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எனவேதான் நான் ஒன்றை வலியுறுத்த விரும்புகிறேன். ஆதி திராவிட நலத் துறையிலே நிர்வகிக்கப்படும் கல்வி நிறுவனங்களை ஒன்று, கல்வித் துறையோடு சேர்த்துவிடுங்கள்; இல்லாவிட்டால் அதற்கு கல்வி மானியத்திலே இருந்து பணம் கொடுங்கள். இதிலே இருக்கிற ஒதுக்கீட்டிலே பாதி அங்கே போய்விட்டால் மீதிப் பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது?

[திரு. செ. கு. தமிழரசன்] [1991 செப்டம்பர் 19

அடுத்து அந்தப் பள்ளிகளிலே புத்தகங்கள் தரப்படுகிறது. எந்தப் பள்ளிக் கூடத்தில் போய் கேட்டாலும், இந்தப் பாடப் புத்தகங்கள் கல்வி ஆண்டு தொடக்கத்தில் தரப்பட்டிருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. கல்வி ஆண்டு பாதியிலோ, தே வுக்கு ஓரிரு மாதங்களுக்கு முன்போதான் பாடப் புத்தகங்கள் தரப்படுகின்றன. அப்படியானால் அந்த மாணவர்கள் எப்படி படிக்க முடியும்? எப்படி அவர்கள் தேற முடியும்? எப்படி நல்ல மதிப்பெண்களைப் பெற முடியும்? எப்படி வேறு பள்ளி மாணவர் களோடு போட்டியிட்டு தேர்விலே நல்ல மதிப்பெண்களைப் பெற முடியும்?

பிற்பகல் 4-50

எனவே பள்ளிக்கூடம் தொடங்கும்போதே. கல்வியாண்டு தொடங்குகிறபோதே அந்த பாடப் புத்தகங்களை கொடுத்தால் அவர்கள் படிப்பதற்கு வசதியாக இருக்கும்.

மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கையை நாங்கள் நீண்டகாலமாக வலி யுறுத்தி வருகிறோம். எங்களுடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நமது புரட்சித் தலைவி அவர்கள் கூட அ.இ.அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை வெளியிடுகிறபோது. எங்களுடைய அரசு மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு சலுகை வழங்குமென்று சொன் னார்கள். அவ்வாறு அன்புகூர்ந்து சட்ட பூர்வமாக ஆக்கி மாறிய கிறிஸ்தவர்களானாலும் சரி, பௌத்த மதத்திற்குச் சென்றவர்க ளாக இருந்தாலும் சரி, மதம் மாறிய இஸ்லாமியர்களானாலும் சரி, அந்த தாழ்த்தப்பட்டவர்களுக்கும். தாழ்த்தப்பட்டவர் களுக்குரிய அனைத்து சலுகைகளையும் வழங்கவேண்டுமென்ற ஆணையை சட்டப் பேரவையில் நிறைவேற்றவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

ஏராளமான விடுதிகள் இருக்கின்றன. போதிய வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் போளூர் வர தன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல பெண்கள் விடுதிகளுக்கு சுற்றுச் சுவர் இல்லை. அவர்களுக்கு போதிய பாதுகாப்புஇல்லை. அவர்களுக்கு வழங்கப்படுகிற தொகை இருக்கிறதே, பள்ளி மாண வனாக இருந்தால் ரூ. 75-லிருந்து ரூ. 100 வரை உணவுக் கட்ட ணம் தருகிறார்கள். கல்லூரி மாணவனாக இருந்தால் 160 ரூபாய் வரை தருகிறார்கள். ஒரு கல்லூரி மாணவனுக்கு 160 ரூபாய் என்பது சாப்பாட்டுக்கு போதுமான தொகையா? சென்னை போன்ற நகரங்களில் பெரிய நகரங்களில் ஒரு விடுதி யில் 160 ரூபாய் உணவுக் கட்டணம் போதுமா? அதிலே தரமான நல்ல உணவு வழங்கமுடியுமா? விடுதிக்காப்பாளர்கள் இருக் கிறார்களே, அவர்கள் அதை சுரண்ட முயற்சிக்கிறார்கள். அவர் களுடைய சுரண்டலுக்குப் பிறகு ஒரு மாணவனுக்கு 100 ரூபாய் மொத்தமாக மாதத்திற்குப் போய் சேர்ந்தாலே மிக அதிக



1991 செப்டம்பர் 19] [திரு. செ. கு. தமிழரசன்]

பட்சம் ஆக இருக்கிறது. எனவே அந்தத் தொகையை ரூ. 300 என்ற அளவிலே உயர்த்தித் தரவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, விடுதியிலே இப்போது வளர்ந்து வருகிற விஞ்ஞான யுகத்திலே மாணவனுக்கு பொது அறிவு வளர வேண்டு மானால் எல்லா விடுதிகளிலும் டி. வி. பெட்டி வேண்டும். இந்த டி. வி. பெட்டியை வைத்தால் செய்திகளைத் தெரிந்து கொள் வதற்கும், கல்வி தொடர்பான விஷயங்களை அறிந்து கொள்வ தற்கும் வழி கிடைக்கும். எல்லா விடுதிகளிலும் நிச்சயமாக நூல் நிலையம் வேண்டும். பல விடுதிகளில் அப்படி லைப்ரரி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஒரு நூல் நிலையமும் புத்தகங்களும் இருந்தால் கல்லூரி மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே நூல் நிலையத்தையும் விடுதிகளில் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேறு அடிப்படையான பிரச்சினை ஒன்று. இதை இந்த மாமன்றத்திலே பல ஆண்டுகளாக பேசிப்பேசிப் புளித்துப் போய் விட்டது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு வசதி வேண்டு மென்று கோருகிறோம். வீட்டு மனைப்பட்டா ஏற்பாடு செய்து தருகிறோம். அப்படித் தருகிறபோது ஒரு இடத்தை நாம் எடுத்துக்கொள்ளலாம் என்று நோட்டீஸ் அனுப்புகிறோம். அந்த முதல் நோட்டீஸ் போனவுடனேயே அந்த நிலத்திற்குச் சொந்தக்காரன் வழக்கு மன்றத்திற்குப் போய் ஸ்டே வாங்கிவிடுகிறான். ஸ்டே வாங்கிவிட்டால் அதற்குப் பிறகு 10 ஆண்டுகள் அந்த வழக்கு நடக்கும். 10 ஆண்டுகளில் முடியுமா முடியாதா என்றும் தெரியாது. அதற்குள்ளே அந்தக் கிராமத் திலே வேறு பல பிரச்சினைகள் வந்துவிடும். இந்த இடமே எனக்கு வேண்டாம், வீட்டு மனைப் பட்டா போதவில்லை, வேறு சிலர் புதிதாக வந்து இருக்கிறார்கள் என்று இப்படியெல் லாம் பிரச்சினை ஆரம்பித்து விடும். நாளடைவில் அந்த வீட்டு மனைப் பட்டா கோரப்பட்டிருக்கிற இடமே கிடைக்காது. அப்படி கிடைத்தாலும் அது முழுமையாக, போட்டவர்களுக்குப் போய்ச் சேராது. அப்படிப்பட்ட வழக்குகள் இன்றைக்கு தமிழ கத்தில் 6,000 இருக்கின்றன. ஸ்டே வாங்கப்பட்ட வழக்குகள். இது என்றைக்கு முடியும்? எப்போது அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா கொடுப்பது? மின்சாரத் துறை இருக்கிறது. மின்சாரத் துறையினர் கம்பம் போடுகிறார்கள். யார் வீட்டு நிலத்தில் வேண்டுமானாலும் கம்பம் போடுகிறார்கள். நெடுஞ் சாலைத் துறை இருக்கிறது. அவர்களுக்கு ரோடு போட வேண்டு மானாலும் யார் கட்டிடத்தை வேண்டுமானாலும் இடித்து விடு கிறார்கள். நெடுஞ்சாலைத் துறைக்கு அவசியம் இருக்கிறது, எனவே, இடிக்கிறோம் என்று இடிக்கிறார்கள். ஆனால், ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைக்காகப் போனால் மட்டும் கோர்ட் டுக்குப்போய் ஸ்டே வாங்குகிறார்கள். இப்படிப்பட்ட வழக்கு கள் ஏராளமாகத் தேங்கிக் கிடக்கிறது. எனவே, நாம் சட்டத்

திருத்தத்தை செய்து கோர்ட்டுக்கு போகக்கூடாது. கோர்ட்டுக்குப் போனால் அது செல்லாது என்ற நிலைமையை உருவாக்கினால்தான் உடனடியாக நாம் நினைத்த மாத்திரத்திலேயே நாம் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க முடியும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இன்னொரு சோகமான செய்தியை நான் சொல்லித்தான் ஆக வேண்டும். வீட்டுமனைப்பட்டாவாவது பரவாயில்லை. இன்னும் பல தாழ்த்தப்பட்ட கிராமங்களில் மனிதர்கள் செத்துப் போனால் புதைப்பதற்கு சுடுகாடு இல்லை. சுடுகாடு இல்லாமல் பல இடங்களில் அப்படிப்பட்ட தகராறு இன்றைக்கும் நடந்துகொண்டு இருக்கிறது. சில இடங்களில் சுடுகாடு இருந்தாலும் அதற்குப் போவதற்கு மயானப் பாதை கிடையாது. செத்துப் போனால் இவ்வளவு காலத்திற்குப் பிறகும் புதைப்பதற்கு சுடுகாடு இல்லாத நிலைமையை நாம் என்னவென்று சொல்வது ?

பிற்பகல் 4-55

எனவே, நம்முடைய ஆதி திராவிட நலத்துறை வீடு கட்டுவதை, வீடு தருவதை இரண்டாம் பட்சமாக கருதினாலும், எல்லா கிராமங்களுக்கும் நிச்சயமாக மயானமும், மயானப் பாதையும் உடனடியாகச் செய்து தர வேண்டுமென்று நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நம்முடைய தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இருக்கிறது. குடியுரிமை பாதுகாப்புச் சட்டம், தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இருக்கின்றன. இதை நாம் ஆண்டுக்கு ஒரு முறை அரசு அலுவலகங்களிலே உறுதிமொழியாக எடுத்துக்கொள்கிறோம். பின்னர் தீண்டாமை ஒழிப்பு வார விழா என்று நடத்துகிறோம். இன்று வார விழா நடத்துகிறோமே, அதை எங்கே நடத்துகிறோம் தெரியுமா ? தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கிற பகுதிக்குப் போய் தீண்டாமை ஒழிப்புக்கு வார விழா நடத்துகிறோம். அங்கே எவன் தீண்டாமல் இருக்கிறான் ? ஆனால், அவன் தீண்டாமைக் கொடுமைக்கு ஆளாகி இருக்கிறான். இந்த விழா நடக்க வேண்டிய இடம் எங்கே என்றால், நகரின் மையப் பகுதியிலோ அல்லது மற்றவர்கள் வாழ்கிற பகுதியிலோ—அங்கே தீண்டாமை வேண்டாம், சாதி ஒழிப்பு வேண்டும் என்று பிரச்சாரம் செய்தால் அதிலே ஏதாவது அர்த்தம் இருக்கும். ஆனால், தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதியில் போய் தீண்டாமை ஒழிப்பு வார விழா என்று கொண்டாடினால், இது வேடிக்கையாக இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட விழாக்களைக் கொண்டாடும்போது நகரின் நல்ல மையப் பகுதிகளிலே எல்லாத் தரப்பு மக்களையும் அழைத்து கொண்டாடினால் பொருள் இருக்கும் என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இதற்காக ஒரு டி.ஐ.ஜி-ஐப் போடுவார்கள். அந்த டி.ஐ.ஜி. பதவி ஏற்கும்போது போக மாட்டார். அதை ஒரு பனிஷ்மென்ட் ஆக நினைத்துக்கொள்கிறார்.



ந்தத் துறைக்கு யாராவது ஒரு அதிகாரி போட்டால் அவர் தை பனிஷ்மென்ட்டாக எடுத்துக்கொள்கிறாரேயொழிய, அதை ரு துறையாகவே யாரும் நினைப்பதில்லை. டி.ஐ.ஜி. ஆனா ும், அந்தத் துறையிலே இருக்கிற மற்ற அதிகாரிகளானாலும், ந்த குடியுரிமை பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்துகிற திகாரிகளானாலும், அந்தத் துறையை ஒரு பனிஷ்மென்ட் ஆக னைத்துக்கொள்கிறார்கள் ; அங்கே போவதே இல்லை. ங்கே போடப்பட்டிருக்கிற வழக்குகள் பல. ஆனால், எந்த ழக்கும் முழுக்க ஆராயப்பட்டு தண்டனை வழங்கப்பட்டதாக ல்லை, 10 விழுக்காடு கூட கிடையாது. 100 வழக்குகள் போடப்பட்டு இருக்கிறது என்றால், 10 விழுக்காடு கூட தண்டனை தந்தது கிடையாது. எனவே, அந்த நிலைமையையும் மாற்ற வேண்டும்.

இங்கே ஒரு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளானாலும் சென்னை போன்ற நகரங்களில், பெரிய நகரங்களில் வீடு வாங்க முடியாது. ''நான் இந்த சமுதாயத்தவன்'' என்று சொன்னால் வீடு தரமாட்டார்கள். எனவே, நான் நீண்ட காலமாக ஒரு கோரிக்கையைச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். வீட்டுவசதி வாரியத்திலே வாடகை வீடு தருகிறார்களே, அதிலே ஒரு 18 விழுக்காடு தந்தால் அவர்கள் அங்கே போய் இருப்பதற்கு வசதியாக இருக்கும். 18 விழுக்காடாவது வந்தால் அதிகாரிகளுக்கு பயனுள்ளதாக இருக்கும். 18 விழுக்காடு அவர்களுக்குத் தர வேண்டுமென்று பலமுறை நான் வலியுறுத்திக் கொண்டிருக்கிறேன்; இப்போதும் அதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த சாதியை நாம் ஒழிக்காத வரை வேறு எந்த வளர்ச்சியும் பெற முடியாது. அண்ணல் அம்பேத்கார் ஒருமுறை சொன்னார், "Caste is a monster. You cannot have political reform and you cannot have economic reform unless you kill this monster" இந்த சாதி என்கிற பேயை ஒழிக்காதவரை அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் எந்த நாட்டிலும் ஒரு புதிய மறுமலர்ச்சியையோ, வேறு எதையுமோ கொண்டுவர முடியாது என்று தெளிவாகச் சொன்னார்கள். இதை நம்முடைய குடியரசுத் தலைவர் கூட, பாரத ரத்னா, அண்ணல் அம்பேத்கார் அவர்களின் சிலையை கல்கத்தாவில் திறக்கும்போது சுட்டிக்காட்டி நினைவுபடுத்தினார். 'அவர் சொன்னார் ; அதேதான் இன்னமும் நடந்து கொண்டிருக்கிறது.' என்று குடியரசு தலைவர் சொன்னார். வேறு எந்தத் துணைக் கண்டத்திலும் நிற வேறுபாடுகள் இருக்கிறது ; மத வேறுபாடுகள் இருக்கிறது ; இன வேறுபாடுகள் இருக்கிறது ; எத்தனையோ வேறுபாடுகள் இருக்கிறது ; எல்லா நாட்டிலும் இருக்கிறது. ஆனால், இந்தியாவிலே மட்டும்தான் நம்முடைய சகோதரர் அவர்கள் இங்கே சொன்னதைப் போல ஒரே மாதிரியான உணவு, ஒரே மாதிரியான கலாச்சாரம், ஒரேமாதிரியான உடை, எல்லாம் ஒரே

மாதிரியாக இருந்தாலும், 'நீ தாழ்த்தப்பட்டவன், நீ தீண்டப்படாதவன்' என்று தள்ளி வைக்கிற நிலைமை இருக்கிறது. இது உலகிலே வேறு எங்கும் கிடையாது. இந்தியாவிலே மட்டும் தான் இருக்கிறது. இதனாலேதான் பிரச்சினைகளே தோன்றுகிறது. எனவே, இதிலே கடுமையான நடவடிக்கை களை நாம் மேற்கொள்ளாதவரை, இதை நாம் அவ்வளவு எளிதாக ஒழித்துவிட முடியாது. தந்தை பெரியார் அவர்கள் சொன்னதைப்போல, இதற்கு மருந்து தேவையில்லை ; அறுவைச் சிகிச்சை தேவை. அறுவைச் சிகிச்சையின் மூலமாகத்தான் இதை நாம் ஒழிக்க முடியும். எனவே, நம்முடைய அதிகாரி களுக்கு கடுமையான அதிகாரங்களை நாம் வழங்கியாகவேண்டும். எவ்வளவோ பேர் சொன்னோம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 16 நிமிடம் எடுத்து இருக்கிறீர்கள். உங்களுடைய கோரிக்கை ஏற்கப்பட்டு இருக் கிறது.

பிற்பகல் 5-00

திரு. செ. கு. தமிழரசன் : அன்னை இந்திரா காந்தி அவர்கள் கூட ஐ.நா. மன்றத்தில் பேசுகிறபோது சொன்னார்கள், ' என்னுடைய பாரதத்திலே, அதுவும் தென் பகுதியிலே ஒரு தமிழ் கவிஞன் சொல்லி இருக்கிறான். யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று'. அங்கே போய் ஐ.நா. மன்றத்திலே மிகப் பெருமையாக அந்தப் பாடலைச் சொன்னார்கள். எவ்வளவோ பேர் சொன்னோம். நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே கூட 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று போட்டு இருக்கின்றோம். 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்று போட்டு இருக்கிறோம். 'இருட்டறையில் உள்ளதடா' என்று இப்படியெல்லாம் சொல்லிக்கொண்டு இருக்கிறோம். ஆனால் இன்னமும் கூட கிராமப்புறத்திலே டீ கடைக்கு போனால், தனி டீ தான் கொடுக்கிறார்கள். அந்த நிலையிலேதான் தர்மபுரி மாவட்டம் நாகபுரியிலே ஒரு பெரிய தகராறு நடந்து 25 பெண் களை ஒரே நேரத்திலே கற்பழித்து இனக்கலவரம் நடந்தது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தனி டீ பல பகுதிகளில் இருக்கிறது. இதற்காக இருக்கும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் தீவிரமாக அமலாக்கப்படா விட்டால் இது நடந்து கொண்டிருக்கும். நாம் பேசிக்கொண்டே இருப்போம். நம்முடைய மக்கள் தொகைக்கேற்ப இட ஒதுக் கீட்டை 25 சதவீதமாக மாற்ற வேண்டுமென்று நாங்கள் சொல் லிக்கொண்டே இருக்கிறோம், வலியுறுத்திக் கொண்டே இருக் கிறோம். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 18 விழுக் காட்டை 21 விழுக்காடாக மாற்றுவதாக அறிவித்தார். அதற்காக ஆணை போட்டார். ஆனால் அது அமல்படுத்தப்பட வில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. எனவே,



25 விழுக்காடாக அதனை மாற்ற வேண்டும். மாநில அரசு இட ஒதுக்கீடுகளில் அதனைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இட ஒதுக்கீடு முறை ஒழுங்காக செயல்படுத்தப்படுகிறதா என்பதை ஆராய முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு கண்காணிப்புக் குழுவை நாம் போட வேண்டும். அந்த கண் காணிப்புக் குழு பல்வேறு சமூக வல்லுநர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். உயர் அதிகாரிகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். நம்முடைய புரட்சித்தலைவி அவர்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதைப்போல நாம் வெறும் சலுகைகளால் தாழ்த்தப்பட்ட மக்களை வளர்க்க முடியாது. பொருளாதார ரீதியான மேம்பாட்டின் மூலமாகதான் அவர் களை வளர்க்க முடியும். எனவே, இதற்காக பொருளாதார மேம்பாடு திட்டங்களை, பல சிறப்பு திட்டங்களை அமல்படுத்த வேண்டும்.

இதற்காக பெரிய விஷயங்களை செய்ய வேண்டாம். பெரிய தொழிற்சாலைகளுக்கு அனுமதி தரவேண்டாம். அவர்களை பெரிய பஸ் ஓனர்களாக ஆக்கவேண்டாம். நம்முடைய பி.டபிள்யூ.டி., ஹைவேஸ், டாட்கோ போன்ற பல நிறுவனங்கள் இருக்கின்றன. இவற்றில் 5 இலட்சம் வரையிலோ, 10 இலட்சம் வரையிலோ உள்ள கான்ட்ராக்ட்களை நாமினேஷனாக நாங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தருவோம் என்று சொன்னாலே போதும். 10 ஆயிரம் பேர்கள் வருடத்திற்கு பலனடைவார்கள். டாட்கோ மூலமாக 5 இலட்சம் மார்ஜின் மணி தரப்படுகிறது. எவ்வளவு பேருக்கு தந்திருக்கிறார்கள் என்றால் சில பேருக்கு தந்திருக்கிறார்கள். கட்டாயத்தின்பேரில், விழாக்களில், சாதனையை எட்டியாக வேண்டுமென்று தந்திருக்கிறார்கள். ஆனால் பல இடங்களில் சொத்து, கொலேட்டரல் கேட்கிறார் கள். அந்தச் சொத்தை எப்படி காட்ட முடியும் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போதும், முடித்துவிடுங்கள்.

திரு. செ. கு. தமிழரசன் : இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். தமிழகத்தில் சில மாவட்டங் களில் தொடர்ந்து இனக்கலவரங்கள், ஜாதிக் கலவரங்கள் நடந்து கொண்டிருக்கிறது. கடந்த 4, 5 ஆண்டுகளில் 3,000-க்கு மேற்பட்ட குடிசைகள் எரிந்து இருக்கின்றன. சில பகுதிகளில் இது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. எனவே, மாநில அளவில் இப்படிப்பட்ட ஜாதிக் கலவரங்கள் நடக்காமல் தடுக்க ஒரு சமுதாயத் தலைவர்களைக் கொண்ட குழு அமைக்க வேண் டும் என்று நான் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறேன். அதிலே போலீஸ் அதிகாரிகள்........

[1991 செப்டம்பர் 19

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> போதும், உட்காருங்கள். திரு. கா. கந்தசாமி.

*<u>திரு. கா. கந்தசாமி :</u> பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது தொகுதியான தலைவாசல் தொகுதியில் மொத்தம் மக்கள் தொகையில் சுமார் 40 சதவீதம் பேர் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களில் பெரும்பாலும் விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள். மழை பொய்த்து விட்ட நிலையில் விவசாயக் கூலி வேலை கிடைக்காமல் ஆதிதிராவிட மக்கள் சென்னை, ஈரோடு போன்ற இடங்களுக்குக் குடிபெயர்ந்து சென்று கொண்டிருக்கிறார்கள். இந்தப் பகுதி தாழ்த்தப்பட்ட இன மக்கள் வேலைவாய்ப்பைப் பெறுகிறவகையில் கூட்டுறவு முறையில் ஜவ்வரிசித் தொழிற்சாலை ஒன்றைத் துவக்க அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தலைவாசல் தொகுதியில் அதிக அளவு கால்நடைகள் இருப்பதால் அங்கு தோல் அதிகமாகக் கிடைக்கிறது. ஆதி திராவிடர் அருந்ததியர் மக்கள் வேலை வாய்ப்பைப் பெறுகிற வகையில் ஆதி திராவிடர் தோல் பதனிடும் கூட்டுறவுத் தொழிற்சாலை ஒன்றை இந்தப் பகுதியில் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மழைக் கோட்டு வழங்க இந்த அரசு உத்தேசித்துள்ளதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர் மாணவ மாணவியர்களுக்கு இந்தத் துறையின் சார்பில் இலவசமாக பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. சில சமயங்களில் மாணவர்களுக்கு இந்தப் புத்தகங்கள் சரியாக விநியோகிக்கப்படுவதில்லை. இவைகளை கடைகளில் ஒட்டுமொத்தமாகக் கூட விற்று விடுகிறார்கள்.

பிற்பகல் 5-05

நடப்பு கல்வி ஆண்டில், கல்விக் கூடங்கள் திறந்து 3½ மாதங்கள் ஆகின்றன. இன்னும் கூட சில பள்ளிகளில் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படாமல் உள்ளன. ஆதி திராவிடர் மாணவ, மாணவியர்கள், உதவித் தொகை பெறுவதற்கும், விடுதிகளில் தங்குவதற்கும் பெற்றோரின் ஆண்டு வருமானம் 15 ஆயிரம் ரூபாயாக இருப்பதை 24 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு ஒதுக்கப்படும் உணவுக் கட்டணம் போதுமானதாக இல்லை. இந்த உணவுக் கட்டணத்தை உயர்த்திக் கொடுக்கவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 19] [திரு. கா. கந்தசாமி ]

ஆதி திராவிடர் மாணவ, மாணவியர் விடுதிகள் சரியாகப் பராமரிக்கப்படாமல், மழைக் காலங்களில் கட்டிடங்கள் ஒழுகி, மாணவர்கள் படிக்கும் புத்தகங்கள் எல்லாம் நனைந்து விடுகின்ற அவலநிலை பரவலாக உள்ளது. மழைக் காலங்களில் விடுதியைச் சுற்றி மழைத் தண்ணீர் தேங்கி கொசுக்கள், உற்பத்தியாகி மாணவர்கள் பலவிதமான நோய்களால் தாக்கப்படும் சூழ்நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். மேலும் சில விடுதிகளில் விளக்கு வசதிகள் கூட இல்லாத நிலை உள்ளது. வாடகைக் கட்டிடங்களில் இயங்கும் விடுதிகள் நிலை பரிதாபமாக உள்ளது. எனவே விடுதிகளைப் பராமரிக்க தனிக் கவனம் செலுத்த வேண்டுமென இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மலைப் பகுதிகளில் ஆதிவாசிகளுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, ஒருங்கிணைந்த மலைவாழ் மேம்பாட்டுத் திட்டம் அமுல் படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் எனது தொகுதியில் மண் மலைப் பாலக்காட்டுக்கும், நரிப்பாடிக்கும் தார்ச்சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். நரிப்பாடிக்கு தார் சாலை அமைத்தால், பஸ் வசதி ஏற்பட்டு பல கிராமங்கள் பயன் அடையும். நரிப்பாடிக்கு பஸ் வசதி இல்லாததால், குறிப்பாக கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல கட்டிலில் படுக்க வைத்து தூக்கிச் செல்கிறார்கள். இப்படி எடுத்துச் செல்வதற்குள் சில சமயங்களில் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடுகின்றது. மலைப் பகுதியில் உள்ள பள்ளிகளுக்கு ஆசிரியர்களும், சுகாதார நிலையங்களுக்கு டாக்டர்களும் சரியாக வருவதில்லை. பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் சரியாகச் சென்று கல்வி கற்பிக்காத காரணத்தால், பள்ளி இறுதித் தேர்வில் இந்த மாணவர்கள் அதிக அளவில் வெற்றி பெற முடியாமல் போய் விடுகிறது. எனவே இதில் அரசு உரிய கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் உள்ள ஆதிவாசி மக்களிடையே பால்வினை நோய் வருகிறது. 6 வயது, 7 வயது சிறுவர் சிறுமியருக்குக் கூட இந்த நோய் உள்ளது இவைகளை கட்டுப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் ஆலோசனைக்குழு ஏற்படுத்தி, சேவா சங்கங்களைக் கொண்டு, அடிக்கடி மருத்துவ முகாம்களை நடத்தி பால்வினை நோயைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர்களுக்கு செய்யப்படும் உதவிகளில் தலையாய உதவியாக நிற்பது இலவச வீட்டு மனைப்பட்டாக்கள் கொடுப்பதுதான். சென்ற ஆண்டைக் காட்டிலும், இந்த ஆண்டு கூடுதலாக 1 கோடியே 16 லட்சம் ரூபாய் ஒதுக்கி உள்ளார்கள். மொத்தமாக இந்தத் திட்டத்திற்கு 4 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. கா. சந்தசாமி] [1991 செப்டம்பர் 19

இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் கொடுப்பதிலே உள்ள குறைபாடுகளை நீக்க தனிக் கவனம் செலுத்தியாகவேண்டும். சில சமயம் சில இடங்களில், வீட்டுமனைப் பட்டாவின் விலையை காட்டிலும், அதிகப் பணம் வீட்டு மனையைப் பெறுவதற்கு செல வாகிவிடுகிறது. நில ஆர்ஜிதம் செய்யும் தனி தாசில்தார் நிலத்தை எடுக்காமல் இருக்க, என்னென்ன வழியோ, அவைகளை நிலச் சொந்தக்காரர்களுக்கு சொல்லிக் கொடுக்கிறார்கள். இந்த இடத்தில் உன் பாட்டியை புதைத்து உள்ளேன். உன் பாட்டனை புதைத்து உள்ளேன் என்று சொல்லச் சொல்கிறார்கள். ஒரு கல்லை நட்டு இதுதான் எங்கள் குலதெய்வம் என்று சொல்லச் சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல, வீட்டுமனைப் பட்டா கொடுப் பதற்கு நில ஆர்ஜிதம் செய்ய 4-1 நோட்டிபிகேசன் கொடுத்த பிறகும் அந்த நிலத்தை எடுக்காமல் இருக்க கூட்டுப்பட்டாவாக இருந்ததை, தனிப் பட்டாவாக பிரித்துக் கொடுத்து விடுகிறார்கள். இந்த மாதிரியாக செயல்கள் நடைபெறாவண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டும்.

முன்னேறிவரும் தமிழ்ச் சமுதாயத்தில் தீண்டாமைக் கொடு மைகள் ஆங்காங்கே இருந்து கொண்டுதான் உள்ளன. அரிசனங் கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டுவிட்டால் ஜாதிக் கொடுமைகள் தானாக குறைந்துவிடும்.

இனக்கலவரங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க புதிதாக பள்ளி கள், சுகாதார நிலையங்கள் மேல்நிலைத் தொட்டிகள் ஏற்படுத் தும்போது அவைகளை ஆதி திராவிடர் குடியிருப்புகளில் அமைக்க இந்த அரசு முன்வந்திருப்பதற்கு எனது பாராட்டுக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு தனியாக டெலிவிசன் பெட்டிகளைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சில கிராமங்களில் மயான வசதிகளுக்குக் கூட ஆதி திராவிடர்கள் போராட வேண்டியுள்ளது. இந்த மாதிரி பிரச்சினைகளைத் தீர்க்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் புதிய தொழில்களைத் துவங்குவதற்கு முன்வருபவர்களுக்கு உதவும் வகையில் 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு உள்ளது. தங்களுக்கு மத்திய, மாநில அரசுகள் என்னென்ன உதவிகளைச் செய்கின்றன என்பது கூட தெரியாமல் அரிசன மக்கள் நிறைய பேர்கள் உள்ளனர். எனவே ஆதி திராவிடர்களுக்கு தொழில் விழிப்புணர்ச்சி முகாம்களை மாவட்டத் தலைநகரங்களில் நடத்த அரசு முன்வரவேண்டும்.

அரசு நிறுவனங்களில் குறிப்பாக போக்குவரத்து நிறுவனங் களில் அரிசனங்களுக்கு 18 சதவீதம் வேலைவாய்ப்பு கொடுக்கப் படுகிறதா என்பதை கண்காணிக்கவேண்டும்.



1991 செப்டம்பர் 19] [திரு. கா. சந்தசாமி]

ஓட்டுநர், நடத்துநர் பயிற்சி பெற்றவர்கள் பல நேர்முகத் தேர்வுக்கு ஆஜராகியும்கூட. அவர்கள் வேலையில் சேர்த்துக் கொள்ளப் படாமல் அந்த இடங்களுக்கு அரிஜனங்கள் கிடைக்கவில்லை என்று கூறி பொது பட்டியலில் உள்ளவர்களை நிரப்பி விடு கின்ற சூழ்நிலைகள் உள்ளன. இதுபோன்ற நிலைகள் ஏற்படா வண்ணம் அரசு உறுதியாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

பிற்பகல் 5-10

மலிவு விலை மதுவை ஒழித்து ஆதி திராவிட. இன மக்களை பொருளாதார ரீதியில் உயர்த்துவதற்காக வழிவகை செய்த மாண்புமிகு முதலமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்து அமை கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. து. மூர்த்தி.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே எங்களையெல்லாம் வாழ வைக்கின்ற தமிழகத்தின் காவல் தெய்வம், எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, சட்டமன்ற உறுப்பினர் பெருமக்களே, உங்கள் அனைவருக்கும் முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இன்றைக்கு இந்த அவையிலே என்னையும் ஒரு சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்து உங்கள் மத்தியிலே பேசுவதற்கு நல்ல வாய்ப்பினையும் ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய சீர்காழி தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

சாதாரண மனிதனும் புரட்சித் தலைவி அவர்களால் அடை யாளம் காட்டப்பட்டால் சட்டமன்ற உறுப்பினராக ஆகலாம் என்கிற ஒரு பெரிய வரலாற்றை ஏற்படுத்திய பெருமை நமது புரட்சித் தலைவி அவர்களையே சாரும். எனவே அந்த ஒப்பற்ற என்னுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி ஒரு சில கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன்.

இன்றைக்கு ஆதிதிராவிடர் பழங்குடியினர் மீது நடைபெறு கின்ற இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பைத் தந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு பல கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் ரூ. 102,90,18,000

[திரு. து. மூர்த்தி] [1991 செப்டம்பர் 19

இந்தத் துறைக்காக ஒதுக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே
பாராட்டுதலுக்குரிய ஒன்றாகும். இப்படி ஒதுக்கப்பட்டிருந்
தாலும் இந்தத் துறை கடந்த தி.மு.க. அரசால் அலட்சியப்
படுத்தப்பட்டு முறையாக செயல்படாமல் இருந்து வந்திருப்பது
குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

எனவே அரிஜனங்களுக்காக ஒதுக்கப்படுகின்ற இந்தத் துறை
நல்ல முறையில் செயல்படவும் அதிலே போடப்படுகின்ற திட்
டங்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேரு
கின்ற அளவிற்கு கண்காணிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில்
சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும் இந்தத் துறையின் மூலமாக ஒதுக்கப்படுகின்ற,
மான்யத்தொகைகள், ஸ்டைபண்ட், பள்ளிகள், விடுதிகள்,
கல்லூரிகள் முழுமையாக செயல்படவேண்டும். அப்படி
முழுமையாகச் செயல்பட்டால்தான் ஆதி திராவிடர்களும்,
பழங்குடியினரும் முழுமையாக பயன் அடைய வாய்ப்பாக அமை
யும். அத்தோடு அனைவரும் ஒழுங்காக படிக்கவும் முடியும்.
அப்படியே ஸ்டைபண்ட் மானியத் தொகைகள் முறையாக உரிய
நேரத்தில் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதை இந்த
நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு சுதந்திரம் கிடைத்து 43 ஆண்டுகள் ஆகியும் அடுத்
தவர்களை நம்பியே தங்களுடைய வாழ்க்கையை ஓட்டிக் கொண்
டிருக்கின்றார்கள். எனவே இவர்கள் சுயமாக வாழுகின்ற
அளவிற்கு அவர்களை முற்போக்குப் பாதையில் கொண்டு செல்
வதற்கு நம்முடைய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து மென்மேலும்
அவர்களை பொருளாதாரத்திலும், கல்வியிலும் உயர
ஆவன செய்யும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமென்று இந்த
நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் வாழ்கின்ற நிறைய ஆதி திராவிட
மக்களுக்குச் சொந்தமாக குடியிருக்க வீடு கிடையாது. அரசாங்கத்
தால் ஒவ்வொரு ஆண்டும் ஆதி திராவிடர்களுக்கும் வீடுகள் கட்டிக்
கொடுத்தாலும் நாளடைவில் முழுமையாக நிறைவேறுகிறதா
என்றால் கிடையாது. நாளுக்கு நாள் அவர்கள் தேவைகள் அதிக
மாகிக் கொண்டே செல்கின்றன. எனவே நம்முடைய அரசு
நாட்டிலே வாழ்கின்ற ஆதி திராவிட மக்களுக்கும் சொந்த குடி
யிருப்பு கிடைக்க ஆவன செய்து, அந்த நிலையை மாற்ற
வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அப்படி அவர்களுக்காக கட்டித் தருகின்ற குடியிருப்புக்கு முறை
யான பாதை வசதி கிடையாது. அப்படியே பாதை இருந்தாலும்,
மின்சார வசதி கிடையாது. மேலும் அவர்கள் குடியிருக்கின்ற
பகுதிக்கு பாதுகாப்பான சாலைகளும் கிடையாது. எனவே
எங்கெங்கு ஆதி திராவிடர்கள் குடியிருக்கின்றார்களோ, அங்கு
நமது அரசு உடன் நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு பாதை
வசதியும், மின் இணைப்பு வசதியும் ஏற்படுத்தித் தரவேண்டு
மென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.



1991 செப்டம்பர் 19] [திரு. து. மூர்த்தி]

மேலும் ஆதி திராவிடர்களுக்கு கட்டிக்கொடுக்கின்ற குடியிருப்
புகள் இன்னமும் தமிழ்நாட்டில் பூர்த்தியடைந்திருக்கின்றதா என்
றால் கிடையாது. எனவே நம்முடைய இதய தெய்வம் புரட்சித்
தலைவி அவர்கள் கருணை உள்ளத்தோடு அவர்களுக்கு முழுமை
யாக பூர்த்தி அடைகின்ற வகையில் குடியிருப்புகள் வழங்கவேண்டு
மென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

அத்தோடு அவர்களுக்கு வீடு கட்டுவதில் ஒரு சிறப்புத் திட்ட
மாக அறிவித்துக் கட்டிக் கொடுப்பதற்கு நம்முடைய அரசு
ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு கட்டிக் கொடுக்கின்ற
வீடுகள் பள்ளமான பகுதியில் உள்ளன. எனவே அவர்களை
மேலான பகுதியில் பெருவழி பாட்டை அமைத்துக் கொடுக்க
ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எத்தனை சட்டம் இருந்தாலும் குறிப்பாக மனித உரிமை
பாதுகாப்புச் சட்டம் இருந்தாலும் அவர்களுடைய உரிமைக்கும்,
உடமைக்கும், உயிருக்கும் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை இன்
றைக்கும் இருந்து வருகின்றது.

பிற்பகல் 5-15

எனவே அவர்களுடைய உடைமைக்கும் உயிருக்கும் பாதுகாப்பு
அளித்திட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள
ஆசைப்படுகிறேன். மேலும் ஒரு சமுதாயம் உயர வேண்டு
மானாலும் அவர்கள் மிக முக்கியமாக முன்னேறுவது கல்வியிலும்
பொருளாதாரத்திலும் தான். எனவே இன்றைக்கு ஏழை
எளிய தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் இந்த சமுதாயத்
தில் முன்னேற வேண்டுமானால் அவர்கள் கல்வியிலும் பொருளா
தாரத்திலும் முன்னேற்ற வேண்டும். பல ஆண்டுகளாகவே
அவர்களுடைய முன்னேற்றத்திற்கு பல அரசுகள் பாடுபட்ட
போதிலும் இன்னும் அவர்கள் வறுமை கோட்டிற்கு கீழேதான்
வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். எனவேதான் நம்முடைய
முன்னாள் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
முதன் முதலில் வறுமை கோட்டிற்கு கீழே எத்தனை மக்கள்
வாழ்கின்றார்கள் என்ற கணக்கினை எடுத்து அதன்படி அவர்
களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரும்பாடு பட்டார்கள்.
எனவே இன்றைய நம்முடைய தமிழகத்தின் முதல்வர் அவர்
களும், அவர்களை நிரந்தரமாக கல்வியிலும் பொருளாதாரத்
திலும் முன்னேற்ற முக்கியமான காரணங்களை கண்டு பிடித்து
அவர்களை முன்னேற்ற முனைப்பாக இருந்து பாடுபட வேண்டும்
என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. து. மூர்த்தி] [1991 செப்டம்பர் 19

அதோடு மட்டுமல்ல இன்றைக்கு ஒவ்வொரு துறையிலும் அவர்
களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற சதவிகிதத்தில் அரசு துறை நிறு
வனங்களில் இடங்கள் நிரப்பப்படுகின்றனவா என்றால் இடை
யாது. எனவே குறிப்பாக ஆதி திராவிடர் பழங்குடியினர்
பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்படுகின்ற இடங்கள் இன்ன
மும் நிரப்பப்படாமல் உள்ளது. எனவே நம்முடைய அரசு
இதுபோன்ற இடங்களை உடனே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை
வைத்து நிரப்பப்படாமல் இருக்கின்ற இடத்தை உடன் நிரப்ப
ஆவன செய்து ஆணை வழங்கிட வேண்டும் என்று இந்த நேரத்
திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைக்கு நான்
வாழுகின்ற கிழக்கு தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக ஆதிதிரா
விட மக்களும் பிற்படுத்தப்பட்ட மக்களும் வாழ்
கிறார்கள். அதில் பெரும்பாலும் விவசாய கூலிகளாக வாழ்ந்து
வருகின்றவர்கள் தான் அதிகம். காரணம் தினந்தோறும் கூலி
வேலை செய்தால்தான் தங்கள் வாழ்க்கையை நகர்த்த முடியும்
என்கின்ற ஒரு நிலை இன்றைக்கும் இருந்து வருகின்றது.
எனவே இவர்களுக்காக வழங்கப்படுகிற கூலி ஒரு சில இடங்களில்
சட்டப்படி வழங்கப்பட்டாலும் சட்டத்தில் நிர்ணயம் செய்து
கொடுத்தாலும் தமிழ்நாடு முழுவதும் அதை நடைமுறையில்
கொண்டு வர முடிகிறதா என்றால் இல்லை. எனவே ஏழை
களுக்காக திட்டம் தீட்டுகிற நம்முடைய அரசு அவர்களுடைய
கஷ்டங்களையும் சங்கடங்களையும் கருத்தில் கொண்டு தமிழ்நாடு
முழுவதும் ஒரே சட்டம் என்று அமலாக்க வேண்டும் என்று இந்த
நேரத்தில் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் ஆதித்
திராவிடர்களும் பிற்படுத்தப்பட்ட மக்களும் பெரிய பெரிய
கான்வென்டுகளில் படிக்க முடியாத சூழ்நிலை இன்றைக்கும்
இருந்து வருகிறது. எனவே அந்த நிலையை மாற்ற அவர்களுக்கு
சலுகை கொடுக்கின்ற வகையில் போனஸ் மார்க் கொடுத்து
அவர்களும் அதில் படிக்க வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று
இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஆதி திராவிடர்களுக்காக ஒதுக்கப்படுகின்ற சுடு
காட்டிற்கு முறையான பாதை வசதி கிடையாது. அப்படியே
நிலம் ஒதுக்கி பாதை அமைத்துக் கொள்ள அரசு வழிவகுத்தாலும்
நிலத்திற்கு சொந்தக்காரர்கள் அதற்கு உடனே ஸ்டே வாங்கி
விடுகிறார்கள். இதனால் அரசு அனுமதி வழங்கினாலும் கால
தாமதம் ஏற்படுகின்றது. இதனால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்
படுகின்றார்கள். எனவே இந்த சட்டத்தை மாற்றி உடன்
நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்
கிறேன். மேலும் சிறுதொழில் செய்வதற்கு ஏழை எளிய
மக்களுக்கு கடன் கொடுக்கின்றார்கள். ஆனால் அவர்கள் அந்த
தொழிலை நடத்துவதற்கு முறையாக இடம் கிடையாது அதனால்
கடன் வாங்கினாலும் தொழில் தொடங்க முடியாமல் நடத்த முடி
யாமல் பெரிதும் அவதிப்படுகின்றார்கள். எனவே நம்முடைய
அரசு முன் வந்து அவர்களுக்கு பொதுவான இடம் அளித்து அவர்களை



1991 செப்டம்பர் 19] [திரு. து. மூர்த்தி]

உயர்த்துவதற்கு வழிவகைகளை கண்டுபிடித்து ஆவன செய்ய
வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படு
கிறேன். மேலும் மறைந்த நம்முடைய முன்னாள் முதல்வர்
புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஹவுசிங் போர்டு மூலமாக
வீடு கட்டுவதற்காக 8,000 ரூ. கடன் வழங்கினார்கள். அதில்
ரூ. 5,000 சப்சிடியாக கொடுத்து வந்தார்கள். அதை முந்தைய
தி.மு.க. அரசில் நிறுத்தப்பட்டு விட்டது. எனவே ஏழைகளின்
காவல் தெய்வமாக விளங்குகின்ற நம்முடைய புரட்சித் தலைவி
அவர்கள் ஹவுசிங் போர்டு மூலமாக மறுபடியும் கடன் வழங்க
ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்
மணியடிக்கப் பெற்றது.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: திரு. பி.
ஈஸ்வரமூர்த்தி

<u>திரு. பி. ஈஸ்வரமூர்த்தி</u>: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறை பற்றிய மானியக்
கோரிக்கைமீதான என்னுடைய கருத்துக்களை வழங்க வாய்ப்பு
கொடுத்தற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தாரா
புரம் சட்டமன்ற தொகுதி உறுப்பினராக தேர்ந்தெடுத்த என்னு
டைய தெய்வத்தாய் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தாராபுரம்
தொகுதிவாழ் தமிழ் மக்களுக்கும் என் பணிவான நன்றியை
பாதங்களில் சமர்ப்பித்து என் உரையைத் தொடங்குகின்றேன்.
ஆதிதிராவிட மக்களுக்காக 10 அம்ச திட்டத்தைக் கொண்டு
வந்து ஆதிதிராவிடர் பழங்குடியினர் சமூகத்தில் சம உரிமையை
பெற்றுத் தர முன்வந்த எனது தெய்வத்தாய் மாண்புமிகு முதல்வர்
புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்
கிறேன். மற்றவைகளில் ஒதுக்கப்பட்ட மானியங்கள் எல்லாம்
நாட்டின் முன்னேற்றத்தின் அடிப்படையில் மக்களது வாழ்க்கைத்
தரமானது இப்போது இருப்பதைவிட ஒவ்வொரு துறையிலும்
இன்னும் உயர்வு பெறுவதற்கான வழியிலே அமைந்துள்ளது.
ஆனால் இம்மானியம் ஆனது பல ஆண்டுக்காலமாக மதம் நூறு
விதம் எல்லாத் துறையிலும் நசுக்கப்பட்டு நாட்டின் அடிமட்டத்
தில் தவித்து கிடக்கும் ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக
கொண்டுவரப்பட்டது என்பதை அங்கத்தினர்கள் அனைவரும்
ஒப்புக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அரிசனங்கள்
முன்னேற்றம் என்பது தேசிய பிரச்சினை. அரிசனங்கள் முன்
னேறினால் அது தேசத்தின் முன்னேற்றம். எனவே எல்லா
சமூகத்தினர்களும், அதை தமது சொந்தப் பிரச்சினையாக
கருதி அரிசன முன்னேற்றத்திற்காக பாடுபடவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். இந்த பத்து அம்ச திட்டத்தின் மூலம்—
உண்மையைச் சொன்னால் சுதந்திரம் அடைந்த நாள் முதல்
இன்றுவரை தமது அடிப்படை வசதிகூட முற்றிலும்
பெறாத அளவுக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் கிராமப்புறங்களில்
இன்றைய வரையிலும் வருகின்றனர்.

அவர்கள் எங்கள் தெய்வத் தாய் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் மூலம் கொண்டு வரப்பட்ட இந்த 10 அம்சத் திட்டத்தின் மூலம் நிச்சயமாக அனைத்து வசதிகளையும் பெற்று மேன்மை அடைவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தொழில் துறையில் தாழ்த்தப்பட்ட மக்கள் நிலையைப் பார்த்தால் மிகவும் பின்தங்கியே உள்ளார்கள். அன்று முதல் இன்று வரை அவர்கள் பெரும்பாலும் தொழிலாளர்களாகவே உள்ளார்கள். ஒரு நிறுவனத்தில் ஒருவர் தாழ்த்தப்பட்டவர் என்றோ அல்லது ஒரு நிறுவனம் தாழ்த்தப்பட்ட நிறுவனம் என்று சொல்லவோ விரல் விட்டு எண்ணவோ, ஒரு நிறுவனமோ நிர்வாகிகளோ தாழ்த்தப் பட்ட பிரிவில் இல்லை. அப்படி தனிப்பட்ட முறையிலே தொழில் தொடங்கவும் வசதி, வாய்ப்பு தாழ்த்தப்பட்ட பிரிவில் இல்லை. எனவே தொழில் தொடங்க முன்வரும் தாழ்த்தப் பட்டோருக்கு கூட்டுறவு முறையிலாவது தொழிற்சாலைகளை அமைத்துக் கொடுக்குமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தாராபுரம் தொகுதியில் அழகியம் என்ற ஊரிலே கூட்டுறவு முறையிலே செங்கல் தொழிற்சாலைகளை அமைக்க முன்வந்துள்ளார்கள். அது சம்பந்தமாக பெரியார் மாவட்ட தொழில் மைய மேலாளர் அவர்கள் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி வருகிறார்கள். இந்த கூட்டுறவு முறையில் செங்கல் தொழிற்சாலை அமைய உடனடியாக ஆவன செய்யு மாறு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களிடம் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

படித்த இளைஞர்கள் மற்றும் பல தொழிலில் அனுபவம் மிக்க இளைஞர்கள் குறிப்பாக பனியன் உற்பத்தித் துறையில் நன்றாக அனுபவம் மிக்க தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் எங்கள் பகுதியிலிருந்து திருப்பூர், பொள்ளாச்சி போன்ற அதிகமான பனியன் தொழிற்சாலை பகுதிகளுக்கு வேலைக்குச் செல் கிறார்கள். தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக் கப்பட்டிருக்கும் எனது தாராபுரம் தொகுதியில் பனியன் உற்பத்தி துறையை உள்ளடக்கிய அனைத்து துறைகளும் கொண்ட ஒரு தொழிற்பேட்டையை நிறுவி, என் பகுதியில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமல்லாது அனைத்து தரப் பினரும் பயன்பெற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆவன செய்யுமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையைப் பார்த்தால் ஹரிஜன மாணவ மாணவியர் களுக்கு புரட்சித் தலைவர் காலத்தில் ஓரளவிற்கு சலுகைகள் கிடைத்தன. இருந்தாலும் இனி புதிய சலுகைகள் எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. தாழ்த்தப்பட்ட மாணவ, மாணவியர் களுக்கு அமைக்கப்பட்ட விடுதிகளில் இட வசதி, சுகாதார வசதி போன்ற அடிப்படை வசதிகள் எல்லாம் மிகவும் குறைவாக உள்ளது. எங்கள் தெய்வத்தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் மாணவ மாணவியர் எண்ணிக்கைக்குத் தகுந்த அளவு விடுதிகளை அதிகரித்தும், திரு. செ. கு. தமிழரசன் அவர்கள்



குறிப்பிட்டதைப் போல ஒவ்வொரு விடுதிகளிலும் நூல் நிலையம் போன்ற அடிப்படை வசதிகளை எல்லாம் செய்து கொடுக்குமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் மக்கள் குல தெய்வமாக வணங்கும் மதுரை வீரன் என்ற கோயில் அவர்கள் குடியிருப்பு பகுதிகளில் பெரும் பாலும் உள்ளது. அந்தக் கோயில்களில் வெறும் சிலைகள் மட்டும் வெய்யிலிலும், மழையிலும் காய்ந்தபடி திறந்த வெளியில் உள்ளது. எங்கள் கருணை உள்ளம் கொண்ட காவல் தெய்வம் அந்த தெய்வங்களைக் காக்க சிறிய அளவிலாவது கோயில்களை புதுப்பிக்க ஆவன செய்யுமாறு பணிவோடு தெரிவித்துக் கொள் கிறேன்.

கலப்புத் திருமண திட்டத்தைப்பற்றி வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். கலப்புத் திருமணம் லட்சியத்திற்காக செய்யப் படுவது. லட்சியத்திற்காக செய்யப்படுவது மட்டுமல்ல நமது சமுதாயத்தை மாற்றியமைக்கக்கூடிய ஒரு தேசிய முயற்சியாக இருக்கிறது. இந்த தேசிய முயற்சியை சொல்லளவில் மட்டு மல்லாது நிச்சயமாக அனைவரும் செயல்படுத்த வேண்டும். கலப்புத் திருமணத்தை ஆதரிப்பதற்கு முன்பு மற்றொன்றை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். கலப்புத் திருமணத்தை செய்துவிட்டு அதற்குப் பிறகு பிறக்கும் குழந்தைகள் சமுதாயத்தில் எப்படி ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்பதை யோசித்துப் பார்த்து அந்தப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டும்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திரு. வரதன் அவர்கள் சொந்தக் கதையை அனைவரும் கேட்டோம். அது போன்ற சூழ்நிலை இனி வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ஜாதி மனப்பான்மையை ஒழித்து அந்த பாகுபாடுகளை நீக்க வேண்டும். எந்த உரிமைகளின் பெயரால் அறிவித்தும், எத்தனை பழைய ஏடுகளை எடுத்துக் காட்டினாலும் சரி ஜாதி பேதம் மாறாது. கலப்புத் திருமணம் அதிகமாக பரவினால் அடிப்படையிலே நாட் டில் உள்ள ஜாதி மனப்பான்மை ஒழிக்கப்படும் என்பதை அறிவும் ஆர்வமும் உடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் இப் பேரவையின் உறுப்பினர்களின் பேரவைத் தலைவர் மூல மாக கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். எனது தொகுதி ஹரிஜன பெருமக்கள் அதிகமாக வாழும் தாராபுரம் தொகுதி. அவர்கள் வாழ்க்கைத் தரம் மிகவும் பின்தங்கியே உள்ளது. குடிநீர் வசதி, சாலை வசதி இல்லை. வீடுகளே இல்லை. குடிசை அதாவது ஒரு அடி உயரத்திற்கு மண் சுவற்றைக் கட்ட அதற்கு மேல் குடிசை போட்டுக் கொண்டு நிலக் குடிசையில் வாழ்ந்து வருகிறார்கள். ஆதிதிராவிட பழங்குடியினருக்குப் பெரும் அளவு வீடுகட்டும் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் 50,000 வீடுகள் கட்டிக் கொடுப்பதாக நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பாட்டு உள்ளது. அந்தத் திட்டத்தின் மூலம் தாழ்த்தப் பட்ட மக்கள் அதிகமாக வாழும் எங்கள் தொகுதிக்கு அதிக

வீடுகள் ஒதுக்கித் தரும்படி பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். என்னைப் போல் இன்னும் சில தாழ்த்தப்பட்ட இளைஞர்களை அந்த மக்களின் பிரதிநிதிகளாக வரவழைத்து தாழ்த்தப்பட்ட மக்கள் சமுதாயம் மேம்பாடு அடைய வழிசெய்ய வேண்டும். எங்கள் கடமைகளைச் செவ்வனே செய்ய எங்கள் தெய்வத்தாய் உங்கள் ஆசீர்வாதத்தோடு உங்கள் வழியிலே, கடமை தவறாமல் செய்வோம் என்பதை கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் ; திரு. ச. புரட்சிமணி

பிற்பகல் 5-25

திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்கு தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக புதிய 10 அம்ச திட்டம் ஒன்றை துவக்க உள்ளதை நான் மனமார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகையின்படி ஆதிதிராவிட மக்கள் சுமார் 1½ கோடி மக்கள் வசித்து வருகிறார்கள். இதில் வீட்டு மனைப் பட்டா இல்லாதவர்கள் லட்சக்கணக்கில் இருக்கிறார்கள். இவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குவதற்கு அரசு 4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதாக தெரிகிறது. ஆனால் இந்தத் தொகை போதுமானதாக இல்லை. ஆகவே, அரசு இந்தத் தொகையை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இதுபோன்ற பணிகளைக் கவனிக்க, 2, 3 தாலுக்காக்களுக்கு ஒரு தனி தாசில்தார் என்று இருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றி ஒரு தாலுக்காவுக்கு ஒரு தனி தாசில்தார் என்ற நிலையை கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஆதிதிராவிட மக்கள் வீட்டு மனைப் பட்டா பெறுவதற்கு எந்த இடத்தைக் குறிப்பிட்டு கேட்கிறார்களோ அந்த இடத்தின் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே ஆர்டர் பெற்று விடுகிறார்கள். அதனால் இந்த ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா கிடைக்க வழியில்லாமல் போய் விடுகின்றன. இதில் அரசு கவனம் செலுத்தி இதுபோன்ற தடை உத்தரவுகள் வழங்காமல் இருக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மிக பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அரசால் வழங்கப்படுகின்ற தொகுப்பு வீடுகள், வீட்டு மனைப் பட்டா உள்ளவர்களுக்கு தான் என்ற நிலை இருக்கிறது. அந்த நிலையை மாற்றி வீட்டு மனைப் பட்டா இல்லாதவர்களுக்கும் தொகுப்பு வீடுகள் கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று இந்த அரசை மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



158325



ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள், நோட் புத்தகங்கள் அரசால் வழங்கப்படுகின்றன. [illegible] அவை மிகவும் காலதாமதமாக வழங்கப்படுகிறது. அந்த இலவச பாடப் புத்தகங்களை, நோட் புத்தகங்களை அந்தந்த ஆண்டின் முதலிலேயே ஜூன் மாதத்திலேயே கிடைக்க வழிவகை செய்யவேண்டுமென்று இந்த அரசை மெத்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அரசால் வழங்கப்படுகின்ற உதவித் தொகை, ஸ்காலர்சிப் போதுமானதாக இல்லை. ஆகவே அந்த உதவித் தொகையை அதிகரித்து வழங்குமாறு இந்த அரசை நான்மெத்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிட மக்களுக்கு அரசு வேலை வாய்ப்பில், சலுகை 18 சதவீதமாக இருப்பதை மாற்றி அதை அதிகரித்து வழங்க வேண்டுமென்று மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

விடுதியின் வெளியே சென்று மாவு அரைப்பதால் அரசுக்கு செலவு ஆகிறது. அதனால் ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு வெட் கிரைண்டர் ஒன்று வழங்குமாறும் அதேபோன்று ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு லைப்ரரி ஒன்றும் வழங்குமாறும் நான் இந்த அரசை மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-30

விடுதிகளில் பயிலும் மாணவர்களுக்கு தற்போது ஒரு நாளைக்கு 500 கிராம் 'ரேஷன்' வழங்கப்படுகிறது. அதை மாற்றி, மேலும் அதிகரித்து வழங்க வேண்டுமாய் இந்த அரசை நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதி, மிகவும் பின்தங்கியத் தொகுதியாகும். எனது தொகுதியில், ஆதிதிராவிட மக்கள் மிகவும் அதிகமாக உள்ளார்கள். அவர்களுக்கு பயன் அளிக்கும் வகையில், சிறு தொழில் தொடங்க இந்த அரசு அதிக நிதியை வழங்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதிக்கு, தொகுப்பு வீடுகள் அதிகமாக வழங்க வேண்டுமாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில், திட்டக்குடி, பெண்ணாடம் போன்ற கிராமங்களில் விடுதிக் கட்டிடங்கள் கட்டித் தரவேண்டுமாய் நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மேலும், எனது தொகுதியில் பெண்ணாடத்தில் மகளிர் விடுதி ஒன்றும், ஆவினங்குடி, மேலக்கபூண்டி போன்ற கிராமங்களில் விடுதிகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நேவூர், மாபுடையூர் போன்ற கிராமங்களில் மேல்நிலைப் பள்ளிகள் அமைத்துத் தருமாறும், மேலும் தொழுதூர், கோமங்கலம் போன்ற கிராமங்களில் நடுநிலைப் பள்ளிகள் அமைத்துத் தருமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதி, மிகவும் பின்தங்கியத் தொகுதியாகும். இந்தத் தொகுதியில், புலநோக்கு சுகாதாரப் பணியாளர்கள் ஆண், பெண் இருவரையும் மிக அதிகமாக நியமனம் செய்து. அவர்கள் எல்லா காலனிகளுக்கும் சென்று பணிபுரிய , அரசு வழிவகைகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும், 'தாட்கோ' நிதியுதவியுடன் நெல்லை, திருச்சி, கோவை, வேலூர் போன்ற இடங்களில் தேர்வுகளுக்கான பயிற்சி நிலையங்களைப் போல, தென்னார்க்காடு, தஞ்சாவூர், சேலம் மற்றும் மதுரை போன்ற ஊர்களில் ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொண்டு, கடந்த 2–10–88-இல் .. (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியுங்கள் ; நேரமாகிவிட்டது.

திரு. மா. சுந்தரதாஸ் : உறுப்பினர் கன்னிப்பேச்சு பேசு கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கன்னிப் பேச் சிலே குறுக்கிடத்தான் கூடாதே தவிர, முடித்து வைக்கலாம்.

திரு. ச. புரட்சிமணி : பெண்ணாடத்தில் சாதிக் கலவரம் ஏற்பட்டது. அதில் வன்னியர் மீது தொடரப்பட்ட வழக்குகள், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் ஆட்சிக் காலத் திலே தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் ஆதிதிராவிட மக்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள், இன்னும் நிலுவையில் உள்ளது. அதை அரசு கவனம் செலுத்தி, தள்ளுபடி செய்ய வேண்டுமாய் மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

*திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆதிதிராவிடர் நலன் குறித்த மானியத்தின் மீது கருத்துக்களைக் கூற எனக்கு வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக, இந்தத் துறைக்கு ஒதுக்கியிருக்கிற தொகை, ஏறத்தாழ 103 கோடி ரூபாயை எட்டுமளவிற்கு ஒதுக்கப்பட் டிருக்கிறது. இன்று ஒதுக்கப்பட்டிருக்கிற இந்தத் தொகையை தான் வரவேற்கிறேன். இந்த 103 கோடி ரூபாய், எந்த மக்க ளுடைய நலனுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதோ, அந்தக் கோடிக் குப் போய்ச் சேருமா என்பதே என்னுடைய கேள்வி. ஏனென் றால், கடந்த காலத்திலே ஏற்பட்டிருக்கிற பல்வேறு அனுபவங் களிலிருந்து இதை நான் கூற வேண்டியிருக்கிறது. தொடர்ச்சி யாக இந்த அறிக்கையிலே சொல்லியிருப்பதைப் போல, 90



40 ஆண்டு காலம் அந்த மக்களுக்காக ஒரு தனித் துறையே இயக்கப்பட்டு வருகிறது. ஆனால் 40 ஆண்டு காலமாக அந்த மக்களுக்கு செய்திருக்கக் கூடிய திட்டங்களை, இதிலே இணைத்து சொல்லப்பட்டிருக்குமேயானால் , இதைக் கடந்து மேலும் புதிய திட்டங்களுக்குப் போவதற்கு நமக்கு ஒரு அனுபவம் கிடைக்கும். ஆனால், அதைச் சொல்வதற்குப் பதிலாக இன்றைக்கு வரக்கூடிய திட்டங்கள் மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. வரவேற் கிறேன். ஆனால், உண்மையிலேயே கடந்த நாற்பதாண்டுக் காலமாக இந்தத் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது. 40 ஆண்டுக் காலத்தினுடைய திட்டங்களை, நிறைவேற்றப்பட்டு அதில் ஏற்பட்டிருக்கக்கூடிய சாதக பாதகங்களைக் கணக்கிடு வதைவிட, ஒரு பத்தாண்டுக் காலத்தை எடுத்துக் கொள்ளுங் கள். இதற்கு ஒதுக்கப்பட்ட நிதியையும் எடுத்துக் கொள்ளுங் கள். இந்தப் பத்தாண்டுக் காலத்திலே செலவழிக்கப்பட்டிருக் கின்ற தொகை, எப்படிச் செலவிடப்பட்டிருக்கிறது என்பதை ஆய்வு செய்யுங்கள். இதன் பிறகுதான் இந்த 103 கோடி ரூபாயைச் செலவழிப்பதற்கு நமக்கு ஒரு புதிய வெளிச்சத்தைக் காண முடியும். ஒரு வழியைக் காண முடியும்.

பிற்பகல் 5-35

ஏனென்றால், அப்படிப்பட்ட துறை, தொடர்ந்து அந்தத் துறை எந்த மக்களுக்காக துவக்கப்பட்டதோ அந்த மக்களை முழுமையான பாதுகாப்புக்கு இட்டுச் செல்ல முடியாத சூழ் நிலைமை இருக்கிறது என்பதைக் கடந்த கால அனுபவம் நமக்குப் போதிக்கிறது.

இப்பொழுதும் அந்த மக்களைப் பாதுகாப்பதற்காக ஏறத் தாழ 86 தலைப்புகளிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த 86 தலைப்புக்களிலே சொல்லப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டங் கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்பதைத் தயவுசெய்து அந்தத் துறை ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

உதாரணத்திற்கு வேறு ஒன்றும் பார்க்க வேண்டாம். குடி யிருப்பைப் பார்க்கலாம். இந்தக் குடியிருப்பு மனை எடுப் பதிலே எவ்வளவு பெரிய சிரமங்கள், சங்கடங்கள். இன்னமும் அந்த மக்கள் குடியிருக்கிற தெருக்களிலே இருக்கின்ற மக்களுக்கு முழுமையான குடியிருப்பு மனை வழங்கப்பட்டிருக்கிறதா இல்லை. எவ்வளவு மனுக்கள் போட்டாலும் கூட அதை, அந்தத் துறை நிறைவேற்ற முடியாத சூழ்நிலைமை இருக்கிறது. இதை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால் இன்றைக்கு உதாரணத்திற்குச் சொல்கிறேன்.

திருவாரூரிலே இருக்கக் கூடிய வட்டாட்சியரிடம் நாங்கள் மனு போடுகிறோம். திருவாரூரிலே இருக்கிற வட்டாட்சியர், மயிலாடுதுறையிலே இருக்கிற வட்டாட்சி நீதித் துறைக்கு அனுப்பி அங்கே போய்ப் பாருங்கள் என்று கூறுகிறார்கள். . திருவாரூரிலே

[திரு. வே. தம்புசாமி] [1991 செப்டம்பர் 19

யிருந்தோ, நாகப்பட்டிணத்திலிருந்தோ அல்லது கிராமப்புறத்
திலே இருக்கின்ற சாதாரண அத்துக்கூலி ஆட்கள் தனக்கு
மனை கொடுக்க வேண்டுமென்று கேட்கக் கூடிய அந்த நபர்
திருவாரூரிலே கொடுத்த மனுவுக்கு மயிலாடுதுறைக்குச் சென்று
காத்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலைமை நியாயம் தானா
என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

ஆகவே, இப்பொழுதும் அந்த அதிகாரத்தைத் திருவாரூர்
வட்டாட்சியரிடம் ஒப்படையுங்கள். அவர் பரிசீலிக்கட்டும்
ஏனென்றால் அவருக்குக் கீழே இலாக்கா இருக்கிறது. ஆர்.ஐ.
இருக்கிறார்கள் ; வி.ஓ. இருக்கிறார்கள் ; அவர்கள் கேட்கின்ற
இடம் சரிதானா என்று பரிசிலனை பண்ணி உடனடியாகப்
பட்டா வழங்குவதற்கு முடியும். ஆகவே, மயிலாடுதுறைக்கு
அனுப்புவதிலே ஏற்படக்கூடிய தாமதங்கள், சங்கடங்கள் இனி
மேலாவது ஏற்பட வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்
கிறேன்.

அதே மாதிரி, பல கிராமங்களில் குடியிருப்பு மனை இல்லை.
ஒரு வீட்டிலே சாதாரணமாக 2 குடி, 3 குடி இருக்கிற சூழ்
நிலைமை. வேறொரு மனைக்கட்டு அல்லது வேறொரு இடத்
திலே அந்தக் குடியிருப்புக்கு நிலம் வாங்க வேண்டுமென்றால்
ஏறத்தாழ எட்டாண்டுக் காலம் பிடிக்கிறது. நான் கேட்கிறேன்.
இந்த நகரத்தைச் சுற்றியிருக்கிற நஞ்சை நிலம் முழுவதுமே
இன்றைய தினம் குடியிருப்பு நிலங்களாக மாற்றப்பட்டு வரு
கின்றன. அந்த நஞ்சை நிலத்தை எடுக்கிறபொழுது அதிலே
மரம் இருந்தாலும் சரி, அல்லது பலன் தரக்கூடிய மரமாக
இருந்தாலும் சரி, தென்னை மரமாக இருந்தாலும்,
மாமரமாக இருந்தாலும் அல்லது நஞ்சை நிலமாக இருந்தாலும்
எடுப்பதற்கு மூன்றே மாதம் அவகாசம். ஆனால், அரிசனங்
களுக்கு குடியிருப்பு நிலம் எடுக்க வேண்டுமென்றால் எட்டாண்டுக்
காலம். 7 ஃபாரங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இப்படி
ஏழு, எட்டு ஆண்டுக் காலத்தில் அந்தக் குடியிருப்பு மனைகளை
எடுத்து முடித்து விட்டாலும் கூட, அப்பொழுதும் எண்ணிப்
பார்த்தீர்கள் என்றால், அன்றைக்கு 40 பேர் கேட்டிருப்பார்கள் ;
இன்றைக்கு அது எட்டாண்டுகளுக்குப் பிறகு கேட்டால் 80
வீடுகளுக்குக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் வரும். ஆகவே,
அரிசனங்களுக்கு நிலம் எடுப்பதிலே இப்படிப்பட்ட சிக்கல்
இருக்கிறது. ஆகவே, இதை மாற்றி, குறைந்தபட்சம் ஓராண்டுச்
காலத்திற்குள்ளேயாவது அந்த நிலம் வழங்கப்பட வேண்டும்
என்ற வகையில், அதற்கு இடைஞ்சலாக இருக்கின்ற நடைமுறைச்
சிக்கல்களை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்றைய தினம் கிராமப்புறத்திலே குடி
யிருக்கிறார்கள். வயல் வெளியிலே குடியிருக்கிறார்கள். மிகுந்த
ளப் பகுதிகளிலே குடியிருக்கிறார்கள். ஒரு மழை பெய்து



1991 செப்டம்பர் 19] [திரு. வே. தம்புசாமி]

விட்டது என்றால், அந்தத் தெரு முழுவதும் காலி செய்ய
வேண்டியிருக்கும். உதாரணத்திற்கு, நாகப்பட்டிணம் தாலுக்
கா, காரப்பிடாரை, சிந்தாமணி, திருப்பூண்டி, கீழையூருடைய
கிழக்குப் பகுதி, சடையங்கோட்டம், வெண்மணிசேரி, ஒரு
நாள் இரவு மழை பெய்து விட்டால், நாகப்பட்டிணத்திலே
இருக்கின்ற பத்திரிகை நிருபர்கள் எழுதுவார்கள், இந்த ஊர்
பூராவும் தண்ணீரில் மிதக்கிறது என்று. வேறு எதையும்
போய்ப் பார்க்க வேண்டியதில்லை. இது தொடர்ச்சியாக
இருக்கிற ஒரு பழக்க வழக்கம். பிறகு அங்கே இருக்கின்ற
மாவட்ட ஆட்சித் தலைவர், தாசில்தார் 'போட்' டைக்கொண்டு
போய் மீட்க வேண்டி வரும். இதற்காக ஆகின்ற செலவுகளை
யெல்லாம் நீங்கள் கணக்குப் பார்த்தீர்கள் என்றால் அந்தச்
செலவைக்கொண்டு மேட்டிலே நிலம் வாங்கிக் கொடுத்தால்,
அந்தவீட்டைக் கட்டி குடி வைத்து விடலாம். எனவே, இப்
பொழுது அந்த மக்களை ஒரு மேடான பகுதிக்குக் குடியேற்ற
முடியாத சூழ் நிலைமை இன்னமும் இருக்கிறது. பொதுவாக
நான் குடியிருப்பதே ரொம்பப் பள்ளமான பகுதி.

பிற்பகல் 5-40

தொடர்ந்து நான் குடிகளை மாற்ற முயற்சி செய்கிறேன்.
மாவட்ட அரிஜன நலத்துறை அதிகாரிகள் என்ன சொல்கிறார்
கள் என்றால், அந்தக் குடியிருப்பை மாற்ற வேண்டுமென்று
சொன்னால், முதலமைச்சர் அவர்களுடைய தனி உத்தரவு
தேவை என்று சொல்கிறார்கள். அப்படி இல்லையென்றால்,
எங்களால் வேறு ஒன்றும் செய்ய முடியாது என்று அவர்கள்
கூறுகிறார்கள். இப்படியாக சூழ்நிலைமைகள் இருக்கின்றன.
ஆகவே, அவர்கள் குடியிருக்கின்ற பகுதிகளிலிருந்து, மேடான
பகுதிகளுக்கு குடியேற்றுவதற்கு எங்கேயெல்லாம் பள்ளத்திலே
குடியிருக்கிறார்களோ, மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கக்
கூடிய, பாதிக்கப்படக் கூடிய, வீடுகள் இடிந்து போகக் கூடிய,
இப்படிப்பட்ட நெருக்கடியிலே இருக்கக் கூடிய மக்களை ஆய்வு
செய்து, கொஞ்சம் மேடான பகுதிகளிலே அவர்களைக் குடி
யேற்ற வேண்டும். எதிர் காலத்திலே ஆண்டாண்டு காலமாக
அவர்களை வாழ வைப்பதற்காகச் செய்யக் கூடிய ஒரு முதல்
உதவியாக அது அமையும் என்பது என்னுடைய தாழ்மையான
வேண்டுகோளாகும். அதே போன்று, முன்பு வீடுகட்டிக்
கொடுக்கப்பட்டது. அந்த வீடுகள் முழுவதும் இடிந்துபோய்
விட்டன. பல கிராமங்களிலே, இன்றைக்குக் குடியிருக்க முடி
யாத நிலைமையில், இடிந்து போய்விட்டன. உதாரணமாகச்
சொல்ல வேண்டுமென்று சொன்னால், கொரட்டாஞ்சேரி ஒன்றி
யத்திலேயுள்ள கடம்பக்குடியில் சுத்தமாக அவ்வளவு வீடுகளும்
இடிந்து விட்டன. இன்றைக்கு அவர்கள் குடியிருக்க முடியாத
ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரசு செலவிலே வீடுகளைக்
கட்டிக் கொடுத்தாலும், நல்ல முறையிலே கட்டிக் கொடுக்க
வேண்டும். எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர்கள்
பேசினார்கள். பல இடங்களிலே குடியிருப்புகள் முழுமையும்
பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லி, அப்படி பாதிக்கப்

பட்டிருக்கக் கூடிய பகுதிகளை ஒரு ஆய்வு செய்ய வேண்டும். அதை ஆய்வு செய்வது என்பது ரொம்ப சுலபம். ஒன்றியத்தின் மூலம் அல்லது ஊராட்சியின் மூலம் அந்த விவரங்களைக் கேட்டாலும் சொல்லி விடுவார்கள். அந்த விவரத்தின் அடிப்படையிலே, அந்த விவரங்களை வாங்கி, அந்த வீடுகளை புதிதாகக் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பல கிராமங்களில் குடியிருக்க முடியாமல் இப்படிப்பட்ட வீடுகளெல்லாம் இடிந்துபோய் கிடக்கின்றன. அதற்கு புதிய உத்தரவாவது வழங்கி, புதுப்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். 40 ஆண்டுக் காலமாக இந்தத் துறை செயல்பட்டு வந்தாலும், உண்மையிலேயே கேட்கிறேன், எந்த அரிஜன சேரிகளுக்காவது சாலை போடப்பட்டிருக்கிறதா? அந்த இலாகாவிலே இது பற்றிய புள்ளிவிவரங்கள் இருக்கின்றதா? அரிஜன நலத்துறை தொடங்கிய 40 ஆண்டுக் காலத்திலே எத்தனை கிராமங்களுக்கு சாலை வசதி செய்யப்பட்டது? எத்தனை கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்யப்பட்டது? குடிநீர் வசதி செய்யப்பட்டதாக இப்போது கணக்கிலே இருக்கலாம். உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்று சொன்னால், அரிஜன மானியத்திலே குடிநீர் பைப் போடப்பட்டு. அந்தக் குடிநீர் பைப்பு அரிஜனங்கள் குடியி[illegible]ன்ற தெருவுக்கு இன்றைய தினம் வரையில் போகவில்லை, போகாது. அப்படிப்பட்ட சூழ்நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, அந்தக் குடிநீர் திட்டத்தை, அவர்கள் குடியிருக்கின்ற பகுதிக்குச் செல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் இருக்கிற பகுதிக்கு அந்தக் குடிநீர் செல்வதற்கு ஏற்பாடுகளை விரைவிலே செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னமும் சொல்லப் போனால், அந்தத் துறைக்கு தபால் போட்டால் கூட, அதற்கு காலத்திலே பதில் வருவது கிடையாது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளும் உள்ளன. ஒரு சட்டமன்ற உறுப்பினர் அந்த இலாகாவிற்கு தபால் எழுதினால், மற்ற இலாகாவிலேயிருந்து குறைந்தபட்சம் 3 நாள், 5 நாளில் பதில் வந்து விடுகிறது. ஆனால் அந்தத் துறையிலேயிருந்து பதில் 6 மாதம், 9 மாதம் கழித்துத் தான் வருகிறது. பிற்படுத்தப்பட்ட துறை என்கிற காரணத்தினாலே பிற்பட்டு வருகிறதோ, என்னவோ எனக்குத் தெரியாது. இப்படிப்பட்ட சூழ்நிலைமைகள் இருந்தால் எப்படி அந்தத் துறையுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு பிரச்சினைகளைச் சொல்லி அந்த மக்களுக்கு எப்படி உதவிகளைச் செய்ய முடியும். முடியவே முடியாது. இன்னும் இப்படி பல விஷயங்கள் இருக்கின்றன. அதை எல்லாம் நான் இங்கே சொல்ல விரும்பவில்லை.

அதே மாதிரி, சுகாதாரம் பற்றி சொல்ல வேண்டுமென்று சொன்னால், சுகாதாரம் என்கிற தலைப்பிலே சுகாதார வசதி செய்யப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்கள் குடி



இருப்பதோ வயல்காட்டிற்குள்ளே, வயல் வெளியிலே தான் அவர்கள் குடியிருக்கிறார்கள். அவர்களுக்குப் போய் என்ன சுகாதார வசதி செய்தீர்கள்? ஆனால் சுகாதார வசதி செய்கிறோம் என்று சொல்கிறீர்கள். அவர்கள் இருப்பதெல்லாம் வயல்வெளி, காட்டுப் பக்கத்திலே இருக்கிறார்கள். அங்கே என்ன சுகாதார வசதி செய்து தரப்படுகிறது என்று எனக்குத் தெரியவில்லை.

அதே மாதிரி பொருளாதார முன்னேற்றம் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. சில சமயங்களில் கடன் கொடுத்து இருக்கலாம். அது வேறு விஷயம். அடிப்படையான பொருளாதாரத்திற்கு திட்டமிட வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோளாகும். அவர்கள் அடுத்தவர்கள் கையை நம்பி வாழ்கிறவர்கள், தன்னுடைய உழைப்பை நம்பி இருக்கிறார்கள். உடல் உழைப்பை நம்பி இருக்கிறார்கள். இன்றைக்கு வேலைக்குப் போனால் தான் வாழ முடியும் என்கிற நிலையிலே இன்றைய தினம் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரிந்து இருக்கிற ஒரே தொழில் விவசாயத் தொழில். இது தவிர வேறு ஒன்றும் தெரியாது. நகரத்திலே இருக்கிற மக்கள் வேண்டுமானால் கொத்தனாருக்கு உதவியாகக் கூட வேலை செய்யலாமே தவிர, ஆனால் கிராமப்புறத்திலே இருக்கிற அத்தகைய மக்கள் விவசாயத் தொழிலையே நம்பி இருக்கிறார்கள். அந்தத் தொழிலுக்கு உத்தரவாதம் இல்லை. அந்தத் தொழிலிலே அவர்களுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னால் இன்றைக்கு உழுபவனுக்கு நிலம் சொந்தமாகக் கொடுக்கிறோம். அந்த உழுபவனுக்கு நிலம் கொடுப்பது என்கிற பிரச்சினையைப் பற்றி நாம் தொடர்ந்து சொல்லிக் கொண்டு இருக்கிறோம். அரிஜனங்களுக்கு முன்னுரிமை என்று சொல்கிறோம். ஆனால் நிலைமைகள் என்ன ? உபரி நிலங்களை எடுக்கிற போதே நிலச் சொந்தக்காரர்கள் உயர்நீதி மன்றத்திலே தடை வாங்கி விடுகிறார்கள். அப்படி உயர்நீதி மன்றத்திலே தடை வாங்கப்பட்டதால் 10, 15 வருடங்களாக வழக்கு முடிவடையாமல் இன்னும் அப்படியே இருக்கின்றன. சர்க்காரிலே நாம் நிறைய வக்கீல்களை வைத்திருக்கிறோம். அந்தத் தடையை ரத்து செய்வதற்கு அல்லது அதற்காக வாதாடி அந்த நிலத்தைப் பெற்று, அரசு எந்த நோக்கத்திற்காக நிலத்தைக் கைப்பற்றுகிறதோ அந்த நோக்கத்திற்கு விரோதமாக இருக்கிற அந்த வழக்குகளை வாபஸ் வாங்கி அல்லது தீர்த்து அந்த மக்களுக்கு நிலம் வழங்கக் கூடிய உத்தரவாதத்தை அரசு ஏற்படுத்த வேண்டும்.

பிற்பகல் 5-45

அந்தத் தொழிலை நம்பியிருக்கிற அவர்களுக்கு நிலம் கொடுப்பதுதான் அவர்களுக்கு எதிர்காலத்திலே அடிப்படைப் பொருளாதாரமே தவிர வேறு ஒன்றும் கிடையாது. அந்த வகையிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

பிறகு கூலி. மத்திய அரசு ஒரு சிபாரிசு பண்ணியிருக்கிறார் கள். 20 ரூபாய் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாடு சர்க்கார் இதுவரையில் அந்தக் கூலியைப் பற்றி முழு மையாக ஒன்றும் சொல்லவில்லை. நாம் சொல்ல வேண்டும். ஏனென்றால், இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இரண்டு போக சாகுபடி செய்து கொண்டிருந்த நிலைமை மாறி இன்றைக்குத் தண்ணீர்ப் பிரச்சினை பற்றி நாம் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறோம்—இன்றைக்குப் பாசனம் இல்லை, தெளிப்பு விவசாயத்தில் ஏறத்தாழ 60 அல்லது 65 நாட்கள்தான் வேலை கிடைக்கிறது. அறுவடையிலே 20-25 நாள் வேலை கிடைக்கிறது. மொத்தத்திலே 3 மாதங்கள் தான் வேலை கிடைக்கிறது. இந்த மூன்று மாதங்கள் வேலை செய்து தான் அவர்கள் 12 மாத காலம் வாழ்க்கை நடத்த வேண்டும். இந்த விவசாயப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், காவிரி நதிநீர்ப் பிரச்சினையால் உற்பத்தி முறை முழுமையும் மாற்றப் பட்டு, நடவு என்பது மாறி, இன்றைக்குத் தெளிப்பு விவசாயமாக மாற்றப்பட்டு, இந்தத் தெளிப்பு விவசாயத்திலே 90 நாள் அவர்கள் சம்பாதிக்கிற சம்பாத்தியத்தை வைத்துக் கொண்டு அவர்கள் எதிர்காலத்திலே 12 மாத காலம் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. தமிழக அரசு இதை விரைவாகப் பரி சீலிக்க வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : விரைவில் முடியுங்கள். நிறைய பேர் பேசவேண்டும்.

<u>திரு. வே. தம்புசாமி</u> : ஆகவே, மற்ற மாதங்களிலே ஒரு மாற்று வேலைத் திட்டத்தை உருவாக்க வேண்டும். ஜே.வி.பி. என்.ஆர்.பி.இ., மற்றும் ஆர்.எல்.ஜி.பி. போன்ற வேலை திட்டங்கள் இருக்கின்றன. அவைகளை மீண்டும் துரிதப்படுத்த அவர்களுக்கு மாற்று வேலைத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கல்வியைப் பற்றி முழுமையாகச் சொல்லப்பட் டிருக்கிறது. ஆனால் அந்தக் கல்வியைப் பற்றிச் சொல்லியிருக்கிற ஒன்றை நீங்கள் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். கல்வியிலே அந்த அரிசன மாணவர்கள் தேர்ச்சி பெறுவதற்கு, எல்லாத் தேர்வுகளிலும் தேர்ச்சி பெறுவதற்கு, அரசுத் தேர்வு களிலே முன்னுரிமை பெறுவதற்காகப் பயிற்சி அளிக்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறது. நான் ஒரே ஒரு விஷயத்தைப் படிக்கிறேன். இந்த அறிக்கையில் வந்திருக்கிறது. அதை நான் படித்துக் காட்டு கிறேன். "ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் களுக்கான தேர்வுகளுக்கு முந்திய பயிற்சி நிலையத்தில் ஒவ்வோர் ஆண்டும் இந்திய ஆட்சிப் பணி மற்றும் இந்தியக் காவல்பணி முதலிய அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வில் பங்கேற்க 60 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. 1989-90இல் 15 மாணவர்கள் முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்றனர்.



இவர்களில் இறுதி நிலைத் தேர்வு எழுதிய 13 மாணவர்களில், 6 பேர் வெற்றி பெற்றனர். இவர்களில் 3 பேர் நியமனம் செய்யப் படுவதற்காக இறுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்". தயவு செய்து சிந்திக்க வேண்டும். 60 பேருக்குப் பயிற்சி கொடுத்துக் கடைசியிலே 3 பேர் கூடத் தேர்ந்தெடுக்கப்பட முடியாமல் இருக்கின்ற நிலையை உண்டு பண்ணியிருக்கிறோம் என்று சொன் னால் இது பயிற்சி தானா. இது எதற்கு உதவி பண்ணியது இந்தப் பயிற்சி. உண்மையிலேயே சொல்கிறேன். இந்தத் தேர்வுக்கு அவர்கள் நேரிடையாகச் சென்றிருந்தால் கூட 18 சத விகிதம் ஒதுக்கியிருக்கிற அந்த அடிப்படையிலேயாவது இடம் கிடைத்திருக்கும். அதையும் கெடுத்தோம். தேர்ச்சியையும் கெடுத்தோம். நாம் தேர்ச்சி பண்ணிய பிறகு, இன்னும் ஒரு தேர்ச்சி நடக்கிறது. இது ஏன் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அரசுத் தேர்வில் கடைசியில் மிச்சப்பட்டது அந்த மூன்று பேர் தான்.

<u>மாண்புமிகு திரு. கு. முத்துசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் போய் வெற்றி பெறுவதற்காகத் தான் அந்தப் பயிற்சி. மற்றவர்களுடன் போட்டி போட முடியாது என்ற காரணத்தால் அவர்களுக்கு அதிகமாகத் தகுந்த முறையில் தயார் செய்வதற்காக அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஒரு டிரெயினிங். எனவே, அதுதானே தவிர, அதுவே தேர்வு அல்ல. அவர்களுக்குப் 18 சதவிகிதம்தான். அந்த வகையிலே கொடுப்பது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கவனிக்க வேண்டும். பயிற்சி கொடுத்ததால்தான் அந்த மூன்று பேர்களும் தேர்ச்சி பெற்றார் கள்.

<u>திரு. வே. தம்புசாமி</u> : அடுத்து காவல்துறைப் பயிற்சி. கொடுக்கப்பட்டது. அதில் யாருமே காவல்துறைக்குப் போய்ச் சேரவில்லை. காவல்துறையில் பயிற்சி நடக்கிறபோது அவர்களை எடுத்துக் கொள்வதில்லை. அப்படிச் சில பயிற்சிகள் இருக்கின் றன. அப்படிக் காவல் துறைப் பயிற்சி இருக்கிறது.

தமிழகத்திலே அது மாதிரி மாணவர் விடுதிகள், இன்றைக்கு மாணவர் விடுதிகள் நடத்துகிறோம். அதில் எனக்குச் சிறிதும் கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால், அந்த மாணவர் விடுதி களை ஒரு சுகாதார முறைப்படி நல்ல விதமாக நடத்த வேண்டு மென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

அடுத்து, மாணவர்களுக்கு வழங்கக்கூடிய அந்த உணவுக்குக் கொஞ்சம் தொகை அதிகப்படுத்த வேண்டும். ஏனென்றால், இன்றைக்கு விலைவாசி ஏறியிருக்கிற காரணத்தால் இந்த குறைந்தத் தொகையை வைத்துக் கொண்டு அவர்களுக்கு

குறைந்த உணவு அளிக்கக்கூடிய ஒரு சங்கடமான சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதையும் கூட்டுவதற்காக முயற்சிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-50

அதே நேரத்தில் இந்தக் கடன் வழங்குகிற விவரம் பற்றிய குறிப்பிலே மானியம் வழங்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. உண்மை. அதில் நமக்கு கருத்து வித்தியாசம் கிடையாது. ஆனால் ஒன்றைக் கவனிக்க வேண்டும். வங்கிகளிலே அந்த மானியத்தைக் கொடுக்காமல் கணக்கிலே வரவு வைத்துக் கொண்டு மிச்சப் பணத்தைத்தான் கொடுக்கிறார்கள். ஆக 3,000 ரூபாய் கடன் கொடுக்கிறார்கள் மாடு வாங்குவதற்கு. அதிலே 1,500 ரூபாய் மானியம். அதை நிறுத்தி வைத்துக் கொண்டு, அது சர்க்கார் மானியம், மீதி 1,500 ரூபாயைத்தான் கொடுக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு மாடு வாங்க முடியாமல் இருப்பதையும் செலவழித்துவிட்டு கடைசியில் கடனாளியாக மாறி, கடனைக் கட்டமுடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகையால் வங்கியில் கொடுக்கிறபோது மானியத்தைப் பிடிக்காமல் மொத்தத்தையும் கொடுப்பதற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தீண்டாமை பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தீண்டாமை வழக்கு எவ்வளவு போடப்பட்டிருக்கிறது? எவ்வளவு வழக்கு தீர்க்கப்பட்டிருக்கிறது என்ற விவரங்களைச் சொல்ல வேண்டும். ஏறத்தாழ 4,271 கிராமங்கள் தீண்டாமை கிராமங்களாக இருப்பதாக சர்க்காரே ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்த 40 ஆண்டுகளுக்குப் பிறகும் தீண்டாமையை ஒழிக்க முடியாத கிராமம் இருக்கிறது என்று இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பது சரியல்ல என்று நான் நினைக்கிறேன். அதன்படி 4,271 கிராமங்களை நாம் தீண்டாமைக் கிராமங்களாக நிர்ணயித்திருக்கிறோம். 40 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நிலை இருப்பது சரியல்ல.

தீண்டாமையை ஒழிப்பதற்கு பரிசு கொடுப்பதாக இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். என்ன பரிசு கொடுக்கிறார்கள் என்றால் ஒரு வானொலிப் பெட்டி. தீண்டாமையை எப்படி ஒழிக்க முடியும். அப்படி ஒழிப்பதாகக் கருதி, பரிசு, அதன் விலை 500 ரூபாய் தானா? தீண்டாமையை ஒழிப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள் தீண்டாமையை ஒழிப்பதற்கு யார் தீண்டக்கூடாது என்று சொல்கிறார்களோ அந்தப் பகுதியிலே எந்த எந்த வகையிலே சுமுகமான சூழ்நிலையை உருவாக்க முடியுமோ அந்த வகையிலே உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. அந்த இலாகாவில் இந்த 18 சதவீதம் இடத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு எவ்வளவு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது, எந்த எந்த இலாகாவிலே 18 சதவீதம் நிரப்பப்பட்டிருக்கிறது, இன்னமும் எந்த எந்தத் துறையிலே 18 சதவீதம்





பெற முடியவில்லை என்ற விவரங்கள் பற்றி கணக்குக் கொடுக்க வேண்டும். கணக்குக் கொடுப்பதோடு, எதிர்காலத்திலே இந்தக் குறைபாட்டைப் போக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு ஏற்றவகையில் இந்த இலாகாவுக்கு தேவையான உதவிகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டு, இவ்வளவு நேரம் அனுமதி கொடுத்தத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதை ஒரு குறையாக எடுத்துக்கொள்ளாமல் எதிர்காலத்திலே இதைப் போக்குவதற்கான விரைவான திட்டங்களை உருவாக்கி, அந்த மக்களுக்கு நாம் ஒதுக்கியிருக்கிற தொகை முழுவதும் அவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும், அதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தோன்றியதற்குப் பிறகுதான் ஜாதிக்கு ஒரு கிணறு இருந்ததை மாற்றி, கையிலே கயிறும் தேவையில்லை; மறு கையிலே பக்கெட்டுப் தேவையில்லை; தலையிலே குடத்தையும் சுமந்து செல்லத் தேவையில்லை என்ற சூழ் நிலையை உருவாக்கி, எந்தச் ஜாதியைச் சேர்ந்தவர்களும் ஆழ்குழாய்க் கிணற்றிலே அத்தனை பேர்களும் தண்ணீர் எடுக்கலாம் என்ற தத்துவத்தை ஏற்படுத்திக் கொடுத்ததே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை நாட்டு மக்கள் அறிவார்கள் (மேசையை தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜாதியைப் பொறுத்தவரையில் எல்லோரும் ஒரே இடத்தில் ஒரே கிணற்றில் தண்ணீர் எடுப்பதாகச் சொல்கிறார்கள். இன்றைய தினம் கூட தஞ்சை மாவட்டத்திலே ஒரத்தநாட்டில் ஒரு கிராமத்தில் அரிசன மக்கள் போய் தண்ணீர் எடுத்தால் கட்டி வைத்து அடிக்கிற நிலைமை இருக்கிறது. சென்ற வருடம் அதிகாரிகளுக்கு இதுபற்றி தகவல் கொடுக்கப்பட்டு, இன்று வரையில் அந்த கேஸ் பெண்டிங்காக இருக்கிறது என்பதை நினைவுபடுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதை ஒரு விவாதப் பொருளாக ஆக்க வேண்டாம். குறிப்பிட்டுச் சொல்லுங்கள், நடவடிக்கை எடுப்பார்கள். அடுத்து டாக்டர் ஜெ. பரந்தாமன்.

[1991 செப்டம்பர் 19

*டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 6 கோடி தமிழக மக்களில் ஒருவனாக இந்நாட்டின் ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்த சாதாரணமான என்னை இந்தப் பேரவையின 234 உறுப்பினர்களில் ஒருவனாக மாற்றிய இதயதெய்வப் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு என் இதயத்தின் கடைசி துடிப்பு உள்ள வரை என் நன்றியை அவர்களுடைய பொற்கமலங்களுக்கு காணிக்கையாக்கி, ஆளை மாற்றித்தான் தீர வேண்டுமென்று பலர் போராடியபோதிலும் மாற்றாமல் வாய்ப்பளித்த என் தெய்வத்தாய்க்கு நன்றி.

மாண்புமிகு புரட்சித் தலைவியின் தொண்டனாக அங்கீகரித்த பேரணாம்பட்டுத் தொகுதி மக்கள் அளித்த வாக்குகளை தங்களுக்கு அர்ப்பணிக்கிறேன், பேரணாம்பட்டு மக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உலக வரலாற்றிலேயே எல்லாத்தரப்பு மக்களுடைய 100 சதவீத ஆதரவையும் பெற்றிருக்கிற ஒரே அரசு தமிழக அரசு. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அரசு என்று நிரூபித்துக்கொண்டிருக்கிறது. மிகவும் சிறப்பான பட்ஜெட்டை தமிழக மக்களுக்கு அளித்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்தையும் ஆதி திராவிட நலத்துறை அமைச்சருக்கு பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஆணையிட்டால் அது நடந்துவிடும்: அதனால் இங்கு ஏழைகள் எவரும் வேதனை படமாட்டார் என்ற புரட்சித தலைவர் வழி வந்த நிலைத்ததை முடிக்கும் அரசு மாண்புமிகு புரட்சித் தலைவியின் இன்றைய அரசு என்று கூறி என் முதல் உரையைத் தொடங்குகிறேன். ஆதிதிராவிடர் மக்கள் கடவுளின் குழந்தை என்பதைவிட புரட்சித் தலைவியின் குழந்தைகள் என்று சொல்வதில் பெருமைப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் ஆதிதிராவிட மக்களின் குலதெய்வமாகவும், நம்பிக்கை நட்சத்திரமாகவும் இருக்கக்கூடிய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஆட்சியில்தான் தங்களுக்கு விடிவுகாலம் கிடைக்கும் என்று நம்புகிறார்கள்.

பிற்பகல் 5–55

ஆதிதிராவிடநல மேம்பாட்டுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின பெயரால் ஆதிதிராவிட நல முன்னேற்றச் சிறப்புத் திட்டம் என்ற பெயரால் அனைத்துத் தேவைகளான உணவு, வீடு, தொழில் கல்வி, குடிநீர், கழிப்பிட வசதி, மயானச்சாலை வசதி போன்ற வசதிகளை நிறைவேற்றித் தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஆதிதிராவிட நலத்திற்கான காரியங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களால் மட்டுமே செய்ய முடியும். ஆதிதிராவிட மக்களின் மீது அன்பும் பாசமும் கொண்டு உள்ளார்கள் என்பதை நிரூபித்துக் காட்டும் வகையில் எல்லா ஆதிதிராவிட மக்களின் குடிநீர்ப்பிரச்சினைகளை உடனடியாகப் போக்க ஆணையிட்டுள்ளீர்கள். நன்றி.



1991 செப்டம்பர் 19] [டாக்டர் ஜெ. பரந்தாமன்]

பேரணாம்பட்டுத் தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க பத்ரபல்லி அணைத் திட்டத்தை தயவுசெய்து நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். எல்லா ஆதிதிராவிட மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வீடு தேவைப்படும் ஏழைகளுக்கு இலவசமாக வீடுகள் கட்டித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன். வீட்டுமனைப் பட்டா பெறுவதில் சிரமங்கள் பல உள்ளன. இவை தீர்க்கப்பட வேண்டும். அளவுக்கு அதிகமான வசதி படைத்தவர்களின் நிலங்களை ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டுவதற்காகக் கையகப்படுத்த அமைச்சர் ஆணையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களின் தேவைகளைக் கணக்கெடுத்து குறுகிய காலத்திற்குள்ளாக அவர்கள் முன்னேறுகிற வகையில் திட்டங்கள் தீட்டிட வேண்டுகிறேன். இதுவரையில் ஏற்பட்ட முன்னேற்றம் திருப்தியாக இல்லை. இப்படியே போய்க் கொண்டிருந்தால் 100 சதவீதம் வருவதற்கு 100 ஆண்டுகள் ஆகும் என்ற நிலையை மாற்றி உடனடி முன்னேற்றம் காண மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒருவரால் மட்டுமே முடியும் என்று நான் கூறிக்கொள்கிறேன். கிராமங்களில் ஆதிதிராவிட மக்களுக்காக குடிசை மாற்று வாரியம் போல் அடுக்குமாடி வீடு கட்டித் தரலாம். ஏழைகளுக்கு வீடுகளை இலவசமாகவும், கொஞ்சம் வசதி படைத்தவர்களுக்குக் கடனாகவும் கட்டித்தர கேட்டுக்கொள்கிறேன். அனைத்து ஆதிதிராவிட மக்களின் தொழில் வளர்ச்சிக்கு தாட்கோ மூலம் அதிக அளவில் கடன் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன். ஏழை விவசாய ஆதிதிராவிட மக்களுக்கு உழவு மாடு, பசுமாடு, ஆடுகள் போன்றவற்றை வாங்கி வளர்க்க கடன்களையும், தொழில் கல்வி படித்தவர்களுக்கு சுயவேலைவாய்ப்புக்கான கடன்களையும், தமிழகத்திலே தேவைப்படும் அனைவருக்கும் வழங்கிட கேட்டுக்கொள்கிறேன்.

பேரணாம்பட்டில் ஆதிதிராவிட நலத்துறை மூலம் காலணித் தொழிற்சாலை நிறுவி ஆயிரம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மருத்துவப் பட்டதாரிகளுக்கு மருத்துவமனை நடத்த சுமார் 10,000 ரூபாய் கடன் வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியாகிய பேரணாம்பட்டில் உள்ள ஆதிதிராவிட நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்திடக் கேட்டுக் கொள்கிறேன். ஆதிதிராவிட நலத்துறை மூலம் தொழில் கல்விக்கூடங்களைத் தொடங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு தொடங்கும் முதல் கல்விக் கூடத்தை கல்லூரிகளே இல்லாத பேரணாம்பட்டில் தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் திருக்கரங்களால் துவக்கி

வைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். கல்லூரிப்படிப்பைத் தொடரமுடியாத ஆதிதிராவிட மாணவிகளுக்கு சுருக்கெழுத்து, தட்டெழுத்து, தையல்கலை, பூத்தையல் வேலை, பேக்கரி வேலை போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்க வேண்டுகிறேன்.

மாணவர்களுக்கு ஓட்டுநர் பயிற்சி, நடத்துநர் பயிற்சி, சைக்கிள் ரிப்பேர், மரவேலை, ஏர் கண்டிஷன் மெக்கானிசம், ஆட்டோ மெக்கானிசம், டி.வி. மற்றும் ரேடியோ மெக்கானிசம் போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்கக் கோருகிறேன்.

தொழில் கல்லூரிகளில் படிக்கிற ஆதிதிராவிட மாணவர்களின் செலவுகளில் ஒரு பகுதியை அரசு உதவித் தொகையாகவும், மீதியைக் கடனாகவும் வழங்கிடக் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் நடக்கிற ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுக்கான முன்பயிற்சி நிலையத்தின் தரம் உயர்த்தப்பட வேண்டும். மாணவர்களின் உணவுக் கட்டணம் ரூபாய் 8 மட்டுமே இங்கு வழங்கப்படுகிறது. அந்த பணத்தை உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். தொழில் கல்விக் கூடங்களில் படிக்கும் மாணவர்களுக்கு என்று தனியாக தங்கும் மாணவர் விடுதிகளை ஆதிதிராவிட நலத் துறை மூலம் ஏற்படுத்தித் தர கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக மாணவிகளில் எத்தனைபேர் விண்ணப்பிக்கிறார்களோ அத்தனை பேர்களுக்கும் தங்க இடம் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விடுதிகளில் தங்க இடம் கிடைக்காத வசதியற்ற மாணவிகளில் பலர் படிப்பைத் தொடர முடியாத நிலையில் ஏராளமான பேர் உள்ளனர். அவர்களுக்கு இடம் கொடுத்து காப்பாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன். விடுதிகளில் உணவுத் தரம் உயர்த்தப்பட வேண்டும். தவறு செய்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

போலிச் சான்றிதழ் வாங்கி அரசை ஏமாற்றி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய இடத்தை மற்றவர்கள் ஆக்கிரமித்துக் கொள்கிறார்கள். அப்படி போலிச் சான்றிதழ் பெற்று அரசை ஏமாற்றியவர்கள் இன்று எப்படிப்பட்ட பதவியில் இருந்தாலும் தயவு செய்து அபராதமாக ஒரு இலட்சம் ரூபாய் வசூலித்து அதை அரசின் நிதியில் சேர்த்திட கேட்டுக்கொள்கிறேன். போலிச் சான்றிதழ் கொடுத்த அதிகாரிகளையும் நிரந்தர வேலை நீக்கம் செய்யக் கோருகிறேன். கிராமங்களில் வாழும் ஆதி திராவிட மக்கள் கல்வியில் முன்னேற்றம் பெற தனித் திட்டத்தையும், தனிச்சலுகையையும் தரக்கேட்டுக்கொள்கிறேன். இது வரையில் அரசு சலுகைகளே பெறாத குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுகிறேன். தமிழ் நாட்டு முதல்வர் ஆதி திராவிட மக்களின் நல வளர்ச்சி நிதி என்று ஒன்றை ஏற்படுத்தி, ஏற்கனவே அரசிடமிருந்து சலுகைகளைப் பெற்று அதன் மூலமாக தங்களுடைய வாழ்க்கையை இன்றைக்கு உயர்த்திக் கொண்டவர்கள், இன்று ஒருவேளை சோற்றுக்கும் இல்லாமல், படுக்க பாயும்



இல்லாமல், உடுக்க உடையும் இல்லாமல் கஷ்டப்படுகிறவர்களுக்கு கோயில்களில் செலுத்துகிற காணிக்கை போன்று நன்கொடை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதி பல பேர்களின் வீட்டிலே விளக்கு எரிய பயன்படும். அவர்களுடைய வாழ்க்கை வளம் பெறப் பயன்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் பெண்களுக்காகப் பொதுக் கழிப்பிட வசதிகளைச் செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 101-வது விழாவைக் கொண்டாடும் இந்த ஆண்டில் தகுதி வாய்ந்தவர்களுக்கு பல்கலைக் கழகத் துணை வேந்தர், கல்லூரி முதல்வர் போன்ற உயர்ந்த பதவிகளை எல்லாம் அளிப்பதோடு மட்டுமல்லாமல் அரசின் மற்ற உயர் பதவிகளிலும் அவர்களை அமர்த்தி ஆண்டாண்டாக முன்னேறாத ஆதி திராவிட சமுதாயம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் காலத்தில்தான் முன்னேறியது என்று காலம் சொல்லும் என்று சொல்லி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி தெய்வத்தாய் அவர்களுக்கு நன்றி சொல்லி வாய்ப்பளித்த பேரவைத்துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 6-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. செ. பெருமாள்.

திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஒளி விளக்காய், விடி வெள்ளியாய், தன்னிகரற்ற தலைவியாய், தாய்க் குலத்தின் தவப் புதல்வியாய் விளங்குகின்ற எங்களது காவல் தெய்வம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற் பாதங்களில் எனது பணிவான வேண்டுகோளினை வைத்து வணங்குகிறேன்.

என்னை இரண்டாவது முறையாக தேர்ந்து எடுத்து சட்டமன்றத்திற்கு அனுப்பிய ஏற்காடு தொகுதி வாக்காளர்களுக்கும் கழகத்தின் உடன் பிறப்புகளுக்கும் இந்த மாமன்றத்தின் மூலம் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் மானியக் கோரிக்கையில் எனது கருத்துக்களை தெரிவித்துச் கொள்கிறேன்.

தமிழக அரசு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 1989-90 ஆம் ஆண்டு ஊரக வளர்ச்சி திட்டத்தின் மூலம் 42,000 வீடுகளும், 1990-91 ஆம் ஆண்டு 47,000 வீடுகளும் அரசு கட்டித் தர உத்தரவு வழங்கப்பட்டு கட்டப்பட்டது. தற்போது நமது காவல் தெய்வம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் 1991-92 ஆம் ஆண்டுக்கு 50,000 வீடுகள் கட்டித் தர ஏற்பாடு செய்ய ஆணை பிறப்பித்ததற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. செ. பெருமாள்] [1991 செப்டம்பர் 19

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் நல்லாட்சியில் மலை வாழ் மக்களுக்கு நிறைய நிதி ஒதுக்கீடு செய்து அவர்கள் பயன்பெற பல திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அவைகள் அனைத்தும் முறையாக மலைவாழ் மக்கள் மற்றும் ஆதிதிராவிடர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்றால் அப்படி போய்ச் சேருவதில்லை. உதாரணமாக ஐ.ஆர்.டி.பி., ஐ.டி.டி.பி. திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற உழவு மாடுகள் கறவை மாடுகள், பட்டி ஆடுகள், தொழில் கடன்கள் அனைத்தும் விவசாயிகள் விரும்புகின்ற இடத்தில் அதிகாரிகள் வாங்கித் தருவதில்லை. அதற்கு முரணாக அதிகாரிகள் ஒரு இடத்தை தேர்வு செய்து அங்கு ஒரு இடைத் தரகரை வைத்து மானியத்தில் வருகின்ற பணம் அனைத்தும் கமிஷன் மூலமாக, கமிஷனாக வைத்து இவர்கள் கள்ளத்தனம் செய்து ஏமாற்றுகிறார்கள். எனவே இம்முறையை மாற்றி விவசாயிகள் விரும்புகிற இடத்தில், மாடுகள், கறவை மாடுகள் வாங்க அரசு உத்தரவு அளிக்க வேண்டும்.

அதுபோல், மாண்புமிகு முதல்வர் அவர்கள் மலைவாழ் மக்கள் மேம்பாட்டிற்கு நிறைய நிதிகள் ஒதுக்கீடு செய்தும், அவைகள் அனைத்தும் அவர்களுக்கு போய் முறையாக சேருவதில்லை. காரணம் அதிகாரிகள் அவர்கள் விரும்புகிற இடத்தில் ஒரு வேலையை மட்டும் செய்து விட்டு மற்ற இடங்களில் மலை வாழ் மக்களுக்கு தேவைப்படுகின்ற வசதிகளை, சாலை வசதி, குடிநீர் வசதி, மின் வசதி, வீட்டு வசதி, கல்வி வசதி, இன்னும் பல அடிப்படை வசதிகள், மலையில் உள்ள பல கிராமங்களுக்கு இதற்கு முன்பு இருந்த அரசு செய்து தரவில்லை என்பதை குறிப்பாக சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் இதற்கு முன்பு நான் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி என்ற முறையிலே இருந்த காரணத்தினால் என்னுடைய தொகுதியிலே பல வேலைகளையும் செய்யவில்லை என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே நமது அரசு மலைவாழ் மக்களுக்கு மேம்பாட்டுத் திட்டத்திற்கு என ஒரு தனிவாரியம் அமைத்து அதற்கு என தனி நிதியினை ஒதுக்கீடு செய்து அந்த நிதி கட்டாயமாக அந்த குறிப்பிட்ட காலத்தில் மிகவும் மோசமாக உள்ள மலைவாழ் மக்கள் பகுதிக்கு போய்ச் சேர வழிவகை செய்து கொடுக்க மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் மலைவாழ் மக்கள் கல்வித் துறையில் மிகவும் பின்தங்கி உள்ளனர். காரணம் பொருளாதார இன்மையும், அறியாமையும்தான், எனவே மலைவாழ் மக்கள் அதிகமாக வசிக்கும் எனது தொகுதியில் கல்வராயன் மலை மற்றும் ஏற்காடு பகுதியில் இருக்கின்ற மலைவாழ் மக்கள் அனைவரும் கல்வி அறிவு இன்றி இருக்கின்றபடியால் இவர்களுக்கு மலைப்



1991 செப்டம்பர் 19] [திரு. செ. பெருமாள்]

பகுதியிலே உறைவிடப் பகுதிகளிலே எல்லாம் ஆசிரியர்கள் சரியாக வருவதில்லை. காரணம் அங்கே இருக்கின்ற மலை வாழ் மக்கள் தங்களுடைய பிள்ளைகள் படிப்பதற்கு வாய்ப்பில்லாத காரணத்தால். அதை வைத்து இந்த அரசு மூலமாக அந்த மலைப் பகுதியிலே சுய வேலை வாய்ப்புப் பயிற்சியும் மற்றும் பாலிடெக்னிக்கும் மலைவாழ் மக்களுக்கு எனத் தனியாக அரசாணைப் பிறப்பிக்கவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மலைவாழ் மக்களுக்கு என்று மைய அரசு 7½ சதவிகிதம் ஒதுக்கீடு செய்துள்ளது. ஆனால் மாநில அரசு 1 சதவிகிதம் தான் ஒதுக்கீடு கொடுத்துள்ளது. இந்த இட ஒதுக்கீட்டின் மூலம் மலைவாழ் மக்களுக்கு என்று எந்த ஒரு பயனும் கிடைக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் இதற்கு முன்பு ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் சேர்த்து 18 பர்சென்ட் இருந்தது. ஆனால் இப்போது தனியாக ஒரு விழுக்காட்டை ஒதுக்கிக்கொடுத்ததன் மூலம் இவர்கள் பயன் பெறுவார்கள் என்பது முடியாது. எனவே அவர்களுக்கு மத்தியிலே கொடுக்கின்ற 7½ பர்சென்ட் கொடுக்கின்ற விகிதத்திலே தமிழ்நாட்டிலும் மலைவாழ் மக்களுக்கு என்ற வகையிலே 7½ பர்சென்ட் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 6–05

மேலும் மலைவாழ் மக்களின் பிள்ளைகள் மருத்துவக் கல்லூரியிலோ, அல்லது பொறியியற் கல்லூரியிலோ சேருவதற்கு நுழைவுத் தேர்வில் தேர்வு செய்யப்பட்ட பிறகு சம்பந்தப்பட்ட இயக்குநர் அவர்கள் நிதியுதவி பெறும் தனியார் கல்லூரியில் சேர அனுமதி அளிக்கிறார்கள். ஆனால் நிதியுதவி பெறும் நிறுவனங்களில் அளிக்கின்ற கட்டணம் கட்ட முடியாமல் பழங்குடியினர் குழந்தைகள் கல்லூரியில் சேர இயலாமலும், பாதியில் கட்டணம் கட்ட முடியாமலும் படிப்பை நிறுத்தும் நிலை ஏற்படுகிறது. எனவே, பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்களை அரசு நடத்துகின்ற கல்வி நிறுவனங்களில் மட்டும் சேர்க்க மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மலைவாழ் மக்கள் வசிக்கின்ற பகுதியில் உள்ள மற்ற இனத்தைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக ரெட்டியார் இனத்தைச் சேர்ந்தவர்கள் கொண்டா ரெட்டி என்றும், பள்ளி என்பவர்கள் பள்ளியன் என்றும், நாய்க்கன் என்பவர்கள் காட்டு நாய்க்கன் என்றும், அதிகாரிகளை ஏமாற்றி ஜாதி சான்றிதழ்கள் பெற்று மலைவாழ் மக்களுக்கு கிடைக்கின்ற அனைத்து சலுகைகளையும் மற்ற ஜாதியினர் பெற்று விடுகின்றனர். இதனால் மலைவாழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர், இதைத் தடுத்து நிறுத்த தமிழக

முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மேற்கண்ட கோரிக்கைகளை காவல் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் வைத்துவிட்டு எனக்கு இந்த வாய்ப்பினைக் கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் பெ. வீரபாண்டியன்.

*டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீடு துயர் நீக்க பாடி வந்த நிலா, முழு நிலாவாக இங்கே அமர்ந்திருக்கின்ற நம்முடைய இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு முதலில் என்னுடைய நன்றி காணிக்கையை செலுத்துகிறேன்.

நம்முடைய இதயத் தெய்வம் நீடு துயர் நீக்க பாடி வந்த நிலா என்றும், புரட்சித் தலைவி என்றும், பூ மகள் என்றும், திருமகள் என்றும் மலை மகள் என்றும் பலவிதமாக நாம் புகழ்ந்தாலும் இதை விட சிறப்பாக உலக நாடுகளில் உள்ள பல கவிஞர்கள் நம் இதய தெய்வம் புரட்சித் தலைவியை பலவாறாக புகழ்ந்திருப்பதையும் நான் இந்த சபையில் தெரிவிப்பதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

"Jayalalitha endearing known as 'PURATCHI THALAIVI' rose from extinction, to distingtion like a Phoenix bird surprising supporters and opposers; frends and foes alike. Industrious daughter of anillustrious father, with academic distinction to artistic exceilence JAYA emerges victorious to hold the reign of Tamil Nadu (மேசையைத் தட்டும் ஒலி) from peace to prosperity and goodwill. Jayalalitha did not lose her heart when she was defeated, nor did she lose her head when she turned victorious. The world would soon hear the gentle flutter of a butterfly, making a HOME, a paradise regained.

இவ்வாறாக நம்முடைய இதய தெய்வத்தை புகழ்ந்து உள்ளனர். இந்த செங்கம் இவ்வளவு காலம் ஊமையாக இருந்தது. இன்று தான் புரட்சித் தலைவியின் நல்லாசியால் இங்கே பேச வந்திருக்கிறது. இங்கே இந்த மானியக் கோரிக்கையிலே நான் பங்கு ஏற்பதே, பல மானியக் கோரிக்கைகளிலே பங்கு ஏற்பதற்கு சமம். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக் கோரிக்கையை எடுத்துகொண்டால் எல்லா மானியக் கோரிக்கைகளிலும் நான் பேசியதாக கருதுவதன் காரணத்தால் தான் இங்கே பேச முன் வந்திருக்கிறேன்.



ஆதி திராவிட மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் தெரிந்த ஒரே சின்னம் இரட்டை இலை தான், நம்முடைய இதயத் தெய்வம் புரட்சித் தலைவி மட்டும்தான் தெரிந்த ஒரே தலைவி நம்முடைய இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களைத் தவிர வேறு ஒருவரும் கிடையாது. ஆகவேதான் புரட்சித் தலைவி அவர்களுக்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மீது இருக்கும் பற்றின் காரணமாக அவர்கள் குடும்பம் வாழ வேண்டும் அவர்கள் தழைக்க வேண்டும். அவர்கள் சீரும் சிறப்புமாக வாழ வேண்டும் என்ற காரணத்தால்தான் அவர்கள் முதலில் கையெழுத்துப் போட்டதே ஆதி திராவிட மக்களுடைய நன்மைக்காக தானே தவிர வேறு ஒன்றும் கிடையாது. காரணம் என்ன என்றால் ஆதி திராவிட மக்கள் தான் மலிவு விலை மதுவினால் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். எனவே தான், புரட்சித் தலைவி அவர்கள் ஆதி திராவிட மக்கள் மேல் இருக்கும் பற்றின் காரணமாக, மலிவு விலை மதுவை ஒழிக்கும் நோக்கத்தில், ஆதி திராவிட மக்களுடைய வாழ்க்கை மேம்பாடு அடைய செய்யும் நோக்கத்தில்தான், அதை செய்தார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த சாராயம், சீப் லிக்கர் குடித்து பல தாய்மார்களுடைய தாலிகள் அறுக்கப்பட்டிருக்கின்றன. பல தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுடைய படிப்பு கெட்டு சீரழிந்திருக்கிறது. அதை நிறுத்தி வைத்த நம்முடைய இதயத் தெய்வம் புரட்சித் தலைவிக்கு தாழ்த்தப்பட்ட மக்கள் நன்றி சொல்லியே ஆக வேண்டும். அதுமட்டுமல்லாமல் 10 அம்சத் திட்டத்தில் ரோடு போடுதல், தண்ணீர் வசதி, வீடு கட்டிக் கொடுத்தல், கல்வி வசதி மற்றும் பல நன்மைகளை செய்திருப்பது தாழ்த்தப்பட்ட மக்களின், மலை வாழ் மக்களின் மீது கொண்டிருக்கும் பற்று தான்.

பிற்பகல் 6-10

அது மட்டுமல்ல. கல்வியில் நீங்கள் காட்டும் அக்கறை— தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற வேண்டுமென்றால் அவர்கள் விழிப்புணர்ச்சி அடைய வேண்டும். அவர்கள் விழிப்புணர்ச்சி அடைய வேண்டுமென்றால் கல்வி ஒன்றுதான் அதற்கு முக்கியமானது. கல்வி என்று ஒன்று இருந்து விட்டால் பொருளாதாரத்திலும் சரி, சமூகத்திலும் சரி அவர்களுடைய வாழ்க்கைத்தரம் நிச்சயமாக மேம்பட்டு விடும். அதுமட்டுமல்ல, 10 அம்சத் திட்டத்தில் ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் கூற விழைகிறேன்.

தொகுப்பு வீடுகள் கட்ட நம்முடைய அரசு 16,700 ரூபாய் கொடுக்கிறது. சில இடங்களில் மண்ணின் தன்மை காரணமாக இன்னும் 2,000, 2,300 ரூபாய் அவர்களே தாங்கிக் கொள்ள வேண்டுமென்ற நிலை இருக்கிறது. இது அவர்கள் செய்த தவறல்ல. இது மண்ணின் தன்மையைப் பொறுத்தது. பிளின்த் பீம் போடுவதற்கு 2,500 ரூபாய் அல்லது 2,300 ரூபாய் ஆவதை அரசே தாங்கிக் கொண்டால் நன்றாக இருக்கும்.

[டாக்டர் பெ. வீரபாண்டியன்] [1991 செப்டம்பர் 19

அதோடுகூட பட்டா வழங்கினால்தான் அவர்களால் தொகுப்பு வீடுகளைக் கட்ட முடியும். எனவே பட்டா வழங்குவதை நம்முடைய இதய தெய்வம் அனுதாபத்தோடு அணுகி, ஆதி திராவிட மக்களுக்குப் பட்டா வழங்க ஆவன செய்ய வேண்டும். அதோடு தாட்கோ லோன் பெற, உதாரணமாக டிராக்டருக்கு லோன் கிடைக்க வேண்டுமென்றால் 8 ஏக்கர் நிலம் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. எந்த அரிஜனுக்கும் நிச்சயமாக 8 ஏக்கர் நிலம் கிடையாது. ஏதோ ஒரிருவருக்கு இருக்கலாமே தவிர வேறு யாருக்கும் 8 ஏக்கர் நிலம் இருக்க முடியாதென்ற காரணத்தால் அந்த நிலையைக் கொஞ்சம் தளர்த்தினால் அவர்கள் பயனடைவார்கள் என்று நம்முடைய இதய தெய்வத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பேரணாம்பட்டு, விளத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர் போன்ற நகரங்களில் இருக்கிறது. இப்போது இயந்திரங்களை நுழைத்துவிட்ட காரணத்தால் பல தாழ்த்தப்பட்ட மக்கள் வேறு வழியில்லாமல் அங்கே கஷ்டப்பட்டு கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தோல் ஷாப் வேலை தவிர வேறு ஒன்றும் தெரியாது. எனவே அவர்களுக்கு மாற்று ஏற்பாடாக, நம்முடைய இதயதெய்வம் வேறு ஒரு பணியைக் கொடுத்து, அவர்களுக்கு வாழ்வளித்தால் அவர்கள் வாழ்வார்கள். அவர்கள் மீது தனி அக்கறை காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. என்னுடைய செங்கம் தொகுதி சந்தனக் கட்டை அதிகம் விளையும் தொகுதி. சந்தனத்தை எல்லாம் ஊருக்கு வாரி வழங்கிவிட்டு, வெறும் கையை நாங்கள் முகர்ந்து கொண்டிருக்கிறோம். எனவே அனுதாபத்தோடு — ஏன் செங்கம் என்கிறேன். என்றால், தமிழகத்திலே சித்திரை கத்திரி வெய்யிலையும் பார்க்காமல் நம்முடைய இதய தெய்வம் அவர்கள் தேர்தல் வாக்குகளை சேகரிக்க வரும்போது, மலர் தூவி அந்தப் பூமகளை வரவேற்ற தொகுதிதான் செங்கம் தொகுதி. ''இது தார் சாலையா அல்லது மலர் சாலையா என்று நம்முடைய இதய தெய்வம் பிரமிக்கும் அளவுக்கு உள்ளும், புறமும் குளிரும் அளவுக்கு வரவேற்ற தொகுதிதான் அந்த தனித் தொகுதி''. அந்த தனித் தொகுதியை தயவு செய்து சிறப்புத் தொகுதியாக மாற்றிவிடுங்கள். அதுமட்டுமல்ல, ரப்பர் தொழிற்சாலை, சந்தனத் தொழிற்சாலை, குப்பநத்தம் டேம் கட்டுவது போன்ற கோரிக்கைகள் எல்லாம் இருக்கின்றன. நான் நிச்சயமாக என்னுடைய தொகுதிக்கு இன்ன செய்ய வேண்டுமென்று கேட்கமாட்டேன். ஏனென்றால் நீங்களாகக் கொடுத்தது இந்தப்பதவி. நீங்களாக எடுத்துக் கொள்ளலாம். ''நான் கேட்டா நீங்கள் ஒரு கோடி ரூபாய் தந்தீர்கள்?'' இல்லை. எனவே இந்தத் தொகுதிக்கு என்ன செய்ய வேண்டும், எதைச் செய்ய வேண்டும் என்று நீங்கள் அறிவீர்கள். மற்ற தொகுதிகளின் மாண்புமிகு உறுப்பினர்கள்போல் நான் கேட்கும் நிலையில் இல்லை. ஏனென்றால் அதுவும் உங்கள் தொகுதிதான். (சிரிப்பு) செங்கம்



1991 செப்டம்பர் 19] [டாக்டர் பெ. வீரபாண்டியன்]

தொகுதியில் ஜவ்வாது மலை மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளது. அங்கே 6 பஞ்சாயத்துக்கள் உள்ளன. கல்லாத்தூர் ஊராட்சி, ஊர்கவுண்டனூர் ஊராட்சி, அத்திப்பட்டு ஊராட்சி, பலாமரத்தூர் புலியூர் ஊராட்சி, மேல்கிளம்பாடி ஊராட்சி, ஊராட்சி. அதிலே 6 பஞ்சாயத்துகளை உள்ளடக்கிய தொகுதி தான் செங்கம் தொகுதி. ஆனால் செங்கம் ஜம்னாமருதூர் பஞ்சாயத்து யூனியனுக்கு 11 கிராமங்கள்தான். கலசபாக்கம், போளூர் தொகுதிகளிலிருந்து இரண்டு. இரண்டு என் பக்கம் இருக்கிறது. அதிக பஞ்சாயத்துக்கள் உள்ள என்னுடைய தொகுதியில் இப்போது கிட்டத்தட்ட 1,500 ஏக்கர் நிலங்களை வாழையடி வாழையாக பயிரிட்டு வருகிறார்கள். இப்போது டி.ஆர்.ஓ. அவர்கள் மரக்கன்று வைப்பதற்காக ஆக்கிரமிப்பு செய்ததாக அறிந்தேன். தயவுசெய்து ஏழை மக்களுடைய நலன் கருதி இதயதெய்வம் அவர்கள் அவர்களுக்கு பட்டா அளித்தால் மிகவும் நன்றாக இருக்கும். அதுமட்டுமல்ல. இன்னொரு வேதனை என்னவென்றால் அரியாகுஞ்சூர் என்ற கிராமம் இருக்கிறது. அது ஆதிதிராவிட மக்கள் வாழும் பகுதி. 4 பக்கமும் காடுகளால் சூழப்பட்ட பகுதி. அங்கே 10 ஆம் வகுப்பு படிக்கும் மாணவிகள் 20, 25 பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பள்ளி செல்ல வேண்டுமென்றால் அரட்டைவாடி என்ற கிராமத்திற்குச் செல்ல வேண்டும். அரட்டைவாடிக்கும் அரியாகுஞ்சூருக்கும் மத்தியில் 8 கிலோ மீட்டர் இருக்கிறது. இவர்கள் காட்டின் வழியே செல்ல வேண்டும். பெண் குழந்தைகள் காட்டின் வழியே சென்றால் என்ன பிரச்சினை வரும் என்பதை தயவுசெய்து நம்முடைய இதய தெய்வம் அவர்கள் உணர்வார்கள் என்று நினைக்கிறேன். எனவே, ரோட் வசதி செய்து கொடுத்தால் அவர்கள் படிக்க வசதியாக இருக்கும். வனத்துறை, கல்வித் துறைக்கு செய்த சேவை என்று இதைக் கவனித்தால் நன்றாக இருக்கும். ஜவ்வாது மலையில் இவ்வளவு காலமாக ரோட் வசதியில்லை. அங்கே 27 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரோடு போட்டு விட்டால் அந்த ஏழை மலைவாழ் மக்கள் மிகவும் நன்மையடைவார்கள். இப்போதே நமது இதயதெய்வம் அவர்கள் செங்கம் தொகுதியை தத்து எடுத்து விட்டார்கள் என்று கருதுகிறேன். (சிரிப்பு). மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் அனுமதியுடன் ஒரு வாக்கியத்தைப் படிக்க விரும்புகிறேன். ஒரே ஒரு வார்த்தை சொல்லி முடிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 6-15

"They, the pecple shculd realise who is ruling the State. He, hcwever clarified that he was not indulging in any propaganda against Brahmins."

அது மட்டுமல்ல.

Mr. Maran said that the treatment meted by Brahmins to the Backward classes had prompted him to write the Book about the Movement since it is beginning to the wake of the Justice Party.

இந்தக் கருத்தில் நான் பிராமணர்களை எதிர்க்கவில்லை என்ற கருத்தில் பிராமணர்களை எதிர்க்கிறேன் என்ற அர்த்தம் தான் படிந்திருக்கிறது. இந்த சபையின் மூலமாக நாட்டுமக்களுக்கு ஒன்றை உணர்த்த விரும்புகிறேன். காரணம் என்னவென்றால் இங்கே ஓவிய வடிவில் இருக்கும் பீமராவ் (அம்பேத்கார்) ஏழை மாணவராகத்தான் இருந்தார். படிப்பதற்குக் கூட வசதி கிடையாது. ஆனால் அறிவாளி. இந்த அறிவுத் திறத்தைப் புரிந்து கொண்ட அந்த ஆசிரியர் அந்த மாணவனை எப்படியெல்லாம் படிக்க வைத்து இந்த நாட்டுக்குப் பயன்படுத்தவேண்டுமென்று விரும்பினார் தெரியுமா? அந்த மாணவர் டபிள் புரமோஷன்ஸ் பாஸ் பண்ணினார். இறுதியாக அவர் பெற்ற பட்டங்கள் எம்.ஏ., பி.எச்.டி., டி.டி., டி.சி.எல்., எல்.எல்.பி., பார்-அட்-லா, டி.லிட்., ஜே.பி. கற்றறிந்த அந்த மேதை அரசியல் சாசனத்தை எழுதினார். இவர் படிக்கக் காரணமாக இருந்த ஆசிரியர் யார் தெரியுமா? அவர்தான் ஒரு பிராமண ஆசிரியர். ஒரு பிராமண ஆசிரியருடைய ஊக்குவிப்பினால் தான் பீமராவ் என்று இருந்த அந்த மாணவர், ஆசிரியரின் மேல் கொண்ட பற்றின் காரணமாக தன் பெயருக்குப் பின்னால் அம்பேத்கர் என்ற ஆசிரியரின் பெயரைச் சேர்த்து பி. ஆர். அம்பேத்கர் ஆனார். இந்த பி. ஆர். அம்பேத்கர்தான் இந்திய நாணயத்தின் சாரநாத் உருவம் பொறிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார். அதனால், யாருக்குப் பெருமை? அந்த ஆசிரியருக்குப் பெருமை. சாரநாத் சின்னம் பொறிக்கப்பட காரணமாக இருந்தது யார்? அந்த பிராமண ஆசிரியர்தான். அது மட்டுமல்ல. மூவர்ணக் கொடியில் அசோகச் சக்கரத்தைப்பொறிக்க வேண்டுமென்று பரிந்துரை செய்ததே இந்த பி.ஆர். அம்பேத்கர் தான். அந்தப் பெருமையை சேர்த்தது யாருக்கு? அந்தப் பிராமண ஆசிரியருக்குத்தான். அது மட்டுமல்ல, புத்த மதத்திற்கு என்று, சமய நூல் இல்லாமல் இருந்தது. '' Gospel of Buddna '' என்ற புத்தகத்தை எழுதியவர் பி. ஆர். அம்பேத்கர்தான். அதற்குக் காரணமாக இருந்தது யார்? பிராமண ஆசிரியர் தான். எனவே, ஓவ்வொரு வகையிலும் நாம் பார்க்கப் போனால் '' ஆதிதிராவிட மக்கள் முன்னேற வேண்டுமானால் அது பிராமண சமுதாயத்தினால் தான் முடியும் '' என்பதை நிரூபித்துக் காட்டுகிற அளவுக்கு நடந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட இயக்கம் என்று சொல்லுகிறார்கள். நான் ஒன்றைச் சொல்கிறேன் குறிப்பிட்டு. அறிஞர் அண்ணா காலத்தில்தான் எனக்கு மருத்துவப் படிப்புக்கு இடம் கிடைத்தது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில்தான் அரசாங்கத்தில் பணியில் சேர்ந்தேன். இடையில் வந்த கருணாநிதி ஆட்சி காரணமாக நான் வேலையை விட்டு நீக்கப்பட்டேன். (சிரிப்பு) என் தங்கை அறுவை சிகிச்சை நிபுணராக திருப்பத்தூர் பெரிய ஆஸ்பத்திரியில் இருக்கும்போது நான் சேவல் சின்னத்தில் நின்றேன் என்ற காரணத்திற்காக '' சம்பளமில்லா லீவில் '' இருக்கும்படி இருந்தது கருணாநிதி ஆட்சியில் தான். என் மனைவியையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை.



அவளும் ஒரு மருத்துவ அதிகாரிதான். அவரையும் டிரான்ஸ்பர் செய்து, '' சம்பளமில்லா விடுப்பில் '' இரண்டரை வருடம் கஷ்டப்பட்டார். இத்தனைக்கும் நான் கலங்கவில்லை. காரணம் நான் அலைத்திந்திய அண்ணா தி.மு.க.வில் வலுவாக இருக்கும் ஒரே காரணத்திற்காகத்தான். பிறகு, புரட்சித் தலைவி அவர்கள் (இருக்கையைக்காட்டி) அங்கே வந்தார்கள். அவர்கள் வந்தாலே போதும், அருகே போய் புரட்சித் தலைவியின் முகத்தைப் பார்க்க மாட்டோமா என்று மக்கள் இரவும் பகலும் காத்திருந்தார்கள். இன்றைக்கு இந்த மன்றத்தில் அவர்கள் ஆற அமர்ந்து உட்கார்ந்து கொண்டு நான் பேசுவதைக் கேட்கும் அளவுக்கு நிலை மாறியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே புரட்சித் தலைவி ஆட்சி வந்துவிட்டது. நான் எம்.எல்.ஏ. ஆகிவிட்டேன். இதுதான் திராவிடப் பாரம்பரியம். இடையில் வந்த கருணாநிதி என்னை காலை வாரிவிட்டார். நமது '' மக்கள் நல்வாழ்வு அமைச்சரின் '' அனுதாபத்தாலும் அன்பினாலும் அவர்கள் இருவரும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் ஒரு வாரமாக.

பிற்பகல் 6-20

(மணி அடிக்கப்பெற்றது).

பல கவிதைகளை உலகக் கவிஞர்கள் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவரைப் பற்றி எழுதி இருக்கிறார்கள். நான் இப்போது அதை ரிசர்ச்சே செய்து கொண்டு இருக்கிறேன். எனவே, இந்த மாமன்றம் ஊக்குவித்தால் இன்னும் நான் வேகமாக அதைச் செயல்படுத்துவேன் என்று கூறி, எனக்கு இங்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எம். சுந்தரசாமி.

திரு எம். சுந்தரசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேச ஒற்றுமைக்கும், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களுக்காக வாழ்ந்து தன் இன்னுயிரை அர்ப்பணித்த என் அருமைத் தலைவர் தியாகத்தின் திரு உருவம் ராஜீவ் காந்தி அவர்களை நினைவுகூர்ந்து என் உரையை ஆரம்பிக்கின்றேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பழங்குடியினருக்கும் பயன்தரும் பல்வேறு திட்டங்களை அறிவித்து இருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு கல்வி வசதிக்காக ரூ. 57 கோடி ஒதுக்கி உள்ளார்கள். ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு அதிக மாணவர் இல்லங்கள் கட்ட வேண்டும் என்றும், வாடகைக் கட்டிடங்களில் நடத்தப்படுகின்ற பள்ளிகளுக்கும், மாணவர் இல்லங்களுக்கும் கட்டிடங்கள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆதிதிராவிடர்

[திரு. எம். சுந்தரசாமி] [1991 செப்டம்பர் 19

பழங்குடியினர் பிள்ளைகள் எந்த இடையூறும் இன்றி கல்வி கற்க வசதியாக விடுதிகள் கட்டித் தர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களை மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கு உழவு மாடுகள் வாங்குவதற்காக ரூ. 2,400 வழங்குவதில், ரூ. 1,600 கடனாகவும் ரூ. 800 மானியமாகவும் வழங்கப்படுகின்றது. அதில் 50 சதவீதம் மானியமாக வழங்கும்படி முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கறவை மாடுகள் வாங்குவதற்கு 50 சதவீதம் மானியம் அளிக்கிறார்கள். அதுபோன்று, உழவு மாடுகள் வாங்குவதற்கும் 50 சதவீதம் மானியம் அரிசன மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் அளிக்கும்படி தங்களை மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலுள்ள ஆதிதிராவிடர் பழங்குடி மக்களுக்கு இந்த ஐந்து ஆண்டுகள் முடிவதற்குள்ளாக அனைவருக்கும் தொகுப்பு வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எல்லா ஆதி திராவிடர் குடியிருப்புகளிலும் குடிதண்ணீர் பஞ்சம் உள்ளது. அதை நிரந்தரமாக அகற்ற வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் குடியிருப்புகளுக்கு இலவசமாக மின் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெரும்பான்மையான ஆதிதிராவிடர்கள் குடி இருக்கின்ற குடியிருப்புகளிலே சாலை வசதிகள் இல்லை. சாலை வசதிகள் அங்கு ஏற்படுத்தித் தர வேண்டும்; மேலும் மயானத்திற்கு செல்வதற்கு சாலை வசதிகள் கிடையாது. உடனடியாக சாலை வசதிகள் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடியின மக்கள் பாட்டைப் புறம்போக்கு, புறம் புறம்போக்கு, ஓடைப் புறம்போக்கு, கோயில் இடம் புறம்போக்கு ஆகிய இடங்களில் கட்டி உள்ள வீடுகளுக்கு பட்டா வழங்கும்படியும், அப்படிக் கட்டியுள்ள வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும்படி உத்திரவிடக் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு முன்பு இம்மாதிரி புறம்போக்கில் கட்டப்பட்டு இருக்கின்ற வீடுகளுக்கு மின்சாரம் அளித்துக் கொண்டு இருந்தார்கள். ஆனால் இப்போது மின்சார இலாகா, மின்சாரம் வழங்குவதற்கு மறுக்கிறார்கள். எனவே முன்பு இருந்தபடி, புறம்போக்கு இடங்களிலே கட்டி இருக்கின்ற வீடுகளுக்கும் மின் இணைப்புக் கொடுப்பதற்கு தாங்கள் உத்தரவிட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள கடலாடி, வில்வாரணி, ஆதமங்கலம்புதூர் ஆகிய இடங்களில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு மாணவர் விடுதி கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 19] [திரு. எம். சுந்தரசாமி]

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தின் தலைநகரிலே ஏற்கெனவே பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு உணவு விடுதி கட்டினார்கள். அதை தாசில்தார் அலுவலகமாக எடுத்துக் கொண்டார்கள். எனவே அந்த இடத்திலே வாடகைக் கட்டிடத்திலே மாணவர்கள் தங்கி, தண்ணீர் வசதி மற்றும் இதர வசதிகள் இல்லாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள்.

பிற்பகல் 6-25

எனவே, அங்கே தாழ்த்தப்பட்ட மாணவர் விடுதி ஒன்று கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். என் தொகுதியில் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் இனத்தைச் சேர்ந்த விதவைகள் கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தி அல்லது காலையில் நம்முடைய முதலமைச்சரவர்கள் அறிவித்த பிரகாரம் கையால் செய்யப்படுகிற வத்திப்பெட்டி செய்கிற தொழிற்சாலை ஏற்படுத்தி அவர்களுடைய துயரைத் துடைக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

என் தொகுதியில் செங்கம் சட்டமன்ற உறுப்பினர் சொன்னதைப் போல ஜவ்வாது மலையில் என் தொகுதியைச் சார்ந்த ஒரு பஞ்சாயத்து இருக்கிறது. அதற்குக் கோவிலூர் என்று பெயர். அங்கே ஜமுனாமரத்தூர் பஞ்சாயத்து யூனியன் இருக்கிறது. அதுவும் என்னுடைய பஞ்சாயத்திலேதான் இருக்கிறது. அங்கே தான் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் இருக்கிறது. அங்கே என்னுடைய ஒரே பஞ்சாயத்தைச் சேர்ந்த 15 கிராமங்களுக்கு மேலே இருக்கின்றன. அந்த கிராம மக்கள் போளூர் நகருக்கு வந்துதான் அவர்களுடைய தேவைகளை, ஜவுளி மற்றும் காய்கறிகளை வாங்கிக் கொண்டு செல்ல வேண்டும். ஆனால் ஜமுனாமரத்தூரிலிருந்து போளூர் வருவதற்கு 42 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. அங்கே இடையில் இன்னும் ஆறு கிலோமீட்டர் தூரம் சாலை வசதி இல்லாத காரணத்தால் பஸ் வருவதற்கு வசதி இல்லாமல் இருக்கிறது. அங்கே சாலை வசதியை ஏற்படுத்தி, ஜமுனாமரத்தூரிலிருந்து போளூருக்கு பஸ் வசதி ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது அப்படி பஸ் வசதி இல்லாத காரணத்தால் வாணியம்பாடி சென்று, குடியாத்தம் வழியாக வேலூர் வந்து போளூருக்கு வருகிறார்கள், இதனால் சுமார் 150 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வளைத்துக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. எனவே, அந்தச் சாலையை உடனடியாக ஏற்படுத்தி ஜமுனாமரத்தூர் கிராமத்திற்கு பஸ் போக்குவரத்து விட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

[திரு. எம். சுந்தரசாமி] [1991 செப்டம்பர் 19

கடைசியாக, ஆதிதிராவிடர்கள் பல்வேறு வேலை
களில், சேர்வதற்கு யூ.பி.எஸ்.சி., யூனியன் பப்ளிக் சர்வீஸ்
கமிஷன், ஸ்டாப் செலக்ஷன் கமிஷன். தமிழ்நாடு
பப்ளிக் சர்விஸ் கமிஷன் ஆகிய போட்டித்
தேர்வுகளில் பெருமளவு தேர்வு பெறுவதற்கு சிறப்பு
பயிற்சி அளிப்பதற்கு தற்போது நெல்லை, திருச்சி, கோவை.
வேலூர் ஆகிய இடங்களில் மட்டும் பயிற்சி நிலையங்கள்
தாட்கோ உதவியுடன் செயல்பட்டு வருகின்றன. மதுரை,
தஞ்சாவூர், சேலம், கடலூர் ஆகிய இடங்களில் உடனடியாக
அந்த நிலையங்களை ஏற்படுத்துவதற்கு அறிக்கை அர
சாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த நான்கு
இடங்களிலும் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு உட
னடியாக உத்திரவிடவேண்டுமென்றும், மற்ற தலை
நகரங்களிலும் இம்மாதிரியான பயிற்சிப் பள்ளிகளை ஏற்
படுத்தவேண்டுமென்றும் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய மதிப்பிற்குரிய உறுப்பினர், அக்கா என்று
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அழைக்கப்பட்ட
திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களை நம்முடைய
பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியின் சேர்மெனாக நியமித்த
தற்கு தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பிலும், எங்கள் இயக்
கத்தின் சார்பிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு
என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி).

கடைசியாக, என்னுடைய தொகுதியில் 1947 ஆம்
ஆண்டிற்கு பிறகு, 44 ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முறை
யாக காங்கிரஸ் கட்சியில் வெற்றி பெற்று வந்திருக்கிற சட்ட
மன்ற உறுப்பினர் நான். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் எனக்கும், என் தொகுதியைச் சார்ந்த மக்களுக்கும்
தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், குறிப்பாக தாய்மார்களுக்கும்
அதிக உதவிகளைச் செய்யும்படி பணிவோடு கேட்டு அமர்
கிறேன்.

பிற்பகல் 6.30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ச. இராமச்
சந்திரன்.

* திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டோர்கள் பிரச்சினை என்பது
இன்று தேசியப் பிரச்சினையாக ஆகியுள்ளது. தாழ்த்தப்பட்ட
மக்கள் தாங்களும் உரிமையோடு வாழ வேண்டும். மனிதர்களாக
நடத்தப்பட வேண்டும் என்கிற தணியாத தாகத்தோடு இருக்
கிறார்கள். ஆனால், வழி வழி வந்த வர்ணாசிரம தர்மத்தின் கார
ணமாக, மேல் வகுப்பார் அதைப் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள்.
இதன் விளைவாக ஏற்படுகிற சமுதாய முரண்பாடு பல நேரங்
களிலே வன்முறையாக வடிவம் எடுப்பதை நாம் பார்க்கிறோம்.



1991 செப்டம்பர் 19] [திரு. ச. இராமச்சந்திரன்]

டெல்லி யுனிவர்சிட்டி, மெடிக்கல் காலேஜ் ஆப் சையின்சிலே
ராக்கிங் என்ற பெயரால் நடந்த கொடுமைகளை எதிர்த்து.
மாநிலங்களவை மற்றும் நாடாளுமன்றத்தைச் சேர்ந்த தாழ்த்தப்
பட்ட உறுப்பினர்களே, ஊர்வலம் போன காட்சியை நாம் பார்த்
தோம். மராட்டியத்திலே மழைக்காக கோயில் அருகிலே ஒதுங்கி
நின்ற காவலர், தாழ்த்தப்பட்டவர் என்ற காரணத்தால், அடித்
துக் கொல்லப்பட்டார் என்ற செய்தியைப் பார்த்தோம். ஆந்
திராவிலே சுண்டூர் என்ற கிராமத்தில், தாழ்த்தப்பட்ட மக்களது
படுகொலை இந்தியத் திருநாட்டையே உலுக்கியது என்பதையும்
நாம் அறிவோம். இவற்றை எல்லாம் பார்க்கிறபோது, தாழ்த்
தப்பட்ட மக்கள், தாங்கள் முன்னுக்கு வரவேண்டும் என்கிற உத்
வேகத்தில் ஈடுபடுகிறபோது, எத்தகைய எதிர்ப்புகளை அவர்கள்
சந்திக்க வேண்டியதாக இருக்கிறது என்பதை நம்மால் பார்க்க
முடிகிறது. ஆகவே இந்தப் பிரச்சினையின் ஆழத்தை உணர்ந்து
தான், இன்றைக்கு இந்தியப் பிரதமர் அவர்கள் கூட, எல்லா முத
லமைச்சர்களையும் அழைத்து, இதுபற்றிப் பேச வேண்டும் என்று
ஆசைப்படுகிறார்கள். நல்லவேளையாக நம்முடைய முதலமைச்
சரும் இங்கே இருக்கிற காரணத்தால், அத்தகைய மாநாட்டில்
சில நல்ல கருத்துக்களை தமிழ்நாட்டின் சார்பாக எடுத்து வைக்
கின்ற வாய்ப்பு நமக்கு இருக்கிறது.

குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சலுகை என்று அளிப்
பது வேறு, உரிமை என்று தருவது வேறு. 10 ரூபாயோ அல்லது
15 ரூபாயோ கையிலே கொடுத்து, நீ போய் சாப்பிட்டுவிட்டு வா
என்று சொன்னால், அது சலுகை, ஆனால் அவரோடு நாம் கை
கோர்த்துக் கொண்டு, இருவரும் ஒன்றாகச் சென்று சாப்பிட்டு
வருவோமானால் அது உரிமை.

அறிவு இயக்கத்தைப் பொறுத்தவரையில், தந்தைப் பெரியார்
அவர்கள் ஆனாலும், அறிஞர் அண்ணா அவர்கள் ஆனாலும்
தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமை வழங்குவதற்காக முயற்சியை
மேற்கொண்டார்கள். அந்த வழியிலே நாமும் இன்றையதினம்
அவர்களுக்கு சமத்துவம் என்கிற உரிமையை உருவாக்கித் தர
வேண்டும்.

தந்தைப் பெரியார் அவர்களும், மூதறிஞர் இராஜாஜி அவர்
களும், சமூகப் பிரச்சினையில் இருதுருவங்களாக இருந்தவர்கள்.
ஆனால் இரண்டு காரியங்களில் அவர்கள் இரண்டு பேர்களும் ஒத்த
கருத்தைக் கொண்டிருந்தார்கள். அது என்னவென்றால், ஒன்று
கலப்புத் திருமணம், இன்னொன்று, ஆங்கிலம் படிக்க வேண்டும்
என்பது. ராஜாஜி அவர்களானாலும், பெரியார் அவர்களானா
லும், ஆங்கிலத்தை நம்முடைய மக்கள் ஒரு மொழியாகப் படிக்க
வேண்டும் என்றும், உலக அறிவைப் பெற வேண்டும் என்றும்
விரும்பினார்கள். அதுபோல, கலப்புத் திருமணம் நிறைய நடை
பெற வேண்டும், அதுதான் சமத்துவத்திற்கு வழி வகுக்கும் என்று
இருபெரும் தலைவர்களும் விரும்பினார்கள். கலப்புத் திருமணம்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1991 செப்டம்பர் 19

செய்து கொண்டவர்களைக் கௌரவிப்பதை அரசு முன்னுரிமையாகக் கருதவேண்டும். அரசு வழங்குகிற சலுகைகளானாலும் சரி, திட்டங்களானாலும் சரி, அத்தகையோருக்கு எந்தெந்த வகையில் ஊக்கத்தைத் தரவேண்டுமோ, அதைத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தீண்டாமை என்கிற புற்றுநோயை ஒழிக்க வேண்டியது அவசியம். சமுதாய மாற்றத்தைக் காண்பதற்கு 3 தலைமுறைகள் ஆகின்றன என்று சமுதாய விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். சமுதாய மாற்றத்திலே தீண்டாமையை ஒழிப்பதற்கு என்னைப் பொறுத்த வரையில் நான் மூன்று காரண காரியங்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். ஒன்று, அவர்கள் எல்லோருக்கும் படிப்பு வேண்டும், படித்த பிறகு வேலைக்கு உத்தரவாதம் வேண்டும். படித்து வேலை பெற்று, அதற்குப் பிறகு, நகரிய வாழ்க்கையில் அவர்கள் ஈடுபடுத்தப்படுவார்களானால், தீண்டாமை எனும் நோயிலிருந்து தப்பிப்பதற்கு ஒரு வழி உண்டு.

போக்குவரத்துத் துறை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டு இருந்த நேரத்திலே, படித்த, தாழ்த்தப்பட்ட அத்தனை பேர்களுக்கும் வேலை தர வேண்டும் என்று ஒரு முயற்சியை எடுத்து, குறிப்பாக மதுரையிலே, டி.வி.எஸ்.சை தேசியமயமாக்கி, பாண்டியன் போக்குவரத்துக் கழகம் உருவாகியபோது, அதிலே தாழ்த்தப்பட்டோர்கள் நூற்றுக்கு 18 என்கிற விழுக்காடு இல்லை என்பதை உணர்ந்து, அந்த 18 விழுக்காடு வருகின்றவரையில் அத்தனை படித்த இளைஞர்களும் வேலை பெற வேண்டும் என்று ஒரு முயற்சியை எடுத்தோம். அதன் விளைவாக, எம்.ஏ. படித்தவர்கள், பி.ஏ. படித்தவர்கள் எல்லாம் ஈடுபடுத்தப்பட்டனர். ஏனெனில் படித்துவிட்டு, தங்களுடைய குடியிருப்புகளுக்குத் திரும்பச் செல்லுகிறபோது, கரும்புக் காட்டிலே தண்ணீர் கட்டவும், வயல் வெளிகளிலே களை எடுக்கவுமாக இப்படித்தான் வாழ்க்கையை நடத்த வேண்டிய சூழ்நிலையில் உள்ளனர். ஆகவே, அவர்களுக்கு ஒரு விரக்தி ஏற்படுகிறது. அவர்களை எல்லாம் நாம் முழுக்கமுழுக்க வேலையிலே ஈடுபடுத்துகிறபோது, அவர்கள், இந்தச் சமுதாயக் கொடுமைகளிலேயிருந்து நீங்குவதற்கு அது வழிவகை செய்கிறது என்பதை அனுபவப்பூர்வமாக பார்த்திருக்கிறோம்.

படித்துப் பட்டம் பெற்று, ஒரு தாசில்தாராகவோ, அல்லது சப்-இன்ஸ்பெக்டராகவோ வருகிறார் என்று சொன்னால், அவருக்கு சமுதாயத்திலே நிச்சயமாக மதிப்பு உண்டு. நாங்கள்கூட வேடிக்கையாகச் சொல்வது உண்டு. தீண்டாமை, தீண்டாமை என்று சொல்கிறார்கள், ஆனால் தீண்டத்தகாதவர்கள் படித்து, பட்டம் பெற்றவர்கள் கண்டக்டராக ஆகிவிட்டால், அவரிடத்திலே டிக்கெட்டைப் பெறாமலேயே பயணம் செய்வதற்கு யாரால் முடியும் என்று. ஆகையினாலே, படிப்பு, படித்த பிறகு வேலை.



1991 செப்டம்பர் 19] [திரு. ச. இராமச்சந்திரன்]

அப்படி வேலை பெறுகின்றவர்களுக்கு நகரிய வாழ்க்கை என்று அமைகிறபோது, தீண்டாமை என்கிற நோயிலிருந்து அவர்களை காப்பாற்றுவதற்கு ஒரு வழி பிறக்கிறது.

எனக்கு முன்பு பேசிய நம்முடைய இந்திரா காங்கிரசைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன் என்று நினைக்கிறேன், அவர்கள் முன்னாள் முதலமைச்சரைப் பற்றிப் பேசுகிறபோது, ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி, அதற்கு என்னை சாட்சியாக வைத்தார்கள். அப்படிச் சொல்கிறபோது, நான் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தேன் என்று சொன்னார்கள். நான் அப்போது போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தேன். அண்ணா மேம்பாலம் கட்டியதோ, அதிலே என்னென்ன நடந்ததோ என்ற விவரங்கள் எனக்குத் தெரியாது.

பிற்பகல் 6-35

ஆகையினால் என்னைப்போய் அந்த வம்பிலே அவர்கள் இழுத்து வைக்க வேண்டாம் என்று தங்கள் சார்பாக நான் இந்த நேரத்திலே பணிவன்போடு அவருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

போக்குவரத்துத் துறை மட்டும்தான் பார்த்தேன். அதற்குப் பிறகு அதிலே எங்களுக்கு கருத்து வேறுபாடுகள் வந்த பிறகு உள்ளாட்சித் துறையை எனக்குத் தந்தார்கள். ஆகையினாலே, பொதுப்பணித் துறையிலே என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனாலும் இந்த தாழ்த்தப்பட்டோர் நலத் துறையிலே இன்னும் இரண்டு காரியங்கள் முக்கியமாக மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது. மறைந்த புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. வீட்டுமனைப் பட்டா வேண்டுமென்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, அந்தச் சட்டத்தை 4 (1) நோடிபிகேஷனில் போட்டாலே அந்த இடம் நமக்கு சொந்தமாகிவிடுகிறது. ஈட்டுத் தொகை அதிகம் கேட்டு வேண்டுமானால், நில உடைமையாளர்கள் வழக்கு மன்றங்களுக்குச் செல்லலாமேயொழிய நிலம் வேண்டும் என்று வழக்கு மன்றத்திற்குச் செல்லக் கூடாது என்பதே அந்தச் சட்டம். ஆனால் அந்தச் சட்டம் உயர்நீதிமன்றத்திலே அடிப்பட்டுப்போயிற்று என்று அறிகின்றேன். அதற்கு என்ன காரணம் என்பதைப்பார்த்து, அதை நிவர்த்தி செய்து, தேவைப் பட்டால் இந்திய அரசியல் சட்டத்தையே திருத்துவதற்குக்கூட மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கூட்டுகிற கூட்டத்திலே வற்புறுத்தலாம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல பொது நோக்கத்திற்காக என்கிற அளவிலே அந்தச் சட்டம் திருத்தப்படுமேயானால், அரசியல் சட்டத்திலே அதற்கு வழிவகை ஏற்படுமானால் நிச்சயமாக வீட்டு மனைப் பட்டா பெறுவதற்கு எளிதிலே அவர்களுக்கு வழி பிறக்கும்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1991 செப்டம்பர் 19

இன்னொன்று முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது, நிலத்திலே பெரும்பாலோர் தாழ்த்தப்பட்ட மக்கள் வேலை செய்கிறார்கள். அந்த நிலத்தை வாங்குவதற்கு அவர்களுக்கு கடன வசதி எங்கும் கிடைப்பதில்லை. கூட்டுறவிலே கூட மற்ற காரண காரியங்களுக்காக தருவார்களே தவிர, அந்த நிலத்தை வாங்குவதற்கு அவர்களுக்குப் பணம் கிடைப்பதில்லை. ஆகவே அந்த குறைந்த வட்டியில் அல்லது வட்டியில்லாத கடனாக தாழ்த்தப்பட்ட மக்கள், தாங்கள் உழைக்கின்ற நிலத்தை, அந்த நில முதலாளிகளிடத்திலிருந்தோ, அல்லது நிலப் பிரமுகர்களிடத்திலிருந்தோ அவர் விற்கப்போகிறார் என்றால், அதை தவணை முறையில் வாங்குவதற்கு வங்கிகளிலே அவர்களுக்குக் கடன் கொடுக்கக் கூடிய ஒரு உரிமையைப் பெற்றுத் தருவதற்கு இந்திய அரசை தமிழ்நாடு அரசு வற்புறுத்த வேண்டும். பொருளாதார வலிமையும் அவர்களுக்கு ஏற்படுத்தி, சமுதாய மாற்றத்திற்கும் வழிவகை காணப்படுமேயானால் நாம் எதிர்பார்க்கின்ற சமுதாயத்தில் ஏற்படுகின்ற சமத்துவம், சண்டை இல்லாமல் சமாதான முறையில் வருவதற்கு சாத்தியக் கூறுகள் உண்டு என்று கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கா. சின்னசாமி.

திரு. கா. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியக் கோரிக்கையில் இந்த மாமன்றத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த நமது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய சேந்தமங்கலம் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழங்குடியின மக்கள் சேலம் மாவட்டத்தில் கொல்லிமலை போத மலை, பால மலை, ஏற்காடுப் பகுதியிலே, தென்னார்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலைப் பகுதியில், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் ஜவ்வாது மலைப் பகுதியில், திருச்சி மாவட்டத்தில் பச்சைமலைப் பகுதியில், தர்மபுரி மாவட்டத்தில் சித்தேரி மலை, வத்தல் மலைப் பகுதியில், பெரியார் மாவட்டத்தில் காளிமலைப் பகுதியில், இன்னும் பல இடங்களில் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் எல்லாம் விவசாயத் தொழிலை நம்பியே வாழ்ந்து வருகின்றனர்.

மேலும் மாநில அரசு பழங்குடியினருக்கு வேலை வாய்ப்பில் ஒரு சதவீதம் என்று ஒதுக்கியுள்ளது. மத்திய அரசு பழங்குடியினருக்கு 7½ சதவீதம் ஒதுக்கியுள்ளது. மத்திய அரசு வழங்குவதைப்போல் மாநில அரசும் வழங்க வேண்டுமென்று தாழ்ந்த பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



1991 செப்டம்பர் 19] [திரு. கா. சின்னசாமி]

தமிழகத்தில் பழங்குடியினருக்கான மூன்று சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. இந்த மூன்று சட்டமன்றத் தொகுதி பழங்குடியின மக்கள் புரட்சித் தலைவருக்குப் பின்னால், நமது மாண்புமிகு புரட்சித் தலைவி பக்கம் உள்ளனர் என்று நிருபித்துக் காட்டியுள்ளார்கள். இந்த அடிப்படையின் காரணமாகத்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இந்த பழங்குடியின மக்களுக்கு அடிப்படை வசதிகள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டு அவர்கள் வாழ்க்கையில் முன்னேற முடியாமல் இன்றைக்கு அவர்கள் பின்தங்கிய நிலையில் உள்ளனர். இந்தப் பழங்குடியின மக்கள் வாழ்க்கையில் முன்னேறவும், அவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் விளங்கவும், நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், அவர்களுக்கு நல்ல பல திட்டங்களையெல்லாம் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் பழங்குடியினத்தவரில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., உயர் பதவியில் ஒருவர்கூட இல்லை என்பதிலிருந்து இந்த இனத்தவர் இன்னும் பின்தங்கிய நிலையில் உள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பழங்குடியின மக்கள் மலைப் பகுதியில் வசிப்பதால் அவர்களுக்கு சாலை வசதி, மின் வசதி, கல்வி வசதி, பேருந்து வசதி, குடிநீர் வசதிகள் எல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-40

மேலும் மலைப்பகுதியில் உள்ள கிராமங்களுக்கு இடையில் ரிசர்வ் பாரஸ்ட் உள்ளது. அதனால் அந்த மக்களுக்கு சாலை வசதி செய்யும் திட்டம் பாதிக்கப்படுகிறது. அங்கு வாழும் பழங்குடியினர் அங்கு விளையும் பொருட்களை 20 கிலோ மீட்டர், 30 கிலோ மீட்டர் தலையிலே சுமந்து கொண்டு விற்பனை செய்துதான் வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற நிலை உள்ளது. மேலும் அந்த மக்களுக்கு உடல் நிலை சரியில்லாமல் போனாலோ அல்லது தாய்மார்களின் பிரசவத்தின்போதோ, அவர்கள் கஷ்டப்படுகிறபோது அவர்களை தொட்டியில் கட்டி தூக்கிக் கொண்டு போகிற நிலைமை உள்ளது. அப்படி அவர்களை தூக்கிக் கொண்டு செல்லும்போது அவர்கள் பாதி வழியிலேயே இறந்து விடுகிறார்கள். இந்த அவல நிலையையெல்லாம் போக்கவும் அந்த ஏழை எளிய மக்களை காப்பாற்றவும், இந்த ரிசர்வ் பாரெஸ்ட் வழியாக சாலை வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பெரியார் மாவட்டத்தில் சத்தியமங்கலம் வட்டத்தில் காளி மலைப் பகுதியில் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றார்கள். அங்கு வாழும் பழங்குடியினருக்கு அரசு வழங்கும் நல்ல திட்டங்களையெல்லாம் அதிகாரிகள் வழங்குவதற்கு மறுக்கிறார்கள்,

அந்த மலைவாழ் மக்களுக்கு அரசு வழங்கும் திட்டங்களையும், சலுகைகளையும் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே தாழ்மையோடு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். பழங்குடியினர் வாழ்ந்து வரும் பகுதிகளில் அவர்கள் அனுபவித்து வரும் நிலங்களை பிற இனத்தவர்கள் வாங்குவதை சட்ட ரீதியாக தடை படுத்த வேண்டும். இல்லை என்றால் அவர்கள் நிலங்களை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். மேலும் பழங்குடியினர் வாழும் மலைப்பகுதிகளில் உள்ள மரங்களை பெர்மிட் மூலம் கள்ளத்தனமாக வெட்டிச் செல்லுகிறார்கள். இதனால் இயற்கை சூழ்நிலை பாதிக்கப்படு கின்றது. அதனால் அந்தப் பகுதியில் வறட்சியான நிலைமை ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆகவே கள்ளத்தனமாக மரங்களை வெட்டுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பழங்குடியினர் வாழும் பகுதிகளை முழு வதுமாக நிர்ணயம் செய்து அரசாங்கப் பதிவேடுகளில் வெளியிட வேண்டும். அதுபோலச் செய்வதன் மூலம் அம்மக்களை பிற இனத்தவர்கள் சுரண்டுவதிலிருந்து விடுவிக்கவும், அம்மக்களின் கலாச்சார தன்மைகளை பேணி காக்கவும் வகை செய்யப்படும். இதுபோன்ற திட்டங்கள் வட மாநிலங்களிலே வாழும் மலை ஜாதி மக்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அதேபோல தமிழகத் திலே கொண்டு வர வேண்டுமென்று முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் பழங்குடி மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையாக இருந்து வரும் நாமகிரிப் பேட்டை ஒன்றியத்தில் முள்ளுக் குறிச்சியிலிருந்து பூசணிக்குழி வழியாக நரியன்காடு வரையில் கொல்லி மலைக்கு பழங்குடியினர் வளர்ச்சி நிதியிலிருந்து புதிய சாலை வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் கொல்லி மலையில் ராசிபுரம் இடத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்கப்படாமல் உள்ளது. அவற்றிற்கு மின் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். பழங்குடியினருக்கு கொல்லி மலையில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை விடுதி செம்மேடு, செங்கரை, முள்ளுக்குறிச்சி போன்ற இடங்களில் உள்ளது. மேலும் செம்மேட்டில் உள்ள விடுதியில் 20 ஆண்டுகளுக்கு முன்ப 120 மாணவர்களுக்கு அனுமதி அளித்திருந்தார்கள். அப்போது அந்தப் பள்ளியில் 300 மாணவர்கள் மட்டும் படித்து வந்தார்கள். இப்பொழுது அந்தப் பள்ளியில் 2,500 மாணவர்கள் பயின்று வருகிறார்கள் இப்போதும் அந்த இடத்தில் 120 மாணவர்கள் தான் தங்கி படிக்க அனுமதித்துள்ளார்கள். ஆகவே அந்த நிலையை மாற்றி இன்னும் அதிகமான பழங்குடி மாணவர்கள் தங்கி படிக்க உத்தரவு வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வே. பெரியசாமி

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி நலத் துறையின் மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளை முடியாய் வைத்து, திருத்தக்க தேவரின் சிந்தாமணி அணிந்து, பேர் நிலவளா இளங்கோவின் சிலம்பணிந்து, சீத்தலைச் சாத்தனாரின் மேகலை அணிந்து, காதிலே குண்டலமாட, கைகளிலே வளையொலி குலுங்க, விரல்களிலே மோதிரம் மின்ன, சங்க நூல்களான பெருந் தொகையும், பத்துப்பாட்டும், பதினெண்கீழ்க்கணக்கும், கோவையும், நாலடியும் தங்க நகைகளாக மின்ன அகமும், புறமும் அழகுருவாக வீற்று அரசாண்டு கொண்டிருந்த தமிழ்த் தாய் இடைக்கால பதவியிலே அழகிழந்து, ஒளியிழந்து, ஆற்ற லிழந்து, சக்தியிழந்து, மண்ணிலே மண்டியிட்டிருந்த நேரத்திலே தான் என்னுடைய தானைத்தலைவி, தங்கத் தலைவி, தமிழ்த் தாயாக இங்கு தோன்றியதற்கு பின்னாலேதான் (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-45

ஆங்கிலப் பள்ளியானாலும் சரி, எந்தப் பள்ளியானாலும் சரி, தமிழைப் படித்தே ஆகவேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வந்த என் தாயை வணங்கி என் உரையை ஆரம்பிக்கின்றேன். பெரியவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்த நான் இன்றைக்கு ஆசிரியர் தொழிலிலிருந்து வாலண்டரி ரிடையர்மெண்ட் என்று சொல்வார்களே, தன்னிச்சையாக பணி யைவிட்டு நீங்கி இரண்டாவது முறையாக இந்த இடத்திலே அமரச் செய்து, அங்கே அருமைச் சகோதரர் சொன்னார்களே, தாயைப்பார்க்க வேண்டும் என்று ஏங்கித் தவித்தவர்களில் யானும் ஒருவன். எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள், புரட்சித் தலைவர் அவர்கள் இறந்த மறுநாள் கயவர்களால் காலாலே மிதித்து தள்ளிய நேரத்திலே, நான் மறுநாள் தலைவி அவர்களைப் பார்க்க வேண்டும் என்று அவரது இல்லத்திற்குச் சென்றேன். அங்கே கதவைத் தட்டிய நேரத்திலே திறக்க முடியாது என்று சொன்னார்கள். அழுதேன், புலம்பினேன். உடனே நீ யாரைய்யா என்று கேட்டார்கள். நான் ஒரு ஒன்றியத்தினு டைய செயலாளர் என்று பொய் சொன்னேன். (சிரிப்பு) நான் அப்போது அரசுப் பணியிலே இருந்த காரணத்தினால் அவ்வாறு சொன்னேன். எழுதிக் கொண்டு போனார்கள். என்னை உள்ளே வருவதற்கு அழைத்தார்கள். சென்றேன் காலிலே விழுந்து அழுதேன். புரட்சித் தலைவி அவர்கள் அப்போது என்னைப் பார்த்துச் சொன்னார்கள். அழ வேண்டாம் என்று சொன்னார்கள். அம்மா எங்களைக் காப்பாற்றிய அந்த உலக மேதை இன்றைக்கு இல்லை. மனிதருள் மாணிக்க மான வங்கக் கடற்கரையிலே இன்றைக்கு அமர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் தலைவர் இன்றைக்கு இல்லை. நீங்கள் தான் எங்களுடைய தலைவர். நீங்கள்

தான் எங்களுடைய பொதுச் செயலாளர்; நீங்கள் தான் எங்களுடைய முதலமைச்சர் என்று அன்றைக்கே நான் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் சொன்னார்கள். இன்னும் 7 நாட்கள் வரை யாரும் எதுவும் சொல்ல வேண்டாம். தலைவருடைய படத்திற்கு கிருஸ்துவராக இருந்தால் மெழுகு வர்த்தியைப் பொருத்துங்கள். இந்துக்களாக இருந்தால் சாம்பிராணி தூபம் காட்டுங்கள் என்று சொன்வார்கள். அந்த உத்தம தலைவி அவர்கள் இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிறார்கள். அவர்கள் முன்னாலே நின்று பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்த பேற்றினை காலம் உள்ள வரை கடல் அலைகள் ஓயும் வரை என்னால் மறக்க முடியாது.

பெரியோர்களே, இப்போது தலைவி அவர்களைப் பற்றி அதிக நேரம் பேசிவிட்ட காரணத்தினால், மணியடித்து விடுவார்கள். அதனால் துறையைப் பற்றி வருகிறேன். (சிரிப்பு) நான் நெல்லையிலே சிதம்பரனார் மாவட்டத்திலே பிறந்தவன். 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளர், விடுதலை வீரர், பகுத்தறிவு பகலவன், தந்தை பெரியார் பிறந்த மண்ணில் நான் சட்டமன்ற உறுப்பினராக அந்தியூர் தொகுதியிலே இருக்கிறேன். நான் எவ்வாறு சட்டமன்ற உறுப்பினரானேன் என்று சொன்னால், நான் ஒரு ஆசிரியராக இருந்த காரணத்தினாலும், என் மனைவி ஒரு ஆசிரியையாக இருந்த காரணத்தினாலும், கல்வி கேள்வியிலே சிறந்தவனாக இருந்த காரணத்தினால் தான் நான் அவ்வாறு வர முடிந்தது. நான் மட்டும் அல்லாமல் என் மகள் தமிழரசி, தமிழ்ச் செல்வி, தமிழ் வாணி, தமிழ் மணியம்மை, தமிழ் பாரதிராஜன் எல்லோரும் இன்றைக்கு அறிவாளிகளாக (சிரிப்பு) டாக்டர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கெல்லாம் காரணம் நாம் கற்ற கல்வி தான் மெய்யின் காரணம். ஆகவே தான் நீங்கள் என்ன தான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு செய்தாலும், செய்யாவிட்டாலும், கல்வியிலே அந்த மக்களை மேம்பாடு அடையச் செய்வதற்கு இன்னும் பல கோடி ரூபாய்களை செலவு செய்யுங்கள் என்று இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். பல கிராமங்களிலிருந்து குழந்தைகள் விடுதிகளிலே வந்து சேர்வதற்கு, ஐந்தாம் வகுப்பு படித்து முடித்தவர்கள் வருகிறார்கள். வருகின்ற நேரத்தில், அந்த மாணவர்கள் உயர்நிலைப் பள்ளியிலே போய்ச் சேர்கின்றபோது கிராமத்திலே உள்ள கல்வி எப்படி இருக்கும் என்று உங்களுக்கு, கடந்த கால படிப்பு பற்றியெல்லாம் உங்களுக்குத் தெரியும். அங்கேயிருந்து வருகின்ற குழந்தைகள் கல்விக் கூடங்களிலே போய்ச் சேர்கின்றபோது அந்த ஆசிரியர்கள் அந்த டவுனிலே உள்ள குழந்தைகளுக்கேற்றவாறு கல்வியைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இன்றைக்கு சொல்லிக் கொடுத்த பாடத்தை மறுநாளைக்கு கற்றாக வேண்டும். ஆகவே, பையன் படிக்க முடியாமல், ஹாஸ்டலிலே சாப்பாடு சரியில்லை என்று சொல்லி விட்டு வீட்டிற்கு போய் விடுகிறான். தாய்மார்கள்



பெற்ற குழந்தைகள் அல்லவா. ஆகவே நீ போக வேண்டாம் ஹாஸ்டல் சாப்பாடு உனக்கு பிடிக்கவில்லை என்று சொல்லி வீட்டிலே வைத்துக் கொள்கின்றார்கள். அறியாமையின் காரணத்தினால் வறுமை காரணமாக இருந்தாலும் கூட பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதற்கு மறுக்கிறார்கள். ஆகவே, கட்டாயக் கல்வித் திட்டத்தினை இன்னும் ஏறத்தாழ 10 ஆண்டு காலத்திற்காவது கொண்டு வந்து பெற்றோருடைய முகத்தைக் கூட பையன் பார்க்கக் கூடாது. ஐந்து வயது முடிந்து விட்டால் ஒன்றாம் வகுப்பிலிருந்து குறைந்த பட்சம் பத்தாவது வகுப்பு வரை ஒரு இடத்திலே சேர்த்து அவனுக்கு கட்டாயக் கல்வித் திட்டத்தை கொண்டு வந்து படிக்க வைத்து, பிறகு படிக்க வைத்ததற்குப் பின்னாலே வேலை வாய்ப்புக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 6-50)

பல்வேறு வகையான தொழில்களுக்கு பயிற்சிக் கொடுத்து தாழ்த்தப்பட்ட மக்கள் மேம்பாடு அடைய செய்ய நான் வணங்கும் கடவுள் இன்றைக்கு ஏற்பாடு செய்து இருக்கிறார்கள். பள்ளிகளுக்கு நூல் நிலையம் வேண்டுமென்று கேட்டார்கள். இங்கே இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்தில் இருக்கிறது, அதைப் படிக்கவில்லை போல் தெரிகிறது. நூல் நிலையம் கொடுத்து இருக்கிறார்கள். ஏராளமான தேவைகளை கடந்த ஆட்சியில் இல்லாத அளவுக்கு இன்றைக்கு செய்திருக்கிறார்கள். நான் கூட விடுதிகள் பற்றி எதுவும் இதில் இல்லையோ என்று நினைத்தேன். 40 விடுதிகளைக் கொடுத்து இருக்கிறார்கள். அவைகளை எல்லாம் பாராட்டுவதற்கு நமக்கு மனது வேண்டும்.

இங்கே மாண்புமிகு கம்யூனிஸ்டு தலைவர் அவர்கள் பேசுகின்றபோது ஏதோ ஒரு கோடிக்கு போகிறது என்று சொன்னார்கள். மக்களுடைய உள்ளத்திலே பதிந்து தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றைக்கு அதிகமாக பலன் அடைந்து இருக்கிறார்கள் என்று சொன்னால் இந்த துறையில் ஒன்று தான் மேம்பாடு அடைய முடியும். வேறு எந்தத்துறையிலும் முடியாது. ஆகவே, கல்வி வளர்ச்சிக்கு இதய தெய்வம் அவர்கள் ஏராளமான தொகையை ஒதுக்க வேண்டும். அந்தக் கல்வியிலே அவர்கள் மேம்பாடு அடைந்து விட்டால் தானாகவே எல்லாமே வரும்.

ஜாதி என்று சொன்னார்கள். ஜாதி வெறி வரும் என்று சொன்னார்கள். ஜாதியின் காரணமாக வீடு கொடுப்பது இல்லை என்று சொன்னார்கள். கொடுப்பார்கள், சுத்தமாக இருக்க வேண்டும். கல்வியிலே மேம்பாடு அடைந்து இருக்க வேண்டும். நல்ல உயர்ந்த நிலைக்கு வந்திருக்க வேண்டும்

சமமாக இருந்தால் கொடுப்பார்கள். சிலயிடங்களிலே நம்முடைய தோற்றம், சாப்பாடு ஒன்றையே பிரதானமாக நினைப்பது, உணவு ஒன்றையே பிரதானமாக நினைப்பது. இவைகளை எல்லாம் மாற்றி பட்டினி இருந்தால் அதைக் கூட பார்க்காமல் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்று தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் எண்ண வேண்டும். அப்படி எண்ணி கல்வியில் மேம்பாடு அடைந்து விட்டால் அவர்கள் சரியான முறையில் வளர்ச்சி அடைய முடியும்.

அதேபோல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இரண்டாவது, இருக்க இடம் வேண்டும். நில ஆர்ஜிதம் சிலயிடங்களில், செய்கிறபோது நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்கு சென்று விடுகிறார்கள். அவைகளைத் தடுப்பதற்காக நம்முடைய இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் தலைமையின் கீழ் ஒரு பெரிய உயர்மட்டக் குழு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அம்மா அவர்கள், நம்முடைய மரியாதைக்குரிய சீஃப் செகரட்டரி அவர்கள், பல்வேறு வகையான அதிகாரிகள் சேர்ந்து பல குழுக்கள் இருக்கின்றன. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை அமைத்து இருக்கிறார்கள். அந்த நிலச் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குப் போகாதபடி அந்த ஏரியாவினுடைய விலையைக் கொடுத்து அந்த நிலத்தை உடனடியாக கையகப்படுத்த வேண்டும்.

நம்முடைய அண்ணன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லும்போது 6 ஆண்டுகள், 7 ஆண்டுகள் எந்த நல்ல காரியத்திற்கு நிலங்களை கையகப்படுத்த வேண்டுமென்று நினைக்கிறோமோ அப்படி போகின்றபோது நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குப் போய் தடைக் கற்களாக இருந்து தடையை வாங்கி விடுகிறார்கள். அவைகளைத் தவிர்க்க வேண்டும். அதற்காக இந்த கமிட்டி மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்..

அதேபோல் ஐ.ஆர்.டி.பி. லோன் கொடுக்கின்ற போது அந்த மக்களுக்கு வங்கிக்காரர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். பாதித் தொகையை மட்டும் சப்சிடியாக கொடுக்கிறார்கள். அந்தப் பாதித் தொகையை மட்டும் பெற்றுக் கொள்ளுங்கள். மீதித் தொகையை உங்களுக்கு கொடுக்கப் போவது இல்லை என்று சொல்லுகிறார்கள். எந்தக் காரணத்திற்காக மைய, மாநில அரசுகள் இந்தக் கடனை வழங்குகிறார்களோ அவை களுக்குப் போய் முறையாக சேரவில்லை. ஆகவே, அவைகள் முறையாகப் போய் சேருவதற்கு தயவுசெய்து கடந்த 2 ஆண்டு களில் ஐ.ஆர்.டி.பி. லோன் வாங்கியவர்கள் எங்காவது பயன் பெற்று இருக்கிறார்களா என்று சொல்லி நீங்கள் கமிட்டி போட்டு பார்ப்பீர்களானால் ஒரு பயனும் அதனால் ஏற்பட வில்லை என்று தெரியும். ஆகவே, இப்படிப்பட்ட கடன்கள் வழங்க



வேண்டிய அவசியமே இல்லை. அந்த மக்களை கடன்காரர்களாக ஆக்கியோரோ ஒரு சிலர் தரகர்களாக இடையில் புகுந்து கொண்டு செய்கிறார்கள். அந்த நிலையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜீவன்தாரா திட்டம் என்று சொல்லி 28 ஆயிரம் ரூபாய் வரை கிணறு வெட்டுவதற்கு கடன் கொடுத்தார்கள். (மணி யடிக்கப் பெற்றது).

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பான முறையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் சலுகை இருக்கிறது. கொஞ்சம் அதை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு).

ஐ.ஏ.எஸ். பதவிகளை 25 சதவீதம் உயர்த்திக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற நிலையில் உள்ள அதிகாரிகளுக்கான தகுதிகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருந்தும் கூட சரியான முறையிலே, நல்ல முறையில் பார்த்து அவர்களுக்கு அந்தப்பதவிகளைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். அதேபோல் கலெக்டர் பதவிக்கு தகுதி இருந்தால் கூட உடனே அவர்களுக்கு விரைவில் அந்தப் பதவிகளைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் ஏ.பி.பி., பி.பி., ஜி.பி.. போன்ற பதவிகளையும் கொடுக்க அந்த தாழ்த் தப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டு இன்னும் நிறைய பேசவேண்டும் என்று இருந்தேன், நேரம் இல்லாததால் வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

(பிற்பகல் 6-55)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. ரவிக்குமார்.

*திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி எனது உரையைத் தொடங்குகிறேன். பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடர் நலத்திட்டத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 10 அம்சத் திட்டத்தின் மூலம் அடி மட்டத்தில் வாழ்கின்ற ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு பல்வேறு அடிப்படைத் திட்டங்களை அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களுக்கு நன்றியைத் தெரிவித் துக் கொள்கிறேன். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு

தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு 16,500 ரூபாய் அரசால் வழங்கப்படுகிறது. அந்தத் தொகை செங்கல் மற்றும் கட்டுமானப் பொருட்கள் வாங்குவதற்குப் போதுமானதாக இல்லை. அந்தத் தொகையில் நல்ல தரமான வீடுகள் கட்ட முடியாத நிலை ஏற்படுகின்றது. எனவே, அந்தத் தொகையை உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே போல ஒவ்வொரு கிராமத்திற்கும் குறைந்தபட்சம் 20 வீடுகளுக்கு மட்டுந்தான் கட்டுவதற்கு அனுமதி அளிக்கிறார்கள். இதை மாற்றி குறைந்தது ஒரு கிராமத்திற்கு 50 வீடுகளாவது கட்டு வதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, பழுதடைந்த வீடுகள், பாதியிலே நிற்கின்ற வீடுகள் அனைத்தையும் சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் களுடைய வீடுகளுக்கு மின்சார இணைப்பும் தரப்பட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல இருக்கின்ற வீட்டை பிரித்துவிட்ட பிறகுதான் அவைகளைக் கட்டவேண்டு மென்று ஆணையாளர் கட்டளையிடுகிறார். அதை மாற்றி தொகுப்பு வீடுகளைக் கட்டிய பின்னர்தான் பழைய வீடுகளை பிரிக்க ஆவன செய்ய வேண்டுகிறேன். அதேபோல அரசாங்கத் தில், ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி., தாட்கோ என்று எத்தனையோ திட்டங்கள் இருந்தும் இவை ஏழை ஆதி திராவிட மக்களை சென்று அடையவில்லை. அவை உரிய முறையில் சென்று அடைவதற்கு ஆவன செய்ய வேண்டுகிறேன். அதேபோல, ஆதிதிராவிடர்களுக்கு அத்தியாவசியமானது சுடு காட்டுப் பிரச்சினை. பல இடங்களில் சுடுகாடு இருந்தால் நடைபாதை இல்லை. நடைபாதை இருந்தால் சுடுகாடு கிடை யாது. இந்த நிலையை மாற்றுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன். என்னுடைய பொன்னேரி தொகுதியில், பள்ளிபுரம், உப்பளம், காவல்பட்டி போன்ற கிராமங்களில் ஆதிதிராவிட நலப் பள்ளி களுக்கு கட்டிடங்களைக் கட்ட வேண்டுமாய் கேட்டுக் கொள் கிறேன்.

ஆதிதிராவிட மக்கள் சொந்தமாகத் தொழில் தொடங்க வங்கிகள் கடன் கொடுக்க மறுக்கின்றன. மனுக்கள் கொடுத் தால் அதை பரிசீலனை செய்யாமல் தள்ளுபடி செய்து விடுகிறார் கள். அதேபோல் அரசாங்கத்தால் கொடுக்கப்படுகின்ற அனைத்து சலுகைகளும் ஒரே பக்கத்தில் உள்ளவர்களுக்கு மட்டுந் தான் கிடைக்கிறது. மறுபக்கத்தில் உள்ளவர்களுக்குக் கிடைப்ப தில்லை. டாக்டர் ஒருவர் இருந்தால் அவர் வீட்டில் இருக்கிற 4 பேர்களும் டாக்டர்களாக இருக்கிறார்கள். என்ஜினியராக இருந்தால் அவர்கள் வீட்டிலே இருக்கிற அத்தனை பேர்களும் என்ஜினியர்களாக இருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றி, அனைத்து தரப்பினரும் பயன்பெறுகின்ற வகையில் புதிய சட்டங் களைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல , சட்டம் படித்த ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த இளம் வழக்கறிஞர்கள் 20 பேரை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு



சீனியர் வழக்கறிஞர்கள் மூலம் பயிற்சி அளிக்கிறார்கள் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 500 உதவித் தொகையாக வழங்கு கிறார்கள். இதை உயர்த்தி மாதம் ரூபாய் ஆயிரமாக தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, ஆதி திராவிட நலத்துறையிலே மக்களுக்கு வீடு கட்டுவதற்காக தனியார் நிலங்கலை ஆர்ஜிதம் செய்யும்போது அந்த நிலங்களின் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குச் செல்கிறார்கள். அப்படி கோர்ட்டுக்குச் செல்கிற காரணத்தால் பல ஆண்டுகள் கால தாமதம் ஆகிறது. இவற்றைத் தடுக்க அரசு சட்டம் இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் ஆதி திராவிட மக்களில் பெரும்பாலானவர்கள் விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள். இந்த விவசாயக் கூலிகளாக இருக்கின்ற மக்களை, சொந்த நிலம் உள்ள விவசாயிகளாக மாற்று கின்ற வகையில் பினாமி பெயர்களில் நிலங்களை வைத்து இருக் கின்ற நிலப்பிரபுக்களிடமிருந்து நிலங்களை அரசாங்கம் கைப் பற்றி அதை விவசாயக் கூலிகளாக இருக்கின்ற ஏழை ஆதி திராவிடர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அதேபோல, பட்டா வழங்கும்போது, நத்தம் புறம் போக்கு, குட்டைப் புறம்போக்கு, கால்வாய்ப் புறம்போக்கு என்று வேறுபாடின்றி 20 ஆண்டுகளாக வசிக்கின்ற அனைவருக்கும் பட்டா வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனது பொன்னேரி தொகுதியில் அமைந் துள்ள விடுதிகளில் கதவுகள். ஜன்னல்கள் அனைத்தும் பழு தடைந்துள்ளன. இவற்றை மாற்றுவதற்கும் அங்கே அதிக மான மாணவர்கள் தங்குவதற்கும் ஆவன செய்ய வேண்டுகிறேன். ஆதிதிராவிடர்களுக்கு அரசாங்க வேலையில் சேருவதற்கு 18 சத வீதம் கொடுப்பது போல் தனியார் நிறுவனங்களிலும் பணிபுரிய வும் 18 சதவீதம் ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன். ஆதிதிராவிடர் அதிகமாக வாழ்கின்ற எனது பொன்னேரி தொகுதியில் ஒரு பொறியியல் கல்லூரியை அமைப்ப தற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன் வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :திரு.ஏ.தா.பொன்னுவேலு.

*திரு. ஏ. தா. பொன்னுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வரலாற்றில் இதுவரை காணப் படாத ஒரு தனிச் சிறப்பை, பொன் எழுத்துக்களால் பொறிக்கப் படவேண்டிய மாண்புமிகு புரட்சித் தலைவியின் புனித ஆட்சி யில், பொற்கால ஆட்சியாக படைக்கப்பட்ட புரட்சித் தலைவி, தமிழகத்தின் ஒளிவிளக்கு, தாய்க்குலத்தின் திருவிளக்கு, பாரதி கண்ட புதுமைப் பெண்.

சோதனையை வென்று, சாதனையைப்படைத்திட்ட சரித்திர நாயகியே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களே, ஆறரை கோடி மக்களின் நம்பிக்கை

நட்சத்திரமாக தாய்க் குலத்தின் பெருமையை தரணி போற்று கின்ற, ஏழை எளியவர்களின் இன்னல்களைப் போக்கும் எங்கள் குல விளக்கே, தமிழகத்தின் காவல் தெய்வம் நான் வணங்கும் மனித தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவியின் பொற்பாதங்களை வணங்கி எனது நன்றியினையும் வணக்கத்தை யும் காணிக்கை ஆக்குகின்றேன்.

பிற்பகல் 7-00

கடந்த காலக் காட்டாட்சியில் இழைக்கப்பட்ட கொடுமை களுக்கு நீதி வழங்கும் வகையில் மகத்தான தீர்ப்பைத் தந்து எனது சொந்தத் தொகுதியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டையாக விளங்குகின்ற வரகூர் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் இந்த மாமன்றத் தின் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1991–92 ஆம் ஆண்டுக்கான பழங்குடியினர். ஆதிதிராவிடர் நலன் பற்றிய மானியக் கோரிக்கையின் கீழ் எவது கன்னி உரையைத் துவங்குகின்றேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காகப் புதிய பத்து அம்சத் திட்டம் ஒன்றினை அமல்படுத்தியிருக்கின்ற அரசுக்கு நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்தியாவசியப் பொருள்களான புளி, மிளகாய் மற்றும் மஞ்சள் ஆகியவற்றின் விலையை—வரிக் குறைப்பு செய்ததற்காக அனைத்துத் தரப்பு மக்களின் சார்பாக எனது நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

75,000 ஆதிதிராவிட குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்படும் என்று கூறிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர் களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

தொழில் கல்வி, தொழில் பயிற்சிப் பள்ளியில்கல்வி பெற்ற ஆதி திராவிட மக்களுக்குப் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு அளிக்கும் ஒரு புதிய திட்டத்தைக்கொண்டு வந்ததற்காக எனது நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்களை அனைத்து வழிகளிலும் முன்னேற்று வதற்காக அடிப்படை வசதிகளையும், பொருளாதார வளர்ச்சிப் பணிகளையும் அளிக்கின்ற இந்த 10 அம்சத் திட்டத்தை நான் மனதார வரவேற்கிறேன்.

கிராமப்புறங்களில் இன்றியமையாத அடிப்படை வசதிகளான இணைப்புச் சாலை வசதிகள், குடிநீர், தெரு விளக்கு, சுகா தாரம் வழங்கிட, வளர்ச்சிகளை மேம்படுத்த, சிறப்புத் தன்னி றைவுத் திட்டத்தைக் கொண்டு வந்து, அதன் அடிப்படையிலே ஒரு ஒன்றியத்திற்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தத ற்காக இந்தத் தமிழகத்தினுடைய மக்களின் பாராட்டுக்கு உரிய வர்களாக இருக்கின்றார்கள்.



தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காகத் தீட்டப் படும் திட்டங்கள், அவர்களை வறுமையிலிருந்து உயர்த்தவும், சமுதாயத்தில் சம நிலையை உயர்த்தவும் இந்த அரசு பாடுபடும் என்று கூறும்பொழுது உண்மையாகவே நமது மாண்புமிகு முதல் வரவர்களின் உயர்ந்த எண்ணத்தை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

18 சதவீத ஒதுக்கீடு எல்லாத் துறைகளிலும் பூர்த்தி செய்யப் படவேண்டுமென்று, தகுதியானவர்களுக்கு அந்த ஒதுக்கீட்டை நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பூர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக பி. ஏ. படித்து, பட்டம் பெற்றவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்ததால் அவர்களுக்குத் தகுதி இல்லை என்று பல்வேறு துறைகளிலும் புறக்கணித்து விடுகிறார் கள். ஆனால், இந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் பி. ஏ. படித் திருந்தாலும், அதற்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலே சிறப்புப் பயிற்சியாக அளித்து, அவர்களுக்குத் தட்டெழுத்து மற்ற பயிற்சிகளையும் அளித்தார்கள் என்றால், ஐ.ஏ.எஸ்., ஆகவும், டி.என்.பி.எஸ்.சி., பேங்க் ரெக்ரூட்மெண்ட் போன்ற பல துறைகளிலும் அவர்களைத் தகுதியுள்ளவர்களாக ஆக்கி அந்த 18 சதவீதத்தை உயர்த்த முடியும் என்று இந்த மாமன்றத்தின் வாயிலாக முதல்வரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியானது, தமிழகத்திலேயே மிகவும் பின் தங்கிய தொகுதியாகும். அன்றாடம் தினக் கூலி வேலை மூலம் தினமும் வாழ்க்கையோடு போராடி வரும் ஏழைகள் நிறைந்த பகுதியாகும். படித்த இளைஞர்களுக்கும், பாமர மக்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்க, பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் கிடைக்கும் கச்சாப் பொருட்களைக் கொண்டு, ஒரு காகிதத் தொழிற்சாலையை அப்பகுதியிலே நிறுவினால் அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து அவர் களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 7-05 மணி

எனது தொகுதியிலே இருக்கும் காரை, தெரணி, பாடாலூர், கள்ளை மற்றும் ஊலைப்பாடி போன்ற பகுதிகளிலே வெள்ளை நிற மண் படிவங்கள் உள்ளன. இதைப் பயன்படுத்தி, மினி பீங் கான் தொழிற்சாலைகளை அமைத்தால், அந்தப் பகுதியிலுள்ள மக்களும் நல்ல வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வார்கள் என்பதை இந்த மாமன்றத்தின் முன்னதாக நான் கூற விரும்பு கிறேன். எனது தொகுதியில் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக உள்ளது. தாய்மார்கள் 5 கிலோ மீட்டர் தூரம் சென்று குடிநீர் கொண்டு வரும் அவல நிலையைப் பார்க்கிறேன். இந்த நிலை பூதாகரமாக வளர்ந்து வந்ததற்குக் காரணம் நடந்து முடிந்த

[திரு. ஏ. தா. பொன்னுவேலு] [1991 செப்டம்பர் 19

ஆட்சியில் அதை அலட்சியப்படுத்தி விட்டார்கள். மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள், என்னுடைய பகுதிக்கு குடிநீர் வசதி
செய்து கொடுக்க வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன்
கேட்டுக்கொள்கிறேன். நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள்,
தாயுள்ளம் கொண்ட தங்கத் தலைவி, புரட்சித் தலைவியின்
பொற்கால ஆட்சியில், தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ்
மக்கள் வாழ்க்கையில் நிம்மதியாக, மகிழ்ச்சியாக, பூரிப்பாக
இருக்கவும், வறுமையிலிருந்து அவர்களை மீட்கவும், சமுதாயத்
தில் சமநிலையில் உயர்ந்திடவும் இந்த அரசு பாடுபடும் என்று
கூறியதற்கு நான் சிரம் தாழ்த்தி கரம் கூப்பி வணங்குகிறேன்.
தாழ்த்தப்பட்ட மக்கள்.......... (மணியடிக்கப் பெற்றது)—
அதிகம் வாழும் அந்தப் பகுதியிலே, மயானப் பாதைகள் இல்லை
யென்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள்.

நான் இந்த மாமன்றத்தின் வாயிலாக என்னுடைய தொகுதி
யிலே ஒரு சில இடங்களில் நேரடியாகச் சென்று அவர்களுக்கு
வழி செய்ய முடியாமல் இருப்பதை அறிந்து, முதலமைச்சர்
அவர்களிடம் கோரி அதற்கான வழிகளை நான் செய்கிறேன்
என்றும் உறுதி கூறியிருக்கிறேன். கடந்த 15 ஆம் தேதி,
பேரறிஞர் அண்ணாவினுடைய பிறந்த நாள் விழாவுக்குச் சென்று
அண்ணாவினுடைய பிறந்த நாளிலே சொற்பொழிவாற்றி, நன்றி
யினைக் கூறும்போது, என்னுடைய தொகுதியிலே ஆலத்தூர்
ஒன்றியத்திலே இருக்கிற ஒரு பகுதி இணைக்கூடிக்கும்.
கொளத்தூருக்கும் இடையிலே ஒரு சிறிய ஆறு மருதையாறு
இருக்கிறது. அந்த ஆற்றைக் கடந்து வரும்போது காரை அந்தப்
பக்கம் நிறுத்திவிட்டு மழை, சேற்றின் மீது நடந்து, இந்தக்
கரையிலே வந்து சைக்கிள் மூலமாக வந்து அந்தப் பகுதி மக்க
ளுக்கு பேரறிஞர் அண்ணாவினுடைய பிறந்த நாளினைப்
பற்றி நான் கூறியிருக்கிறேன். காரணம் அந்தப் பகுதியிலே
உள்ள மக்களுக்கு ..........(மணியடிக்கப் பெற்றது)......
சாலை வசதியும், பாலம் அமைத்துத்தர வேண்டுமென்று நான்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்
கொள்கிறேன். மேலும், டாக்டர் அம்பேத்கர் அவர்களின்
நூற்றாண்டுக்கு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிற இந்த
ஆண்டிலே, ஆதி திராவிட மக்களுக்காக பல்வேறு திட்டங்கள்
செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, ஆதிதிராவிடர்கள்
பல்வேறு தொழிற் கல்வியில், அதிக அளவிலே சேருவதற்கும்
(U.P.S.C., T.N.P.S.C., Staff Selection Commission, Railway Service
Commission, Banking Recruitment Board) ஆகிய தேர்வுகளில் அதிக
ஆதி திராவிடர்கள் வெற்றி பெறுவதற்கும், தனிப் பயிற்சி
மையங்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தற்போது
திருச்சி, திருநெல்வேலி, வேலூர் மற்றும் கோவை மாவட்டங்
களில் இதற்காக, 'தாட்கோ' நிதியுடன் சிறப்பாகச் செயல்
பட்டு வருகின்றது. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக உருவாக்
கப்பட்ட 'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் நிதி



1991 செப்டம்பர் 19]

சரிவரப் பயன்படுத்தப்படாமல், ஒவ்வொராண்டும் ஒப்படைவு
செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையினால், அந்த
'தாட்கோ' வினுடைய நிதியைக் கொண்டு, தென்னாற்காடு,
தஞ்சை, சேலம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் சிறப்பு
மையங்களை அமைத்து, ஏழை எளியவர்களான தாழ்த்தப்பட்ட
வர்களுடைய வறுமை நிலையினைப் போக்கி, அவர்களுக்கு நல்ல
வாய்ப்புகளை அளிப்போமேயானால், 18 சதவிகிதத்தை பூர்த்தி
செய்து, அவர்கள் புதிய பதவிகளிலே வருவார்கள்.
நிரந்தரமான வேலைகளும் பெறுவார்கள் என்பதையும் நான்
மிகப் பணிவன்போடு கேட்டுக்கொண்டு, இந்த மாமன்றத்திலே
பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி அமர்கிறேன்
நன்றி; வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. ஆர். சிங்காரம்.

*<u>திரு. ஆர். சிங்காரம்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த ஆதி திராவிடர் நல மானியக் கோரிக்கையில்
பேசுகின்ற பெரும் வாய்ப்பைப் பெற்ற நான், அதைக் கொடுத்த
தங்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி
அவர்கள் இருக்கிற நேரத்தில், நிரம்ப இங்கே பேசலாம் என்று
நினைத்த எனக்கு, இன்று எனக்குத் தொண்டை சரியாக இல்லை
இருந்தாலும்.....

பிற்பகல் 7-10 மணி

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நேரம் சரியில்லாமல்
போவதற்குள் நீங்கள் பேசி முடித்துவிட்டால் அவைக்கும் நல்லது.

<u>திரு. ஆர். சிங்காரம்</u> : இருந்தாலும், வருகின்ற 27-ம்
தேதி இந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிலைமைகளைப்
பற்றி எல்லாம் பேச இருக்கின்றேன். அதற்குள் தொண்டை
சரியாகிவிடும் என்று கருதுகிறேன். இன்று நம்முடைய தமிழக
முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இதுவரையில் மாலை வேளை
களில் நடந்த சட்டமன்ற நிகழ்ச்சிகளுக்கு வராதவர்கள் இன்று
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் குறித்த மானியக்
கோரிக்கையின் போது வந்திருப்பதிலிருந்து இந்த ஆதி திராவிட
மக்கள் மீது நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தானைத்
தலைவி, புரட்சித் தலைவி எந்த அளவிற்கு ஆர்வமும், அக்
கறையும் கொண்டிருக்கிறார்கள். என்பதை நாம் புரிந்து கொள்ள
முடியும் (மேசையைத் தட்டும் ஒலி).

கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் நான் சட்டமன்ற உறுப்
பினராக இருந்தபோது, எனது காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த
26 பேர்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்

அடுத்து தாட்கோவில் வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். ஜே.வி.டி. திட்டத்தில் வீடு கட்டிக் கொடுக்கிறோம். அந்த ஜே.வி.டி. திட்டத்தில் கொடுக்கப்படுகிறதே அந்த வீட்டுக்கு இன்று 14,000 ரூபாய் ஆகிறது. அப்படி கட்டப்படுகிற வீடுகள் யாவும் உருப்படியாகவே இல்லை. நான் சொல்வதெல்லாம் இந்தக் கொடுமைகள் எல்லாம் கடந்த ஆட்சியில் நடந்ததைத் தான் சொல்கிறேன். அதை ரெக்டிஃபை செய்து இனிமேல் அப்படி இல்லாமல் மாற்றுவதற்கு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். ஆனால் 14,500 ரூபாய் என்று கருதுகிறேன். அது சம்பந்தப்பட்ட ஒன்றியத்தில் பலவிதமான கமிஷன் மூலமாகப் போய் காண்ட்ராக்ட் கொடுத்து அல்லது ஒன்றியத்தில் கொடுத்து எப்படியோ அது ஆதிதிராவிட மக்களுடைய வீடு என்பதால் அதற்கு ஒரு சரியான கவனிப்பு இல்லாமல் கட்டியவுடனே ஒழுகிப் கொண்டிருக்கிறது. நாங்கள் எல்லாம் திறப்பு விழாவிற்குக் போகும்போது தண்ணீர் ஒழுகிறது என்று சொல்வார்கள். முதல் நாளில் அப்படித்தான் இருக்கும். அது செட் ஆகவேண்டும் என்று சொல்வார்கள். ஆனால் கடைசி வரையில் அது செட் ஆகவில்லை. செட் அப் செய்துவிட்டார்களே தவிர வீடு செட் ஆகவில்லை. ஆகவே செட் அப்பைக் கண்டுபிடிப்பதற்கு நீங்கள் முயற்சி எடுக்கவேண்டும். அதே போல் இன்று 14,500 ரூபாய்க்கு வீடு கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்னதாக அவர்களுக்கு 6,000 ரூபாய்தான் வீடு கட்டக் கொடுக்கப்பட்டது. அந்த 6,000 ரூபாயில் கட்டப்படுகிற வீடுகள் அத்தனையும் இடிந்து மோசமான நிலைக்குப் போய்விட்டன. அவற்றில் பெரும்பாலும் அதாவது கிட்டத்தட்ட ஒரு 50 பெர்சன்ட் வீடுகள் எல்லாம் இடிந்துபோய்விட்டன. 14,500 ரூபாய்க்குக் கட்டும்போதே இப்படி என்று சொன்னால் 6,000 ரூபாய்க்குக் கட்டினால் எப்படி இருக்கும்? அப்படித்தான் இருக்கும். ஆக அப்படிப்பட்ட சூழ்நிலையில் உள்ள ஒரு வீட்டைக் கூட நான் படம் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்தில் தனியாகக் காட்ட வேண்டும் என்பதற்காகப் படம் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன். அது இடிந்துபோய்விட்டது. அந்த ஆதிதிராவிடருக்கு என்ன வழி செய்வது நாம்? ஆக புதிதாக வீடு கட்டிக் கொடுப்பதா? அல்லது அந்த வீட்டைப் பழுதுபார்ப்பதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த படத்தை இங்கே கொடுத்துவிடவும்.

பிற்பகல் 7-20

திரு. ஆர். சிங்காரம்: இந்தச் சூழ்நிலையில் அவர் விடற்ற நிலையில் அந்த ஆதிதிராவிடர் இருந்துகொண்டிருக்கிறார். ஆக இதுபோன்று என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல. என்



னுடைய தொகுதியில் நாற்பத்தைந்து கிராமங்கள் இருக்கின்றன இதுபோல். இங்கே உறுப்பினர்களாக இருக்கின்ற அத்தனை சட்டமன்ற உறுப்பினரின் தொகுதிகளிலும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. வீடுகள் இடிந்துவிட்டன. அதைக் கட்டிக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். ஆனால் சென்ற தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நான் கேட்டேன். இதே மாதிரி இன்னொரு படத்தைக் காட்டி நான் கேட்டேன். அப்படிக் கேட்டபோது அவர்கள் சொன்னார்கள். சட்டத்திலே இடம் இல்லை. வீடு இனாமாககட்டிக்கொடுக்கப்பட்டுவிட்டது. அவர்கள்தான்பராமரித்துக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்த நிலையை பலமுறைகள் எடுத்துச்சொல்லியும்கூட அதற்கு முடிவே காணவில்லை. இது நியாயம் தானா? மாண்புமிகு தம்புசாமி அவர்களைக் கேட்கிறேன். இது நியாயம் தானா? (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட சூழ்நிலையில் பல முறை எடுத்துச் சொல்லியும்கூட, இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம்—பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். நான் ஒரு 40, 50 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். 2,500 கேள்விகள் கொடுத்திருக்கிறேன். எவ்வளவு கேள்விகளைக் கொடுத்தும் இவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றன. நான் முன்பே 3 ஆயிரம் கேள்வி கொடுத்தேன் தி.மு.க. ஆட்சிக் காலத்திலே. ஆதிதிராவிட மக்களுக்குப் பெரிய அக்கறை காட்டுகிறார்களாம் கடந்த ஆட்சியிலே. சம்பந்தி என்று சொல்லுகின்றார்கள். இதுபோன்ற தவறான பிரச்சாரத்தை செய்து வோட்டு வாங்குவதற்கு ஆட்சியிலே வந்து கொள்ளையடிப்பதற்குத் தானே அவர்கள் நினைக்கிறகளே தவிர உண்மையான சேவை செய்வதற்காக அல்ல என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திரு. பெரியசாமி அவர்கள் சொன்வார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். நான் ஹெட் கிளார்க்காக வேலை பார்த்தேன் முதலிலே. ஹெட் கிளார்க் ஆக வேலை பார்த்தவன். ஒரு தி.மு.க. எம்.எல்.ஏ. ஆட்சிக்கு வந்த உடனே அவர் என்னைச் செக் பண்ணினார். எனக்கும் அவருக்கும் வாதம் வந்தது. நான் காங்கிரஸ்காரன் என்பதற்காக என்னை சஸ்பெண்ட் பண்ணினார்கள். நான் லீவ் போட்டுவிட்டு வெளியிலே வந்துவிட்டேன். பிறகு அவருக்கும் எனக்கும் நீண்ட வாதம் நடந்தது. நான் சொன்னேன் அவர்களிடத்திலே ''ஏதோ அதிகாரம், ஆணவம் மண்டைக் கனம் பிடித்துப்போய் பேசுகிறீர்கள். நான் ஹெட் கிளார்க்காக இருந்து பேசுகிறேன். நீங்கள் சட்டமன்ற உறுப்பினர். நான் தலைமை எழுத்தர், என்னுடைய இடத்திற்கு நீங்கள் வரமுடியாது. ஆனால் உங்களுடைய இடத்திற்கு நான் வரமுடியும். வந்து காட்டுகிறேன். என்று சொல்லிவிட்டு ராஜினாமா செய்துவிட்டு வெளியிலே வந்தவன். இன்று சட்டமன்ற உறுப்பினராக உள்ளேன். அதே நபர் என்னிடத்திலே தோற்றுப்போய் விட்டார்கள் ஆக கொள்கை ரீதியாக..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம் அவர்களுடைய கதையைச் சொல்வதைவிட ஆதிதிராவிடர் நல மானியத்தின் மீது பேசுவது நல்லது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நலிவுற்ற பிரிவினைச் சேர்ந்தவன். ஆதி திராவிடரை விட மோசமான ஆள், உலகத்திலேயே என்னை விட ஏழையே கிடையாது நாட்டிலே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆகவே தான் நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதைப் பற்றி அதிகமாகப் பேசவேண்டாம் என்று.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே எனக்குச் சொந்த வீடு கிடையாது. சொந்த வீடு இல்லாத சட்டமன்ற உறுப்பினர் நான்தான். வாடகை வீட்டிலே குடியிருக்கிறேன். எல்லா சொத்தையும் அந்த சம்பந்தப் பட்டவர்களை எதிர்ப்பதற்காகவே செலவு பண்ணியிருக்கிறேன். இந்த அளவுக்கு வந்திருக்கிறேன். அதற்காக சொல்கிறேன். ஆதிதிராவிடர்களுக்கு மட்டுமல்ல. அந்த வீடு இடிந்து போனவர்களுக்கு அல்லது பழுதுபட்ட வீடுகளையுடைய ஆதிதிராவிடர்களுக்கு எப்படி என்ன வகையிலே செய்ய முடியுமோ அந்த வகையில் செய்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நம்முடைய ஒப்பற்ற புரட்சித் தலைவி அவர்களும் அதை பரிசீலனை செய்து......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஆதிதிராவிடர் களுக்காக கட்டப்பட்ட வீடுகள் மழை பெய்தால் ஒழுகின்றன. விரைவிலே இடிந்துவிழுந்துவிடுகின்றன என்பதுபோன்ற பல குறை பாடுகள் என்னுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதால் தான் இப்போது ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டங்கள் என்னென்ன 'ஆன் கோயிங் ஸ்கீம்ஸ்'-ஆக இருக் கின்றனவோ அவற்றை எல்லாம் உடனடியாக நிறுத்தப்பட கூறியிருக்கிறேன். இந்த கட்டடங்களில் கட்டுமான பணிகளில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதை எல்லாம் கண்டறிந்து நல்ல முறையில் உறுதியான நிலையான வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி. ஆனால் இப்போது உள்ள இடிந்துபோன வீடுகளுக்குச்



சொல்கிறேன். இனிமேல் நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சியில் இனிமேல் கட்டப்படுகின்ற வீடுகள் ஒழுங்காக் இருக்கும். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. மக்க ளுக்கு உண்டு. ஆதிதிராவிட மக்களுக்கு உண்டு. ஆனால் இடிந்துபோன வீடுகளுக்கு ஒழுகிக்கொண்டிருக்கின்ற வீடுகளுக்கு அதற்கு வழி செய்ய வேண்டும் என்பதுதான் என் கருத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர்

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் படிப்படி யாகத்தான் செய்ய முடியும். நிச்சயமாகச் செய்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கும் நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அத்தோடு நன்றி என்று முடித்து விட்டீர்கள் என்றால் நன்றாக இருக்கும். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் இந்த ஆதிதிராவிடர்களை பொறுத்த வரையிலே லேண்ட் அக்குவிஷேசன், நிலத்தை அக்கொயர் செய்துவிட்டு வீடு கட்டுவதற்கான ஏற்பாட்டைச் செய்கிறோம், அவர்கள் நிலத்தைக் கொடுத்துவிடுகிறார்கள். சமாதானமாகப் பேசி நிலத்தைக் கொடுத்துவிடுகிறார்கள். நாம் அதற் கான ஏற்பாட்டைச் செய்கிறோம். ஆனால் அவர்கள் கிரையத்தைச் செய்து கொடுத்துதான் பிறகு பட்டா வாங்கித்தான் அந்த வீடு கட்டவேண்டும். பட்டா வாங்க வேண்டும். அதற்கான பணம் பட்டுவாடா செய்வதற்கு நீண்ட பல ஆண்டுகள் ஆகின்றன. சென்ற 3 வருடத்திற்கு முன்பாக அப்படிப்பட்ட பிரச்சினை வந்தது. இன்னமும் முடியாமல் இருக்கின்றது. இப்போதுதான் பேப்பர்ஸ் புரட்சித் தலைவி ஆட்சியில்தான் பேப்பர் மூவ் ஆகிக்கொண் டிருக்கிறது. அந்த அளவுக்கு டிலே ஆகிக்கொண்டு இருக் கின்றது. அந்த டிலேயை தவிர்க்கவேண்டும். அதனாலே என்ன பிரச்சினை என்று சொன்னால், இரண்டு வருடத்திற்கு முன்னதாக இருக்கின்ற விலை ஒன்று. மூன்று வருடம் கழிந்து அந்த ரேட் வருகின்ற நிலை ஒன்று. ஆக ரேட் ஏறிப்போனவுடனே அவன் ஒத்துக்கொள்ள மாட்டான். அவர் கள் ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் டிலே ஆகிறது. அதையும் தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த டிலேயைத் தவிர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். சிங்காரம்] [1991 செப்டம்பர் 19

ஆதிதிராவிட மக்கள் வசிக்கின்ற தெருக்களில் எல்லாம், தெரு விளக்குகளை எல்லாம் உடனடியாக அமைக்க வேண்டும் என்று நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு உத்தரவிட்டிருக்கின்றார்கள் அங்கே தெரு விளக்குகளை எல்லாம், ஆதிதிராவிடர் தெருக்களுக்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று உங்களை பணிவன்போடு வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 17-25 மணி

இங்கே மதம் மாறி கிறிஸ்தவர்களாக இருக்கின்றவர்கள், ஆதிதிராவிடர்கள் 'பேக்வர்ட்' என்று அவர்கள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களையும் ஷெட்யூல்ட் காஸ்ட் என்ற வகையிலே சட்டத்தில் வகை செய்ய நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டு கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் பள்ளி தொடங்கவேண்டுமென்று ஒன்றிரண்டு வருடங்களாக நான் முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் ஒரு ஸ்கூல் புலிவாசலிலும், இன்னொன்று பின்னவாசலிலும், ஆகிய இரண்டு ஸ்கூல்கள் தொடங்க வேண்டுமென்று கடந்த 3 ஆண்டுகளாக முயற்சி பண்ணி பலமுறை இதே மன்றத்தில், போன சட்டமன்றத்தில் பேசினேன். நடக்கவில்லை. ஆதிதிராவிட மக்களுக்காக இப்போது தாண்டி குதிக்கிறார்களாம். இரண்டு வருடம் ஆகியும் ஒன்றும் நடக்கவில்லை. இப்பொதுதான் பேப்பர் மூவ் ஆகியிருக்கிறது. அதுகூட குறுகிய கால வினா ஒன்று கொடுத்திருக்கிறேன். அது இன்னும் வரவில்லை. தயவு செய்து அதை விரைந்து செய்ய வேண்டும். இதுபோன்ற ஆதி திராவிடப் பள்ளிகளை அமைப்பதற்காக ஏதேனும் கோரிக்கைகள் வந்தால் அவைகளையும் விரைந்து செய்ய வேண்டுமென்று நான் உங்களைப் பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

---

இந்த ஐ. ஆர். டி. பி." திட்டங்களைப் பொறுத்த வரையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். அதைப் பொறுத்த வரையில் பாதியைத்தான் பணமாக ஏதோ கொடுத்திருக்கிறார்கள், பாதி பணம் என்றால் ஐந்தாயிரம் ரூபாயில் பாதி 2,500 ரூபாய் தான் கொடுக்கிறார்கள். இந்த 2,500 ரூபாயை கொண்டு போய் பெட்டிக் கடை வைப்பது முடியுமா? மரச் சாமான்கள் வாங்குவதற்கே 3 ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆகும். அதற்கு பிறகு அவர்கள் அதைக் கொண்டு என்ன செய்ய முடியும்? ஒன்றும் செய்ய முடியாது. இப்படி தடுமாறிப் போய், திரும்பி அலைந்து திரிந்து கிராம சேவிக்கைப் போய்ப் பார்த்து, அது இது என்று கொடுத்து கொடுத்து பார்த்து கடைசியில் அந்தப் பணமும் செலவாகிப் போய்விடுகிறது. அப்படி இல்லாமல் முழுமையாகப் பணத்தைக்



1991 செப்டம்பர் 19] [திரு. ஆர். சிங்காரம்]

கொடுக்க வேண்டும். பணத்தைக் கையில் கொடுக்க வேண்டாம். செக்காக தான் கொடுக்கிறார்கள். அதை முழுமையாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற ஆண்டு, முன்பு இருந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் முழுமையாக கொடுத்தால் அவர்கள் ஓடிவிடுவார்கள், என்பதால் பாதி கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டதால்தான் அப்படி பாதியைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அதை முழுமையாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கும்போது, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் சொன்னதைப் போல, நிச்சயமாக நீங்கள் அந்த அளவிற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் விரைந்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்ற காரணத்தால் ஒருசில வார்த்தைகள் மட்டும் கூறி முடித்து விடுகின்றேன்.

ஆதி திராவிடர்களுக்கு இன்றைக்கு 14,500 ரூபாயில் வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது. ஆனால் 5, 6 வருடத்திற்கு முன்பாக ஹவுஸ் பில்டிங் சொசைட்டியில் கடன் வாங்கி 6 ஆயிரம் ரூபாயில் வீடு கட்டியிருக்கிறார்கள். அவர்களால் அந்தப் பணத்தை திருப்பி கட்ட முடியவில்லை. இப்போது கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பக்கத்திலே இப்போது 14,500 ரூபாயிலே வீடு கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இவர்களது வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கிற வீட்டை 6 ஆயிரம் ரூபாய்க்கு அதுவும் கடன் வாங்கிக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கட்டிய வீடும் பாதியிலே தான் போயிற்று. அந்த அளவு மோசமாக இருக்கிறது. பணத்தையும் அவர்களால் கட்ட முடியவில்லை. அந்த ஹவுஸ் பில்டிங் சொசைட்டியில் வாங்கிய கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று உங்களைப் பணிவன்புடன் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். ஆதி திராவிட மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்துவிட்டு ஒழுங்குபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கெல்லாம் மேலாக இந்த சமுதாயத்தை முன்னேற்ற வேண்டுமென்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியசாமி சொன்ன யோசனை மிகச் சிறந்த யோசனை. கல்வியிலே இவர்களுடைய தரத்தை உயர்த்தினால் நிச்சயமாக நாகரீகம் ஏற்பட்டு, அந்த நாகரீகத்தின் அடிப்படையில் நிச்சயமாக அவர்கள் உயர்வுக்கு வர முடியும். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நிச்சயமாக அதைச் செய்வார். அல்லது பொருளாதாரத்தில் அவர்கள் உயர வேண்டும். பொருளாதாரத்தில் அவர்கள் உயர்வது என்பது கஷ்டம். இருந்தாலும் முயன்றால்

உயர முடியும். கல்வியைப் பொறுத்தவரையில் அவர்களை தத்து எடுத்துக் கொண்டு அவர்களுக்குக் கல்வியைப் புகட்டி அவர்களைத் தரமுள்ளவர்களாக ஆக்கி, வேலை வாய்ப்பு அவர்கள் பெறுகின்ற வகையில் ஒரு திட்டத்தினைக் கொண்டு வர வேண்டுமென்று நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர் பயிற்சியிலே பயிற்சி பெற்ற ஆதி திராவிட மக்கள் சென்ற தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பயிற்சி பெற்றவர்கள். 50 பர்சன்ட் எஸ்.எஸ்.எல்.சி.யில் அதாவது 10-வது வகுப்பில் மார்க் பெற்றிருந்தால் அவர்களுக்குத் தான் வேலை கொடுக்க முடியும் என்று ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதாவது ஆசிரியர் பயிற்சி மூலம் அவர்கள் எவ்வளவு மார்க் பெற்றிருந்தாலும் பரவாயில்லை. ஆனால் எஸ்.எஸ்.எல்.சி.யில் 50 பர்சன்ட் மார்க் எடுக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் வேலை கிடைக்கும் என்கிற முறையில் 50 பர்செண்ட் மார்க்குக்கு மேல் உள்ளவர்களுக்கு வேலை கிடைத்தது. அதற்குக் கீழே உள்ளவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. ஆகவே, அந்த அளவிற்கு ஒரு தேங்கிய நிலை இருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து— அந்த ஜி.ஓ. வை ரத்து செய்து— நீங்கள் தி.மு.க. ஆட்சியில் போட்ட உத்தரவு எல்லாவற்றையும் ரத்து பண்ணி விடலாம். அதிலே ஒன்றும் சந்தேகமே வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி) அது நல்ல உத்தரவே இல்லை. உத்தரவு போட்டாலும் நல்லதொரு மாதிரி இருக்குமே தவிர அதிலே 'உள் கமிஷன்' இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல பல உத்தரவுகள் இருக்கின்றன. பல உத்தரவுகளை நான் காட்டுகிறேன். அந்த விளைவுக்கு அந்த உத்தரவுகளை எல்லாம் நீங்கள் பரிசீலனை செய்து ஏற்பாடு செய்ய வேண்டும். பல அதிகாரிகள் இன்னும் அங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகளைப் பொறுத்தவரையில் எந்தவிதமான காரியங்களையும், நிச்சயமாக கீழே இருக்கின்ற அதிகாரிகள், இந்த சட்டமன்ற..

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு முதலமைச்சர்.

<u>மாண்புமிகு செல்வி. ஜெ. ஜெயலலிதா:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்தரவுகளைத் தான் மாற்ற முடியும். அரசு ஆணைகளைத் தான் மாற்ற முடியுமே தவிர, அரசு அதிகாரிகளை மாற்ற முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் ஏற்கெனவே உள்ள அரசு அதிகாரிகளை வைத்துத்தான் அரசு நிர்வாகத்தை நடத்த முடியும். அவர்களை வைத்துத்தான் வேலை வாங்கியாக வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 7-30

<u>திரு. ஆர். சிங்காரம்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளை மாற்ற முடியாது என்று சொன்னார்கள் . உணர்வை— நம்முடைய தலைவி அவர்கள் சொன்னது



உணர்வை. ஆனால் மாற்றிவிட்டீர்களே நீங்கள். கள்ளச் சாராயத்தை ஒழிக்கவே முடியாது (மேசையைத் தட்டும் ஒலி) ஒழிக்கவே முடியாது என்று சொன்னவர்கள் எல்லாம் மூக்கிலே விரல் வைத்து, முக்காடு போட்டுக் கொண்டு, மூலையிலே அமர்ந்து கொண்டு, புரட்சித் தலைவியுடைய உத்தரவா என்று எண்ணுகின்ற தலைவர்கள் இங்கே வீற்றிருக்க; அங்கே சஸ்பென்ஷன் உத்தரவு போட்டவுடன் வி.ஏ.ஓ.க்கள் தண்டோரா போட்டுக் கொண்டு அலைந்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே எஸ்.ஐ.-க்கு சஸ்பென்ஷன் என்று சொன்னவுடன், அவர்கள் ஓடிப் போய் மாமூல் வாங்குவதையெல்லாம் தடுத்து நிறுத்தி, மாமூல் வாங்கக் கூடாது என்று சொல்ல, கள்ளச் சாராயத்தை ஒழிக்கும் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஏன் உங்களால் முடியாது? நிச்சயமாக முடியும். எதையும் செய்ய முடியும். எதையும் மாற்ற முடியும். எந்த உணர்வையும் மாற்ற முடியும். அப்படி எல்லா சக்தியும் படைத்த ஒரு தானைத் தலைவிதான் நம்முடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். ஜெய் ஹிந்த். (மேசையைத் தட்டும் ஒலி.)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. எஸ். ஆனந்தன்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே என்னைச் சட்டமன்றப் பேரவை உறுப்பினராக்கி, அமைச்சராகவும் ஆக்கி, என்னை ஆசீர்வதித்துக் கொண்டிருக்கிற எங்கள் குல தெய்வம் புரட்சித் தலைவி தமிழகத்தின் முதலமைச்சரவர்களின் பொற்பாத கமலத்தைத் தொட்டு வணங்கி, எனது உரையை ஆரம்பிக்கிறேன்.

இந்த மாமன்றத்திலே உள்ள சட்டப் பேரவை உறுப்பினர்கள் 19 பேர் இந்த விவாதத்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியை கலந்து வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். உளுந்தூர்பேட்டை தொகுதியிலிருந்து இரண்டாவது முறையாக அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த தொகுதி வாழ் மக்களுக்கும், என்னை வெற்றி பெறச் செய்த கழக கண்மணிகளுக்கும், கூட்டணிக் கட்சி தோழர்களுக்கும் என்னுடைய நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புத் தம்பி புரட்சித் தலைவர் அவர்களின் உண்மையான வாரிசு புரட்சித் தலைவி அவர்கள், அண்ணாவின் கொள்கைக்கேற்ப சாதாரண சாமானி

கழகத்தின் 29 பேர்களும் புரட்சித் தலைவி என்று சொன்னாலேயே "இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம்" என்று சொல்வது போல் அன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லி, புரட்சித் தலைவி என்று சொல்வதற்கு முன்னதாகவே பெல் அடித்து உட்கார வைத்து விட்டார்கள். ஏனென்றால், அந்த அளவிற்கு இங்கே எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்களும் சரி, போக்குவரத்துத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. செங்கோட்டையன், அவர்களும் சரி, அன்றிருந்த 26, 29 பேர்களும் நாங்கள் பட்ட அவமானங்களும் அசிங்கங்களும், கேவலங்களும் இந்த நாட்டுக்கு நன்றாகத் தெரியும்.

நம்முடைய புரட்சித் தலைவி, தமிழக முதல்வர் அவர்களை நான் ஏன் புரட்சித் தலைவி என்று சொல்கிறேன் என்றால், அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. முதலமைச்சராக அவர்கள் வந்து விட்டார்கள். புரட்சித் தலைவி, புரட்சித் தலைவி என்று சொன்னால் காரியங்களைச் செய்து விடலாம் என்று சிங்காரம் பேசுகின்றார் என்று சிலபேர் நினைக்கலாம். என்னுடைய நோக்கம் அதுவல்ல. நம்முடைய தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் அன்றைக்கு இங்கே எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது நடந்த கொடுமைகளை, தொல்லைகளை, கஷ்ட—நஷ்டங்களை, அவர்கள் பட்ட அவதிகளை, அம்மா அம்மா என்று அலறிய காட்சியினை நான் நேரிலே பார்த்தவன். அந்தத் துயரத்தை அனுபவித்தவன். பக்கத்திலேயிருந்த நாங்கள் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் கூட அந்த அம்மையாரைக் காப்பாற்றுவதற்கு, அடிப்பட்டோம்; உதைபட்டோம்; மிதிபட்டோம்; செருப்படி பட்டோம். அந்த ஒரு நிகழ்ச்சி என் மனக்கண் முன்னே இன்றும் நின்று கொண்டிருக்கிறது. நான் சாகின்ற வரையில் அந்த நிகழ்ச்சி என் நினைவை விட்டு அகலாது. அந்த நிகழ்ச்சி, என் நினைவை விட்டு சாகின்ற வரை அகலாத வரையிலும், புரட்சித் தலைவி என்ற பட்டமும் என்னை விட்டுப் போகாது (மேசையைத் தட்டும் ஒலி). ஆகவே, காரியங்கள் செய்வதற்காக நான் புரட்சித் தலைவி என்று சொல்லவில்லை என்பதை இங்கே உங்களுக்குச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

ஆக, இப்படிப்பட்ட இன்னல்களுக்கும், கஷ்ட—நஷ்டங்களுக்கும் ஆளாகி, மிகப் பெரும் வேதனையடைந்து இன்று தமிழகத்தின் தானைத் தலைவியாக புரட்சித் தலைவியாக, எல்லா விதத்திலும் பாராட்டத்தக்க வகையில் ஆட்சி செய்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்களை நான் நெஞ்சார, உளமாரப் பாராட்டுகிறேன்.

அடுத்து, ஆதி திராவிட மக்களுக்கு என்னென்னவோ தாக்குதல் நாட்டிலே வந்தது. ஆனால் அவர்களுக்காக ஸ்பெஷலாக ஒரு பத்து அம்சத் திட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள்.



இன்று கூட நான் பார்க்கிறேன். ஆதி திராவிட மக்கள் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இங்கே இந்த மானியக் கோரிக்கையிலே பத்து அம்சத் திட்டத்திலே வகை செய்திருக்கிறார்கள். நான் வருகின்ற போது மூன்று நான்கு ஆதி திராவிடர் குடியிருப்புகளில் போர்வெல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு இந்த ஆதி திராவிடர் மக்கள் பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் இங்கே பேசினார்கள். இருந்தாலும், ப்ராக்டிகலாகச் செய்ய வேண்டியிருக்கிற கஷ்டங்களை நான் சொல்வதை நீங்கள் தயவுசெய்து உன்னிப்பாகக் கவனித்து, அந்தக் கஷ்டங்களைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உங்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஜீவன்தாரா கிணறு என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியசாமி அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதைப் பாதியில் முடித்து விட்டார்கள். ஜீவன்தாரா கிணறு என்று இருபத்தெட்டாயிரம் ரூபாயில் வெட்டப்படுகிறது. அந்தக் கிணற்றுக்கு மோட்டார் இணைக்க வேண்டும் என்று உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், பாங்கிலே மோட்டாருக்கான கடன் இதுவரையில் கொடுக்கப்படவில்லை. மின்சாரத் துறையிலிருந்து மின்சாரக் கனெக்ஷன் த்ரீபேஸ் லையன் கொடுக்க வேண்டுமென்று அவர்களுக்கு ஒரு காலக்கெடு நிர்ணயித்தது

பிற்பகல் 7-15

ஆனால் அந்தக் காலக்கெடுவுக்குள் மோட்டார் கொடுக்கவில்லை. அந்தக் காலக்கெடு முடிந்துவிட்டது. அந்தக் காலக்கெடு நீட்டிக்கப்பட வேண்டும் என்று நான் புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்றவுடனே நான் கொடுத்த முதல் மனு அதுதான். அந்த மனுவைக் கொடுத்து அந்தக் காலக்கெடுவை உயர்த்தித் தரவேண்டும் என்று நான் புரட்சித் தலைவி அவர்களிடம் கொடுத்து அது உடனடியாக சம்பந்தப்பட்ட துறைக்குச் சென்று, எந்தத் தேதியில் மோட்டார் வாங்கி இணைக்கிறார்களோ அதுவரையில் பொறுத்து மின்சார கனெக்ஷன் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது புரட்சித் தலைவி அவர்களின் ஏற்பாட்டால். ஆனால் பேங்கிலே இதுவரையில் கடன் கொடுக்கப்படவில்லை. பலமுறை சொல்லியும், பலமுறை தொலைபேசி மூலம் சொல்லியும் கடன் கொடுக்கவில்லை. அந்தக் கேணிகள் அப்படியே நின்றுகொண்டிருக்கின்றன. தற்போது மழை பெய்கிற நேரத்தில் அந்தக் கேணிகள் எல்லாம் தூர்ந்து போய் மோசமான நிலைக்குப் போய்விடுகிற ஒரு சூழ்நிலையும் ஏற்படப்போகிறது. ஆகவே விரைந்து இது குறித்து ஸ்பெஷலாக—தமிழ்நாடு முழுவதும், என் தொகுதியில் மட்டுமல்ல; தமிழ்நாடு முழுவதும் இதே நிலைதான் இருக்கிறது. ஆகவே இதை உடனடியாகத் தனிக் கவனம் செலுத்தி அங்கே பேங்கிலே இருந்து மோட்டார் வாங்கக் கடன் கொடுப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் உங்களைப் பணிவன்போடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

யர்களையெல்லாம் சட்டப் பேரவை உறுப்பினர்களாக்கி, அமைச்சராக்கி, செயல்படுத்துகிற பாங்கினைப் பார்க்கிறபோது, உண்மையிலேயே புரட்சித் தலைவி அவர்கள் அண்ணாவின் கொள்கைக்கிணங்க ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டு கொண்டிருக்கிறார்கள். இந்த ஆதி திராவிடர் பழங்குடியினர் மானியத்தின் மீது புரட்சித் தலைவி அவர்கள் எந்த அளவுக்கு அக்கறை கொண்டு, இந்தமானியக் கோரிக்கையின் மீது கவனம் செலுத்தி, இந்தச் சமுதாய மக்களுக்கு கடந்த காலத்தில் பல ஆட்சிகள் இருந்தாலும், அவை செய்யத் தவறிவிட்ட காரியங் களைச் செய்வதற்காகவே புரட்சித் தலைவி அவர்கள் இங்கே அமர்ந்து, இந்த விவாதத்தை கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், இந்தத் தமிழகத்தில் இருக்கிற ஆதி திராவிட மக்களுக்கு அவர் உண்மையாகவே தெய்வமாக விளங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது பகட்டுக்காக அல்ல. உண்மையிலேயே புரட்சி தலைவி அவர்கள் நமது பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மறைந்த பிறகு ஆதி திராவிட மக்களுக்கு, அனாதைகளாக இருந்த மக்களுக்கு தலைவர் யார் என்று தேடிக் கொண் டிருந்த நேரத்திலேதான், புரட்சித் தலைவி அவர்கள் தலைவ ராகக் கிடைத்தார்கள். அண்ணன் அந்தியூர் பெரியசாமி அவர் கள் பேசும்போது உண்மையிலேயே எனக்கெல்லாம் வேதனை யாக இருந்தது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு அமைச்சர் இன்னொரு உறுப்பினரைக் குறிப்பிடும்போது, மாண்புமிகு உறுப்பினர் என்று குறிப்பிடவும்.

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்:</u> மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பெரியசாமி அவர்கள் குறிப்பிடுகிறபொழுது.....

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அண்ணன் தம்பி உறவு என்பது வழக்கமாக இங்கே கூறிக் கொள்வதல்ல.

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்:</u> அன்றைக்கு இருந்த அரசியல் சூழ்நிலைகளிலே நாங்களெல்லாம் தவித்துக் கொண் டிருந்த நிலையிலே, நான் சட்டப் பேரவை உறுப்பினர் புரட்சித் தலைவி அவர்களைப் பார்க்க முடியாத சூழ்நிலை.

பிற்பகல் 7-35

வெளியிலே வந்தால் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் புரட்சித் தலை வியின் ஆணைக்கிணங்க என்னைப் பாதுகாத்தார்கள். அதன்பிறகு இதே சட்டமன்றத்திலே நான் ஓட ஓட விரட்டி அடித்துத் துரத் தப்பட்டேன் திரும்ப இந்தச் சட்டப்பேரவைக்கு உறுப்பினராக வருவேனா என்று நினைத்த காலத்தில்தான், புரட்சித் தலைவி



அவர்கள் மனம் கனிந்து எனக்கு சீட்டுக் கொடுத்து எனக்கு எந்தவித சிரமமும் கொடுக்காது சட்டப் பேரவை உறுப் பினராகவும், அமைச்சராகவும் ஆக்கியிருக்கிறார்கள் என்பதை எந்த நேரத்திலும் என் வாழ்நாள் முழுவதும் அவர்களைத் தெய் வமாகக் கருதிக் கொண்டு இருப்பேன் என்றும், அவர்தான எங் களின் குலதெய்வம் என்று கூறி, அவர் எந்த முடிவை எடுத் தாலும் அதுதான் என முடிவு, அவரது அரசியல் எதுவோ அது தான் என்னுடைய அரசியல் என்று கூறிக் கொள்கிறேன். அறிஞர் அண்ணாவை நான் பார்த்தது இல்லை. அவரின் கொள் கைகளைக் கேட்டு அறிந்திருக்கிறேன். புரட்சித் தலைவிதான் என்னை சட்டப் பேரவை உறுப்பினர் ஆக்கினார்கள். 'நான் அவர்களுடன் அதிகம் பழக முடியாத சூழ்நிலை. புரட்சித் தலைவி அவர்கள் என்னை நன்கு உணர்ந்து இந்த மாபெரும் பொறுப்பை எனக்குக் கொடுத்த இந்த மாமன்றத்திலே பேசக் கூடிய வாய்ப்பையும் எனக்குத் கொடுத்து இருக்கிறார்கள். இந்த மாமன்றத்திலே மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர் திரு. பொன்னூர் வரதன் பேசும்போது முன்னாலே இருந்த முத லமைச்சரைப்பற்றிச் சொன்னார்கள். நான் இப்போது இருக் கிற இதய தெய்வத்தையும் பற்றிச் சொல்லி ஆக வேண்டும். இந்தப் பொறுப்பைக் கொடுத்த உடனேயே என்னை அழைத்து இந்த இலாக்காவில் மிக நல்ல முறையில் சைன் பண்ண வேண்டு மென்று சொன்னார்கள். அதாவது சுதந்திரமாக செயல்பட வேண்டுமென்று சொன்னார்கள். 3 மாத காலமாக புரட்சித் தலைவி என்ன நினைக்கிறார்களோ அதுதான் நடக்கிறது. கடந்த காலத்தில் தி.மு.க. தலைவர் செய்த தவறை புரட்சித் தலைவி அவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் எந்தக் காலத்திலும் செய்யமாட்டார்கள். ஏனென்றால் ஆதி திராவிட மக்களுடைய ஒட்டு மொத்த ஆதரவை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆதி திராவிட மக்கள் அவர்கள் மீது முழு நம்பிக்கை வைத்திருக்கி றார்கள். என்ற காரணத்திற்காக இங்கே வந்திருக்கிற உறுப்பினர் களின் எண்ணிக்கையைப் பார்த்தாலே உங்களுக்குத் தெரியும். அந்த அளவுக்கு தமிழகத்து மக்கள் அதிக ஆதரவைக் கொடுத் திருக்கிறார்கள். ஆதி திராவிட மக்கள் புரட்சித் தலைவி அவர்கள் மீது அபரிமிதமான அன்பை வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். வீட்டுமனைப் பட்டா பெறுவதற்கு கோட்ட அளவிலே செல்ல வேண்டியிருக்கிறது என்றார்கள். தற்போது வேலைப் பளுவைக் கணக்கிட்டு 7 வட்டத்திற்கு ஒரு தனி வட் டாட்சியர் என்று நியமித்து வீட்டுமனைப் பட்டாக்கள் போன்ற கோரிக்கைகள் கவனிக்கப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) தாலுக்காவில் உள்ள ரெகுலர் தாசில்தாரரிடம் மனு கொடுத்தாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரி

[திரு. எம். ஆனந்தன்] [1991 செப்டம்பர் 19

வித்துக்கொள்கிறேன். தாழ்வான பகுதியில் குடியிருக்கும் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறார்கள் என்று இங்கே சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின் பேரில், அவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்யப்படும். ஒவ்வொரு இனத்திற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவு தேவைப்படுகிறது என்று சொல்வது சரியானது அல்ல. நில ஆர்ஜிதம் செய்யும்போது நஞ்சை நிலமாக இருந்தால், வீடு கட்டுவதற்கு நில ஆர்ஜிதம் செய்தால் மட்டுமே மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதி தேவைப்படுகிறது. அகில இந்தியப் பணிகளுக்காக தேர்வுகளில் பங்கு கொள்ளும் ஆதி திராவிடர் பழங்குடி மாணவர்களுக்கு வெற்றி வாய்ப்பை அதிகமாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்களுக்கு தேர்வுக்கு முந்தைய பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தத் தேர்வுகளில் இலட்சக்கணக்கான மாணவர்கள் போட்டியிடுகிறார்கள் என்பதை நாம் கருத்தில் கொண்டு பார்த்தால் சென்ற ஆண்டில் பயிற்சி பெற்ற ஆதி திராவிட மாணவர்கள் 60 பேரில் இறுதித் தேர்வில் வெற்றி பெற்ற 3 பேர் பணியில் சேர தகுதி பெற்றிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே பெற்ற பயிற்சி அந்த 3 பேருக்கும் வெற்றி பெற உறுதுணையாக இருந்தது என்பதை மறக்கலாகாது.

பிற்பகல் 7-40

தமிழ்நாட்டில் 1988-89ஆம் ஆண்டுக்கு முன்னர் குறைந்தது இரண்டு தீண்டாமை ஒழிப்பு வழக்குகளேனும் தாக்கல் செய்யப்பட்ட கிராமங்களும் மற்றும் கடந்த 3 ஆண்டுகளில் ஆதி திராவிட சாதிக் கொடுமைகளால் மதம் மாற நேரிடும் என்ற அச்சுறுத்தல் சூழ்நிலை உருவாகிய கிராமங்களுமே தீண்டாமைக் கொடுமைகள் பரவிய கிராமங்களாகக் கணக்கில் கொள்ளப்பட்டன. மேலும், மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது நம் தமிழ்நாட்டிலே ஆதி திராவிட மக்கள் மிகச் சுதந்திரமாக இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்டை மாநிலமான ஆந்திரத்தை நீங்கள் பார்த்து இருக்கலாம். அது போன்ற கொடுமைகள் புரட்சித் தலைவி ஆட்சியில் நடைபெறாது என்பதற்கு உறுதி அளிக்கிறேன்.

மேலும், இங்கே பேசிய சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு ஒவ்வொருவராக நான் பதில் சொல்ல நேரிட்டால் நேரம் ஆகிக்கொண்டே போய்விடும் என்பதைக் கருத்தில் கொண்டு இங்கே 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதல் அறிக்கைபடி, தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகை 5.6 கோடி ஆகும். அதில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 1.15 கோடி மற்றும் பழங்குடியினர் 7 இலட்சம் ஆகும். அதாவது தமிழ்நாட்டில் மொத்த மக்கட் தொகையில் 20. சதவீதத்திற்கு மேலாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்



1991 செப்டம்பர் 19] [திரு. எம். ஆனந்தன்

வாழ்ந்து வருகிறார்கள். இந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், சமூகப் பொருளாதார வளர்ச்சியில் அவர்கள் நல்ல நிலையை அடையவும் நாடு சுதந்திரம் அடைந்த நாள் முதல் மைய அரசும் மாநில அரசும் பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகின்றன.

நமது புரட்சித் தலைவி அரசு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனுக்காக இலவச வீட்டுமனை, இலவச வீடுகள், ஆதி திராவிட நலப் பள்ளிகள், ஆதி திராவிட மாணவர்களுக்கு விடுதிகள், உடகாரச் சம்பளங்கள், சுயமாகத் தொழில் துவங்கக் கடன் வசதிகள், ஆதி திராவிடர் பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், தாட்கோ மூலம் அவர்களுக்குத் தொழில்கள் தொடங்க மானியம் மற்றும் முன்வைப்புத் தொகை வழங்குதல் போன்ற நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

ஆதி திராவிட மற்றும் பழங்குடி மக்களின் கல்வித் தரத்தை உயர்த்த மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வத்தின் அரசு மிகவும் அக்கறை கொண்டுள்ளது. அதன் காரணமாகத் தான் வரவு-செலவுத் திட்டத்தில் இத்துறைக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் 50 சதவீதத்திற்கும் மேலாக, அதாவது 56.94 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்துறையின் கீழ் 1,216 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 2,57,470 மாணவ மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள். இவர்களுக்கென 862 விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் பெண்களுக்கென 264 விடுதிகளும், ஆண்களுக்கு 598 விடுதிகளும் அடங்கும்.

பள்ளிகளில் ஆண்டுக்கு ஆண்டு மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு பள்ளிகளின் எண்ணிக்கையை கூடுதலாக்கும் நோக்கத்தோடு இத்துறையின் கீழ் இயங்கிவரும் சில தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் அரசு உயர்த்தியுள்ளது. இது தொடர்பாக, 1991-92ஆம் ஆண்டில் ரூபாய் 6.25 இலட்சம் செலவில் 50 இடைநிலை ஆசிரியர்களையும், 9 முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களையும், 13 கைத்திறன் தொழில் பயிற்றுனர்களையும், 20 உடற்பயிற்சி ஆசிரியர்களையும், 28 ஓவிய ஆசிரியர்களையும் ஆக மொத்தம் 120 ஆசிரியர்களையும் பல்வேறு நிலைகளில் பணியில் அமர்த்த இந்த அரசு உத்தேசித்துள்ளது. மேலும், 1991-92ஆம் ஆண்டில் ரூ. 20.5 இலட்சம் செலவில் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வகக் கருவிகளையும் மற்றும் தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான வரைபடங்கள், விளக்கப் படங்கள் மற்றும் இட வசதிகள் செய்து தரப்படும். இத்துறையின் கீழ் மொத்தம் 862 விடுதிகள் இயங்கி வருகின்றன.

[திரு. எம். ஆனந்தன்] [1991 செப்டம்பர் 19

1991-92 ஆம் ஆண்டில் மேலும், புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி 40 புதிய விடுதிகளை ஆரம்பிக்கவும் (மேசையைத் தட்டும் ஒலி), விடுதி ஒன்றுக்கு 50 மாணவர்கள் என்ற அளவில் மொத்தம் 2,000 மாணவர்கலளப் புதியதாகச் சேர்த்துக்கொள்ளவும் இந்த அரசு உத்தேசித்துள்ளது.

பிற்பகல் 7-45

இதற்காக ரூ. 32.42 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே இயங்கி வரும் விடுதிகளில் தேவைக்கேற்ப சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டில் 1,000 மாணவ மாணவியர்கலள சேர்த்துக் கொள்ளலாம் என்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். (மேசையைத தட்டும் ஒலி). ஆகவே, இந்த ஆண்டில் கூடுதலாக 3,000 மாணவ மாணவியர்கள் விடுதியில் தங்கிக் கல்வி பயில வசதி பெறுவர் என்பதை மிக மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வகையில் அரசுக்கு கூடுதல் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 39.92 இலட்சம் ஆகும். இத்துறையின் கீழ் மொத்தம் 28 மேல்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இந்தப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் கல்வித்தரத்தை உயர்த்தவும், நவீன பாடத் திட்டங்களுக்கு ஏற்றவாறு அறிவியல் பாடங்களை நல்ல முறையில் பயிற்றுவிக்கவும் ஆய்வுக் கூடங்கள் அமைத்துத் தருவதும் அவசியமாகும் என்பதை புரட்சித் தலைவி அவர்கள் உணர்ந்து, இதைக் கருத்திற்கொண்டு கடந்த ஆண்டு 10 மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இந்த ஆண்டு 10 மேல்நிலைப் பள்ளிகளில் ரூ. 17.50 இலட்சம் செலவில் ஆய்வுக் கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி).

இத்துறையின் கீழ் இயங்கி வரும் 862 மாணவ மாணவியர் விடுதிகளிச் படிப்படியாக சமையல் எரிவாயு—இன்டேன் கேஸ் கனெக்ஷன்— வசதி செய்து தர வேண்டுமென்பது இந்த அரசின் நோக்கமாகும். இந்த அடிப்படையில் இந்த ஆண்டு ரூ. 3.45 இலட்சம் செலவில் 10 விடுதிகளுக்கு இந்த வசதி செய்து தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). ஏற்கனவே, 91 விடுதிகளில் இதுபோன்ற வசதி செய்து தரப்பட்டுள்ளது. இந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர்களின் நலன் கருதி அனைத்து விடுதிகளுக்கும் மாவு அரைக்கும் இயந்திரம் வழங்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் உத்தேசித்து (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு ரூ. 2.69 இலட்சம் செலவில் 50 விடுதிகளுக்கு மாவு அரைக்கும் இயந்திரம் வழங்கப்பட இருக்கிறது. ஏற்கனவே 124 விடுதிகளுக்கு மாவு அரைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.



1991 செப்டம்பர் 19] [ திரு. எம். ஆனந்தன்]

கல்வித் தரத்தை உயர்த்த அரசு பள்ளிக் கல்வி இயக்ககம்
அவ்வப்போது கல்வித் திட்டங்களை மாற்றி வருகிறது. இத்
துறையின் கீழ் இயங்கி வரும் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரி
யர்களுக்கு கல்வித் திட்டங்களில் மாற்றங்களுக்கு ஏற்ப புத்
தூட்டப் பயிற்சி அளிப்பது மிகவும் இன்றியமையாததாகும்.
இதை கருத்திற் கொண்டு ரூ. 1.62 இலட்சம் செலவில் ஆசிரியர்
களுக்கு புத்தூட்டப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. முதலா
வதாக மூன்று மாவட்டங்களில் செங்கை-எம்.ஜி.ஆர்., திருச்சி,
தென்னாற்காடு மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட இருக்
கிறது. மாணவ, மாணவியர்களின் பொது அறிவை வளர்த்துக்
கொள்ள வசதி செய்து தரவேண்டுமென்று புரட்சித் தலைவி
அவர்கள் நினைத்து சுமார் 50 விடுதிகளில் நூலகங்கள் ஏற்படுத்தப்
பட்டு செய்தித்தாள்கள் மற்றும் பல்வேறு பொது அறிவை
வளர்க்கும் நூல்களும் வழங்கப்பட இருக்கின்றன. (மேசையைத்
தட்டும் ஒலி.)

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களின் வாழ்க்கைத்
தரத்தை உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் புரட்சித்
தலைவி அவர்கள் அக்கறை கொண்டு. இதன் அடிப்படையில்
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய வரவு-செலவுத்
திட்டத்தில் 10 அம்சத் திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள்.
அந்தத் திட்டம் வெற்றி பெற இத்துறையின் எல்லாத் தரப்பிலும்
அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று உறுதி அளிக்
கிறேன். கீழே குறிப்பிட்ட சில திட்டங்களைப் பற்றி குறிப்பிட
விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தில் வாழும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி
யினர் பொருளாதார வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு வருகிற
ஐந்தாண்டுகளில் 3.5 இலட்சம் குடும்பங்கள் பயனடைகிற வகை
யில் பொருளாதாரத் திட்டங்கள் தீட்டப்பட இருக்கின்றன.
இவற்றில் இந்த ஆண்டு கீழ்க்கண்டவாறு சுமார் 65 ஆயிரம்
நபர்கள் பயன் பெறும் வகையில் பொருளாதாரத் திட்டங்கள்
செயல்படுத்தப்படும்.

எல்லோருக்கும் குடியிருப்பு வசதி செய்து தரப்பட வேண்டு
மென்பது மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்
கள் அரசின் தலையாய கொள்கையாகும். அதன் அடிப்படை
யில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த
நான்கு இலட்சம் குடும்பங்களுக்கு வருகிற ஐந்தாண்டுகளில்
படிப்படியாக வீட்டு மனைகள் வழங்கப்பட வேண்டும் என்பது
இந்த அரசின் குறிக்கோளாகும். (மேசையைத் தட்டும் ஒலி).
இந்த ஆண்டில் 75,000 வீட்டு மனைகள் வழங்கப்படும்.
(மேசையைத் தட்டும் ஒலி).

திரு. எம். ஆனந்தன்] [1991 செப்டம்பர் 19

புரட்சித் தலைவர் அவர்கள் முதல்வராக இருந்தபோது ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டு கழகத்தின் மூலமாக இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வந்தன. அதன்பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர்கள் இக்கழகத்தில் போதிய பொறியாளர்கள், செயல்படுத்துவோர்கள் இருந்தும் ஆதிதிராவிடர் மேம்பாட்டுக் கழகத்திடமிருந்த இந்தப் பணிகளை ஊரக வளர்ச்சித் துறையிடம் ஒப்படைத்து, இந்தப் பணி 1989-90 ஆம் ஆண்டு முதல் ஊரக வளர்ச்சித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிற்பகல் 7-50

தமிழ்நாட்டில் உள்ள ஆதி திராவிட மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் விவசாயிகள் பயன் பெறுகின்ற வகையில், அவர்களுக்கு முழு மானிய அடிப்படையில் 10 ஆயிரம் கிணறுகள் வெட்டிக் கொடுக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இவை அனைத்தும் இந்த ஆண்டிலேயே வெட்டிக் கொடுக்கப்படும் என்று இந்த அரசு முடிவு எடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

ஆதி திராவிட மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள்சுமார்9,484பேர்கள் தொழில் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று வேலை வாய்ப்பிற்காக காத்திருக்கிறார்கள். அவர்களில் 5 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் ஒரு புதிய திட்டம் மேற்கொள்ளப்படும். இந்த ஆண்டு சுமார் ஆயிரம் பேர்கள் பயன்பெறும் வகையில், பயிற்சிப் பணி உதவி நல்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

தனி நபர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ், 1991-92 ஆம் ஆண்டில் சுமார் ஆயிரம் தொழில் முனைவோர்கள் உருவாக்கப்பட உள்ளார்கள். அதற்கான உதவித் தொகை மற்றும் தொடக்க உதவித் தொகை ரூ. 4 கோடியாகும்.

சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சுமார் 8 ஆயிரம் நபர்கள் பயன் பெறுவார்கள். வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களின் மூலம் 8,344 பேர்களும், நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வாங்கித் தருகின்ற வகையில் 1,571 பேர்களும், சிறுதொழில் முனைவோர் 500 பேர்களும், கால்நடை உதவி பெறுவோர் 1,550 பேர்களும், தொழில் பயிற்சி பெறுவர். தொழில் பயிற்சி பெறுவோர் 2,307 பேர்களும், கதர் கிராமத் தொழில் மற்றும் பட்டுப் பூச்சி வளர்ப்பு, பால் வளம், கூட்டுறவு முதலியவற்றில் 44,282 பேர்களும் பயன் பெறுவார்கள்.



1991 செப்டம்பர் 19] [திரு. எம். ஆனந்தன்]

பட்டுப் புழு வளர்ப்பதன் மூலம் ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு வருடத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் வருமானம் பெற வாய்ப்புள்ளது. மேலும் 5 பேர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு கிடைக்கிறது. இந்த அரசின் சார்பில் ஏற்கனவே திருத்தணியில் 1.1 கோடி செலவில் 300 ஆதி திராவிட குடும்பங்கள் பயன் பெறுகிற வகையில், ஒரு பட்டுப் புழு வளர்ப்புத் திட்டம் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 300 பேர்களில் 200 பேர்கள் ஏற்கனவே நிலம் உடையவர்கள் மீதம் உள்ளவர்களுக்கு அரசு சொந்தமாக நிலம் வாங்கித் தந்து, பாசன வசதியும் செய்து தர முடிவு செய்துள்ளது (மேசையைத் தட்டும் ஒலி).

ஆதி திராவிடர்களுக்கு வருகின்ற 5 ஆண்டுகளில் 3 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்ற இந்த அரசின் குறிக்கோளின்படி, இந்த ஆண்டு 50 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழ்நாட்டிலுள்ள 1,418 ஆதி திராவிடர் குடியிருப்புகள் எந்தவிதக் குடிநீர் வசதியும் இல்லாமல் இருக்கின்றன. இவை அனைத்திற்கும் இந்த ஆண்டே குடிநீர் வசதி செய்து தரப்படும் என்று புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

அதோடு இணைப்புச் சாலைகள் இல்லாத — மாண்புமிகு உறுப்பினர் தம்புசாமி அவர்கள் கேட்டதற்கு பதில் சொல்கிறேன் — 1,063 குடியிருப்புகளில் 500 குடியிருப்புகளுக்கு இந்த ஆண்டே இணைப்புச் சாலை வசதிகள் செய்து தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம், பழங்குடியினர் பொருளாதார முன்னேற்றத்திற்காக தோட்டக் கலை, கால் நடை வளர்ப்பு, கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பட்டுப் புழு வளர்ப்பு போன்ற பல்வேறு இனங்களுக்காக இந்த ஆண்டு 16.6 கோடி ரூபாய் செலவு செய்யப்பட இருக்கிறது. இந்தத் துறையின் கீழ் 1,216 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவை அனைத்தும் அரசுக் கட்டிடங்களில் இயங்க வேண்டும் என்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய கொள்கையாகும். இதன் அடிப்படையில், இந்த ஆண்டு 165 இலட்சம் செலவில் 12 பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட இருக்கின்றன.

தாட்கோ மூலம் பலவகையான கடன்கள் வழங்கப்படுகின்றன. மார்ஜின் மணியும் கொடுக்கப்படுகிறது. இங்கே பேசுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்கள் சொன்னார்கள். 5 ஆயிரம் ரூபாய் மானியம் தருவதாகப் பேசினார்கள். புரட்சித் தலைவியின் அரசு, கவர்னர் ஆட்சியில் போட்ட உத்தரவை

மாற்றி, இவர்கள் பொறுப்பேற்ற பிறகு, ஒவ்வொரு ஆதி திராவிட குடிமகனும் 15 ஆயிரம் ரூபாய் மானியம் பெறுகிற வகையில் உத்தரவு போட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

பெரும்பாலும் கிராமப்புற மக்களுக்கு இவைகள் தெரிவதில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள், தாங்கள் சுற்றுப் பயணம் செய்யும்போது பாமர மக்களுக்கு, அரசு செய்யும் உதவிகளை எடுத்துக் கூற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆதி திராவிட நலத்துறையின் கீழ் இலவசமாக, தையல் மெசின்கள், இஸ்திரிப் பெட்டி, மற்றும் பல்வேறு வகையான தொழில் உபகரணங்கள் பெற போதிய மனுக்கள் வராமையால், உதவிகள் தக்க நபர்களுக்குப் போய்ச் சேராமல் கிடக்கிறது.

பிற்பகல் 7-55

காரணம் இது போன்ற வசதிகள் இருப்பது கிராமப்புற மக்களுக்கு தெரிவது இல்லை. எனவே மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் இந்தத் திட்டங்களைக் குறிப்பாக ஆதி திராவிட மக்களுக்குரிய திட்டங்களைப் புத்தக வடிவிலே போட்டு வைத்திருக்கிறோம். அதைப் படித்து ஆங்காங்குள்ள கிராமப்புற மக்களுக்கு சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தாட்கோ மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களில் மருத்துவர்கள், பொறியாளர்கள், தொழிற் கல்வி பெற்ற ஏனையோர் அனைவரும் சொந்தமாக தொழில் தொடங்க உதவிகள் கொடுக்கப்படும். மாண்புமிகு தமிழக முதல்வர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ரூ.15,000 மானியமும், ரூ. 85,000 மார்ஜின் பணமும் கொடுத்து, ரூ. 4 இலட்சம் வங்கிக் கடன் கொடுத்து உதவப்படுகிறது. இங்கே பேசிய உறுப்பினர்களுக்கு நான் இந்த வெட்டுத் தீர்மானத்தில் இருக்கிற அனைத்தையும் படிக்க வேண்டுமென்று சொன்னால், நேரமாகிவிடும். எனவே இங்கே உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில் ஒரு சில அறிவிப்புக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்வார்கள்.

<u>மாண்புமிகு திரு.எம். ஆனந்தன்</u> ஆதி திராவிட மக்களின் நலனில் அக்கறை கொண்ட நமது மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் இங்கே நீங்கள் மகிழ்ச்சியுறுகின்ற வகையில் அறி ஆணைகளை வழங்கியிருக்கிறார்கள்.



கடந்த காலத்தில் நமது புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். அவர்கள் ஆதிதிராவிட மக்கள் இறந்து விட்டால், அவர்கள் குடும்பத்திற்கு ரூ. 50-ஐ ஈமச் சடங்கிற்காக ஒதுக்கி வந்தார்கள். அதன் பிறகு அவர்கள் காலத்தில் அது ரூ. 100 ஆக மாற்றப்பட்டது. அதன் பிறகு வந்த ஆட்சி ஆதி திராவிட மக்கள் நலனில் அக்கறை காட்டவில்லை என்பதற்காகச் சொல்ல வருகிறேன். புரட்சித் தலைவர் வழங்கிய அந்த ரூ. 100 இன்று நம்முடைய மாண்புமிகு தமிழகத்தின் முதலமைச்சர், தாயுள்ளங்கொண்ட நமது புரட்சித் தலைவி அவர்கள் ஆதிதிராவிடர் கஷ்டங்களை உணர்ந்து அந்த ரூ. 100-ஐ, ரூ. 200 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். என்பதை நான் சொல்வதில் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதே போன்று நம் புரட்சித் தலைவி ஆட்சியின் மூலமாக வெட்டப்படவிருக்கின்ற 10,000 கிணறுகளுக்கு ஆதிதிராவிட மக்கள், மின் வசதியைப்பெற முன்னுரிமை அடிப்படையில் தனிச் சிறப்புத் திட்டத்தின்கீழ் 9,000 கிணறுகளுக்கு இலவசமாக மின் இணைப்பு வழங்கப்படும் என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று பொது விடுதிகளில் ஹாஸ்டல்களில் 'ப்ரொஃபஷனல் கோர்ஸ்' படிப்பவர்கள் — டாக்டர்கள், இன்ஜினியர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள் பொது விடுதிகளில் இதுவரையில் இல்லாத 18 சதவீதம் இட ஒதுக்கீட்டை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

மேலும் இங்கே தமிழகத்திலே தன்னிகரில்லாத தலைவியாகவும் தாழ்த்தப்பட்ட ஏழை எளிய மக்களின் கஷ்டங்களை உணர்ந்த தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் இந்தப் பொறுப்பிற்கு வந்த பிறகு மூன்று மாத காலத்தில் (குறுக்கீடு) ஆதிதிராவிட மக்களுக்காகச் செய்த சலுகைகள் ஏராளம். (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவர் மூன்று மாதம் என்று தான் சொன்னார். அப்படியே இருக்கட்டும்.

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்</u> : எனவே இங்கே மாமன்றத்தில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய பதில் நிறைவு பெறுகின்ற காரணமாக உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை அருள்கூர்ந்து திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று வேண்டுகிறேன்.

1991 செப்டம்பர் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது ; இப்போது வாக்கெடுப்பு.

பிற்பகல் 8—00

கோரிக்கை எண். 31— பழங்குடியினர் ஆதிராவிடர் முதலியோர் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண்.31— பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன்— வெட்டுத் தீர்மானங்கள் வற்புறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றது.

பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன் பற்றிய 31ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூபாய் 102,96,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் '' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)'

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது

(மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. பேரவை மீண்டும் நாளை (20—09—1991) காலை 9-30 மணிக்கு கூடும்.வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 8-01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



1991 செப்டம்பர் 19]

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

97. மேற்கு வங்க அரசுக்கு தமிழக அரசினால் விற்கப்பட்ட ஒரு சேடக் ஹெலிக்காப்டருக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2— 1— 1991-ஆம் நாளிட்ட 2-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

98. மதுரை, திருவாளர்கள் ருக்மணி மில்ஸ் லிமிடெட்டினால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை 28— 5— 90 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளிப் போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2—1—91 ஆம் நாளிட்ட 6-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

99. திருச்சி, திருவாளர்கள் சதர்ன் ஹைட்ரோ கார்ப்பன்ஸ் லிமிடெட்டினால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை ஜூன் 1990 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளிப்போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2— 1— 1991-ஆம் நாளிட்ட 7-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

100. கோவை, சிங்கநல்லூர், திருவாளர்கள் லாயல் மெசின் ஒர்க்ஸ் லிமிடெட்டினால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை நவம்பர் 1989 முதல் அக்டோபர் 1992 வரை மூன்று ஆண்டுகளுக்கு தள்ளிப்போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 26— 3— 1991-ஆம் நாளிட்ட 177-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

101. மேட்டூர் டேம், திருவாளர்கள் மேட்டூர் டெக்ஸ் டைல்ஸ் பிரைவேட் லிமிடெட்டினால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை 24—10—1990 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளிப்போடுவது குறித்து 27—3—1991-ஆம் நாளிட்ட 178-ஆம் எண் அரசாணையில்வெளியிடப்பட்டஅறிவிக்கை தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

102. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (1948-ஆம் ஆண்டு மின்சாரச் (விநியோகித்தல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (5) (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

103. மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் 1989-90-ஆம் ஆண்டிற்கான எட்டாம் ஆண்டறிக்கை (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

69. கோரிக்கை எண். 24—பெருந்தொழில்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

70. சமூக நலத் துறை குறித்த செயல் திறன் குறிப்பு, 1991-92 (ஆங்கிலம்).

71. பொது நிறுவனங்கள் குழுவின் ஆறாவது அறிக்கை, 1991-92.

72. பொது நிறுவனங்கள் குழுவின் ஏழாவது அறிக்கை, 1991-92.





## இணைப்பு-I.

... ... ...29-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

### கொள்கை விளக்கக் குறிப்பு 1991-92

### பெருந்தொழில்கள்.

### தற்போது செயலாக்கப்பட்டு வருகின்ற திட்டங்கள்

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியின் வேகத்தை அதிகரிக்கும்
நோக்கத்துடன், மாநில அரசு பல ஊக்கச் சலுகைகள் வழங்கும்
திட்டங்களைச் செயலாக்கி வருகின்றது. தொழிற்சாலைகளின்
தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பல ஆண்டுகளாக, தொழில்
வளர்ச்சிக்கான முகவரமைப்புகள் உருவாகியுள்ளன. இவற்றில்,
மின்னணுவியல் போன்ற குறிப்பிட்ட தொழில்களின் வளர்ச்சிக்
கான நிறுவனங்களும் அடங்கும்.

தொழில் வளர்ச்சிக்காக அளிக்கப்படும் ஊக்கச் சலுகைகள்,
முகவரமைப்புகள், அவற்றின் பணிகள் குறித்த சுருக்க விவரம்
வருமாறு :—

### ஊக்கச் சலுகைகள்

இந்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கச் சலுகைகள் வழங்கு
இற மாநிலங்களில் சிறந்த ஒன்றாக கருதப்படுகின்ற இம்மாநிலத்
தின் ஊக்கச் சலுகைத் திட்டத்தில் முக்கியமாக, தொழில்
துறையில் பின்தங்கிய பகுதிகளில் முதலீட்டுடன் சேர்ந்த மூலதன
உதவித் தொகை அளிக்கும் திட்டமும், விற்பனை வரி தள்ளுபடி
விற்பனை வரி செலுத்துவதை ஒத்திப் போடுதல் சலுகைத் திட்ட
மும் அடங்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட சில வகைத் தொழில்
களுக்கு அவை அமைந்துள்ள இடம் எதுவாக இருந்தாலும், முத
லீட்டுச் சிறப்பு உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

தொழில் திட்டங்களில் காலதாமதத்தை முழுமையாக தவிர்க்
கும் நோக்கத்துடனும், அதே சமயத்தில் சம்பந்தப்பட்ட முகவ
ரமைப்புகள் எளிதில் தொழில் திட்டங்களைச் செயலாக்க உதவும்
பொருட்டும், மூலதன உதவித் தொகை வழங்கும் திட்டம், நடப்பு
நிதி ஆண்டில் சீரமைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர், உதவித்
தொகையும், விற்பனை வரிச் சலுகைகளும், புதிய தொழிற்சாலை
களுக்கும் விரிவாக்கப் பணியை மேற்கொள்ளும் தற்போதுள்ள
தொழில் பிரிவுகளுக்கும் வழங்கப்பட்டன. ஆனால் தொழில்
திட்டங்களில் ஒரே ஒரு விரிவாக்கத் தொழில் திட்டப் பணிக்கு
மட்டுமே மேற்சொன்ன சலுகைகள் இதற்கு முன்னர் [illegible]கப்

பட்டன. தற்போது தொழில் திட்டங்களில் எத்தனை முறை விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டாலும் அத்தனை முறையும் மேற்சொன்ன சலுகைகள் அவற்றுக்கு வழங்கப்படுகின்றன.

## மாநில மூலதன உதவித்தொகை

தொழில் துறையில் பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய வட்டங்களிலும், "சிப்காட்" தொழில் வளாகங்களிலும், தொழில் வளர்ச்சி மையங்களிலும், சிட்கோ, சென்னை ஏற்றுமதி மண்டலம், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் உட்பட அரசின் முகவர மைப்புகள் ஏற்படுத்திய தொழிற்பேட்டைகளிலும் அமைக்கப்படவிருக்கும் நிலையான நடுத்தர தொழில்கள், பெருந்தொழில்கள், சிறுதொழில்களுக்கும் அவற்றின் இருப்புகளின் மதிப்பில் 15 சதவீதம் தொகை மூலதன உதவித் தொகையாக உயரளவு ரூ. 15 இலட்சம் என்கிற அளவிற்கு உட்பட்டு, வழங்கப்படுகிறது.

## மூலதனச் சிறப்பு உதவித் தொகை — மின்னணுவியல் தொழில்கள்

தமிழ்நாட்டில் மின்னணுவியல் தொழிற் பிரிவுகள் எந்த இடத்தில் அமைக்கப்பட்டாலும், அவை, நிலையான சொத்து வகையில் செய்துள்ள முதலீட்டில் 20 சதவீதத் தொகையை உயரளவாக ரூ. 35 இலட்சம் என்பதற்குட்பட்டு சிறப்பு உதவித் தொகையாகப் பெறத் தகுதி வாய்ந்தவையாகும். இது, சிறு தொழில்களுக்கும், நடுத்தரத் தொழில்களுக்கும் பெருந் தொழில்களுக்கும் பொருந்தும்.

## தோல் பதனிடு தொழிற்சாலை

தமிழ்நாட்டில் தோல் பதனிடும் தொழிற் பிரிவுகள் எந்த இடத்தில் அமைக்கப்பட்டாலும், அவை, நிலையான சொத்து வகையில் செய்துள்ள முதலீட்டில் 20 சதவீதத் தொகையை உயரளவாக ரூ. 20 இலட்சம் என்பதற்குட்பட்டு, சிறப்பு உதவித் தொகையாகப் பெறத் தகுதி வாய்ந்தவையாகும்.

## தெரிந்தெடுக்கப்பட்ட சிலவகைத் தொழில்களுக்கு சிறப்பு உதவித் தொகை.

பின்வரும் தொழில் வகைகளின் கீழ் வருகின்ற தொழில்களுக்கு அவற்றின் நிலையான சொத்து வகையில் செய்துள்ள முதலீட்டில் 10 சதவீதத் தொகை, உயரளவு ரூ. 15 இலட்சம் என்பதற்குட்பட்டு, சிறப்பு உதவித் தொகை வழங்கப்படும் :—

(1) மோட்டார் வாகன உதிரி பாகங்கள்.

(2) மருந்து வகைகள்.

(3) சூரிய சக்தியைக் கொண்டு இயங்கும் சாதனங்கள் மற்றும் புதிய எரிசக்திச் சாதனங்கள்.



(4) ஏற்றுமதிக்கான தங்கம் மற்றும் வைர நகைகள் செய்யும் பிரிவுகள்.

(5) மாசுக் கட்டுப்பாட்டுச் சாதனங்கள்.

(6) சணல் தயாரிப்பு தொழில், அம்பாசமுத்திரம் (திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம்), மதுரை (மதுரை மாவட்டம்), முசிறி (திருச்சி மாவட்டம்), கும்பகோணம் (தஞ்சாவூர் மாவட்டம்), மற்றும் (தென் ஆற்காடு மாவட்டம்), மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் எம்ஜி.ஆர் வட்டங்களில் மட்டும்.

(7) விளையாட்டுப் பொருள்கள் மற்றும் துணைப் பொருட்கள்.

(8) உணவுப் பொருட்கள் பதப்படுத்தும் தொழில்கள்.

(9) அலுமினியம், பி.வி.சி. கதவுகள் சன்னல்கள், சன்னல் சட்டங்கள் முதலியவை போன்ற விலைக்கேற்ற பயன்தரும் கட்டுமானப் பொருட்கள்.

## உற்பத்தி இயந்திரங்கள் வாங்க உதவித் தொகை

சொந்தப் பயனுக்காக புதிதாக வாங்கப்பட்டுள்ள மின் உற்பத்தி இயந்திரங்கள், அவற்றின் விலையில் 15 சதவீதம் வரையில் உயரளவாக ரூ. 5.00 இலட்சம் அளவிற்கு உதவித் தொகை பெறத் தகுதியுடையவையாகும்.

## மிகப் பெருந் (MEGA) தொழில்களுக்கான உதவித் தொகை

ரூபாய் நூறு கோடி மற்றும் அதற்கு அதிகமாக முதலீடு செய்யப்பட்டுள்ள தொழில்களுக்கு ரூ. 50 இலட்சம் சிறப்பு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. ரூ. 50 கோடியிலிருந்து ரூ. 100 கோடி வரை முதலீடு செய்யப்பட்டுள்ள தொழில்களுக்கு ரூ. 25 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

## விற்பனை வரி தள்ளுபடி / விற்பனை வரி செலுத்துவதை ஒத்திப்போடுதல்.

புதிய தொழிற் பிரிவுகளும் விரிவாக்கம் செய்யும் பல தொழிற் திறப்படுத்தும் பணியை மேற்கொள்ளும் தற்போதுள்ள தொழிற் பிரிவுகளும் விற்பனை வரியைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்தல் / விற்பனை வரி செலுத்துவதை ஒத்திப் போடுதல் சலுகையைப் பெறத் தகுதியுடையவையாகும். 1-4-1991

முதற்கொண்டு விற்பனை வரி செலுத்துவதை ஒத்திப்போடும் திட்டத்தை இம்மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளும், சில வரையறைக்குட்பட்டு பயன்படுத்திக் கொள்ளலாம். விரிவாக்கப் பணியை / பல திறப்படுத்தும் பணியை மேற்கொள்ளும் தற்போதுள்ள தொழில்களுக்கு அவை எத்தனை முறை விரிவாக்கப் பணியை / பல திறப்படுத்தும் பணியை மேற்கொண்டாலும் எண்ணிக்கை வரையறை ஏதுமின்றி விற்பனை வரியைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்தல் / விற்பனை வரி செலுத்துவதை ஒத்திப் போடுதல் சலுகை அளிக்கப்பட்டுள்ளன.

ரூ. 50 கோடியிலிருந்து ரூ. 100 கோடி வரை முதலீடு செய்யப்பட்டுள்ள தொழில்கள் ஐந்தாண்டு காலத்திற்கு விற்பனை வரியைக் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்தல் அல்லது 10 ஆண்டுகளுக்கு விற்பனை வரி செலுத்துவதை ஒத்திப் போடுதல் வசதியையும் ரூ. 100 கோடி அல்லது அதற்கு மேற்கொண்டு முதலீடு செய்துள்ள தொழில்கள் 6 ஆண்டு காலத்திற்கு விற்பனை வரியை கணக்கிலிருந்து தள்ளுபடி செய்தல் அல்லது 12 ஆண்டுகளுக்கு விற்பனை வரி செலுத்துவதை ஒத்திப் போடுதல் வசதியையும் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றன.

## முத்திரைத்தாள் தீர்வைச் சலுகை

தொழில் மனைகள், தொழிற் கூடங்கள் போன்றவற்றின் விற்பனை, குத்தகை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது ''சிப்காட்'' ( SIPCOT ), ''சிட்கோ'' ( SIDCO ), தொழில் வணிகத் துறை இயக்ககம் ஆகியவற்றிற்கும் தொழில்முனைவோர்களுக்கும் இடையே செய்து கொள்ளப்படும் விற்பனை, குத்தகை ஏற்பாட்டிற்கு, முத்திரைத்தாள் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் மேம்படுத்தப்பட்ட தொழிற் பிரிவுகளுக்கும், மனைகளுக்கும் இச்சலுகை பொருந்தும்.

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO)

இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை விரைவு படுத்துவதில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) முக்கிய பங்கு வகிக்கிறது. ''டிட்கோ'' மூலம் செயல்படுத்தப்பட்ட தொழில் திட்டங்களில் சிமெண்ட், இரும்பு - உருக்கு, இரசாயன உரங்கள், இரசாயனப் பொருட்கள், பெட்ரோல் இரசாயன பொருட்கள், உயர் தொழில் நுட்ப வேளாண் இரசாயனப் பொருட்கள், கடல்படு இரசாயனப் பொருட்கள், மருந்துகள், மருந்தாக்கியல் பொருள்கள், பொறியியல் பொருட்கள், கைக் கடிகாரங்கள், பணி நிறைவு பெற்ற தோல், காலணிகள், கண்ணாடிகள், தொழில் பயன் வெடி மருந்துகள், நுகர்வோருக்கான தொழில்களுக்கான மின்னணுவியல் பொருள்கள், தொலைத் தகவல் தொடர்பு கம்பி வடங்கள், முதலிய பல திறத் தொழில் பிரிவுகள் அடங்குகின்றன.



தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தி கூடுதல் திட்டங்களில் ஈடுபடும் வகையில், இணைத் துறை திட்டங்களின் (Associate Sector Project) பங்கு மூலதனத்தில் 11 சதவீதம் வரை டிட்கோ முதலீடு செய்யுமாறு வகை செய்யப்பட்டுள்ளது. (கூட்டுத் துறையில் முதலீடு 26 சதவீதமாக உள்ளது).

இது வரையில், மொத்தம் ரூ. 1,466 கோடி மூலதனச் செலவில் டிட்கோ 64 தொழில் திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்நிறுவனம் அண்மையில் பின்வரும் 9 தொழில் திட்டங்களைக் கண்டறிந்துள்ளது :—

1. பழங்கள் செய்முறைப்படுத்தும் தொழில் பிரிவு.

2. ட்டிரான்ஸ்பர் ஃப்ளூயிட் தொழில் திட்டம்.

3. நைட்ரோ பாஸ்பேட் தயாரிப்புத் தொழிற் பிரிவு.

4. ''அக்ரிலிக்'' தொழிற்பிரிவு.

5. அலுமினியம் தகடுகள் தயாரிப்புப் பொருள்கள்.

6. தென்னையை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள்.

7. டிகேடின் டெரிவேடிவ்ஸ் தொழில் திட்டம்.

8. மரவள்ளிக்கிழங்கிலிருந்து கூடுதல் நடுநிலை ஆல்கஹால் தயாரிப்பு.

9. நிலக்கரிச் சாம்பலிலிருந்து செங்கற்கள் தயாரிப்பு.

மேற்சொன்ன அனைத்துத் தொழில் திட்டங்களுக்கும் மொத்தமாக ரூபாய் 800 கோடி மூலதனச் செலவு ஏற்படும் என்றும், இவை 1994-95-ல் தொடங்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் :

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் நவீன ஒருங்கிணைந்த காகித ஆலை ரூபாய் 240 கோடி செலவில் நிறுவப்பட்டது.

உலகிலேயே முதல் முறையாக வணிக முறையில், கரும்புச் சக்கையிலிருந்து செய்தித்தாள், அச்சுத்தாள், எழுதுதாள் ஆகியவற்றைத் தயாரிக்கும் புதிய தொழில் நுட்ப முறை ஒன்றை இத்தொழில் திட்டம் செயல்படுத்துகிறது. இத்தொழில் திட்டத்தின்படி உள்நாட்டில் செய்தித்தாள், காகித உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் இறக்குமதியைக் குறைப்பது, கரும்புச் சக்கையை பயன்படுத்துவதன் மூலம் காகித ஆலைகள் காடுபடு பொருள்களை அதிக அளவு சார்ந்திருப்பதைக் குறைப்பது ஆகிய இவ்விரு நோக்கங்கள் எய்தப்பட்டுள்ளன.

இந்நிறுவனத்தின் உற்பத்தித் திறன் 100 சதவீதத்திற்கும் அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

1990-91-ல் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் ரூபாய் 36.44 கோடி நிகர ஆதாயம் ஈட்டியுள்ளது. இதுவரை சேர்ந்து வந்த நிகர இழப்புத் தொகை ரூபாய் 18.97 கோடியை இந்த ஆண்டில் இந்நிறுவனம் சரிக்கட்டியுள்ளது. மேலும், இந்நிறுவனம் முதன் முறையாக 15 சதவீதம் ஆதாயப் பங்குத் தொகையை அறிவித்துள்ளது.

1991 மார்ச்சு திங்கள் இறுதிவரை, 3.28 இலட்சம் டன் செய்தித்தாளை இந்நிறுவனம் தயாரித்ததன் மூலம், ரூபாய் 354 கோடி அளவுக்கு விலை மதிப்புள்ள அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்துவதில் நாட்டிற்கு உதவியுள்ளது. இந்நிறுவனம் 16.52 இலட்சம் டன் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தியுள்ளது. இதன் விளைவாக 9.86 இலட்சம் டன் அளவிற்கு காட்டு மரங்களின் பயன்பாட்டை மிச்சப்படுத்தி அதன் மூலம் 33,000 ஹெக்டேர் பரப்பளவிலுள்ள காடு அழியாமல் பாதுகாக்கப்பட்டது.

இந்நிறுவனம் தற்போதுள்ள உற்பத்தித் திறனான ஆண்டொன்றுக்கு 90,000 மெட்ரிக் டன் என்னும் அளவை இருமடங்காக அதாவது 1,80,000 மெட்ரிக் டன் அளவிற்கு உயர்த்தக் கருதியுள்ளது. இந்த உற்பத்தியில், ஆண்டொன்றுக்கு 1,00,000 மெட்ரிக் டன் செய்தித்தாள் உற்பத்தியும் ஆண்டொன்றுக்கு 80,000 மெட்ரிக் டன் அச்சுக் காகிதம்— எழுதுதாள் உற்பத்தியும் அடங்கும். இத்திட்டத்திற்கு சுமார் ரூபாய் 395 கோடி செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக உலக வங்கி, இந்திய நிதியுதவி நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து நிதியுதவியைப் பெறுவதற்காக, இந்நிறுவனம் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

உலக வங்கி நிதியுதவியுடன் காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்யவும் சிறு அளவிலான புனல் மின் நிலையங்களை ஏற்படுத்தவும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் 20 மெகாவாட் முதல் 25 மெகாவாட் வரையில் கூடுதலாக மின் உற்பத்தித் திறனைப் பெறுவது நோக்கமாகும்.



ரூபாய் 1,000 கோடி மதிப்பீட்டுச் செலவில், 1 இலட்சம் மெட்ரிக் டன் செய்தித்தாளும், மற்றும் 1 இலட்சம் மெட்ரிக் டன் அச்சுத்தாள்— எழுதுதாள் தயாரிக்கும், ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் மெட்ரிக் டன் நிறுவுத் திறனுடன் தென்னாற்காடு மாவட்டத்தில் புதிய தொழில் திட்டம் ஒன்றைத் தொடங்குவதற்காக, இந்திய அரசிடமிருந்து அனுமதிக் கடிதத்தை தமிழ்நாடு செய்தித்தாள்— காகித நிறுவனம் பெற்றுள்ளது.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC).

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறிய நடுத்தர தொழில்களின் தேவையை நிறைவேற்றி வருகிறது. குறித்த காலக் கடனாக ரூபாய் 90 இலட்சம் வரை இக்கழகம் வழங்குகிறது. 31— 3— 1991 வரை, இக்கழகம் 56,350 தொழிற் பிரிவுகளுக்கு மொத்தம் ரூபாய் 1,086.35 கோடியைக் கடனாக வழங்கியுள்ளது. 1991-92-ல் குறித்த காலக் கடனாக ரூபாய் 225 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்ப வல்லுநர்கள் மகளிர்— தொழில் முனைவோர் முதலியோர் போன்ற சிறப்பு வகையைச் சேர்ந்த தொழில் முனைவோர் பயனடைந்துள்ளனர் என்பதை உறுதி செய்யும் நோக்குடன், 1991-92 ஆம் ஆண்டிற்கான தொழில் வாரியான இலக்குகள் வரையறுக்கப்பட்டுள்ளன. தொழில் பிரிவுகளுக்கு விரைவாக நிதி உதவியை அளிக்கும் வகையில், தற்போதுள்ள கடன் விண்ணப்ப மனுக்கள், கடன் வழங்கல் நடைமுறைகள் எளிமையாக்கப்பட்டுள்ளன. சீரமைக்கப்பட்டுள்ளன. கடன் அனுமதியை விரைவு படுத்தும் பொருட்டு, கடன் மனு பெறப்பட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்குள் அனுமதி வழங்க வேண்டுமென்று கால வரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து வண்டிகளுக்கு ரூபாய் 2.00 இலட்சத்திற்கு மேற்பட்டு வழங்கப்படும் கடன் தொகை நீங்கலாக ஏனைய தொழில் திட்டங்களுக்குக் கடன் வழங்குவதற்கு துணைப் பிணையம் கோருதல் தற்போது நீக்கப்பட்டுள்ளது. பிரபல தொழில் முனைவோர்களால் ஏற்படுத்தப்படும் தொழில் பிரிவுகளைப் பொறுத்தமட்டில் அவர்களிடமிருந்து சொந்தப் பிணையம் பெறும் நடைமுறை தற்போது கைவிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம். (ELCOT)

மின்னணுத் துணைக் கருவிகள், மக்கள் சாதன மின்னணுக் கருவிகள், தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் தானியங்கி (ஆட்டோமேஷன்) கருவிகள் முதலியன போன்ற மின்னணுக் கருவி

களைப் பெருமளவில் தயாரிக்கும் தனியார் தொழில் முனைவோருடன் 'எல்காட்' நிறுவனம் சேர்ந்தும், இணைந்தும், தொழில் வணிக முயற்சிகளை மேம்படுத்துகிறது. 140.96 கோடி ரூபாய் மூலதனச் செலவுகள் கூடிய 10 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் விவரம் வருமாறு :—

| தொடர் எண் | விவரம். | திட்டச் செலவு. | வேலை வாய்ப்பு பெறுவோர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் கோடியில்). | |
| 1 | திருவாளர் மதராஸ் ஹை-டெக் சர்க்யூட்ஸ் லிட்., (பிரிண்டட் சர்க்யூட் போர்டு). | 12.25 | 100 |
| 2 | திருவாளர் ஆல்ஃபா எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், (ஹைபிரிட் மைக்ரோ சர்க்யூட்ஸ்). | 8.90 | 200 |
| 3 | திருவாளர் எல்னெட் டெக்னாலஜிஸ் லிமிடெட். | 8.05 | 2,000 |
| 4 | திருவாளர் இண்டுகெம் கம்யூனிகேசன் லிமிடெட் (18, ஜி. எச். இசட். ஷார்ட் ஹால் மைக்ரோ வேவ் கம்யூனிகேஷன் சிஸ்டம்). | 3.80 | 100 |
| 5 | திருவாளர் சிட்டிசன் எல்காட் இந்தியா லிமிடெட், (ரேடியோ பேஜிங்சிஸ்டம்) | 2.43 | 75 |
| 6 | திருவாளர் எ.ஜி.டி. எலக்ட்ரானிக்ஸ் (பாயின்ட் ஆப் சேல் டெர்மினல்ஸ்). | 1.06 | 60 |
| 7 | திருவாளர் எல்காட் இன்டர்நேஷனல் ஃபெரைட்ஸ் லிமிடெட் (சாஃப்ட் ஃபெரைட்ஸ்). | 59.20 | 400 |
| | | (செலவு திருத்தப்படவுள்ளது) | |
| 8 | திருவாளர் திருஷால் எலக்ட்ரோ டெக்னாலஜிஸ் லிமிடெட். | 2.98 | 190 |
| | [மின்னணுவியல் தொழில்களுக்குப் பயன்படும் கருவிகள் (கனெக்டர்ஸ்) | 16.4 | 66 |
| 9 | திருவாளர் கம்யூனிகேசன் டிவிசன் (30 சானல் யு. ஹெச். எஃப். ரேடியோ). | | |
| 10 | மின்னணுவியல் நகரம் (எலக்ட்ரானிக்ஸ் சிடி) (ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல்). | 40.65 | |





## கணிப்பொறி நுண்பொருள் மையம்.

(சாஃப்ட்வேர் பார்க்—Scftware Park)

கணிப்பொறி நுண்பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கி, அவற்றை ஏற்றுமதி செய்யும் நோக்குடன் இந்திய அரசு நாட்டின் பல இடங்களில் கணிப்பொறி நுண்பொருள் தொழில் நுட்ப மையங்களை ஏற்படுத்தியுள்ளது தமிழ்நாடு அரசு, மத்திய அரசு நிதியுதவியுடன் ஒரு கணிப்பொறி நுண்பொருள் மையத்தை கோயம்புத்தூரில் நிறுவும் பணியில் ஏற்கெனவே ஈடுபட்டு வருகிறது.

## சென்னையில் கணிப்பொறி நுண்பொருள் மையம்.

தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் கூட்டுத் துறையில் கணிப்பொறி நுண்பொருள் மையத்தைச் சென்னையில் ஏற்படுத்தியுள்ளது. இது கணிப்பொறி நுண்பொருள் தயாரிப்புத் தொழில் முனைவோருக்கு இடவசதி அளிப்பதோடு, தேவைப்படும் பெரிய கருவிகளையும் வழங்க வகைசெய்யும். இந்த மையத்தில் முற்றிலும் 'டிஜிடல்' வகை தகவல் தொடர்புக்கான பொதுவான வசதிகளுக்கும் மையவசதிகளுக்கும் மேலும் "வி.எஸ்.என்.எல். ஹோஸ்ட் கம்ப்யூட்டர்" முதலிய கருவிகளின் மூலம் தகவல் அனுப்பும் வசதிகளுக்கும் வகை செய்யப்படும்.

'எல்காட்' நிறுவனம் தமிழ்நாட்டில் கணிப்பொறி நுண்பொருள் விவரங்கள் குறித்தும் அடுத்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டிலிருந்து கணிப்பொறி நுண்பொருள்களையும் பெருமளவில் ஏற்றுமதி செய்வதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளது. தற்போதைய ஏற்றுமதி அளவு 1990-95ஆம் ஆண்டுக்கான திட்டங்கள், மனித ஆற்றல் மற்றும் திறன், பொருள்களின் தேவையும் அவற்றை வழங்கும் திறனளவுக்கும் இடையேயான இடைவெளி, தேவைப்படும் குறுகிய கால தீவிரப் பயிற்சித் திட்டங்கள், ஏற்றுமதியாளருக்கு அரசின் ஆதரவு, துறை மூலதனத்திற்கு மானியங்கள், விற்பனை வசதி உதவி முதலிய விவரங்களும் ஆய்வு அறிக்கையில் அடங்கியுள்ளன.

[1991 செப்டம்பர் 19

## சர்க்கரைத் தொழில்

சர்க்கரையைப் பெருமளவுக்கு உற்பத்தி செய்யும் மூன்று
மாநிலங்களில் உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்
களுடன் தமிழ்நாடு மாநிலமும் ஒன்றாகத் திகழ்கிறது. இங்கு
31 சர்க்கரை ஆலைகள் தற்போது சர்க்கரையை உற்பத்தி
செய்து வருகின்றன. அவற்றின் மொத்த நிறுவு திறன்,
நாளொன்றுக்கு பிழிதிறன் 72,900 டன்கள் ஆகும். 17 சர்க்கரை
ஆலைகள் கூட்டுறவுத் துறை/பொதுத் துறையிலும் எஞ்சிய
14 சர்க்கரை ஆலைகள் தனியார் துறையிலும் அமைந்துள்ளன.

செய்யாற்றில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலையானது,
1991-ஆம் ஆண்டு பிப்ரவரியில் அரவையைத் தொடங்கியது.
எஸ். கந்தப்பன் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவும் பணி அரூர்
வட்டத்தில் நடைபெற்று வருகிறது. 1991 ஆம் ஆண்டு
டிசம்பர் மாதத்தில் இவ்வாலையில் உற்பத்தி தொடங்கப்படு
மென எதிர்பார்க்கப்படுகிறது. கச்சிரப்பாளையத்தில் கள்ளக்
குறிச்சி கூட்டுறவு சர்க்கரை அலையைக் (பிரிவு-II) கட்டு
வதற்கான ஆரம்ப நிலை நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.
இந்த நாலு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் நாளொன்றின்
2,500 டன்/3,500 டன் பிழி திறனை விரிவாக்கம் செய்ய
உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது நாளொன்றுக்கு 2,500 டன்
அரைவைத் திறனில் செயல்பட்டு வருகின்ற சேலம் கூட்டுறவுச்
சர்க்கரை ஆலையை நவீனப்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

## சர்க்கரை உற்பத்தியுடன் இணைந்த மின்சாரம் தயாரிக்கும் திட்டம் :

கரும்புச் சக்கையானது, சர்க்கரை உற்பத்திப் பொருளின்
ஒரு துணை உற்பத்தி பொருளாகும். மின் உற்பத்திக்கு இடு
பொருள் என்ற வகையில் மீண்டும் பயன்படுத்தத்தக்க கச்சாப்
பொருளாகக் கிடைக்கிறது. கரும்புச் சக்கையைப் பயன்
படுத்தி, சர்க்கரை உற்பத்தியுடன் இணைந்த மின் உற்பத்தித்
தொழிற் சாலைகள் இரண்டில், ஒன்று செய்யாறு கூட்டுறவுச்
சர்க்கரை ஆலையிலும் மற்றொன்று எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி
கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலும் நிறுவும் பணி நடைபெற்று
வருகிறது. ஒவ்வொரு தொழிற்சாலையும் 2.5 மெகாவாட்
முதல் 4 மெகாவாட் வரை மின் உற்பத்தி செய்யும். இவ்
வாறு சர்க்கரை உற்பத்தித் துறையில் கரும்புச் சக்கையைப்
பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள்
இந்தியாவிலேயே முதன் முதலாக இங்கு தான் அமைக்கப்பட்
டுள்ளன. ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் 5.00 கோடி
ரூபாய் செலவாகிறது. இத் தொழிற்சாலையை நிறுவும் பணி
நடைபெற்று வருகிறது. இவ்வகைத் தொழிற்சாலைகள்,
1992 பிப்ரவரி மாதத்தில் செயல்படத் தொடங்குமென எதிர்
பார்க்கப்படுகிறது.



1992 செப்டம்பர் 19]

## நடுத்தர அடர்த்தியுள்ள நாரிழைப் பலகை தயாரிப்புத் திட்டம்.

வெட்டு மரங்களின் உற்பத்தி குறைந்து கொண்டே வரு
வதை யொட்டி, கதவுகள், சாளரங்கள், மேசை, நாற்காலி
கள், ஆகியவற்றைத் தயாரிக்கத் தேவைப்படும் நடுத்தர
அடர்த்தியுள்ள நாரிழைப் பலகைகளின் தேவை அளவு
வெகுவாக அதிகரித்து வருகிறது. இத்தேவையை நிறைவு
செய்ய, மயிலாடுதுறை, நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராம
சாமி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில், நடுத்தர அடர்த்தி
யுள்ள நாரிழைப் பலகை தயாரிப்பில் கரும்புச் சக்கையைப்
பயன்படுத்த கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு தேவைப்
படும் முதலீடு ஏறக்குறைய ரூபாய் 60 கோடியாகும்.

## புதிய சர்க்கரை ஆலைகள்.

கூட்டுறவுத் துறையில் அறந்தாங்கி, கும்மிடிப்பூண்டி ஆகிய
இடங்களிலும், தனியார் துறையில் பூண்டியிலும் புதியதாக
சர்க்கரை ஆலைகள் தொடங்க மத்திய அரசு இசைவுக் கடிதங்
கள் வழங்கியுள்ளது. அம்பாசமுத்திரம், போளூர், வில்லி
புத்தூர் ஆகிய இடங்களிலும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்
அமைப்பதற்கான விண்ணப்பங்கள் மத்திய அரசுக்கு அனுப்பப்
பட்டுள்ளன.

## தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT).

தமிழக அரசின் வரையறுக்கப்பட்ட நிறுவனமான தமிழ்
நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் நடுத்தர, பெருந் தொழில்
களை முன்னேற்றி மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றது.
இது பின்தங்கிய பகுதிகளிலும், தொழில் வளர்ச்சி அடையாத
பகுதிகளிலும் தொழில்களைப் பரவலாக்க உதவி வருகிறது.
மின்சாரம், தண்ணீர். தகவல் தொடர்பு முதலிய அடிப்படை
வசதிகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட மனைகள் கொண்ட
ஏழு இடங்களில் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்
தொழிற்பேட்டைகளை அமைத்துள்ளது. 31—3—1991-ஆம்
நாள் வரையில், இந்நிறுவனம் 1.60 இலட்சம் பேர்களுக்கு
வேலை வாய்ப்பு அளித்து ரூ. 478 கோடி வரை நிதியுதவி
வழங்கியுள்ளது.

ஒசூரில், மின்னணுத் தொழில்களுக்கென தொழில் பேட்டை
ஒன்றை அமைத்து, அம்மேம்பாட்டுப் பணியை சிப்காட் நிறு
வனம் மேற்கொண்டுள்ளது. நடப்பு ஆண்டில், அனுமதிக்கப்
பட்டுள்ள குறித்த கால கடன்களுக்கான இலக்கு ரூ. 70 கோடி
ஆகும். இது தொடர்பாக 3,500 பேர்களுக்கு வேலை
வாய்ப்பு அளிப்பதுடன், மொத்த முதலீடு செய்ய எதிர்பார்க்கப்
படும் தொகை ரூ. 140 கோடியாகும். இந்த ஆண்டில், இந்தியத்

தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதியுதவி திட்டத்தின் கீழ்
வரும் பெருமளவு வாய்ப்பினைப் பயன்படுத்தி, குறித்த கால
உயரளவுக் கடன்களை வழங்கும் அனுகூலத்தை இந்நிறுவனம்
பெறவுள்ளது. ஜவுளித் தொழில் தவிர மின்னணுவியல்,
தோல் பொருள், உணவு பதப்படுத்துதல், இரசாயனங்கள்,
மருந்தாக்கியல் போன்ற ஏனைய பிற தொழில்களும் நிறுவ
உதவியளிக்கப்படும்.

தொழில் முனைவோர்களைப் பின்தங்கிய பகுதிகளுக்கு
ஈர்க்கும் வகையில், இது போன்ற இடங்களில் தொழில்
வளர்ச்சி மையங்களை அமைக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு
ஆதரவு அளித்துள்ளது. இத்தொழில் வளர்ச்சி மையங்களில்
மின்சாரம், தண்ணீர், தகவல் தொடர்பு வங்கி வசதி போன்ற
அடிப்படை வசதிகளை செய்துத்தரப்படும். தமிழ் நாட்டில்
பின்வரும் இடங்களில், தொழில் வளர்ச்சி மையங்கள் அமைக்கப்
பட உள்ளன. அவை :—

1. பூம்புகார்-மயிலாடுதுறை—தஞ்சாவூர் மாவட்டம்.

2. பெருந்துறை —பெரியார் மாவட்டம்

3. கங்கைகொண்டான்-மானூர்—திருநெல்வேலி கட்ட பொம்மன் மாவட்டம்.

ஒவ்வொரு தொழில் வளர்ச்சி மையத்திற்கு தேவையான
2,000 ஏக்கர் நிலமும், இது தொடர்பான ரூ. 30 கோடி
செலவுத் தொகையும் மத்திய, மாநில அரசுகளாலும், அனைத்
திந்திய நிதியுதவி நிறுவனங்களாலும் வழங்கப்படும்.

திண்டுக்கல் அண்ணா மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்
தில், வேளாண்மை அடிப்படையிலான தொழில்பேட்டை
அமைக்கும் திட்டத்திற்கு மாநில அரசு ஏற்பளித்துள்ளது.
இத் திட்டத்தைச் செயல்படுத்த தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்
படும்.

## தமிழ்நாடு தொழில் ஆலோசனைகள் ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு.

சென்னையில், தமிழ்நாடு தொழில் ஆலோசனைகள்—
ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு அமைக்கப்பட்டு வருகிறது.
இப்பிரிவு தகவல்களைத் திரட்டித் தருவதோடு, தமிழ் நாட்டில்
தொழிற்சாலைகளை அமைப்பது தொடர்பான வழி நடத்திச்
செல்லும் பணிகளையும் தொழில் முனைவோர்களுக்குச் செய்து



தரும். இப் பிரிவு தொழில் முனைவோர்கள் தாமாகவே வரு
வதற்கு காத்திராமல் மாநிலத்திலும், மாநிலத்திற்கு வெளியிலும்
வசிக்கும் தொழில் துவங்க முன்வருபவர்கள், முதலீட்டாளர்
கள் ஆகியோரைக் கண்டறிந்து இம் மாநிலத்தில் தொழிற்சாலை
களை அமைக்க அவர்களை ஊக்குவிக்கும் இப் பிரிவு, ஏற்று
மதியைப் பெருக்க தொழிற் சாலைகளுக்கு ஆலோசனை வழங்க
வுள்ளது. ஏற்றுமதி மேம்பாட்டிற்கு வாய்ப்புள்ள புதிய பகுதி
களைக் கண்டறிந்து அப்பகுதியிலுள்ள வசதியான தொழில்
முனைவோர்களுக்கு தொழில் வளர்ச்சி தொடர்பான வழி நடத்
திச் செல்லும் பணிகளையும் இப் பிரிவு செய்து தரும். தமிழ்
நாட்டிலுள்ள தொழில்கள் பற்றிய பல்வேறு அம்சங்கள் குறித்த
தகவல்களை அளிக்கும் தகவல் மையம் ஒன்றும் அதில் இருக்கும்.
அது தொழில் குறித்த குறிப்பிட்ட செய்திகளுடன் கூடிய பருவ
வெளியீடுகள், ஆண்டு வெளியீடுகள் கையேடுகள் ஆகியவற்றை
யும் வெளியிடும். தொழில் கொள்கை, நிருவாகம் குறித்த செயல்
முறை ஆராய்ச்சியை நடத்தும் திட்டங்கள், கொள்கைகள்
மற்றும் தொழில் வளர்ச்சியுடன் சம்பந்தப்பட்ட அமைப்புகள்
குறித்த மதிப்பீட்டு ஆய்வை மேற்கொண்டு, அரசுக்குத் தேவை
யான தகவலை அளிக்கும்.

## தரமான தயாரிப்புக்கு மாநில விருது வழங்குதல்.

தரமான தயாரிப்பில் சாதனை படைத்த தொழில் முனை
வோர்களுக்கு மாநில அரசு விருது வழங்கும், இவ் விருது
சிறு தொழில் பிரிவு, நடுத்தர தொழில் பிரிவு, பெருந் தொழில்
கள் ஆகியவற்றுக்கென்று தனித்தனியே வழங்கப்படும். ஒவ்
வொரு தொழில் பிரிவிற்கும் மாநில அளவில் மூன்று விருதுகள்
வழங்கப்படும். அதில், ரொக்கப் பரிசு, தகுதிச் சான்றிதழ்,
நினைவுப் பரிசு ஆகியவை அடங்கும். ஒவ்வொரு பிரிவிலும்
முதல் பரிசாக 25,000 ரூபாயும், இரண்டாவது பரிசாக 15,000
ரூபாயும் மூன்றாவது பரிசாக 10,000 ரூபாயும் வழங்கப்படும்.
இத் திட்டம் 1991-92-ம் ஆண்டு நிதியாண்டிலிருந்து அமுலுக்கு
வரும்.

## புவியியல் மற்றும் சுரங்கத் துறை.

புவியியல் மற்றும் சுரங்கத் துறை, அது தொடங்கப்பட்ட
ஆண்டான 1957-லிருந்து இம் மாநிலத்தில், அரசுத் துறை, தனி
யார் துறை ஆகிய இரண்டிலும் கனிமங்களை அடிப்படையாகக்
கொண்ட புதிய தொழில்களை ஏற்படுத்துவது குறித்த சாத்தி
யக் கூறு பற்றி ஆராய்வதைக் கருத்திற் கொண்டு விரிவான
ஆய்வில் சிறப்பாக கவனம் செலுத்தி வருகிறது.

2. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிலச்சரிவு
கள் குறித்தும். நிலச்சரிவுகள் அடிக்கடி ஏற்படும் பகுதிகள்
குறித்தும் ஆராய, இத் துறை நீலகிரி மாவட்டத்தில் 1,340
[illegible] பரப்பில் புவியியல் தொழில்
நுட்ப ஆய்வை மேற்கொண்டிருக்கிறது.

3. இத் துறை, தங்களுடைய விரிவாக்கத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கனிம நிறுவனம், தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம், தமிழ்நாடு சிமென்ட் நிறுவனம் போன்ற அரசு நிறுவனங்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனை நல்குகிறது.

4. இத் துறை, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் சிவகங்கைக்கு அருகிலுள்ள தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் குத்தகைப் பகுதியிலுள்ள கிராபைட் படிவுகள் குறித்து மறு ஆய்வு மேற்கொண்டுள்ளது. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் வட்டத்தில் பனங்குடி கிராமத்திற்கு அருகே கிராபைட் உள்ளதா என்பது பற்றி விரிவான ஆய்வை மேற்கொண்டுள்ளது.

5. இத் துறை, தருமபுரி மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டங்களில் முறையே தங்கம், பழுப்பு நிலக்கரி உள்ளனவா என்பது குறித்து தகவல் சேகரிப்பை/ஆய்வை மேற் கொண்டுள்ளது.

6. பன்னாட்டு அங்காடியில் பல வண்ணங்களைக் கொண்ட கருங்கற்களுக்கு திடீரென்று ஏற்பட்டுள்ள கிராக்கியை உணர்ந்து புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி கட்டபொம்மன், கன்னியாகுமரி, காமராசர் ஆகிய மாவட்டங்களில் பல வண்ணங்களைக் கொண்ட கருங்கற்கள் உள்ளனவா என்பது பற்றி விரிவான ஆய்வை இத் துறை மேற்கொண்டுள்ளது.

7. இத் துறை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஜெயங்கொண்ட சோழபுரத்தில் பழுப்பு நிலக்கரி உள்ளதா என்பது குறித்தும், கன்னியாகுமரி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் முழுமை பெறா மணிக் கற்கள் உள்ளனவா என்பது குறித்தும் விரிவான ஆய்வு நடத்த உள்ளது. திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் அண்ணா, மதுரை, திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பகுதிகளில் புவியியல்-இரசாயனம், புவியியல்-இயற்பியல் ஆய்வையும், 1991-92ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் கறுப்பு மற்றும் பல வண்ணங்களைக் கொண்ட கருங்கற்கள் உள்ளனவா என்பது குறித்து விரிவான ஆய்வையும் மேற்கொள்ளவிருக்கிறது.

8. தற்போது நிலவுகின்ற கச்சா எண்ணெயின் விலையைக் கருத்திற் கொண்டு 1-4-1990 முதல் கச்சா எண்ணெயின் உரிமைத் தொகையை டன்-ஒன்றுக்கு ரூ. 120-ஆக உயர்த்த மத்திய அரசுக்கு கடிதமெழுத அரசு கருதியுள்ளது.





## 1991-99 ஆம் ஆண்டுகளுக்கான புதிய தொழில் கொள்கை.

### 1. தோற்றுவாய்.

1.1. கடந்த நாற்பதாண்டுகளில், தமிழ்நாடு, நம் நாட்டில் தொழில் முக்கியத்துவம் வாய்ந்த மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. நம் நாட்டின் உற்பத்திப் பொருட்களான பணி நிறைபெற்ற தோல் பொருட்கள், உள்ளாடைகள், பருத்தித் துணிகள், துணி எந்திரம், பொறியியல் தயாரிப்புப் பொருட்கள் ஆகியவற்றைத் தமிழ்நாடும் கணிசமான அளவிற்கு உற்பத்தி செய்கிறது. சிறுதொழில் பிரிவில், ஒரு வலுவான துணைத் தொழில்அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சர்க்கரை, ஆல்கஹால் உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. தொழில் வளர்ச்சி மேலும் பரவியுள்ளது. ஓசூர், தூத்துக்குடி, இராணிப்பேட்டை போன்ற புதிய பகுதிகள் தொழில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. தொழில் துறை, மாநிலப் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகிக்கிறது. மொத்த வருமானத்தில், சுமார் 25 சதவீதத்தை ஈட்டித் தருகிறது.

1.2. தொழில் வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவிற்கு இருந்தபோதிலும், வறுமை, வேலை வாய்ப்பின்மை என்ற இரு பெரும் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு போதுமானதாக இல்லை. மாநிலத்தின் நபர்வாரி வருமான அளவு தொடர்ந்து குறைவாகவே இருந்து வருகிறது. வறுமைக் கோட்டிற்குக்கீழே வசிக்கும் மக்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாகவே உள்ளது. மாநிலத்தின் பெரும் பகுதிகள், தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய நிலையில் இருப்பதுடன், குறைந்த உற்பத்தித் திறனும் குறைந்த வருமானமும் உடையதாக உள்ளன.

1.3. தொழில் துறையில் அண்மை ஆண்டுகளில் கவலை தரும் போக்கும் நிலவி வருகிறது. எடுத்துக் காட்டாக, தொழில் உற்பத்தி குறித்த பொது அட்டவணையில் ஆண்டு சராசரி வளர்ச்சி வீதம் 1981-85ஆம் ஆண்டுகளில் 7.2 சதவீதமாக இருந்தது. 1986-90 ஆம் ஆண்டுகளில் 5.7 சதவீதமாகக் குறைந்தது. 1985-86 ஆம் ஆண்டிலிருந்து 1989-90 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் அனைத்திந்திய சராசரி வளர்ச்சி வீதம் 8.4 சதவீதமாக இருந்தது. குறிப்பாக, உற்பத்திப் பிரிவில் 1981-85 ஆம் ஆண்டுகளில் 7.2 சதவீதமாக இருந்த ஆண்டு சராசரி வளர்ச்சி வீதம் 1986-90 ஆம் ஆண்டுகளில் 4.6 சதவீதமாகக் குறைந்தது. இதேபோன்று, 1985-86 ஆம் ஆண்டிலிருந்து 1986-90 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் அனைத்திந்திய சராசரி வளர்ச்சி வீதம் 8.8 சதவீதமாக இருந்தது.

1.4. சிறந்த அடிப்படை வசதி, நகர்ப்புற வளர்ச்சி, தகுதி பெற்ற-தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் பெருமளவில் கிடைத்தல், சிறந்த பயிற்சியும் ஆராய்ச்சியும் மிக்க நிறுவனங்கள்,

நவீனப் போக்குவரத்து, தகவல் தொடர்புச் சாதனங்கள்
போன்ற தொழில் தொடங்குவதற்குச் சாதகமான பல சிறப்புக்
கூறுகளை இம் மாநிலம் கொண்டுள்ளது. மொத்தத்தில்,
மாநிலத்தின் தொழிற்சாலைக்கான சூழ்நிலை பொதுவாக அமைதி
யாக இருந்து வருகிறது.

அடிப்படை வசதி.

1.5. பம்பாயிலுள்ள, இந்தியப் பொருளாதார மையத்தின்
கூற்றுப்படி 1988-89 ஆம் ஆண்டில், தொழில் தொடங்கு
வதற்கான அடிப்படை வசதி தொடர்பான வளர்ச்சிக் குறியீடு
நம் மாநிலத்தில் 137 ஆகவும், மகாராஷ்டிரத்தில் 113 ஆகவும்,
குஜராத்தில் 128 ஆகவும் இருந்தது. இம் மாநிலம் 1987
மார்ச்சு திங்கள் இறுதிவரை போக்குவரத்திற்கு 1.71 இலட்சம்
கி.மீ. நீளமுள்ள சாலையையும், 1989 மார்ச்சு திங்கள்
இறுதி வரையில் 3,929 கி.மீ. நீளமுள்ள இரயில் பாதையையும்
பெற்றிருந்தது. 2 பெரிய துறைமுகங்களும், 2 நடுத்தர துறை
முகங்களும், 6 சிறிய துறைமுகங்களும் இங்கு உள்ளன.

தகுதிபெற்ற மனித ஆற்றல்.

1.6. ஒவ்வோராண்டும் 38,195 மாணவர்கள் 40 பொறியியல்
தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

அனைத்து வசதிகளுடன் கூடிய தொழில் அமைப்புகள்.

1.7. தொழிற்சாலை அமைப்பதற்கான அடிப்படை வசதிகள்
நெடுங்காலமாகத் தொழில்துறையில் பெற்றுள்ள முன்னேற்றம்
ஆகியவையே இம் மாநிலத்தில் தொழிற்சாலை அமைப்பதற்கான
ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளிக்கின்றன. தொழில் வளர்ச்
சிக்கு மிகவும் இன்றியமையாத மின்சக்தியும் தண்ணீரும் தற்
போது பற்றாக்குறையாக உள்ளன.

1.8. முதன்மைத் தொழிலில் மேன்மேலும் மேம்பாட்டை
செய்வதற்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பதால், இம்
மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் தொழில் துறை மிக
முக்கியப் பங்கு ஆற்ற வேண்டிய நிலையில் உள்ளது. இத்
நிலையில் வளர்ச்சியடைய வேண்டிய தொழில்கள், ஊக்க
மளிக்கப்பட வேண்டிய தொழில்கள் ஆகியவற்றை அடிப்
படையாகக் கொண்ட புதியதொரு தொழிற் கொள்கையை
வகுக்கவேண்டியதும் நாம் விரும்பும் வகையில் தொழில் வளர்ச்சி
முன்னேற்றப் பாதையில் முனைந்து செல்வதற்கான கொள்கை
களை வகுக்க வேண்டியதும் இன்று நம்மிடையே எழுந்துள்ள
அவசர அவசியத் தேவைகளாகும்.





1.9. தொழில் கொள்கையைத் தளர்த்துவதற்காகவும்,
தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும், மத்திய அரசு
புதிய தொழில் கொள்கையை அறிவித்துள்ளது. இக்கொள்
கையும் மத்திய அரசு அறிவித்த சிறுதொழில் குறித்த முனைப்புத்
திட்டமும் தொழில் வளர்ச்சிக்குப் புதிய தூண்டுதலாக அமையு
மென்று எதிர்பார்க்கப்படுகின்றன. தமிழ்நாட்டிற்கும், அதன்
தொழிலதிபர்களுக்கும் இப்புதிய கொள்கை சிறந்ததொரு
வாய்ப்பாகவும் அதேசமயம் சவாலாகவும் உள்ளது.

2. நோக்கங்கள்

2.1. புதிய தொழில் கொள்கையின் நோக்கங்கள் வருமாறு:—

(அ) நாட்டின் தொழில் வளர்ச்சியில் தமிழ் நாட்டை
முன்னணியில் இருக்கச் செய்தல் ;

(ஆ) வருமானத்தைப் பெருக்கவும், வேலை வாய்ப்பை
உருவாக்கவும் தொழில்துறையை ஒரு கருவியாகப் பயன்படுத்து
தல் ;

(இ) ஏற்றுமதியை ஊக்குவித்தல் :

(ஈ) தொழில் உற்பத்தியைப் பெருக்குதல் ;

வழிமுறைகள் :

2.2. இந்த நோக்கங்களை எய்துவதற்கான வழி முறைகள்
வருமாறு :

(1) தற்போதுள்ள தொழில்களைக் குறிப்பாக மாநிலத்தில்
அனைத்து வளவாய்ப்புகளையும் பெற்றுள்ள தொழில்களைப்
புரதுகாத்தல்-வலுப்பெறச் செய்தல் ;

(2) தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள பகுதிகளைக்
கண்டறிதல் ;

(3) மின்சக்தி கிடைப்பதிலுள்ள இடர்பாடுகளைக் களை
வதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்துதல்.

2.3. கிடைக்கும் பழுப்பு நிலக்கரியை முழுமையாகப் பயன்
படுத்தப்படும் கல்பாக்கத்திலுள்ள சென்னை அணுமின்
நிலையத்தை விரிவுபடுத்துதல், குறிப்பிட்ட கால அளவிற்குள்
கூடங்குளம் அணுமின் திட்டத்தைத் தொடங்குதல், நெய்வேலி
பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்தைச் செயற்
படுத்துதல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்த மத்திய

அரசு அணுகப்படும். தனியார் துறையில் மின் உற்பத்திப் பணி ஊக்குவிக்கப்படும். புதிய எரிசக்தி ஆதாரங்களைப் பெறுவதற்கு உரிய கவனம் செலுத்தப்படும்.

2.4. கழிவு நீரைச் சுத்திகரித்து மீண்டும் தொழிற்சாலைகளில் குறிப்பாக தொழில் வளாகங்களில் பயன்படுத்த ஊக்கமளிக்கப்படும்.

3. சமூக அடிப்படை வசதிகள் உட்பட அடிப்படை வசதிகளுக்கு வகை செய்தல்.

3.1. தொழிற்சாலைகளுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளையும், ஏனைய வசதிகளையும் அளிப்பதற்காக அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் ஒன்று ஏற்படுத்தப்படும். இக்கழகம், இம்மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகளின் நீண்ட காலமாகப் பூர்த்தி செய்யப்படாத தேவைகளை நிறைவு செய்யும். இதற்கு, 1991-92 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில், ரூ. 4 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

3.2. தொழில்கள் பரவலாக அமையும் பொருட்டு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

3.3. தற்போது தொழில் மையங்களாக விளங்குகின்ற திருப்பூர், ஒசூர், மணலி முதலிய இடங்களில் அடிப்படை வசதிகளை வலுப்படுத்த முயற்சிகள் மேற் கொள்ளப்படும். வாணியம்பாடி, திண்டுக்கல், திருப்பூர் முதலிய இடங்களிலுள்ள ஏற்றுமதி மையங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான நிதி உதவி மத்திய அரசிடம் கேட்கப்படும்.

3.4. மின்சாரம் எளிதில் கிடைக்கச் செய்வதற்கு, குறித்த கால வரையரைத் திட்டம் செயற்படுத்தப்படும்.

3.5. தனியார் துறையின் ஈடுபாட்டை ஊக்குவிப்பதன் மூலம், மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவதற்கான முயற்சிகள் தீவிரப்படுத்தப்படும்.

3.6. எல்லாத் தொழிற்சாலைகளிலிருந்தும் வரும் கழிவு நீரைச் சுத்தப்படுத்துவதற்காக பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

3.7. சாலை வசதிகள் முதலிய அடிப்படை வசதிகளுக்கான மேம்பாட்டில், தனியார் தொழிற்சாலைகளும் ஈடுபடுத்தப்படும்.

3.8. தொழில் பகுதியில் முக்கியத்துவம் பெற்ற சாலைகளை மேம்படுத்த சிறப்புத் திட்டங்கள் திட்டமிட்ட முறையில் செயல்படுத்தப்படும்.



4. ஊக்கத் தொகையும் உதவித் தொகையும் :

4.1. மிகவும் பின்தங்கிய வட்டங்களுக்கு அளிக்கப்படும் மாநில மூலதன உதவித் தொகை, முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தில் 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக, அதிக அளவு ரூ. 20 இலட்சம் வரையில் உயர்த்தப்படும்.

4.2. புதிய தொழில் பிரிவுகளில், மகளிர் 30 சதவீதத்திற்கு அதிகமாகப் பணி புரிந்தால், அந்தத் தொழில் பிரிவு, கூடுதலாக 5 சதவீதம் மூலதன உதவித் தொகையாக, அதிக அளவு ரூ. 5 இலட்சம் வரையில் பெறத் தகுதியுடையதாகும். ஆயினும், கையினால் தீக்குச்சிகள் தயாரித்தல், ஆயத்த ஆடைகள் தயாரித்தல் போன்ற பெருமளவில் மகளிர் பணியாற்றுகின்ற தன்மை வாய்ந்த தொழிற்சாலைகளுக்கு இது பொருந்தாது.

மாசுக் கட்டுப்பாடு :

4.3. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பிறப்பிக்கும் அனுமதி இசைவு, பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டாண்டு [illegible]க்குச் செல்திறனுடையதாக இருக்கும்.

5. நடைமுறைகளை எளிதாக்குதலும், சீர்படுத்துதலும் :

5.1. குறிப்பிட்ட கால அளவிற்குள் அனுமதிகள் அளிப்பதை உறுதிப்படுத்தும் வகையில், மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் உள்ள "ஓரிடத்தில் அனைத்து அனுமதிகளையும் பெற உதவி செய்யும் குழுக்களின் (Single Window Committees) செயல்பாடு தீவிரப்படுத்தப்படும்.

5.2. புதிய தொழில் பிரிவுகளுக்கு மின் இணைப்புகள் குறிப்பிட்ட கால வரையறைக்குள் கிடைப்பதற்கு ஏதுவாக நடைமுறைகள் எளிதாக்கப்படும். மேலும், தொழிற் பிரிவுகளுக்கு விரைவாக மின் இணைப்பு வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

5.3. மாவட்ட அளவிலேயே ஒப்புதல் பெறும் வகையில் களப்பணியில் உள்ள அதிகாரிகளுக்குப் போதிய அதிகாரம் வழங்கப்படும்.

5.4. மாநில அரசுக்குச் சொந்தமான பல்வேறு முகவமைப்புகளின் விண்ணப்பப் படிவங்களிலுள்ள அவர்களின் [illegible] குறித்த தகவல்கள் சில சமயங்களில் நீளமாகவும், [illegible] திரும்பக் கூறுவதாகவும் உள்ளன. இத்தகைய [illegible] முகவரமைப்புகளின் விண்ணப்பம் படிவங்களும் [illegible] முகவரமைப்புக்களின் பிரதிநிதிகளை, உறுப்பினர்களாகக் [illegible] அமைக்கப்படும் ஒரு குழுவினால் எளிதாக்கப்படும்,

5.5. நகர அமைப்புத் திட்ட அதிகார மன்றம், குறிப்பிட்ட காலத்திற்குள் திட்ட அனுமதியும் இசைவும் அளிப்பதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

5.6. சிறு தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், பல்வேறு துறைகளுக்காக வைத்து வரப்படும் பதிவேடுகள் எளிதாக்கப்பட்டு, ஒவ்வொன்றுக்கும் இன்றியமையாத அனைத்துத் தகவல்களையும் கொண்ட பொதுவான பதிவேடு ஒன்று மட்டும் வைத்து பராமரிக்கப்படும்.

5.7. போக்குவரத்து முதலிய ஏற்பாடுகளைச் செய்ய நிருவாகத்தினர் ஒத்துக்கொண்டால், இரவு நேரங்களிலும் மகளிர் பணியாற்ற அனுமதிக்கப்படுவர். இரவு நேரங்களில் மகளிர் பணியாற்ற நேரிட்டால் அவர்களை அழைத்து வருவதற்கும் தொழிற்சாலைகளிலிருந்து அவரவர் இல்லத்திற்கு கொண்டு சென்று சேர்ப்பதற்கும் பாதுகாப்பு வசதியை கட்டாயமாக செய்து தருவது நிர்வாகத்தினரின் பொறுப்பாகும்.

5.8. மின்சாரத்தைப் பயன்படுத்துகின்ற, 50 தொழிலாளர்களுக்கு மேற்படாமல் பணி புரிகின்ற சிறு தொழில் பிரிவுகளுக்கு தொழிற்சாலைச் சட்டம் முதலியவற்றிலிருந்து விலக்களிக்குமாறு, சிறு தொழில் பிரிவுகளுக்கான சங்கங்கள் கேட்டிருந்தன. இது. அரசின் பரிசீலனையிலுள்ளது.

6. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய பகுதிகளைமேம்படுத்துதல்:

6.1. தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள பகுதிகளைக் கண்டறிவதற்காக தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய 107 வட்டங்கள் பற்றிய ஆய்வு படிப்படியான முறையில் முடிக்கப்படும். தீவிர ஊக்குவிக்கும் செயல் திட்டங்கள் குறித்த கால முறையில் நடத்தப்படும்.

6.2. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய 107 வட்டங்கள் ஒவ்வொன்றிலும் அனைத்து அடிப்படை வசதிகளுடன் குறைந்தது 10 தொழில் கூடங்கள் அமைக்கப்படும். இக்கூடங்கள் செலவுக்கேற்ற பயன் தருவதை உறுதி செய்வதற்குக் கவனம் எடுத்துக் கொள்ளப்படும். ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், சிறு சேமிப்பு ஊக்கத் தொகை ஏனைய திட்ட நிதிகள் போன்று மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை இயன்றவரை பயன்படுத்தி இக்கூடங்கள் கட்டப்படும்.

6.3. இவ்வட்டங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் ஒரு தொழில் மின் இணைப்பு அமைக்கப்படும்.



6.4. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய வட்டங்களில் கூட்டு-இணைத் துறைத் திட்டங்களை அமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கும்.

7. சிறிய, மிகச் சிறிய தொழில் பிரிவுகளுக்கு ஊக்கமளித்தல்:

7.1. 1991—92 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 15,400 சிறு தொழில் பிரிவுகள் செயல்படத் தொடங்குகையில் சுமார் 1.66 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். அடுத்த ஐந்தாண்டுகளில் 1,00,000 சிறிய, மிகச் சிறிய தொழிற்சாலைகளை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

7.2. மதிப்பு அதிகரிக்கப்பட்ட நவீன மற்றும் அதிக தொழில் நுட்பம் வாய்ந்த துறைகளில் சிறு தொழில் பிரிவை ஈடுபடுத்தி மிளிரச் செய்யும் வகையில் தனிக் கவனம் செலுத்தப்படும்.

7.3. மாவட்டத் தொழில் மையப் பணியாளர்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். திறமையுள்ள தொழில் முனைவோரை ஊக்குவிக்கவும், அவர்களுக்கு வழி காட்டவும் மாவட்டத் தொழில் மையங்களில் திறமையுள்ள நபர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

7.4. மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக, மாவட்டத் தொழில் மையங்களின் பொது மேலாளர்களுக்கு உதவி செய்யவும் ஆலோசனை நல்கவும் கட்டுக்கோப்பான, செயலாற்றும் தன்மை உள்ள மாவட்ட அளவிலான தொழில் நுட்ப ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படும்.

7.5. ஆயத்த ஆடைகளும், கைத்தறி ஆடைகளும் தயாரிப்பதற்காக செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள காக்களூரில் தொழிற்பேட்டை ஒன்று அமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்திற்காக 100 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. தொடக்கத்தில் முதல் நிலை மேம்பாட்டுக்காக 50 ஏக்கர் நிலம் எடுத்துக் கொள்ளப்படும். சிட்கோ நிறுவனம், நிலத்தை மேம்படுத்தி தொழிற் கூடங்களைக் கட்டி, தொழில் முனைவோருக்கு அவற்றை ஒதுக்கும். சாலைகள், மழைநீர் வடிகால், சிறு பாலங்கள், குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள் போன்ற அடிப்படை வசதிகள் அனைத்தையும் சிட்கோ செய்து தரும். இங்கு உள்ள தொழில் முனைவோர்கள் 15 சதவீதம் மாநில முதலீட்டு உதவித் தொகை பெறத் தகுதி பெறுவர்.

**8. மகளிர் தொழில் முனைவோரை ஊக்குவித்தல் :**

8.1. புதிய தொழிற் பேட்டைகள்/தொகுதிகள் அனைத்திலும் தொழிற் கூடங்கள்/மனைகள் ஒதுக்குவதில் மகளிருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். புதிய தொழிற்பேட்டைகள்/தொகுதிகள் அனைத்திலும் மகளிர் தொழில் முனைவோருக்கு முப்பது சதவிகித தொழிற் கூடங்கள்/மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

8.2. மகளிருக்காகச் சிறப்புத் தொழில் முனைவோர் செயல் திட்டங்கள் நடத்தப்படும்.

8.3. சிறந்த முறையில் தொழில் நடத்தும் மகளிர் தொழில் முனைவோருக்கு பரிசுகள் வழங்கப்படும்.

**9. தொழில் அமைதியை ஏற்படுத்துதல் :**

9.1. தொழில் தகராறுகளை தீர்த்து வைப்பதற்காக, தற்போதுள்ள பணியாளரமைப்பு உரிய நேரத்தில் தொழில் தகராறுகளில் தலையிட்டு திறம்பட அவற்றைத் தீர்க்க இயலும் வகையில் சீரமைக்கப்படும்.

9.2. உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவதற்கு தொழிலாளர் ஒத்துழைப்பு மிக அவசியமானதாகும். முக்கியமான இந்த அம்சங்கள் பற்றி தொழிலாளர்களிடையே விழிப்புணர்ச்சியையும் உயர்வான கருத்தையும் ஏற்படுத்தும் பொருட்டு தற்போதுள்ள தொழிலாளருக்கான கல்வி திட்டங்கள் தக்கவாறு மாற்றியமைக்கப்படும்.

9.3. நிருவாகத்தில் தொழிலாளர்களின் பங்கு ஊக்குவிக்கப்படும்.

9.4. நீண்ட நாட்களாக மூடிக் கிடக்கும், ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனம் விரைவில் திறக்கப்படும். இத் தொழிற்சாலையை மீண்டும் திறப்பதற்காக சுத்தப்படுத்தும் பணி ஏற்கனவே ஆகஸ்டு 1991-ல் தொடங்கப்பட்டுள்ளது.

**10. தனியார் மயமாக்கல்-பங்கு மூலதனத்தைத் திரும்ப பெறுதல் பற்றிய கொள்கை :**

10.1. அரசு இனிமேல் பொதுவாக முக்கிய துறைகளில் மட்டுமே நேரடியாக ஈடுபடுவதுடன் தொழில் மேம்பாட்டுக்கு உதவுவதற்காக தன் நிதிப்பங்கைப் பயன்படுத்தும்.

10.2. தனியார் துறை மின் உற்பத்தியில் பங்கேற்பதை ஊக்குவிக்க அரசு முயற்சி மேற்கொள்ளும்.





**11. அயல்நாட்டு வாழ் இந்தியர்கள் முதலீடு செய்வதை அதிகரித்தல் :**

11.1. மத்திய அரசின் புதிய தொழில் கொள்கையை ஒட்டி அயல் நாட்டுவாழ் இந்திய தொழில் முனைவோருக்கு உரிய ஆலோசனை அளிக்கவும், திட்டங்களைத் தெரிந்தெடுப்பதிலும் இசைவு பெறுவதற்கும் பல்வேறு முகவரமைப்புகளுடன் தொடர்பு கொள்வதில் உதவி புரியவும் மாநிலத்தில் திட்டங்களை ஏற்படுத்துவதற்காக இத்தகைய தொழில் முனைவோர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தில் உள்ள அயல் நாட்டுவாழ் இந்தியர் பிரிவின் பணிகள் தீவிரப்படுத்தப்படும்.

11.2. தொழில் வழிகாட்டி—ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு ஒன்று அமைக்கப்படும்.

**12. ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழில்களை மேம்படுத்துதல் :**

12.1. உடைகள், தோலில் தயாரிக்கப்படும் பொருட்கள் ஆகியவற்றிற்கு நாகரிக, வடிவமைப்புக்கான கல்லூரி/ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிலையம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

12.2. குறிப்பாக சிறுதொழில் துறையில் திறமையுள்ள தொழில் முனைவோர்களுக்கு ஆலோசனை அளிக்கவும், வழிகாட்டும் பொருட்டும், தொழில் வணிக இயக்ககத்தில் கட்டுக்கோப்பான ஏற்றுமதி மேம்பாட்டுப் பிரிவு ஒன்றும் அமைக்கப்படும்.

12.3. ஏற்றுமதிக்கான பின்வரும் இனங்கள் ஊக்குவிக்கும் இனங்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன :—

(i) கருங்கல் ;
(ii) தோல் பொருட்கள் ;
(iii) மின்னணுவியல், கணிப்பொறி அடிப்படைத் தகவல் குறியீட்டு சாதனம் ;
(iv) பொறியியல் பொருட்கள் ; மற்றும்
(v) ஜவுளி மற்றும் ஆடைகள்.

12.4. கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் அவற்றுக்கு எதிரே குறிப்பிடப்பட்ட தொழில்களுக்கு வளர்ச்சி மையங்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (i) இராணிப்பேட்டை | தோல். |
| (ii) திருப்பூர் | பனியன் தொழிற்சாலை. |
| (iii) ஓசூர் | மின்னணுவியல் பொருட்கள். |

(iv) ஈரோடு .. ... கைத்தறி, இல்ல அலங்காரத் துணிகள்.

(v) விருத்தாசலம் ... .. பீங்கான்.

(vi) கோயம்புத்தூர் இலேசான வகை பொறியியல் பொருட்கள்.

(vii) கரூர் செயற்கைக் கற்கள், நகைவேலை.

(viii) தஞ்சாவூர் கைவினைப் பொருட்கள்.

(ix) சென்னை ஆயத்த ஆடைகள், கணினி நுணுக்கப் பொருள்

(x) நிலக்கோட்டை வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகள்.

(xi) சிவகாசி தீப்பெட்டிகள், அச்சிடுதல்.

## 13. தொழில் திறன் நிலை உயர்த்துதலும், பயிற்சியும் :

13.1. தேவைக்கேற்ப பயிற்சி பெற்ற தொழிலாளர் இல்லாத பகுதிகளில், பயிற்சியளிப்பதற்கு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

13.2. தரத்தையும், உற்பத்தித் திறனையும் மேம்படுத்தும் பொருட்டு வடிவமைப்பிலும் சாதனத்திலும் புதிய மாற்றங்களை வெளிக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

13.3. விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தவும் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் நடத்தப்படும்.

## 14. ஆராய்ச்சி மேம்பாட்டுப் பணியை ஊக்குவித்தல் :

14.1. புதுமையான வடிவமைப்பு, பொருள் வகைப்பாட்டு மேம்பாடு, இறக்குமதி செய்வதற்குப் பதிலாக மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்துவது முதலியவற்றில் காட்டும் தனித் தகுதிக்காக, பரிசுகளை வழங்குவதன் மூலம் தொழிலை நோக்கமாகக் கொண்ட ஆராய்ச்சி மேம்பாட்டுப் பணிக்கு ஊக்கமளிக்கப்படும்.





## 15. வேளாண் சார்ந்த தொழில்களை ஊக்குவித்தல்

15.1. வேளாண் பொருள்களை பதப்படுத்துதல் உணவுப் பொருட்களைப் பதப்படுத்தல் ஆகிய தொழில்கள் நிறுவுவதை ஊக்குவிப்பதன் மூலம், தோட்டக் கலைக்கும், தொழிற் துறைக்குமிடையே நிலவும் தொடர்பினை மேம்படுத்த அரசு முயற்சி செய்யும்.

15.2. பழங்களைப் பாதுகாக்கவும், பின்னர் அவற்றைப் பதப்படுத்துவதற்காகவும் பழங்கள் உற்பத்தியாகும் பகுதிகளில் சேமிப்பு குளிர் நிலையங்கள் நிறுவப்படும்.

15.3. பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களையும், மற்ற அழுகும் பொருட்களையும், சிப்பம் கட்டுவதற்காக சிப்பங்கட்டும் தொழில் பிரிவுகளுக்கு ஊக்கம் அளிக்கப்படும்.

15.4. பெருமளவில் கிடைக்கக்கூடிய வேளாண் மூலப் பொருட்களைத் தொழிற் சாலைகளுக்குப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பைக் கண்டறிய ஆராய்ச்சி நிறுவனங்களின் பங்கேற்பு பட்டியலிடப்படும்.

15.5. 1993–94 ஆம் ஆண்டிலேயே செயல்படத் தொடங்கும் வகையில், 1992–93 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிலக்கோட்டைத் தொழில் தொகுதியில் அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

## 16. முழு வேகத்தில் செயல்படுத்தப்பட வேண்டிய துறைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

16.1. பின்வரும் துறைகளை முழுவேகத்தில் செயல்படுத்தப்படவேண்டிய துறைகளாக மாநில அரசு கண்டறிந்துள்ளது:—

(i) தோல்.

(ii) துணிகள், பின்னல் உள்ளாடைகள்.

(iii) மின்னணுவியல்.

(iv) கணிப் பொறி அடிப்படை தகவல் குறியீடு சாதனம்.

(v) மோட்டார் வாகன பாகங்கள்.

(vi) மருந்துகளும், மருந்துப் பொருட்களும்.

(vii) மணலி மற்றும் தஞ்சாவூரிலுள்ள துணை தொழிற்சாலை உட்பட பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள்.

(viii) தொழிற்சாலைக்கான ஆல்கஹால் அடிப்படையிலான உயிரின வேதியியல் பொருட்கள்.

(ix) வேளாண் அடிப்படையிலான தொழில்கள்.

(x) உப்பு, கடல் சார்ந்த பொருட்கள் அடிப்படையிலான தொழில்கள்.

(xi) செயற்கை கற்கள், ஆபரணங்கள்.

16.2. ஏற்றுமதி திறனை அதிகரிப்பதுடன், தோல், பருத்தித் துணிகள், மோட்டார் வண்டி உதிரிபாகங்கள் போன்ற தற்போதுள்ள தொழில்கள் ஆகியவற்றின் போட்டியிடும் திறனைத் தொடர்ந்து பராமரிப்பதுடன் தொழிற்சாலையை நவீனப் படுத்துதல், தொழில் நுட்ப மேம்பாடு, தரமேம்பாடு மதிப்பு அதிகரிக்கப்பட்ட பொருட்களின் உற்பத்தி போன்ற வழிகளில் நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுடன் போட்டியிடும் நிலை உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

16.3. பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள் தொழிற்சாலையைப் பொறுத்த மட்டில், மணலி பகுதியில் கிடைக்கக்கூடிய இடு பொருட்களை இம் மாநிலத்திலுள்ள, துணைப் பொருள் தயாரிப்புத் தொழிற்சாலைகள் பயன்படுத்துவதை உறுதி செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

16.4. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் ஆகியவற்றின் மூலம் 1991–92 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. <u>தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்—</u>

மொத்தம் ரூ. 600 கோடி திட்டச் செலவிலான திட்டங்கள்.

| திட்டம். | இடம் (மாவட்டம்) | | திட்டச் செலவு. (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| பழங்கள் பதப்படுத்தும் தொழிற்சாலை. | தருமபுரி | .. | [illegible] |
| வெப்பமாற்றி சாதனங்கள் | தென் ஆர்க்காடு | | 40 |
| நைட்ரோ பாஸ்பேட் தொழிற்சாலை. | சிதம்பரனார் | | 300 |
| அக்ரிலிக் தொழிற் தொகுதி. | தஞ்சாவூர் | — | 100 |
| அலுமினியம் உருளைப் பொருட்கள். | தஞ்சாவூர் | — | 75 |
| தென்னை சார்ந்த பொருட்கள். | கன்னியாகுமரி | | 20 |
| டிக்கெட்டன் சார் பொருட்கள். | தென் ஆர்க்காடு | | 30 |
| [illegible]டுதல் நடுநிலை ஆக்சைல். | தென் ஆர்க்காடு [illegible] | | 20 |
| [illegible]ச் சாம்பல் செங்கற்கள் | செங்கல்பட்டு | | 5 |





2. <u>தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம்</u>

| திட்டத்தின் பெயர். | | | திட்ட மதிப்பீட்டுச் செலவு. (ரூபாய் கோடியில் ). |
|---|---|---|---|
| 1 தளவாட அறை | — | — | 8.15 |
| 2 பாக்கல் இயந்திரம் | — | — | 6.00 |
| 3 கோவையிலுள்ள கணினி நுணுக்கப்பொருள் மையம். | | .. | 8.00 |
| 4 தாமிரச் சுருள் | — | — | 44.95 |
| 5 [illegible] அச்சு | — | — | 3.60 |
| 6 மின்னணுவியல் [illegible]ரம் | . | — | கணக்கிடப்பட வேண்டும். |

[1991 செப்டம்பர் 19

**மின்னணுவியல் நகரம்**

16.5. தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் ரூ. 40.65 கோடி செலவில், சென்னைக்கு அருகில் சோளிங்கநல்லூர் என்னுமிடத்தில் மின்னணுவியல் நகரம் ஒன்றை உருவாக்க உள்ளது. இது 200 ஏக்கர் பரப்பளவில் நிறுவப்படும். இது ஒரே இடத்தில் சிறிய நடுத்தர பெரும் தொழிற் சாலைகளை நிறுவ தொழில் முனைவர்களுக்குப் பெரிதும் உதவும். இந்த நகரம் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கும்.

16.6. மொத்தம் ரூ. 395 கோடி திட்டச் செலவில் தமிழ்நாடு செய்தித்தாள்—காகித நிறுவனத்தின் தற்போதைய ஆண்டு உற்பத்தி திறனை இரட்டிப்பாக்க 90,000 மெட்ரிக் டன்னிலிருந்து 1,80,000 மெட்ரிக் டன்னாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுமார் 1,000 கோடி திட்டச் செலவில், தென்னார்க்காடு மாவட்டத்தில் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி இரண்டாவது செய்தித்தாள் காகிதத் தொழிற் சாலையை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**16.7. கணிப்பொறி உதவியுடன் வடிவமைப்பு/கணிப் பொறி உதவியுடன் உற்பத்தி செய்தல்.**

முக்கியமாக உலோக உருக்காலைகளுக்கு உதவும் நோக்குடன், சென்னையில் தள்வாட அறை வசதியுடன் கூடிய கணிப்பொறி உதவியுடன் வடிவமைக்கும், கணிப் பொறி உதவியுடன் இயங்கும் மையங்களை நிறுவ உத்தேசிக் கப்பட்டுள்ளது. இதற்கான நிலம், கட்டிடம், அடிப்படை வசதிகளை மாநில அரசு செய்து கொடுக்கும். இத்தாலியிடமிருந்து சாதனங்கள், மனித ஆற்றல் வகையில் ரூ. 10 கோடி உதவி கோரப்பட்டுள்ளது. இந்திய அரசின் ஒப்புதலுக்கு இச்செயற் குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 1991–92 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**16.8 கிரானைட்.**

தமிழ்நாடு கனிம நிறுவனம் அதிக அளவு கருப்புக்கல் வெட்டும், மெருகூட்டும் தொழில் பிரிவுகளை எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் நிறுவும். தருமபுரி மாவட்டத்தில் ரூ. 15 கோடி செலவில் ஏற்கனவே 'தமிழ்நாடு கிரானைட் காம்ப்ளெக்ஸ்' ஒன்றை அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.



1991 செப்டம்பர் 19]

**16.9. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் கிராபைட்பெனிபிசியேஷன் திட்டம்:**

இவ்வாண்டில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் சிவகெங்கையில் ரூ. 15 கோடி செலவில் தமிழ்நாடு கனிம நிறுவனம் கிராபைட் பெனிபிசியேஷன் தொழிற்சாலைக்கான பணியைத் துவக்கும். இத்திட்டம் முடிவடையும்போது ரூ. 200 கோடி அளவில் அதிக தொழில் நுட்பம் வாய்ந்த உப தொழிற்சாலைகள் அமைவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

**17. மின் உற்பத்தியில் தனியார் பங்கேற்றல்:**

17.1. மின் உற்பத்தியில் தனியார் துறையும் ஒத்துழைப்பதற்கான தகுந்த சூழ்நிலைகள் உருவாக்கப்படும். இத்தகைய உதவி நாடப்படும் முதல் திட்டம் திருச்சிராப்பள்ளியிலுள்ள ஜெயங்கொண்டம், தென்னார்க்காடு மாவட்டம் ஆகிய இடங்களில் பழுப்பு நிலக்கரியை வெட்டி எடுப்பதாகும். 1,500 மெகாவாட் மின் சக்தியை உற்பத்தி செய்ய மொத்த திட்டச் செலவு ரூ. 5,000 கோடி என்ற அளவில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. முதற்கட்டமாக ரூ. 1,500 கோடி செலவில் 500 மெகாவாட் மின்சக்தி உற்பத்தி செய்யும் பணிகள் 5 ஆண்டிற்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

17.2. மரபு வழியல்லாத முறையில் மின்சக்தி உற்பத்தி செய்யும் தனியார்களுக்கு உரிய ஊக்க உதவிகள் அளிக்கப்படும்.

17.3. தற்போது செயல்பட்டுவரும் புதிதாகத் தோன்றும் தொழிற் தொகுதிகளில் உற்பத்தியாளர் சங்கங்கள், அந்தந்த பகுதியில் மின் உற்பத்தி செய்யும் நிலையங்களை நிறுவ ஊக்குவிக்கப்படும்.

**18. மத்திய அரசின் முதலீடு:**

18.1. பின்வரும் திட்டங்களை விரைந்து செயல்படுத்துவதன் மூலம் இம்மாநிலத்தில் மத்திய அரசின் முதலீட்டை அதிகரிக்கும்படி, தமிழ்நாடு அரசு மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்.

1. அரோமேடிக் தொழிற்சாலை.
2. சதர்ன் கேஸ் கிரிட் (Southern gas grid)
3. சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை விரிவாக்கம்.
4. எண்ணூரில் துணைத் துறைமுகம் அமைத்தல் (Satellite Port)

[1991 செப்டம்பர் 19

5. நெய்வேலியில் 3-வது சுரங்கம் அமைத்தல்.

6. கூடங்குளம் அணு மின் திட்டம்.

மேலும் காதுகாப்புத் துறையிலும் தொலைத் தகவல் தொடர்புத் துறையிலும் பல தொழிற்சாலைகளை இம்மாநிலத்தில் அமைக்கும்படி தமிழ்நாடு அரசு மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும்.

## இணைப்பு II

...............29ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் காண்க.

### சர்க்கரைத் தொழில் செயல்முறைத் திட்டம்.

சர்க்கரை உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழ்நாடு முக்கிய பங்கினை வகிக்கிறது. நமது சர்க்கரை உற்பத்தி நாட்டின் மொத்த சர்க்கரை உற்பத்தியில் பத்து விழுக்காடுகளாகும். கரும்பு கிரயத்திற்காக மட்டும் தமிழ்நாட்டில் வருடத்திற்கு ரூ. 4 கோடிகளுக்குமேல் செலவிடப்படுகிறது.

1990–91 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் 31 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 14 ஆலைகள் கூட்டுறவுத்துறையிலும், 3 ஆலைகள் பொதுத்துறையிலும் மற்றும் 14 ஆலைகள் தனியார் துறையிலும் உள்ளன. மேற்படி சர்க்கரை ஆலைகளின் ஒரு நாளைய கரும்பு பிழித்திறன் 73,000 டன்கள் ஆகும். இவற்றில் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் பிழிதிறன் 36,000 டன்கள் ஆகும்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க கூட்டுறவு துறையில் 4 சர்க்கரை ஆலைகளுக்கும் மற்றும் தனியார் துறையில் 5 சர்க்கரை ஆலைகளுக்கும் மைய அரசு உரிமம் வழங்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட ஆலைகளில் கூட்டுறவுத் துறையில் 2 சர்க்கரை ஆலைகளும் மற்றும் தனியார் துறையில் 4 ஆலைகளும் தம் உற்பத்தியை தொடங்கி விட்டன. ஆரூரில் உள்ள என். கந்தப்பன் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்படி ஆலை தன் அரைவையை 1991-92 ஆம் பருவத்தில் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கள்ளக்குறிச்சி II சர்க்கரை ஆலைக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டுமானப் பணிகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட இருக்கிறது.



1991 செப்டம்பர் 19]

### 3. தற்போதைய சர்க்கரை ஆலைகளின் விரிவாக்கப் பணிகள்:

மைய அரசு தற்போது உள்ள 15 சர்க்கரை ஆலைகளை விரிவாக்கம் செய்ய உரிமம் வழங்கியுள்ளது. மேற்கண்ட 15 ஆலைகளில், 8 சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும், 2 சர்க்கரை ஆலைகள் பொதுத் துறையிலும் மற்றும் 5 சர்க்கரை ஆலைகள் தனியார் துறையிலும் உள்ளன. மேற்கூறிய 8 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 3 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தம் விரிவாக்கப்பணியினை முடித்து விட்டன. 5 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் விரிவாக்கப் பணிகள் நடந்து வருகின்றன. 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளும் தம் விரிவாக்கத்தினை முடித்து விட்டன. 5 தனியார் துறை சர்க்கரை ஆலைகளில், 2 சர்க்கரை ஆலைகள் விரிவாக்கப்பணிகளை முடித்துள்ளன; 3 சர்க்கரை ஆலைகளில் விரிவாக்கப்பணிகள் நடந்து வருகின்றன, மேற்படி அனைத்து ஆலைகளும் தம் விரிவாக்கப்பணிகளை முடித்தால் தமிழ்நாட்டில் கரும்பு பிழிதிறன் ஒரு நாளைக்கு 17,000 டன்னிகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

### 4. இணை மின் உற்பத்தி :

மைய அரசின் கொள்கைப்படி தமிழ்நாட்டில் செய்யாறு (அனக்காவூர்) மற்றும் எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி (சேத்தியா தோப்பு) கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இரண்டு இணை மின் உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்த திட்டம் இடப்பட்டுள்ளது. மேற்படி இணை மின் உற்பத்தி திட்டத்தின் மூலமாக, அதிகப்படியான கரும்புச் சக்கையை பயன்படுத்தி உயர் அழுத்த கொதிகலன்கள் மற்றும் டர்பைன்கள் கொண்டு மின்சாரம் தயாரித்து தேவை போக மீதியை வெளியாருக்கு விற்க வழியுள்ளது. மேற்படி இணை மின் உற்பத்தி திட்டம், இந்தியாவிலேயே சர்க்கரைத் துறையில் முதன் முதலாக ஏற்படுத்தப்பட உள்ளது. ஒவ்வொரு இணை மின் உற்பத்தி நிலையத்தின் திட்ட மதிப்பீடும் ரூ. 5.34 கோடிகளாகும். இதில் ஒவ்வொரு இணை மின் உற்பத்தி நிலையத்திற்கும் மைய அரசு ரூ. 100 லட்சங்கள் மானியமாகவும், மாநில அரசு ரூ. 100 லட்சங்கள் மானியமாகவும் வழங்க உள்ளது. இத்திட்டத்தின் மூலம் தயாரிக்கப்படும் 160 லட்சம் யூனிட்டுகள் உபரி மின்சாரம் தமிழ்நாடு மின்சார வாரியம் மூலமாக தொழில் நுகர்வோருக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 5. வடிப்பகம் :

தற்போது தனியார் துறையின் கீழ் 8 வடிப்பகங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. புதிய சர்க்கரை ஆலைகளும் மற்றும் விரிவாக்கம் செய்யப்படவுள்ள பழைய சர்க்கரை ஆலைகளும் பிழிதிறனை மேற்கொண்டால் கிடைக்கும் கரும்பு கழிவுப்பாகு உற்பத்தி ஆண்டொன்றுக்கு சுமார் 6.45 லட்சம் டன்களில் இருந்து 7.74 லட்சம் டன்களாக இருக்கும், மாநில

அரசு கிருஷ்ணாபுரத்திலுள்ள அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஒன்றும், சேலம் (மோகனூர்) கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஒன்றும் ஆக இரண்டு வடிப்பகங்கள் அமைக்க அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி வடிப்பகம் அமைக்க உத்தேச செலவு ஒரு வடிப்பகத்துக்கு ரூ. 16.00 கோடி ஆகும். மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையர், ஆண்டொன்றுக்கு ஒரு வடிப் பகத்துக்கு 55,000 டன்கள் என்ற அடிப்படையில் கழிவுப்பாகு வழங்க இசைவு அளித்துள்ளார். கட்டுமானம் மற்றும் தள வாடங்கள் வாங்குதல் போன்ற பணிகளுக்கு பிப்ரவரி 91-ல் நடவடிக்கை துவங்கப்பட்டுள்ளது. இன்னும் 15 மாத காலத்தில் மேற்படி வடிப்பகங்கள் தொடங்கப்படுமென எதிர்ப்பார்க்கப்படு கிறது.

## 6. தமிழக சர்க்கரை ஆலைகளின் செயல்முறை:

தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள், சர்க்கரை உற் பத்தியினை நிலையான முறையில் மேற்கொண்டு வருகின்றன. அகில இந்திய ரீதியில் தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள் அகில இந்திய அளவை விட அதிகப்படியான சராசரி அரைவை நாட்களைக் கொண்டுள்ளது. கரும்பு அரவை, சர்க்கரை உற் பத்தி, சர்க்கரை கட்டுமானம், கடந்த மூன்று பருவங்கள் (செப்டம்பர் முதல் அக்டோபர் வரை) அகில இந்திய புள்ள விவரங்களுடன் ஒப்பிட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



| ஆண்டு. (1) | கரும்பு அரவை (லட்சம் டன்களில்.) | | சர்க்கரை உற்பத்தி (லட்சம் டன்களில்.) | | சர்க்கரை கட்டுமானம். (சதவிகிதம்.) | |
|---|---|---|---|---|---|---|
| | அகில இந்திய அளவு. (2) | தமிழ் நாடு. (3) | அகில இந்திய அளவு. (4) | தமிழ் நாடு (5) | அகில இந்திய அளவு. (6) | தமிழ் நாடு. (7) |
| 1986–87 .. .. | 852.24 | 85.20 | 85.01 | 8.14 | 9.98 | 9.55 |
| 1987–88 .. .. | 939.49 | 85.85 | 91.10 | 7.85 | 9.70 | 9.23 |
| 1988–89 .. .. | 856.47 | 99.43 | 87.52 | 10.04 | 10.22 | 10.10 |
| 1989–90 .. .. | 1,111.49 | 95.40 | 109.88 | 8.88 | 9.89 | 9.30 |
| 1990–91 .. .. | 1,177.75 | 111.37 | 116.93 | 10.28 | 9.93 | 9.24 |

(31-05-1991 வரை.)

தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள் 31—8—91 முடிய 127.14 லட்சம் டன்கள் கரும்பினை அரவை செய்து 11.54 லட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்துள்ளது. கரும்பு உற்பத்தியாளர்கள் விவரம், அவர்கள் செலுத்தியுள்ள பங்குத் தொகை முதலிய விவரங்கள் இணைப்பு 1-ல் கொடுக்கப் பட்டுள்ளது. 1987–88 முதல் 1991—92 வரை திட்ட ஒதுக்கீடு விவரங்கள் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 7. ஒரு ஏக்கருக்கு கரும்பு உற்பத்தி :

தமிழகத்தில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் ஒரு ஏக்கரில் அதிகப்படியான கரும்பு உற்பத்தி செய்யவும் சர்க்கரை உற்பத்தியைப் பெருக்கவும் திட்டங்கள் வகுத்துள்ளன. ஆண்டொன்றுக்கு மேற்கூறிய ரக கரும்பு அபிவிருத்திகளுக்காக கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் சுமார் ரூ. 650 லட்சங்கள் செலவு செய்கின்றன. இவ்வகையில் மாநில அரசு அறிவித்த கரும்பு விலையை விட டன் ஒன்றுக்கு ரூ. 14 வீதம் கூடுதலாக கூட்டுறவு மற்றும் பொதுத்துறை கரும்பு விவசாயிகளுக்கு கிடைக்கின்றது. மேற்படி கரும்பு அபிவிருத்தி செலவுகளின் மூலம் ஏக்கருக்கு அதிக விளைச்சலும், அதிக சர்க்கரை கட்டுமானமும் கிடைக்க வழி செய்துள்ளது. சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு அகில இந்திய ரீதியில் 60 டன்கள் கரும்பு விளைச்சல் இருக்கும் நிலையில் தமிழகத்தில் சர்க்கரை ஆலைப் பகுதிகளில் ஹெக்டருக்கு 80 டன்கள் கரும்பு விளைகின்றது.

## 8. கூடுதல் கரும்பு விலை :

(லாபத்தை கூடுதல் கரும்பு விலையாக கரும்பு விவசாயிகளுக்கு பகிர்ந்தளித்தல்)

சில மாநில அரசுகள் (மைய அரசு நிர்ணயித்த கரும்பு விலையை விட) சிறிது அதிகமாக கரும்பு விலை அளித்தாலும், கரும்பு விவசாயிகளுக்கு லாபத்தை பகிர்ந்தளிக்கும் முறையினை அவை பின்பற்றுவதில்லை. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கிடைக்கும் லாபத்தின் ஒரு பகுதி கரும்பு விவசாயிகளுக்கு கூடுதல் விலையாக அளிக்கப்படுகிறது. இது மைய அரசு அறிவிக்கும் குறைந்தபட்ச கரும்பு விலையை விட அதிகமாக அளிக்கப்படும் மாநில அரசு பரிந்துரை விலையை விடவும் கூடுதலாக இருக்கும். கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் சுமார் 2.34 லட்சம் கரும்பு உற்பத்தியாளர்கள் உள்ளனர். லாபத்தை கரும்பு விலையாக பகிர்ந்தளிக்கும் முறை கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகளிடையே நடைமுறையில் உள்ளது. கரும்பு விவசாயிகளை மேலும் கரும்பு பயிர்செய்ய ஊக்குவிக்கும் நோக்கோடு இது கடைப்பிடிக்கப்படுகிறது. மேற்படி ஆலைகள்



கடந்த ஐந்து ஆண்டுகளில் தங்கள் கரும்பு [illegible] பிழிடும் அங்கத்தினர்களுக்கு மேற்கண்ட லாபத்தொகையினை [illegible] பகிர்ந்தளித்துள்ளன:—

| வரிசை எண். | வருடம். | கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை. | கரும்பு விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 1984–85 | 5 | 425.76 |
| 2. | 1985–86 | 6 | 390.77 |
| 3. | 1986–87 | 9 | 555.80 |
| 4. | 1987–88 | 13 | 1623.82 |
| 5. | 1988–89 | 15 | 1970.44 |

மேற்படி லாபத்தை பகிர்ந்தளிப்பதன் மூலமாக கரும்பு விவசாயிகள் தங்கள் கரும்பை வெல்லம் தயாரிக்கக் கொடுப்பதைக் குறைக்கிறது. மேலும் இது வட்டார வளர்ச்சி நிதி, போன்றவைகளுக்கு நிதி திரட்ட உதவுகின்றது. இதன் மூலமாக ஆலையின் மூலதனத்தை அதிகரிக்கவும் மற்றும் ஆலைக்கு ஒதுக்கப்பட்ட கரும்பு பகுதிகளில் சாலைகள் முதலியவற்றை அபிவிருத்தி செய்யவும் வழி வகுக்கின்றது.

## 9. ஊரக வளர்ச்சி :—

ஊரக வளர்ச்சியை கருத்தில் கொண்டு, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் பல்வேறு கிராமங்களை இணைக்கும் வகையில் கிராமப் பகுதிகளுக்கும் ஆலைக்கும் இணைப்புச் சாலைகள் அமைத்தல் போன்ற பணிகளுக்கு கரும்பு மேல்வரி மற்றும் வட்டார அபிவிருத்தி நிதியை பயன் படுத்துகின்றது. இதற்காக தனிப்பட்ட முறையில் ஒரு கரும்பு சாலை அபிவிருத்தி அலுவலகம், மேற்பார்வை பொறியாளர் (நெடுஞ்சாலைகள்) அவர்கள் தலைமையில திருச்சியில் செயல் படுகின்றது. அவரின்கீழ் மூன்று கோட்ட பொறியாளர்கள் திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் செயல்படுகின்றனர். அவர்கள் சர்க்கரை ஆலைப் பகுதிகளில்

புதியதாக சாலைகள் அமைத்தல் மற்றும் பழைய சாலைகளைப் பழுது பார்த்தல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றார்கள். கடந்த ஐந்தாண்டுகளில் கரும்பு மேல்வரி வசூல் செய்த விவரம் மற்றும் கரும்பு சாலை அபிவிருத்தித் திட்ட பணிகளுக்காக செலவிடப்பட்ட விவரங்கள் கீழ்வருமாறு :—

| வருடம். | வசூலிக்கப்பட்ட கரும்பு மேல்வரி (ரூ. இலட்சங்களில்) | கரும்பு சாலைக்காக செலவிடப்பட்ட தொகை (ரூ. இலட்சங்களில்) |
|---|---|---|
| 1986-87 | 271.22 | 200.72 |
| 1987-88 | 322.72 | 200.17 |
| 1988-89 | 277.58 | 200.16 |
| 1989-90 | 349.91 | 199.97 |
| 1990-91 | 1062.66 | 300.17 |

கரும்பு சாலை அபிவிருத்தி திட்டத்தின் செயலாக்க சாதனை இணைப்பு 3-ல் கொடுக்கப்பட்டுள்ளது.





**சர்க்கரை அபிவிருத்தி நிதி :** கடன்.

மைய அரசின் சர்க்கரை அபிவிருத்தி நிதியின்கீழ் ரூ. 40.57 கோடிகள் தமிழகத்தில் உள்ள 31 சர்க்கரை ஆலைகளில் 20 சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு அபிவிருத்திக்காக கடனாகப் பெறப்பட்டுள்ள விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி கடன் ஆலை அபிவிருத்திப் பணி மற்றும் ஆலை புனரமைப்பு பணிகளுக்காக பெறப்படும் கடன் தொகை நீங்கலாக வழங்கப் படுகின்றது.

| வரிசை எண். | சர்க்கரை ஆலையின் பெயர். | கடந்த 3 ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன் தொகை. (ரூ. லட்சங்களில்) |
|---|---|---|
| அ. | கூட்டுறவு மற்றும் பொதுத்துறை. | |
| 1. | ஆம்பூர் | 192.75 |
| 2. | மதுராந்தகம் | 256.26 |
| 3 | அமராவதி | 112.90 |
| 4 | சேலம் | 337.57 |
| 5. | கள்ளக்குறிச்சி | 201.62 |
| 6. | நேஷனல் | 175.92 |
| 7. | தர்மபுரி | 206.47 |
| 8. | வேலூர் | 306.61 |
| 9. | செங்கல்ராயன் | 130.9. |
| 10. | திருப்பத்தூர் | 178 .4 |

| | | |
|---|---|---|
| 11. | திருத்தணி | 125.53 |
| 12. | அறிஞர் அண்ணா | 129.53 |
| 13. | பெரம்பலூர் | 254.33 |
| 14. | மதுரா | 192.14 |

**ஆ. தனியார் துறை**

| | | |
|---|---|---|
| 15. | ஈ.ஐ.டி. பாரி | 341.79 |
| 16. | காவேரி | 248.53 |
| 17. | பொன்னி | 131.08 |
| 18. | பண்ணாரியம்மன் | 233.60 |
| 19. | கோத்தாரி | 129.70 |
| 20. | அருணா | 117.36 |
| | மொத்தம் | 4058.74 |



இணைப்பு 1.

19-2-91 அன்றுள்ளபடி ஆலைகளின் அரைவைத்திறன் மற்றும் பங்கு மூலதன விவரம்.

| வ. எண். | கூட்டுறவு சர்க்கரை ஆலையின் பெயர். | நாளொன்றுக்கு கரும்பு பிழி திறன். | மொத்த அங்கத்தினர்கள். | செலுத்திய பங்கு மூலதனம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | விவசாயி. | மாநில அரசு. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | | (ரூபாய் லட்சங்களில்) | | |
| 1. | ஆம்பூர் | 2200 | 17,530 | 102.67 | 10.00 | 112.67 |
| 2. | மதுராந்தகம் | 1750 | 16,851 | 145.02 | 36.11 | 181.13 |
| 3. | அமராவதி | 2000 | 12,339 | 88.99 | 25.00 | 113.99 |
| 4. | சேலம் | 2500 | 18,911 | 213.63 | 20.00 | 233.63 |
| 5. | கள்ளக்குறிச்சி | 2000 | 18,936 | 339.76 | 158.00 | 497.76 |
| 6. | தேஹரம் | 2500 | 19,464 | 177.56 | 38.89 | 216.45 |
| 7. | தர்மபுரி | 2000 | 17,120 | 132.20 | 40.55 | 172.75 |
| 8. | வேலூர் | 2500 | 23,700 | 239.52 | 180.76 | 420.28 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9. | திருப்பத்தூர் | 1250 | 15,971 | 140.93 | 324.84 | 465.77 |
| 10. | செங்கல்ராயன் | 3000 | 14,192 | 394.91 | 171.16 | 566.07 |
| 11. | திருத்தணி (ஜூன் 1990 வரை) | 1250 | 15,396 | 98.55 | 300.00 | 398.55 |
| 12. | ந.பு.கே.ஆர்.ஆர். | 1250 | 8,280 | 206.79 | 364.01 | 570.80 |
| 13. | செய்யார் | 2500 | 12,238 | 202.92 | 727.00 | 929.92 |
| 14. | எம்.ஆர்.கே. | 2500 | 12,254 | 236.64 | 778.79 | 1015.43 |
| | | 29200 | 2,23,012 | 2720.09 | 3175.11 | 5895.80 |



## இணைப்பு—2.

பல்வேறு தலைப்புகளில் திட்ட ஒதுக்கீடு விவரங்கள்.

| திட்டங்கள். | 1987—88 | 1988—89 | 1989—90 | 1990—91 | 1991—92 (திட்ட ஒதுக்கீடு). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | (ரூபாய் இலட்சங்களில்). | | |
| **திட்டமிடாதது :—** | | | | | |
| 1. இயக்ககம், மேற்பார்வை மற்றும் கொள்கை செயல்பாடுகள். | 23.28 | 25.19 | 28.85 | 29.83 | 31.77 |
| **உள்வழிக் கடன்கள்** | | | | | |
| 1. அசல் | 30.81 | 30.81 | 49.50 | 90.66 | 89.69 |
| 2. வட்டி | 30.72 | 27.60 | 54.22 | 149.36 | 131.31 |
| **மான்யம்** | | | | | |
| 1. கொள்முதல் வரி | 521.08 | 309.78 | 65.00 | 65.00 | 0.01 |
| 2. சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் | ... | ... | ... | 3.00 | 0.01 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| **கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்** | | | | | |
| 1. கடன் (திட்டமிடாதது) | — | — | 0.01 | 0.01 | 0.01 |
| 2. மூலதனம் (திட்டம்) | — | 376.74 | 1145.16 | 1000.00 | 1000.00 |
| **தமிழ்நாடு சர்க்கரைக் கழகம்** | | | | | |
| 1. மூலதனம் (திட்டம்) | — | — | .. | — | — |
| 2. கடன் (திட்டமிடாதது) | .. | 80.00 | — | — | — |
| **மின் உற்பத்திக்கான மானியம்** .. | .. | .. | 47.00 | 110.00 | 50.00 |
| **தமிழ்நாடு சர்க்கரைத் தொழில் திட்ட நிலையம்.** | | | | | |
| 1. வரவு (திட்டம்) .. .. | .. | 0.01 | 0.01 | .. | .. |
| 2. மூலதனம் (திட்டம்) .. | .. | 0.01 | 0.01 | .. | .. |
| **கரும்பு சாலை அபிவிருத்தி திட்டம்:** | 200.00 | 200.00 | 199.98 | 300.17 | 1,650.00 |
| **கரும்பு பயிரிடுவோருக்கு மான்யம்:** | 3.61 | .. | .. | 600.00 | 520.00 |
| **தமிழ்நாடு கரும்பு பயிரிடுவோர் கழகம்.** | | | | | |
| 1. வழிவகை முன்பணம் .. | 27.00 | 30.88 | 0.52 | 1.04 | .. |
| .. .. | .. | .. | 136.33 | .. | .. |



## இணைப்பு—3.

### கரும்புச் சாலை அபிவிருத்தி திட்டம்.

### 1989–90 முதல் 1991–92 வரையிலான செயலாக்க இலக்கு மற்றும் சாதனை.

| வரிசை எண்ணும் விவரங்களும். | 1989–90. நிதி ஆண்டு. | | 1990–91. நிதி ஆண்டு. | | 1991–92. நிதி ஆண்டு. இலக்கு. | |
|---|---|---|---|---|---|---|
| | இலக்கு. | சாதனை. | இலக்கு. | சாதனை. | தனியார் துறை சர்க்கரை ஆலைகள். | கூட்டுறவு துறை சர்க்கரை ஆலைகள். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 புதிய சாலைகள் அமைத்தல் (கி.மீ.) | 37.10 | 36.72 | 36.00 | 23;5 | 21.7 | 2.8 |
| 2 சாலைக்கு சரளைக்கல் பதித்தல் (கி.மீ.) | 50.70 | 49.02 | 41.00 | 28.0 | 36.8 | 5.8 |
| 3 சாலைகளுக்கு தார் போடுதல் (கி.மீ.) | 55.00 | 55.06 | 43.00 | 36.8 | 50.5 | 4.5 |
| 4 பாலங்கள் அமைத்தல் (எண்ணிக்கை). | 2 | ... | 7 | 3 | 4 | .. |
| 5 தரைப்பாலங்கள் (எண்ணிக்கை.) | 4 | 4 | 3 | 1 | 2 | .. |
| 6 குறுக்கு வடிகால்கள் (எண்ணிக்கை.) | 174 | 163 | 122 | 103 | 116 | 19 |

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் (வரையறுக்கப்பட்டது).

1991–92 ஆம் ஆண்டுக்கான செயலாக்க ஆய்வு.

தமிழ்நாட்டில் சர்க்கரை ஆலைகள் நிறுவுதல் மற்றும் கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலைகள் அமைக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் நிறுவப்பட்டது.

சர்க்கரை ஆலைகளின் செயல் திறன்:

1989–90 ஆம் ஆண்டிற்கான, கீழ்க்கண்ட 3 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயல் திறன் வருமாறு:—

| வரிசை எண்ணும் விபரமும். (1) செயல் திறன். | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை. (2) | மதுரை சர்க்கரை ஆலை. (3) | பெரம்பலூர் சர்க்கரை ஆலை (தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் துணை நிறுமம்). (4) |
|---|---|---|---|
| அ. 1989–90 அரைவைப் பருவம்— | | | |
| (1) கரும்பு அரைவை (லட்சம் டன்களில்) | 1.92 | 2.88 | 1.07 |
| (2) சர்க்கரை உற்பத்தி (லட்சம் குவிண்டால்) | 1.54 | 2.65 | 1.00 |
| (3) சர்க்கரை கட்டுமானம் (சதவீதம்) | 8.04 | 9.18 | 9.35 |
| நிதித் திறன் (1-4-1989 முதல் 31-3-1990 வரை.) தேய்மானத்திற்குப் பிறகு இவ்வாண்டு ஈட்டிய லாபம்/நட்டம் (ரூபாய் லட்சத்தில்.) | (—)59.52 | (+)341.83 | (—)85.20 |



1991 செப்டம்பர் 19]

அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளின் அரவைத் திறன் விரிவாக்கப்பட்டது.

புதியதாக நிர்மாணிக்கப்பட்ட இயந்திரங்களுக்கான தேய்மானம் மற்றும் மேற்கண்ட விரிவாக்கப் பணியை முடிக்கும் பொருட்டு இவ்வாலைகள் வாங்கிய கடனுக்கு உண்டான வட்டி ஆகியவை கீழே தரப்பட்டுள்ளன. இது தேய்மானம் மற்றும் வட்டி ஆகியவைகளே. இவ்வாலைகளின் செயல்முறை நட்டங்களுக்கு முக்கியக் காரணங்களாகும்.

மேற்கண்ட ஆலைகளில் இவ்வாண்டு ரொக்க நட்டம் (Cash loss) ஏதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆ. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் நிதி நோக்கு செயல்திறன்.

1989-90ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் தன் பங்குதாரர்களுக்கு 10 சதம் பங்கு ஆதாயமாக ரூ. 77.91 இலட்சம் ஒதுக்கியது போக ரூ. 92.63 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது. இவ்வாறு ஈட்டிய இலாபத்தைக் கொண்டு வருட ஆரம்பத்தில் இருந்த திரண்ட நஷ்டமான ரூ. 42.20 இலட்சத்தை நேர் செய்ததுடன் ரூ. 50.43 இலட்சம் திரண்ட இலாபமாக அடுத்த ஆண்டிற்கு எடுத்துச்சென்றுள்ளது.

| | ரூபாய் இலட்சத்தில். |
|---|---|
| (அ) வட்டி, தேய்மானம், வரி, பங்கு ஆதாயம் இவைகளுக்கு முன் இலாபம் .. .. | 507.44 |
| (ஆ) தேய்மானம் மற்றும் முதலீட்டுப்படி .. | 250.87 |
| (இ) தேய்மானம் மற்றும் முதலீட்டுப்படிக்கு பின் இலாபம் .. .. .. .. | 256.57 |
| (ஈ) வட்டி மற்றும் வரி .. .. .. .. | 86.03 |
| (உ) பங்கு ஆதாயத்தின் முன் இலாபம் .. .. | 170.54 |
| (ஊ) பங்கு ஆதாயத் தொகை .. .. .. | 77.91 |
| (எ) இவ்வாண்டின் நிகர இலாபம் .. .. | 92.63 |

(இ) தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தால் செயல்படுத்தப்படும் சர்க்கரை சம்பந்தப்பட்டத் திட்டங்கள் :—

பொதுத்துறை மற்றும் கூட்டுறவுத்துறைகளில் அமைந்துள்ள சர்க்கரை ஆலைகளுக்கு தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் கீழ்க் கண்ட வகைகளில் சேவை செய்கிறது :—

(1) அடிப்படை பொறியியல்.

(2) கரும்பு மற்றும் கரும்பு சம்பந்தப்பட்ட விஷயங்கள்.

(3) கட்டுமானப்பணித் திட்டம் மற்றும் செயலாக்கம் மற்றும் இயந்திரங்கள் வாங்குதல், நிறுவுதல்.

சமீபத்தில் முடிக்கப்பட்ட சர்க்கரை ஆலைகளின் விரிவாக்கப் பணி.

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் கீழ்க்கண்ட சர்க்கரை ஆலை களின் விரிவாக்கப் பணியை முடித்தது.

| | முந்தைய அறவைத் திறன். | விரிவாக்கப் பட்ட அறவைத் திறன். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை .. | 1,250 டன். | 3,000 டன். |
| தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை | 1,250 டன். | 2,500 டன். |
| வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை .. | 1,250 டன். | 2,500 டன். |
| அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை | 1,250 டன். | 2,500 டன். |
| பெரம்பலூர் சர்க்கரை ஆலை .. | 1,250 டன். | 3,000 டன். |



செயல்பாட்டில் உள்ள புதிய திட்டங்கள் :

தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் தர்மபுரி மாவட்டம் அரூரிலும், தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியிலும் (இரண்டாவது ஆலை) நாளொன்றுக்கு 2,500 டன்கள் அறவைத் திறன் கொண்ட சர்க்கரை ஆலையை நிறுவும் பணியை தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் ஏற்றுள்ளது.

மேலும் 5 சர்க்கரை ஆலைகளின் விரிவாக்கப்பணி :

புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவும் பணியைத் தவிர, கீழ்க் கண்ட 5 சர்க்கரை ஆலைகளின் விரிவாக்கப் பணியையும் தமிழ் நாடு சர்க்கரைக் கழகம் ஏற்றுக்கொள்வது குறித்து ஆராய்ந்து வருகிறது.

| | தற்பொழுதைய அரைவைத் திறன். | விரிவுபடுத்த உத்தேசித்துள்ள அரைவைத் திறன் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | டன்களில் | டன்களில் |
| மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை .. | 1,750 | 2,500 |
| கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை .. | 2,000 | 3,500 |
| தடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை .. | 1,250 | 3,500 |
| திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை .. | 1,250 | 2,500 |
| சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை | 2,500 | நவீனப் படுத்தும் திட்டம். |

(ஈ) தொடர்புடைய செயல்பாடுகள் :

(1) சர்க்கரை இயந்திரத் தொழிற்கூடம் :

பொதுத்துறை மற்றும் கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலை களின் தேவைக்கேற்ப உருளைகளை புதுப்பித்தல் மற்றும் சக்கை மற்றும் சல்லடைத் தகடுகளை வாங்குதல் மற்றும் செய்துகொடுத் தல் முதலிய பணிகளை மறைமலை நகரில் அமைந்துள்ள சர்க் கரை இயந்திரத் தொழிற்கூடம் மேற்கொள்கிறது.

[1991 செப்டம்பர் 19

(உ) தென்னிந்திய சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் :

வேலூர் அருகில் தென்னிந்திய சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி நிறுவனம் பொதுத்துறை, கூட்டுறவுத் துறை மற்றும் தனியார் துறைகளில் உள்ள சர்க்கரை ஆலைப் பணியாளர்களின் பயனுக்காக கீழ்க் கண்ட துறைகளில் பயிற்சி அளித்து சான்றிதழ்கள் வழங்குகிறது.

1. Sugar Boiling Certificate Course

2. Sugar Engineering Certificate Course

இந்நிறுவனம் தற்போது கரும்புச்சாறு தெளிவுபடுத்தும் முறை பற்றியதோர் ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளது.



1991 செப்டம்பர் 19]

## இணைப்பு III

118-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

## ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத் துறை.

### தமிழ்நாடு.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

(குறள்: பெருமை—அதிகாரம் 98)

தெய்வப்புலவரின் இப்போற்றத்தக்க, சீரிய கருத்தின் அடிப்படையில் பல்வேறுபட்ட நலத்திட்டங்கள் மூலம் ஆதி-திராவிடர்-பழங்குடியினர் மக்களுக்கு இத்துறையானது பணி செய்து வருகிறது. ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலன் என்ற தலைப்பில் 1991-92 ஆம் ஆண்டிற்கு ரூ. 102.26 கோடி வழங்குவதற்கான 31 ஆம் மானியக் கோரிக்கையை அவை முன் வைக்கிறேன். இம்மாநிலத்திலுள்ள ஆதிதிராவிடர்-பழங்குடி மக்களுக்கு கல்விப் பணியை அதிகரிப்பதும், அவர்களின் பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிப்பதும் இத்துறையின் முதன்மையான நோக்கங்களாகும். மேலும், இம்மக்களின் நலனுக்காக வகுக்கப்பட்ட வீட்டுவசதி மற்றும் அதன் தொடர்பான இதர திட்டங்களும், இத்துறையின் பொறுப்பில் உள்ளன. பழங்குடியினர் துணைத் திட்டம், கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளித்தல் போன்ற திட்டங்கள் இத்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி நல நடவடிக்கைகளில் ஒரு சிலவாகும்.

1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, இம்மாநிலத்தில் உள்ள 484 இலட்சம் மக்களில் ஆதிதிராவிடர் 88.81 இலட்சம் பேரும், பழங்குடியினர் 5.20 இலட்சம் பேரும் உள்ளனர். இது முறையே 18.35 சதவீதமாகவும் 1.07 சதவீதமாகவும் கணக்கிடப்பட்டுள்ளது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் மக்கள் தொகை தற்போது ஒரு கோடியைத் தாண்டியிருக்குமெனக் கருதப்படுகிறது.

கடந்த நாற்பதாண்டுகளாக, ஆதிதிராவிடர்-பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், சமூகப் பொருளாதாரத்தில் சீரான ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்கவும் சீரிய நோக்கத்தோடு பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டும் செயல்படுத்தப்பட்டும் வருகின்றன.

[1991 செப்டம்பர், 19

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் ஏற்கனவே அறிவித்தவாறு, ஆதிதிராவிடர்-பழங்குடியின மக்களின் நலனுக்கென பத்து அம்சத் திட்டம் ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டலின்கீழ்தொடங்க இவ்வரசு முடிவு செய்துள்ளது. மேற்கண்ட கொள்கை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இலக்குகளையும் முழுமையாக எய்திட இத்துறை அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

ஆதி திராவிடர்-பழங்குடியினர்க்குத் தொடர்ந்து வரும் குடியியல் உரிமைகளுக்கான பாதிப்புகளும், தீராக்கடன் மற்றும் எல்லையற்ற வறுமை ஆகியவையும் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளத்தக்கனவாகும். பொருளாதாரக் குறைகளைக் களைவதற்கான தீர்வைக் கண்டறியவும், வலுவான அடிப்படை வசதியை உருவாக்குவதற்குக் கல்வியில் போதிய வசதிகள் செய்து கொடுக்கவும், வீட்டுவசதி, குடிநீர், துப்புரவு வசதிகள் போன்ற இன்றியமையாத உடனடி அடிப்படை தேவைகளை நிறைவு செய்யவும், தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இனப் பாகுபாடற்ற நல்ல ஒரு சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்துடன் குடியுரிமைப் பாதுகாப்புப் பிரிவுகளை உருவாக்கி 1955 மற்றும் 1989 ஆம் ஆண்டுகளில் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டங்கள் மூலம் அதனைச் செயல்படுத்தி வருகிறது. தீண்டாமையால் பாதிக்கப்படும் பகுதிகளை அரசு அறிந்துள்ளது. தீண்டாமை குறித்தப்பெண்ணத்தையும் போக்கவும், நியாயத்தை நிலைநிறுத்தவும் தனி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1989ஆம் ஆண்டில் புதிய சட்டத்தின்படி குற்றங்களை விசாரிப்பதற்காக மாவட்டச் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அரசு வழக்குரைஞர்கள் இச்சிறப்பு நீதிமன்றங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு உள்ளடக்கத் திட்டமும், பழங்குடியினர்க்கான பழங்குடியினர் துணைத் திட்டமும் தேசிய அளவிலான நலத் திட்டங்களில் ஒரு பகுதியாகும். 1991–92 ஆம் ஆண்டில் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் பழங்குடியினர் பயனடையும் வகையில் ரூபாய் 16.60 கோடி செலவிடப்படும்.

## கல்வி.

அனைத்து வகுப்பினருக்குமான கல்வி அறிவு தேசிய அளவில் 36.23 சதவிதமாக உள்ளது. இதை ஒப்புநோக்கும்போது, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வியறிவு விதம், தமிழ்நாட்டில் 29.6 சதவிதமாக உள்ளது. பெண்களின் கல்வி



1991 செப்டம்பர் 19]

அறிவு விதம், தேசிய அளவில் 24.82 சதவிதமாகவும் தமிழ்
நாட்டில் ஆதி திராவிடர். பழங்குடியினர் பெண்களின் கல்வி
அறிவு விதம் முறையே 34.99 சதவிதமாகவும், 14 சதவிதமாக
வும் உள்ளது.

ஆதிதிராவிடர் குழந்தைகளின் கல்வித்தரத்தை மேம்படுத்
துவதற்கு ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை முன்
னுரிமை அளிக்கிறது. இத்துறையில் ஆதி திராவிடர்-பழங்
குடியினரின் கல்விக்காக வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டில்
50 சதவிதத்திற்கும் அதிகமாக அதாவது ரூபாய் 57 கோடி
ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர்-பழங்குடியினர் குழந்தைகள்
கல்வியறிவை எளிதில் அடையும் வகையில் இத்துறை
பள்ளிகளையும் மாணவர் இல்லங்களையும் நடத்தி வருகின்
றது. மேலே குறிப்பிட்டுள்ளவாறு இத்துறை 1,216 பள்ளிகளை
யும், 862 மாணவரில்லங்களையும் நடத்தி, வருகிறது :

அட்டவணை.

| பள்ளிகள். (1) | பள்ளிகளின் எண்ணிக்கை. (2) | வயது. (3) | மாணவர் எண்ணிக்கை (4) |
| --- | --- | --- | --- |
| 1. தொடக்கப்பள்ளிகள் | 1,060 | 6—11 | 1,89,57 |
| 2. நடுநிலைப் பள்ளிகள் | 73 | 11—14 | 33,352 |
| 3. உயர்நிலைப் பள்ளிகள் | 55 | 14—16 | 22,999 |
| 4. மேல்நிலைப்பள்ளிகள் | 28 | 16—18 | 31,546 |
| மொத்தம் | 1,216 | | 2,57,470 |

| மாணவரில்லங்கள். (1) | எண்ணிக்கை ஆண்கள். (2) | பெண்கள். (3) | மாணவர் கல்வி ஆண்கள். (4) | எண்ணிக்கை பெண்கள். (5) |
| --- | --- | --- | --- | --- |
| 87 உயர்நிலைப் பள்ளிகள் | 553 | 246 | 39,986 | 16,268 |
| கல்லூரிகள் | 37 | 17 | 4,445 | 666 |
| தொழிற்பயிற்சி நிலையங்கள் .. .. | 9 | 1 | 713 | 13 |
| மொத்தம் | 598 | 264 | 45,094 | 16,947 |



இத்தோடுகூட மாநிலக் கல்வித் துறையால் நடத்தப்படும் பள்ளிகளிலும் ஆதிதிராவிடர்-பழங்குடியினரின் குழந்தைகள் சேர்க்கப்படுகின்றனர். பள்ளிகளின் தேவை தொடர்ந்து பெருகி வருவதை ஈடு செய்யும் பொருட்டு இத்துறை தற்போதுள்ள ஒரு சில தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தியுள்ளது. இது தொடர்பாக, 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 6.85 இலட்சம் செலவில் 50 இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களையும், 9 முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களையும் 18 கைத்திறன் தொழில் பயிற்றுநர்களையும், 20 உடற்பயிற்சி ஆசிரியர்களையும், 28 ஓவிய ஆசிரியர்களையும் பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் ரூபாய் 20.50 இலட்சம் செலவில், மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக் கருவிகள் வழங்குதல், தொடக்கப் பள்ளி மற்றும் இடைநிலைப் பள்ளிகளுக்கு வரைபடங்கள், விளக்கப் படங்கள் வழங்குதல், தொடக்கப் பள்ளிகளுக்கு மேசை, நாற்காலி போன்ற மரச் சாமான்கள் வழங்குதல் போன்ற வேறு சில வசதிகள் செய்து கொடுக்கப்படும். மேலும் ரூ. 1.62 இலட்சம் செலவில் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்., தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் இடைநிலை ஆசிரியர்களுக்கும், பட்டதாரி ஆசிரியர்களுக்கும் புத்தறிவு பயிற்சி மையங்கள் ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவியருக்கு 10 ஆம் வகுப்பு வரையிலும், மாணவர்களுக்கு எட்டாம் வகுப்பு வரையிலும் வழங்கப்படும் இரண்டு ஜோடி இலவச சீருடைகள் ரூ. 1.67 கோடி செலவில் 1991-92 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து வழங்கப்படும்.

எல்லா நலப் பள்ளிகளையும், அரசு கட்டிடங்களில் செயல்படச் செய்யும் வகையில் பள்ளிக் கட்டிடங்கள் படிப்படியாக கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் 12 பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூ. 1.65 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர பழங்குடியினர் தங்கிப் பயிலும் அரசு கட்டிடங்கள் கட்டுவதற்கென ரூ. 21.27 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை கல்விக் கடன் உதவித் தொகை மற்றும் பல்வேறு விதிவிலக்குகள், சலுகைகள் ஆகியவற்றை அளித்து நிதியுதவி செய்யப்படுகிறது. அவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் நோட்டு புத்தகங்கள் ஆகியவையும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

[1991 செப்டம்பர் 19

மெட்ரிக் படிப்புக்கு முந்தைய (Pre-Matric) படிப்பிற்காக படிப்புதவித் தொகை 1 ஆம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்பு வரை படிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

பிற சலுகைகளாவன :

1ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை இலவசப் பாடப் புத்தகங்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுதல், 9 மற்றும் 10ஆம் வகுப்புகளுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையால் இலவசப் புத்தகங்கள் வழங்கப்படுதல், 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்புவரை விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உண்டு உறைவிட உதவித் தொகை வழங்கப்படுதல் மற்றும் பொதுப் பள்ளிகளில் 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரையிலும் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இதில் ரூ. 1.79 கோடி செலவில் 12.72 இலட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர். கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய, ஆதி திராவிடர் மாணவர்களும் இத்திட்டங்களினால் பயனடைகின்றனர்.

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 15,000 வரை உள்ளவர்களின் குழந்தைகள் மாநில உறைவிட படிப்புதவித் தொகையாக ஆண்டுக்கு ரூ. 250-லிருந்து 350 வரை பெறத் தகுதியுள்ளவராவார்.

சாதிமத வேறுபாடின்றி, சுகாதாரமற்ற (கழிவறை சுத்தம் செய்தல், தோல் பதனிடுதல், தோல் உரித்தல் மற்றும் பெருக்கு தல்) பணிபுரிவோரின் குழந்தைகள், மத்திய அரசு பெறும் திட்டத்தின் கீழ் பயனடைகின்றனர். மத்திய அரசு பொறுப் கீழ் பயனடைகின்றனர். இத்திட்டத்தின் பயனடைவதற்காக, ரூ. 19.91 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1,223 குழந்தைகள்

மெட்ரிக் படிப்பிற்குப் பிந்தைய (Port matric) படிப்பிற்கான உதவித்தொகை வழங்கும் திட்டம் பெருவாரியாக இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை :

(1) மத்திய அரசு நிதியுதவி வழங்கும் திட்டம்.

(2) மாநில அரசின் திட்டங்கள்.



1991 செப்டம்பர் 19]

1. மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படும் திட்டங்கள் :

(அ) மத்திய அரசின் நிதியுதவித் திட்டத்தின் உதவித்தொகை பெறுவதற்கான அடிப்படைத் தகுதிகளவான (i) பெற்றோர் பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 24,000-க்கு மிகைப் படாமல் இருத்தல் வேண்டும். (i) ஒரு குடும்பத்தில் இரு குழந்தைகள் மட்டுமே இச்சலுகை பெறத் தகுதியுள்ளவர். (ஆ) விடுதிகளில் தங்கிப் பயிலாத மாணவர்களுக்கு மாதமொன்றிற்கு ரூ. 65 லிருந்து ரூ. 125-ம், விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு மாதமொன்றிற்கு ரூ. 115-லிருந்து ரூ. 280-ம் பராமரிப்புப் படியாக மத்திய அரசு வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஆண்டொன்றிற்கு தோராயமாக 83,564 ஆதிதிராவிடர் பழங்குடியின மாணவர்கள் பயனடைகின்றனர்.

மாநில அரசின் திட்டங்கள் :

(அ) நிதியுதவி பெறுவதற்கான அடிப்படைத் தகுதிகள் :

(i) பெற்றோர் பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ஆண்டுக்கு ரூபாய் 15,000-க்கு மிகைப்படாமல் இருத்தல்வேண்டும். (ii) மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களும், ஆதிதிராவிடர் இந்து பழங்குடியினர் பெற்றோர்களின் மூன்றாவது மற்றும் அதற்கு பிந்தைய குழந்தைகளும் நிதியுதவிபெறத் தகுதியானவர்களாவார்கள்.

(ஆ) விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு மாதமொன்றிற்கு உணவு உறைவிடச் செலவுக்காக ரூ. 75-லிருந்து ரூ. 100 வரை மாநில அரசு வழங்கி வருகிறது.

இம்மாநிலத் திட்டத்தின் கீழ் மொத்தம் 7,855 மாணவர்கள் பயனடைகின்றனர்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்களுக்குப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இதற்கென ரூ. 70.74 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர் குடும்பத்திலிருந்து வரும் முதல் பட்டதாரி மாணவருக்கு அவர்களின் பெற்றோர்/ பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 15,000-க்கும் மிகாமல் இருக்குமாயின், அத்தகைய மாணவருக்குத் தொழிற்கல்வி வரையில் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. 1991-92 ஆம் ஆண்டில் இதற்கென ரூ. 0.95 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

உதவித் தொகையிலிருந்து விடுதிக்காகும் மொத்த செலவினத்தைச் சரிக்கட்ட இயலாத நிலையில்உள்ளமாணவர்களுக்குக் கடன் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டொன்றிற்கு

[1991 செப்டம்பர் 19

ரூ. 750-லிருந்து ரூ. 1,750ம் வரை கடன் உதவித்தொகை
வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்
களுக்கு ரூ. 87.35 இலட்சமும், மதம் மாறிய ஆதிதிராவிடர்
மாணவர்களுக்கு ரூ. 3.5 லட்சம 1991-92-ல் ஒதுக்கீடு செய்யப்
பட்டுள்ளது. இந்தக் கல்விக்கடன் உதவித்தொகைத்
திட்டத்தின் கீழ் 1990-91ஆம் ஆண்டில் 8,104 மாணவர்கள்
பயனடைந்துள்ளனர்.

விலை உயர்ந்த மருத்துவம் மற்றும் பொறியியல் புத்தகங்கள்
வாங்குவதற்கான செலவினைச் சரிக்கட்டுவதற்காக மூன்று
மாணவர்களுக்கு ஒரு தொகுதிப் புத்தகங்கள் (one set)
என்ற விதத்தில் ரூ. 5,000 செலவில் வாங்கப்பட்டு கல்லூரியில்
புத்தக வங்கியில் வைக்கப்பட்டு வருகிறது. 1991-92 ஆம்
ஆண்டிற்கு இதற்கென ரூ. 32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்
டுள்ளது.

ஆதிதிராவிடர்-பழங்குடியினர் மற்றும் கிறுத்தவ மதத்திற்கு
மாறிய ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த சட்டப் பட்டதாரி
களுக்குச் சொந்தமாகச் சட்டத் தொழிலைத் துவக்குவதற்கென
மாநிலத் திட்டத்தின் கீழ் ரூ. 750 கடனாகவும், ரூ. 8.750
மானியமாகவும் கொடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின்
சிறப்பு நிதியுதவித் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டைச் சேர்ந்த
ஆதிதிராவிடர் (இந்து) இனத்தைச் சேர்ந்த சட்டப் பட்டதாரி
களுக்கு சொந்தமாகச் சட்டத் தொழிலை தொடங்குவதற்கென
ஒவ்வொருவருக்கும் ரூ. 3,000 மானியமாக வழங்கப்படுகிறது.
இதுவரை இத்திட்டத்தின் கீழ் 186 பேர்களுக்கு நிதியுதவி
வழங்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்குக் கல்லூரி அளவில் சிறப்புப் பயிற்சி
வகுப்புகள் மூலம் பயிற்சி அளிப்பதற்கான திட்டம் செயல்
படுத்தப்பட்டு வருகிறது. பயிற்சி வகுப்புகள் அனைத்துக்
கல்லூரிகளிலும் கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் மூலம்
பொறியியற் கல்லூரிகளின் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்
மூலமும் நடத்தப்படுகின்றன. சென்னை, கோயம்புத்தூர்,
திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை ஆகிய ஐந்து நகரங்களில்
உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஆதிதிராவிடர்-பழங்குடியினர்
மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு
வருகின்றன. இத் திட்டம் மேலும் தொடர்ந்து செயல்படுத்
தப்படும்.

<u>விடுதிகள் :</u>

ஆதிதிராவிடர்-பழங்குடி மக்களில் பெரும்பாலோர் கிராமப்
புறங்களிலும், குறைவு வளர்ச்சி பெற்ற நகர்ப்புறப் பகுதிகளிலும்
மலைப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். எனவே அவர்கள்



1991 செப்டம்பர் 19]

வாழ்கின்ற இடங்களுக்கு அருகில் கல்வி நிலையங்கள் பெரும்
பாலும் இருப்பதில்லை. ஆதிதிராவிடர், பழங்குடியினர்
பெற்றோர்கள் பொதுவாக படிப்பறிவில்லாதவர்களாகவும்,
மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களாகவும் இருப்பதால்,
பிள்ளைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புவதற்குப் பதிலாக
தங்களின் அன்றாட வருவாயினைப் பெருக்கிட அவர்களைப்
பயன்படுத்துவதையே கருதுகின்றனர். அவர்கள் வசிக்கும்
இல்லங்களில் போதிய உணவு, வெளிச்சம், இடம் போன்ற
வசதிகள் குறைவாக உள்ளதால், ஆதிதிராவிடர், பழங்குடி
யினர் பிள்ளைகளுக்குக் கல்வி கிடைத்ததற்கரிய ஒன்றாக
உள்ளது. ஆகவே தமிழ்நாடு அரசு, இம்மாணவர்கள் எந்தவொரு
இடர்பாடும் இன்றிக் கல்வி பெற விடுதிகளைக் கட்டித் தந்துள்ளது.
839 இல்லங்களில், 256 மாணவியர் இல்லங்களாகவும்,
583 மாணவர் இல்லங்களுமாகச் செயல்படுகின்றன. பள்ளி
மாணவர்களுக்கு தங்குமிட வசதியுடன் உணவுச் செலவுக்கும்
சேர்த்து மாதம் ஒன்றுக்கு ரூ. 105 தரப்படுகிறது. பள்ளியில்
தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு, இருப்பிட வசதியோடு குளியல்
சாதன பொருட்களான சோப்பு, சிகைக்காய், எண்ணெய் மற்றும்
இரண்டு ஜோடி சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

சென்னை மாநகரில் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு,
மாதம் ஒன்றுக்கு ரூ. 160-ம் வெளியூரில் பயிலும் கல்லூரி
மாணவர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ. 155-ம் உணவுக் கட்டண
மாக வழங்கப்படுகிறது. இம்மாநிலத்தில் கல்லூரி மாணவர்
களுக்கென 54 விடுதிகள் உள்ளன. 1990-91-ல் விடுதி ஒன்றுக்கு
ரூ. 5,000 விதம் 20 கல்லூரி விடுதிகளுக்கு ரூ. 1 இலட்சம்
செலவில் நூலக வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1991-92-ல்
34 கல்லூரி விடுதிகளுக்கும், 16 பள்ளி விடுதிகளுக்கும் (மொத்தம்
50 விடுதிகளுக்கு) ரூ. 2.25 இலட்சம் செலவில் நூலக வசதி
தரப்படும்.

விடுதிகளுக்கு 'இன்டேன் எரிவாயுவு' இணைப்பு படிப்
படியாக வழங்கப்பட்டு வருகிறது. 1989-90 ஆம் ஆண்டில்
44 கல்லூரி; தொழிற்பயிற்சி நிலைய மாணவர் விடுதிகளுக்கு
சமையல் எரிவாயுவு இணைப்பு வழங்கப்பட்டது. 1990-91ல்
31 விடுதிகளுக்கு 'இன்டேன் எரிவாயுவு' வசதிகளும், 50 விடுதி
களுக்கு மாவரைக்கும் எந்திரமும் வழங்கப்பட்டன. 1991-92-ல்
50 விடுதிகளுக்கு ரூ. 2.69 இலட்சம் செலவில் மாவரைக்கும்
எந்திரங்களும், 10 விடுதிகளில் ரூ. 3.45 இலட்சம் செலவில்
சமையல் எரிவாயுவு வசதியும் அளிக்கக் கருதப்பட்டுள்ளது.
பொது அறிவு, தேச நடப்பு சர்வதேச நிகழ்ச்சிகளை
எளிதில் அறிந்துகொள்ள வசதியாக முதல் கட்டமாக 13 கல்லூரி
விடுதிகளுக்கு 1990-91-ல் ரூ. 1.50 இலட்சம் செலவில் வண்ணத்
தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வோர் ஆண்டும், இடவசதி, நிதி வசதி ஆகியவற்றைப் பொறுத்து, விடுதிகளில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அரசு அதிகரித்து வருகிறது. 1990-91-ல் மாண வர்களின் எண்ணிக்கை மேலும் 2,500 ஆக அதிகரிக்கப்பட்டது. 1991-92-ல் மாணவர்களின் எண்ணிக்கை மேலும் 1,000 அதி கரிக்கப்படும். இதற்கு ஆகும் கூடுதல் செலவு ரூ. 7.50 இலட்சமாகும்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவர்களின் நன்மைக் காக இத்தகைய அரசினர் மாணவர் இல்லங்களுடன் தொண்டு நிறுவனங்களும் இந்தத் துறையின் நிதி உதவியுடன் மாணவர் இல்லங்களை நடத்தி வருகின்றன. இம்மாநிலத்தில் அத்தகைய மாணவர் இல்லங்கள் 43 உள்ளன. இத்தகைய ஒரு விருதி யினை அண்மையில் அரசே ஏற்றுள்ளது.

தற்போதுள்ள 583 மாணவர் இல்லங்கள் மற்றும் 256 மாண வியர் இல்லங்களில் 214 மாணவர் இல்லங்களும் மற்றும் 137 மாணவியர் இல்லங்களும் அரசுக் கட்டிடங்களில் அமைந்துள்ளன. எஞ்சிய 369 மாணவர் இல்லங்களும், 119 மாணவியர் இல்லங் களும், வாடகைக் கட்டிடங்களில் அமைந்துள்ளன. 1990-91 ஆம் ஆண்டில், 6 மாணவர் இல்லங்கள் மற்றும் 8 மாணவியர் இல்லங்கள் கட்ட ரூ. 3 கோடி அனுமதிக்கப்பட்டது. 1991-92ல் ஆதி திராவிடர் மாணவ, மாணவியர் இல்லங்கள் கட்டுவதற்கு ரூ. 229.96 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

<u>பொருளாதார மேம்பாடு :</u>

பெரிதும் வறுமையில் வாடும், ஆதிதிராவிடர் பழங்குடி யினருக்கு உதவி செய்ய, வருமானம் தரக்கூடிய திட்டங்களை உருவாக்குவது அவசரத் தேவையாகும். பல்வேறு தொழில் களுக்கு ஏற்ற வகையிலான திட்டங்கள் தீட்டப்பட்டு, செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

<u>உழவு மாடுகள் வாங்க மானியம் :</u>

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர் ஆகியோரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்கத்தோடு, வேளாண்மை மானியம் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

உழவு மாடுகளின் விலை உயர்வினைக் கணக்கில் கொண்டும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தில் உள்ளது போல ஒரே மாதிரி நடைமுறையினை கையாள்வதற்கும் அரசு சமூக நலத் துறையின் 8—11—1983 ஆம் நாளிட்ட 1670—ஆம் எண்



அரசாணையில் இத்திட்டத்தை மாற்றியமைத்து உத்தர விட்டுள்ளது. மாற்றியமைக்கப்பட்ட திட்டத்தின்படி, ஆதி திராவிடர், பழங்குடியினர், மற்றும் கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் ஆகியோர்க்கு உழவு மாடுகள் வாங்குவதற்காக மானியம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆணை பிறப்பித்தது. அதற்கிணங்க, ரூபாய் 600-க்கு மிகாமல், உழவு மாடுகள் வாங்க உழவு மாடுகளின் விலையில் மூன்றில் ஒரு பங்கு மானியம் வழங்கப்பட்டது. விலையை மீதமுள்ள மூன்றில் இரண்டு பங்கு அதாவது ரூ. 1,200 வங்கிகள் மூலம் கடனாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட நிதி உதவி, 1983-84 முதல் செயல்படுத்தப்பட்டது. 13-3-1987 ஆம் நாளிட்ட சமூகநலத்துறை அரசாணை எண் 459-ல் மொத்தத் தொகை ரூ. 2,400 என நிர்ணயித்து அதில் அரசு மானியம் ரூ. 800 என உயர்த்தப்பட்டது. இந்த அரசு மானியத் தொகையை மூன்றில் ஒரு பங்கிலிருந்து 50 சதவீதத் திற்கு உயர்த்தி (உயரளவு ரூ. 1,500), 8—10—1990 ஆம் நாளிட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசாணை எண் 1690-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எஞ் சிய தொகை 50 சதவீதம் கடனாக வழங்கப்படும். இரண்டு மாடுகளின் விலை ரூபாய் 3,000 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு, 1991-92 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர், பழங்குடியினர்க்கு முறையே, ரூபாய் 9.32 இலட்சமும் ரூபாய் 1.33 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர்களுக்கு இதே நோக்கத்திற்காக ரூபாய் 0.96 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

<u>தொழிற்பயிற்சி பெற்றவர்களுக்கு மானியம் :</u>

தொழிற்பயிற்சி பெற்றவர்கள் அல்லது தொழிலில் திறமை பெற்றவர்கள், இஸ்திரி பெட்டி, துணி தைக்கும் தையல் இயந் திரம், தோல் தைக்கும் தையல் இயந்திரம் முதலியனவற்றை இத்திட்டத்தின் கீழ் இலவசமாகப் பெறலாம்.

1990-91 ஆம் ஆண்டில், ரூபாய் 16.67 இலட்சம் செலவில் மொத்தம் 1,397 நபர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் அடைந் துள்ளார்கள்.

இத்திட்டத்திற்கு 1991-92 ஆம் ஆண்டில், ரூபாய் 16.08 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கூட்டுறவு.

### ஆதிதிராவிடர் பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்.

ஆதிதிராவிடர், கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் ஆகியோரின் பொருளாதார நிலையினை மேம்படுத்தவும், இவர்களின் வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும் பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் ஒவ்வொருவருக்கும், மாடு வாங்க, மாடு ஒன்றிற்கு ரூபாய் 3,200 வழங்கப்படுகின்றன. அரசு மானியம் 33 1/3 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்தி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் 2—2—1991 ஆம் நாளிட்ட அரசாணை எண் 1-ல் வெளியிடப்பட்டுள்ளது. ரூபாய் 3,200-ல் 50 சதவீதத் தொகையான ரூ. 1,600 மானியமாகவும் மீதி ரூபாய் 1,600 நாட்டுடைமையாகப்பட்ட வங்கிகளில் கடனாகவும் ஏற்பாடு செய்தும் வழங்கப்படுகிறது. மேற்கண்ட உதவியினைப் பெறும் ஒவ்வொருவரும் இரண்டு மாடுகள் வாங்குவதற்குத் தகுதியுடையவராவர். நிதி உதவி அனுமதிப்பதற்கு ஆண்டு வருமானம் ரூ. 6,400 என ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் 12—2—1990 ஆம் நாளிட்ட அரசாணை எண் 192-ல் அரசு நிர்ணயித்துள்ளது. பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை ஆணையர் இத்திட்டத்தினைச் செயல்படுத்துகிறார்.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்றவர்களில் ஆதிதிராவிடர் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் ஆகியோரின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | பயனடைந்தவர்களின் எண்ணிக்கை. | |
|---|---|---|
| | ஆதி திராவிடர். | கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர். |
| (1) | (2) | (3) |
| 1983–84 .. .. .. | 3,885 | 143 |
| 1984–85 .. .. .. | 3,823 | 136 |
| 1985–86 .. .. .. | 3,634 | 120 |
| 1986–87 .. .. .. | [illegible] | [illegible] |



| | | |
|---|---|---|
| 1987–88 .. .. .. | 3,936 | 120 |
| 1988–89 .. .. .. | 4,686 | 120 |
| 1989–90 .. .. .. | 5,886 | 145 |
| 1990–91 .. .. .. | 8,044 | 124 |

1991-92 ஆம் ஆண்டில் இதற்காக, ஆதிதிராவிடர், கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் ஆகியோர்க்கு ரூபாய் 51.50 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### குடிசைத் தொழில்கள் :

குடிசைத் தொழில் பயிற்சி நிலையங்கள் தொடர்ந்து செயல்படுகின்றன. இப்பயிற்சி நிலையங்களைப் பராமரிப்பதற்குத் தேவைப்படும் நிதியை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சமூக நல இயக்குநரிடம் ஒப்படைக்கிறது. நடப்பு நிதி ஆண்டில், ஆதிதிராவிடர்க்கு பயிற்சி அளிக்க ரூபாய் 4.12 இலட்சங்களும், பழங்குடியினர்க்குப் பயிற்சியளிக்க ரூபாய் 0.70 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஒரு கூட்டுறவு சங்கத்தினை நடத்துவதற்கு பணியாளர் சம்பளம் மற்றும் இதர இனங்களுக்காக கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் வசம் ரூபாய் 37,000 ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறையில் தையல், நெசவு பயிற்சி மையம் ஒன்று ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறையால் தொடர்ந்து நடத்தப்படுகிறது.

### பயிற்சியும் வேலை வாய்ப்பும்.

பயிற்சித் திட்டங்கள், குறிப்பாக அரசுப் பணிகள், கணிப்பொறிப்பயிற்சி, கப்பல் வானொலி அலுவலர் பயிற்சி, செவிலியர் பயிற்சி, வாகன பொறியியல் பயிற்சி, மருத்துவ உதவியாளர் பயிற்சி, மனை நிர்வாகப் பயிற்சி போன்ற தரமுள்ள முன்னேறிய துறைகளிலும் நடத்தப்படுகின்றன. இவ்வகைப் பயிற்சித் திட்டங்கள் படித்த வேலையற்ற ஆதிதிராவிட இளைஞர்களின் வேலை வாய்ப்பைப் பெருக்கிக் கொள்ள உருவாக்கப்பட்டுள்ளன.

**ஆதி திராவிடர் பழங்குடியினர் இயக்குநரால் சிறப்பு மத்திய உதவித் தொகை கொண்டு நடத்தப் படும் பயிற்சித் திட்டங்களில் ஒரு சில பின்வருமாறு :**

| வரிசை எண்ணும், பயிற்சித் திட்டத்தின் பெயரும். | பயிற்சி அனுமதிக்கப்பெறுவோர் எண்ணிக்கை. | பயிற்சி பெற்றவர்கள்/ பயிற்சி பெறுவோர்கள் எண்ணிக்கை. | பயிற்சிக் காலம் (மாதங்களில்). | இன்று வரை தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் கொடுத்துள்ள மொத்தத் தொகை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூ. |
| 1 கணிப்பொறி பயிற்சி .. .. | 550 | 550 | 6(*) | 16,78,000 |
| 2 மருத்துவமனை நிருவாகப் பயிற்சி | 30 | 30 | 24 | 3,75,000 |
| 3 கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி | 679 | 679 | .. | 23,16,000 |
| 4 சட்டப் பட்டதாரிகளுக்கு நிதிஉதவி அளித்தல் .. .. .. | 277 | 277 | .. | 9,37,000 |
| 5 மூல முன் மாதிரிப் பயிற்சி .. | 32 | 32 | 3 | 9,600 |
| 6 காவல் இராணுவப்படை.. .. | 100 | 100 | .. | 1,25,050 |
| 7 செவிலியர் உதவியாளர் .. .. | 30 | 30 | 12 | 1,73,500 |
| 8 வாகனப் பொறியியல் பயிற்சி .. | .. | 10 | 36 | 4,11,200 |
| 9 கப்பல், வானொலி அலுவலர் பயிற்சி | 200 | 200 | 12 | 14,64,000 |

(*) கணிப் பொறி பயிற்சிக் காலம் தற்போது ஒரு வருடமாக அதிகரித்துள்ளது.



**சட்ட பட்டதாரிகளுக்குப் பயிற்சி :**

ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த 20 சட்ட பட்டதாரிகளுக்கு நீதித்துறையில் 4 வருட கால பயிற்சி அளிக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அரசால் அமைக்கப்பட்ட குழுவினால் இப்பயிற்சிக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒரு முதுநிலை வழக்குரைஞரின் கீழ் இரண்டு சட்டப்பட்டதாரி மாணவர்கள் வீதம், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும், அதே இனத்தைச் சார்ந்த சிறந்த வழக்குரைஞரின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பயிற்சி பெற்றால் நல்ல பயன் கிடைக்கும் என்று கருதப்படுகிறது. இத் திட்டம் 1988-89 லிருந்து சிறந்த முறையில் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி பெறும் ஒரு மாணவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 500 உதவித் தொகை வழங்கப்படுகிறது. மூத்த வழக்குரைஞருக்கு ஆண்டுதோறும் தலா ரூ. 5,000 வீதம் மதிப்பூதியம் உயர்ந்தபட்சமாக 10 வழக்குரைஞர்களுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1991-92 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.53 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**அரசுப்பணி :**

(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஆயுள் காப்பீட்டுக் கழகம், வங்கிப் பதிவாளர் தேர்வாணையம் முதலியவை நடத்தும் தேர்வுகள் பலவற்றில் பங்கேற்கும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப் படுகிறது.

(ஆ) 1990-91 ஆம் ஆண்டில், 390 ஆதிதிராவிடர் மாணவர்கள், கல்வி, கலை, அறிவியல், பொறியியல் கல்லூரிகளில் பல்வேறு பயிற்சி திட்டங்களில் பங்கேற்றனர். 1990-91 ஆம் ஆண்டில் பயிற்சிக்காக ரூபாய் 31,700 செலவிடப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டுக்கு ரூபாய் 50,000 ஒதுக்கப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மருத்துவம்/பொறியியல்/விவசாயம் மற்றும் இந்தியத் தொழில் நுட்ப நிறுவனம் ஆகியவற்றிற்கான நுழைவுத் தேர்விற்குரிய பயிற்சியில் 475 மாணவர்கள் கலந்து கொண்டனர். இத்திட்டங்கள், 1991-92 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல் படுத்தப்படும். 1991-92 ஆம் ஆண்டிற்கு ரூ. 6,000 ஒதுக்கப் பட்டுள்ளது.

(இ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கான தேர்வுக்கு முந்திய பயிற்சி நிலையத்தில் ஒவ்வொர் ஆண்டும் இந்திய ஆட்சிப் பணி மற்றும் இந்திய காவல்பணி முதலிய அகில இந்திய பணிகளுக்கான தேர்வில் பங்கேற்க 60

மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. 1989–90-ல் 15 மாணவர்கள் முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்றனர். இவர் களில் இறுதிநிலைத் தேர்வு எழுதிய 13 மாணவர்களில், 6 பேர் வெற்றி பெற்றனர். இவர்களில் 3 பேர் நியமனம் செய்யப்படு வதற்காக இறுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 1990–91ல் 57 மாணவர்கள் பயிற்சிக்காக இப்பயிற்சி நிலையத்தில் சேர்க்கப் பட்டுள்ளனர். இவர்கள் 1991 செப்டம்பர் திங்களில் நடை பெறவுள்ள முதல் நிலைத்தேர்வு எழுத இருக்கின்றனர்.

## வீட்டு வசதித் திட்டம் :

வீடு இல்லாதவர்களுக்கு உறைவிடம் ஏற்படுத்தித்தருதல் என்பது உலகம் முழுவதும் வளர்ந்து வரும் ஒரு கொள்கை யாகும். நம்நாட்டில் தாங்களாகவே உறைவிடம் ஏற்படுத்திக் கொள்வதற்கு நிதி வசதியின்றி வாழ்கின்ற குடிமக்கள் அதிக அளவில் இருப்பதால் அவர்களுக்கு வீட்டு வசதி ஏற்படுத்தித் தர வேண்டிய அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது. இப்பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தமிழக அரசு, தமிழ்நாடு ஆதிதிரா விடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தை 1974-ல் ஏற் படுத்தியது. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகம் தொடங்கப் பட்ட நாளிலிருந்து, 78,673 வீடுகளைக் கட்டி ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வழங்கி யுள்ளது. 1989–90 ஆம் ஆண்டு முதல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான வீடுகள் ஊரக வளர்ச்சித் துறையால் கட்டப் பட்டு வருகின்றன. 1989–90 ஆம் ஆண்டில் 42,000 வீடுகளும், 1990–91 ஆம் ஆண்டில் 47,000 வீடுகளும் ஆதிதிராவிடர்களுக் காகக் கட்டப்பட்டன.

1991–92 ஆம் ஆண்டில் 50,000 வீடுகள் கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதற்கென ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கான வரவு-செலவுத் திட்டக் கணக்கில் ரூ. 11.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தருவதுடன் அச்சமூகத்தவர்களுக்கு வீட்டு மனையும் வழங்க அரசு நிலத்தைக் கையகப்படுத்தி வரு கின்றது. ஒவ்வொரு ஆதிதிராவிடர் குடும்பத்திற்கும் மூன்று சென்ட் வீதம் வீட்டு மனைகள் வழங்கப்படுகின்றன. இதுவரை 16.93 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. வீட்டு மனை வழங்குவதற்காக, 1990–91ம் ஆண்டில் ரூ. 2.86 கோடி செலவிடப்பட்டது. 1991–92 ஆம் ஆண்டில் 75,000 குடும்பங்களுக்கு வீட்டு மனை வழங்கவேண்டி ரூ. 4.90 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



## தீண்டாமை ஒழிப்பு :

சமுதாயத்தின் எல்லாப் பிரிவினருக்கும் சமநீதியும், சமத்து வமும் இடைப்பதை உறுதி செய்வதற்காக, 1955 ஆம் ஆண்டு குடி உரிமை பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச் சட்டத்தைச் செயற்படுத்த 31—12—1989 ஆம் தேதியிலிருந்து 25 நடமாடும் காவல் படைப் பிரிவுகள் தமிழ்நாட்டில் செயல் பட்டு வருகின்றன. 4 தனி நீதி மன்றங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளதோடு, நீதிமன்றப் பணிகளை கவனிப்பதற்காக 8 வழக்குத் தொடரும் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன.

இந்திய அரசால் இயற்றப்பட்ட 1989 ஆம் ஆண்டு தாழ்த்தப் பட்டோர்/பழங்குடியினர் (வன்முறைகள் தடுப்புச்) சட்டம் 30–1–1990 முதல் நடை முறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இச்சட்டத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவும், பொது மக்களி டையே இதன் முக்கியத்துவத்தை விளக்கிடவும் நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நயத்தக்க நற்பண்பு, சீர்கான் நன்மதிப்பு, நீதி ஆகிய உயர் பண்புகளுக்குத் தீண்டாமை என்னும் கொடிய பழக்கம் முரண்பட்டது. இக்கொடிய பழக்கம் சமூகத்திற்கே ஊறுவிளைவிக்கக்கூடியதாகும். தீண்டாமை யினால் ஏற்படக்கூடிய சமூகக் கேடுகள் குறித்து பொது மக்களுக்கு உணர்த்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் சனவரி 24 முதல் 30-ம் தேதி தீண்டாமை ஒழிப்பு வாரம் கொண்டாடப்படு கிறது. தீண்டாமை ஒழிப்புப் பணிகளுக்காக தேவையான அலு வலர்கள் மற்றும் விளம்பரக் கருவிகளுடன் கூடிய விளம்பரப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியில் 1989 ஆம் ஆண்டு மார்ச் திங்களில், கூடுதலாக ஒரு விளம்பரப் பிரிவு தேவையான அலுவலர்கள் மற்றும் விளம்பர சாதனங் களுடன் அமைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கல்வி, சமூக செயல் திட்டத்தின்கீழ், மாணவர்கள் தொண்டு நிறுவனங்கள் மாவட்ட அளவிலான அலுவலர்கள் ஆகியோரை ஈடுபடுத்தி, தீண்டாமை ஒழிப்பது குறித்த கருத்தரங்கை நடத்த 3.00 இலட்சம் ரூபாய்க்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தீண்டாமைக் கொடுமைகள் பரவியுள்ள கிராமங்களை அடை யாளம் கண்டுபிடிக்க 1989–90 ஆம் ஆண்டில் தீவிர ஆய்வு நடத்தச் சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வின்படி தமிழ்நாட்டில் 4,271 கிராமங்கள் தீண்டாமைக் கொடுமைகள் பரவியுள்ள கிராமங்களாகக் கருதப்படுகின்றன. இந்த ஆய்வின் அடிப்படையில், இப்பகுதிகளில் இனக்கலவரத்தை தடுக்கும் பொருட்டும், பொது மக்களிடையே வகுப்பு ஒற்று மையை மேம்படுத்துவதற்காகவும் சிறப்பு முயற்சிகள் எடுக்கப் பட்டு வருகின்றன. இவ்வாறு எடுக்கப்படும் சிறப்பு நடவடிக்கை களாவன : (1) பல்வேறு விளம்பரங்களின்மூலம் பொது மக்க ளுக்கு தீண்டாமைக் கொடுமைகள் பற்றிஅறிவுறுத்தல்; (2)

முதன்மை கிராமங்களில் வாழும் தங்கள் அயலகத்தாருடன் ஆதி
திராவிடர், நடைமுறையில் ஒத்த கூட்டு வாழ்க்கை நடத்த
உதவும் வகையில், அப்படிப்பட்ட பகுதிகளில் அடிப்படை
வசதிகள் செய்து தருதல் ; (3) பொது விருந்துகளுக்கு ஏற்பாடு
செய்தல் ; (4) அமைதியை நிலைநாட்டவும், ஒருவரை ஒருவர்
நன்கு புரிந்துகொள்ளவும் மாநில, மாவட்ட அளவில் ஆலோ
சனைக் குழுக்களை அமைத்தல் ; (5) பொதுவாக இச்சமூகத்தி
னருக்கு உதவும் வகையில் பல்வேறு தனியார் தொண்டு நிறுவனங்
களை ஊக்குவித்து ஈடுபடுத்துதல் ஆகியனவாகும்.

தீண்டாமை ஒழிப்பில் தீவிரமாகச் செயல்படும் 3 கிராமங்கள்
ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு,
அவற்றுக்குப் பரிசாக மூன்று வானொலிப் பெட்டிகள் ஒலி
பெருக்கியுடன் வழங்கப்படுகின்றன.

இட ஒதுக்கீடு விதிகள் :

அரசுப் பணிகளில் ஏ, பி, சி, டி பிரிவுகளுக்கு நேரடி நியமனங்
களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கு ஒதுக்கப்
பட்ட காலி இடங்களை பிற வகுப்பினரைக் கொண்டு நிரப்பு
வதற்கு 1—4—1989 முதல் அரசு தடை விதித்துள்ளது. எனி
னும் பணி மாற்றம்/பதவி உயர்வு மூலம் செய்யப்படும் நியமனங்
களுக்குத் தகுதிவாய்ந்த ஆதிதிராவிடர், பழங்குடியினர் கிடைக்கா
விடில், அக்காலியிடங்கள் 4 நியமன ஆண்டுகளுக்கு (நியமன
ஆண்டு + அடுத்துவரும் 3 நியமன ஆண்டுகள் என்ற கணக்கில்)
தொடர்ந்து கொண்டுவரப்படும். பொதுப் பணிகளில் நியமனம்,
கல்வி நிறுவனங்களில் மாணவர்களை அனுமதித்தல் ஆகியவற்றில்
ஆதிதிராவிடர்களுக்கு 18 சதவிதமும், பழங்குடியினருக்கென தனி
யாக 1 சதவிதமும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழங்குடியினர் :

தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியினரின் மக்கட்தொகை மிகவும்
குறைவு. இவர்கள் எல்லா வகைகளிலும் தனிப்பட்ட பண்பியல்
புகளைக் கொண்டுள்ளனர். பழங்குடியினரின் சமூகப் பொரு
ளாதார நிலையை மேம்படுத்துவதற்காக இந்த அரசு பழங்குடி
யினர் துணைத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. ஆறு
மாவட்டங்களில் பழங்குடியினர் அதிகமாக வாழும் ஒன்பது
பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள
பழங்குடியினரில் 40 சதவிகிதத்தினர் இப்பகுதிகளில் வசிக்
கின்றனர். எனவே, இப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினர்
முழுமையான மேம்பாட்டுப் பணிகளுக்காக ஒருங்கிணைந்த பழங்
குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது.



பழங்குடியினரின் தொழில் முறைகளுக்கேற்ப தோட்டக்கலை,
கால்நடைப் பராமரிப்பு, மண்வளப் பாதுகாப்பு மற்றும் பட்டுப்
புழு வளர்ப்பு போன்ற திட்டங்கள் பழங்குடியினர் துணைத் திட்
டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
(LAMPS) பழங்குடியினரை இடைத்தரகர்களின் சுரண்டலி
லிருந்து பாதுகாப்பது மட்டுமல்லாமல் அவர்களுக்குக் குறுகிய
கால மற்றும் நடுத்தரக் கால கடன்களை வழங்கியும் வருகின்றன.
இவை பழங்குடியினருக்கு இன்றியமையாமையா நுகர் பொருட்
களை நியாய விலைகளில் வழங்கியும் வருகின்றன. இத்தகைய
பெரிய அளவிலான 16 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்
கிணைந்த பழங்குடியினரின் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளிலும்,
மேலும் இரண்டு சங்கங்கள் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்
செயல்படுத்தப்படாத பகுதிகளிலும் உள்ளன.

பழங்குடியினரின் பொருளாதார நிலையை உயர்த்துவதுடன்,
கல்வி, சுகாதாரம், மின் வசதி, குடிநீர் வழங்குதல் போன்ற
திட்டங்களைச் செயல்படுத்தவும், பழங்குடியினர் மேம்பாட்டுத்
துணைத் திட்டம் வழிவகை செய்கிறது. பண்டைய பழங்குடி
யினர் என்று தெரிந்தெடுக்கப்பட்ட ஆறு பிரிவுகளை மேம்படுத்து
வதற்கு தனிக்கவனம் செலுத்தப்படுகிறது. 1991–92-ம் ஆண்
டிற்கான பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்ட ஒதுக்கீடு
ரூ. 16.60 கோடி ஆகும். 1990–91 ஆம் ஆண்டில் இத்திட்டத்
திற்கு ரூ. 16.26 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஒருங்
கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில்பழங்
குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்
பட்டு வரும் திட்டங்கள் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்
பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படாத பகுதிகளிலும் செயல்
படுத்தப்பட்டு வருகின்றன.

1991–92 ஆம் ஆண்டில் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்
களின் மூலம் 9,000 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடையு
மாறு செய்யக் கருதப்பட்டுள்ளது. பழங்குடியினரின் கல்வி
நிலையை உயர்த்துவதற்காக அரசு முனைப்பான நடவடிக்கை
களை எடுத்து வருகிறது. பழங்குடியினர் குழந்தைகள் பயன்
பெறுவதற்காக, ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல இயக்கம்
13 மாவட்டங்களில் நான்கு உயர்நிலைப் பள்ளிகள், ஐந்து மேல்
நிலைப் பள்ளிகள் உட்பட மாணவரில்ல வசதியுடன் கூடிய 215
பள்ளிகளை நடத்தி வருகிறது. இப்பள்ளிகளில் பயிலும்
மாணவர்களின் எண்ணிக்கை 14,050 ஆகும். இப்பள்ளி
களில் பயிலும் மாணவ மாணவியருக்கு இலவசமாக உணவும்,
உறையுளும் அளிக்கப்படுகின்றன. பழங்குடியினர் தங்கிப்
பயிலும் அரசுப் பள்ளிகள் மற்றும் இல்லங்களைச் சேர்ந்த
மாணவர்களுக்குக் கம்பளிப் போர்வைகளும் வழங்கப்படு
கின்றன.

பழங்குடியினரின் பாரம்பரிய கலாச்சாரத்தைப் பேணிப் பாது காப்பதற்காக, உதகமண்டலத்திலுள்ள பழங்குடியினர் ஆராய்ச்சி நிலையத்தில் பழங்குடியினர் சம்பந்தப்பட்ட அரும் பொருட் காட்சியகம் ஒன்றை அமைப்பதற்கான பணி மேற்கொள்ளப் பட்டு வருகிறது. ஐந்து ஆண்டு கால அளவில் செயற்படுத்தப்பட விருக்கும் இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ. 200 இலட்சம் செலவிடப்படவுள்ளது. இதற்கு மத்திய அரசு 50 சதவீத நிதியுதவி வழங்கும். 1991–92 ஆம் ஆண்டில் 25 இலட்சம் ரூபாய் இதற்காக செலவிட கருதப்பட்டுள்ளது.

<u>சிறப்பு உள்ளடக்கத் திட்டம்</u> :

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இந்தச் சிறப்பு உள்ளடக்கத் திட்டம் கோட்பாடு உருப்பெற்றது. இத்திட்டம்

(1) சிறப்பு உள்ளடக்கத் திட்டம்,

(2) மத்திய அரசின் சிறப்பு நிதியுதவி என்னும் இரு அம்சங்களை உள்ளடக்கியதாகும்.

திட்டத்தின் பயன்களும் மாநிலத் திட்டத்திற்கான பொதுத் துறைகளின், நிதியொதுக்கமும் திட்ட வகையிலும், நிதி வகை யிலும் ஆதிதிராவிடர்களின் மேம்பாட்டுக்குப் போய்ச் சேர்வதை முறைப்படுத்தும் விதத்தில் சிறப்பு உள்ளடக்கத் திட்டம் வடி வமைக்கப்பட்டுள்ளது. பல துறைகள் தங்களுடைய மொத்த நிதியொதுக்கத்திலிருந்து ஆதிதிராவிடக்களின் மேம்பாட்டுக்காக ஒரு குறிப்பிட்ட சதவீதத் தொகையைச் செலவிடுகின்றன. ஏழா வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ரூ. 686.25 கோடி செலவில் 10 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன்பெறுவதற்காகத் திட்டமிடப்பட்டது. ஆயின், உண்மையில் இதற்காக ரூ. 774.10 கோடி செலவு செய்யப்பட்டு, 10.55 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் பயன்பெற்றன. 1991–92 ஆம் ஆண்டின் 2.5 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் பல்வேறுதுறைகளின் மூலம் ரூ. 272.68 கோடி செலவிடக் கருதப் பட்டுள்ளது. 1991–92 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் அமைக்கப்படவிருக்கும் ஆரம்பப்பள்ளிகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்தையுமே ஆதிதிராவிடர் வசிக்கு மிடங்களிலேயே அமைக்க சில துறைகள் ஒப்புக்கொண்டுள்ளன. அதற்கிணங்க ஆதிதிராவிட இன மக்கள் வசிக்குமிடங்களில் 1250 மேல்நிலைத் தொட்டிகள், 10 கால்நடை கருந்தகங்கள் முதலியவை கட்டப்படும்.



<u>மத்திய அரசின் சிறப்பு நிதி உதவி.</u>

சிறப்புக் கூறுத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு, ஒவ்வோ ராண்டும் சிறப்பு நிதி உதவி அளிக்கிறது. இது, ஆதிதிராவிடர் களின் பொருளாதார வளர்ச்சிக்கு மாநில அரசு செய்துவரும் முயற்சிக்கு மேலும் கூடுதலாகக் கிடைக்கும் தொகையாகும். இந்த நிதி, ஆதிதிராவிடர்களின் பொருளாதார வளர்ச்சிக்காக, மாநில அரசின் திட்ட நிதியோடு சேர்த்து பயன்படுத்தப்படும். 1980–81ஆம் ஆண்டிலிருந்து 1990–91 ஆம் ஆண்டு வரையில் மத்திய அரசின் சிறப்பு நிதி உதவியாக ரூபாய் 136.48 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையை பயன்படுத்தி, வேலைவாய்ப் பை அதிகப்படுத்தும் மற்றும் வருவாயைப் பெருக்கும் திட்டங்கள் பல்வேறு அரசுத் துறைகள் மூலம் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் கூட்டுறவு நூற்பாலைகள், கைத்தறி நெசவாளர் மற்றும் விசைத்தறித் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் செங்கல் தயாரிப்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கல் உடைக்கும் பிரிவுகள், தோல் பதனிடும் பிரிவுகள், காலணிகள் தயாரிக்கும் பிரிவுகள், பட்டுப்புழு வளர்க்கும் திட்டம், கயிறு திரிக்கும் பிரிவுகள், காலணி தைக்கும் நடைபாதை பெட்டிக்கடை தனி நபர்/குடும்பங்கள் நலனுக்கான ஏனைய திட்டங்கள் ஆகியவை அடங்கும். சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள் மூலம் சுயமாக முன்னேற விழைவோருக்கும் போதிய நிதியுதவி கொடுத்துத் தருந்த வழிகாட்டப்படுகிறது. மளிகைக்கடை, மிதிவண்டிக்கடை, சிறியகடைகள், தேநீர்க்கடைகள், ஒலிபெருக்கி மற்றும் தையல் கடைகள் போன்ற சுய வேலைவாய்ப்புத் திட்டங் கள் இந்த ஆதிதிராவிடர்களுக்கென்று அனுமதிக்கப்பட்டுள்ளன.

<u>தனியார் தொழில் முனைவோர் திட்டங்கள்.</u>

ஆதிதிராவிடர்களில் தொழில் முனைவோர்களை உருவாக்க, ஒவ்வொரு தனியார் தொழில் முனைவோர் திட்டத்திற்கும் ரூ.5.00 இலட்சம் வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது. திட்டச் செலவில் உயரளவு ரூ. 15,000 வரை மானியமாகவும் ரூ. 85,000 அல்லது திட்டச் செலவில் 20 சதவீதம் இதில் எது குறைவோ அந்தத் தொகை 4 சதவீத வட்டி வீதத்தில் 10 ஆண்டில் வசூலிக்கத்தக்க தொடக்க நிதியுதவிக் கடனாகவும் வழங்கப்படுகிறது. பாக்கித் தொகை இத்திட்டத்தில் பங்கு பெறுகின்ற நிதியுதவி நிறுவனங்களால் கடனாகக் கொடுக்கப் படுகிறது. அம்பாசிடர் கார்கள், லாரிகள், சிறிய வேன்கள், ஆட்டோ ரிக்ஷாக்கள், டிராக்டர்கள், பல்திற மருத்துவ சிகிச்சை நிலையங்கள், கருங்கல் ஜல்லி தொழிற்சாலை, பளபளப்பான கருங்கல் தயாரிக்கும் பிரிவுகள், வீடியோ அகங்கள் காலணி தயாரிக்கும் நிலையங்கள் முதலிய நிலையான சொத்துக்கள் இத் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ளன. 1990–91 ஆம் ஆண்டில், இம்மாநிலத்தில் ஆதிதிராவிட வகுப்பினரில் 1,500 பேர், தொழில் முனைவோர்களாக உருவாக்கியுள்ளனர்.

சுயவேலைவாய்ப்பு வசதிகளைப் புதிதாக ஏற்படுத்திக் கொள்ளுவதற்கும், தொழில் தொடங்குவதற்கும் ஆதிதிராவிட இளைஞர்களுக்கு தேவையானபோது பயிற்சியளிக்கப்படுகிறது. மத்திய அரசு தேர்வாணையம் ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் மற்றும் வங்கிப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளில் ஆதிதிராவிடர்களின் வெற்றி வாய்ப்பினை அதிகரிக்கச் சிறப்புப் பயிற்சி அளிக்கப் கணிப்பொறி, தட்டச்சு, சுருக்கெழுத்து போன்றவற்றிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. மத்திய அரசிடமிருந்து பெறப்படும் சிறப்பு நிதி உதவி வேளாண்மைத்துறைக்கும் விதை, உரம், நாற்று, ஆடுகள், கறவை மாடுகள் ஆகியவற்றை வழங்குவதற்கான திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

## 1991-92 ஆம் ஆண்டுக்கான செயல்திட்டம்

### சுய வேலைவாய்ப்புத் திட்டங்கள் (ஊரக மற்றும் நகர்ப்புறம்)

1. சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டங்கள், வேளாண்மை மற்றும் வேளாண்மை தொடர்பான பணித் திட்டங்கள் ஆகியவை மொத்தம் ரூ. 1,642 இலட்சம் செலவில் சுமார் 18,649 ஆதிதிராவிடர் குடும்பங்களின் பயனுக்காக செயல்படுத்தப்படும்.

2. தனியார் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ், 1991–92 ஆம் ஆண்டில் 1,000 தொழில் முனைவோர் உருவாக்கப்பட்டஉள்ளார்கள். இதற்கான உதவித்தொகை மற்றும் தொடக்க உதவித் தொகை ரூ. 4.00 கோடியாகும்.

3. பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் 1,500 ஆதிதிராவிட விவசாயிகள் வருமானம் ஈட்டக்கூடிய வகையில் திட்டம் ஒன்றை, 4 முதல் 5 ஆண்டுகளில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் திருத்தணி வட்டாரத்தில் முதற்கட்டமாக, சொந்த நிலமுடைய 200 ஆதிதிராவிட விவசாயிகளும், நிலமற்ற 100 ஆதிதிராவிட விவசாயிகளும் பயன்பெறத்தக்க வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. திருத்தணி வட்டாரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள இடங்களில், நிலமற்ற விவசாயிகளுக்கு 50 ஏக்கர் நிலம் தொகுப்பாக வழங்கப்படும். இத்திட்டத்தின். மதிப்பீட்டுச் செலவு ரூ. 118.66 இலட்சமாகும். இத்திட்டம், 700 ஆதிதிராவிடர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பளிக்கும்.



4. சென்னை மாதவரத்தில் ஒரு பொது வசதி மையமும், சென்னை பெரம்பூரில் ஒரு கொள்முதல் மையமும் காலணித் தொழிலில் ஈடுபட்டுள்ள அருந்ததியர் சமுதாயத்தினரின் பயனுக்காக நிறுவப்படும். பொது வசதி மையம் அனைத்து தோல் பொருட்களையும் தயாரிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதுடன் அதற்கேற்ற நவீன இயந்திரமும் இந்தப் பொது வசதி மையத்தில் நிறுவப்படும். இந்தத் தொழிலுக்குத் தேவையான தரம் வாய்ந்த மூலப் பொருட்கள் மற்றும் இதர பாகங்கள் அனைத்தும் நியாயமான விலையில் இந்தக் கொள்முதல் நிலையத்தின் மூலம் வழங்கப்படும். தயாரிக்கப்பட்ட தோல் பொருட்களைத் தொடர்ந்து விற்கவும் அதற்குரிய தொகையை உடனடியாக பெறுவதற்கும் இடைத்தரகர்களின் தலையீட்டைத் தவிர்க்கவும் இந்நிலையம் உதவியாக இருக்கும். இந்தப் பொது வசதி மையம் ரூ. 50.00 இலட்சம் மதிப்பீட்டுச் செலவிலும் கொள்முதல் நிலையம் ரூ. 7.45 இலட்சம் மதிப்பீட்டுச் செலவிலும் அமைக்கப்படும்.

5. விரைவு பயிற்சித் திட்டத்தின் கீழ் திங்களொன்றுக்கு 100 கைவினைஞர்கள் என்ற விகிதத்தில் அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்த 500 கைவினைஞர்களுக்கு 5 திங்கள் கால அளவில் பயிற்சியளிக்கப்படும். காலணிகளைப் பயன்படுத்துவோரின் தேவைகளுக்கேற்ப காலணிகள் தயாரிக்கப்படுவதில் நவீன எந்திரங்களைப் பயன்படுத்துவது குறித்து பொதுவாகத் தெளிவுபடுத்துவதே இப்பயிற்சித் திட்டத்தின் நோக்கமாகும். இப்பயிற்சித் திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 12.445 இலட்சமாகும்.

6. மத்திய அரசுப் பணியாளர் தேர்வுக்குழு, வங்கிப் பணியாளர் தேர்வுக்குழு, இரயில்வே பணியாளர் தேர்வுக்குழு ஆகியவற்றின் மூலம் நடத்தப்படும். பல்வேறு போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்வதற்காக 5,115 ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு ரூ. 18.86 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

7. மாநில அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகங்கள் மூலம் 240 ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு ரூ. 9.60 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கனரக வண்டிகள் ஓட்டுநர் பயிற்சியளிக்கப்படும்.

மேற்சொன்ன திட்டங்கள், 1991–92-ம் ஆண்டில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ள முக்கிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுள் சிலவாகும் மேற்சொன்ன திட்டப் பணிகளுக்கு மத்திய அரசின் சிறப்பு நிதி உதவி தொடக்க நிதி உதவிக்கடன், நிறுவன நிதியுதவி ஆகியவற்றின் மூலம் கிடைக்கப்பெறும் உதவித் தொகையிலிருந்து செலவிடப்படும்.

## தொடக்க செலவுத் தொகை உதவி :

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, குறிப்பாக நலிந்த
பிரிவினரின் பொருளாதார வளர்ச்சிக்கு நாட்டுடைமையாக்கப்
பட்ட வங்கிகளும் தங்கள் பங்கை ஆற்றுகின்றன. வங்கித்
துறையில் கிடைக்கப்பெறும் ஆதாரங்களைப் பெற, சுய வேலை
வாய்ப்புத் திட்டங்களைத் தொடங்குவதற்காக ஆதிதிராவிடர்
களுக்கு தொடக்க செலவுத் தொகை (கடன்) வழங்கும் திட்
டத்தை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின்
கீழ் சிறப்பு மத்திய உதவியிலிருந்து 50 சதவீதம் உதவித் தொகை
வழங்குவதோடு, 4 சதவீத வட்டி வீதத்தில் இந்த நிதியிலிருந்து
இந்த திட்டத்திற்காகும் செலவில் 25 சதவீதத் தொகை வழங்கப்
படுகிறது. எஞ்சியுள்ள தொகை வங்கியிலிருந்தோ, நிதியுதவி
நிறுவனங்களிலிருந்தோ கடனாகப் பெறப்படும். இத்திட்டத்தை
'தாட்கோ' செயற்படுத்தி வருகிறது. மத்திய அரசு இந்நிதியில்
49 சதவீதத் தொகையை அளிக்கிறது. எஞ்சியுள்ள 51 சதவீதத்
தொகையை மாநில அரசு அளிக்கிறது. தொடக்க செலவுத்
தொகையை வழங்கி அதனைத் திருப்பி வசூலிக்கும் நடைமுறை
யில் அதிக அளவு எழுத்துப் பணிப் பிரிவு வேண்டியுள்ளது என்று
வங்கிகள் கருதியதால், இத்திட்டத்தின் கீழ் எய்திய முன்னேற்ற
மானது பெருமளவிற்கு இல்லை. இந்த இடர்ப்பாடுகளை நீக்க
வும் வங்கிகளுக்கு ஊக்கமூட்டவும் தொடக்க செலவுத் தொகையை
வங்கிகளில் குறித்த கால வைப்பீட்டுத் தொகைக்
கணக்கில் வைப்பீடு செய்யுமாறு அரசு ஆணைகள் பிறப்பித்
துள்ளது. திருத்தியமைக்கப்பட்ட ஆணைகளின்படி வங்கிகள்
தேவையான கடன் தொகைகளை பயனீட்டாளர்களுக்கு வழங்கி,
அக்கடன் தொகைகளை வசூலிக்கும் குறித்த கால வைப்பீட்டுத்
தொகைக்கு வட்டியுண்டு. இந்த வட்டித் தொகையை 'தாட்
கோ'வும் ஆதிதிராவிடர் பயனீட்டாளர்களும் பகிர்ந்து கொள்வர்.
இத்திட்டத்திற்காக, 1991–92 வரவு-செலவுத் திட்ட மதிப்
பீட்டில் ரூ. 200.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இருபது அம்சத் திட்டம் ;

இருபது அம்சத் திட்டம் தமிழ்நாட்டில் தீவிரமாகச் செயல்
படுத்தப்பட்டு வருகிறது. இந்த 20 அம்சத் திட்டத்தின் 11 (அ)
அம்சம், "ஆதிதிராவிடர்களுக்கு நீதி வழங்குவது' பற்றிய
தாகும். 11(ஆ) அம்சம், "பழங்குடியினருக்கு நீதி வழங்குவது"
பற்றியதாகும்.

2. 1991–92-ம் ஆண்டில் இருபது அம்சத் திட்டத்தின் 11 (அ)
அம்சத்தின் கீழ் 2.5 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களையும்
11 (ஆ) அம்சத்தின் கீழ் 9,000 பழங்குடியினர் குடும்பங்களையும்



கீழ்க்குறிப்பிட்டுள்ள வகையில் பொருளாதார மேம்பாட்டுத் திட்
டங்களின்/துறைகளின் கீழ்க் கொண்டு வருவதற்கு இலக்கிடப்
பட்டுள்ளது:—

அம்சம் 11 (அ)
(ஆதிதிராவிடர்கள்).

1. நிலச் சீர்திருத்தம்
2. ஊரக வளர்ச்சித் திட்டம்
3. மணவளப் பாதுகாப்பு
4. கால்நடை வளர்ப்பு
5. பால்வள மேம்பாடு
6. தொழில்—வணிகம்
7. பட்டுப்புழு வளர்ப்பு
8. ஆதிதிராவிடர் நலன்
9. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் (சிறுகடைகள் முதலியவை).
10. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் முதலியவை மூலம் மத்திய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம்.

அம்சம் 11 (ஆ)
(பழங்குடியினர்).

1. தோட்டக் கலை
2. பட்டுப்புழு வளர்ப்பு
3. கால்நடை வளர்ப்பு
4. கதர்-கிராமத் தொழில்கள்
5. ஊரக வளர்ச்சித் திட்டம்
6. பழங்குடியினர் நலன்

மானியக் கோரிக்கை எண். 31 என்பதன்
1991–92 ஆம் ஆண்டில் மானியக் கோரிக்கை எண் 31 ... ரூ. 102.96 கோடியும், சாட்டிய
கீழ் அனுமதித்த தொகையான ரூ. 10.03 இலட்சமும் செலவிடப்படும். இத்துடன்
தொகையான ரூ. 10.03 இலட்சமும் செலவிடப்படும். இத்துடன்
மானியக் கோரிக்கை எண் 43 (பல்வகை) என்பதன்கீழ் ரூ. 0.42
இலட்சமும், மானியக் கோரிக்கை எண் 61 (மூலதனச் செலவு)
என்பதன்கீழ் ரூ. 644.57 இலட்சமும், மானியக் கோரிக்கை எண்
62 (கடன்களும் முன்பணங்களும்) என்பதன்கீழ் ரூ. 91 இலட்சமும்
ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் மேம்பாட்டிற்காகச் செல
விடப்படும்.

இச்சட்டப் பேரவையின் உறுப்பினர்கள் அனைவரின் ஒத்
துழைப்பையும் அவர்கள் மூலம் தமிழ்நாட்டு மக்கள் அனைவரின்
ஒத்துழைப்பையும் நான் கோருவதோடு, ஆதிதிராவிடர்கள்,
பழங்குடியின மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான அரசின்
இத்திட்டங்களுக்கு அனைவரும் சேர்ந்து ஒத்துழைப்பை நல்கு
மாறும் கேட்டுக்கொள்கிறேன்.

[1991 செப்டம்பர் 19

## ஆதி திராவிடர் மற்றும் 1991–92 ஆம் ஆண்டு வரவு

| (1) | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம் — மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் செலவுப் பொறுப்பேற்கும் திட்டம் — ஆதி திராவிடர் (2) | பழங்குடியினர் (3) |
|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்) | |
| 1. கல்வி | 1,17,033 | 3,981 |
| 1 படிப்புதவித் தொகை .. .. .. .. | 60 915<br>1991** | 150 |
| 2 மருத்துவப் பொறியியல் பட்டப் படிப்புகளில் பயிலும் ஆதி திராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கு புத்தக வங்கி. | 3,200** | .. |
| 3 பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம். பட்டப் படிப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிறித்துவராக மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்கு இலவசக் கல்வி. | .. | .. |
| 4 பள்ளிகள் .. .. .. .. .. | .. | .. |
| 5 பள்ளிக் கட்டிடங்களை கட்டுதல், பழுது பார்த்தல். | .. | .. |
| 6 சீருடைகள் .. .. .. .. .. | .. | . |
| 7 சாரணர், சாரண ஆசிரியர் ஆகியோருக்கு சாரணர் சீருடை வழங்குதல். | .. | . |
| 8 பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், கரும் பலகைகள் மற்றும் பள்ளிகளுக்கு சாதனங்கள் வழங்குதல். | | . |
| 9. ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டுதல் மற்றும் பராமரிப்பு | .. | |



1991 செப்டம்பர் 19]

## பழங்குடியினர் நலத்துறை செலவுத் திட்ட மதிப்பீடு (ரூ. 1028702 ஆயிரத்தில்)

| மாநிலத் திட்டம் — ஆதி திராவிடர். (5) | மாநிலத் திட்டம் — பழங்குடியினர். (5) | திட்டத்தில் சேராதவை — ஆதி திராவிடர். (6) | திட்டத்தில் சேராதவை — பழங்குடியினர். (7) | மொத்தம் — ஆதி திராவிடர். (8) | மொத்தம் — பழங்குடியினர் (9) | பெரு மொத்தம், (10) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | (ரூபாய் ஆயிரத்தில்) |
| 4,60 002 | 39,851 | 3,70,047 | 30,788 | 9,54,802 | 74620, | 10,28,702 |
| 22,452 | 40(க) | 19,369 | 275 | 1,36,836 | 471 | 1,37,307 |
| 8,560(க)<br>350(க) | — | 20,064<br>135(க) | .. | .. | .. | .. |
| | | | | 3,260 | .. | 3,200 |
| .. | .. | .. | .. | | | |
| | | | | 7,074 | | 7,047 |
| | | | | | .. | .. |
| 7,074 | .. | .. | .. | | | |
| 1,785<br>257<br>0<br>65 | .. | 1,59,880<br>14,936 | 11,989 | 1,76,846 | 11,989 | 1,88,835 |
| 250<br>1 800<br>16,800<br>(மு) | 250<br>2,127<br>(மு) | 1,655 | 413 | 20,185 | 2,790 | 22,975 |
| 3.043 | .. | 112,725 | 796<br>9<br>25 | 15,828 | 830 | 16,658 |
| 101 | 10 | .. | .. | .. | 10 | 111 |
| 7,600 | .. | 3,905 | 200 | 11,505 | 200 | 11,705 |
| 808 | 350 | 49 | 35 | 552 | 385 | 937 |

(ரூபாய் ஆயிரத்தில்)

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 சுற்றுலா | .. | .. | 66 | .. | .. | 15 | 66 | ıb | 8.1 |
| 11 பரிசுப் பொருள்கள் | .. | .. | | | 200 | | 200 | | 200 |
| 12 மாணவர் இல்லங்கள் | .. | .. | 22,146<br>323 | 3,088<br>243 | 92,018 | 4,771<br>1,264<br>3,2ள3 | 1,14,487 | 12,65ள | 1,27,146 |
| 13 மாணவர் இல்லக் கட்டிடங்களைக் கட்டுதல் மற்றும் பராமரித்தல். | 22,996<br>(ரூ)** | 1<br>(ரூ)** | | 1<br>(ரூ) | 1,075 | 46 | 24,071 | 48 | 24,11ள |
| 14 பகுதிநேர ஆசிரியர்கள் | .. | .. | .. | .. | 60 | 5 | 60 | 5 | 65 |
| 15 தங்கிப் பயிலுவதற்கான மானியம் | .. | .. | .. | .. | 1,44ள | 118 | 1,454 | 118 | 1,572 |
| 16 ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கு தனித்தகுதி மானியம். | .. | .. | .. | 2,046 | .. | .. | .. | 2,046 | 2,046 |
| 17 ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்கு பரிசுத் தொகை வழங்கல். | | | .. | .. | 1,175 | .. | ள,175 | .. | 1,175 |
| 18 தேர்வுக்கு மு் ்தய பயிற்சி நிலையங்கள் | 1,473** | .. | 117 | .. | .. | .. | 1,590 | .. | 1,5ள0 |
| 19 பல்கலைக் கழகங்களுக்கு இழப்பீட்டுத் தொகை | .. | .. | .. | .. | 742 | .. | 742 | .. | 742 |
| 20 கல்லூரி மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி | .. | .. | 50 | .. | .. | .. | 50 | .. | 50 |
| 21 கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு படிப்புதவி தொகை. | .. | .. | 290*<br>20 | .. | 340 | 50<br>60 | 650 | 110 | 760 |
| 22 பட்டயக் கணக்கர் தேர்வு | .. | .. | .. | .. | 5 | .. | 5 | .. | 5 |
| 23 தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியவற்றில் பயிற்சி. | .. | .. | 10<br>155* | .. | .. | .. | 165 | .. | 165 |
| 24 அதிக மதிப்பெண் பெற்ற மாணவ/மாணவி களுக்குச் சிறப்பு பயிற்சி வகுப்புகள். | .. | .. | .. | .. | 32 | .. | 32 | .. | 32 |
| 25 ஆதிதிராவிடர்/பழங்குடியினர் நலத் துறையின் கல்விப் பிரிவை விரிவுபடுத்துதல். | .. | .. | ı | .. | ı,255 | .. | ı,256 | .. | 1256 |
| 26 தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறும் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு பயிற்சி உதவித் தொகை. | .. | .. | .. | .. | 1,300 | .. | ı,300 | .. | 1,300 |
| 27 ஆதிதிராவிடர் / பழங்குடியினர்க்கு சிறப்புத் தொழிற்பயிற்சி நிறுவனம். | .. | .. | 770 | .. | .. | .. | 770 | .. | 770 |
| 28 ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவ/மாணவி யின் கல்வி மேம்பாட்டிற்கு ஊக்கத் தொகை வழங்கல். | .. | .. | ı·2 | .. | .. | .. | ı·2 | .. | 112 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 29 இந்திய தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் சேருவதற்கு ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு பயிற்சிவகுப்புகள் நடத்துதல் | 30** | .. | — | — | . | .. | 30 | .. | 30 |
| 30 மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பள்ளிகள்/மாணவர் இல்லங்கள் முதலியவைக் கட்டுதல். | 2,132 | .. | .. | .. | . | . | 2,132 | . | 2,130 |
| 31 மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாணவர் இல்லங்களும் பழங்குடியினர் தங்கிப் பயிலும் பள்ளிகளும் கட்டுதல். | .. | .. | .. | 766 (ஆ) | .. | .. | .. | 700 | 700 |
| 32 ஆதிதிராவிடர் மாணவர்களின் தகுதியை உயர்த்துதல. | 423 | .. | .. | .. | .. | .. | 423 | . | 423 |
| 33 தொழில்முறைப் பாடம் பயிலும் ஆதிதிராவிடர்/மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்குதல். | .. | .. | 75 | .. | .. | .. | 75 | .. | 75 |
| 34 ஆதிதிராவிடர் நல விடுதிகளில் உணவுச் செலவுகள் வீதம் அதிகரித்ததால் கூடுதல் செலவு. | .. | .. | 12,630 | .. | .. | . | 12,630 | | 12,630 |
| 35 அரசு பழங்குடியினர் குடியிருப்புப் பள்ளிகளில் உணவுச் செலவு அதிகரித்ததால் ஏற்பட்ட கூடுதல் செலவுகள். | .. | .. | .. | 1,200 | .. | . | .. | 1,200 | 31.05 |
| 36 பழங்குடியினர் மாணவர் இல்லங்களில் உணவுச் செலவு அதிகரித்ததால் ஏற்பட்ட கூடுதல் செலவு. | .. | .. | .. | 170 | .. | . | .. | 170 | 170 |
| 37 தொழில்முறை பாடம் பயிலும் பழங்குடியினர் இன மாணவர்களுக்கு இலவசக் கல்வி. | .. | .. | .. | 20 | ந.. | .. | . | 20 | 20 |
| 38 பழங்குடியினர் மாணவர்களின் தகுதியை உயர்த்துதல். | .. | 12 | .. | | .. | .. | 15 | 12 | |
| 38 (அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு புதிதாக சிறப்புப் பயிற்சி அளித்தல். | .. | .. | 80 | .. | .. | .. | 80 | .. | 80 |
| மொத்தம்—கல்வி | 98 150 | 1 9 | 1,07 184 | 15,345 | 3,32 338 | 23,364 | 5,35,672 | 33 778 | 5,69,450 |
| 39 வேளாண்மை | .. | .. | 932 96* | 133 | . | . | 1,028 | 136 | 1,162 |
| பொருளாதார மேம்பாடு | | | | | | | | | |
| 40 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் | .. | .. | 8 000 150* | . | . | . | 5,150 | . | 5,150 |
| 41 குடிசைத் தொழில்கள் | .. | .. | 37 | . | 017 | 16 | 454 | 16 | 470 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 42 பயிற்சி உற்பத்தி நிலையம் .. .. .. | .. | . | .. | 70 | .. | .. | .. | 70 | 70 |
| 43 தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்கு உதவித் தொகை. | .. | . | 282*<br>1,200 | 125 | .. | .. | 1,483 | 135 | 1,608 |
| 44 பயிற்சி (தொகுதி 4 பணித் தேர்வுகள்) .. | – | .. | 1<br>1* | .. | .. | .. | 2 | .. | 2 |
| 45 சிறு வணிகம் .. .. .. .. | .. | . | 508<br>100* | 50<br>.. | .. | .. | 600 | 50 | 650 |
| 46 துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற சிறப்புப் பயிற்சி வகுப்புகள் .. .. .. .. | .. | | 1<br>1* | .. | .. | .. | 2 | .. | 2 |
| 47 தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தில் பங்கு மூலதன முதலீடு .. | .. | 20,000 | .. | .. | .. | .. | 20,000 | .. | 20,000 |
| 48 ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி வட்டாரங்களில் ஆதிதிராவிடர்களுக்கு நலம் பயக்கும் பணித் திட்டங்கள் (ஆதிதிராவிடர்களுக்கான தனித் துணைத் திட்டத்திற்கு சிறப்பு மத்திய உதவி). | .. (ரூ)** | | 1,79,105 | .. | .. | .. | 1,79,105 | .. | 1,79,105 |
| 49 சட்டக் கல்வி பட்டதாரிகளுக்கு பயிற்சி .. | .. | .. | 153<br>.. | .. | .. | .. | 153 | .. | 1,531 |
| மொத்தம்—பொருளாதார மேம்பாடு | | 20,000 | 2,87,560<br>.. | 378 | 417 | 16 | 2,07,977 | 394 | 2,08,371 |
| 3 வீட்டு வசதி ஏனைய திட்டங்கள் : | .. | .. | | | | | | | |
| 50 ஆதிதிராவிடர்களுக்கு கான்கிரீட் வீடுகட்டும் திட்டம். | .. | .. | 1,15,000 | .. | .. | .. | 1,15,000 | .. | 1,15,000 |
| 51 வீட்டு வசதி .. .. .. .. | .. | .. | 1 | 400 | .. | .. | 1 | 000 | 401 |
| 52 வீட்டு மனைகள் .. .. .. .. | .. | .. | 2,557<br>96<br>40,000<br>1,000(ஏ) | .. | .. | .. | 03,483 | .. | 43,483 |
| 53 நடைபாதைகள், சுடுகாடுகள் ஏற்படுத்திக் கொடுத்தல் (குடிநீர் சாலைப் பணிகளுக்கான ஊராட்சி ஒன்றியத்திற்கு அளிக்கப்படும் தொகை உட்பட). | .. | .. | 3,330 | .. | – | .. | 4,330 | .. | 3,330 |
| 54 குடிநீர் கிணறுகள் .. .. .. .. | .. | .. | 2,200<br>212* | .. | .. | .. | 2,412 | .. | 2,412 |
| 55 மருத்துவம் .. .. .. .. .. | .. | .. | .. | .. | 70 | 683 | 70 | 683 | 760 |
| 56 பிரச்சாரச் செலவுகள் .. .. .. | 299** | .. | .. | .. | .. | .. | 299 | .. | 299 |
| 57 தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு பசு .. | .. | .. | .. | .. | 60 | .. | 60 | .. | 60 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 58 சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு வரும் ஆதிதிராவிடர் காலனிகளுக்குப் பரிசுகள். | .. | .. |
| 59 சமுதாயக் கூடங்கள் .. .. .. .. | .. | .. |
| 60 சலவைத் துறைகள் கட்டுதல் .. .. | .. | .. |
| 61 சுகாதாரமற்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல் | — | — |
| 20 ஆராய்ச்சி படிப்புதவித் தொகை வழங்குதல் | .. | .. |
| 63 பழங்குடியினர் ஆராய்ச்சி நிறுவனத்தை ஏற்படுத்துதல். | .. | 1 311°° |
| 64 உதகமண்டலம் பழங்குடியினர் ஆராய்ச்சி நிலையத்தில் அரும்பொருட்காட்சியகம் அமைத்தல். | .. | 2,500°° |
| 65 சமச்சடங்குகளுக்குத் தொகை கொடுத்தல் .. | .. | .. |
| 66 ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்திட்டங்களை மதிப்பீடு செய்ய ஆராய்ச்சிப் பிரிவு. | 201°° | — |
| 67 1955ஆம் ஆண்டுகுடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைச் செயல்படுத்தும் பணியாளர் அமைப்பு. | 382°° | — |
| 68 ஆதிதிராவிடர் குடியிருப்பு மற்றும் குடிசைப் பகுதிகளில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல். | 1°° | .. |
| 69 ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் வீடுகளைப் பழுதுபார்த்தல், புதுப்பித்துக் கட்டுதல். | .. | .. |
| மொத்தம்3. சுகாதாரம் வீட்டு வசதி ஏனைய திட்டங்கள். | 883 | [illegible] |
| 4. பழங்குடியினர் பகுதிகள்—துணைத் திட்டம் .. | | |
| 70 பழங்குடியினர் மேம்பாட்டுக்கான துணைத் திட்டம் குறித்த ஒருங்கிணைந்த பகுதிகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கான வல்லுநர் குழு. | .. | .. |
| 71 பழங்குடியினர் மாணவர் இல்லம் இணைந்த பள்ளிகளைத் தொடர்ந்து பராமரித்தல். | .. | .. |
| 72 பழங்குடியினர் துணைத் திட்டத்தில் குடிநீர் வழங்கல். | — | .. |



| (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|
| .. | .. | 124 | .. | 124 | . | 12 |
| ,090 | .. | .. | .. | 4,000 | .. | 1,80 |
| 16(a)15 | .. | .. | .. | 30 | ஷ | 30 |
| | | | | | | 1 |
| 1 | .. | .. | .. | 1 | .. | 1 |
| .. | .. | . | .. | .. | 1 | 04 |
| .. | .. | .. | .. | .. | 1,311 | 1,311 |
| .. | .. | .. | .. | .. | 2,500 | 2,500 |
| .. | .. | .. | 6,683 | .. | 6,683 | 6,683 |
| .. | .. | .. | .. | 201 | .. | 201 |
| .. | .. | .. | .. | 382 | | 382 |
| .. | .. | .. | .. | 1 | .. | 1 |
| 1 | .. | .. | .. | 1 | .. | 1 |
| 1,65,258 | 400 | 254 | 7,266 | 1,66,295 | 11,578 | 1,77,978 |
| .. | 124 | .. | .. | .. | 124 | 124 |
| .. | 16,259 | .. | .. | .. | 16,259 | 16,259 |
| .. | 1 | .. | .. | .. | 1 | 1 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 73 பழங்குடியினர் கிராமங்களுக்கு மின்வசதி செய்து கொடுக்கும் திட்டம். | .. | .. | .. | 3,000 | .. | .. | .. | 3,000 | 3,000 |
| 74 பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் சிறு பாசனத் திட்டங்கள். | .. | .. | .. | 2,100 | .. | .. | .. | 2,100 | 2,100 |
| 75 கல்ராயன் மலைக்கான நிர்வாக அமைப்பை ஏற்படுத்துதல். | .. | .. | .. | 400 | .. | .. | .. | 400 | 400 |
| 76 ஆதிவாசிகள் மேம்பாடு .. .. .. | .. | .. | .. | 2,278 | .. | .. | .. | 2,278 | 2,278 |
| 77 பழங்குடியினர் ஆராய்ச்சி மேம்பாடு .. .. | | | .. | 276 | .. | .. | .. | 276 | 276 |
| 78 சாலைகள் .. .. .. .. .. | .. | .. | .. | 450 | .. | .. | .. | 450 | 450 |
| 79 பரந்து வாழும் பழங்குடியினர் .. .. | .. | .. | .. | 3,000 | .. | .. | .. | 3,000 | 3,000 |
| 80 குடிநீர் கிணறுகள் .. .. .. .. | .. | .. | .. | 300 | .. | .. | .. | 300 | 300 |
| 81 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் பழங்குடியினருக்கான வீட்டு வசதி. | .. | .. | .. | 620 | .. | .. | .. | 620 | 620 |
| 82 தமிழ்நாடு பழங்குடியினர் மேம்பாடு ஆதிகார மன்றம். | .. | .. | .. | 10 | .. | .. | .. | 10 | 10 |
| மொத்தம் பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம். | .. | .. | .. | 28,828 | .. | .. | .. | 28,828 | 28,828 |
| 5. கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கான மறு வாழ்வுத் திட்டங்கள்.— | | | | | | | | | |
| 83 கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு மறு வாழ்வு அளித்தல். | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 | 1 |
| 84 விடுவிக்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர் களுக்கு வீட்டு வசதிகள் அளிப்பதற்கான நிதியுதவி. | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 | 1 |
| 85 கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு நிலக் குடியேற்றத் திட்டங்கள் செயல்படுத்துதல். | .. | .. | .. | .. | .. | 40 | .. | 40 | 40 |
| மொத்தம்—கொத்தடிமை தொழிலாளர்களுக்கான மறுவாழ்வுத் திட்டங்கள். | .. | .. | .. | .. | .. | 42 | .. | 42 | 42 |
| 6. நெறிப்படுத்துதலும் நிர்வாகமும்— | | | .. | .. | 3 அ. | .. | .. | .. | .. |
| 86 தலைமையிட மாவட்டப் பணியாளர்கள் .. | .. | .. | .. | .. | 44,038 | .. | 44,038 | .. | 44,038 |
| மொத்தம்—நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் .. | .. | .. | .. | .. | 44,038 | .. | 44,038 | .. | 44,038 |

| (1) | (2) | (3) | [illegible] (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கல்வி .. .. .. .. .. .. | 96,150 | 169 | 1,07,184 | 10,245 | 3,32,338 | 23,364 | 5,35,672 | 33,774 | 5,69,450 |
| 2 பொருளாதார மேம்பாடு .. .. .. | 20,000 | .. | 1,87,560 | 378 | 417 | 16 | [illegible] | 194 | 2,06,371 |
| 3 வீட்டு வசதி வளைய திட்டங்கள் .. .. | 883 | 3,812 | 1,65,258 | 460 | 254 | 7,366 | [illegible] | 11,596 | 1,97,573 |
| 4 பழங்குடியினர் வாழும் பகுதிகள் துணைத் திட்டம். | .. | .. | .. | 28,828 | .. | .. | .. | 28,828 | 28,828 |
| 5 கொத்தடிமை தொழிலாளர் மறுவாழ்வுத் திட்டங்கள். | .. | .. | .. | .. | .. | 42 | .. | .. | 42 |
| 6 நெறிப்படுத்துதலும் நிர்வாகமும் (தலைமை யிடம் மாவட்டப் பணியாளர்கள்). | .. | .. | .. | .. | 44,035 | .. | 44,086 | .. | 44,086 |
| மொத்தம் .. | 1,17,033 | 3,981 | 4,60,002 | 39,851 | 3,77,047 | 30,788 | 9,54,082 | 74,6.. | [illegible] |

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore. Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tinnevelly) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nanthi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore 1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bathi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director Stationery and Printing Madras.

[1991 செப்டம்பர் 19

* இந்திய மத்திய மாநில ஆதி திராவிடர்கள்.

** மத்திய, மாநில அரசுகள் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டங்கள்.

சா.—சாட்டியது.
மூ.—மூலதனம்.

க.—கடன்களும், முன் பணங்களும்.

*** 8ழ உள்ள இனங்கள் நீங்கலாக.

| | | |
|---|---|---|
| 1 | வசதி வீட்டு வசதி திட்டம், சென்னை கட்டிடத் தொழிலாளர்கள் பதிவாளர் (வீட்டு வசதி) திட்டம் தொடர்புடையவை. | 10,306 |
| 2 | அகவிலைப்படி வழங்குவதற்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம் | 33,501 |
| 3 | பொங்கல் பரிசுத் தொகை வழங்குவதற்கான ஒரு மொத்த நிதி ஒதுக்கம். | 10 231 |
| 4 | சத்துணவு வழங்குதல் | 12,46 |
| | மொத்தம் .. | 76,9 |

[illegible] ஆவணக்காப்பக [illegible]
158375
சென்னை-600 008

D
V211,31 N91
N91.8.2